
## தேசியத் தலைவர்

# காமராஜர்

5



கலைமணி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❖❖❖

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❖❖❖

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

## தேசியத் தலைவர்

# காமராஜர்

சாந்தி பதிப்பகம்

# தேசியத் தலைவர் காமராஜர்

## காமராஜரின் வாழ்க்கை வரலாறு

என். வி. கலைமணி

**சாந்தி பதிப்பகம்**

27, அண்ணா சாலை, (மவுண்ட் ரோடு)


சென்னை - 600 002.

☎ : 8546719

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேசியத் தலைவர் காமராஜர் |
| நூலாசிரியர் | : | என். வி. கலைமணி M.A., |
| நூல்வகை | : | வாழ்க்கை வரலாறு |
| முதல் பதிப்பு | : | ஜூன் - 2002 |
| பக்கங்கள் | : | 480 (48 படங்களுடன்) |
| வெளியீடு | : | **சாந்தி பப்ளிகேஷன்**<br>27, மவுண்ட் ரோடு,<br>அண்ணா சாலை, சென்னை - 2. |
| தொலைபேசி | : | 8546719 - 8440060 |
| ஒளி அச்சு | : | ஞானம் கம்ப்யூட்டர்ஸ் சென்னை -5 |
| விலை | : | 125-00 |

| | | |
|---|---|---|
| Title | : | DHESIYA THALAIVAR KAMARAJ |
| Author | : | N.V. KALAIMANI, M.A. |
| Subject | : | Biography |
| First Edition | : | June - 2002 |
| Pages | : | 480 (Including 48 Photographs) |
| Published by | : | **SHANTI PUBLICATIONS**<br>27, Mount Road, Anna Salai,<br>Chennai - 600 002. |
| Phone | : | 8546719 - 8440060 |
| Type Setting | : | Gnanam Computers |
| **Price** | : | **Rs. 125.00** |



# முன்னுரை

பாரத மணித்திரு நாடு வந்தவர்க்கு வாழ்விடமாய் அமைந்த காலத்தில் அதை மண்ணின் மைந்தர்க்கு உரிய பூமியாய்மாற்றி அமைக்கப் போராடிய போராட்டமே ‘இந்திய சுதந்திரப் போராட்டம்’ ஆகும். இப்போராட்ட வேள்வியில் தம்மையே ஈந்த தியாக சீலர்கள் ஏராளம்! ஏராளம்! அத்தகையோருள் நம் நெஞ்சில் நிலைக் கத்தக்க பெரியயோர்கள் தாதாபாய் நௌரோஜி, பால கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி, பண்டித நேரு, மூதறிஞர் ராஜாஜி, செக்கிழுத்த செம்மல் வ.உ.சி போன்றோர் ஆவர். இவர்கள் வரிசையிலே வைத்து எண்ணத்தக்கவர் பெருந்தலைவர் காமராஜ் ஆவார்.

மேலே குறிப்பிட்ட தியாக சீலர்கள் எல்லாம் கல்லூரிக் கல்வி கண்டவர்கள். நம் தலைவரோ பாரதத்தையே கல்லூரியாகக் கண்டு கற்றவர். மகாத்மா காந்தியடிகள் அரசுச் சார்புடைய திவான் குடும்பத்தைச் சார்ந்தவர். நம் தலைவரோ பாமரக் குடும்பத்தில் பிறந்த ஏழை பங்காளர். நேரு பெருமகனார் சட்டம் பயின்ற பண்டித குடும்பத்தைச் சார்ந்தவர். நம் தலைவரோ படிக்காத மேதை. பாரதம் போற்றும் முனைவர். திருமணம் செய்து அவ்வாழ்வை உதறிய ஆன்மீக வள்ளாரைப் போல நம் தலைவர் திருமணமே நாடாமல் நாட்டுக்கு உழைத்த ‘அரசியல் வள்ளலார்’ ஆவார்.

தென்புலத்தில் வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுள் தலைமணியாய்த் திகழ்பவர் பெருந்தலைவர் காமராஜ். தன் இணையற்ற தொண்டாலும், தியாகத்தாலும் பாரத மக்களின் இதயத்தில் இடம் பிடித்த முதல்வர் காமராஜ் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

சத்தியத்துக்கு இலக்கணம் மகாத்மாவின் சுயசரிதை என்றால் தொண்டுக்கு இலக்கணமாய் அமைவது பெருந்தலைவர் காமராஜின் வாழ்க்கை விளக்கமாம் இந்நூல். காமராஜரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் மட்டுமல்ல, சிறந்த புத்தகமும் ஆகும். இன்று அரசியலைச் சொந்த வாழ்வுக்கும் குடும்ப முன்னேற்றத்துக்கும் பயன்படுத்துவதையே கொள்ளையாய்க் கொண்டு வாழ்ந்து வரும் தமிழகத் தலைவர்கள் படித்துப் போற்றி, பின்பற்ற வேண்டிய சட்டப்புத்தகம், வேத நூல், இலக்கணம், இவ்வாழ்க்கை வரலாற்று நூல்.

வருங்கால பாரத நாட்டை வளப்படுத்த இருக்கும் இளஞ்சிற்பிகளுக்கு ‘வழிகாட்டி’யாக விளங்கும் காமராஜர் வாழ்க்கை வரலாற்று நூலை வெளியிடுவதில் பெருமிதம் கொள்ளுகிறோம்’ பேருவகை எய்துகிறோம். தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளுவது தகுதி மிக்கவர் கடமையாகும்.

- சாந்தி பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா! | |
| 2. | மகிழ்ச்சிக்கடலில் மாநகர் சென்னை | |
| 3. | ஓடும் இரயிலில் அரிமான் நோக்கு | |
| 4. | நாகபுரி மாநாட்டில் முதல் தமிழர் | |
| 5. | கவுக்காதி காங்கிரசில் இரண்டாவது தமிழர் | 20 |
| 6. | காங்கிரஸ் கட்சியை உருவாக்கியது ஏன்? | 23 |
| 7. | காங்கிரஸ் தோன்றிது தமிழ்நாட்டில்தான் | 29 |
| 8. | பம்பாய் நகரில் காங்கிரஸ் பேரவை | 39 |
| 9. | காங்கிரஸ் தலைவர்கள் காமராஜர் வரை யார்- யார்? | 42 |
| 10. | ஆந்திர மக்களின் வரவேற்பும் வாழ்த்தும் | 55 |
| 11. | ஒரிசா மாநிலத்தில் சிறப்புகள் சில | 65 |
| 12. | புவனேஸ்வரம் காட்டிய புதுமையான வரவேற்பு | 70 |
| 13. | கலிங்க மண்ணிலே காமராஜ் பின்னணி | 73 |
| 14. | காமராஜ் பிறந்த கலிங்கத்தின் பின்னணி | 78 |
| 15. | பாரதியார் பாடலைப் பாடி வாளேந்தும் போராட்டம் | 86 |
| 16. | காமராஜர் முழுநேரத் தொண்டரானார் | 95 |
| 17. | ஜஸ்டிஸ் கோட்டை காமராஜரால் கலகலத்தது | 104 |
| 18. | விடுதலை வேள்விக்கு விலையற்ற தியாகங்கள் | 100 |
| 19. | ஆசான் சத்தியமூர்த்தி - மாணவன் காமராஜர் | 131 |
| 20. | காமராஜர் மீது வெடிகுண்டு சதி வழக்கு | 141 |
| 21. | மகாத்மாவை காமராஜர் குமாரசாமி ராஜா வரவேற்பு | 148 |
| 22. | காமராஜரால் தேர்தல் வெற்றி -<br>தமிழ்நட்டின் திருப்புமுனை | 157 |
| 23. | காமராஜர் - ராஜாஜி உட்கட்சி பனிப்போர் | 164 |
| 24. | வெள்ளையனே வெளியேறு, மாறுவேட மர்மங்கள் | 183 |
| 25. | கோடு தமிழ்தந்தது - குன்றம் உயர்ந்தது | 198 |
| 26. | காந்தி காமராஜர் 'கிளிக்' போராட்டம் | 207 |
| 27. | பிரகாஸம் பிரதமராக காந்தியடிகள் எதிர்ப்பு | 224 |
| 28. | காமராஜ் தோற்றுவித்த காங்கிரஸ் தொழிற்சங்கம் | 231 |
| 29. | திருவிதாங்கூர் தமிழ் போராட்ட ஆதரவு | 240 |
| 30. | கோபுரம்தான் அரசுச் சின்னம்<br>பண்டிதர் நேருவிடம் போராட்டம் | 243 |

31. இந்திய விடுதலை சாசனம் - காந்தியடிகள் கண்டனம் 253

32. விடுதலை விழா - காமராஜ் சபதம் 258

33. சாய்ந்தது சத்திய சோதனை - அழிந்தது அகிம்சை அறம் 263

34. காந்தியடிகள் தோல்வி - காமராஜர் வெற்றி 269

35. குமாரசாமி ராஜா மூன்றாவது பிரதமர் 274

36. தனக்குத்தானே சரித்திரம்
தன்மனதுக்குள்ளே திரும்புகிறது 278

37. வீரமிருந்தால் என்னைச் சுடு
பொதுமக்களை மிரட்டாதே! 289

38. எதிரி - ஆட்சி; அல்ல குலக்கல்வி திட்டம்தான் 297

39. காமராஜர் பிரதமர் அல்ல; தமிழக முதலமைச்சர் 309

40. தட்சணப் பிரதேசம் எதிர்ப்பு -
இன்றைய தமிழக அமைப்பு 319

41. காமராஜர் கல்விப் புரட்சி -
அறிவுத்துறை காணா அற்புதம் 325

42. பசுமைப்புரட்சி வித்தகர் பச்சைத் தமிழர் காமராஜர் 334

43. எனது நினைவுக்கு எட்டியவரை
ஆவடி மாநாடுதான் மாநாடு 340

44. உண்மையான மக்கள் தொண்டர் -
தலைசிறந்த காந்தி பக்தர் 344

45. இந்திரா்காந்தி - காங்கிரஸ் தலைவர் 360

46. காமராஜர் நிர்வாகப் பாணியை
ஆந்திர முதல்வர் பின்பற்றினார் 367

47. காமராஜர் வாழ்க்கை அரசியல்வாதிகளுக்கு அறம் 369

48. தேர்தல் வியூகி காமராஜர் -
மானத்தோடு வெற்றி பெற்றவர் 374

49. மகரிஷி காமராஜர் - மணிவிழா மகிழ்ச்சி 379

50. காமராஜர் புத்தரானார் - ஆட்சியைத் துறந்ததால் 382

51. சமதர்ம சமுதாயச்சிற்பி பிரதமர் நேரு மாண்டார் 396


52. இந்தியாவின் மானத்தை இருமுறை காத்த காமராஜர் 401


53. 1967 தேர்தலில் காங்கிரஸ் தோற்றது 412

54. பெருந்தலைவருடன் இந்திரா கூட்டணி 422


55. எமர்ஜென்சி ஏன் வந்தது? 426

56. தங்க மனிதர் காமராஜர் 431








மூப்பனாருடன் காமராஜர்.
























# 1. தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!

விடியலில் மலர்ந்து, மதியத்தில் வாடிச் சுருங்கி, மாலையில் வீழ்ந்து விடும் மலரல்ல, இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபை.

வானத் தாய் பொழியும் பனித் துளிகளிலே நனைந்து, எழு ஞாயிற்றுக்கு முன்னே ஏழைகளின் கண்களிலே மிதந்து, மாண்டு போகும் ஈசற் பிறவிக் கட்சிகளை நாம் கண்டுள்ளோம்! காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள இந்திய பூபாகத்துள், விடுதலை என்ற தென்றற் காற்றோடு கலந்து உலகின் மிகப் பெரிய மக்களாட்சி நாடெனும் கவின்மிகு மணத்தை இன்றும் பரப்பிக் கொண்டிருக்கும் மனோரஞ்சித மலர், காங்கிரஸ் - இந்திய தேசிய இயக்கம்.

அருந்தும் நீரையெல்லாம் பசு தனது உடலிலே பாலாகச் சுரந்து தந்து - அவனி வாழ் மக்களைப் பேணிப் பாதுகாப்பது போல, வளர்ந்து வாழ்ந்து மக்களைக் காத்து வரும் காமதேனு இனம், காந்தியடிகளால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் பேரியக்கம்! மாலைக் காலத்திலே தனது குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டு செல்கின்ற பறவைகளைப் போல, சாலை ஓரத்திலே வாழ்கின்ற தரித்திர அடிமைகளுக்கும் சேர்த்து, சுதந்திரம் என்ற தன்மான உணர்வைத் தேடித் தந்த தெய்விகப் பறவை அது!

அடர்ந்து படர்ந்திருந்த அடிமை இருளை அகற்றிட, அண்ணல் காந்தியடிகள் அருணனாகத் திகழ்ந்து, விடுதலை என்ற ஒளியை இந்தியா முழுவதும் பரப்பினார். உலரும் புற்களும் - உதிரும் பூக்களும் கூட, சுதந்திர மண்ணிலேதான் தோன்றி மறைய வேண்டும் என்ற உரிமை வேட்கையைப் பெற்றளித்தார்!

அத்தகைய காங்கிரஸ் மகா சபை, நல்லொழுக்கம் நற்றொண்டு, நற்புகழ் என்ற மனித நேய உணர்வுகளால் நாளும் வளர்வதைக் காமராஜ் என்ற சிறுவர் கண்டார்!

சாதாரணக் காங்கிரஸ் தொண்டராக அவர், அவ்வியக்கத்திலே சேர்ந்து, விடுதலை வீரராக, காராகிரகக் காளையாக, ஏழை பங்காளராக, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக, தமிழகத்தின் முதலமைச்சராக, தனது கடும் உழைப்பால் படிப் படியாக அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கே தலைவராக முன்னேறினார் என்றால், வரற்கரிய வான்புகழ் வலிய வந்தடைந்ததை எவர்தான் வியந்து பாராட்டார்?

இத்தகைய செயற்கரிய செயல்கட்கு இலக்கணமாய் இலங்கிய தலைவர் காமராஜ் என்ற செயல் வீரர், ஒரிசா மாநிலத்திலே நடைபெறப் போகும் புவனேஸ்வரம் மாநாட்டிற்குப் புறப்படலானார் - அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் என்ற பெருமையோடு!

'வரலாறு ஒவ்வொன்றும் இமயமலைச் சாரல்களிலே இருந்துதான் ஆரம்பமாகிறது' என்ற வரலாற்றாசிரியர்களின் சிந்தனை வரம்பை மாற்றி அமைத்தவர் தலைவர் காமராஜ்!

மேதினியின் முதல் மண் தோன்றிய நாவலந்தீவு எனப்படும் இலெமூரியக் கண்டத்துக் கடல் விழுங்கியக் கபாடபுரம், கவின்புகார், தென் மதுரை மண்ணின் எஞ்சிய சிறு பகுதியான கன்னியாகுமரி முனையிலே இருந்தும் வரலாறு துவங்கும் என்ற காலக் கட்டளை, காமராஜ் அவர்கள் புவனேஸ்வரம் புறப்பட்ட நிகழ்ச்சியால் அமைந்து விட்டது.

''தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா'' என்று, தமிழக முதல் அரசவைக் கவிஞராக இருந்து மறைந்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் தமிழ் உணர்விற்கு, காமராஜ் என்ற கர்மயோகியின் வரலாறு ஓர் இலக்கியமாக அமைந்தது!

# 2. மகிழ்ச்சிக் கடலில் மாநகர் சென்னை

மாநகர் சென்னை பூமியை நனைக்கும் பூ மழையாகத், தலைவர் காமராஜ், ஏறக்குறைய ஒன்பதரை ஆண்டுகள் செங்கோலாச்சித் தமிழக மக்கள் வாழ்வுத் துறைகளைப் பசுமையாகக் குளிர வைத்துக் கொண்டிருந்தார்.

தண்ணீர் வாசனையால் தளிர்க்கும் இளமரமாக, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி, தலைவர் காமராஜ் தொண்டுகளால் வளர்ந்தது! அதனால், தனிப்பெருந் தலைவராகி அரசியல் வித்தகரானார்! மத்திய ஆட்சியிலே அன்று பிரதமராக வீற்றிருந்த ஜனநாயக சோசலிசப் பிதா மகனான மனிதருள் மாணிக்கம் நேரு அவர்களின் பேரவாவால், திரு. காமராஜ் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக்கப்பட்டார்!

தமிழர்களுக்கு அந்தச் செய்தி, செந்தேனாக, செவ்வாழையாக இருப்பினும், தண்ணீர் பாய்ந்து பாய்ந்து கற்களாகிய நாங்கள் குழிகளானதைப் போலல்லவா; எம் அரசியல் வாழ்வு மேடு பள்ளங்களாகத் தேய்ந்து போகிறது. தமிழர் தம் தலைமகனாக எம்மிடையே நடமாடிய ஒரு செயல் வீரம், இன்று டெல்லி செல்கின்றதே என்ற வருத்தம் - கவலை - கலக்கம் தமிழகக் காங்கிரஸ் தொண்டர்களிடையே சூழ்ந்திருக்கிறது!

இருப்பினும், பரந்த பரத கண்டத்தை ஆட்சி புரிகின்ற ஒரு பேரியக்கத்திற்கே தலைவராக ஒரு தமிழன் பொறுப்பேற்றுச் செல்கிறாரே, என்ற அமிழ்தொத்த பேறு கண்டு அவர்கள் எல்லாம் ஆறுதலைடைந்தார்கள்!

## களிப்புக் கடலில் தமிழர் விழா!

தமிழர் விழா! தமிழகமெங்கும் உள்ள காங்கிரஸ் தொண்டர்கள், பட்டி தொட்டிகளிலும் - சிற்றூர் பேரூர்களிலும், தலைவர் காமராஜ் புவனேஸ்வரம் புறப்படும் நன்னாளைத் தமிழர் தம் திருவிழாவாகக் கோலாகலமாகக் கொண்டாடத் தயாரானார்கள்! தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரை நோக்கிப் புறப்பட்ட ரயில் வண்டிகளிலே, அவர்கள் மூவண்ணக் கொடிகளை ஏந்தியவாறே புறப்பட்டார்கள்.

பேருந்துகள், சுமையுந்துகள் முகப்பெல்லாம் மூவண்ணக் கொடிகள் பரத நாட்டிய மாடின. அவற்றிலே ஆண் - பெண் அணிகள் திரண்டன! 'புவனேஸ்வரம் புறப்படும் எமது புறநானூற்று மாவீரர் காமராஜ் வாழ்க! தமிழகத்தின் தன்னிகரற்றத் தலைவர் காமராஜ் வாழ்க!' என்ற முழக்கங்கள் தமிழகமெங்கும் இருந்து வருகின்ற வண்டிகளின் மக்களிடையே எதிரொலித்தன.

புல்லறுக்கும் தீவுத் திடலிலே இரவெலாம் பெய்த பனித் துளிகளாக, மகிழ்ச்சிக் குளிர்ச்சியோடு, தலைவர் காமராஜ் சிலையருகே தொண்டர்கள் குழுமினார்கள் - அவரவர் வாகனங்களோடு! எரித்துக் கொண்டிருக்கும் வெயில் வெப்பத்தை, எதிர்க் கட்சிகளின் காழ்ப்புச் சூடாக ஏற்று, தம் பண்பைக் காந்தீயத் தட்பமாக்கிக் கொண்ட ஆத்ம திருப்தியோடு அணிவகுத்து வரிசை வரிசையாக அவர்கள் நகரை வலம் வந்தார்கள்!

## மண்ணதிரும் முழக்க ஒலிகள்!

முழக்க ஒலிகள், 'பாண்டிய நாடு தந்த தமிழர் தம் தலைமகனே' சென்று வா! வென்று வா!' என்ற ஆவேசச் சுடர்களாக, தொண்டர்கள் மேல் நோக்கியே முன்னேறினார்கள். முகத்துக்கு முன்னே கடந்து போகும் காற்றாகத் தொண்டரணிகள் களிமுழக்கப் போதைகளிலே பின்னணி முன்னணியோடு மோதி, பின்தள்ளி முன்னேறி, வழி நடந்தனர்!

நேர்மையான சொற்களிலே நிமிர்ந்து நிற்கும் வலிமையாக, பின்தள்ளப்பட்ட அணிகள் முன்னேறிய அணிகளோடு போட்டியிட்டு இராணுவ நடை போட்டன! தறி நெய்பவன் நாடாவின் வேகத்தில் கூடச் சிறிது தளர்ச்சி தோன்றலாம்! ஆனால், தலைவர் காமராஜ் தொண்டர்கள், அன்று அந்தத் தளர்ச்சிக்குக் கொஞ்சம் தளர்ச்சியைக் கொடுத்து, சென்ட்ரல் ரயில் நிலையத் திடலை முற்றுகையிட்டார்கள்! மழைக்கால மேகங்கள் தனித் தனியாகவா நகரும்? ஒன்றோடொன்று கூடி, மோதிக் குவியும் அல்லவா? அதனைப் போல. யார் கையில் பார்த்தாலும் காமராஜ் அவர்களின் திருவுருவப் படங்களும், மூவண்ணக் கொடிகளும், வீரமும் பெருமூச்சும் விம்மி விம்மி எழும் நடையலங்காரத் தோற்றங்களும், கோலாகலக் கோலங்களாகக் காட்சி தந்தன!

## ஊர்ந்து வந்த ஊர்வலங்கள்!

'தலைவர் காமராஜ், தமிழகத்தை ஆட்சி செய்த ஒன்பதரை ஆண்டு; கால அற்புதங்களின் எதிரொலிகளே இந்த ஊர்வலக் காட்சிகள்' என்று மக்கள் பாராட்டி மகிழ்ந்தார்கள்!

தொழிற் சங்க ஜண்டாக்கள், விவசாயிகள் சங்கப் பதாகைகள், பள்ளி மாணவ மாணவிகளின் நன்றி மறவா சீருடைப் பவனிகள், அனைவரும் அவரவர் மகிழ்ச்சிப் பெருக்கைத் தலைவர் விழிகளுக்கு விருந்தாக்கிவிட்டு, கதிரவன் மறையுமுன்னே கலைந்து சென்றனர்! அரசியல்வாதிகளின் அணிவகுத்தக் குழுக்கள், காங்கிரஸ் தொண்டரணிகள் உட்பட அனைவரும், புவனேஸ்வரம் தனி இரயில் புறப்படும் வரை காத்திருந்து, தலைவரை வழியனுப்பி வைத்தனர்!

குனிந்து குனிந்து, வணங்கி வணங்கிக் காமராஜ் அவர்களது கழுத்து ஏற்றிட்ட மலர்மாலைகள் பாரம் தாங்காமல், ஆங்காங்கே சிதறிப் பரவிக் குவியல் குவியலாக உதிர்ந்து கிடந்தன - பிளாட்பார மேடையிலே. புவனேஸ்வரம் ஸ்பெஷல் ரயிலில், தலைவர் காமராஜ் ஏறி அமர்ந்தார்! அவரோடு புவனேஸ்வரம் போகும் காங்கிரஸ் தலைவர்களும் - தொண்டர்களும் அவரவர் ரயில் பெட்டிகளிலே உட்கார்ந்திருந்தார்கள்!

புவனேஸ்வரம் தனி ரயில் இஞ்சின் முகப்பில், "இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் 68-வது மகா சபை ஸ்பெஷல்" என்று எழுதப்பட்ட வண்ண முகப்போவியம் அலங்காரத்தோடு தொங்கிக் கொண்டிருந்தது.

இரயில் நிலைய நடைமேடை எல்லாம், அணிவிக்கப்பட்ட தலைவர்கள், தொண்டர்கள் மலர்மாலைப் பூக்கள் உதிர்ந்து உதிர்ந்து, பூவாடை விரித்தாற்போன்ற நடையாடைப் பூக்கோலமாகத் திகழ்ந்தது!

## சென்று வா! வென்று வா!

தொண்டராரவாரப் படைகள் ஒன்றுகூடி "தலைவர் காமராஜ் வாழ்க! தென்பாண்டிச் சிங்கமே, பரணி பாடி வா! கல்விக் கண் தந்த வள்ளலே வாழ்க! வீரத்திருமகனே, சென்று வா! வென்று வா!" என்ற முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தபோது, புவனேஸ்வரம் ரயிலும் குரலெடுத்து ஊதிப் புறப்பட்டது! 1964-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் மூன்றாம் நாள் பின்னிரவு இரண்டு மணிக்கு, புவனேஸ்வரம் நகர் நோக்கிப் புறப்பட்டது காமராஜ் அவர்கள் சென்ற ரயில் வண்டி!

# 3. ஓடும் இரயிலில் அரிமா நோக்கு!

புவனேஸ்வரம் இரயில் ஓடிக் கொண்டிருக்கிறது. அதுவும், தனி இரயில் அல்லவா? தடுப்பாரின்றி, நிறுத்துவாரின்றி, இரவு நேரமானதால், சராசரி வேகத்தோடு ஓடியபடியே இருந்தது!

வண்டிக்குள் அமர்ந்திருந்த மாநாட்டு விருந்தினர்கள், தெளியாத தூக்கம்போல் அவரவர் களைப்புகளுக்கு கேற்ப உறக்கத்தில் உழன்றார்கள்!

## காமராஜ் சிந்தனை!

'நடந்து வரும் சிங்கம் ஒன்று, தனது பாதையை ஒருமுறை திரும்பி நிமிர்ந்து பார்ப்பதை 'அரிமா நோக்கு' என்று தமிழ் இலக்கணம் தன்மானப் பறை தட்டுகின்றது! ஓடும் இரயிலில் ஆடும் சிந்தனைகளோடு, காமராஜ் என்ற அரசியல் அரிமா, தனது கடந்த காலச் சம்பவங்களின் அரசியல் பயணத்தைத் தன்னந் தனியாகப் பின் நோக்க ஆரம்பித்தது!

'சாதாரண ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தோம்! கோடிக் கணக்கான காங்கிரஸ் கட்சித் தொண்டர்களிலே ஒருவனாகச் சேர்ந்தோம்! தேசத் தொண்டுகளைச் செய்தோம்! 'கோடிக் கணக்கான அந்தத் தொண்டர்கள், இன்று நம்மை புவனேஸ்வரம் மாநாட்டின் 68-வது காங்கிரஸ் மகாசபைத் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள்! தேர்வு செய்து விட்டார்கள்!

'என்ன செய்யப் போகிறோம் நாம்' இந்தத் தொண்டர்களுக்கும் - பொது மக்களுக்கும் - நாட்டிற்கும் - அவர்களுக்குக் கைமாறாக? 'இதயம் பொங்கும் மகிழ்ச்சியோடு அவர்களை இயங்க வைக்க இயலுமா?

'வீரத்தால் விரிந்து விம்மும் மார்புபோல; அவர்கள் இயங்க, வியக்க, விளங்க என்ன செய்ய முடியும்? எனது பணிகள் நேற்றுவரை, எழுதுகின்றவனிடம் ஓடும் பேனா ஓட்டமாக எதிர்த்தது - ஆதரித்தது - பிரச்னைகளை!

'பேசுகின்றவனின் 'நா' வைப்போல, நஞ்சுமிழும் இன்றைய அரசியலிலே - நான் வேகத்தோடும், நாணத்தோடும், நயத்தோடும், மக்களை வேட்பமுறச் செய்திட முடியுமா?

'அருள் பொழிகின்ற உதடுகளோடு, அகிம்சா அறப்பண்புகளோடு, காந்தியடிகள் அரசியலை வளர்த்தார்! சத்தியத்திற்காகக் கூடிய சாதுக்களைப்போல, மக்கள் அவர் பின்னே சென்று கட்சிப் பணிகளிலே சரிகமபதநிச பாடினார்கள்! நம்மால் முடியுமா அவர் ஆற்றலோடு நடந்திட!

'மணமகன் பின்னே நடக்கும் மணமாகா கன்னிகள் போல, - மக்களின் ஏக்க நாடிகளைப் பிடித்துப் பார்த்து மகிழ்வுப் பணிகளை ஆற்றும் தகுதி நமக்கு உண்டா? மணமகள் பின்னே போகும் சுமங்கலிகளைப் போல, அனுபவ நெறிகளால் கட்சிக்காரர்களை மகிழ்விப்பில் மிதக்க வைக்க இயலுமா? போவதும் - வருவதும் போன்ற கடலலைகளாகப் பணியாற்றிய பிற தலைவர்களிலே நானும் ஒருவனாவேனா?

'புகழ்பாடும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வரலாறு பெற்ற காவிரியாறு, பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, வளம்பெருகி, வளம்பெருக்கி, பின்னர் வளம் அருகி; வலமிடமாக மாறிமாறி காச நோயாளனைப்போல எலும்பும் தோலுமாகக் காட்சி தரும் பூம்புகார் நீர்க் காலாக மாற்றப்படுவேனா?

'இறையடியார்களான திருத்தொண்டர்களைப் பாடிப் பராவிய சேக்கிழாரின் செயற்கரிய பணியை, காந்தியடிகளுக்காக ஆற்றப் புறப்பட்ட சத்திய சோதனையாக எனையும் கருதி, காங்கிரஸ் இயக்கம் தன் பின் வரும் பக்தனாக வாழவிடுமா? என்னையும் பின்பற்றுமா?''

'கைப்பொருளை இழந்த கஞ்சன் ஒருவன், அதை எப்படியெல்லாம் தேட- சம்பாதிக்க- பாடுபட்ட அனுபவ உணர்வுகளை எண்ணித் தவிப்பானோ; அந்த வேதனைகளோடு அல்லற்பட்டார் தலைவர் காமராஜ்.

'இருப்பினும், தமிழ் நாட்டு மக்கள் தம்மைக் காங்கிரஸ் கட்சியின் தலைவனாக இயங்க வைத்ததையும், அதனால் ஏற்பட்ட அனுபவப் பெருமைகளையும் இனிக்க இனிக்க எண்ணி மகிழ்ந்தார்!

'தமிழக அரசியலின் கோபுர உச்சியிலே ஒன்பதரை ஆண்டுகள் கலசமாகக் காட்சியளித்தோம்! நமது அறிவுக்கும் - சக்திக்கும் ஏற்ற தொண்டுகளைப் புரிந்தோம்! இவை போதாதே - அவர்களுக்குக் கைமாறாக!

'இப்போது 68-வது அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவனாக, நம்மை இந்திய மக்கள் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய பணிகளே போதா என்றபோது,

முழு இந்திய மக்களுக்காக நாம் என்ன ஆற்றப் போகிறோமோ...! இந்த சஞ்சலத்திற்கிடையே... அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி வரலாறு என்ன? அதை உருவாக்கியது யார்? அதன் வளர்ச்சிக்காக யார் யார் அரும்பாடு பட்டார்கள்?

'நமக்கு முன்னே, அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்குத் தலைமை வகித்த தமிழர் வரலாறு என்ன? சாதனைகள் என்ன? அவர்கள் அடிச்சுவடுகள் மேல் நம்மால் நடக்க இயலுமா! என்றெல்லாம் காமராஜர் சிந்திக்க ஆரம்பித்தார்!

1920-ஆம் ஆண்டு, நாகபுரியில் நடைபெற்ற அகில இந்தியத் தேசிய மகாசபைக்குத் தலைமை வகித்த முதல் தமிழரான சேலம் சி. விஜயராகவாச்சாரியாரை நினைவு கூர்ந்தார்! அவர் காங்கிரஸ் கட்சிக்கு செய்த சேவைகளை எண்ணிப் பார்க்கலானார்.

# 4. நாகபுரி மாநாட்டில் முதல் தமிழர்!

தமிழ்க் கவிஞன் ஒருவனின் முதல் கற்பனை அழகுபோல அமைந்திருந்தது, பொன் விளைந்த களத்தூர் என்ற குக்கிராமம்! இந்த ஊர், செங்கற்பட்டு மாவட்டச் சிற்றூர்களிலே ஒன்று!

பெயரே பொன்விளைந்த களத்தூர் அல்லவா? ஊர் வளத்தை பிறகு ஊர்வலமாக்க வேண்டுமா- என்ன? அதனால்தான், ஊர் பெயருக்கேற்பப் படிக்காசுத் தம்பிரான் என்ற புலவர் இங்கே பிறந்தார்!

கடவுள் விரும்பும் மெல்லோசை அக் கிராமத்திலே அடிக்கடி கேட்குமே தவிர, வல்லோசை கேட்கும் மக்கள் காதவழி தாண்டியே குக்கிராமத்தில் காணப்படுவார்கள்!

யார் வந்த வல்லோசையர்கள்? தீய சொற்களை / எப்போதும் நாவினடியிலே அடக்கி வைத்திருப்பவர்கள் அவர்கள்! மெல்லோசை கேட்கும் குடும்பத்திலேதான் கி.பி. 1852-ஆம் ஆண்டு, சக்கரவர்த்தி சேலம் திரு. சி. விஜயராகவாச்சாரி யார் பிறந்தார்! இவர், சென்னை மாநிலக் கல்லூரி, சேலம் நகராட்சிக் கல்லூரி. மங்களூர் அரசுக் கல்லூரிகளிலே பேராசியராகப் பணியாற்றினார்! சிறந்த வழக்குரைஞர் என்று நற்பெயர் நாட்டினார். சேலம் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணி புரிந்தார்!

## வகுப்புக் கலவரம் பத்தாண்டுகள் சிறை!

வகுப்புக் கலவர வழக்கு ஒன்று சேலம் நகரில் 1882-ஆம் ஆண்டு நடந்தது! அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக திரு. விஜயராகவாச்சாரியார் வாதாடினார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய குற்றத்திற்காகப் பத்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார் அவர்! வழக்குரைஞர் ஒருவர், நீதியின் சந்நிதானம் முன்பு உண்மையை நிலைநாட்டி, நல்ல தீர்ப்புப் பெற்றுத்தரவே வாதாடினாரேதவிர, குற்றவாளியை நிரபராதி என்றோ, நிரபராதியை குற்றவாளி என்றோ நிரூபிக்க அல்லர்!

அத்தகைய காந்தீயப் பண்பாட்டிற் கேற்றவாறு எவ்விதக் குற்றமும் செய்யாமல், குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக வாதாடியதே குற்றமென்றால், அதற்காக வழக்கறிஞர் ஒருவர் பத்தாண்டுகள் தண்டிக்கப்பட்டார் என்றால், வெள்ளையராட்சியில் நீதிதேவதை நிர்வாணமாக்கப்பட்டாள் என்றுதானே பொருள்?

உண்மையை உணர்த்திட வாதாடிய வழக்குரைஞர் ஒருவர் பெற்ற பத்தாண்டு தண்டனை, உலகில் வேறு எந்த ஒரு சட்ட வித்தகனும் இதற்கு முன்பு பெற்றதில்லை!

அதே நேரத்தில், மரத்தை வேரோடு பிடுங்குவதுபோல, பொய் வழக்குகளை அல்லது வழக்கின் வளைவுகளிலே, புகுந்து பதுங்கி விழி பிதுங்க வாழும் பொய்மைகளை; வேரோடு பிடுங்கி எறிகின்ற வல்லவர் என்று புகழ்பெற்றவரும் ஒரு வெள்ளையரே! அவர் பெயர் ஏர்லி நார்டன்! சென்னையைச் சேர்ந்தவர்! காங்கிரஸ் கூட்டங்களிலே கலந்து கொண்ட இந்திய தேசியப் பற்றுடையவர்;

திரு. விஜயராகவாச்சாரியார் பத்தாண்டுகள் தண்டிக்கப்பட்ட உடனே, சேலம் நகராட்சி உயர் அதிகாரியாக இருந்த வெள்ளையர், அவருடைய நகராட்சி உறுப்பினர் பதவியைப் பறித்துக் கொண்டார்! அதனால், அவர் உறுப்பினர் பதவியையும் இழந்தார். திரு. ஏர்லி நார்டன் என்ற வழக்கறிஞரை திரு. விஜயராகவாச்சாரியார் தனதுவழக்கில் வாதாட அமர்த்தி, வெற்றியும் பெற்றார்!

எந்த வெள்ளை அதிகாரி அவருடைய நகர்ாட்சி உறுப்பினர் பதவியைப் பறித்தாரோ; அவர் மீது விஜயராகவாச்சாரியார் மான நட்ட வழக்குத் தொடுத்து, அவரே வாதாடி- வெற்றி பெற்று அக்காலத்திலேயே நூறு ரூபாயை அவரிடம் அபராதமாக வசூலித்தார்.

வழக்கில் வெற்றி பெற்ற பின்பு, நகராட்சி உறுப்பினர் பதவி திரு. விஜயராகவாச்சாரியாரை மீண்டும் நாடி வந்தது!

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடியதே குற்றமென்று பத்தாண்டுகள் தண்டனை அடைந்த சம்பவமும், அந்த வழக்கில் வெற்றி பெற்றிடத் திறமையும், யார் வழக்கு போட்டாரோ அவரிடமிருந்து அபராதம் வசூலித்த வீரமும், திரு. விஜயராகவாச்சாரியாருக்கு அகில இந்தியப் புகழைப் பெற்றுத் தந்தது. அந்த வழக்கு நடைபெறும் வரை சிறையிலே அவர் அடைக்கப்பட்டார்! தமிழகத் தேசிய வீரர்களில், வெள்ளையராட்சியை எதிர்த்துச் சிறைசென்ற முதல் தேசிய வாதியும் அவர்தான்!

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைத் துவங்கிய திரு. ஆலன் அக்டேவியன் ஹியூம் அவர்கள், இவருக்கு அன்று முதல் நெருங்கிய நண்பரானார்!

1884-ஆம் ஆண்டு, பிரம்மஞான சபை நிகழ்ச்சிக் கூட்டம் நடைபெற்றதற்குப் பிறகு சென்னையில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் பூர்வாங்க கூட்டத்தில் ஆச்சாரியார் கலந்து கொண்டார்.

திரு. விஜயராகவாச்சாரியார், திரு. ஹியூம் அவர்களது நண்பராக இருந்தார் என்பதால், இவருக்கும் ஹியூம் தகவல் கொடுத்து காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்கு அழைத்திருந்தார்.

இதேபோல் சேலம் சி. விஜயராகவாச்சாரியார், 1885-ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற கூட்டத்திற்கும் வருகை தந்துள்ளார்.

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிக்குரிய சட்டதிட்டங்களை இயற்றித் தந்த குழுவின் 32பேர்களில் இருந்த நான்கு தமிழர்களிலே இவரும் ஒருவராகத் திகழ்ந்தவர்!

கி.பி.1895-ஆம் ஆண்டிலிருந்து 1901-ஆம் ஆண்டுவரை, சென்னை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்! 1916-ஆம் ஆண்டில் டெல்லி மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

காந்தியடிகளின் அரசியல் குருவான கோபாலகிருஷ்ண கோகலே, மதன்மோகன் மாளவியா, சுரேந்திர நாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், ஜவர்லால் நேரு போன்ற எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களும் - விஜயராகவாச்சாரியார் நண்பர்களாகத் திகழந்தார்கள்! சூரத் நகரில் 1907-ஆம் ஆண்டு, 23-வது காங்கிரஸ் மகாசபை டாக்டர் ராஜ்பிகாரி கோஷ் தலைமையில் நடைபெற்றது.

## நாற்காலிகள் பறந்த காங்கிரஸ் மாநாடு!

காங்கிரஸ் மாநாடு! அந்த மாநாட்டின் தலைவரால், தனது தலைமையுரையை ஆற்ற முடியவில்லை; ஏனென்றால், காங்கிரஸ் மகாசபையிலே இருந்த மிதவாத அணிக்கும், தீவிரவாத அணிக்கும் குழப்பமும் பூசலும் ஏற்பட்டன! நாற்காலிகள் கூட்டத்திலே பறந்து நடனமாடிக் காயத்தை ஏற்படுத்தி, அவரவருக்கு ரத்தத்தை வழியச் செய்தன! ஜெய்ப்பூர் நகர் பந்தலில் விடப்பட்டிருந்த செருப்புகள் எல்லாம் அவரவர் தலையிலே பட்டாபிஷேகம் செய்தன! அதனால், காங்கிரஸ் மகாசபை இரண்டாகப் பிளந்தது! காங்கிரஸில் ஏற்பட்ட முதல் பிளவு இது!

மிதவாதக் காங்கிரஸ் அணிக்குத் தலைவர் கோபால கிருஷ்ண கோகலே. தீவிரவாத அணிக்குத் தலைவராகத் திகழ்ந்தவர் பாலகங்காதர திலகர்! பாலகங்காதரர் அணி காங்கிரசை விட்டு வெளியேறியதும், மிதவாத அணியினர் சார்பாக, தலைவர் ராஷ்பிகாரிகோஷ் தனது தலைமையுரையின் சில பகுதிகளை மட்டுமே படித்தார்! அவ்வளவு கலவரம்! கலாட்டா! குழப்பம்!

சேலம் விஜயராகவாச்சாரியார், அப்போது திலகர் அணியில் இணைந்து தீவிரவாத திலகமாக விளங்கினார்! பிறகு, காங்கிரஸ் கட்சியை விட்டுத் திலகரைப் போலவே சிறிதுகாலம் ஒதுங்கி இருந்தார்! திலகரின் தீவிரவாத அணியிலே, தமிழ் நாட்டைச் சேர்ந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்பிள்ளை, தியாகி சுப்பிரமணிய சிவா, சி. சுப்பிரமணிய பாரதியார் திரு.வி.கலியாண சுந்தர முதலியார், வ.வெ.சு. ஐயர் போன்றவர்கள் இருந்தார்கள்.

கி.பி. 1916-ஆம் ஆண்டில், இலட்சுமணபுரியில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை கூடியது. திரு. காந்தியடிகளுடன் மீண்டும் இணைந்து விஜயராகவாச்சாரியார் காங்கிரஸ் கட்சியில் செயல்பட்டார்!

அமிர்தசரஸில் 1919-ஆம் ஆண்டு நடந்த இந்திய தேசீயக் காங்கிரஸ் மகாசபை திரு. மோதிலால் நேரு தலைமையில் நடந்தது. அந்த மாநாட்டில், திரு. விஜயராகவாச்சாரியார் 'மக்களின் அடிப்படை உரிமைகள்' என்பது குறித்துத் தீர்மானம் கொண்டு வந்து உரையாற்றினார்.

நாகபுரி நகரில் 1920-ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை கூடியது. திரு. சேலம் சி.விஜயராகவாச்சாரியார் அதற்குத் தலைமை வகித்தார். அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபைக்கு முதன் முதலாக தலைமையேற்ற முதல் தமிழன் சேலம் சி. விஜயராகவாச்சாரியாரே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஆச்சாரியார் தலைமை வகித்த மாநாட்டில்தான், காந்தியடிகளது ஒத்துழையாமைப் போர்த்திட்டம் ஏற்கப்பட்டது. திரு. விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில்தான்; பிரிட்டிஷ் ஆட்சியிடம் இந்திய மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பதை முதன் முதலாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது!

அன்று வரை தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபையினால் தேர்வு புரியப்பட்ட மூன்று

பொதுச் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அகில இந்தியப் புகழை எதிர்காலத்தில் அவர் தேசிய அளவில் பெற்றிட வித்தூன்றப்பட்டது விஜயராகவாச்சாரியார் தலைமை வகித்த மாநாட்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஒத்துழையாமைத் திட்டத்தைப் பிரகடனம் செய்வதென்றால், குறிப்பிட்ட ஒன்றிரண்டு அநீதிகளைப் பொறுத்ததாக மட்டும் அது ஏன் இருக்க வேண்டும்? என்று காந்தியடிகளையே விஜயராகவாச்சாரியார் கேள்வி கேட்டார்!

'இந்தியா அனுபவித்துக் கொண்டிருக்கும் பெரிய அநீதி, அதற்குச் சுதந்திரம் இல்லாதிருப்பதால்தான்! ஒத்துழையாமை, அந்த அநீதியை எதிர்த்துப் போராடுவதாக இருக்க வேண்டும்' என்ற பதிலையும் அவரே கொடுத்தார்!

இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகத்தான் ஒத்துழையாமைப் போர் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைக் காந்தியடிகளே தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அந்தத் திட்டத்தை ஏற்றுப் பெருமைப்படுத்திய முதல் தமிழரும் அவர்தான்!

அவர் தலைமையில்தான், அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியில் காந்தியடிகள் சகாப்தம் தோன்றியது. வரலாறு தெரிந்தோர் இதை அறிவார்கள்.

எந்தத் திலகரின் தீவிரவாதக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, காங்கிரஸ் மகாசபையை விட்டு விஜயராகவாச்சாரியார் வெளியேறினாரோ, அவரே மீண்டும், அதே இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியில் காந்தியடிகளின் நேயத்தோடு சேர்ந்தார். திலகரின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்டவர்கள், வட நாட்டிலும் சரி - தென் நாட்டிலும் சரி, அரசியலில் அவர்களின் கடைசி நாட்கள் மிகமிக அவலமாகவே முடிந்திருக்கிறது!

ஏன்? திலகர் மட்டும் என்ன? குன்றின் மேலிட்டத் தீபமாகவா அரசியலிலே விளங்கினார்! பாவம்! பாவம்! அவர்கதியும் அதோகதிதான்! அவர் தொடங்கிய பெரும்பயணத்தில் காந்தியடிகள் கலந்துகொண்டு புகழ் படைத்தார்! நீண்ட சிறைத் தண்டனைகளை அனுபவித்து திலகர் ஓரங்கட்டப்பட்ட பின்பு, மீண்டும் அவர் அதே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலேதான் இணைந்தார்!

ஓர் உண்மையை நாம் உணரவேண்டும். அதாவது அவரவர்களுக்கு இருந்த தாய் மொழிப் பற்றுத்தான் - இலக்கியத் தொண்டுதான் அவர்கள் பெயரை மக்களிடத்திலே மாண்புற வைத்ததே தவிர, அரசியல் வித்தகர்கள் அவர்கள் என்பதால் அல்லர்!

இந்தத் தமிழறிஞர்களின் ஆங்கில அறிவு, ஆற்றல் மிக்க ஆண்மைகள், திறமைகள், உழைப்புகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன! தமிழர் ஒருவர் தலைமையில் கூடிய நாகபுரி மகாசபையில்தான், மாநிலங்களை மொழிவாரியாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற எண்ணமே எழுந்தது- தீர்மானமாக!

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியை வழி நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பு காந்தியடிகளுக்கு ஏற்பட்டதே, திரு. விஜயராகவாச்சாரியார் தலைமையில் கூடிய மகா சபையில்தான் என்பதை எண்ணும்போது, 'தமிழன் என்று சொல்லடா - தலைநிமிர்ந்து நில்லடா' என்ற பெருமையை ஏற்படுத்தியவர் சேலம் சி. விஜயராகவாச்சாரியாரே ஆவார்!

## தனிமனிதர் தயாரித்த அரசியல் சட்டம்!

டாக்டர் அம்பேத்கார்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிதாமகன் என்று நாடு முழுவதும் பரவலாகப் பேசப்படுகின்றது. ஊருக்கு ஊர் அதற்காகச் சிலைகளும் அமைக்கப்படுகின்றன!

அவர், தனிமனிதனாக நின்று தனது சட்ட வித்தகத்தை நாட்டினாரா என்றால் இல்லை; அவர் தலைமையின் கீழ் ஒரு சட்ட நிபுணர்களின் குழுவே பணியாற்றியது! திரு. இலார்டு பிர்கென் ஹெட் என்ற ஆங்கிலேய அதிகாரி, "இந்தியர்களால் ஓர் அரசியல் சாசனம் தயாரிக்க முடியுமா?" என்று ஒரு சவால் விட்டார் - டெல்லி மத்திய சட்டமன்றத்தில்!

ஆங்கிலேயரின் அந்த ஆணவச் சவாலை அரசியல் மானத்தோடு ஏற்று, 1927-ஆம் ஆண்டு, இந்தியாவிற்கு முதன்முதலாக - ஆனால், தனி ஒரு மனிதனாக நின்று அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை தயார் செய்து கொடுத்தவர், இந்த நாகபுரி மாநாட்டின் தலைமையேற்ற முதல் தமிழ் மகனான சேலம் திரு. சி. விஜயராகவாச்சாரியார்தான். அத்தகைய ஒரு மாமேதையை இன்று யாருக்குத் தெரியும்? அவராற்றிய அரசியல் அற்புதம் எவருக்குப் புரியும்?

இந்திய நாடு விடுதலையடைந்த பிறகு அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கு திரு.விஜயராகவாச்சாரியார் எழுதிய அரசியல் சட்டம் ஓர் அடிப்படையாகவே அமைந்தது.

இந்தியாவிலே உள்ள அரசியல் கட்சிகளை எல்லாம் ஒன்றுபடுத்தி, விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்திட

1932-ஆம் ஆண்டில் அலகாபாத் நகரில் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைத் தலைமை வகித்து நடத்திக் காட்டினார் அவ்வாச்சாரியார்! சைமன் கமிஷன் இந்தியா வருவதை எதிர்த்து 1929-ஆம் ஆண்டில் போராட்டமும் நடத்தினார்!

## கைதான முதல் தமிழரும் அவரே!

இத்தகைய நாகபுரி - மகாசபை தலைவர் விஜயராகவாச்சாரி யாருக்கு 1935-ஆம் ஆண்டில் பொன்விழா கொண்டாடப்பட்டது! இதே ஆண்டில்தான், இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபைக்கும் பொன்விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் அவரும் கலந்து களி கொண்டார்!

மதுவிலக்கு, நிலச் சீர்திருத்தம், சிறைச் சீர்திருத்தம் போன்ற திட்டங்களைக் காந்தீய லட்சியங்களுடன் இணைத்த பெருமை இந்த சி.வி. ஆச்சாரியாருக்கு உண்டு! இந்தியாவிற்குரிய விடுதலையைப் பெற்றுத்தர வேண்டும் என்று முதன் முறையாக சர்வதேச சங்கத்தில் முழக்கமிட்ட முதல் தமிழரும் இதே சேலம் திரு.சி.விஜயராகவாச்சாரியார் தான்! குழந்தை திருமண எதிர்ப்பு, பெண்களுக்குச் சொத்துரிமை, தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களை நடத்திய முதல் தமிழர் இவர்!

'நீதிக்காகப் போராடுவேன், இந்தியாவிற்கு விடுதலை தேவை; சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று திலகர் அரசியல் தத்துவத்தை ஏற்றுப் போராடியபோது, கைது செய்யப்பட்ட முதல் இந்தியர் என்ற தியாகப் புகழுக்கும் இவர் உரியவர்!

தமிழகத்திற்குக் காந்தியடிகள் வருகை தந்தபோது, அவர் கலந்து கொண்ட எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்கும் தகுதிபெற்ற ஒரே தலைவராக திரு.சி.விஜயராகவாச்சாரியார் விளங்கி உரையாற்றினார்! நாகபுரியில் நடைபெற்ற அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை வகித்த முதல் தமிழரான சேலம் திரு சி. விஜயராகவாச்சாரியார், 1994-ம் ஆண்டு மறைந்தார்!

இத்தகைய அரிய சேவைகளைச் செய்த விஜயராகவாச்சாரியார் நினைவாக அவர் பெயரால் சேலத்தில் சிறிய ஒரு நூலகம் ஒன்று தற்போது நடந்து வருகின்றது! இதுதான் அவர் தொண்டுக்குக் கிடைத்த பெரிய அரிய மரியாதை! உண்மைக்குக் காலமில்லாத நாடு என்று உணருமோ அவருடைய தமிழாற்றலை? என்று உணருமோ அவர் ஆற்றிய பெருந்தொண்டுகளை?

# 5. கவுகத்தி காங்கிரசில் இரண்டாவது தமிழர்!

அறிவிலே பழுத்த ஆன்ம ஞானியாக விளங்கியவர்! உறைந்த மழையின் வெண்மையான வாய்ச்சொற்கள்! உள்ளமோ வெண்ணெயைவிட மென்மையானது! இவர்தான் வழக்கறிஞர் எஸ்.சீனிவாச ஐயங்கார்!

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து, தான் பெற்றிருந்த அரசு அட்வகேட் ஜெனரல் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியே வந்த ஆண்மையாளர் திரு. ஐயங்கார்! வழக்காடும் அவர் 'நா' விந்தை புரியும் விநோதமானது! சாதி, இன, மத, பேதங்களின் வைரி! அவற்றை உடைத்தெறியும் நோக்குடையவர்! நாம் அனைவரும் சரிசமம் என்ற போக்குடையவர்!

யார் இந்த ஐயங்கார்?

''நம்மில் உயர்வு தாழ்வு காட்டல் பாவங்கள்! ஏற்றத் தாழ்வு என்பவை - எரி நெருப்பும் - கொதி நீருமாகும். இவற்றில் தத்தளிப்பவர்கள் நடுத்தரமக்கள்! அவர்களுக்கு சமதர்ம சோசலிசம் ஒன்றே செந்தேன் இனிப்பை நல்குவது!'' என்று, எஸ்.சீனிவாச ஐயங்கார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராகப் பணியாற்றியபோதே தேசியத் தலைவர்களிடையே வாதமிட்டவர்!

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் அவர்களும், எஸ். சீனிவாச ஐயங்காரும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களைச் சென்னையிலே கலந்தே பணிபுரிபவர்கள்! அரசியலிலே இரட்டையர்கள்! சில நேரங்களிலே முரண்பட்டவர்கள்! அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை, 1926-ஆம் ஆண்டு கவுகத்தி மாநகரில் எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் நடந்தது.

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், இரண்டாவது தமிழ்ப் பெருமகனார்! தமிழ்நாட்டில் உருவான தீவிரவாதக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பால கங்காதரத் திலகர் அணியைச் சேர்ந்தவர்!

அதனால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி, அமரகவி பாரதியார், தியாகி சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. ஐயர், திரு.வி.கலியாண சுந்தரனார் போன்ற மேதைகளோடு சேர்ந்து பணியாற்றும் காங்கிரஸ் கட்சிப் பணியாளர் இவர்! எந்தச் சாதிக்காரன் அவர் வீட்டிற்கு வந்தாலும், 'முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி' உணவு படைத்து, அவர்கள் வழக்குகளை நீதிமன்றத்தில் இலவசமாக நடத்திக் கொடுக்கும் இயல்பு படைத்தவர்.

## கங்கை காவிரி இணைப்புத் திட்டம்

கங்கை - காவிரி ஆறுகளைத் தேசிய அளவில் இணைக்க வேண்டும் என்ற தனது நோக்கை அவர் தலைமையேற்ற கவுகத்தி மாநாட்டில் வலியுறுத்தினார்! அவர் வடநாடு செல்லும் போதெல்லாம், அந்தப் பகுதி வாழ் முக்கிய தலைவர்களிடம் தேசிய நீர்ப்பாசனத் திட்டத்தைப்பற்றி விளக்கி விரிவாக வாதாடுவார்.

காந்தியடிகள் தமிழ்நாடு வருகை தரும்போது, இவர் இல்லத்தில் தங்கி மகிழ்ந்தார்! காங்கிரஸ்காரர்களிடையே குழு சர்ச்சைகள்; கொள்கைத்தகராறுகள் எழுந்து மோதும்போதெல்லாம், அவற்றைக் காந்தியடிகள் முன்னாலேயே வழக்குரைக்கும் வீடு இவர் வீடு!

இந்து - முஸ்லிம் இணைப்புக்கும், இரு இன ஒற்றுமைகளுக்கான இன்றியாமைக்கும் அரும்பாடு பட்டவர் திரு. ஐயங்கார் என்றால் மிகையாகாது. பாகிஸ்தான் பிரிவினை ஏற்படக்கூடாது என்ற எதிர்ப்பு எண்ணம் இவரிடையே இருந்ததால், திரு. காந்தியடிகளுக்கும் - திரு. ஐயங்காருக்கும் கொள்கை ஒற்றுமை மட்டுமல்ல, ஓர் ஆன்மஞான இதய இணைப்பும் இருந்தது.

காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பு, ஆலய நுழைவு மது விலக்கு, சாதி, மத, பேத எதிர்ப்புகளைப் பற்றி, அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் அவர் முழக்கமிட்டார். அண்ணல் காந்தியடிகளின் கதர்ப் பிரசாரத்திற்கு முன்னோடியாக முனைந்து பிரசாரம் புரிந்தார்.

வீடு வீடாகச் சென்று, கை ராட்டினத்தைச் சுற்றி அதன் பயன்களை ஏழை மக்களிடம் விளக்கி, அவர்களை எல்லாம் கதர்த் தொழிலிலே ஈடுபட வைத்தவர் ஐயங்கார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எக்காரணத்தைக் கொண்டும் அரசியலில் மதம் கலக்கப்படுவதைக் கவுகத்தி மாநாட்டிலே அவர் முழு மூச்சாக அன்றே எதிர்த்தவர்!

இந்தியாவிலே அப்போதிருந்த எல்லா தேசியத் தலைவர்களுக்கும் நெருங்கிய நண்பராக இருந்தவர் ஐயங்கார்.

‘வழக்காடும் தொழிலில் அவர் வல்லமை எவருக்கும் இல்லை; அவருக்கு அவரே நிகர்’ என்று பாபு இராசேந்திர பிரசாத் அவர்களால் போற்றப்பட்டவர்!

❋ ❋ ❋ ❋ ❋

# 6. காங்கிரஸ் கட்சியை உருவாக்கியது ஏன்?

ஆங்கிலேயர் ஆதிக்கமென்ற கடலிலே கொற்கை முத்தாகத் தோன்றியவர் திரு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அவர்கள்! மனச்சான்றென்ற மேகத்தை அவர் ஆடையாக அணிந்த மானத்தவர்!

அதிகார மமதைகள் என்ற கார்மேகக் குவியல்களைத் தனது மனித நேயக் கருணை மின்னல்களால் தாக்கியவர்! ஆண்மை என்ற செயல் வீர இடிகளால்; அடிக்கடி ஆங்கிலேயரோடு பிரச்னைக்கேற்ப மாறிமாறி மோதியவர்! பூ மழை என்ற உதவிகளைத் தூரல்களாகப் பெய்து இந்திய மக்களுக்குச் சிறு சிறு இன்பங்களை விளைவித்தவர் அவர்!

'எந்த ஆர்ப்பாட்ட அல்லல்களுக்கும் ஓர் எல்லையுண்டு; கபாடமுண்டு; தாழ் உண்டு; திறவுகோலும் உண்டு, என்பதை இந்தியாவில் ஓர் இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்ததின் மூலமாக உலகுக்கு உணர்த்தியவர் ஹியூம்!

ஆதிக்க ஆர்ப்பாட்ட அலைகளைத் தடுக்கும் கரையாக; இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைக் கட்டி, வறிய மக்களைத் தடுத்தாட் கொண்டவர் ஹியூம்! அவர் இந்திய மக்கள் அச்சத்தை அகற்றியவர்! நாட்டுக்குத் தொண்டாற்றும் தியாக வித்தைக்கு நாயகனாக நடமாடியவர்!

எத்தனை ராணுவங்கள் வந்தாலும் ஏறென எதிர்த்து நின்று போராடும் எழுச்சிமிக்க வீரர்களை உருவாக்கி அவர்களுக்கு ஆசானாக அமர்ந்து பயிற்சி கொடுத்தவர்!

## ஹியூம் யார்? சாதனைகள் என்ன?

அத்தகைய அரும்பெரும் ஆங்கிலேய எதிர்ப்பாளரான திரு ஹியூம் அவர்கள், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியை முதன் முதலாகப் பம்பாய் நகரிலே தோற்றுவித்ததாக, அதன் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்! உண்மையல்ல அது!

இந்திய காங்கிரஸ் கட்சி தோன்றிட, அதற்கு முதன் முதலாகக் கால்கோள் விழா நடத்தப்பட்டது தமிழ் மண்ணிலே தான் என்பதற்கான சான்று அதன் வரலாற்றிலேயே உள்ளது.

'ஆலன் அக்டேவியன் ஹியூம் என்ற வெள்ளைக்காரர், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்தது ஏன்? அவர் யார்? ஏன் தோற்றுவித்தார் காங்கிரஸ் கட்சியை? எவ்வாறு உருவாக்கினார்' என்ற வரலாற்றை இந்த நேரத்தில் நாம் நோக்கல் நலமல்லவா?

திரு ஆலன் ஆக்டேவியன் ஹியூம், இங்கிலாந்து நாட்டிலே பிறந்தவர்; அவருடைய தந்தையார் அங்கே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்; ரேடிகல் பார்ட்டி (RADICAL PARTY) என்றதோர் தீவிரவாத கட்சியைப் புதிதாக அங்கே ஆரம்பித்தார் அவர்! அந்தக் கட்சி பிற்காலக் காங்கிரஸ் கட்சியைப் போன்ற ஒரு தீவிரவாதக் கட்சியாகும்.

திரு ஹியூம், ஐ.சி. எஸ். என்ற இந்தியன் சிவில் சர்வீஸ் கல்வியிலேபட்டம்பெற்றவர். ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியாவில் வங்காள மாநிலத்தில் மாவட்டத் துணை மாஜிஸ்திரேட்டாக, மாவட்ட துணை ஆட்சியாளர் என்ற அதிகாரியாக, கி.பி.1849-ஆம் ஆண்டு எட்டாவா என்ற நகரிலே பணியாற்றினார். விவசாயத்துறை, வணிக வருவாய்த்துறை அதிகாரியாகப் பணியாற்றிய அவர், தனது திறமையினால் அரசுத் துறைச் செயலாளராக உயர்ந்தார்!

இந்தியாவில், 1857-ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய் கலகம் என்ற புரட்சி சம்பவத்தில், ஆங்கிலேய ஆட்சி அவரையும் ஒரு சாட்சியாக நியமித்தது. அதே நேரத்தில் அந்த வரலாற்றுச் சம்பவத்தை ஆராயவும் அவர் ஆர்வம் கொண்டார். பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் நிர்வாகத்திற்கும் - அவருக்கும் இடையே உருவான சில மனித நேய எதிர்ப்பு மன வேறுபாடுகளால், அவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு பதவியிலே இருந்து விலகினார்.

திரு சர் வில்லியம் வெட்டர்பான் என்ற அவரது நண்பர்; ஹியூம் அவர்களது சரிதையை எழுதினார். அந்த வரலாற்றில், ''ஹியூம் மிகமிக நேர்மையானவர், எந்த அரசியல் கட்சியினையும் சேராதவர்'' என்று குறிப்பிட்டார்!

இந்த வில்லியம் வெட்டர்பர்ன் என்ற ஆங்கிலேயர்தான், 1889-ஆம் ஆண்டு, பம்பாய் மாநகரில் நடைபெற்ற அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை வகித்தவர்!

அரசு பணியிலே இருந்து விலகிய அதிகாரியான திரு. ஹியூம், அவரது தந்தையார் ஆரம்பித்த ரேடிகல் பார்ட்டியைப் போன்ற ஒரு தீவிரவாதக் கட்சியை இந்தியாவிலும் உருவாக்கத் திட்டமிட்டுச் செயலாற்றினார்.

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த பட்டதாரி மாணவர்களுக்கெல்லாம், அவர் பகிரங்கமான ஒரு சுற்றறிக்கை அழைப்பை 1883-ஆம் ஆண்டு விடுத்தார்!

அந்த அறிக்கையில், ''கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டதாரிகளே! சமுதாயம், அரசியல் - நீதித்துறை போன்ற முக்கியமான எல்லாத் துறைகளிலும் இந்திய நாடு முன்னேற்றம் பெற வேண்டாமா? பட்டதாரிப் பண்பாளர்களே! நீங்கள் இந்த நாட்டின் உணவுக்கு உப்புப் போன்ற சத்துடையவர்கள்; சுயலநலமில்லாதவர்கள். எதற்கும் அஞ்சாதவர்களாக, எதையும் தியாகம் செய்பவர்களாக, இதயபூர்வமாக இந்தியாவை நேசிப்பவர்களாக, நாட்டுக்காக உடல், உயிர், சொத்து அனைத்தையும் இழக்க துணிவுள்ள தியாக மறவர்களாக, நீங்கள் விளங்காத வரை, இந்தியாவுக்கு விடிவு காலமே தோன்றாது. சுதந்திரத்தோடும் - மகிழ்ச்சியோடும் நீங்களும் இந்த நாடும் வாழ வேண்டாமா?'' என்று கேட்டார்!

திரு. ஹியூம் விடுத்த இந்த வேண்டுகோள் அறிக்கை நல்ல பயனை வழங்கியது. ''ஐம்பது பேர்களேனும் வாருங்கள்'' என்று அழைத்ததற்கு மாறாக, எழுபத்திரண்டு பேர்கள் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைத்திடத் திரண்டார்கள்! பின்னர் பல வழக்குரைஞர்கள், நீதிபதிகள், பத்திரிகையாளர்கள், படித்த பட்டதாரிகள், செல்வச் சீமான்கள் உட்பட பல துறைகளைச் சேர்ந்தவர்கள் நாட்டிற்குத் தொண்டாற்றிடக் கூடிவந்தார்கள்!

## அப்போதும் பிளேக் நோய்!

அப்போது திரண்டுவந்தவர்கள் அனைவரும் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியை நிறுவிட, மராட்டிய மாநிலத்திலே உள்ள பூனா நகரிலே முதலில் கூடுவது என்று திட்டமிட்டார்கள். பூனா நகரிலே அப்போது கடுமையான பிளேக் நோய் பரவியிருந்தது. அதைத் தடுக்க பம்பாய் மாநகராட்சித் திட்டமிட்டுக் கடுமையாக நடவடிக்கை எடுத்தது.

எலிகளைக் கொல்வது பாபம் என்றும், அவை விநாயகப் பெருமான் வாகனத்தின் தெய்விகச் சின்னங்களென்றும், பாலகங்காதர திலகர் மக்களிடையே பிரசாரம் செய்தார்! வெள்ளையர் எலிவேட்டை நடவடிக்கையை எதிர்த்து போராட்டம் புரிந்தார்! பதினெட்டு மாதங்கள் சிறை தண்டனை பெற்றார்!

பிளேக் நோய் என்ற நெருப்பிற்கு மதம் என்ற நெய் ஊற்றப்பட்டதால், பூனா நகரிலே அப்போது கலவரம் மூண்டது; இன நெருப்பு ஊரையே இருட்புகையாக்கியது!

பிளேக் நோயைத் தடுக்க வீடு வீடாக எலிவேட்டைக்கு சென்ற இரண்டு வெள்ளை அதிகாரிகள், அவர்கள் சென்ற ஜீப் காரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். அதனால், பூனா நகரம் மதக் கலவரத்தில் சிக்குண்டு குழப்பம் அடைந்திருந்தது! கலவரம் ஏற்பட்டு, ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது!

அதனால், பூனாவில் கூட வேண்டிய இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி பம்பாயில் கூடியது. அன்றைய சென்னை மகாணத்தைச் சேர்ந்த பி. ரங்கைய நாயுடு, வழக்கறிஞர் பி. அனந்தார்ச்சலு, எஸ். சுப்பிரமணிய ஐயர், 'இந்து' நாளேடு ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், எம். வீரராகவாச்சாரியார், திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ், காடம்பி சுந்தரராமன், டி. என். ஐயர், தஞ்சை எஸ்.ஏ. சுவாமிநாத ஐயர், எஸ். வெங்கட்ட சுப்பராயலு, குத்தி கேசவப் பிள்ளை போன்ற பலர் சென்று அதில் கலந்து கொண்டார்கள். திரு. ஹியூம் அனைவரையும் வரவேற்றுக் கூட்டத்தைத் துவக்கினார்.

ஆங்கிலேயர் ஆட்சியின் நிர்வாக அமைப்பில், இந்தியர்களுக்கு அதிக அளவு பதவிகள் வழங்கப்படல் வேண்டும், கல்வி நீதித்துறைகளில், நியாயமான உரிமைகள், பதவிகள், வசதிகள் கொடுக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானங்கள் அந்தக் கூட்டத்தில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் நகரில், இந்திய தேசியக் காங்கிரஸின் முதல் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்பு, திரு.ஹியூம் அவர்கள் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார்.

காங்கிரஸ் மகாசபை பம்பாயில் கூடுவதற்கான நோக்கங்களை அந்த நாட்டு மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். அங்கு இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் அணியிலே புகழ்பெற்ற சமூகச் சீர்திருத்தக்காரர்கள் பலரையும் கண்டுபேசினார்! இந்தியர் பிரச்னைக்கு ஆதரவு கொடுக்குமாறு அவர் வேண்டினார்!

## இலண்டனில் துண்டறிக்கை!

இந்தியாவில் வாழும் மக்களின் உண்மையான அவலநிலை, இங்கிலாந்து நாட்டு மக்களுக்கும் புரிய வேண்டும் என்ற நோக்கத்தில், ''THE OLD MAN'S HOPE'', ''முதியவனுடைய நம்பிக்கை'', என்ற தலைப்பிட்ட துண்டறிக்கைகளை அச்சடித்து,

அனைவருக்கும் அவரே நேரிலே கொண்டு போய் வழங்கினார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருந்த கருத்துக்கள் - இதோ; படியுங்கள்!

''இங்கிலாந்து வாழ் மக்களே! இந்தியாவிலே வாழ்கின்ற எண்ணிக்கையற்ற மக்கள், மகிழ்ச்சி என்றால் என்ன என்பதே அறியாமல் வாழ்கின்ற வேதனையான உண்மைகளை நீங்கள் அறிவீர்களா?

''ஏதோ, பிறப்பெடுத்த அவர்கள் இறக்கும் வரை வறுமை, வேலையின்மை, அடக்குமுறை, ஆணவக் கொடுங்கோல் கொடுமைகள் என்ற காரிருளிலே மூழ்கிக் கிடக்கத்தான் வேண்டுமா?

''மாறி மாறி வரும் நன்மை தீமை என்ற மாற்று வண்ணங்களால் நெய்யப்பட்ட அவர்களது ஆடைகள் இறந்த பிணங்கள் மேலே போர்த்தப்படும் சவமுக்காட்டுப் போர்வைகளாகவே அவர்களைப் பொறுத்தவரைப் போர்த்தப்பட்டுள்ளன! என்பதை நீங்கள் உணர்வீர்களா?

''நாள்தோறும் உதயமாகி வரும் கதிரவனுடைய எண்ணற்றக் கதிர்களுக்கே கூடத் தெரியாதபடி இருளிலே முடக்கப்பட்டு வாழ்கிறார்களே, இந்தியர்கள் - அவர்களுக்கு வாழ்க்கையிலே நிம்மதியான உய்வு என்பதே கிடையாதா? உழைக்கிறார்கள் அவர்கள்! கடுமையாகவே உழைக்கிறார்கள்! விவசாய மாடுகளைப் போலவே உழைக்கிறார்கள்! ஆனால், பயன்? பசி! பசி! பசி பசியென்றே நாள்தோறும் பரதவிகிறார்களே?

''நோய் அவர்களை விநாடிக்கு விநாடி நோகடிக்கின்றன! வேதனைகள் அவர்கள் வாழ்வைச் சோதனைகள் புரிகின்றன. அன்றாடம் அனுபவிக்கும் கொடுமைகளால் அவர்கள் அழுதுகொண்டே வாழ்கிறார்கள்! இந்திய மக்கள், இந்த அவலங்களால் பூட்டப்பட்ட இருட்டுக்கோட்டையிலே அடைக்கப்பட்டுத் திணறுகிறார்கள்- திகைக்கிறார்கள்!'' திரு.ஹியூம் வெளியிட்ட அந்தத் துண்டறிக்கையில் இந்திய மக்களின் அவலக் கொடுமைகளை இவ்வாறு அழுதுகாட்டி வெளியிட்டிருந்தார்.

எங்கே? தனது சொந்த நாட்டின் மண்ணிலே! எல்லாரும் இந்தியாவைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற வேட்கையாலே! வியப்பாக இல்லையா? திரு. ஹியூம் மறுபடியும் இந்தியா வந்தார். அலகாபாத் நகரிலே 1888-ம் ஆண்டு, மே மாதம் 30-ம் நாளன்று, ஒரு பொதுக் கூட்டத்திலே இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின்

குறிக்கோள்களைப் பகிரங்கமாக முழக்கமிட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சியிலே நடைபெறும் கேடுபாடுகள் இந்திய மக்களுக்கு எவ்வாறெல்லாம் ஊறுதூறுகளாக உறுத்துகின்றன என்பதை அவர் ஊர்கள்தோறும் பிரசாரம் செய்தார்.

வடமேற்கு மாகாணம் என்று அன்று இருந்த நிலப் பகுதிக்கு ஆளுநராக அன்று லெப்டினண்ட் சர்ஔக்லண்ட் கால்வின் என்பவர் இருந்தார். திரு ஹியூம் அவர்களின் ஆங்கில எதிர்ப்புச் சொற்பொழிவுகள், இந்தியர்களுக்கு ஆதரவாக அவர் முழக்கமிட்ட உரை வீச்சுகள் எல்லாம் அந்த ஆளுநர் கவனத்திற்குச் சென்றன.

உடனே அவர் இருபது பக்கங்கள் கொண்ட நீண்டதோர் கடிதம் ஹியூமுக்கு எழுதி; அவருக்கு ஏற்படப் போகும் அபாயங்களைச் சுட்டிக்காட்டி அவரை எச்சரித்தார்; ஜி.எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதிய காங்கிரஸ் வினா - விடை என்ற புத்தகத்தைப் பற்றியும் அவர் கண்டனம் செய்தார்.

ஆளுநரால் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திற்கும் கடுமையான விளக்கங்களை; திரு ஹியூம் எதிர்ப்புரைகளாக 72 பக்கங்கள் எழுதி அனுப்பினார்!

## தாயகம் சென்ற ஹியூம் மரணம்

அரிய இத்தகைய செயற்பாடுகளை ஆற்றிய திரு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அவர்கள் 1894-ஆம் ஆண்டு இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே, அவர் பதினைந்தாண்டு காலம் உழைத்து, 20,000 பவுன் செலவில் ஒரு பறவை இயல் நூலகமும், பறவைக் காட்சி சாலையும் அமைத்தார். "STRAY FEATHERS' என்ற பத்திரிகைக்கு ஆசிரியரானார்! இப்படிப்பட்ட அரிய மேதையின் இறுதிக்காலம் இருண்ட காலமாகவே அமைந்தது.

திரு ஆலன் அக்டேவியன் ஹியூம் என்ற கர்ம வீரன், 1912 - ஆம் ஆண்டு ஜூலை 31-ம் நாள் காலமானார். இந்த வேதனையான சம்பவத்தைக் கேட்ட அகில இந்திய தேசியக் காங்கிரஸ் ஆர்.என். முடோகர் தலைமையில் கூடிய அம்ரோட்டி நகர்மகாசபையிலே இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றித் தனது வருத்தத்தைக் காணிக்கையாக்கிக் கொண்டது.

''திரு ஹியூம்'' ஒவ்வொரு செயலாலும் - வார்த்தையாலும் இந்திய முன்னேற்றத்திற்காக உழைத்த ஓர் மகரிஷியாவார்'' என்ற பாராட்டுதல்களை அவருக்கு காங்கிரஸ் மகாசபை வழங்கிச் சிறப்பித்தது!

# 7. காங்கிரஸ் தோன்றியது தமிழ்நாட்டில்தான்!

சரித்திரம் எழுதுகின்ற ஆசிரியர்கள் சிலர், சரிகமபதநிச கற்றிடும் ஆரம்ப வீணைவாத்திய இளைஞர்களைப் போலத் தவறாக அதன் நரம்புகளை மீட்டுகிறார்கள்!

நரம்புகளில் நளினமிடும் அதன் ஒவ்வொரு ஒலியும், நாட்டை மயங்க வைக்கும் நாத இசைகளென்ற ராக நாணயம் என்பதனை மறந்து விடுகிறார்கள்!

அழகாக வீணையை உருவாக்கி, அற்புதமான ஏழு நரம்புகள் அமைத்து, அதன் உச்சியிலே ஓரிரு தாள முடிச்சுகளை வைத்திருப்பது ஏன்? தேவைக்கேற்ற இசை இயக்கத்திற்குரிய பாதுகாப்புக்காகத் தானே! இல்லையென்றால், ஊமை நரம்புகளால் உயிருக்கு என்ன பயன் என்று இரும்புக் கம்பிகளையே இணைத்திருக்கலாம் இல்லையா?

இந்திய வரலாற்றை எழுதிப் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான வின்சென்ட் ஸ்மித் அவர்கள், 'இந்திய வரலாறு வடக்கிலிருந்து தொடங்கி, தெற்கு, நோக்கிச் செல்கிறது. ஆனால், அண்மையில் அது தெற்கே தொடங்கி வடக்கே செல்லவேண்டும்'' என்று குறிப்பிட்டிருப்பதை, வரலாறு எழுதப் புகும் மூதறிவாளர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்று!

அதனைப் போல, முரண்பாடான கருத்துக்களோ, கொள்கைகளோ, ஒரு வரலாற்றில் இருப்பதனால், எழுத்தாளர்களாகிய நாம் எதிரிகளாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை! அவற்றுள் எது உண்மை, எது சிறந்தது என்பதை ஆதாரங்களோடு அடையாளம் கண்டு வரலாற்றுக்குப் பணியாற்றுவதே உண்மையான சரித்திரத்திற்கேற்ற அறநெறியாகும்!

## வஞ்சகமாக வரலாறு ஏன்?

இந்திய வரலாற்றை எழுதுகின்ற வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும், வட இந்தியாவிலே இருந்துதான் இந்திய சரித்திரமே தொடர்கிறது என்ற நோக்கிலே எழுதுகிறார்கள்! ஆனால், உலக வரலாற்றுப் பேராசிரியர்கள் எல்லாம், மனிதவரலாறு எங்கேயிருந்து உருவாகிறது என்ற ஆய்வுச் சர்ச்சைகளிலே ஆளுக்கொரு விதமாக, அவரவர் முடிவை அறிவிக்கின்றார்கள்! ''குமரி முனைக்குத் தெற்கே உள்ள, உலக நடுக்கோட்டிற்கு

இருபுறமும் இருந்த நிலப்பகுதிகளே மக்கள் வாழ்வதற்குரிய இடம்!''

''அங்கேதான், மனித நாகரிகம் முதலிலே தோன்றி வளர்வதற்கு வித்திட்டது!'' என்று செர்மானிய வித்தகர் ஹெக்கேல் சுட்டுகின்றார் - தமிழ் மண்ணை!''

''மனித சாதியாரின் தொட்டில் தென்னிந்தியாவாக இருக்கலாம்; வடதிசை மக்களின் முன்னோரும் மத்தியத் தரைக்கடற்கரையோர நாடுகளில் உள்ள மக்களின் முன்னோரும், முதலிலே இருந்து சென்ற இடம் - தென்னிந்தியாவாக இருக்கலாம்'' என்று, மேனாட்டு மேதை சர்சான் எவன்ஸ் என்பார் வரலாற்றை வரையறுக்கிறார்.

''மனிதன் மட்டுமல்ல; முந்திய விலங்கும் பறவையும் தோன்றும் முன்புகூட, குமரிக் கண்டம் நீண்ட காலமாக நிலைத்திருந்தது!'' என யோவான் என்ற இங்கிலாந்து சரித்திரப் பேரறிஞன் வரம்பு கட்டுகின்றார் வரலாற்றுக்கு!

''தெற்கே கடலில் மூழ்கிப்போன குமரிநாட்டின் எல்லையிலே இருந்து; வடக்கே இமயமலை வரை இருந்தோர் தமிழராவார்'' என்று, தமிழ்க் கடல் மறைமலையடிகளார் தனது ஆய்வைத் தமிழ் நிலப் பகுதியிலே இருந்துதான் துவங்குகிறார்!

''தெற்கே, இந்து மாக்கடலில், ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்ததென்றும், அதுவே பண்டைப் பாண்டி நாட்டின் பெரும் பகுதியென்றும், அந்நாட்டைத் தமிழர் குமரியாற்றின் அல்லது குமரிமலையின் பெயரால் குமரி நாடென்றும், லெமூர் என்ற குரங்கினம் அங்கு வதிந்ததால் லெமூரியா என்றும் அழைக் கின்றனர்.''

-என்று, பன்மொழி ஆய்வுப் பண்டிதர் தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகிறார்! அவரது ஆய்வும் குமரி முனையிலே இருந்துதான் பரவுகிறது!

''இந்திய நிலப்பரப்பில் மட்டுமல்ல; உலகத்திலேயே மிகப் பழைய நிலப்பகுதி தமிழகமே! மக்களின் முதல் தோற்றமே இங்குதான் நிழ்ந்திருக்க வேண்டுமென்று நில நூல் வல்லார் அறுதியிட்டு இயம்புவதாகப் பேராசிரியர் சொக்கப்பா அறிவிக்கிறார்!

உலகில், முதன் முதலில் மண் எங்கே தோன்றியது? மனிதன் எங்கே தோன்றினான்? என்பதை ஆராய வந்த பேரறிஞர்கள் எல்லாம், தமிழகத்தின் குமரிக் கண்ட நிலப்பகுதிகளையே, உலகுக்கு உணர்த்தியுள்ளார்கள்!

அதனைப் போலவே, மதம், இனம், மொழி, நாகரிகம் எதனை எடுத்துக் கொண்டாலும் சரி, தமிழ்மண்தான் அவைகட்குரிய பிறந்த நிலமாகத் தோற்றமளிக்கின்றது.

அவற்றை விளக்கப் புகுந்தால், நூல் விரிவடையும், அவசியமற்றதாகிவிடும் என்பதால் நிலப் பகுதிக்குரிய சில ஆய்வாளர் கருத்துகளை மட்டுமே எடுத்துரைத்தோம்!

அகில இந்தியக் காங்கிரஸ் தோன்றி ஏறக்குறைய 117 ஆண்டுகள் ஆகின்றன. அதன் தொன்மை என்ன? தோன்றியது எங்கே அந்தக் கட்சி? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? எதற்காக அது தோன்றியது? அதன், முதல் - இடை- கடை விவரங்கள் இன்றுவரை என்னென்ன என்பதை இந்த காமராஜர் வரலாற்றால் வாசகர்கள் புரிவது நலமல்லவா?

அகில இந்தியக்காங்கிரஸ் மகாசபை என்ற பெயர்தான், அக்கட்சி பிறக்கும்போது திரு ஹியூம் சூட்டிய பெயர்!

இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபை எங்கே தோன்றியது என்ற வினா, வரலாற்று ஆசிரியர்களிடையே ஒரு மர்ம சர்ச்சையாகவே இயங்கி வருகின்றது!

இன்று வரை தேசியக் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை எழுதுகின்றவர்கள், காங்கிரஸ் மேடைகளிலே பேசுகின்ற சொல்லேருழவர்கள், காங்கிரசைப் பற்றிக் கனிவான நெஞ்சம் கொண்ட பத்திரிகையாளர்கள், தலைவர்களுடைய வரலாறுகளை வரைந்து காங்கிரசுக்கும் - அவர்களுக்கும் பெருமை சேர்க்க நினைக்கின்ற எழுத்தாளர்கள் அனைவரும், எடுத்த எடுப்பில் ஏதும் சிந்தியாமல், எவ்விதச் செயற்பாடுமில்லாமல், நினைத்த நினைவோடு அது பம்பாய் நகரிலே பிறந்ததாகவே ஆரூடம் கணிக்கிறார்கள்!

அந்தக் கருத்தை இன்றுவரை பொதுவாக எந்த எழுத்தாளர்களும் மறுக்கவில்லை. மாறாக, திரும்பத் திரும்ப அதையே எழுதி, பேசி, வலியுறுத்துகிறார்கள்!

ஆனால், இரண்டே இரண்டு அன்பர்கள்தான் அதை மறுத்தார்கள்! 'நவசக்தி' என்ற நாளேட்டின் ஆசிரியராகவும், தலைவர் காமராஜ் அவர்களின் பள்ளித் தோழராகவும், இளமைக் காலம் முதல் அவருடன் இணைந்து மிக நெருங்கிப் பழகியவருமான, முருக - தனுஷ் கோடி என்பவர் மறுத்துள்ளவரில் ஒருவர்! மற்றவர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள்!

'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலை முருக - தனுஷ்கோடி எழுதினார்! அந்தப் புத்தகத்தில் காங்கிரஸ் கட்சியின் தோற்றம் பற்றி அவர் எழுதியிருப்பதை அப்படியே கீழே தருகின்றோம்!

## முருக – தனுஷ்கோடி எழுதும் சான்று!

அகில இந்தியக் காங்கிரசின் தலைவராகக் காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இந்த காலக்கட்டத்தில் காங்கிரஸ் பிறந்த வரலாறு எப்படி என்பதை எழுதுவது பொருத்தமாய் இருக்கும் என நினைக்கிறேன். ''ஏனெனில், காங்கிரசே தமிழகத்தில்தான் பிறந்தது என்பது யாருக்கும் தெரியாது.''

சென்னையில் கலெக்டராக இருந்த திவான்பகதூர் ரகுநாதராவ் வீட்டில், 1884-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 26-ஆம் நாளில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவர் திரு. ஹியூம் என்னும் இவர்தான்!

பூர்வாங்கக் கூட்டத்தில், டாக்டர் சர். சுப்பிரமணிய ஐயர், பனப்பாக்கம் ரங்காச்சார்லு, எழும்பூர் ரங்கைய நாயுடு, சுரேந்திரநாத் பானார்ஜி, மனமோகன்கோஷ், தாதாபாய் நௌராஜி, வாமன் ராமாயண் மண்டிலிக், காசிநாத்திரயம்பக், மற்ற சிலரும் கலந்து கொண்டார்கள்;

''நாட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் உண்மையுடன் பாடுபடுவோர் எல்லோரும் ஒன்று சேர்ந்து - ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டு ஒவ்வொரு ஆண்டில் செய்யத் தகுந்த அரசியல் முயற்சிகளை விவாதித்து நிச்சயித்தல்'' என்ற விஷயம் பூர்வாங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

''அடுத்த கூட்டம் 1885-ம் ஆண்டில் புனா நகரில் கூடுவது என்றும், அதற்கு எல்லோருக்கும் அழைப்பு அனுப்புவது என்றும், அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.''

''பம்பாயில் உள்ளே கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில், 1885-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதி நண்பகல் 12-15 மணிக்கு, முதல் காங்கிரஸ் கூடியது.

''சென்னையில் இருந்த பிரபல தலைவர்களும், 'சுதேசமித்ரன்' 'இந்து' பத்திரிகைப் பிரதிநிதிகளும் இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தாதாபாய் நௌரோஜி எல்லாரையும் உரையாற்றி வரவேற்றார் டபிள்யூ. சி. பனார்ஜி இந்த முதல் காங்கிரசுக்குத் தலைமை தாங்கினார்.

வங்காளக் கிறிஸ்தவரும் - பாரிஸ்டருமான இவர் பெயரை ஏ.ஏ. ஹியூம் மு... மொழிந்தார்! டாக்டர் சர். மணி ஐயர் வழிமொழிந்தார்.

(- 'காமராஜ் ஒரு சரித்திரம்' பக்கம் 205-206)

சென்னை மாநகரில்1884-ஆம் ஆண்டில் கலெக்டராக இருந்தவர் திவான்பகதூர் ஆர். இரகுநாதராவ் என்பவர். அவருக்கு நெருங்கிய நண்பர் திரு. ஆலன் அக்டேவியன் ஹியூம்!

திரு.ஹியூம், வங்காள மாநிலத்தில் ஒரு ஐ.சி.எஸ். அதிகாரி! திவான் பகதூர் சென்னையில் கலெக்டராக இருந்தவர்! எனவே, ஆட்சித் துறையிலும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக அறிவர்.

ஓய்வு பெற்ற கலெக்டர் ஆர். ரகுநாதராவ், மதராஸ் மகாஜன சபையின் செயற்குழு உறுப்பினராக இருந்தவர். அவரும் பொதுத் தொண்டில் பொறுப்பான ஆர்வமிக்கவர். அதனாலும் அவர், திரு. ஹியூம் அவர்களுக்கு நண்பராகத் திகழ்ந்தார்.

அத்தகைய ஒரு முன்னாள் கலெக்டர் வீட்டிற்கு 1884-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 26-ஆம் நாள் திரு. ஹியூம் வருகை தந்துள்ளார்.

டாக்டர் சர். சுப்பிரமணிய ஐயர், பனப்பாக்கம் ரங்காச்சார்லு, எழும்பூர் பி. ரங்கையநாயுடு, நரேந்திரநாத்சென், சுரேந்திரநாத் பானர்ஜி, மனமோகன் கோஷ், சரண்சந்திரமித்தர், கே.டி. லதலாங், புனா, விஜயரங்கமுதலியார், பாண்டுரங்க கோபால், பஞ்சாப் சர்தார் தயாள்சிங், அலகாபாத் ஹாரிஸ், சந்திரர், உத்தரபிரதேசம் காளிபிரசாத், இலக்குமி நாராயணன், ஸ்ரீராம், தாதாபாய் நௌரோஜி, வாமன் ராமாயண், வி.என். மண்டிலிக், காசிநாத்திரயம்பக் போன்ற சிலரையும் வரவழைத்துச் சந்தித்திருக்கிறார் திரு. ஹியூம்.

அனைவரும் கூடிக் கலந்து, காங்கிரஸ் மகாசபையை உருவாக்கவும், புனாவிலே அடுத்த காங்கிரஸ் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்றும், அதற்கான அழைப்புக்களை எல்லோருக்கும் அனுப்புவது என்றும், அன்று குழுமிய மகாஜன உறுப்பினர்களும் - அல்லாத பிறரும் முடிவெடுத்தார்கள் என்றால் என்ன பொருள்?

தேசியக்காங்கிரஸ் மகாசபை என்ற கற்பகவிருட்சம் வளர, ஓங்க, தழைத்திட, தமிழ் மண்ணிலேதான் விதை விதைக்கப்பட்டது என்றல்லவா பொருள்?

இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை என்ற கோட்டையைக் கட்டிட, தமிழ் மண்ணிலேதானே அஸ்திவாரக் கால் கோள்விழா நடத்தப்பட்டது என்பதுதானே உள்ளர்த்தம்!

அதைத்தான், எந்த வரலாற்றாசிரியனும் கூறாத ஒரு துணிவான கருத்தை, தலைவர் காமராஜ் அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் தலைவரானதும் அஞ்சா நெஞ்சுடன் அடித்துக் கூறியிருக்கிறார், ''நவசக்தி'' என்ற நாளேட்டின் ஆசிரியர். இதே கருத்தை திரு. ம.பொ. சிவஞானமும் கூறியுள்ளார்.

முருக- தனுஷ்கோடி அவர்களின் கருத்துக்கு அரண்கட்டிய முறையில், Congress Centinary. (டிசம்பர் 16-ஆம் நாள் வெளிவந்தது) என்ற பத்திரிகையில் "Congress Leaders From the South" என்ற ஒரு கட்டுரை வெளிவந்தது.

## ஆஞ்சநேயலு ஆதாரம்

டாக்டர் A. ஆஞ்சநேயலு என்பவர் அக்கட்டுரையை எழுதியிருக்கிறார். அதில், அவர் ஒரு மர்மத்தை எழுப்பியுள்ளார்! அது என்ன?

" The intellectual elite of South Indian also Played a vital role in the genesis of the Congress - a role that has not been adeguately appreciated"

''இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் தோற்றத்திற்கு, தென்னிந்தியாவிலே உள்ள அருமையானதோர் அறிவுத் திறனுடைய அணி, பலமாகத்தனது கட்சிப் பணிகளை ஆற்றியது.''

''அப்படிப்பட்ட அணியின் பணிகள், மனம் திறந்து போதுமான அளவில் எவராலும் பாராட்டப்படவில்லை'' என்கிறார் டாக்டர் A. ஆஞ்சநேயலு அவர்கள். அறிவுபலம் உள்ள அந்த அருமையான அணி ஆற்றிய பலமான கட்சிப்பணிகள்தான் என்ன? அவற்றின் உண்மைதான் என்ன?

தேசத்தொண்டிலும் இந்த மர்மம் ஏன்? தென்னிந்தியர் என்றதனால் ஏற்பட்ட காழ்ப்பா? இல்லையென்றால், வேறு என்னவாக இருக்க முடியும்? அடுத்து அதே டாக்டர் ஆஞ்சநேயலு, வருத்தப்பட்டு வேதனைப்படுவதைப் பாருங்கள்.

"Even the Official Historian of the Congress, Dr. B. Pattabi Sitaramayya, Concedes the Point, that the actual Origin of the idea was Shrouded in Mystery.

''காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமான வரலாற்றாசிரியர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட டாக்டர் B.பட்டாபி சீத்தாராமையா கூட, அறிவுத் திறமைமிக்க அருமையான அந்த அணி ஆற்றியக் கட்சிப்பணியை ஏற்றுக்கொள்ளாமல், அது யாருக்கும் தெரியக்கூடாத ஒரு மறைபொருளாகவே மறைத்துவிட்டார்!''

அந்தத் தேசபக்திப்பணி எவ்வாறு மறைக்கப்பட்டது தெரியுமா? செத்த ஒரு பிணத்தைப் போர்வையினால் மூடி மறைத்துச் சவமுக்காடிடுவார்களே மக்கள், அதனைப்போல!

''ஆனால், அந்த நாட்டுத் தொண்டு மறைக்கப்பட்ட மர்மந்தான் புரியவில்லை.'' என்கிறார் டாக்டர் D.ஆஞ்சநேயலு அவர்கள்!

## மர்மம் அல்ல; மாயா ஜாலம்!

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்ததுகூட ஒரு மர்மம் அல்ல! அதைவிட பெரிய ஒரு மாயாஜாலம் என்ன தெரியுமா?

மறைக்கப்பட்ட அந்த சம்பவம் பற்றிப் பட்டாபி குறிப்பிடுவது என்னவென்றால், ''சென்னை மாகாண ஜன சபையாலும் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையாரின் தீசாபிகல் சொசைட்டி என்ற சங்கத்தாலும் 17பேர்களைக் கொண்டு நடத்தப்பட்டக் கூட்டம் அது'' என்றார்!

## டாக்டர் பட்டாபியை – ம.பொ.சி. மறுக்கிறார்!

டாக்டர் பட்டாபி சீத்தாராமையா கூறும் வரலாற்றுண்மை யற்ற கருத்தைச் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் மறுக்கிறார்? எப்படி?

''1884-ல் அடையாறிலுள்ள பிரமஞான சங்கத்திலே சேர்ந்தவர்கள் ஆண்டு மாநாடுநடைபெற்றது. 17 பேர் திவான் பகதூர் வீட்டில் தனியாகக் கூடி, அனைந்திந்தியாவுக்குமாக ஒரு தேசிய அமைப்பு நிறுவவும், அதற்கு மாநிலந்தோறும் கிளைகள் அமைக்கவும் திட்டமிட்டனர்'' என்கிறார் சிலம்புச் செல்வர், தனது ''விடுதலைப் போரில் தமிழகம்'' என்ற முதல் தொகுதி நூலில்.

சிலம்புச் செல்வர் எந்த வரலாற்று ஆதாரத்தை வைத்து மறுக்கிறார் என்று வரலாற்றுப் பிஞ்சுகள் கேட்கக் கூடும் அல்லவா? வங்காள வரலாற்றாசிரியர் திரு. ஈஸ்வரமித்தர் தொகுத்துள்ள ''காங்கிரஸ் பல்பொருள் களஞ்சியம்'' (சைக்ளோபீடியா, பக்கம் 7) என்ற நூலாதாரத்தை ஏற்று, எழுதியுள்ள மேற்கண்ட கருத்து, பட்டாபிக்கு மறுப்பாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

ஓரணியின் தொண்டு மறைக்கப்பட்ட மர்மம்தான் புரியவில்லை என்கிறார் டாக்டர் D.ஆஞ்சநேயலு அவர்கள்!

''அடையாறு தீசாபிகல் சொசைட்டி சார்பாக நடைபெற்ற தொடர் கூட்டங்களுக்குப் பிறகு, 1884-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த கூட்டம் அது'' என்று கூறுகிறார்.

நியாயங்கள் என்றும் சாவதில்லை - உண்மை, உண்மைதான்! கற்கோட்டைக்குள்ளே கல்லறை கட்டி ஓர் உண்மையை எந்தக் கடையனும் மூடி மூடிக் கனவு காண மாட்டான். உண்மை அதை உடைத்துக் கொண்டு வெளியே வரும் அல்லவா?

அதற்கேற்ப, அன்று நடைபெற்ற அந்த உண்மை ஊரறியச் சாவுமணி அடித்துக்கொண்டிருக்கிறது, இதோ அந்த மணியோசை எதிரொலிக்கின்றது பாருங்கள்!

"-But, He mentions the fact, that it was Conceived at a Private meeting of 17 Men including members of the Madras Mahajana Sabha and of the Theosophical Society; after the Theosiphical Convention at Adyar in December - 1884.

*பட்டாபி சீத்தாராமையா காங்கிரஸ் கட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வமான வரலாற்றாசிரியர் என்று புகழப்படுபவர்!*

*நடைபெற்ற அந்த நாட்டுப் பற்றுக் கடமைக்குரிய சம்பவத்தைக் களங்கம் கற்பித்து அவர் இவ்வாறு கூறலாமா? என்பதைச் சிந்திக்க மறுத்தது ஏனோ புரியவில்லை. இதுவா வரலாற்றாசிரியருக்குரிய அழகு?*

*மதராஸ் மகாஜன சபை - தீசாபிகல் சொசைட்டி என்ற இரு சங்கங்களும் இணைந்து, 17 பேர்களைக் கொண்டு நடத்தப்பட்ட தனியார் கூட்டம் என்கிறாரே...! தேசபக்திக்கான ஆண்மையாளர்கள் - அறிவாளர்கள் 17 பேர்களாயிருந்தாலென்ன? ஆயிரம் பேர்களாக இருந்தால் என்ன?*

*அவர்கள் தனியார் கூட்டமாய் இருந்தால் என்ன? இரு சங்க இணைப்புகளாக இருந்தால் என்ன? யாராயிருந்தால் என்ன? தேசபக்தியோடு நடத்தி முடிவெடுக்கப்பட்ட அறிஞர் குழுவா, அல்லவா? இதுதான் கேள்வி.*

*யார் அந்த 17 பேர்கள்? எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் பெயர்கள் என்னென்ன? என்ற விவரத்தையும் விளக்கி இருக்க வேண்டாமா? அவரது நூலில் திரு. பட்டாபி. அந்தக் கூட்டம் தீசாபிகல் சொசைட்டி தொடர்கூட்டங்களுக்கு முன்பு நடைபெற்றிருந்தால் என்ன? அல்லது பின்னால் நடந்திருந்தால் என்ன? எதற்காக நடத்தப்பட்டது என்பது கேள்வியாகாதா? அதற்கு என்ன பதில் பட்டாபியாரே!*

*பட்டாபி எழுதியதைப் பார்த்தால், டாக்டர் D.ஆஞ்சநேயலு எழுதியதைப் போல, ஏதோ ஓர் உட்சுரங்கமோ அல்லது உட்கிரகமோ இருப்பது தெரிகிறது அல்லவா?*

*உண்மைக்குத் திரையிட்ட இந்த சம்பவத்தோடு பட்டாபி நிற்கவில்லை. "ஒட்டக்கூத்தரின் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள்" என்பதற்கேற்ப, இரட்டைப் பொய்யைக் கழறி ஓர் உண்மையை உதாசீனப்படுத்த உந்துகிறது அவர் மனம்! என்ன அந்தப் பொய்? இதோ அதன் எலும்பும் தோலுமான கோர உருவம்!*

*சென்னை அடையாறு பகுதியில், 1884 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், தீசாபிகல் சொசைட்டி என்ற சங்கம் நடத்திய தொடர்கூட்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, 17 பேர்களைக் கொண்ட தனியார் கூட்டம்*

நடைபெற்றது என்ற ஆழமான ஆய்வுக்கே சென்று முடிவு கட்டியுள்ளார் - பட்டாபி!

ஆக, இதுவரை நீங்கள் கவனமுடன் ஊன்றிப் படித்து வந்திருந்தால், முருக தனுஷ்கோடி அவர்கள் கூறிய அஞ்சா நெஞ்சக் கருத்திற்கேற்ற, அடையாளத்தை அறிந்திருக்க முடியும் அல்லவா?

திவான்பகதூர் ரகுநாதராவ் என்ற ஓய்வுபெற்ற கலெக்டர் வீட்டில், உண்மையான தேசபக்தர்களைக் கொண்ட ஓர் அறிவார்ந்த அணியின் திட்டம் நடைபெற்றிருப்பது உண்மை என்று உணர்கின்றோம். அந்த அணி, காங்கிரஸ் முதல் மகா சபைக்கு முன்பு கூடிய ஒரு பூர்வாங்கக் கூட்டம் என்பதிலும் ஐயமில்லை!

அதாவது ஒரு நாடகத்திற்கு முன்பு நடைபெறும் கூட்டம் என்றால், ஏதோ மிகையாக எவரும் எண்ணவியலாது இல்லையா?

இந்த கிராண்ட் ரிஹர்சல்தான், பூனா நகரிலே முதல் கூட்டம் என்ற நாடகமாக நடத்தப்பட இருந்தது! அங்கே பிளேக் நோயும் எலி வேட்டைப் படுகொலைகளும் குறுக்கிடவே, பம்பாயில் தேஜ்பால் சமஸ்கிருத கல்லூரியிலே அது நடைபெற்றிருக்கிறது.

## இரண்டாவது மர்மம்!

இதில் இன்னொரு மர்மத்யையும் தெளிவாகக் காட்டுகிறார் திரு. டாக்டர் ஆஞ்சநேயலு அவர்கள். என்ன அது? பம்பாயிலே தேசிய காங்கிரஸ் முதல் மகாசபை நடைபெற்றது 1885-ம் ஆண்டு டிசம்பர் மாதம், 28-ம் நாளன்று; நண்பகல் மணி 12-15க்கு!

சென்னையில், கலெக்டராக இருந்த ஆர். ரகுநாத ராவ் இல்லத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் 1884-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 26-ம் நாளன்று!

குழந்தை பெறப்போகும் ஒரு பெண்ணுக்கு இடுப்பு நோயும் - இன்ன பிற குடமும் உடைந்தது பகல் 12 மணி; பிறந்தது ஒரு மணிக்குக் குழந்தை! ஆனால், பகல் 12 மணியும் பிரசவப்பிணி நேரம்தானே அதே குழந்தையைப் பெற்றிட!

ஜாதகம் குறிப்போருக்கு வேண்டுமானால் ஒரு மணி முக்கியமாக இருக்கலாம்: அதற்காக, பிரசவ வேதனை நேரத்தை ஒதுக்கிவிட முடியுமா? எடுத்த எடுப்பிலேயே தாய்க்கு வேதனை தராமல் குழந்தை சுகப்பிரசவம் பிறக்க அது என்ன உலகம் போற்றும் மாமன்னன் அசோகன் பிறப்பா?

பிரசவ நேரத்தில், அந்த மாமன்னன் தனது அன்னைக்குப் பிரசவ துன்பம் - சோகம் ஏதும் தராமல், சுகமாகப் பிறந்ததால்தான்

அவனுக்கு அசோகன் என்ற பெயரை அவன் தந்தை பிந்துசாரன் சூட்டியதாக சரித்திர ஆசிரியர்கள் சாற்றுகிறார்கள்! அதைப்போல் பிறந்த குழந்தையா காங்கிரஸ் மகாசபை?

எனவே, நடைபெற்ற இந்த இரண்டு கூட்டங்களின் நடவடிக்கைகளை எண்ணிப் பார்க்கும் எவரும், சென்னை மாநகர்தான் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்குக் கால்கோள் விழா நடத்திய முதல் பூர்வாங்கக் கூட்டம் அது என்று கருதமாட்டார்களா?

பம்பாய் மாநகரிலே நடைபெற்ற மகாசபைக் கூட்டம் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திற்குப் பிறகு, இரண்டாவதாக கூட்டப்பட்ட கூட்டமல்லவா அது? இரண்டு கூட்டங்களுக்கும் இடையே உள்ள நாட்கள், குறைவல்லவா?

அதுமட்டுமல்ல, பம்பாய் நகரில் முதல் மகாசபைக் கூட்டத்தைக் கூட்டிய ஹியூம் அவர்களேதான், சென்னைக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தையும் கூட்டியுள்ளவர்! பம்பாய் மகா சபையிலே கலந்துகொண்ட அதே உறுப்பினர்களில் பலரும், சென்னை மகா சபையிலே கூடியுள்ளவர்கள்!

உண்மை இவ்வாறிருக்க, சென்னை மாநகர் பூர்வாங்க காங்கிரஸ் கூட்டத்தைப் பாரபட்சமின்றிப் பலரும் பாராட்டி வரவேற்று அங்கீகரித்திருக்க வேண்டும்! இல்லையே! ஏன்?

பம்பாய் காங்கிரஸ் முதல் மகாசபைக்கு, சென்னை மாநகர் காங்கிரஸ் கூட்டம் ஒரு முன்யோசனைப் பூர்வாங்கக் கூட்டம் என்றாவது ஏற்றிருக்க வேண்டுமே அல்லாமல், அதை அலட்சியப்படுத்தி ஒரு மர்மமாக்கியிருக்கக் கூடாது.

எது எப்படியானாலும், ஒரு வரலாற்று ஆசிரியரான பட்டாபி சீத்தாராமையா அவர்கள், சென்னையில் நடந்த அறிஞர்களின் தேசபக்தியால், உருவான துவக்க விழாக் கூட்டத்தைப் பிணமுக்காடு போட்டு மறைத்திருப்பது சரித்திர நியாயமும் அல்ல - மனசாட்சியுமாகாது - நேர்மையான எழுதுகோலின் கண்ணியமும் அல்ல!

சரித்திரத்தின் ஓர் உண்மையை மனச்சான்றோடு சாற்றிய டாக்டர் D.ஆஞ்சநேயலு அவர்கள் பேனா முனைக்கு, வரலாற்றாசிரியர்கள் என்றும் வாழ்த்துப்பா பாடியபடியே இருப்பார்கள்!

# 8. பம்பாய் நகரில் காங்கிரஸ் பேரவை!

பரங்கியர் பாவங்களுக்குப் பஞ்சணை அமைக்க விரும்பாமல், அவர்கள் பாதகங்கள் வெளியேறப் பாதையமைத்திட; இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை இந்தியப் பெருமக்களுக்காக இயக்கித் தந்திட; எல்லா ஏற்பாடுகளையும் திரு. ஹியூம் அவர்கள் செய்து முடித்தார்.

எதற்காகவும், எப்போதும், எங்கும் வழக்காடாத ஏந்தல்கள் சிலர் வெள்ளையன் கொடுங்கோல் ஆட்சியை எதிர்ப்பதற்காக மட்டுமே வருகை தந்துள்ளார்கள். தந்தக் கட்டில்களிலே படுத்துக் களைப்பாறுபவர்கள் சிலர்! தங்க மஞ்சத்திலே துயிலும் தகுதி படைத்தவர்கள் ஓரிருவர்!

பத்திரிகை உரிமையாளர்கள் நிருபர்களாக வந்தார்கள்! படித்த பட்டதாரிகள், சட்ட நிபுணர்கள், சிறந்த வழக்கறிஞர்கள், மருத்துவ மேதைகள், தொழிலதிபர்கள், வெளிநாட்டிலே வர்த்தகம் புரிபவர்கள்; மொத்தமாக 72 பேர்கள் பம்பாய் நகரிலே கூடினார்கள்.

மழைக்காக உருவாகும் மின்கோடுகளாக அவர்கள் விரைந்து வந்தது ஏன்? மாடுகளைக் கட்டி மானத்தை உழச் சொன்ன அவர்கள், வெள்ளை வானத்தைப் பிளந்தெறிய மார்க்கம் காண வந்த மான மறவர்களாக வந்தார்கள்.

ஒடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு நியாயம் தேவை என்று சிந்திக்க வந்தார்கள். பசிப் பிணியால் வாடிடும் ஏழை பாழைகள் புசிக்க; பாதி வயிறு உணவாவது கிடைத்திட வழி தேடிடுவோம் என்ற வறுமை ஒழிப்பு மருத்துவர்களாக வந்தார்கள். நாள்தோறும் துன்ப, துயர சோக வாழ்க்கை வாழும் மக்களுக்குத் துயர் துடைப்பாளர்களாக வந்தார்கள்.

செயல்தான் கடமை! பலன்தான் உரிமை! கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைக் கேட்பது கயமை! அதனால் நமது கடமைகளை நாம் ஒழுங்காகச் செய்வோம் என்ற எண்ணத்திலே வந்தவர்கள்தான் அந்த எழுபத்திரண்டு பேர்களும்.

தமிழ்நாட்டு மண்ணில் பூர்வாங்கமாகக் கூடிக் கலந்து யோசித்ததற்கேற்ப பூனா நகரிலே கூட முடியாமல், பம்பாய் நகருக்கு வந்தார்கள்.

அப்போது புனா நகரிலே எலிகளால் ஏற்பட்ட பிளேக் என்ற நோய் அந்நகரையே நாசமாக்கி, நரகமாக்கி உலுக்கிக் கொண்டிருந்தமையால் அவர்கள் பம்பாய் நகருக்கு வந்து கூடினார்கள்! சென்னை மாநிலத்திலே இருந்து 24 பேர்கள் பம்பாய் மகாசபைக்குச் சென்றார்கள். இவர்களுடன் 'இந்து' 'சுதேசமித்திரன்' உரிமையாளர்களும் பிற நிருபர்களும் சென்றனர்.

காங்கிரஸ் மகாசபைக்கு வந்திருந்த அனைவரையும் தாதாபாய் நௌரோஜி அவர்கள் வரவேற்புரையாற்றி வருக, வருகவென வரவேற்றார். வங்கத்தைச் சேர்ந்த கிறித்தவரும் பாரிஸ்டருமான டபிள்யூ. சி. பனார்ஜி அவர்களை தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். மணி ஐயர் அவர்கள் வழி மொழிந்த பின்பு, மகாசபைத் தலைமையை பனார்ஜி அவர்கள் ஏற்று, உரையாற்றினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை ஏன் தோற்றுவிக்கப்பட்டது? அதன் பணிகள் எவை? என்பனவற்றை தலைவர் விளக்கிப் பேசியபோது: ''நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு, வளர்ச்சிக்கு உழைக்க விரும்பும் எல்லோரும் நாம் நமக்குள் நெருங்கிப் பழகும் பண்பைப் பெற வேண்டும்.''

''நாம் யார்? நமது நிலை என்ன? என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு நாட்டிற்காகப் பணியாற்றிட வேண்டும்'' ''நமது நாடடிற்காக நாம் ஆற்றவேண்டிய சேவைகள், கடமைகள் ஐந்து வழிகளிலே பிறக்கின்றன!''

''நாம் அனைவரும் இந்திய மக்கள்? நமக்குள்ளே மதம், ஜாதி, இனம், நிறபேதங்கள், மாகாண வெறிகள் தோன்றக் கூடாது.'' ''நமது முழு உழைப்பும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகவே, என்ற எண்ணம் எழுமாறு ஒவ்வொரு துறையிலும் உழைக்க வேண்டும்.''

''எந்த பிரச்னையானாலும் சரி, அவை எப்படிப் பட்டதானாலும் சரி, நாம் - நமக்குள்ளே ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேச வேண்டும்! முழு விவாதத்திற்குப் பின்பே நாம் முடிவை எடுக்க வேண்டும்.''

''நம் நாட்டுச் சான்றோர்களின் கருத்துக்களைத் தேசியத் தகுதியில் பொன்னே போலப் போற்றி, அவற்றைப் பதிவு செய்திட வேண்டும்.'' ''இன்றைய தேசியக் காங்கிரஸ் மகாசபையின் இந்தக் கூட்டத்தில், தேசியவாதிகளாகிய நாம், என்னென்ன பணிகளைச் செய்வது என்ற முடிவை நாமே நிர்ணயிக்க முனையவேண்டும்.''

இவைதான், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகாலப் பொதுக் குறிக்கோள்களாக இருந்தன. பம்பாயில் திரண்ட காங்கிரஸ் பேரவையில் கூடியத் தலைவர்களது உரைகளின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் தீட்டப்பட்டன.

அந்தத் தீர்மானங்களை, தமிழக 'இந்து' பத்திரிகை ஆசிரியராகச் சென்றிருந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் முன்மொழிந்து பேசினார்.

ஆதிக்க வெறி பிடித்த ஆங்கிலேய ஆதிக்கத்தை அகற்றிச் சுதந்திர ஒளியை இன்று இந்தியா உலகுக்கு உணர்த்தி வருகிறது என்றால், அன்று திரு. பானர்ஜி தலைமையேற்ற அதே இந்திய தேசியப் பேரவைதான் காரணமாகும்!

தொட்ட கை துலங்கும் என்ற கை ராசியைப் போல, 1885-ஆம் ஆண்டில், அந்த மாமனிதர் பம்பாய் நகரிலே ஆரம்பித்துக் கொடுத்த காங்கிரஸ் பேரியக்கம், படிப்படியாக, ஒவ்வொரு ஆண்டுதோறும் ஒவ்வொரு செயல் வீரம் பெற்ற தலைவரின் கீழ்க் கூடிக்கூடி, அருகு போல் வேரூன்றி, ஆல்போல வளர்ந்து, சுதந்திர நிழலைப் பலகோடி மக்களுக்குக் கொடுத்திருக்கிறது!

# 9. காங்கிரஸ் தலைவர்கள் காமராஜ் வரை யார் - யார்?

ஆங்கிலேயரின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து மக்கள் போராட வேண்டும்! எங்கெல்லாம் எதேச்சாதிகாரம் கொடிகட்டிப் பறக்கின்றதோ அங்கெல்லாம் அநீதியும் ஆத்திரமும் ஆர்ப்பரித்தே எழும்!

எந்த நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளைப் பாயாக விரித்துக் கடமையைத் தலையணையாக்கி, சோம்பலைச் சுகமாகக் கருதி, வறுமையை உறக்கமாக எண்ணிக் குறட்டை ஒலிகளின் சங்கீதத்தில் துயில் கொண்டிருக்கிறார்களோ அந்த நாட்டிலே, அந்நியன் ஒருவன் அரசனாகிக் கொடுங்கோலானாக மாறமாட்டானா?

அவசரச் சட்டங்களும், ஆள்தூக்கிகளின் கெடுபிடிகளும், அடி, உதை, கொலைகளும், அடக்குமுறை தர்பார்களும், காராக்கிரக இருட்டறைச் சித்ரவதைகளும், ஒருநாள் அவர்களுக்கே திரும்பி எதிரொலித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இத்தகைய அரசியல் வன்முறைகளை எதிர்க்கும் ஆற்றல் ஒருநாள் மக்களுக்குத் தானாக வந்தே தீரும்!

''கோடிக் கணக்கான இந்திய மக்கள்; ஆட்சியை எதிர்த்து அறப்போராட்டம் புரியும் போது; தனது தேக பலத்தை எண்ணினால் அது மறப் போராட்டமாக மாறி விடும்.

அதனால், அறப்போராட்டத்திற்கு உண்மையை உலகுக்கு உணர்த்தும் தலைவர்கள் தேவை! அகிம்சை தத்துவத்தை மக்களுக்கு அறிவுறுத்தும் எளிமையான அரசியல் தலைவர்கள் ஒரு கட்சிக்கு அவசியம். அப்போதுதான், அடிமைகளாக இருக்கின்ற மக்கள், ஆதிக்க ஆட்சியின் வலிமையை எதிர்க்கும் ஆத்மபல ஆற்றலைப் பெறுவர்கள்!''

காந்தியடிகள் ஒரு மாநாட்டில் பேசும் போது குறிப்பிட்டவை இவை, இவற்றிற்கேற்ப அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபைகள் ஆண்டாண்டு தோறும் இந்தியா முழுவதுமுள்ள நகரங்களில் கூடி, மக்களுக்கு ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஊட்டின.

அந்தந்த வருடங்களில் நடைபெற்ற அரசியல், சமுதாய, பொருளாதார வளர்ச்சிகளுக்குக் கேற்றாற்போல அவை உழைத்தன! அதன் விவரங்கள் வருமாறு:

1885-ஆம் ஆண்டு பம்பாய் நகரில் கௌவாலியா குளம் அருகிலே உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியிலே முதல் காங்கிரஸ் மகா சபை கூடியது. திரு டபிள்யூ. சி. பானர்ஜி அவர்கள் அதற்குத் தலைமை வகித்தார்.

1886-ஆம் ஆண்டு வங்காளத்திலே உள்ள கல்கத்தா நகரில் மகாசபை நடந்தது. திரு தாதா பாய் நௌரோஜி அவர்கள் தலைமை தாங்கினார்!

1887 - ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் மகாசபை குழுமியது. பத்ருதீன் தயாப்ஜி அவர்கள் தலைமை ஏற்றார்.

1888-ஆம் ஆண்டு, அலகாபாத் நகரில் மகாசபை கூடியது. அதன் தலைவர் ஜார்ஜ்யூல் என்பவராவார்.

1889-ஆம் ஆண்டு, பம்பாய் நகரில் நடைபெற்ற மகாசபைக்கு சர் வில்லியம் வெட்டர்பர்ன் அவர்கள் தலைமை தாங்கினார். இவர், காங்கிரஸ் மகாசபையைத் துவக்கிய ஹியூம், அவர்களின் நண்பர்! ஹியூம் சரிதையை இவர் எழுதினார்.

1890-ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் கல்கத்தா நகரில் பெரோஷ்ஷா அவர்கள் தலைமையில் நடந்தது.

1891-ஆம் ஆண்டு, நாகபுரி நகரில் ஆந்திர மாநில தேசபக்தர் பி. அனந்தாசார்யுலு அவர்கள் தலைமையில் காங்கிரஸ் பேரவை கூடியது.

1892-ஆம் ஆண்டு; டபிள்யூ. சி. பனார்ஜி அவர்கள் தலைமையில் இரண்டாவது முறையாக அலகாபாத் நகரிலே மகாசபை இயங்கியது.

1893-ஆம் ஆண்டு, கூடிய காங்கிரஸ் சபையை, லாகூர் நகரில் இரண்டாவது தடவையாக, தாதாபாய் நௌரோஜி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

1894-ஆம் ஆண்டு, தமிழர் தம் தலைநகராம் சென்னை மாநகரில் ஆல்ஃபிரட் வெப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

1895-ஆம் ஆண்டு, பூனா நகரில் சுரேந்திரநாத் பனார்ஜி அவர்கள் தலைமையேற்று மகாசபையை நடத்தினார்.

1896-ஆம் ஆண்டு, ஆர்.எம். சயானி என்பவர் தலைமை தாங்கி, கல்கத்தா நகரிலே காங்கிரஸ் பேரவையை நடத்தினார்.

1897-ஆம் ஆண்டு, அம்ரோட்டி நகரில், சி. சங்கரன் நாயர் அவர்கள் தலைமையில் பேரவை நடைபெற்றது. இவர் சென்னை மாநிலத்தில் துவங்கப்பட்ட மெட்ராஸ் மகாஜன சபையின் செயற்குழு உறுப்பினராவார்.

1898-ஆம் ஆண்டு, ஆனந்தமோகன் போஸ் அவர்கள் தலைமையில், சென்னை மாநகரில் மகாஜன சபை மாநாடு நடந்தது.

1899-ஆம் ஆண்டு, லக்நௌ நகரில் நடந்த காங்கிரஸ் இயக்க மாநாட்டிற்கு ரோமேஷ் சந்திரதத் அவர்கள் தலைமை வகித்தார்.

1900-ஆம் ஆண்டு லாகூர் மகாசபைக்கு என். ஜி. சந்தவர்கார் அவர்கள் தலைமையேற்றார்.

1901-ஆம் ஆண்டு, தின்ஷா எதுஜிவாச்சா அவர்கள் கல்கத்தா மாநாட்டின் தலைமைப் பொறுப்பு ஏற்றார்.

1902-ஆம் ஆண்டு, அகமதாபாத் நகரில் நடந்த மகா சபைக்கு சுரேந்திரநாத் பானர்ஜி அவர்கள் தலைமை வகித்தார்.

1903-ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் கூடியது. அதற்கு இலால் மோகன கோஷ் அவர்கள் தலைவராக இருந்தார்.

1904-ஆம் ஆண்டு, சர் ஹென்றி காட்டன் அவர்கள், பம்பாய் நகரப் பேரவைக்கு தலைமை தாங்கினார்.

1905- ஆம் ஆண்டு வாரணாசி எனப்படும் காசிமாநகர் காங்கிரஸ் மகாசபைக்கு கோபால கிருஷ்ணகோகலே அவர்கள் தலைமை ஏற்றார். இவர், மிதவாத காங்கிரஸ் அணியின் தலைவர்; தேசத் தந்தை காந்தியடிகளால் தனது அரசியல் ஆசான் என்று போற்றப்பட்டவர்.

1906-ஆம் ஆண்டு, நடைபெற்றக் கல்கத்தா நகர் காங்கிரஸ் மகாசபைக்கு மூன்றாவது முறையாக,தாதாபாய் நௌரோஜி தலைமை தாங்கி நடத்தினார்.

1907-ஆம் ஆண்டு, காங்கிரஸ் மகாசபை சூரத் மாநகரில் கூடியது. அதற்கு ராஷ்பிகாரி கோஷ் அவர்கள் தலைமை வகித்தார். இந்த பேரவைக் கூட்டத்தில்தான், பால கங்காதர திலகர் தீவிரவாத நோக்குடன் காங்கிரஸ் மகாசபையை விட்டு வெளியேறினார். முதன் முதலாகக் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு இதுதான்.

மகாசபைக்குத் தலைமை வகித்த கோஷ் அவர்கள், தனது உரையைப் படிக்க முடியாத அளவிற்கு, கூச்சலும் - குழப்பமும்- கலவரமும் உருவானது. மிதவாதக் காங்கிரஸ்காரர்கள் மட்டும் சபையில் கூடியிருந்தபோது, தலைவர் கோஷ் அவர்கள் தனது உரையின் சில முக்கிய கருத்துகளைப் படித்தார். தீவிரவாதிகள் அணிக்குத் திலகர் தலைமையேற்றார்.

1908-ஆம் ஆண்டு, காங்கிரஸ் மகாசபை, சென்னை மாநகரில் கூடியது. இந்த சபைக்கு சூரத் நகர் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமையேற்ற டாக்டர் ராஷ்பிகாரி கோஷ் அவர்களே மீண்டும் தலைமை தாங்கி நடத்தினார்.

1909-ஆம் ஆண்டு, இலாகூர் மாநகரில் காங்கிரஸ் கட்சிப் பேரவை இயங்கியது. மதன்மோகன் மாளவியா அவர்கள் தலைமை வகித்தார்! அப்போதுதான் ஆங்கில ஆட்சி ஒரே மாநிலமாக இருந்த வங்காள மாநிலத்தை இரண்டாகப் பிளந்தது. ஆங்கில ஆட்சிக்கு எதிராக காந்தியடிகள் தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் உரிமைகளுக்காக வாதாடி பெற்ற வெற்றிக்கு, இந்தப் பேரவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

1910-ஆம் ஆண்டு, அலகாபாத் மாநகரில் நடைபெற்ற காங்கிரஸ் பேரவைக்கு, இரண்டாவது முறையாக சர் வில்லியம் வெட்டர்பர்ன் அவர்கள் தலைமை வகித்தார்.

இந்த மகாசபை, காங்கிரஸ் இயக்கம் துவங்கி இருபத்தைந்து ஆண்டுகளாகி விட்ட வெள்ளி விழா மகாசபையாகும். அதனால், வெள்ளிவிழா ஆண்டு மாநாடாக இந்தப் பேரவையைக் கொண்டாடியது - சுதேசி இயக்கம் என்ற அரசியல் குறிக்கோளை இந்த மகாசபை ஏற்றது.

1911-ஆம் ஆண்டு, காங்கிரஸ் பேரியக்கம், கல்கத்தா நகரில், பண்டித பிஷன் நாராயண்தார் அவர்கள் தலைமையில் நடந்தது. காங்கிரஸ் தலைவர்கள் சட்ட சபைக்குச் சென்று பணியாற்றும் திட்டத்திற்கு சபையில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது.

1912-ஆம் ஆண்டு, பங்கிபூர் என்ற நகரில் ஆர். என். மதோல்கர் அவர்கள் தலைமையில் மகாசபை நடந்தது. காங்கிரஸ் பேரியக்கத்தைத் தோற்றுவித்த அரசியல் ஞானி ஆலன் அக்டேவியன் ஹியூம், இங்கிலாந்து நாட்டில் இயற்கை எய்தியதற்காக மௌனமும் - அனுதாபமும் - வருத்தமும் ஆழ்ந்த இரங்கலும் இந்த சபை தெரிவித்தது. அவரை ஒரு ரிஷி என்றும் பாராட்டி விருது வழங்கியது.

1913-ஆம் ஆண்டு, கராச்சி மாநகரில் காங்கிரஸ் பேரியக்கம் இயங்கியபோது, நவாப் சையத் முகமது பகதூர் அவர்கள் தலைமை வகித்தார்.

1914-ஆம் ஆண்டு, சென்னை மாநகரின் காங்கிரஸ் கட்சிப் பேரவை மாநாட்டிற்கு, பூபேந்திர நாத் பாசு தலைமையேற்றார். இவர், ஜாதி, மத பேதங்களை மறந்து, கட்சிப் போராட்டங்களைக் கடந்து, ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கிப் போராட வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

1915-ஆம் ஆண்டு, பம்பாய் மாநகரில் காங்கிரஸ் பேரவை கூடியது. சர் சத்தியேந்திர பிரசன்ன சின்மஹா தலைமையேற்றார். இவர், ஏற்றுமதி இறக்குமதி வரி வசூல்கள் கெடுபிடிகளை எதிர்த்தார்; சுதந்திரமாக அவை இயங்க வேண்டும் என்றார்.

1916-ஆம் ஆண்டு, லக்நௌ நகரில் மகா சபை நடந்தது. அம்பிகா சரண் மஜூம்தார் அவர்கள் அதற்குத் தலைமை வகித்தார். இவர், சுதேசி இயக்கத்தை ஆதரித்து முழக்கமிட்டார்.

1917-ஆம் ஆண்டு, கல்கத்தா நகரில் காங்கிரஸ் பேரவை கூடியது. திருமதி. டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் இம்மாநாட்டிற்குத் தலைமைதாங்கினார். இவர் அயர்லாந்து நாட்டிலே பிறந்து, இந்திய மக்கள் சமுதாயத்திற்காகப் போராடினார். அவர், சாரணர் இயக்கத்தை இந்தியாவில் நிறுவ வேண்டுகோள் விடுத்தார். இந்த அம்மையார் சென்னை மாநகரை தம் வாழ் நகராக ஏற்று, தியாசாபிகல் சொசைட்டி என்றதோர் ஆன்மிக ஞான சபையை அடையாறு பகுதியிலே நிறுவிய ஒரு போராட்ட சிறைப் பறவை! சிறந்த தனது சீரிய சிந்தனையால் பண்டித மோதிலால் நேருவையும், ஜவஹர்லால் நேருவையும் திரு. வி.க. போன்ற மேதைகளையும் தனது இயக்கச் சிந்தனைக்கு ஈர்த்த ஓர் ஆன்மிக ஞானி.

1918-ஆம் ஆண்டு, இந்திய தலைநகர் டெல்லி மாநகரில் முதன் முதலாக காங்கிரஸ் பேரவை கூடியது. இதற்கு, மதன்மோகன் மாளவியா அவர்கள் இரண்டாம் முறையாகத் தலைமை வகித்தார்! பெண்களுக்கும் ஓட்டுரிமை வேண்டும் என்று முழக்கமிட்டார்! மருத்துவத் துறையில், ஆயுர்வேதம், யுனானி முறைகளை ஆதரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

1919-ஆம் ஆண்டு, அமிர்தசரஸ் மாநகரில் காங்கிரஸ் மாநாடு கூடியது. பண்டித மோதிலால் நேரு இதற்குத் தலைமையேற்றார். அப்போது நடைபெற்ற ஜாலியான்வாலா பாக் படுகொலையின்

காட்டுமிராண்டிப் போக்கைக் கண்டித்து, முழக்கமிட்டார்! ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்ட ரௌலட் என்ற கறுப்புச் சட்டத்தின் கொடுமைகளை மக்களிடையே எதிரொலித்தார். பொறுப்பானதோர் ஆட்சியை மக்களுக்காக அமைத்திட இந்தியா தகுதிபெற்றுவிட்ட நிலையை விளக்கினார் இவர். பிரதமர் நேரு அவர்களின் தந்தையார்! இந்திராகாந்தி அவர்களின் தாத்தா! ராஜிவ்காந்தி அவர்களின் தாய்வழி தாத்தா ஆவார்!

1920-ஆம் ஆண்டு, இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை நாகபுரியிலே நடந்தது. இந்த பேரவைக் கூட்டத்திற்குத்தான் முதன் முதலாகத் தமிழர் ஒருவர் தலைமை வகித்தார்! பெயர் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் ஆவார். இவருடைய தலைமைதான் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போருக்குரிய பச்சைக் கொடியைக் காட்டியது. தொழிலாளர்கள் தங்கட்கென சங்கங்களை ஆரம்பிக்க ஆதரவு தந்தது; அகிம்சைதத்துவம் இவரது தலைமைப் பேச்சில் அழகு நடையாக அருவியென தவழ்ந்து வந்தது! திலகர், தீவிரவாதத்தை ஆதரித்துக் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார். பிறகு, அண்ணல் காந்தியடிகளின் ஆதரவோடு மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்! பிறகு, நாகபுரி காங்கிரஸ் மகாசபைக்கு தலைவரானார்!

1921-ஆம் ஆண்டு, அகமதாபாத் மாநகரில் காங்கிரஸ் மகா சபை நடந்தது. தேசபந்து சித்தஞ்சன் தாஸ் சிறையில் இருந்தபடியே, மகாசபையின் தலைமை பேச்சின் தன்மையைக் கண்ட காந்தியடிகள், தனது ''யங் இந்தியா'' என்ற பத்திரிக்கையில், சி.ஆர். தாஸ் உரை முழுவதையும் அடிக்குறிப்பிட்டு வெளியிட்டார். அவர் மாநாட்டிற்கு வர முடியாமல் போகவே, அவருக்குப் பதிலாக, தற்காலிகத் தலைவராக திரு. ஹக்கிம் ஹஜ்மல்கான் தலைமை வகித்தார்.

1922-ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி மகாசபை கூடியது. தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்களையே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்தது மகாசபை! இவர் தனது உரையில், காந்தீயக் கொள்கைகள் மீது நம்பிக்கையற்றவராய் சவால் விட்டு அறை கூவினார்! தமிழகத்தியாகி சுப்பிரமணிய சிவா, சி.ஆர். தாஸ் அவர்களைத் தர்மபுரி மாவட்டத்திலே உள்ள பாப்பாரப்பட்டி என்ற பேரூருக்கு அழைத்து வந்தார்! இந்தியத் தாயைப் பாரத தேவியாக வழிபட்டு வந்த தியாகி சிவா அவர்கள், அந்த பாரததேவி திருக்கோயிலைப் பாப்பாரப் பட்டியிலே எழுப்பிட நிலம் வாங்கி அந்த ஆலயத்திற்கான அஸ்திவாரத்தை சி.ஆர். தாஸ்

அவர்கள் கையாலே திறந்து வைத்தார் திரு சுப்பிரமணிய சிவா! சிவா ஆசை இன்றுவரை நடைபெறவில்லை!

1923-ஆம் ஆண்டு, காக்கிநாடா நகரில் காங்கிரஸ் மகா சபை மாநாடு கூடிற்று. மௌலானா மகமதலி தலைமை வகித்தார்! சி.ஆர். தாஸ் அவர்கள் சவாலை சமன்படுத்துபவரைப் போல, காந்தியடிகள் கொள்கைகள்தான், அடிமைப் பிணியிலே அவதியுறும் இந்திய மக்களுக்கான மாமருந்து என்று மறுப்புரைத்தார்!

காங்கிரஸ் வரலாற்றில் அலி சகோதரர்கள் மிக முக்கியமானவர்கள்! அவர்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட முஸ்லிம் சகோதரர்கள்! அவர்களுள் ஒருவர் மௌலானா முகமதலி! மற்றவர் மௌலானா சதக்கத் அலி!

1924-ஆம் ஆண்டு, பெல்ஹாம் நகரில் தேசியக் காங்கிரஸ் பேரவை கூடியது. மகாத்மா காந்தியடிகள் தலைமை ஏற்றார்! காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு கால வரலாற்றில் தேசத் தந்தையெனப் போற்றப்படும் அண்ணல் காந்தியடிகள், காங்கிரஸ் பேரியக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்திய முதல் மாநாடும் இதுதான், கடைசியும் இதுதான்! ஆங்கிலேயரை எதிர்த்து சத்தியாக் கிரஹம் நடத்துவது எனது பிறப்புரிமை என்றார். தீண்டாமைக்கு எதிராகப் பெரும் போரையே தொடுத்தார்! அயல்நாட்டுத் துணிகளை பகிஷ்கரித்தார். காங்கிரஸ் கட்சியை விட்டு மனத்தாங்கல்களால் ஒதுங்கி இருந்த காலங்களிலும், காங்கிரசை வழிநடத்திச் சென்ற வழிகாட்டி அவர்! இந்தியா விடுதலை பெற பலமுறை சிறையேகியவர்! போராட்ட வாழ்க்கை வாழ்ந்தே சுதந்திரம் பெற்ற தேசத் தந்தை அவர்!

1925-ஆம் ஆண்டு, கான்பூர் காங்கிரஸ் பேரவைக்குக் கவிக்குயில் சரோஜினி நாயுடு தலைமை வகித்தார்! ஆண்டுதோறும் நடைபெறும் தேசியக் காங்கிரஸ் மகா சபையின் எல்லா நடவடிக்கைகளிலும், இந்துஸ்தானி மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் அம்மையார் தலைமையேற்றப் பேரவையிலேதான் நிறைவேற்றப்பட்டது.

1926-ஆம் ஆண்டு, கௌகாத்தி நகரில் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிப் பேரவை நடந்தது. எஸ். சீனிவாச ஐயங்கார் என்ற தமிழர் இவர்! இந்த மாநாட்டிற்குத் தலைமை ஏற்ற இரண்டாவது தமிழர்.

'இந்து - முஸ்லிம் ஒற்றுமை ஓங்கிடக் குரலொலித்தார்! அரசியலில் மதத்தை இணைப்பதை அறவே வெறுத்துப் பேசினார்!

தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, காதித்தொழில் வளர்ச்சி போன்ற திட்டங்கள் வெற்றி பெற்றிடத் தொடர் போராட்டங்களை நடத்த வேண்டும் என்று வாதாடினார்.

1927-ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபைக்கு திரு. எம்.ஏ. அன்சாரி தலைமை வகித்தார். இவர், முழு விடுதலை தேவை என்றார்; அதற்கான போர்க்கொடியை இந்த மாநாட்டிலே பறக்க விட்டார், தனது உரையில்.

1928-ஆம் ஆண்டு, கல்கத்தா தேசிய மகாசபைக்கு மோதிலால் நேரு அவர்கள் தலைவரானார். சர்தார் படேல் அப்போது நடத்திய பர்தோலி விவசாயிகள் போராட்டத்தை வரவேற்று - வாழ்த்தினார்!

1929-ஆம் ஆண்டு, லாகூர் மாநகரில் திரு. பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தலைமையில் நடந்தது, இந்தியாவிற்கு முழு விடுதலைதான் தேவை; அது எமது பிறப்புரிமை என்று முழக்கமிட்டார்.

1930-ஆம் ஆண்டு, வழக்கமாக நடைபெறும் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை நடைபெறவில்லை.

1931-ஆம் ஆண்டு, திரு. சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் தலைமையேற்ற, கராச்சி நகரிலே தேசிய காங்கிரஸ் மகாசபை கூடியது. சமூகக் கலவரங்களால் பழியேற்ற மாவீரன் பகவத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகியோர் தூக்கு மேடை ஏற்றப்பட்டதற்கு அனுதாப மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. இரும்பு மனிதரான படேல், அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்து முழக்கமிட்டார்.

1932-ஆம் ஆண்டு, திரு. மதன்மோகன் மாளவியா அவர்கள் மூன்றாம் முறையாகக் கல்கத்தா நகர் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

அப்போது, மாளவியா அவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டு சிறையிலே இருந்தார். அதனால், அவரது துணைவியார் நெல்லி சென் குப்தா மகாசபைக்குத் தலைமை ஏற்றார்!

1933-ஆம் ஆண்டு, பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் பேரியக்கக் கூட்டத்திற்கு, திரு. டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் தலைமை வகித்தார்! அவர் காந்தியடிகள் தேசியக் காங்கிரஸ் கட்சியை விட்டு ஓய்வு பெறக்கூடாது என்று காந்தியடிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்பு, இவர் முதல் குடியரசுத்

தலைவராகப் பதவியேற்றார். அல்லும் பகலும் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களில் முக்கியமானவர்களிலே ஒருவராகத் திகழ்ந்தார்.

1934-ஆம் ஆண்டு லக்னோ நகரில் நடந்த காங்கிரஸ் மகாசபை இரண்டாவது தடவையாக திரு பண்டித ஜவகர்லால் நேரு தலைமையில் இயங்கியது. இந்தப் பேரவையில் வழக்குரைஞர்கள் காங்கிரஸ் போராட்ட வழக்குகளுக்காக வாதாட வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

1936-ஆம் ஆண்டு, வழக்கம்போல் ஆண்டுதோறும் நடைபெறும் காங்கிரஸ் மகா சபை மாநாடு இந்த ஆண்டில் நடைபெறவில்லை.

1937-ஆம் ஆண்டு, பைல்பூர் நகரில் மகாசபை கூடியது. மூன்றாவது முறையாக திரு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தலைராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாகும் நெருக்கடி ஆபத்து சூழ்ந்துள்ள நேரம். இந்தியா எக்காரணத்தைக் கொண்டும் அந்தப் போரில் ஆங்கிலேயருக்கு ஆதரவாகவோ உதவியாகவோ பங்கேற்கக் கூடாது. 1935-ம் ஆண்டின் சட்டத்தை ஏற்கக் கூடாது என்று பலத்த பகிரங்க எதிர்ப்பு முழக்கமிட்டார்.

1938-ஆம் ஆண்டு, ஹரிபுரா என்ற அழகு நகரில் இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்கம் கூடியது. சுபாஷ் சந்திரபோஷ் அந்த மகாசபைக்குத் தலைமையேற்றார். "அவரவர் தாய் மொழிகளிலே பள்ளிகளை நடத்த வேண்டும். அரசியலமைப்புக்கு உட்பட்ட சட்ட மன்றங்கள் அமைய ஓர் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்" என்று முழக்கமிட்டார்.

1939-ஆம் ஆண்டு, திரிபுரா என்ற நகரில் இந்திய தேசிய மகாசபை கூடியது. இந்தப் பேரவைக்கு சுபாஷ் சந்திரபோஸ் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். அதைக் காந்தியடிகள் விரும்பவில்லை. சுபாஷ் பாபுவை எதிர்த்து டாக்டர் பட்டாபி சீத்தாராமையா நின்றார். இவருக்கு அண்ணல் காந்தி அடிகள் ஆதரவளித்தார். அப்போது சுபாஷ்பாபு கடும் நோயால் வேதனைப்பட்டார். இருந்தும் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை சுபாஷ் பாபுவையே வெற்றி பெற வைத்தது. 'பட்டாபி தோல்வி என் தோல்வி' என்று கூறி காந்தியடிகள் ஒப்புக் கொண்டார். சுபாஷ் பாபுவிற்கு அடிகள் விரோதத்தால் போதிய செயலாற்றும் ஒத்துழைப்புப் பெற முடியாது போயிற்று. தனது தலைவர் பதவியை அவர் ராஜினாமா செய்தார். இதனால், இந்திய

தேசியக் காங்கிரஸ் கட்சியில் மீண்டுமோர் பெரும் பிளவு ஏற்பட்டது.

1940-ஆம் ஆண்டு, ராம்கார் நகரில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் தலைவரானார். போர்க் காலத்தை முன்னிட்டு பணமோ ஆயுதமோ, ராணுவ உதவியோ காங்கிரஸ் கட்சி ஆங்கிலேயர் ஆட்சிக்குச் செய்யக் கூடாது என்று எதிர்ப்பு எரிநெருப்பு முழக்கமிட்டார்.

There were no annual sessions of the congress during the years 1941, 42, 43, 44 and 45 When the Leaders were in jail during the Quit India Movement.

காந்தியடிகளின் 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தில் தேசியத் தலைவர்களும் - தொண்டர்களும் ஈடுபட்டு, அனைவரும் காராக்கிருகத்திலே அடைபட்டு இருந்ததால், வழக்கம்போல் நடைபெறும் இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை ஆண்டு மாநாடுகள், 1941, 42, 43,44, 45- ஆம் ஆண்டுகளில் நடைபெறவில்லை.

1946-ஆம் ஆண்டு, இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை மீரட் நகரிலே மீண்டும் கூடியது. ஆசார்ய கிருபளானி அவர்கள் அந்த மாநாட்டிற்குத் தலைமையேற்றார். சிறைமீண்ட விடுதலை வீரர்கள் எல்லாரும் மகிழ்ச்சியோடு கூடினர் அந்த மாநாட்டில்! புதிய ரத்தம் பாய்ந்த தெம்புணர்ச்சியோடு அனைவரும் மாநாட்டில் பங்கேற்றார்கள்.

1947 - ஆம் ஆண்டு, இந்தியா சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியால், அந்த ஆண்டு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெறவில்லை.

1948-ஆம் ஆண்டு, ஜெய்பூர் நகரில் திரு. டாக்டர் பட்டாபி சீத்தாராமையா அவர்கள் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெற்றது. பட்டாபி, பிரதமர் நேரு, துணைப் பிரதமர் வல்லபாய் படேல் ஆகியோர் மொழிவாரி மாநிலங்களை உருவாக்கிடத் தீர்மானித்தார்கள்.

1949-ஆம் ஆண்டு, வழக்கம்போல அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு, இந்த ஆண்டு நடைபெறவில்லை.

1950-ஆம் ஆண்டு, நாசிக் நகரில் புருஷோத்தம்தாஸ் தாண்டன் அவர்கள் தலைமையில் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெற்றது.

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டமையால், அதன் அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தவும், சுயநலத்திற்காக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யவும் காங்கிரஸ்காரர்கள் துணிந்துவிட்டார்கள் என்ற புகார்கள், கட்சியிலே ஊடுருவும் ஊதுகுழல்களாகிவிட்டன.

1951-ஆம் ஆண்டு, பிரதமர் ஜவகர்லால் நேரு தலைமையில் புதுடெல்லியில் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெற்றது. தேர்தல் நேரங்களில் காணப்படும் ஜனநாயக விநோதச் செயல்களைச் சாடினார் பிரதமர் நேரு! எதிர்காலத் தேர்தல் நேரங்களில், காங்கிரஸ் கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படாமல், காந்தியடிகள் புகழுக்கு மாசு சூழாமல் பணியாற்றிடுமாறு தலைவர் பிரதமர் நேரு கேட்டுக் கொண்டார்.

(1952-ஆம் ஆண்டு , வழக்கமாக நடைபெறும் காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெறவில்லை.)

1953-ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி மாநாடு ஐதராபாத் நகரில் மீண்டும் பிரதமர் ஜவகர்லால் நேரு தலைமையில் இயங்கியது. இந்தியாவின் மாநிலங்களில் மொழிப் பிரச்னை ஒரு தீராத சிக்கலாகி விட்டதை நாம் எச்சரிக்கையுடன் அணுகவேண்டும் என்றார்.

1954-ஆம் ஆண்டு, மேற்கு வங்காளத்திலே உள்ள கல்யாணி நகரில், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாடு நடந்தது. பிரதமர் நேருவே, பிரதமராகி மூன்றாம் முறையாக மாநாட்டின் தலைவரானார்! சீனா, பாகிஸ்தான் ஆக்ரமிப்பு மேகங்கள் இந்தியாவைச் சூழ்ந்துள்ள நிலைகளை அவர் விளக்கினார்.

1955-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டிலுள்ள ஆவடி, சத்திய மூர்த்தி நகரில் யு.என். தேபர் தலைமையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெற்றது. சமதர்ம சோசலிசப் பயணத்தை, பிரதமர் நேரு காட்டும் வழியில் பின் தொடர்ந்திட மக்கள் தயாராக வேண்டும் என்றார். ஏழை பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வற்ற ஜனநாயக சோசலிசத்திற்கு நாம் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்!

1956,1957,1958, 1959 - ஆம் ஆண்டு மாநாடுகள், அமிர்த சரஸ், இந்தூர், கௌகத்தி, நாகபுரி போன்ற நகர்களிலே நடைபெற்றன. இவற்றினால் சிறப்பான இலட்சியங்கள் ஏதுமில்லை. மாறாக ஒவ்வொரு மாநிலக் காங்கிரஸ் கட்சிகளிலும் பதவி மோதல்கள்,

அதிகாரத் துஷ்பிரயோகங்கள், லஞ்ச லாவண்யக் கலவரங்கள், ஊழல் குழப்பங்கள், அதனால் சுட்டுக் கொல்லப்பட்ட கெய்ரோன், கலிங்கா ஏர்லைன்ஸ் போன்ற பற்பல சம்பவங்களால், காங்கிரஸ் கட்சியில் கலகலப்பு உருவாகி வளர்ந்தது. இவை பிரதமர் நேரு அவர்களுக்குத் தீராத தலைவலிகளாகி விட்டன. ஆட்சி, கட்சி பிரச்னைகள்! இவற்றால் திணறும் நிலை அவருக்கு ஏற்பட்டதால் சோர்ந்தே காணப்பட்டார்.

1960-ஆம் ஆண்டு, பெங்களூர் மாநகரில் திருஎன். சஞ்சீவி ரெட்டி அவர்கள் தலைமையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு நடந்தது. "நாம், நமது ஆன்மிக உணர்வை இழந்து விட்டோம். ஒவ்வொரு இன உணர்வுகள் தோன்றி நம்மை வருத்துகின்றன. மனிதனுடைய மரியாதையையும் - மதிப்பையும் நாம் மறந்து விட்டோம். அதனால்தான், காந்தியடிகளினுடைய சத்தியத்தை, உழைப்பை நாம் மறந்து விட்டோம்' என்று நொந்து பேசினார் திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள்.

1961, 1962-ஆம் ஆண்டுகள், காங்கிரஸ் மாநாடுகள், பவ நகர், பாட்னா நகர்களில் திரு. என். சஞ்சீவ ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றன. "மொழிப் பிரச்னை என்ற அபாயம் ஒரு புறமும், காங்கிரஸ் காரர்களின் சுய நல ஊழல்கள் மறுபுறமும், இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கு அழியாக் களங்கத்தை ஏற்படுத்தி விட்டன! இந்நிலை வருத்தத்தைக் கொடுக்கிறது. அதனால், காங்கிரஸ் கட்சியின் சரித்திரச் சிறப்புகள் எல்லாம் மறைந்து வருகின்றன! காங்கிரஸ் காரர்களாலேயே அவை களங்கப்பட்டு விட்டன" என்றார் ரெட்டியார்.

1963-ஆம் ஆண்டு, திரு. என். சஞ்சீவ ரெட்டி தனது தலைவர் பதவியைத் துறந்தார்; அகில இந்திய செயற்குழுவிலே இருந்தும் மத்திய செயற்குழுவிலே இருந்தும் ராஜிநாமா செய்து விட்டார்! அதனால் அதே ஆந்திராவைச் சேர்ந்த திரு. D.சஞ்சீவய்யா அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1964-ஆம் ஆண்டு, தமிழ்நாடு முதலமைச்சராகப் பணியாற்றிய தலைவர் திரு. கே. காமராஜ் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால் அவர் புவனேஸ்வரம் மாநாட்டிற்குத் தலைமை ஏற்றிட புவனேஸ்வரம் தனி ரயிலில் சென்று கொண்டிருக்கின்றார்!

ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் ரயில் நிலையத்தில் ஒரே மக்கட் திரள் சூழ்ந்த பேரிரைச்சல்! ஸ்டேஷன் முழுவதும் மூவண்ணக் கொடிகளின் தோரணங்கள்!

மக்களிடையே பரபரப்பு! இங்கு மங்கும் ஓடுகின்ற தொண்டர்கள் கையில் அசோகச் சக்கரக்கொடிகள் பறந்து ஆடின!

குறுக்கும் நெடுக்குமாக நடக்கின்ற காங்கிரஸ்காரர்கள் கைகளிலே, தங்களது முதலமைச்சர் சஞ்சீவ ரெட்டி, தலைவர் காமராஜ், பிரதமர் நேரு திருவுருவப் படங்களின் கோலாகலக் காட்சிகள் எதிரொலித்தன!

புவனேஸ்வரம் ஸ்பெஷல் வரும் ஓசையைக் கேட்ட மாவட்டக் காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் பரபரப்புடன் மலர் மாலைகளை ஏந்தியவாறே ஜெ! ஜெ! என்று குரல்களோடு முழக்கமிட்டுக் கொண்டே காத்துக் கிடந்தார்கள் பரபரப்புடன்!

# 10. ஆந்திர மக்களின் வரவேற்பும் - வாழ்த்தும்!

புவனேஸ்வரம் ரயில், கூவும் நீண்ட குழலோசையுடன் நெல்லூர் ரயில் நிலையத்துள் நுழையும் போதே...

''வந்தே மாதரம்!

காமராஜ் நாடார் காருகி - ஜே!

காங்கிரஸ் அத்தியட்சகர் காமராஜ் காருகி - ஜே!

ஜவஹர்லால் நேருகி - ஜே!

சுதந்திர பாரத் மாதாகி - ஜே!'' என்ற பேரொலி முழக்கங்களை நெல்லூர் ரயில் நிலைய மக்கள் விண்ணதிர மண்ணதிர முழக்கமிட்டுக் கொண்டே இருந்தார்கள்! ரயில் நிலையம் ஒரே பரபரப்புடன் காணப்பட்டது.

புவனேஸ்வரம் தனி ரயில், நீண்ட குரலெடுத்துக் கூவிக் கொண்டே 1964-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 4-ஆம் நாள் காலை 7 மணிக்கு, ஆந்திர மாநிலத்திலே, உள்ள நெல்லூர் நகர் பிளாட்பாரத்திலே வந்து நின்றது.

நெல்லூர் ரயில் நிலையமே அதிர்ந்துவிடும் நிலையில், காமராஜ் நாடார்காருகி -என்று ஓரணி ஓங்கிக் குரலெழுப்பியதும் கூடியிருக்கும் மக்கள் கூட்டங்கள் ஜே என்ற பேரொலியை பிற அணிகளிலே இருந்து எழுப்பிக் கொண்டிருந்தது!

ரயிலிலே இருந்தபடியே, மாநாட்டுத் தொண்டர்கள், தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்க என்ற வாழ்த்தொலிகளை எழுப்பிக் கொண்டே இருந்தனர்!

பிளாட்பாரத்தில் கூடியிருந்த ரயில்வே ஊழியர்கள் காமராஜ் நாடார்காருகி என்று குரலெழுப்பியதும் நிலையத்திலே நின்றிருந்த மக்களனைவரும், ஜே! ஜே! என்ற எதிர் முழக்கங்களை எழுப்பிக் கொண்டே நின்றனர்! ஒவ்வொரு ரயில் பெட்டிகள் முன்பும் காங்கிரஸ் தொண்டர்களும் - மக்களும் திபு திபுவென்று கும்பலாகத் திரண்டு சூழ்ந்து கொண்டார்கள்!

நெல்லூர் மாவட்டக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சங்கர் ரெட்டி, கையிலே ஏந்திய மூவண்ணக் கொடியோடு தலைவர் காமராஜ் ரயில்பெட்டி அருகே சென்று, அவருக்கு ரோஜா மாலையை அணிவித்து காமராஜ் நாடார் காருகி என்றதும், அவர் பின்னாலே அணி வகுத்துச் சென்ற ஓரணித் தொண்டர்கள் ஜே! ஜே! என்று அடுத்தடுத்து குரல் கொடுத்து, அவரவர் கைகளிலே இருந்த மாலைகளை அணிவித்தபடியே முழக்கமிட்டார்கள்!

தலைவர் காமராஜ் அணிந்த மாலையோடும், உடன் தமிழக முதலமைச்சர் பக்தவச்சலம் வண்டியை விட்டிறங்கி வரும்போது, அவர்கள் கழுத்திலே மலர் மாலைகள் குவியலாகவே அணிவிக்கப்பட்ட காட்சி, கண் கொள்ளாக் காட்சியாகவே அமைந்தது!

சிரித்தவாறே தலைவரும் பக்தவச்சலமும் இருகை கூப்பி நமஸ்காரம் போட்டு, சங்கர் ரெட்டியைத் தனித்தனியே தழுவிக் கொண்டார்கள்! ரயில் நிலைய பிளாட்பாரத்தின் மேல் அலங்காரமாகப் போடப்பட்ட மேடைக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

ஆர்வமும் - ஆனந்தமும் பொங்கி வழியும் வரவேற்பிலே, மேடையேறிய தொண்டர்கள் மலர்மாலைகளைச் சூட்டி, கூடை கூடையான உதிரிப்பூக்களால் மலர் மழை பெய்தார்கள், கடவுளுக்கு அபிஷேகம் செய்வதைப் போல!

மக்கட் கடலாலே சூழப்பட்ட தலைவர், தமக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பு விழாவும் - வாழ்த்தும் கண்டுமெய் சிலித்தார்! கன்னித் தமிழிலே தலைவர் அவர்கள் கனியுரைகளை நன்றிச் சுவையோடு நவின்றதை, அருகிருந்தவர் சுந்தரத் தெலுங்கிலே பூ மழையாகப் பெய்தார்!

ஒரே கைதட்டல்! ஆரவார ஓசை! கலகலப்பாகக் களைகட்டிய சிறு கூட்டத்தின் நடுவே கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பாண்டியன் பரம்பரைத் தோற்றம்! தலைவர் காமராஜ் பிழிந்த கரும்புச் சுவையுரைக்குப் பின்னே, தமிழக முதலமைச்சர் சேக்கிழார் பரம்பரை பக்தவச்சலம் எழுந்து, பெரிய புராணம் பாடாமல், சிறு குறு புராணம் பாடி அமர்ந்தார்.

முடிந்தது வரவேற்பு! மீண்டும் புவனேஸ்வரம் தனி ரயிலில் தலைவர் அமர்ந்தார்! பிறரும் அவரவர் இருக்கைகளில் அமரும்போதே, டீ, காபி வழங்கப்பட்டன! புவனேஸ்வரம் தனி ரயில், தனது நீண்ட பெரும் குழலோசைப் பெருமூச்சை விடுத்தவாறே, நெல்லூர் ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.

எழு ஞாயிறாகக் காலையிலே எழுந்து கரகரவெனத் தன்னை எரித்துக் கொண்டு வலம் வரப் புறப்பட்ட எழு கதிரோன், அந்த ரயிலுக்கு ஒளியூட்டிச் சூடேற்றி வந்தது. பற்பல வண்ணங்களோடு பவனி வந்த உதயசூரியன், சிறிது சிறிதாக மேல் நோக்கி எழ எழ, அந்த அற்புதக் காட்சிகளுக்கு இடையே, சரியாக 7.30மணிக்கு ரயில் நீண்ட ஓசையோடு பிட்ரகுண்டா என்ற நிலையத்திலே வந்து நின்றது!

## பிட்ரகுண்டா கோலாகலம்

பிட்ரகுண்டா நிலைய நடை மேடையிலே வண்டி வந்து நிற்பதற்கு முன்பே வான் முட்டும் முழக்கங்கள் பேரொலியாக ஓங்கி ஒலித்தன. எங்கு பார்த்தாலும் மூவண்ணக் கொடிகளை ஏந்தியோர் வாய் ஜே! ஜே! ஜே! என்றே ஓசை எழுப்பின! அணிவகுத்து நின்ற காங்கிரஸ் தொண்டர்கள் வரிசை வரிசையாக வந்து தலைவர் காமராஜ் அவர்களுக்குக் கழுத்து வீக்கம் பெறும் அளவிற்கு மலர் மாலைகளைச் சூட்டி, பூச்செண்டுகளைக் கொடுத்து, வணக்கமிட்டு நடந்தபடியே இருந்தார்கள்.

காலை சிற்றுண்டி, இட்லி, உப்புமா, பொங்கல், வடை, தோசை, காபி, டீ அனைத்தும் பொட்டலம் பொட்டலமாக அவரவர் இருக்கைக்கே சென்று தொண்டர்கள் விருந்தளித்தார்கள். எல்லாரும் காலை சிற்றுண்டி முடித்தவுடன், வண்டி வழக்கம்போல குரலெடுத்துக் கூவியவாறே பிட்ரகுண்டா நகரை விட்டுப் புறப்பட்டது - மக்களின் வாழ்த்து முழக்கங்களோடு!

தமிழ்நாட்டிலே உள்ள கோவை மாவட்டக் காங்கேயம் என்ற பேரூர், காளை மாடுகளுக்கு எவ்வாறு புகழ் பெற்றதோ, அதனைப் போலவே ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒங்கோல் நகரம் பசுக்களுக்குப் பெயர் பெற்றது.

## ஓங்கோல் விருந்தோம்பல்

அத்தகைய ஒங்கோல் நகருக்குச் சென்று நின்றது புவனேஸ்வரம் மாநாட்டு ஸ்பெஷல் வண்டி! புவனேஸ்வரம் தனிரயில் நிற்கும் நிகழ்ச்சிகளிலே ஒங்கோல் வரவேற்பு சேர்க்கப்படவில்லை என்றாலும், அந்த நகரக் காங்கிரஸ்காரர் களின் ஆர்வ மோதல்களின் நெருக்கடிகள் வழிமறித்து விட்டதால் ரயில்வண்டி அங்கே நிற்கும் நிலையேற்பட்டது.

அடடா! அவர்கள் மலர்ந்த முகங்கள் என்ன! பெருமூச்சுகளை விட்டுக் கூவிய வாழ்த்துக்களென்ன! கூடை கூடையாகத் தலைவர்

காமராஜர் கழுத்தில் வீழ்ந்திட்ட மலர் மாலைகள் என்ன! வலிய வலிய அவர்கள் வழிமறித்து வழங்கிய வரவேற்பின் எதிரொலியாக, வகை வகையான பழக்கூடைகள் வண்டிப் பெட்டிகளுக்குள்ளே வலிய வந்து விழுந்தன!

''கமலா பண்டுண்டி! பெட்டுக்கொண்டி! அண்டிப் பண்டுண்டி, கொய்யாப் பண்டுண்டி, சால ருசிகா உண்டுண்டி, பெட்டுக்கோணி அவத்தலா போஞ்செய்ண்டி! ஒங்கோல் பசுல்லோ ஜேசின கோவாண்டி! இதி ஸ்பெஷல் கோவாண்டி, பாக ருஜிகா உண்டுண்டி!''

- என்று கூறிக் கனி வகைகளையும், இனிப்புப் பண்டங்களையும், வேண்டாம் வேண்டாம் என்று தடுக்கும்போதே, பெட்டிக்குள்ளே போட்டுவிட்டார்கள் - ஒங்கோல் காங்கிரஸ்காரர்கள்!

## தெனாலி நகரில் சஞ்சீவ ரெட்டி

சஞ்சீவ ரெட்டியின் மதியம் உணவுக்காக வண்டி புறப்பட்டது? தெனாலி என்ற ரயில் நிலையத்திலே மூவண்ணக் கொடிக் கடலை இரண்டாகப் பிளந்தபடியே சென்று நின்றது புவனேஸ்வர் எக்ஸ்பிரஸ்!

தெனாலி ரயில் நிலையம் கட்டுக்கடங்காத மக்கட் கூட்டத்தோடு ரயிலுக்குப் பின்பக்கவாட்டிலும் - முன்பக்கவாட்டிலுமாகக் கரைபுரண்டு காட்சியளித்தது. கடல்போல் காணப்பட்ட மக்கள், சஞ்சீவரெட்டி காருகி - ஜே! என்ற முழக்கங்களை மாறி மாறி முழங்கியபடியே நின்றார்கள்!

ஆந்திர முதல்மந்திரி நீலம் சஞ்சீவரெட்டியார் மலர் மாலையுடன், தொண்டர் படைசூழ, தலைவர் காமராஜ், முதலமைச்சர் பக்தவச்சலம் ஆகியோருக்கு மாலைகளைச் சூட்டி வரவேற்றார்.

விருந்தினர் அனைவருக்கும் மதிய உணவுப் பண்டங்கள் தடபுடலாகப் படைக்கப்பட்டன. உண்டு முடிந்ததும் பெருங்கூட்டம் பின்தொடர, திரு. சஞ்சீவரெட்டியார் அங்கே போடப்பட்டிருந்த அழகுமேடைக்கு அழைத்துச் சென்றார்.

ஆந்திர முதலமைச்சர், ரெட்டியார், தலைவருக்கு மாலை சூட்டினார்! பக்தவத்சலத்திற்கும் மாலை சூட்டினார். பிறகு, மாவட்டக் காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் மாலைசூட்டி அவர்களை வரவேற்றார்கள்.

தலைவர் காமராஜ் அவர்கள் தனக்களித்த வரவேற்புக்கும் - விருந்துக்கும் நன்றி கூறி, அனைவரையும் மாநாட்டிற்கு வருமாறு அழைத்தார். வரவேற்பு விழா முடிந்ததும், தலைவர் அவர்கள் வண்டியிலேறி அமர, நீலம் சஞ்சீவரெட்டி, பிற காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் வழியனுப்ப, புவனேஸ்வரம் வண்டி புறப்பட்டது.

## விஜயவாடாவில் காமராஜ் பேசுகிறார்!

விஜயவாடா எனப்படும் பெஜவாடா ரயில் சந்திப்பு ஒரே கோலகலமாகக் காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் கொடிகள் பறந்தன! இரயில் ஏற வந்தவர்களா? அல்லது வரவேற்க வந்தவர்களா? என்று வியக்கும் அளவிற்குப் பயணிகளும் - காங்கிரஸ் தொண்டர்களும் கலந்து காணப்பட்டனர். நிலையத்துள் இரயில் நுழையுமுன்பே, காமராஜ் நாடார் காருகி - ஜே! என்ற முழக்கங்கள் கேட்டபடியே அதிர்ந்தது ரயில் நிலையம்!

வண்டி மெதுவாக நகர்ந்து வந்து நின்றது! ''ஜே!'' முழக்கங்கள் எதிரொலித்த பேரிரைச்சல்! கையிலே இருந்த கொடிக் கம்பங்களைக் கீழே போட்டுவிட்டு, அடுக்கிவைக்கப்பட்டிருந்த பழக்கூடைகளை ரயில் பெட்டிக்குள்ளே ஆளுக்கு ஒன்றாகத் தூக்கி திணித்துக் கொண்டிருந்தார்கள்!

வேறு சில அணிகள், சிற்றுண்டிகளை ஏந்திய தட்டுக்களோடு வரிசைகளாக நின்று வழங்கிக் கொண்டிருக்கும் போதே, மற்றும் சிலர் பொட்டலம் பொட்டலமாக உணவைப் பெட்டிக்குள்ளே கொடுத்தவாறே காணப்பட்டனர்! தலைவர் காமராஜ் அவர்களை, பெஜவாடா நகர் காங்கிரஸ் தலைவர் உட்பட பலர், மலர் மாலையிட்டு வரவேற்று, 'காமராஜ் நாடார் காருகி ஜே' என்று, முழக்கமிட்டனர்.

அலங்கரிக்கப்பட்ட மேடைக்குத் தலைவர் காமராஜ் அவர்களையும், பக்தவச்சலத்தையும் அழைத்துக் கொண்டு சென்று, மாலையிட்டுச் சிறப்பித்தார்கள். தலைவருக்கு அளித்த வரவேற்புக்கும் - வாழ்த்துக்கும் நன்றி கூறி, அவர் பேசினார்: ''நம்முடைய தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள், நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்து 17-வது ஆண்டு நடைபெறுகிறது''

''நாட்டிற்குச் சுதந்திரம் வந்தால், சுகமாக வாழலாம் என்று; அன்று அவர் நமக்கெல்லாம் சந்தோஷம் பொங்கக் கூறினார்.'' ''மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு முடித்து விட்டோம்! கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்''

''இதற்குப் பிறகும் கூட, ஏழை மக்கள் சுகமாக வாழ முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? உணவற்றோரும் - உடையற்றோரும் - வீடற்றோரும் ஏராளமாக இருக்கிறார்களே - காரணம் என்ன? ''போட்டத் திட்டமும் - செலவழித்த பணமும் என்னவாயிற்று? இதோ ஓடும் கிருஷ்ணா நதியிலே கலந்துவிட்டதா? அல்லது ஆவியாகி ஆகாயத்தில் மறைந்து விட்டதா?''

''அந்தப் பணத்தை எல்லாம் எடுத்து அனைவருக்கும் சமமாகப் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டும்'' ''இந்திய மக்கள் எல்லாருக்கும் உணவு, வீடு, உடை, கல்வி, சமவாழ்க்கை ஆகியவற்றைக் கொடுப்பதே காங்கிரஸ் கட்சியின் லட்சியம்!''

''அதை நிறைவேற்றிட வேண்டும் என்று ஜெய்ப்பூர் காங்கிரஸ் மாநாட்டிலே கூடியோசித்தோம். அதுதான் ஜனநாயக சோசலிசத் தீர்மானம்.'' ''அதைச் செயல்படுத்த, ஒரு திட்டம் போட்டு, மக்கள் ஆதரவைத் திரட்டவே நாம் இப்போது புவனேஸ்வரம் மாநாட்டிற்குப் போகிறோம்!''

''அதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தேவை! இதற்கிடையிலே, எளிய தொண்டனாகிய எனக்கு நீங்கள் அளித்த இந்த மாபெரும் வரவேற்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' ''நீங்கள் எல்லோரும் தவறாமல் புவனேஸ்வரம் மாநாட்டிற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.''

அமைதியுடனும் - ஆர்வப் பெருக்குடனும் தலைவர் காமராஜ் அவர்கள் பேச்சைக் கேட்ட ஆந்திர மக்கள், 'காமராஜ் நாடார் காருகி - ஜே! என்று, முழக்கமிட்டபடியே அவரை மேடையிலே இருந்து அழைத்துக் கொண்டு வந்து ரயிலில் அமர்த்தினார்கள். உடன் வந்தவர்களும், ஆந்திர மாநிலக் காங்கிரஸ் தலைவர்களும் - தொண்டர்களும்வண்டியிலே உட்கார்ந்தார்கள்!

விஜயவாடா நகருக்கு விடை கொடுத்துக் கிளம்பிய புவனேஸ்வரம் ஸ்பெஷல் வண்டி, ஏலுரு என்ற ஊரை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

பெஜவாடா காங்கிரஸ் தலைவர்களும் - தொண்டர்களும் கொடுத்த வரவேற்பையும், வாழ்த்தையும் - விருந்து உபசாரக் கோலாகலக் காட்சிகளையும் வாயாரப் பாராட்டிக் கொண்டே சென்றார்கள் - வண்டியிலே உள்ள மாநாட்டுப் பார்வையாளர்கள்.

தலைவர் காமராஜ் அவர்கள் பேசிய தெளிந்த கருத்துகள், புவனேஸ்வரம் மாநாட்டிலே ஆற்றியிருக்க வேண்டிய விளக்க உரை என்று அனைவரும் அகமகிழ்ந்து பாராட்டினார்கள்.

## ஏலூர் எழிலரசிகள் ஆரத்தி, திலகமிடல்!

தனி ரயில் வண்டி, ஏலூரு ரயில் நிலையத்தின் வாழ்த்து முழக்கங்களையும், வண்ண வண்ண சிறு, சிறு வரவேற்பு அட்டைகளை தாங்கிக் கம்பீரமாக நிற்கும் காட்சிகளையும் கண்டு, வேங்கை போல, ஓடிவந்த ரயில் தனது வேகத்தைக் குறைத்தபடியே ஆமையாக அடங்கி நின்றது.

இங்கே நடந்த அற்புதம் என்னவென்றால், பிற இடங்களை விட இங்கே காங்கிரஸ் வீராங்கனைகள் அணிவகுத்தபடியே ஒவ்வொருவராகச் சென்று ஆரத்தி எடுத்துக் கண்ணேறு கழித்து காமராஜ் அவர்களின் பரந்த நெற்றியிலே குங்குமப் பொட்டிட்டு இன்பமடைந்ததுதான்!

மலர் மாலைக்குப் பதிலாகச் சிலர் முழு முந்திரிப் பருப்புகளை மாலைகளாக்கி அணிவித்து மகிழ்ந்தார்கள்! வேறு சிலர் மலர்மாலைகளையும், முந்திரிப் பழம் மாலைகளையும் சூட்டினார்கள்! அனைவருக்கும் சிற்றுண்டிப் பொட்டலங்களும், காஃபி, டீ, பானங்களும் கொடுத்தார்கள், காங்கிரஸ் இளைஞரணியினர்கள்.

அதைவிட்டு நகர்ந்த ரயில் வண்டி, வேழ வேகத்திலே புறப்பட்டு, சிங்கம், மான், நரி, முயல் போன்ற வேக மிருகங்களோடு போட்டியிட்டபடியே நிடதவோலு, பசுவேதனை, கோவூர், கோதாவரி நிலையங்களிலே நிற்காமல், இராஜமுந்திரி ரயிலடியிலே போய் நின்றது.

## இராஜமுந்திரியில் பூமேடை வாழ்த்து!

ஆந்திர மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவரான பொட்டிப் பாட்டு ராமையா, தலைவர் காமராஜ் அவர்களை வரவேற்றுக் கொண்டிருக்கும் போதே, ஜே முழக்கங்கள் எதிரொலித்தன.

தலைவர் வண்டியை விட்டு இறங்கியதும், தமிழக முதல்வரும், பிற தலைவர்களும் இறங்கி வந்தபோது, ஒவ்வொருவருக்கும் ராமையா மாலை சூட்டினார்.

பூமேடையிலே விருதுநகர் வித்தகரும்; பிற தலைவர்களும் அமர்ந்த பின்பு, விழாவிற்கு மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தலைமை வகித்து, தலைவர் காமராஜ் அவர்களுக்குத் தமிழ் மொழியிலேயே வாழ்த்து வாசித்துக் கொடுத்தார்!

அனைவரும் மீண்டும் வண்டியிலே அமர்ந்தனர். தேநீர், இனிப்பு, சிற்றுண்டி, பழவகைகள் அனைத்தையும் கொடுத்து விருந்தளித்தனர் - ராமையா தொண்டர்கள்!

## துவாரபுடியில் இரவு உணவு!

இரவு உணவிற்காக புவனேஸ்வரம் ஸ்பெஷல் துவாரபுடி என்ற ரயில் நிலையத்தில் சென்று நின்றது. ஜே - முழக்க வரவேற்புகளும் - மலர்மாலை வாழ்த்துக்களும் முடிந்த பின்பு, அனைவருக்கும் சைவ, அசைவ உணவு பரிமாறப்பட்டது.

துவாரபுடி ஊராட்சி ஒன்றியம் தலைவர், காமராஜ், தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம், ஆந்திர முதலமைச்சர் நீலம் சஞ்சீவ ரெட்டி, பிற மாநில, மாவட்ட காங்கிரஸ்காரர்கள், புவனேஸ்வரம் மாநாட்டின் பார்வையாளர்கள் அனைவருக்கும் மிகத் தடபுடலான வரவேற்பும், வாழ்த்தும், கொடுத்து மகிழ்ந்தனர்!

தலைவர் அவர்களுக்கு நீலம் சஞ்சீவ ரெடடியார் வரவேற்பு வாழ்த்துமடல் ஒன்றைச் சுந்தரத் தெலுங்கிலே படித்துக் கொடுத்து, மாலை சூட்டி வரவேற்றார்! பல்லாயிரக்கணக்கான மக்கள் ஜே முழக்கமிட்டுக் கைதட்டிப் பாராட்டினார்கள்! தனக்குத் தந்த வரவேற்பைப் பாராட்டி தலைவர் தமிழிலே பேசினார். அனைவரையும் அவர் புவனேஸ்வரம் மாநாட்டிற்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார்!

## கன்னித்தமிழ் சுந்தரத் தெலுங்கிலே

தலைவர் ஆற்றிய எளிய தமிழ் உரையை ஆந்திர முதன்மந்திரி என். சஞ்சீவ ரெட்டியார் அவர்கள், தெலுங்கிலேமொழி பெயர்த்தார். பேச்சுக்குப் பேச்சு கையலைகள் மோதல்! கரையலைகள் ஆரவாரம்!

வரவேற்பு முடிந்ததும், அனைவருக்கும் இரவு உணவு! விருப்பத்திற்கேற்றபடி சைவ - அசைவ உணவுகள் பரிமாறப் பட்டன. அளவளாவியவாறே அனைவரும் அகமகிழ்ந்து உண்டார்கள்.

பின்னர், பிரியா விடை பெற்றனர் தமிழக மாநாட்டு விருந்தாளிகள்! அத்துடன், ஆந்திர மாநிலத்திலிருந்தும் மாநாட்டிற்கு வரும் பிரமுகர்கள் எண்ணற்றோர் வண்டியிலே ஏறி அமர்ந்தார்கள்.

## ஸ்ரீகாகுளம் மக்கள் காமராஜரிடம்மனு!

தனி ரயில்புறப்பட்டது - துவாரபுடியை விட்டு ஓடியது. இரவெல்லாம் இடையிடையே ரயிலை நிறுத்தி வரவேற்பும் அளித்தனர் - ஆந்திர மக்கள்!

1964-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 5ஆம் நாள் காலை, புவனேஸ்வரம் தனிரயில் வண்டி ஸ்ரீகாகுளம் சென்று நின்றது.

நடை மேடை எல்லாம் மூவண்ணக் கொடிகள் ஏந்திய காங்கிரஸ் தொண்டர்கள்! திபுதிபுவென்று ஓடி வந்து தலைவர் பெட்டியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

காமராஜ் நாடார் காருகி - ஜே! சஞ்சீவரெட்டி காருகி ஜே! என்று தொடரலையாக மக்கள் முழக்கமிட்டபடியே இருந்தார்கள்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் குளித்திட வெந்நீர். குளித்தபின் மாற்றுக் கதராடைகளை அணிந்தார்கள். பிறகு அனைவரையும் வரிசை வரிசையாக அமர வைத்து, பந்தி பந்தியாக சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன! தலைவர் காமராஜ் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. அங்கே போடப்பட்டிருந்த மேடையிலே தலைவர் பேச எழுந்தபோது, குடியானவன் ஒருவன் ஓடோடி வந்தான்.

அவன் கையிலே ஒரு மனு! அதைத் தலைவரிடம் அவர் கொடுக்க நீட்டியபோது, நீலம் சஞ்சீவரெட்டி அதைப் பெற்றுத் தலைவரிடம் கொடுக்க, தலைவர் மீண்டும் அதை ஆந்திர முதல்வரிடம் கொடுக்க, அவர் மனுவைப் படித்துப் பார்த்து அங்கேயே கையெழுத்திட்டுச் சம்பந்தப்பட்ட அமைச்சர் துறைக்கு அனுப்பி வைத்தார்.

தனக்களித்த வரவேற்புக்கும் - வாழ்த்திற்கும் - விருந்து வைபவ உபசரிப்புக்கும் தலைவர் காமராஜ் அவர்கள் நன்றி கூறி, தமிழிலே பேசினார்! அதை ஆந்திர முதல்வர் தெலுங்கிலே மொழி பெயர்த்தார். இறுதியாக, அனைவரும் வண்டியிலே அமர, ரயில் வண்டி பலாசா என்ற பேரூரை நாடிப் புறப்பட்டது.

**பலாசா நகரில்!**

பலாசா வரவேற்புத்தான் ஆந்திர மாநிலத்தின் எல்லையிலே நடைபெற்ற கடைசி வரவேற்பு! அவ்வூர் மக்கள், காங்கிரஸ் அன்பர்கள் அனைவரும் இதுவரை நடந்த ஆந்திர வரவேற்புகளை விட மிகச் சிறப்பாக நடத்தினர்.

பலாசா நகரிலே இருந்து புறப்பட்ட புவனேஸ்வரம் ஸ்பெஷல், ஒரிசா மாநில எல்லையிலே நுழைந்து பெர்ஹாம்பூர் நோக்கி விரைந்தது.

## பொட்டி பாட்டு ரங்கையா

இராஜமுந்திரி ரயில் நிலையத்தில் தலைவர் காமராஜ் அவர்களுக்கு மலர் மாலைசூட்டி விருந்து நடத்திய ஆந்திர மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பொட்டி பாட்டு ராமையாவின் தம்பி, பொட்டி பாட்டு ரங்கய்யா ஏலூரு வட்டக் காங்கிரஸ் செயலாளராக இருந்தார்!

அவர், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே பி.ஏ. படித்தவர்! அதனால், தெலுங்கு மொழியைப் போலவே ஒரியாவிலும், ஆங்கிலத்திலும், கன்னடத்திலும், தமிழிலும் பேசவும், எழுதவும் வல்லவர்!

தலைவர் காமராஜ் அவர்களுடன் கலந்துரையாடிடவும் முக்கியமான விவரங்களை விளக்கிடவும், ராமையா தனது தம்பியை உடன் அனுப்பி வைத்தார்! இருவரும் அளவளாவியவாறே பயணம் வந்தனர்.

# 11. ஒரிசா மாநிலம் சிறப்புகள் சில!

ஒரிசா மாநிலத்திலே உள்ள பெர்ஹாம்பூர் ரயில் நிலையத்திலே புவனேஸ்வரம் ஸ்பெஷல் பகல் 11 மணியளவில் வந்து நின்றது.

ஒரிய மக்கள் தங்களுடைய ஒரியா தாய்மொழியிலே காமராஜருக்கு ஜே! முதலமைச்சர் பிரேன்மித்ராவுக்கு ஜே! ஜவகர்லால் நேருவுக்கு ஜே! என்று மூவண்ணக் கொடிகளை ஏந்தியபடியே ஆரவாரமாக முழக்கமிட்டார்கள்.

தலைவர் காமராஜைச் சூழ்ந்து கொண்டு மலர் மாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்கள்! பிறகு, அனைவருக்கும் பகலுணவு படைக்கப்பட்டது. உண்டுகளித்த பின் ஒருவரோடு ஒருவர் அளவளாவி மகிழ்ந்தார்கள். ரங்கையா தனது நண்பர்கள் சிலரையும் பெர்ஹாம்பூர் காங்கிரஸ் தொண்டர்கள் சிலரையும் அறிமுகம் செய்தார்.

இரயில் வண்டி புறப்பட்டுப் புவனேஸ்வரம் நோக்கி ஓடிக் கொண்டே இருந்தது.

பகல் நேரமானதால், ஒரிசா மாநில இயற்கைக் காட்சிகளைப் பார்த்துப் பரவசப்பட்டு வரும்போது, தலைவர் காமராஜ் முதல்வர் பக்தவச்சலம் அவர்களது சந்தேகங்களையும் - விவரங்களையும் ரங்கையா விளக்கிக் கொண்டே வந்தார்!

தலைவர் : ரங்கையாகாரு, ஒரிசா மாநிலத்தின் முக்கியத்துவம் பற்றி உமக்குத் தெரிந்தவற்றைக் கூறுங்களே!

ராமையா : கலிங்கதேசம் என்பதுதான் ஒரிசா மாநிலம்! அதற்கு ஒட்ரதேசம் என்று பெயர்! புராணங்களிலே வரும் உத்கல தேசம் என்பதும் ஒரிசாவுக்குள்ள பழமையான பெயர்!

பக்தவத்சலம் : கவியரசர் ரவீந்தரநாத் தாகூர், ஜன கன மண என்ற தேசிய கீதத்திலே 'திராவிட உத்கல வங்கா' என்ற நாடுகளின் பெயரைப் பாடியுள்ளாரே, அந்த உத்கல என்ற நாட்டின் பெயர் இந்த ஒரிசா மாநிலமா?

ராமையா : ஆமாம்ஜி! தமிழ்நாட்டிலே ஓடுகின்ற வரலாற்றுச் சிறப்புப் பெற்ற காவிரியாறு போல

ஒரிசாவிலே மகாநதி சிறப்பான ஆறு! அந்த நதிதான் ஒரிசாவிற்கு உயிர். அதன் வடக்கே உள்ள பகுதிதான் ஒட்ரதேசம்! தெற்கே இருக்கும் நிலப்பகுதி கலிங்கம்!

கா : அப்போ, அங்கே வாழ்கின்ற மக்கள் பேசும் மொழி...

ரா : ஒரியா மொழிஜி!

கா : இந்தக் கலிங்க தேசத்தின் மண்ணிலே தான் சாம்ராட் அசோகன் போரிட்டு வெற்றி பெற்றானா?

ரா : ஆமாம்ஜி! மாமன்னன் அசோகன் போரிட்ட முதல் போரும் - இறுதி போரும் அதுதான்!

பக் : அப்படின்னா, காந்திஜியின் அகிம்சை என்ற ஞானோதயத்தை அவன் பெற்றதும் இந்தப் போரின் முடிவில்தான் என்கிறீரா?

ரா : ஆமாம்ஜி!

கா : அப்படின்னா, தமிழ்நாட்டு மாமன்னன் முதலாம் குலோத்துங்கன் கலிங்கத்தைப் போரிட்டு வெற்றி பெற்றதும் இதே இடந்தான் என்று சொல்லும்!

ரா : அப்படியாஜி! எனக்கு அது, தெரியாதே!

பக் : நீங்கள் தமிழ்நாட்டு வரலாறு வாசித்திருக்க நியாயமில்லையே!

ரா : அதற்கு ஏதாவது சரித்திர ஆதாரம் இருக்கிறதாஜி!

கா : ஜயங்கொண்டார் என்ற எங்கள் நாட்டுக் கவிஞர் பாடிய கலிங்கத்துப் பரணி என்ற காவியம் இருக்கிறதே ரங்கையா!

பக் : அதன் சிறப்பு என்ன தெரியுமா? அந்த நூலைக் கலிங்கத்துப் பரணி என்பர்; ‘பரணிக்கோர் ஜயங்கொண்டான்’ என்றும் புகழ்வர்.

ரங் : ஓ மை காட், அப்படிப்பட்ட காவியமா அது?

கா : ஆமாம் ரங்கையா! அது சரி! அஜந்தா எல்லோரா குகைகளும் இங்கேதான் இருக்கின்றனவா?

ரங் : ஆமாம்! சென்னைக்கு அருகே உள்ள மகாபலிபுரம் போல, அஜந்தா - எல்லோரா குகைகளும் சிறப்பு வாய்ந்த குகைக் கல் வெட்டுக்கள்ஜி!

பக் : அப்படியானால், கலிங்கர்கள் வரலாற்றைக் கூறும் ஹதிகும்பாகல்வெட்டுகளும் இங்கேதான் இருக்கின்றன இல்லையா?

ரங் : ஆமாம்ஜி! அந்த கல்வெட்டுக்கள்தான் ஒரிசா வரலாற்றை விவரமாக விளக்கிக் கொண்டிருக்கிறது!

பக் : அப்படியா!

ரங் : இங்கே உள்ள காவல்துறையில் ஓர்அதிசயம் நடந்து வருகிறதுஜீ!

பக் : அது என்ன ரங்கையா?

ரங் : ஒரிசா மாநிலக் காவல்துறையினர், புறாக்களைத் தூதுவிட்டுச் செய்திகளைச் சேகரிக்கின்றார்கள்!

கா : அடடே! நளன் தமயந்தி கதையிலே அன்னத்தைத் தூதுவிடும் கதை இங்கே நிஜமாகவே நடக்குதோ!

ரங் : ஆமாம்ஜி! அந்தப் புறாக்கள் சென்று செய்தி சேகரிக்க நாற்பது வழித் தடங்கள் இருக்கின்றன!

கா : அவைகளுக்கு அந்த வழிகளைக் காட்டுவது யார்? எப்படி?

ரங் : வழிகளை யாரும் காட்டுவதில்லை. புறாக்களுக்கு மட்டும்தான் அந்த வழிகள் தெரியும்!

பக் : அவைகட்கு எப்படிப் பயிற்சி தரப்படுகின்றது ரங்கையா?

ரங் : அந்தப் புறாக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று ஸ்டேடிக் (Static) இரண்டு பூமராங் (Boomarong), மூன்றாவதாக மொபைல் (Mobile) என்பவையே அவை!

கா : இந்த மூன்று வகைகளிலே காவல்துறையினர் பயிற்சி கொடுத்துச் செய்தி சேகரிக்கிறார்களா? அட...டே! இது நமக்குப் புரியாது போச்சே! என்ன முதலியார்வாள், நாமும் செய்திருக்கலாம் இல்லையா?

பக் : செய்திருக்கலாம்! இப்பதானே கேள்விப்படுகிறோம்!

ரங் : ஒரியர்கள் மதநம்பிக்கை உள்ளவர்கள்; கலை ஆர்வமுள்ளவர்கள் ஜி!

பக் : அதெப்படி?

ரங் : ஒரியர்கள் தங்கள் வீடுகளைச் சுவர்ச் சித்திரங்களால் அழகு செய்வார்கள்! பார்க்க அலங்காரமாக வீடுகள் இருக்கும்! இதற்குச் சாருகலா என்று பெயர். மூங்கில் இலைகளிலே பக்தி இலக்கியங்களை எழுதி வைப்பார்கள்!

கா : இலைகளிலே எழுதுகிறார்களா? அடடே! பைபிளை ஃபேபியன் என்ற நாணல் இலைகளிலே கிறித்தவர்கள் எழுதி வைத்தது போலவா?

ரங் : அது நைல் நதி ஓரத்திலே வாழ்ந்த மக்கள் அவ்வாறு செய்ததால்தான், பைபிள் என்ற பெயர் வந்ததாக வரலாற்று வழக்கு ஜி!

கா : அது சரி, ஹிராகுட் என்ற இடத்தில், உலகத்திலே மிக நீளமான அணைக்கட்டை, நேருஜி அடிக்கல் நட்டு உருவாக்கியதும் இந்த மாநிலத்திலேதானே!

ரங் : ஆமாம் ஜி! மகாநதியின் குறுக்கே தான் அந்த அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. அது மிக நீளமாகவே இருப்பதால், ஓர் ஏரி போலவே பெரிய அளவிலே காட்சி தருகிறது!

கா : மாநாடு நடைபெறும் புவனேஸ்வரம் நகருக்குச் சிறப்பு ஏதாவது உண்டா?

ரங் : பெங்களூர் பூங்கா நகரம்; நாகபுரியை ஆரஞ்சு நகரம் என்பது போல, புவனேஸ்வரம் நகரைக் கோவில் நகரம் என்பார்கள்!

பக் : எங்க காஞ்சியைக் கூடத்தான் நகரேஷு காஞ்சி என்பார்கள்! ஏறக்குறைய 526 கோவில்கள் அவ்வூரிலே இருக்கின்றன!

ரங் புவனேஸ்வரம் நகரில் ஏழாயிரம் கோவில்கள் இருந்தனவாம்! எல்லாம் காலத்தால் அழிந்து, இப்போது 500 கோவில்கள் மட்டும் உள்ளதாகக் கணக்கு உள்ளது. ஒரிசாவில் உள்ள பூரி ஜெகந்நாதர் கோவில் மிகச் சிறப்பும், முக்கியத்துவமும் பெற்றது. இந்துக்களில்கூட ஆசாரமான ஒழுக்கமுடையவர்களைத் தவிர, வேறு எவரையும் கோவிலுள் நுழைய விடுவதில்லை ஜி!

கா : அப்போ, இந்துக்களுக்கே இந்த நிலை என்றால்....!

பக் : மற்ற மதத்தார்களை உள்ளே விடமாட்டார்கள் இல்லையா ராமையா?

ரங் : இப்போது புதிய புவனேஸ்வரம் நகர் உருவாக்கப்பட்டுள்ளது. அதனருகே, பழைய புவனேஸ்வரம் நகரமும் அப்படியே இருக்கின்றது!

கா : மாமன்னன் அசோகன் போரிட்ட இடம் எங்கே இருக்கிறது? பார்க்க வேண்டுமே அதை!

ரங் : அசோகன் போரிட்ட இடம் இப்போது தௌலி என்ற நகரம் அருகே உள்ளது! மாநாடு முடிந்த பின்பு நீங்கள் அதைப் பார்க்கலாம் ஜி!

கா : பீஜு பட்நாய்க் முதன் மந்திரியாக இருந்தார் அல்லவா? அவர் செல்வாக்கு மக்களிடம் எப்படி?

ரா : பீஜு பட்நாய்க் 1952-ஆம் ஆண்டு முதல் பிரதமர் நேருவின் அன்பில்இரண்டறக் கலந்தவர். ''பீஜுவை யாராவது குறை கூறினால், என்னைப் பற்றி என்னிடமே குறை கூறுவது போன்றது'' என்றார் நேருஜி. அவ்வளவு செல்வாக்குடன் அரசியலிலே திகழ்பவர்! அவர்தான் புவனேஸ்வரம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்ஜி!

இவ்வாறு ராமையாவும், தலைவர் காமராஜ் அவர்களும், பக்தவத்சலமும் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது, ரயில் வண்டி புவனேஸ்வரம் சந்திப்பு நிலையத்திலே சென்று நின்றது.

# 12. புவனேஸ்வரம் காட்டிய புதுமையான வரவேற்புகள்

புவனேஸ்வரம் ஸ்பெஷல் வண்டி ஏறக்குறைய நான்கு மணி நேரங்கள் ஓடி வந்த வேகத்தைத் தணித்து, நீண்ட பெரும் ஓசையோடு ரயில்நிலையம் வந்தடைந்தது.

நீரோடைகளைப் பெருக்கிவரும் மகாநதியைப் போல, மூவண்ணக் கொடிகளுடன் மக்கள் நீண்ட வரிசைகளாக ஜே கோஷங்களை முழக்கியபடியே நின்றவர்கள் சுறுசுறுப்புடன் புதையல் ஒன்றைக் கண்ட புளகாங்கிதத்தோடு தலைவர் இருந்த பெட்டியருகே ஓடிவந்து குழுமினார்கள்!

கோடைக்காலப் பனிக்கட்டிகளைப் போல உள்ளமுருகி உருகிக் காமராஜ் வாழ்க என்று முழங்கியபடியே வழிந்தார்கள் - ரயில் நிலையம் முழுவதுமாக! படர்ந்து வரும் மேகமாக, ரயில் நிலையத்திற்கு வெளியே நின்றவர்கள் எல்லாம் உள்ளே புகுந்தார்கள்!

அனல்பட்ட கந்தகம் போலச்சிதறிய ஜே முழக்கங்கள், ஒருபுறம்! சிதறுண்ட சிங்கக் குட்டிகளைப் போல ரயில்நிலையமெங்கும் ஓடிக் கொண்டிருந்தனர் பல இளந்தொண்டர்கள்.

இரயில் நிலையமெங்கும்பொதுமக்கட்திரள்! - பொங்குமாங் கடலலைகளைப் போல! பாரத் மாதாகி ஜே! பீஜுபாபுகி ஜே! நேருஜிக்கு ஜே! என்ற ஒலி உலாக்கள் வெளிவந்தன!

ஒரிசா முன்னாள் முதலமைச்சர் பீஜு பட் நாய்க், அந்நாள் முதலமைச்சர் பிரேன்மித்ரா, ஒரிசா மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பிஜய்பாணி, மத்திய அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அனைவரும்ஒருவர்பின் ஒருவராகத் தலைவர் காமராஜ் அவர்களுக்கு மாலைசூட்டி வரவேற்றார்கள்!

காங்கிரஸ் கட்சி சேவாதளத் தொண்டர்கள், தலைவர்கள், இருபுறமும் அணிவகுத்தபடியே அழைத்துச் சென்று; திறந்த ஜீப்பில் தலைவரை ஏற்றி அமரவைத்து ஊர்வலமாகப் புறப்பட்டார்கள்!

இந்திய வாழ்க்கை முறையில் இரண்டறக் கலந்துவிட்ட இசையும் நடனமும் கலந்த ஒடிசி நடனக்குழு நடனமாடியபடியே தலைவர் முன் சென்றது!

மொகலாய சாம்ராஜ்ஜிய மன்னர் ஒருவர் பவனி வருவது போல, சோதிப்பூவா நடனக் குழு ஆடிப்பாடி அவரை வரவேற்றபடி நகர்ந்தது!

எட்டு திசைகளும் எரிவதைப் போன்ற-எரிகின்ற தீப்பந்தங்களோடு ஒரியா பழங்குடி மக்களின் வீர விளையாட்டுகள்!

டோய்ரியா, கோண்டா, பெங்கோ, கிஷான், கோண்டி கோயா, பார்ஜி, குயி, குவி, குருக், ஒரான் எனப்படும் திராவிட இன வம்ச வாரிசுகள் அழகழகான ஆடைகளைப் பூண்டு அணியணியாகத் திரண்டு வரவேற்ற கோலாகலங்கள்! ஒரிசா மாநிலத்துக்கே உரிய பட்டுத்துணியிலே வரையப்பட்ட பாட்டா சித்ரா ஓவியங்களோடு 'காமராஜ் வருக' என்று எழுதப்பட்ட பதாகைகள் தாங்கிய அணிகள்!

பார்ப்பதற்கு பூரி ஜகந்நாதர் ஸ்நான பூர்ணிமா விழாபோல் வந்த மக்கள் ஊர்வலம் மாட்சி! சிவப்புக் கல்லிலே கலைவண்ணம் கண்ட பூமி ஒரிசா மாநிலம் என்பதற்குச் சான்றாக; சில கற்சிலைக் காரிகைகள் மத்தளம் கொட்டி ஊர்வலம் முன்னே சென்றன!

மரத்தாலே செதுக்கப்பட்ட யானைச் சிற்பங்கள் ஒருபுறம்! பித்தளையிலே வடிக்கப்பட்ட வண்ண வண்ண மீன்கள் வாயுள்ளே பறக்கும் மூவண்ணக் கொடிகளின் வனப்பு!

மூங்கில் கூடைகளாலான பொம்மைகள் ஓரணி! எருமை மாட்டுக்கொம்புகளிலே செதுக்கப்பட்ட புறாக்கள், கொக்குகள் பறந்து வந்து தலைவரை வரவேற்பது போன்ற காட்சி மறு அணி.

இரண்டு சிங்கங்கள் ஒன்றோடொன்று மோதி ரத்தம் ஒழுகிக் கொண்டே போரிடும் காட்சிச் சிலைகள் பிறிதோர் அணி! பெரிய மரச்சிலைப் பாவைப் பெண்களிருவர்; எரிகின்ற தீபஜோதிச் சுடர்களோடு ஊர்வலத்தை ஆரத்தி எடுத்து வரவேற்கும் அற்புதச் சிலைகள் மற்றோர் அணி.

எழிலார்ந்த இந்தக் காட்சிகள் இடையே பாண்டிய நாட்டு மன்னன் ஒருவன் கலிங்கம்மீது மீண்டும்படையெடுத்தாற் போன்றமைந்த காட்சிகள் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஏறக்குறைய ஐந்து மைல் தூரம் இந்த ஊர்வலம் ஊர்ந்து சென்றிட்ட ஆறு மணிநேர அற்புதக் காட்சிகளை, அன்று புவனேஸ்வரம் நகர் புதுமையாகக் கண்டு புல்லரிப்புற்றது.

புவனேஸ்வரம் மாநாடு நகருக்கு வெளியே; மறைந்த காங்கிரஸ் தியாகியான உத்கல் கோபந்து தாஸ் பெயரிலே புதியதோர் நகரமாக பொலிவுப் பெற்று அமைந்திருந்தது.

தியாகி உத்கல் கோபந்து தாஸ் ஒரிசா மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியை அரும்பாடு பட்டு வளர்த்த மாவீரர்! அவர் சிலை ஒன்று மாநாட்டு முகப்பிலே அலங்காரம் செய்யப்பட்டிருந்த தற்குத் தலைவர் காமராஜ் மாலை சூட்டும்போது, காங்கிரஸ் கட்சியின் 68-வது தேசிய மகாசபை என்பதால், 68 அதிர்வேட்டுக் குண்டுகள் வெடித்தன. கூடிய பொதுமக்கள் அனைவரும் காமராஜ் வாழ்க என்று பெரு முழக்கமிட்டார்கள்!

இந்தியா சுதந்திரம் பெற்றுப் பதினேழு ஆண்டுகளான பிறகு, இதுவரை வேறு எந்த காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும் இப்படி ஒரு விழாவும் வரவேற்பும் நடந்ததேயில்லை!

ஆவடி காங்கிரஸ் மாநாடு தேசிய சபை, தமிழ் மாநிலத்திலே அற்புதமாக நடைபெற்றதைப் பண்டித நேரு பலப்பட பாராட்டினாரென்றாலும், தமிழர் ஒருவர் பெற்ற இத்தகைய மாபெரும் வரவேற்பை எவரும் இன்றுவரைப் பெற்றதில்லை என்ற நிலை அங்கே நிலவியது!

''தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா!'' என்ற நாமக்கல்லாரின் குறிஞ்சிக் கவிதைப் பூ பூத்து அங்கே தேசபக்தி என்ற தெய்விக அழகைத் தோற்றியது!

எந்த மண்ணிலே மாமன்னன் அசோகன் அகிம்சா தத்துவத்தின் அவதாரியானானோ, அதே மண்ணிலே காந்தியடிகளின் அகிம்சா தத்துவம் உலாவாக நாடெங்கும் பவனி வந்திடத் தலைவர் காமராஜ் அவர்கள் பவனி; ஒரு திருப்பு முனையாகத் திகழ்ந்த காட்சியை - புவனேஸ்வரம் மாநாடு காட்டியது!

# 13. கலிங்க மண்ணிலே காமராஜ் பவனி!

புவனேஸ்வரம் மாநாட்டு மேடையிலே தலைவர் காமராஜ் அவர்கள் அமர்ந்தார். அப்போது ஒரிசா முதன் மந்திரி திரு பிரேன்மித்ரா, தலைவருக்கு மலர்மாலை சூட்டினார்.

முன்னாள் முதல்வரும் - மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு பாபு பீஜு பட்நாய்க் தனது வரவேற்புரையை ஆற்றி அனைவரையும் வரவேற்றார்.

மாநாட்டு மேடையிலே வீற்றிருந்த பீஜய்பாணி, லால் பகதூர் சாஸ்திரி, பக்தவச்சலம், நீலம் சஞ்சீவரெட்டி, மற்ற மாநில முதல்வர்கள், தலைவர்கள் உட்பட முக்கியமான அனைவரும் மாலை சூட்டித் தலைவர் அவர்களைப் பாராட்டினார்கள்.

இந்த நேரத்தில் பாபு பீஜு பட்நாய்க் பரபரப்புடன் எழுந்து வந்து தலைவர் காமராஜ் அவர்களிடம், பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை தந்ததும் திடீரென அவரால் நடக்க முடியாமல்; அப்போது ஒரு பக்கக் கை, கால் செயல்படாமல் இருக்கும் உடல் நலிவையும் கூறிட, அனைவரும் பதை பதைத்து எழுந்தார்கள்!

அப்போதே அனைவரும் அங்கும் இங்குமாகப் பரபரப்புடன் எழுந்து ஓடினார்கள்! உடனேயே திரும்பி பிரதமர் நேரு அவர்கள் தக்க மருத்துவ சிகிச்சை பெற டில்லிக்கே சென்றுவிட்டார் என்ற மறு செய்தியும் வந்தது!

இந்தச் செய்தி மக்களிடையே பரவி, மாநாடு பரபரப்புடன் காணப்பட்டது! காமராஜ் அவர்களும் பிற தலைவர்களும் சோகமே உருவமாக மீண்டும் வந்து அமர்ந்தார்கள்! பிரதமர் நேரு கலந்து கொள்ளாத மாநாடா என்ற துயரநிலை மேலோங்கி, அருவி ஒன்று அரிக்கும் நிலம்போல அவர்கள் மனதைக் கவலைகள் அரித்தன!

## பெருந்தலைவர் பேசுகிறார்!

தலைவர் காமராஜ் அவர்கள் நிலைகுலைந்தவராய் பேச எழுந்தார், தழுதழுத்த குரலோடு! பேச 'நா' எழாமல், ஆனால் கூடியுள்ள மக்களிடையே குழப்பம் சூழாமல், நிலைமையை

ஓரளவு சமாளித்துப் பேச முற்பட்டார்! ''தியாகி கோபந்துதாஸ் திடலிலே திரண்டிருக்கும் பொது மக்களே! காங்கிரஸ் பேரியக்கத் தலைவர்களே! தொண்டர்களே! வணக்கம்'' என்று தமிழ் மொழியிலே பேசினார்.

இலட்சக் கணக்காகக் கூடியுள்ள மக்களுக்கு அவர் தமிழ் மொழியில் பேசியது புரியாததால் சிறு சலசலப்பு மாநாட்டிலே காணப்பட்டது! தமிழ்நாடு காங்கிரசைச் சேர்ந்த, ஜி. இராஜகோபாலன் உடனே தலைவர் பேச்சை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார்.

மீண்டும் அவர் தனது உரையைத் துவங்கியபோது ஒரே கை தட்டும் மகிழ்ச்சி பூத்தது!

''பிரதமர் நேரு அவர்கள் உடல்நிலை சரியில்லை! ''நேரு இல்லாத மாநாடாக இது காட்சியளிக்கின்றது; எனவே, நாம் கடமையோடும், கட்டுப்பாடோடும் செயலாற்ற வேண்டிய நிலையிலே இந்த மாநாடு உள்ளது. அவர் முழு உடல் நலம் பெற்று மீண்டும் நமக்கு வழி காட்ட வேண்டுமென்று கடவுளை வேண்டிப் பிரார்த்தனை செய்து கொள்ளுவோம்!

''இந்திய தேசியக் காங்கிரசின் 68-வது மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்தும் தலைமைப் பதவியை எனக்கு நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த சாதாரணக் காங்கிரஸ் தொண்டன் நான்! ஆனால், என்னிடம் பெரும் பொறுப்பைக் கொடுத்திருக்கிறீர்கள்! அதற்காக எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!''

''உயர்ந்த இந்தப் பதவிக்கு என்னை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து, உங்களுடைய உயர்ந்த அன்பை என்மீது பொழிந்திருக்கிறீர்கள்!

''சென்னை மாநகரிலே இருந்து மாநாட்டிற்கு நான் புறப்பட்டவுடன்; ஆந்திர மாநிலத்திலும், பின்பு ஒரிசாவில் நான் கால் வைத்ததும் எனக்கு எல்லோரும் அளித்த வரவேற்பிற்கும் - வாழ்த்திற்கும், நம்பிக்கைக்கும், நான் என்னுடைய - கடமைகளை உங்களது தொண்டனாகவே திகழ்ந்து பணியாற்றுவேன்!''

''தியாகி கோபந்து தாஸ், இந்திய தேசிய இயக்க வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்! அந்த மகானின் பெயரை இந்த மாநாட்டுத் திடலுக்குச் சூட்டி நன்றி காட்டியிருக்கிறீர்கள்! அவரது சேவையை நான் மதித்து வணங்குகிறேன்!''

''ஆலன் அக்டேவியன் ஹியூம் என்ற மனித நேயரால் துவங்கப்பட்ட இந்த இந்திய மகாசபை, இதுவரை 67 மாநாடுகளை நடத்திய பின், இது 68-வது மாநாடாகத் தோற்றமளித்துள்ளது.''

''இலட்சக் கணக்காகக் கூடியிருக்கும் உங்களது ஆதரவால்தான், காங்கிரஸ் இன்று இவ்வளவு பெரிய கட்சியாக வளர்ந்துள்ளது. அந்த நன்றியை வரலாறு மறக்காது.''

அறிவிலும் ஆற்றலிலும், தியாகத்திலும், கடமையிலும் நம்மைவிட பலமடங்கு சிறந்து உழைத்து அரும்பாடுபட்ட சான்றோர்களையும் நாம் இப்போது நினைந்து வீர வணக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றோம்!''

''அந்த மாமேதைகள் காட்டிய வழிகளிலே நாம் வளர்ந்தவர்கள்! அதனால், நமது நாடு சுதந்திரத்தைப் பெற்றது! அவர்கள் சிந்தனைகளை நாம் போற்றி மனதிலே பதித்துக் கொண்டு, நமது சமதர்ம சோசலிசப் பயணத்தைத் தொடர்கின்றோம்! சுதந்திரம் கிடைத்தால் நாம் சுகமாக வாழலாம் என்று ஏழை மக்கள் ஆசைப்பட்டார்கள்! அதிலே என்ன தப்பு?''

''மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டோமே! அதனால் என்ன லாபம்? ஏழை மக்களுக்கு அந்தத் திட்டங்களின் பலன் போய்ச் சேர்ந்ததா? இல்லையே! ஏன்? என்ன ஆயிற்று அந்தத் திட்டங்களிலே போட்ட கோடி கோடி பணமெல்லாம்? ஒரிசாவிலே ஓடுகின்ற மகாநதியிலே கலந்து விட்டதா? இல்லை!''

''ஒரு சில பணக்காரர்களிடம் பணம் மேல் பணமாகப் போய் குவிந்து கிடக்கிறது! அதை நாம் தடுக்க வேண்டாமா?'' (கைதட்டல்) பணக்காரர்களிடம் சென்று சேர்ந்துவிட்ட பணத்தை மீண்டும் எடுத்து, ஏழை மக்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டாமா?'' (வேண்டும், வேண்டுமென்று கையொலி)

''ஏழை, ஏழையாகவே இருக்க வேண்டுமா என்ன? எப்போது ஏழை சுகமாக ஜீவிப்பான்? இந்தக் கேள்வியை ஏழை மக்கள் கேட்பது எப்படி தப்பாகும்? ''(கையொலி)

''நமது பொருளாதார முன்னேற்றத்தின் நடைமுறையில் கவலைப்பட வேண்டிய சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன! செல்வம் ஒரே இடத்தில் சென்று சேர்வதால் தொழில்களில் சிலரது ஏகபோக ஆதிக்கம் வளர்ந்து கொண்டே போகிறது!''

'' எப்படி அவர்களிடம் அந்தப் பணம் போய்ச் சேருகிறது? வரியை ஏய்ப்பது, பற்றாக்குறை இருக்கும் பொருள்களில் கள்ளச்சந்தை, உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வது போன்ற அடாத செயல்களே அதற்குக் காரணம்! வியாபாரத்தில் நேர்மை இல்லை! வியாபார ஒழுங்கும் சீர்கெட்டு வருகின்றது! இந்த விஷயத்தில் எல்லா அரசுகளும் சரியான நடிவடிக்கை

எடுத்ததாக வேண்டியிருக்கிறது! அதற்காக நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன?''

''சோசலிசமே நம் இலட்சியமாக இருப்பதால், பொருளாதார பலம் சிலரிடம் குவிவதையும், வம்சவாரியாக இது தொடர்ந்து வளர்வதையும் நாம் தடுத்தாக வேண்டாமா? தடுக்க முடியாவிட்டால், இந்தச் சீர்கேடுகள் தங்கு தடையின்றி நடந்து கொண்டே போகாதா?''

''அதை அனுமதித்தால், நிச்சயமாக நம் முன்னேற்றத்திற்கு அது முட்டுக்கட்டையாகாதா? பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக ஆக்குவதாகாதா? இந்த நாட்டின் சட்டதிட்டங்களும் - நிர்வாக முறைகளும் - மக்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டிருக்கும் சோசலிச லட்சியத்தை நிறைவேற்றி வைக்கப் பாடுபடுகின்றனவா?''

''இதை நாம் சிந்திக்க வேண்டிய நிலையிலே தான் - இன்று இங்கே கூடியிருக்கின்றோம். இந்த வகையில், ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வித முன்னேற்றம் நடந்திருக்கிறது என்பதை, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி ஆராய வேண்டும்!''

''ஏகபோகத் தொழில்கள் வளர்வதைத் தடுக்க, வேண்டிய நடவடிக்கையை விரைவாக நம்முடைய அரசுகள் மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டில், ஏக போகங்களாக இருக்கும் தொழில்களின் நிலைமையை நாம் ஆராய வேண்டும். புதிய தொழில்களை விரிவாக்கம் செய்து, புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்.

''எல்லா மாநிலங்களிலும், செகண்டரிக் கல்வி வரையில் இலவசக் கல்விமுறையைப் படிப்படியாக அமுலாக்கிட ஒவ்வொரு மாநிலமும் முயற்சி செய்தாக வேண்டும்!''

''காங்கிரஸ் கட்சி ஒரு செயல் முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, அதற்கு உடன்பட்டு, அதை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்தாக வேண்டியது ஒவ்வொரு காங்கிரஸ்காரரின் புனிதமான கடமையாகும்.''

''கொள்கை சம்பந்தமாக ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்த பிறகு, காங்கிரஸ்காரர்கள் வெவ்வேறு விதமாகப் பேசி வருவதும், ஒருவர் மேல் ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பதும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன.''

''அதனால், நாம் ஒன்றுபட்டு, நாட்டின் வளர்ச்சி லட்சியத்தில், கட்டுப்பாட்டுடன் கடமை வீரர்களாகப் பணியாற்றிட வேண்டும்.''

''மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் பணியாற்றும் பாக்கியம் முன்பு நமக்கு இருந்தது. காந்திஜியின் வழி வந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்! அதனால் அவர்கள் தாங்கள் மேற்கொண்ட சிறந்த லட்சியத்தையும், உயர்ந்த ஒழுக்கத்தையும் கடைப் பிடித்தாக வேண்டும்!''

''பிற கட்சியைச் சேர்ந்தவர்களிடம் எதிர்ப்பார்ப்பதை விட, உண்மையில் காங்கிரஸ்காரர்களிடத்தில் தான் மக்கள் நாட்டு நலத்தை எதிர்பார்க்கிறார்கள்!''

''நமது அன்றாட நடத்தையில், காந்தீய வழியை நாம் கடைப்பிடித்தாக வேண்டும் என்று நான் எல்லோரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.''

''மகாத்மா காந்தியிடம் இருந்த மகத்தான அருங்குணங்களில் முக்கியமாகப் பிரகாசித்தவை இரண்டு! அவை, சத்தியம், நடத்தையில் மனித வர்க்கத்திற்குச் சேவை'' என்பவையே!''

''நாம் கனவு கண்டு வந்திருக்கும் நவஇந்தியாவை, இந்த எளிதான இரு கருவிகளைக் கொண்டு நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்! வணக்கம்!''

இப்படி பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பேசிமுடித்ததும், கூடியிருந்த மக்கள் ''பெருந்தலைவர் காமராஜ் வாழ்க, பிரேன் மித்ரா வாழ்க, பிரதமர் நேருஜி வாழ்க, பாபு பட்நாய்க் வாழ்க'' என்ற முழக்கங்களை முழங்கினார்கள்!

பிரதமர் நேரு அவர்கள், டில்லி சென்று சேர்ந்ததும் புவனேஸ்வரம் மாநாட்டிற்குத் தனது வாழ்த்துச் செய்தியை முதல்வர் பிரேன்மித்ராவுக்கும், தலைவர் காமராஜ் அவர்களுக்கும் அனுப்பி வைத்தார்!

ஜனவரி ஐந்தாம் நாள் கூடிய மாநாடு 10-ஆம் நாள் இரவு 7 மணி வரை, பெருந்தலைவரின் இறுதி உரையோடு முடிந்தது.

# 14. காமராஜ் பிறந்த காலத்தின் பின்னணி

## காமராஜ் பிறந்த ஆண்டு 1903

*இந்தியா முழுவதுமுள்ள மாநில மாநகர்களில், ஒவ்வொரு ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை மாநாடு, தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரிலே, காமராஜ் என்ற குழந்தை பிறந்த அதே வருடத்தில் தான் அதாவது 1903-ஆம் ஆண்டில்தான் நடை பெற்றது!*

*அதே அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு, 61 - ஆண்டுகள் கழித்து இதே காமராஜ் என்ற குழந்தைதான் பெருந்தலைவராகப் பொறுப்பேற்கபோகிறது என்ற வரலாறு யாருக்குத்தான் தெரியும்?*

*அந்த ஆண்டு சென்னை மாநாட்டின் தலைவராக அமர்ந்த லால் மோகன் கோஷ் அவர்கள் , ஆங்கில ஆட்சியின் ஆதிக்கச் சட்டங்களின் நிர்வாகக் கொடுங்கோன்மைகளைக் கொல்லேறு போல நிமிர்ந்து நின்று குரல் கொடுத்தார்!*

*அறுபத்தோரு ஆண்டுகளுக்குப் பிறகு புவனேஸ்வரத்தில் நடைபெற்ற அதே அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாட்டில், இந்தியா சுதந்திரம் பெற்ற பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர், பணக்காரர்களை எதிர்த்து, ஏழைகள் வாழ்வு பெற்றிட, சமதர்ம சோசலிச சங்க நாத ஒலியை ஊதப்போகிறது இந்தக் குழந்தை என்று - அதே 1903 - ஆம் ஆண்டில் அது தோன்றியது போலும்!*

## ஐந்தாம் தமிழ்ச் சங்கத்தின் தோற்றம்!

*இராமநாதபுரம் அருகே உள்ள பாலவ நத்தம் ஜமீன்தாராக இருந்த திரு பொன்னுசாமித் தேவரின் திருமகனாரான பாண்டித் துரைசாமித் தேவர், சிறந்த தமிழபிமானி!*

*தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில், முதல், இடை, கடை என்ற மூன்று முத்தமிழ்ச் சங்கங்களுக்குப் பிறகு, தமிழை - தமிழறிவை வளர்த்திட மீண்டும் ஒரு தமிழ்ச் சங்கம் தேவை என்று அவர் உணர்ந்தார்!*

கி. பி. 470- ஆம் ஆண்டில், பூஜ்ய பாதர் என்ற சமண முனிவரின் மாணவராக இருந்த வச்சிர நந்தி என்பவரால், தென் மதுரையிலே ஒரு தமிழ்ச்சங்கம் உருவாக்கப்பட்டது. (Bombay Royal Asiatic Society's Journal No x LIV, Vo x VII, P.P.74) ஏனோ இது நிலைக்கவில்லை.

இந்த நான்காம் தமிழ்ச் சங்கம் அழிந்த வரலாற்றைக் கண்ட தமிழ்த் தேவர் பாண்டித்துரை அவர்கள், அதே மாவட்ட மண்ணில், மதுரை மாநகரில், பெரும் பொருட் செலவில் இன்றும் இயங்கி வரும் ஐந்தாம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கினார்!

தேவரின் அந்தத் தமிழ் ஞானப் புரட்சி, 1901-ஆம் ஆண்டிற்குப் பிறகுள்ள 18 மாதக் காலச் சூழ்நிலையில், காமராஜ் என்ற குழந்தை பிறந்ததினாலோ என்னவோ, அதே குழந்தை தமிழக முதலமைச்சரானதும், கிராமங்கள் தோறும் ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளிகளைத் தோற்றுவித்து ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற சட்டத்தைத் தாய் மொழிப் புரட்சிக்காக இயற்றி வித்திட்டுப் பச்சைத் தமிழர் என்ற புகழையும் பெற்றதல்லவா?

''கொடை மடங்கொண்ட கோமான் திரு. பாஸ்கர சேதுபதி அவர்கள் 1888-ஆம் ஆண்டு முதல் 1903-ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மன்னராக இருந்தவர்.

அறிவையே விவசாயமாகப் புரியும் தமிழ் வேளாளர் அவர்! சென்னையிலே உள்ள சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகர் பெருமானை சைவஞானக் குருவாகக் கொண்டவர்!

## சைவ சித்தாந்த சண்டமாருதம்!

தமிழ்க் கடல் மறைமலையடிகளாரும், அருட்டிருசோமசுந்தர நாயகரைத் தான் தமது சமய ஆசானாக ஏற்றுக் கொண்டவர்! சைவ சித்தாந்த சண்டமாருதம் நாயகர் பெருமான் இயற்பெயர் அரங்கசாமி. 'வைணவக் கடலில் மூழ்கி' சமய ஞான முத்தைப் பெற நினைத்தார்! ஆனால், சைவ சமயமாக் கடலிலே மூழ்கி ஆன்மஞான முத்தை எடுத்து அவர் உலகுக்குப் போதித்தவர்!

அந்த நேரத்தில், வேதாந்த வித்தகர் இராமகிஷ்ண பரமஹம்சரைத் தமது ஆன்மிகஞான போதனைக் குருவாக ஏற்றவர் சுவாமி விவேகானந்தர்! அமெரிக்காவின் சிகாகோ மாநகர் சர்வமத மாநாட்டில் கலந்துரையாடிடும் அழைப்பு அவருக்கு வந்தது.

அந்த அழைப்பை ஏற்ற அருட்டிரு விவேகானந்தர் அவர்கள் அமெரிக்காவிற்குப் போய் திரும்பும் பயணச் செலவுகள் அனைத்தையும், இராமநாதபுரம் மன்னர் சேதுபதி ஏற்று அவரை அனுப்பி வைத்தார்!

மன்னர் உதவியால் சிகாகோ நகர் சென்ற அந்த இளைய சிங்கம், அந்த மாநாட்டிலே அற்புதமாக உரையாற்றி வேதாந்த கேசரி ( The Monk of India) என்ற விருதினைப் பெற்று பாம்பன் துறைமுகத்தை வந்தடைந்தார்.

கப்பலை விட்டுக் கீழே இறங்கும் வித்தகர் விவேகானந்தரைப் பார்த்து, ''தங்கள் வேதாந்தக் கால் இந்திய மண்ணிலே முதன் முதல் படக்கூடாது. என் தலையிலே வைத்து ஆசி கூறுங்கள்'' என்று, மன்னர் சேதுபதி தனது தலையை அவரிடம் நீட்டினார்!

மன்னருக்கு இருந்த நாட்டுப்பற்றும், மதப்பற்றும், அறிவுப்பற்றும் எதைக் கொண்டு அளந்து பார்ப்பதோ... பராபரமே!

## சமயத் தென்றலும் மொழிப் புரட்சியும்!

1937-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரை எதிர்த்து, நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பேசினார்.

அப்போது, ''தமிழ்த் தாயின் தாள் மீது, கால் வைப்போர் தலைமீது கால் வைப்பேன்'' என்று அவர் வீர முழக்கமிட்டார். தாள் மீது கால் வைப்போர் தலைமீது கால் வைப்பேன் என்ற பாரதியார் குரல், எதிர்ப்பிலே தோன்றிய எரிமலைப்புரட்சிக் குரல்! ஆனால், பாஸ்கர சேதுபதியின் ஆன்மீகத் தென்றல் தொனியோ, இந்துமத ஞான நிறைவால் கனிந்த குரல்!

இந்த இரு குரல்களின் ஞானப்பற்றின் இருப்பிடமாகத் தவழ்ந்த தமிழக மண்ணின் தொன்மையை எப்படி ஏற்றிப் போற்றுவதோ?

மன்னரின் அன்பான பண்பால் அவர் நீட்டிய தலையைக் கண்டு அதிர்ச்சியால், உடலும் உயிரும் உள்ளமும் அதிர்ந்து போனார் அடிகளார். அதனால், அரசர் பிரான் தாம் அமர்ந்து செல்லும் இழுவை வண்டியிலே அடிகள் பெருமானை அமரச் செய்து இராமநாதபுரம் வீதிகளிலே எல்லாம் அவ்வண்டியை இழுத்து வலம் வந்தார் என்றால், அறிவுப் புரட்சிக்கு அவர் கொடுத்த அரியணைக்கு எதனை உவமிப்பதோ?

இந்தக் காட்சியை கண்ட ஆண்களும் - பெண்களுமான அவ்வூர் மக்கள். ஓர் அறிவார்ந்த ஞானயோகி ஊர்வலம் வருவதாக அறிந்து, ஆரத்தி எடுத்துப் பொட்டிட்டு வணங்கி வரவேற்றார்கள்.

## அறிவுப் புரட்சி – ஞானப்போர்

அமெரிக்காவையே வென்று வந்த வேதாந்த ஆன்மிக அறிவின் ஞானத்தோடு, தமது வேதாந்த - சித்தாந்த ஞானப் பழமான ஆசான் நாயகரை வாதிடச் செய்து, ஞானப் புரட்சியை ஞாலத்தின் உயர்விற்கு வித்தாக்க விரும்பினார் சேதுபதி!

சென்னையிலே இன்று விவேகானந்தர் இல்லம் என்று போற்றப்படும் இடம் அன்று ராமநாதபுரம். மன்னர் இடம். இந்த இடத்தில் விவேகானந்தரை அன்று மன்னர் தங்கவைத்தார். அன்று வெள்ளையன் காலத்திலே ஐஸ் கட்டிகளை உற்பத்தியாக்கிடும் ஐஸ் அவுஸ் என்ற பெயரோடு அது அமைந்திருந்தது!

விவேகானந்தர் அங்கே தங்கியதால், அந்த இடம் இன்று விவேகாந்தர் இல்லமாக அழைக்கப்படுகின்றது!

மன்னர் சேதுபதி அவர்களுக்கு மற்றோர் மாளிகையும் சென்னையில் உண்டு! அது ஆங்கிலேயர் நிர்வாகத்திற்குள் வந்தபோது பெருவிருந்து படைக்கும் கூடாரமாக (BAN QUETING HALL) மாறிற்று.

அந்த மாளிகையிலேதான், மன்னர் சேதுபதி தனது ஐம்பது வயதுடைய ஞானாசிரியரான நாயகருக்கு இருபத்தெட்டே வயதுடைய இளம் வேதாந்த அரிமாவை அறிமுகப்படுத்தி, இருவரையும் சைவசித்தாந்த வாதப்போருக்கு ஒப்பவைத்தார்!

சோமசுந்தர நாயகர் மாநகராட்சி எழுத்தர் பணியிலே இருந்தார். ஒன்பதாம் வகுப்பு வரை படித்தார்! ஆங்கிலத்தில் பேசினால் புரிந்தவர்; ஆனால் விவேகானந்தர் நாவைப் போல் தத்துவத் தர்க்கங்களிலான ஆங்கில வித்தகம் புரியாது.

அதனால், மன்னர் சேதுபதி அவர்களே, வித்தகர் விவேகானந்தரின் தத்துவ உரை வீச்சுக்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்க்கும் பொறுப்பை ஏற்றார்.

அவை கூடியது. அறிவு சான்ற அரிமாக்கள் கம்பீரமாக அமர்ந்தன! காண்போர் கூட்டமோ அறிவுக்கு அழகூட்டும் அறிவாகக் காட்சி தந்தது!

ஆன்மீக உரையை முதலில் தொடுப்பது யார் என்ற போது விவேகானந்தர் பெருமான், 'நாயகர் தம்மின் மூத்தவர்! அவர் பேசுவதுதான் பொருத்தம்' என்றார்.

சைவ சித்தாந்த சண்டமாருதம் எழுந்தது. ''நான் மூன்று வினாக்களை மட்டுமே விடுப்பேன்! அதற்கு நம் இளம் அரிமா

விடை கொடுத்தால், வாகைப்பூ அவருக்கே சூட்டி மகிழ்வேன்'' என்றார்.

எனது முதல் வினா, வேதம் அநாதியா? இறைவன் அநாதியா? - என்றார்!

வித்தகர் விவேகானந்தர், வேதம் ஆதி என்பதற்கான வடமொழிச் சான்றுகளை எல்லாம் ஆரவாரமான ஆங்கில அலங்கார அழகுகளோடு வாரி வாரி வீசினார்! அவையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அமைதி!

நாயகர் பெருமான் இடைமறித்தார்! 'வேதம்தான் ஆதி' என்றால், இறைவன் அநாதியல்லனோ! இறைவன் தானே வேதத்தை அருளிச் செய்தவர் என்று கூறப்பட்டுள்ளது! எனில், வேதம் அநாதி என்பது முரணாயிற்றே என்றார்!

வேதாந்த கேசரியான விவேகானந்தர், மீண்டும் மீண்டும் வடமொழி வேதாந்தச்சான்றுகளை எளிதாக எடுத்து வாதமிட்டார்!

இடையிடையே சிறுசிறு சினம் கலந்த முகத்தோற்றமும் - தொய்வும் காணப்பட்டன! இறுதியாக, ''வேதம் அநாதி! - இறைவனும் அநாதி'' என்றார்.

சண்டமாருத நாயகர் பெருமான் தன் குரலைத் தென்றலெனப் படரவிட்டு, சான்றுகள் எல்லாம் தேவையற்றவை! வேதமா? இறைவனா? அநாதி யாது? இரண்டில் ஒன்றிற்கு விடை கூறும் அப்பனே!'' என்றார்.

விடை விளக்க இயலாத நிலையில் விவேகானந்தப் பெருமான், சோர்ந்து அமர்ந்தார். அருட்டிரு நாயகர் அவர்கள் மீண்டும்; பொருள் அதாவது வஸ்து - ஒன்றா - இரண்டா!'' என்ற கணையைத் தொடுத்தார். 'ஒன்றுதான்' என்பதற்கான, காரண காரியங்களை அவையிலே ஒழுங்குபடுத்தி எடுத்து விளக்கினார் விவேகானந்தர்.

நாயகர் இடைமறித்தார்! ''நீங்கள் கூறுவது போல், கடவுள் ஒன்றுதான் என்றால், உலகும் - உயிரும் ஆய பொருள்கள் உளவே!'' என்றார்!

முதல் வினாவிலேயே சோர்ந்து போன விவேகானந்தர், இரண்டாவது வினாவிற்கும் விடையிறுக்க இயலாமல், பற்பல வாதங்களை வைத்தார்! பொருந்துமாறு ஒன்றும் அமையாமையால், திக்கித் திணறி அவர் மீண்டும் தனது இருக்கையில் இருந்தார்.

நாயகர் பெருமான் மூன்றாவது வினாவைத் தொடுத்தபோது, ''கடவுள் பெரிதா? மாயை பெரிதா?'' என்றார் - சிறிது நாட்டமுடன்!

அதற்கும், விவேகானந்தர் அவர்களால் தக்க விடையளிக்க இயலாது போயிற்று. ஆனால், அந்த மூன்று வினாக்களுக்கும் அவரையே விடையளிக்குமாறு விவேகானந்தர் எழுந்து கேட்டுக் கொண்டார்!

சைவ சித்தாந்த சண்ட மாருதப் பெருமான் சோம சுந்தர நாயகர் அவர்கள், தமிழ் நாட்டின் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி, தக்கவாறு விடைகளை விளக்கி அமர்ந்தார்!

இந்த வேதாந்த - சித்தாந்தப் போர் வாதாட்டப் பரிசு என்ன தெரியுமா? வெற்றி பெறுபவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களா னாலும், அந்த அவையிலே பொன்னாடை ஒன்று போர்த்திப் பாராட்டப் படுவார்கள்!

## ஞாலம் போற்றும் ஞானப் பரிசுகள்!

அவை நடுவே, ஐயாயிரம் ரூபாயுள்ள பொற்கிழி ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது! அவரவர் சித்தாந்தத் தின் பெயரால் சண்ட மாருதம் என்ற விருதும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வெற்றி பெற்ற ஞானிகளின் இருகைகளிலும், சுண்டு விரல் பருமனில் வளையமாக, பூ வேலைப்பாடுகளுடன், இரு முனைகளும் ஒன்று சேரும் முகப்புகளில் மணிகள் சில அழுத்தப்பட்டுக் கழுத்து வரையிலுள்ள சற்றுப் பெரிதான தலைகளுடன் கூடிய, இரண்டு சிங்கமுகயாளிகள் ஒன்றை ஒன்று தொடுவதாகத் தோன்றுமாறு தங்கத்தால் செய்யப்பட்ட தோடாக்கள் பூட்டப்படும். அந்தச் சிங்கமுகத் தலைகள் மேலே மணிமுடி ஒன்று தாங்குவது போல் இருக்கும்! எல்லாம் தங்கத்தாலானவையே!

இந்தப் பரிசை மன்னர் சேதுபதி நாயகர் பெருமான் கைகளிலே பூட்டி, பொன்னாடையைப் போர்த்தி, பொற்கிழியும் வழங்கி, சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோம சுந்தர நாயகர் என்று அழைத்துப் பாராட்டினார்! ஒரே கையொலி மயமானது அவை!

விழாவின் இறுதியிலே பேசிய விவேகானந்தர் ''நாயகர் பேசிய சித்தாந்த நெறிகளை இதுவரை நாம் அறிந்ததில்லை. காரணம், வடநாட்டில் இந்தச் சித்தாந்த விவரங்களை பற்றி ஏதுமில்லை!''

சிவ சித்தாந்தத்தின் உண்மைகள் அறிவியலுக்கும் பகுத்தறிவிற்கும் பொருத்தமாக அமைந்துள்ளன. இவற்றை நான்

முன்பே அறிந்திருந்தால், அமெரிக்காவிலே சிவநெறியினை எடுத்துக் கூறியிருப்பேன். இனி அமெரிக்கா சென்றால் சிவ சித்தாந்தாத்தையே பரப்புவேன்! அதை ஆங்கிலத்திலே தாருங்கள்.'' என்றார்!

## சிவஞான போதத்தை விவேகானந்தர் ஏற்றார்!

ஆந்திர மாநிலத்திலே சித்தூர் மாவட்ட மாஜிஸ்திரேட்டாக இருந்த ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள், சிவஞான போத நூலை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து அனுப்பினார்.

நாயகர் வினாக்களுக்கு விவேகானந்தர் விடையளிக்க இயலாமல் திகைத்ததற்குக் காரணம், அவர் அறிவினுடைய ஆற்றலின் மாட்சிக் குறைவல்ல!

அடிகள் பயின்றது இந்திய நாட்டில் பெருவழக்காகி உள்ள அத்வைத சித்ததாந்தமே! அதனை அருளியவர் ஆதி சங்கரர்.

கேவலாத்துவிதம் சித்தாந்தம் என்றால், கேவலம் = சிறந்த அத்துவிதம் = இரண்டில்லாதது; அதாவது ஒன்று என்று பொருள்!

கடவுள் உலகத்தோடும், உயிர்களோடும் இரண்டாக இல்லாமல் ஒன்றாக ஒன்றியிருப்பது என்பதே. இந்த சித்தாந்தத்தின்படி, உயிர்களும் உலகமும் இல்லை அல்லவா!

பொருள் ஒன்றே, அது ஆன்மா அல்லது கடவுள். ஆன்மா ஒன்றே உண்டு! உலகமும் உயிர்களும் வெறுந்தோற்றங்களே! வெவ்வேறு ஆன்மாக்கள் உண்டு என்று பேசுவது அறியாமை!

மெய்யறிவினால் ஆராய்ந்து பார்த்தால் அவை பொய்த் தோற்றங்கள்! உண்மையில் உயிர்களும் - உலகமுமில்லை!

தமிழ்நாட்டில் தவிர, பாரத நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சங்கரருடைய இந்தக் கேவலாத்துவைதமே பரவியுள்ளது. அங்குள்ளோர் அனைவரும் அந்தச் சித்தாந்தத்தை தவிர, தமிழகத்தின் சைவ சித்தாந்தத்தை அறியப் பெரும்பாலும் வழியில்லை.

நாயகர், சைவம், வைணவம், சமணம், கிறித்தவம், பௌத்தம், இஸ்லாமியம், வேதாந்தம், சித்தாந்தம் அனைத்தும் அறிந்த ஞான மேதை!

அறிவுப் புரட்சியைத் தமிழகத்திலே எழுப்பி, சிறந்த அறிவுணர்வுகளை உலகுக்கு உணர்த்திய ஞான சூரியனான சோம சுந்தர நாயகர் அவர்கள் 1901-ஆம் ஆண்டு இறுதியிலே மறைந்தார்!

அமெரிக்கா சென்று இந்திய இறையியலையும் - அதன் சிறப்புக்களையும் அவனிக்கெலாம் பரப்பி ஞான அறிவுப் புரட்சி செய்தவர் விவேகானந்தர்.

அந்த ஞானநாவலர் தமிழ்நாட்டின் சித்தாந்தத் தந்தையான நாயகர் பிரானிடம் வாதப்போராடி சிவ சித்தாந்தமே சிறந்தது எனச் சான்று கூறி அறிவுப் புரட்சியும், கல்விப் புரட்சியும் செய்தார். அவர் 1902-ஆம் ஆண்ட மறைந்தார்!

உலக மதங்களின் ஞானச் சாற்றைப் பருகிய விவேகானந்தர் என்ற ஞானப்பறவை, சைவ சித்தாந்தமெனும் போதிமரத்தடியிலே ஞானம் பெற்றிட, எல்லா ஞானசிரம ஏற்பாடுகளையும் செய்து தந்து, அறிவுப் புரட்சியை, அறிவு வளர்ச்சியை, கல்விப் புதுமையைத் தோற்றுவித்த மன்னர் சேதுபதியின் தமிழ்த் தொண்டு, நாட்டுப்பற்று, தமிழபிமானம், மனிதநேய மாண்பு அவர் இறந்த 1903-ஆம் ஆண்டுடன் மறைந்தது!

## ஞானச் சாரலில் ஞானப் பிறப்பு!

இந்த மூன்று ஞான மகான்களின் கல்வி உணர்ச்சிகளின் வித்துக்களாக, அறிவுப் புரட்சியின் மறுமலர்ச்சியாக 1901, 1902, 1903-ஆம் ஆண்டுகள், கல்விப் புரட்சியில் சிறந்து அறிவுக் கொடியை அகிலத்துள் பறக்க வைத்துக் கொண்டிருந்த ஆண்டுகளாகத் திகழ்ந்தன!

இந்த மூன்றாண்டுகளின் ஞானச்சூழல் பின்னணியில்தான் காமராஜர் என்ற குழந்தை தமிழ் மண்ணில் தோன்றியது.

# 15. பாரதியார் பாடலைப் பாடி வாளேந்தும் போராட்டம்!

இன்றைய விருதுநகர் என்ற நகரம், அன்று விருதுபட்டி என்ற பேரூராக விளங்கியது. விருதுபட்டி சிவஞான யோகிகள் என்ற பெரும் புலவர் அங்கு வாழ்ந்தார். பிறகு அவர் கோவில்பட்டியிலே சென்று தங்கினார்.

அவர்தான் தந்தை பெரியாருக்கு முன்பாகவே 1900-ஆம் ஆண்டிலேயே திராவிடர் கழகம், பக்திவிளை கழகம் என்ற இரு கழகங்களை நடத்தியவர்; வடமொழி உபநிடதம் ஒன்றை அகவற்பாவில் மொழி பெயர்த்தவர்; தமிழ் - தனி முதல்மொழி என்று உலகுக்கு நிலை நாட்டியவர் இந்த விருதுபட்டி வித்தகரான சிவஞான யோகிகள்!

இத்தகைய விருதுபட்டியிலே உள்ள சுலோசன நாடார் தெருவில், நாட்டாண்மைக்காரராக இருந்த சுலோசன நாடார் வீடு இருந்தது.

அந்த மூன்றாண்டுகளின் முனைப்புக்கானச் சூழ்நிலையின் ஞானச் சாரல்கள் சாயல்களிலே முகிழ்த்ததுதான் காமராஜ் என்ற ஞானக்குழந்தை! அந்தக் காமராஜ் என்ற சிசு, பிற்காலத்தில் தமிழ் நாட்டுக் கல்வியின் கற்பகத் தருவாக விளங்கப் போவது - அதற்குத் தெரியுமா என்ன?

இருந்தாலும், காமராஜ் பிறந்த காலத்தின் கோலம்: தமிழகத்திலே மட்டுமல்ல, அகில உலகுக்கும் ஓர் அறிவுப் புரட்சியை, ஞானப்புரட்சியை கல்விப் புரட்சியை உருவாக்கிய கோலமாகத் திகழ்ந்தது! அந்தக் கோலாகலக் காலத்திலே தோன்றியவர் தலைவர் காமராஜ் என்பதை காலம் போகப்போகக் கண்ணாடியாக நின்று எதிரொலித்தபடியே இருந்ததைக் காண்போம்!

## அருட்பா மருட்பா போர்!

காமராஜ் என்ற குழந்தை பிறந்த அதே 1903-ஆம் ஆண்டிலே தான், அருட்பிரகாச வள்ளல் பெருமானின் அருட்பா பாடல்களே

என்ற அருட்பா - மருட்பா போரின் இரண்டாவது கட்ட அருட்புரட்சிப் போர் நடைபெற்றது!

சைவ சமய ஆசாரியர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்ற நான்கு அருட்செல்வர்கள் பாடல்கள் தாம் இறையருள் பெற்ற அருட்பாக்கள்! இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் அருட்பாடல்கள் அல்ல என்பது அருட்பா குழுவினரின் வழக்கு!

வள்ளல் பெருமான் பாடல்கள் அருட்பாடல்கள்தாம்! மருளால் பாடப்பட்ட பாடல்களல்ல! என்பது மற்றைக் குழுவினரின் வாதம்!

அருட்பா குழுவின் தலைவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள். எதிர் அணிக்கு வள்ளல் பெருமானே தலைவர்! இது முதற்கட்டப்போர்! தமிழகம் முழுவதும் இதை ஓர் இலக்கியப் போராகவே இரு அணியினரும் நடத்தினார்கள்!

வள்ளல் பெருமான் மீது நாவலர் பெருமான்கடலூர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தார்! இந்த வழக்கை விசாரித்த நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து, வள்ளல் பெருமான் பாடல்கள் அருட்பாடல்தான் என்பதை உணர்த்தினார்.

நாவலர் பெருமான் அத்துடன் தனது எதிர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டார்! அவருக்குப் பிறகு, காமராஜர் பிறந்த அதே 1903-ஆம் ஆண்டில், நா. கதிரைவேற்பிள்ளைமருட்பா அணிக்குத் தலைவரானார்! திரு.வி.க. அவர்கள் தனது ஆசான் அணிக்கு உதவியாளராக இருந்தார்.

அருட்பா அணிக்கு தமிழ்க்கடல் மறைமலையடிகளாரும், சதாவதானி செய்குதம்பிப் பாவலரும் இணைந்து அருட்பா போர்க்களம் கண்டார்கள்!

இந்தப் போர் 1903-ஆம்ஆண்டு முழுவதும் நடைபெற்றது. இறுதியிலே அறிவுப்புரட்சியை நிலை நாட்டினார்கள் அடிகளாரும் - பாவலரும் ஆகிய அருட்பா அணியினர்.

அந்தக் காலகட்டத்தில்தான், தமிழக முழுவதுமுள்ள அறிஞர் அணிகளுக்கு இடையே இலக்கிய புரட்சி, அறிவுப் புரட்சி நடைபெற்ற நேரத்திலேதான், எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தில் ஏழ்மை ஒழிப்புப் புரட்சிக்கும், கல்விப் புரட்சிக்கும், ஏற்றத் தாழ்வுகளைச் சமன்படுத்தும் அறப்புரட்சிக்கும் வித்திட்டுழைக்கும் காமராஜ் என்ற குழந்தை பிறப்பெடுத்தது.

காமராஜ் என்ற குழந்தை தமிழ் மண்ணிலே தவழ்ந்தபோது, தமிழ்நாட்டிலே ஆங்கிலேய எதிர்ப்புப் புரட்சி, அடிமை எதிர்ப்புப்

புரட்சி, தமிழ்ஞானப் புரட்சி, இலக்கியப் புரட்சி, வேதாந்த சித்தாந்தப் புரட்சி, கல்விப் புரட்சி, சமயப் புரட்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டமாகக் காட்சியளித்தன!

## காமராஜ் பிறந்தார்!

அந்த வீட்டில்தான் 1903-ஆம் ஆண்ட ஜூலை மாதம் 15ஆம் நாள் காமராஜ் பிறந்தார். தந்தை பெயர் குமாரசாமி; தாயார் சிவகாமி அம்மாள். பிறந்த குழந்தைக்கு முதன் முதலாகக் காமாட்சி என்று பெயர் சூட்டினார், பாட்டி பார்வதி அம்மாள்.

காமாட்சி என்று அவருக்குப் பெயரிட்டிருந்தாலும், அவரை எல்லோரும் 'ராஜா ராஜா' என்றே அன்போடு அழைப்பது வழக்கமாயிற்று! இறைவன் பெயராலும் தன் மகன் அழைக்கப்படல் வேண்டும் என்று எண்ணிய அவரது தந்தையார், காமாட்சி ராஜா என்ற இரண்டு பெயர்களையும் இணைத்துக் காமராஜா என்று அழைத்தார்!

தந்தையார் ஆசைக்கேற்றவாறு காமராஜர் என்ற பெயரே அவருக்கு இறுதிவரை நிலைத்துவிட்டது. நாளடைவில், தந்தையார் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அவரைக் காமராஜ் என்றே அழைத்தார்கள். அவருக்குப் பிறகு பிறந்தபெண் குழந்தைக்கு நாகம்மாள் என்று பெயர் சூட்டினார்கள்.

## ஏனாதி சிறப்பு என்ன?

அதற்கு மேலுள்ள கல்வியைக் கற்க, சிறுவன் காமராஜ் ஏனாதி நாயனார் வித்தியாசாலா என்ற பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் ஏனாதி நாயனார். சோழநாட்டைச் சேர்ந்த எயின் முதூர் என்ற ஊரைச் சேர்ந்தவர் அவர். சோழமன்னர் படைகளுக்கு வாட் பயிற்சி கற்றுக் கொடுக்கும் போர்ப்படை ஆசிரியராகப் பணிபுரிந்த போர் வீரர் ஏனாதி நாயனார்.

வீரத்தை இளம் வயதிலேயே கற்றுத் தரும் ஒரு வீரத் திருமகன் பெயரோடு விளங்கிய பள்ளியிலே சேர்ந்து கற்ற கல்வியினாலோ என்னவோ, குழந்தை காமராஜ், வாலிபன் காமராஜாகி அரசியலிலே அடியெடுத்து வைத்துப் புகழீட்டி வந்த போது, அவர் வாளேந்தும் போராட்டத்திற்கே தலைமை வகித்து நடந்தார்!

## வாளேந்திய போராட்டம்!

காங்கிரஸ் போராட்ட வீரர்கள் வாளேந்திச் செல்வதென்றால், ஆங்கிலேயர் ஆட்சியாளரிடம் முன்கூட்டியே அதற்கான அனுமதி பெற வேண்டும்! இது அக்காலக் காவல்துறைச் சட்டம்!

எவரும் ஆறு அங்குலம் நீளத்திற்கு மேல் கத்தியை வைத்திருக்கக் கூடாது! அதை மீறி வைத்திருந்தால் சட்டப்படி நடவடிக்கை! தண்டணை; அதனால் ஆறு அங்குலத்திற்கு உட்பட்ட கத்தியை மட்டுமே பொதுமக்கள் வைத்திருக்கச் சட்டம் அனுமதித்தது.

அந்தச் சட்டத்தை மீற வேண்டும் என்று அவாரி என்பார் வடநாட்டிலே உள்ள நாகபுரி என்ற நகரிலிருக்கும் காவல்துறையை எதிர்த்துஅதே காவல் நிலையம் முன்பு போராட்டம் ஒன்றை நடத்த ஆரம்பித்தார்! அந்தப் போராட்டத்திற்கு வாள் ஏந்தும் போராட்டம் என்று பெயர். அது மதுரை மாநகரிலேயும் எதிரொலித்தது.

ஐந்து நீண்ட வாட்களைக் காங்கிரஸ் கட்சிப் போராட்ட வீரர்களுக்குத் தயார் செய்து கொடுத்து, வாள் போராட்டக் கிளர்ச்சியை நடத்தினார் காமராஜ். விருதுநகரிலே இருந்த காங்கிரஸ் தொண்டர்கள், அவரவர் கைகளிலே ஏந்திய வாட்களோடும், கழுத்திலே சூட்டப்பட்ட மலர் மாலைகளுமாக, மதுரை மாநகர் முக்கிய வீதிகளிலே எல்லாம் ஊர்வலமாகப் புறப்பட்டார்கள்!

அப்போது தொண்டர்களிலே சிலர், சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்குமோ என்று தயங்கினார்கள்! காரணம், அவரவர் குடும்பச் சூழ்நிலைகள் தான். வாள் ஏந்திய ஊர்வலத்தில் கலந்து கொள்ளாமல் தயங்கி நின்ற வீரர்களைக் கண்ட காமராஜ் சிரித்தார்! எந்தெந்த போராட்ட வீரர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர் வாட்களைக் கொண்டு வந்தாரோ அவையெல்லாம் அவருடைய கைகளிலேயே இருந்து பளபளத்தன.

## காமராஜ் பாடிய பாரதி பாடல்!

கோழைகளாக நின்றுகொண்டிருந்த அறப்போர் வாலிபர்களைக் கண்டு, வீரம் உந்தி விளங்கிய -உணர்ச்சி பொங்கியக் குரலோடு

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

என்ற பாரதியாரின் பாடலை, வீதியெலாம் 'பாடிப்பாடி' காமராஜ்

அதிர வைத்து விட்டார்! பொது மக்கள் பெருங்கூட்டமாய் அவர் பின்னே பாடிச் சென்றனர்.

## ஆசு கவி காளமேகம் பாடிய காட்சி

கவி காளமேகம் ஓர் ஆசு கவி. நினைத்த நேரத்தில் நினைத்த பொருள் பற்றி நினைத்த இடத்திலேயே பாடக் கூடிய ஆற்றல் பெற்ற கன்னற்றமிழ்க் கவிஞன்.

திருக்கண்ணபுரம் என்ற திருவூருக்கு ஒருநாள் வந்தார் கவிஞர். திருமால் கோவிலுக்குள் சென்று வணங்க அவர் நினைத்தார். ஆனால், அங்கே அக் கவிஞரைச் சைவ - வைணவப் போராட்டக் கண்கொண்டு பார்த்தார்கள்.

காளமேகக் கவிஞன் வைணவ மடப் பள்ளியில் பணியாற்றியவர்; பிறகு சைவரானவர், சைவ சித்தாந்த சண்ட மாருத சோம சுந்தர நாயகரைப் போல. சோம சுந்தர நாயகருக்கு அவரது பெற்றோர்கள் அரங்கநாதன் என்று பெயரிட்டார்கள்.

வைணவ வேதாந்தக் கடலிலே மூழ்கி மூழ்கிக் களைத்துப் போன நாயகர், பிறகு சைவராக மாறிச் சைவ சித்தாந்தச் சண்ட மாருதமானார். அவர் பௌத்தம், சமணம், இஸ்லாம், கிறித்துவம் மத நெறிகளை எல்லாம் நன்கு ஆய்ந்து தர்க்க வாதம் புரியும் ஆற்றலாளர்; அனைத்திலும் தேர்ச்சி பெற்ற மேதை. அந்த அரங்கநாத நாயகர்தான், பிறகு சிவதீக்கை பெற்று, சோமசுந்தர நாயகரானார்! சைவ மதநெறிகளில் தக்காரும் மிக்காருமின்றிச் சண்ட மாருதமாக நடமாடினார்!

அவரைப் போல், ஆசுகவி காளமேகம் அவர்களும், முதலில் வைணவ மதப்பற்றாளராக விளங்கிய பின் பிறகு, சைவ சித்தாந்தியாக மாறினார். அதனால் திருக்கண்ணபுரத்து விஷ்ணு கோயிலுக்குள் அவர் நுழைவதை எதிர்த்து சிலர் போர்க்கொடி ஏந்தினார்கள்!

உடனே காளமேகம், நான் சிவனடியார்தான்! ஆனால் திருமாலையும் வணங்குவதில் என்ன தவறு? என்று கோவிலுக்குள் நுழைந்தார்.

கோயில் புனிதம் கெடவிட மாட்டோம் என்று மறித்து, கோயில் கதவுகளை இழுத்துச் சாத்தி விட்டார்கள் வேதியர்களான அந் திருமாலடியார்கள்! மனம் நொந்து போனார் காளமேகம்!

உடனே, பக்தர்கள் கூட்டத்திலிருந்த ஓர் வைணவர், ஏங்காணும்! உங்கள் சிவபெருமான் சிரித்தால் வாயிலிருந்து

வருவது தீ! அவர் பக்தரான நீர் பாடினால் வருவதும் தீயே! உம் வாயிலிருந்து வேறென்ன வரும்? நீர், பெரிய வரகவி என்ற எண்ணமோ? அப்படியென்றால், பாடுவதற்குரிய பொருள் ஒன்றைத் தருகிறேன். அதை வைத்துப் பாடுவீரா? ஈ ஏற மலை குலுங்கியதாகப் பாடும் - என்றார் அந்த வைணவ வேதியர்!

ஈ ஏற மலை குலுங்குமோ? அது எப்படி? என்று எண்ணிக் கொண்டே காளமேகத்தைப் பார்த்தது பக்தர் கூட்டம். காளமேகக் கவிஞர், கம்பீரமாக உடனே பாடினார். அப்பாடல் இது;

''வாரணங்கள் எட்டும் மகமேரு வுங்கடலும், தாரணியும் எல்லாம்சலித்தனவால் - நாராணனைப் பண்வாயிடைச்சி பருமத்தி னால் அடித்த, புண்வாயில் ஈமொய்த்த போது.''

பாடலைக் கேட்டவர்கள் கைதட்டினார்கள்! கூட்டமே வியப்பால் ஆரவாரம் செய்தது! பாடலுக்குரிய பொருள் என்ன தெரியுமா? மண்ணை உண்ட கண்ணன், யசோதைக்கு வாய் திறந்து காட்டுகிறான். அங்கே மண் தெரியவில்லை. ஈரேழு பதினான்கு உலகமும் வாயில் தெரிந்தது. உலகமே தெரிந்தது.

கடல்கள் தெரிந்தன! எண் திசைகளையும் காத்து நின்ற திக்கு யானைகள் தெரிந்தன. மேரு மலை தெரிந்தது. விந்தியமலை, பொதியமலை இன்னும் எத்தனையோ மலைகள் தெரிந்தன.

அதிர்ந்து போய் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் யசோதை! இந்த நேரத்தில் சந்தர்ப்பம் தெரியாமல் ஓர் ஈ வந்து குறுக்கிடுகிறது. கண்ணன் வாயிலே உள்ள ஒரு புண்ணிலே போய் உட்கார்ந்தது. எப்படி ஏற்பட்டது அந்தப்புண்?

கண்ணன் வெண்ணையைத் திருடித் தின்னும் போது இடைச்சியர் பெரிய மத்தைக் கொண்டு அடித்ததால் ஏற்பட்ட புண் அது. அதிலே போய் உட்கார்ந்தது அந்த ஈ.

குழந்தை கண்ணன் இருகைகளையும் நிலத்தில் ஊன்றி, வாயை அங்காந்து அன்னை யசோதாவிற்கு அந்த அற்புதக் காட்சியைக் காட்டிக் கொண்டிருந்த போது, அந்த ஈ சென்று புண்மேலே அமர்ந்து நெருடியது.

ஈயை ஓட்ட, தலையை மேலும் கீழுமாகவும், பக்க வாட்டாகவும் அசைக்கிறான் கண்ணன். குழந்தையின் வாயிலே உள்ள உலகங்கள் எல்லாம் ஆடுகின்றன. கடல்கள் கொந்தளிக்கின்றன! மலைகள் குலுங்குகின்றன! இவை யெல்லாம் எதனால் ஏற்பட்டன?

ஓர் ஈயினால். ஈ ஒன்று கண்ணனது வாயில் ஊர, ஊர, மலைகளும் கடல்களும் உலகங்களும் குலுங்கிக் குலுங்கி ஆடுகின்றன!

ஆசுகவி காளமேகம் ஈ ஏற மலை குலுங்க என்று பாடிய பாடலின் குழந்தை கண்ணன் காட்சியைப் போல, காமராஜ் என்ற விடுதலைப் போராட்ட வீரர், பாரதியார் பாடலை மதுரையிலே கூடியிருந்த பொதுமக்கள் முன்பு பாடி ஆடிக் கொதித்து, குமுறி வீராவேசமாகக் காட்சியளித்தார்.

அப்போது அவருடைய இடுப்பைச் சுற்றிக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த வாட்கள் பளபளத்தன; ஒன்றோடொன்று அவர் ஆடியபோது மோதிக் கொண்டன; கண கணவென்ற ஓசையோடு ஒலித்தன. வாட்களும் அவரோடு ஆடின. பாடின, எகிறிக் குதித்தன, எம்பின, குலுங்கின, உலுங்கி உராய்ந்தன.

பாண்டிய மன்னனது தளபதி ஒருவன் போர் முழக்க மிடும்போது, புறப்பாட்டுப் பறை ஒலிப்பது போல; அந்த வாட்கள் காமராஜர் உணர்ச்சிக்கு மீறி ஓசையிட்டு ஒலித்த காட்சியைக் கூடியுள்ள மக்கள் கண்டு வீராவேசம் பெற்றார்கள்.

வாலிபர் காமராஜ் இடுப்பிலே கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த வாட்கள், அவர் உயரே எழும்பி, எகிறி எகிறி கைகளைத் தூக்கித் தூக்கி குதித்து குதித்து குதித்து - உடலை உலுக்கி உலுக்கிப் பாடியபோது, காமராஜ் இடுப்பிலே கட்டியிருந்த வாட்கள் ஒன்றோடொன்று மோதி, ஓசையை எழுப்பியபடியே ஊர்வலம் வந்தன!

பொதுமக்கள் இந்தக் காட்சியைக் கண்டுகளித்துப் பாடியபடியே அவரைப் பின் தொடர்ந்து வந்தார்கள்! சென்னை மாகாண சட்ட அமைச்சராக அப்போதிருந்த சர்.சி.பி. இராமசாமி ஐயர், மலபார் தவிர, மற்ற இடங்களிலே எல்லாம் முன் உத்தரவு ஏதும் பெறாமலே வாளேந்திச் செல்லலாம் என்று அறிவித்தார்!

## வாளோச்சலில் காந்தீயம்!

அவ்வாறு ஐயர் அறிவித்ததால், வாள் போராட்டத்தையும், ஊர்வலத்தையும் காமராஜரால் தொடர்ந்து நடைபெறாதவாறு தடுத்துவிட்டார். பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் அவர்களால் பாடப்பட்ட ஏனாதிநாயனார், வஞ்சனையால் செருக்கேறிய தனது எதிரியைக் கொன்றிடக் கருதி வாளை ஓச்ச ஓங்கினார்!

ஆனால், தளபதி காமராஜ் அவர்கள், காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையை நெஞ்சிலே ஏந்தியவராதலால், வெள்ளையனான எதிரி மீது வாளோச்சாமல், தமிழ் இனத்தின் வீரப் பண்பை, அன்றைய தமிழர் அடிமை நிலைமை ஏளனம் புரிகின்ற பாடலை வீரமாகப் பாடிப்பாடி, தனது உணர்ச்சிக்குரிய திருப்புமுனையைத் திசை திருப்பி விட்டார்! அமைதி பெற்றார்!

அந்த ஏனாதி நாயனார் பள்ளியிலே சேர்ந்த காமராஜ், தமிழில் எழுதப் படிக்க மட்டுமே கல்வி கற்கும் நிலை பெற்றார்!

## சத்திரிய வித்தியா சாலா!

அதன்பின் சத்திரிய வித்யாசாலா என்ற உயர்நிலைப் பள்ளியில் ஏழாவது வகுப்பு வரைப் படித்தார்! அந்த நேரத்திலிருந்து ஆங்கிலக் கல்வி பயிலும் தகுதிக்கேற்ப ஆங்கிலமும் கற்றார்! அந்த வித்தியாசாலாப் பள்ளி அருகே உள்ளது, பிடி அரிசிப் பள்ளிக்கூடம் என்ற ஒரு பள்ளி. இவ்வாறு இது பெயர் பெற்ற காரணமே விசித்திரமானது!

விருதுநகரில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும், நாள் தோறும் ஒவ்வொரு பிடி அரிசியை அந்த பள்ளிக்கு இலவசமாக வழங்கியதால், அந்தப் பள்ளி அப்பெயரைப் பெற்றுள்ளது.

இந்தப் பள்ளியில், 1888ஆம் ஆண்டு முதல், வெள்ளையராட்சி இலவசக் கல்வியை வழங்கி இருக்கிறது. அத்துடன் மகிமை மூலமாகப் பண வசூல் செய்தும் அப்பளியை நடத்தினார்கள் விருதுநகர் மக்கள்! மகிமை என்பது அவ்வூர் வணிகர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தொகையை ஒரு சங்கத்தில் சேர்ப்பது. அப்பணம் பின்னர் தருமமாகத் தக்கவருக்கு வழங்கப்படும். இன்றும் இந்த மகிமை வசூல் நெல்லை மாவட்டத்தினரிடம் உள்ளது.

## மதிய உணவுக்கு முன்னோடிப் பள்ளி!

காமராஜ் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சரானதும், தமிழகம் முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இலவச கல்வித் திட்டத்தையும், இலவச உணவுத் திட்டத்தையும் கொண்டு வந்திட, அவர் படித்த சத்திரிய வித்தியாசாலா பள்ளிதான் முன்னோடி, உதாரணமாக அமைந்தது!

பிடியரிசிப் பள்ளிக்கூடத்திலே அவர் கல்வி பெற்றிடச் சேர்ந்த முதலாண்டிலே ஒரு நாள், காமராஜ் அவர்களின் தந்தையார் குமாரசாமியார் தலைவலியாலே துடித்தார்! மறுநாள் அவர் மறைந்து விட்டார்!

அவர் காலமானது, காமராஜின் தாயார் சிவகாமி அம்மையாரை வேதனைக் கடலிலே தள்ளியது. தந்தையை இழந்த காமராஜருக்கு குடும்ப பாரத்தை எண்ணி என்ன செய்வதென்ற திகைப்பு நிலையை ஏற்படுத்தியது. இருதலைக் கொள்ளி எறும்பு போலானார்! இளம் வயதல்லவா? வேலைக்கு போவதா, படிப்பதா?

இந்தச் சோகம் சூழ்ந்த நிலையில், அவரது தாய் மாமன் திரு. கருப்பையா நாடார் ஆறுதலும் - தேறுதலும் கூறி, அக் குடும்பத்திற்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார்.

தந்தை காலமான பின்பு, சிறுவர் காமராஜ், இளமையில் வறுமையால் உருவான பல சோதனைகளுக்கும் - நெருக்கடிகளுக்கும் ஆட்பட்டார்! அவற்றை எல்லாம் தனது மனோ தைரியத்தால், எதிர் நீச்சல் போட்டே எதிர்த்துச் சமாளித்துப் பழகிய நிலை, அவருக்குச் சிறு வயது முதலே ஏற்பட்டு விட்டது.

அந்த மன உறுதிதான். அவருக்கு எதிர்கால அரசியலில் ஏற்பட்ட பல சோதனைகளைப் பொறுப்போடு - ஏற்று, அனுபவித்து வெற்றிகளைப் பெறும் பயிற்சியைத் தந்தது.

வடநாட்டிலே உள்ள நாகபுரி என்ற நகரில், ஆங்கிலேயர்கள் வசிக்கின்ற பகுதியின் வீதிகளில், காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் மூவண்ணக் கொடிகளை ஏந்திச் செல்லக் கூடாது என்று அங்கே இருந்த காவல் துறையினர் ஒரு சமயம் தடை விதித்திருந்தார்கள்!

அதை எதிர்த்துப் போராட இந்தியாவெங்குமுள்ள காங்கிரஸ் காரர்கள் நாகபுரி நகருக்குச் சென்றார்கள்!

வெள்ளையர்கள் விதித்திருந்த தேசிய கொடித் தடையை அவர்கள் உடைத்தெறியப் பெரும் போராட்டம் புரிந்து நூற்றுக்கணக்கானவர்கள் கைதானார்கள்! இப்போராட்டத்திற்கு இந்தியா முழுவதிலும் இருந்து காங்கிரஸ் வீரர்கள் அணி அணியாகப் புறப்பட்டார்கள்! மாவீரர் காமராஜ், விருதுபட்டியிலே இருந்து போராட்ட வீரர்களை அனுப்பிக் கொண்டே இருந்தார்!

இறுதியாக, அவர் புறப்பட்டபோது, நாகபுரி காங்கிரஸ்காரர் களுக்கும் வெள்ளையர் காவல் துறைக்குமிடையே ஓர் உடன்பாடு உருவாகியதால் அந்தப் போராட்டம் நின்றது! அதனால், காமராஜ் அவர்களும் நாகபுரிக்குச் செல்லவில்லை.

# 16. காமராஜர் முழுநேரத் தொண்டரானர்!

ஆறுவது ஆத்திரம் என்று, எவனொருவன் இறுதிவரைத் தன்னுணர்வை இரும்பாக்கிக்கொள்கிறானோ, அவன்தான், இறுதியில் ஆண்மையனாய், ஆற்றலனாய் வாகை சூடுவான்!

உன்னையே நீ எண்ணிப் பாரு என்று, எண்ணியவனெல்லாம், ஆரா உவகை பெறுவானே தவிர, தேரா மனிதனாய், என்றும் தேம்பித் தேம்பித் தேங்கி, வாழமாட்டான்!

தன்னை உணர்ந்தவன் தரணியை ஆள்வானல்லவா? எனவே அவன் எந்தத் துயர்பாடுகளுக்கும், குறைபாடுகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் அஞ்சாமலே புகுந்த துறையிலேயெலாம் முன்னேறுவான். பகையை அன்பாலும், ஆத்திரத்தைப் - பொறுமையாலும், அசத்தியத்தைச் - சத்தியத்தாலும், இகழைப் புகழாலும் அவன் வெற்றி கொள்வான்!

## அன்னிபெசண்டும் – காமராஜரும்

அயர்லாந்து நாட்டிலே இருந்து வந்த ஓர் அம்மை அன்னிபெசண்ட் அவர்கள், அன்பாலும், அஞ்சாமையாலும் விவேகத்தாலும் தன் வியன்மிகு ஆங்கிலச் செஞ்சொல் உரைகளாலும், இந்தியப் பேரறிஞர் மக்கள் இதயத்தையே ஈர்த்து விட்டார்.

அவரது தியாசாபிகல் சொசைட்டியின் வெற்றியே அதற்கு ஓர் அடையாளம் அல்லவா? அந்த அம்மையாரின் சுதேசிக் கிளர்ச்சி இயக்கம், சிறுவர் காமராஜை மிகவும் கவர்ந் தது! அதன், அரசியல் நடவடிக்கைகளை ஓர் அதிசயமாகவே கருதிக் கவனித்தபடியே இருந்தார் - காமராஜ்!

## பாரதியும் – காமராஜும்

இந்த நிலையில், விருது நகர் வீதியிலே ஒரு நாள்! கோவில் யானை ஒன்று தனது பாகனுக்கு அடங்காமல், மதமேறித் தனது கால்கட்டை உடைத்துக் கொண்டு பிளிறியபடியே ஓடியது. இதைக் காமராஜ் பார்த்து விட்டார்!

அவரது அறிவுக்கு என்ன தோன்றியதோ - என்னவோ, வேழத்தின் காலில் அப்போது சங்கிலி இல்லாதிருப்பதைக் கண்டார்!

கரியைக் கட்டும் இடமான இரும்பு கௌனிக்கு ஓடினார்! அங்கே அறுந்து கிடந்திருந்த சங்கிலியை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தார். அந்த யானை முன்னாலே தூர நின்றே அதைத் தூக்கியெறிந்தார்.

தன்னைக் கட்டும் சங்கிலியென யானையின் கண்களுக்கு தென்பட்டதும், களபம் அமைதி கண்டது! கட்டும் இடத்திற்கே அந்தக் களிற்றைக் காமராஜ் அழைத்துச் சென்ற காட்சியைக் கண்ட மக்கள் களி கொண்டார்கள்! எவ்வாறு ஏற்பட்டது, சிறுவர் காமராஜுக்கு இந்தப் பழக்கம்? அதிர்ச்சி தரும் இந்தச் சிந்தனை அவருக்குத் தோன்றியது எப்படி? இதுதான் அறிவு நுட்பம்!

அதன் பாகன் மாரியப்ப தேவன் நட்பால், அவர் பள்ளிக்குச் செல்லும் போதெல்லாம் வாழைப்பழம், உடைந்த தேங்காய் மூடிகள் ஆகியவற்றை - அந்த யானை தின்னக் கொடுப்பார்!

அந்தப் பழக்கம் வழக்கமானதால், யானையும் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது! அதனால், யாரும் நெருங்க முடியாத அந்த கைமாவை, அவரால் அமைதியாக நெருங்கி அதனருகே சென்று வழி நடத்திச் செல்ல முடிந்தது.

வீதியே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்த போது, காமராஜுக்கு இந்தச் சிந்தனைக் கூர்மை அப்போது தோன்றியதால் தான், உடனே ஓடிச் சென்று, மாதங்கத்தின் சங்கிலியைக் கொண்டு வந்து அதன் முன்னாலே நின்று தூக்கி எறியும் துணிவும் அவருக்கு வந்தது!

செந்தமிழ்ப் பூவிலே பைந்தமிழ்ப்பா தேனெடுத்து, இந்தியச் சுதந்திரத்திற்காக உணர்ச்சிச் சுவைக் கவிதைகளைப் பாடி, மக்கள் நெஞ்சிலே தேசபக்த இனிமையை ஊட்டிய விடுதலைக் கவிஞர் பாரதியாரும், ஒரு நாள் திருவல்லிக்கேணி பகுதியிலே உள்ள பார்த்தசாரதிப் பெருமான் கோயிலுக்குச் சென்றார்.

திரும்பி வரும்போது, அந்த சிந்துக்குத் தந்தையான பாரதி, தனக்கே உரிய கருணை உணர்வால், அக்கோயில் யானைக்கு உடைந்த தேங்காய் மூடிகளையும் - வாழைப்பழத்தையும் கொண்டு வந்து அதன் கையிலே வைத்து ஊட்டினார்!

அழகாகப் போடப்பட்ட ஆழ்வார் திருநாம வேழத்திற்கு அப்போது வெறியேறி, அருகே இருந்த பாரதியை இழுத்துத் தாக்கிக் கீழே தள்ளியது! அந்த அதிர்ச்சியிலே சென்று படுத்தார் பாரதி! அவ்வளவு தான், உடன் தொடர்ந்து வயிற்றுக் கடுப்பு நோய்! அமரரானார் சில நாட்களில் - அவர்!.

இருபதாம் நூற்றாண்டின் தேசபக்திக்குத் தனது பாக்கள் வாயிலாக இலக்கணம் வகுத்த இளைய மகன் அவர் ! விடுதலை பெறாத இந்திய நாட்டிற்கு வாழ்த்துப் பா பாடிய வாழையடி வாழை வந்த வண்டமிழ்க் கவி வித்தகன்! 'நான் ஒரு நூற்றாண்டு உயிரோடு இருப்பேன்! பாரத மாதா விடுதலை பெறுவதைப் பார்ப்பேன். என்னைக் கூற்றுவன் கண்டால் குதித்து ஓடுவான். நான் ஒரு கலியுகச் சித்தன்' என்றெல்லாம் தன் வாழ்நாளைப் பற்றிப் பேசியவர் பாரதியார்!

ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல (குறள் : 337)

என்ற குறளுக்கேற்ப, தமது உயிரும் உடம்பும் சேர்ந்து வாழ்வதனை ஒரு பொழுதளவும் உணராதவராக அறியாதவரானார், - பாவம்!

வெங்களமதில், வெஞ்சமர் புரியும் வீரனின் வாட்களைப் பெற்ற மீசை மகன், சுதந்திரச் செங்களமாடி வரும் நாட்டுப் பற்றுத் தொண்டர்களுக்குப் போர்ப் பாட்டு பரணி பாடி வந்த வீரத் திருமகன் பாரதி!

அதே தேசபக்தியை நெஞ்சிலே தேக்கிய குருளையான காமராஜ் கண்ட களிறுக்கும் மதம் தான்! தணியாத சுதந்திரத் தாகம் கொண்ட தண்டமிழ்க் கவிஞன் பாரதி கண்ட வேழத்திற்கும் மதம் தான்! எழுச்சி பெற்ற ஏறெனத் தோற்றம் கொண்ட இளைய ஏறு காமராஜுக்கு அந்தக் கரி பழக்கமானது தான்! பா மன்னன் பாரதி கண்ட கஜமும் அவருக்குப் பழக்கமானது தான்!

இருவருமே தேங்காய் பழங்களை அவற்றுக்கு ஈந்து உண்ண அளிப்பதும் வழக்கமான செயல்தான்! இருப்பினும் என் செய்ய!

விடுதலைக்கு விவேக உணர்வை விளைவித்த பாரதக் கவிஞன் பாரதிக்கு அப்போது வயது 39! ஆனால், விடுதலை உணர்வுப் பயிரை நெஞ்சிலே ஏந்திய காமராஜ் என்ற தியாகத்தின் வயது பத்து! இருந்தும், கரிகளிலே ஒன்று கவிஞருக்குக் கல்லறையைக் கட்டிடக் காரணமாகி விட்டது!

காமராஜைக் கண்ட களிறு, அவரைப் பார்த்ததும் பசுவாக மாறிவிட்டது! கவியைப் பார்தக் கரி, அவருக்குக் காலனேறும் கடாவாகி, பாரதம் விடுதலை பெற்ற பரவசத்தைக் கூடப் பார்க்க முடியாதவாறு சாவுக்குப் பாதை அமைத்து விட்டது!

காமராஜ் என்ற காளை வயது அரசியலிலே காலடி வைத்து, உழைப்பால் உயர்ந்து, நாடு சுதந்திரம் பெற்றிட, அணில் இராமபிரானுக்குப் பாலம் அமைத்திட உதவி புரிந்ததாகக் கூறுவார்களே, அதைப் போலப் போராடி, சிறை மீண்டும், சுதந்திரக் காற்றைச் சுவாசித்து, முதலமைச்சராகத் தமிழகத்திற்கு மும்முறைப் பதவியேற்று, பாரதத் திருநாட்டிற்கே பெருந்தலைவ ராகிக் காந்தியடிகளின் கடைசி வாரிசாகக் காலம் ஆனார்!

இந்த இருபெரு மேதைகளின் வாழ்க்கையிலே விளையாடிய சம்பவங்களுக்கு என்னதென்று பெயரிடுவதோ!

## மறைமலையடிகளும் காமராஜும்!

காமராஜ் கற்ற கல்வி, ஆறாவது வகுப்போடு கரை தட்டிய கப்பலானது! அதனால், குடும்பக் காப்பு காரணமாக, வணிகத் துறையிலே வலிய ஈடுபடுத்தப்பட்டார்! ஆனால், அந்த குமாஸ்தா வேலையோ, கல்லாப் பெட்டியிலே பணத்தைப் பூட்டி வைக்கும் கடை முதலாளியாகும் எண்ணமோ, அவர் மனதை ஈர்க்கவில்லை!

விருது நகரிலே உள்ள ஞானம் பிள்ளை பொடிக் கடையிலே, நாள் தோறும் அவர் நண்பர்களுடன் கூடுவார்! நாளேடுகளை வரி விடாமல் படிப்பார்! அரசியல் எழுச்சிகளிலே ஊடுருவி வாதாடுவார்! பிற நண்பர்களையும் சிந்திக்க வைப்பார்! இதற்கெல்லாம் சிந்தனைக் கூடம்தாம் ஞானம் பிள்ளை பொடிக் கடை!

தமிழ்க்கடல் மறைமலையடிகளார் தனித்தமிழ்த் தந்தை என்று எதிர்காலத் தமிழறிஞர்களாலும், தமிழக வரலாற்றாலும் பாராட்டப்பட்டவர்!

அவர், வேதாச்சலம் என்ற பெற்றோரிட்டப் பெயரோடு கால்சட்டை அணிந்த பள்ளிப்பருவத்தில் நாகப் பட்டினத்திலே உள்ள வெ. நாராயணசாமி புத்தகக் கடைக்குச் செல்வார்!

அந்த நாராயணசாமி, கள்ளர் வகுப்பார்! மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற மாமேதையின் மாணவர்களிலே ஒருவர்!

புத்தகக் கடையும் அங்கே பத்திரிகைகள் விற்பனையும் சேர்த்தே வியாபாரம் புரிந்து வந்தார் - விருதுநகர் ஞானம் பிள்ளை பொடிக் கடையைப் போல!

## மகாவித்வான் மாணவர்கள்?

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், குடந்தைக் கல்லூரித் தமிழ்துறைத் தலைவர் தியாகராச செட்டியார், மாயூரம் முன்சிப் வேதநாயகம் பிள்ளை, புதுவை சவராயலு நாயகர், நாகை வெ. நாராயணசாமி, கோபால கிருஷ்ண பாரதியார் போன்றத் தமிழ் மேதைகள் எல்லாம், மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர்களாகி மாண்புப் பெற்றவர்கள்!

அத்தகைய தமிழ் மேதையின் மாணவரான நாகை. வெ. நாராயணசாமியின் புத்தகக் கடைதான், மறைமலையடி களாருக்கு இளமைக் காலத் தமிழறிவுக்குரிய சந்திப்பு நிலையாக அமைந்தது!

அங்கு வந்து தமிழ் கற்ற நண்பர்கள் குழுவினருடன், வேதாசலம் என்ற பள்ளி மாணவரும், தாம் கற்றக் கல்வியை அளவளாவி வாதப் பிரதிவாதங்களை எழுப்பித் தெளிவு காண்பார்.

அதனைப் போல, விருதுநகர் ஞானம்பிள்ளை பொடிக் கடையில்தான், காமராஜும் தனது நண்பர் கே.எஸ். முத்துசாமி போன்றவர்களுடன் மாலை வேளையிலே கூடுவார்; அரசியலைப் பேசுவார். நண்பர்களுக்குள் அரசியல் உணர்வுகளை ஊடுருவ வைப்பார்; நாட்டின் அடிமைத்தனத்தை அகற்றிட அணி திரட்டுவார்.

நாளேடுகளை நாள்தோறும் படிப்பார்; நாட்டு நடப்புகளை அவர்களோடு மான ரோஷமுடன் கலந்துரையாடுவார்! தினசரி இதே சம்பவங்கள் ஞானம் பிள்ளை பொடிக் கடையிலே நடக்கும். அதனால், காமராஜருக்கு நண்பர்கள் மேன்மேலும் வளர்ந்தனர்.

எதிர்காலத்திலே ஏற்றம் பெறப்போகும் சில மேதைகளுக்குப் பொடிக்கடை, புத்தக்கடை போன்ற இடங்கள் போதிமரங்களாகத் திகழ்ந்தன என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக இந்த இரு இடங்களும் அமைந்து புகழ் பெற்றன!

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாடுகள், இந்தியாவின் முக்கிய நகரங்களிலே நடைபெற்று, ஆங்கில ஆதிக்கத்தின் ஆணிவேரை அறுத்தெறிய, அதன் தலைவர்களும்-தொண்டர்களும் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டு வந்த காலம் அது!

## காங்கிரசில் தீவிர மிதவாத அணிகள்!

அப்போது தான், 'சுயராஜ்ஜியம் நமது பிறப்புரிமை, அதைப் பெற்றே தீருவோம்! இந்த உரிமையைப் பெற்றிட, நாம் அன்னியர் தயவையோ, சட்டத்தையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்று தீவிரவாதிகள், காங்கிரஸில் முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள்!

'இந்திய நாடு விடுதலை பெற வேண்டுமானால், நாம் சட்டத்திற்குட்பட்டே போராட வேண்டும்' என்ற நோக்கம் கொண்ட மிதவாத மேகங்களும் காங்கிரஸ் கட்சியை அங்கங்கு சூழ்ந்திருந்தன!

தீவிரவாத இடி முழக்கங்களை எழுப்பிய அணிக்குத் திரு பால கங்காதர திலகர் தலைவர்; மிதவாத மேகக்குவியல்களுக்கு திரு கோபால கிருஷ்ண கோகலே தலைவர்.

தமிழகத்தின் தேசிய அரசியலிலே தீவிரவாத அணியின் இடி முழக்கங்கள் தான் எல்லாப் பகுதிகளிலும் கரடு முரடாக எதிரொலித்துக் கொண்டிருந்தன!

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை, தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தர முதலியார், விடுதலைக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார், தியாகி சுப்பிரமணிய சிவா, வ.வெ.சு. ஐயர், சேலம் சி. விசயராகவா சாரியார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர், டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, போன்ற அரும் பெரும் தேசபக்தர்கள் எல்லாம், திலகர் அணியைச் சேர்ந்த இடி முழக்கப் பேரொலிகளை எழுப்பிய தீவிரவாதிகளாவர்.

மிதவாத அணியிலே எஸ். சீனிவாச ஐயங்காரைப் போன்ற சிலர் பெயரளவிற்கான மேக மூட்டம் போலக் காணப்பட்டாலும், சில நேரங்களிலே அவர் கூட திரு. வி.க. வுடன் சேர்ந்து தீவிரவாத தேசபக்தராகவே செயல்படுபவராக இருந்தார். விருதுபட்டி என்ற விருதுநகரிலே, தீவிரவாத அணியைச் சேர்ந்த திரு.வி. கலியாணசுந்தரனார், டாக்டர் பி. வரா ராஜலு நாயுடு, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் பொதுக்கூட்டம் போட்டுப்பேசினர்!

திலகர் திட்டங்களைப்பற்றித் தீவிரமாகப் பேசப்பட்ட அந்தக் கூட்டத்தில், காமராஜும், அவரது பொடிக்கடை அரசியல் நண்பர்களும் கலந்து கொண்டு, பேசும் கருத்துக்களைக் கேட்டுக் கிளர்ச்சி கொண்டிருந்தார்கள்.

காமராஜுக்கும் தீவிரவாதிகளின் அப்போதைய பேச்சுக்கள் மாபெரும் தேசிய எழுச்சியை உருவாக்கிற்று! ஞானம் பொடிக் கடையில் கூடும் நண்பர்களையும் அணியாகத் திரட்டிக் கொண்டுவந்து, ஜார்ஜ் ஜோசப் பேச்சுக்களை, உணர்வுபூர்வமாக உரையாடியபடியே விமரிசனம் புரிந்தார்கள்!

அப்போது, முதல் உலகப்போர் நடந்து முடிந்த நேரம்! யுத்தத்தின் போக்குப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் பத்திரிகைகள் வாயிலாக காமராஜ் அறிந்திருந்தார்.

## ரௌலட் சட்டமும் காமராஜும்!

இந்திய தேசிய மக்களுக்கு, காந்தியடிகள் அந்த நேரத்தில் விடுத்திருந்த போராட்ட அழைப்பை, வாலிபர் காமராஜ் ஊன்றிப் படித்தார்.

ஆங்கிலேயரின் ரௌலட் சட்டத்தை எதிர்த்து, 1919-ஆம் ஆண்டு, ஏப்ரல் 6-ஆம் நாள், சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் நாட்டு மக்களை அழைத்த அழைப்புதான் அது. அண்ணல் மகாத்மா அப்போது கடுமையான நோயுற்றிருந்தார்; ரௌலட் சட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என்று, அவர் பிரிட்டிஷ் வைஸ்யராயைக் கெஞ்சிக் கேட்டார்!

மற்ற மனுக்களைப் போலவே காந்தியடிகள் மனுவும் வைஸ்யராயால் தூக்கி எறியப்பட்டது. அதனால்தான், அன்றுவரை எந்தவிதக் கிளர்ச்சிகளிலும் தலையிடாமல் இருந்த காந்திபெருமான், உடனே தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

அகிம்சைப் போரிலே ஈடுபட நாட்டு மக்களை அழைத்தார். இந்த விவரங்களை எல்லாம் காமராஜ் தெளிவாக உணர்ந்தார். தேசியத் துடிப்புப் பெற்ற அவர் வீறிட்ட வேங்கை போலானார்!

அந்தக்காலகட்டத்தில்தான், நெல்லைச்சீமையிலே, தூத்துக்குடி துறைமுகத் துறையிலே வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், ஆங்கிலேயருடைய ஆதிக்கத் தூண்களிலே ஒன்றாக விளங்கிய நீர்ப்பெரும் வழி வணிகத்தை எதிர்த்துக் கப்பலோட்டிய வீரதீர ஆற்றலைக் கண்டு காமராஜர் வியந்து மிதந்தார்!

பாரத விடுதலைப் போரிலே அவர் கப்பலோட்டிய வரலாற்றையும், அதற்கான அவர் பெற்ற நாற்பதாண்டு தண்டனைக்

கொடுமைகளையும், பிள்ளையின் வீரச்செயல்களை மக்கள் நெஞ்சிலே மறக்கனற் கட்டிகளாகச் சூடேற்றியிருந்த கொதிப்புகளையும் கண்டும்-கேட்டும் உணர்ச்சியும் எழுச்சியும் அவர் பெற்றார்.

'பூட்டிய இருப்புக் கூட்டை உடைத்து சிறுத்தையே வெளியே' வா என்ற பாவேந்தரின் பா வுக்கு இலக்கணமாக, அவரது நெஞ்சிலே அந்நேரத்துக் கிளர்ச்சிகள் அரசியலில் ஈடுபாடுறுத்தும் எழுச்சிகளாக மாறி வித்திட்டன.

## அன்னிபெசண்ட் கைதான நிலை

அன்னிபெசண்ட் அம்மையாரின் 1914-ஆம் ஆண்டு சுதேசி இயக்கக் கிளர்ச்சி இந்திய பூபாகமெங்கும் ஆங்கில ஆட்சியை எதிர்த்து ஒருவித மனப்புரட்சியாக உருவாகிக் காட்டுத் தீபோல எங்கும் பரவியது!

அதனால், காங்கிரஸ் தலைவர்களும்-தொண்டர்களும் அரசியல் சார்பற்ற அறிஞர்களும் கனலாகிக் கொண்டிருந்த காட்சிகளை நாள்தோறும் பத்திரிகையிலே தொடர்ந்து கவனித்தார் காமராஜ்!

அன்னிபெசண்ட் அம்மையார் ஆரம்பித்த சுயாட்சிக் கிளர்ச்சி சூடு பிடித்தக் கொதிப்பைக் கண்ட வெள்ளையர்கள்; இரட்டை ஆட்சி என்ற ஓர் ஆட்சி முறையை சட்டத்தின் மூலம் வழங்கியதை காங்கிரஸ் கட்சி மாநாடுகளில் காமராஜ் கேட்டார்!

ஒருநாள் திடீரென்று, நீலகிரி மாவட்டத்திலே உள்ள உதகமண்டலத்தில். அன்னிபெசண்ட் அம்மையார் கைதானார். அவருடன் வாடியா, அருண்டேல் ஆகியோரும் காவலில் வைக்கப்பட்டனர் என்ற செய்தி, இந்தியாவை பரபரப்பூட்டியது.

இது சாதாரண மக்களை மட்டுமல்ல; காங்கிரஸ் தலைவர்கள்-தொண்டர்களையன்றி. இந்திய அறிஞர்களுக்குள்ளேயும் எதிர்பாராத ஒருவித அதிர்ச்சியைக் கொடுத்தது.

இந்த எழுச்சி, சுயாட்சி என்ற எரிசக்திக்கு எண்ணெய் ஊற்றியது போலானது! வயதான ஞானாத்மாக்கள் எல்லாம் மூலைக்கொரு அறிக்கைகளை விடுத்துக் கண்டனக் குரலை எழுப்பி வாதாடலானார்கள்!

*1907-ஆம் ஆண்டு முதல் காங்கிரசிலேயிருந்து விலக்கி வைக்கப்பட்ட திலகர் அணியைச் சேர்ந்த தீவிரவாதிகள் எல்லாம். இந்த சுயாட்சிக் கிளர்ச்சி எழுப்பிய உணர்ச்சிகள் மூலமாக மீண்டும் காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து கொண்டார்கள்.*

*மிதவாதிகளான கோபால கிருஷ்ண கோகலே அணிக்கும் பெசண்ட் அம்மையாரின் சிறைக் காவல் ஆத்திரத்தை மூட்டியது! பொதுமக்களில், நடுத்தர வர்க்கத்தினரும் இந்தக் கிளர்ச்சியிலே இணைந்து விட்டார்கள்!*

*இவற்றை எல்லாம் சிந்தித்த காமராஜ் என்ற இளம் அரிமா, காங்கிரஸ் கட்சியின் முழு நேர ஊழியராக, தனது உடல், உயிர் அனைத்தையும் தேச விடுதலைக்குக் காணிக்கையாக்கும் வைர மன உரம் பெற்றார்!*

# 17. ஜஸ்டிஸ் கோட்டை காமராஜரால் கலகலத்தது

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆள்கின்ற போது, அகில இந்திய அளவில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி மட்டுமே இருந்தது! தமிழகத்திலே ஆட்சிபுரியும் மாநிலக் கட்சியாக ஜஸ்டிஸ் கட்சி விளங்கியது.

## ஜஸ்டிஸ் கட்சி எப்படித் தோன்றியது?

ஜஸ்டிஸ் கட்சி, இராஜாக்கள் கட்சி, ஜமீன்தார்கள் கட்சி, மிட்டாதார்கள் மிராசுதார்கள் கட்சி! பணக்காரர்கள் கட்சி! சீமான்கள், பிரபுக்கள் கட்சி! சரிகைத் தலைப்பாகையர் கட்சி! சர், ராவ் பகதூர், திவான் பகதூர்கள் கட்சி, என்றெல்லாம் அந்தக் கட்சியைப் பொதுமக்கள் மதிப்பீடு செய்வதுண்டு!

இந்தக் கட்சியை நிறுவியவர்களிலே ஒருவரான தாரவார்த் மாதவன் நாயர் எனப்படும் டி.எம். நாயர் காங்கிரஸ் கட்சியிலே தீவிரவாதியாக விளங்கியவர்!

1898-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்றது அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டிலே அவர் கலந்து கொண்டவர்! ஒரு தீர்மானத்தின் மீதும் உரையாற்றியவர்!

இலட்சுமணபுரியில் 1899-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாடு, அதிலே சிறந்த பேச்சாளராகக் கலந்து கொண்டவர் நாயர்!

1907-ஆம் ஆண்டு, சித்தூர் மாவட்டக் காங்கிரஸ் மாநாடு, நாயர் தலைமையிலே தான் நடந்தது.

சென்னை மக்கீஸ் கார்டன் என்ற இடத்தில் 1887-ஆம் ஆண்டு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு நடந்தது; பத்ருதீன் தயாப்ஜி தலைமை வகித்தார்.

அந்த மாநாட்டிற்கு, ஜஸ்டிஸ் கட்சி நிறுவனர்களிலே ஒருவரான சர். பிட்டி. தியாகராயர் அக்கால நாணய மதிப்பில் இருநூறு ரூபாய் நன்கொடை கொடுத்தவர்!

## இண்டியன் நேஷனல் இயக்கத்தின் சாதனைகள்!

இந்திய நேஷனல் காங்கிரஸ் (Indian National Congress) என்ற பெயரில், சென்னையிலே உள்ள இந்திய விடுதலைத் தாகம் கொண்ட தேச பக்தர்கள் எல்லாம் ஒன்று கூடி, ஒரு சங்கம் தோற்றுவித்தார்கள். துவக்கத்தில் அது மிதவாதிகள் (Moderates) அமைப்பாகவே இருந்தது!

ஆண்டு தோறும் இந்த இண்டியன் நேஷனல் காங்கிரஸ் இயக்கம் சென்னையில் தீவிரமாக இயங்கியது. 1887, 1894, 1903, 1908, 1914 ஆகிய ஆண்டுகளில் சென்னை நகரிலே நடைபெற்ற அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மாநாடுகள். பத்ருதீன் தயாப்ஜி, ஆல்ஃபிரட் வெப்லால், மோகன் கோஷ், ராஷ் பிகாரி கோஷ், பூபேந்திரநாத் போஸ் போன்றவர்கள் தலைமையில் வரிசையாக ஆண்டுகள் தோறும் நடைபெற்றன. அந்த மாநாடுகளிலே எல்லாம் இந்த இண்டியன் நேஷனல் காங்கிரஸ் இயக்கம் தீவிரமாகப் பங்கேற்று நடத்தியது.

டாக்டர் ஆஞ்சநேயலு அவர்கள், "Leader from South" என்று, "Bhavan's Journal" நூற்றாண்டு மலரில் எழுதிய கட்டுரையில் ஓர் அறிவு பலம் வாய்ந்த தேச பக்தக் குழு, அதன் தீவிரத் தொண்டுகள் மர்மமாக மறைக்கப்பட்டு விட்டது என்ன காரணத்தாலோ தெரியவில்லை. போதுமான அளவு பாராட்டுதலைக்கூட அந்தக் குழுவுக்கு அப்போது அளிக்கவில்லை என்று எழுதினாரே! அந்தக் குழு - இந்த ஜஸ்டிஸ் கட்சிக்குச் சென்று விட்ட குழுவோ - என்னவோ, மர்மமாகவே இன்றும் இருக்கிறது!

அந்த ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரஸ் தேசிய மகாசபை மாநாடுகள் எல்லாம், சென்னையில் நீதிக்கட்சி துவங்குவதற்கு முன்பு நடைபெற்றவையே.

1907-ஆம் ஆண்டில், திலகர் தலைமையில்-தீவிரவாத அணியினர், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைமையைக் கைப்பற்றத் திட்டமிட்டு முயன்றனர். அந்த முயற்சியில் அவ்வணியினர் தோற்று விட்டனர். அதனால், அந்த கோஷ்டிகள் காங்கிரசை விட்டுப் பிரிந்து போனார்கள்!

திருமதி அன்னிபெசண்ட் அம்மையார் - அந்த இரு அணிகளையும் ஒன்று சேர்க்க அரும்பாடு பட்டார்! அவரும் தோற்றார்! பிறகு, அம்மையார் 1915-ஆம் ஆண்டில் ஹோம் ரூல் இயக்கம் என்ற அமைப்பைத் துவக்கினார்! 1916-ஆம் ஆண்டில், சென்னை சட்டசபையிலிருந்து டில்லி மத்திய சட்டசபைக்கு டாக்டர் டி.எம். நாயர் போட்டியிட்டார்.

அவர் வெற்றி பெறும் அளவுக்கு வாக்கு அளிக்கப்பட்டும் கூட, அந்த வாக்குகளில் நடைபெற்ற சூழ்ச்சிகளால், டி.எம். நாயர் பகிரங்கமாக, கேட்பார் வியக்குமளவிற்குத் தோற்கடிக்கப்பட்டார்!

டி.எம்.நாயருக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யார் என்றால், திருவாளர்கள் பி.என். சர்மா, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி என்ற இரண்டு பிராமணர்கள்! திட்டமிட்டுத் தோற்கடிக்கப்பட்ட நாயர், தியாகராயர், பொப்பிலி ராஜா போன்றவர்கள் கூடி தமக்கென்று ஒரு தனிக் கட்சி தேவை என்று எண்ணத் தலைப்பட்டனர். பிராமணர் அல்லாதாருக்கு ஓர் இயக்கம் தேவையென்பதால், ஐஸ்டிஸ் கட்சி என்ற ஒரு கட்சி அப்போது தோன்றியது.

திருமதி. அன்னிபெசணட் அம்மையார், திரு. டி.எம். நாயர் மேல் மானநட்ட வழக்கும் தொடர்ந்தார். ஆனால், எந்த வழக்குரைஞரையும் அவர் வாதாட வைக்காமல், தானே வாதாடி அந்த வழக்கிலே வெற்றி கண்டார்!

இவ்வாறெல்லாம் காங்கிரஸ் கட்சி வளர்ச்சியிலே தீவிரமாகப் பங்கேற்ற ஆற்றலாளர், அறிவாளர், கல்வியாளர், பாரிஸ்டர், சீமான் டி.எம். நாயர் அவர்கள், பிராமணர் அல்லாதாருக்கென ஒரு கட்சியைத் துவக்க எண்ணியபோது, சர் தியாகராயச் செட்டியார், பனகல் ராஜா, பொப்பிலி ராஜா, டாக்டர் நடேசன், சர்.ஏ. ராமசாமி முதலியார், பாரிஸ்டர் எதிராஜ், பி.டி.ராஜன், போன்றவர்கள் எல்லாம் இப்போது ஒன்று கூடினர்; பிராமணரல்லாதாருக்காக தனி ஒரு கட்சியை உருவாக்கினார்கள்; அது தான் ஐஸ்டிஸ் கட்சி என்ற நீதிக் கட்சி.

அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களான டி.எம். நாயர், திரு தியாகராயச் செட்டியார் போன்ற பிறரும், ஆரம்பத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியைத் தாய்க் கட்சியாக ஏற்றவர்கள்; அதை வளர்த்தவர்கள்! அந்தக் கட்சியிலே ஏற்பட்ட இன -சாதி -பண்பாட்டு மாறுபாடுகளால் ஐஸ்டிஸ் கட்சி தோன்றியது!

காங்கிரஸ் கட்சி என்ற தாய் பெற்ற பிள்ளைகள் தாம்; ஐஸ்டிஸ், கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட், பிரஜாசோசலிஸ்ட், பூமிதானம் சர்வோதயா, பார்வர்டு பிளாக், போன்ற பிற எல்லாக் கட்சிகளும்! கம்யூனிஸ்டுக்கும், சோசலிஸ்ட்களுக்கும் வேண்டுமானால், மேலை நாட்டுக் கொள்கைப் பாரம்பரியம் இருக்கலாம்! ஆனால், பிற எல்லாக் கட்சிகளுக்கும் காங்கிரஸ் தான் தாய்க் கட்சி என்பதை எவரும் மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட கொள்கை ஏறுகளைக் கொண்ட கட்சிகளை எல்லாம், மூத்த காங்கிரஸ்காரர்கள் எனப்படுவோர், எப்போதும் எங்கும், மேடை ஏறித் தாக்கிப் பேசுவதில்லை! காரணம் நேற்று வரை அவர்களும் உடன் பிறவாச் சகோதரர்களாகவே காங்கிரசில் இருந்தவர்கள், உழைத்தவர்கள் என்பதால்!

நாலாந்தர அரசியல் நடனமாடிகள் தாம், ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களை வெள்ளைக்காரன் ஏஜெண்டுகள், வெள்ளையன் வால் பிடிப்போர், ஏகாதிபத்திய தாசர்கள், நாட்டுப்பற்றற்றத் துரோகிகள், எட்டப்பர்கள் என்றெல்லாம் பழி கூறி மேடைகளிலே - ஏடுகளிலே தாக்கி எழுதியும் பேசியும் வந்தார்கள்.

தலைவர் காமராஜ், ஜஸ்டிஸ் கட்சியை, விருதுநகரிலே கடுமையாக எதிர்த்தார்! கூட்டத்திற்குக் கூட்டம் போட்டியாக நடத்தினார்! ஜஸ்டிஸ் கட்சி நடத்தும் கூட்டத்திற்குத் தனது நண்பர்களை அனுப்பி குறிப்பெடுத்து வரச் செய்வார்! பதிலடியும் கொடுப்பார்! ஆனால், தாக்கும் பண்பற்றவர்!

## திரு.வி.க.வும் அவரது குருவும்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப்பள்ளியில் படித்த போது, சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் மாணவராகப் படித்தவர்!

நாவலர் திரு. கதிரைவேலர் தாம் ஒப்புக் கொண்ட மருட்பா போர்க்களத்திற்கு வருகை தரமாட்டார்! அருட்பா தளபதியான அடிகளார், தவறாமல் களக்காட்சிகளிலே வந்து நிற்பார்! பாவலரும் அவ்வாறே பவனி வருவார்!

மருட்பா போர் தளபதி அடிக்கடிக் களம் வராமல் நின்றுவிடும்போது, மாணவர் திரு.வி.க. தனது குருவான தவத்திரு சதாவதானி கதிரைவேலருக்கு, தவத்திரு மறை மலையடிகளார் பேசும் மருட்பா மறுப்புக் குறிப்புகளையும், அருட்பா அருளும் அருட் குறிப்புகளையும் குறிப்பெடுத்துக் கொண்டுபோய், தனது வகுப்பு ஆசிரியரான கதிரை வேலரிடம் கொடுப்பார்! மருட்பா அணிக்காக ஒற்றாடுவார் திரு.வி.க. - அருட்பா அணியிடம்!

அந்தக் குறிப்புகளைப் பெற்ற கதிரைவேலர், அடுத்தக் கட்டப் போருக்கான கள வாதங்களுக்கான ஆயுதங்களைத் தயார் செய்து கொள்வார்! பதிலுக்குப் பதிலாயுதங்களைப் பயன்படுத்துவார்! இறுதியில் அருட்பாவே அருள்பாலிக்கும் வெற்றித் திருமகளாக!

அதனைப் போல, வாலிபர் காமராஜ் விருது நகரிலே, சுற்று வட்டாரங்களிலே, சூழ்ந்துள்ள நகர்ப் பகுதிகளிலே எங்கும் ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டங்கள் நடந்தாலும், தனது பொடிக்கடை நண்பர்களை அங்கங்கே அனுப்பி வைப்பார். குறிப்பாக, கே.எஸ். முத்துசாமி, முருகதனுஷ்கோடி போன்றவர்கள், வாலிபர் காமராஜுக்குத் திரு.வி.க. வைப் போல் பயன்படுவார்கள்.

நண்பர்கள் குறிப்பெடுத்துக் கொண்டு வரும் ஜஸ்டிஸ் கட்சிப் பேச்சுக்களுக்கு, காமராஜ் அடுத்த மேடைகளிலே அதிரடிப் பதில்களை - அதிர்ச்சியடையுமாறு கொடுப்பார்!

கூட்டத்திற்குக் கூட்டம் மட்டுமல்ல, பேச்சுக்குப் பேச்சு, ஊர்வலத்திற்கு ஊர்வலம், அலங்காரத் தோரணங்களுக்குத் தோரண அலங்காரங்கள், கொடிக் காட்சிக்குக் கொடிக் காட்சி போன்று எல்லாவற்றுக்கும் போட்டிகளை உருவாக்கி, ஜஸ்டிஸ் கட்சியைக் கலகலக்க வைப்பார்!

காமராஜின் இந்தக் கடுமையான அரசியல் களங்களின் வியூகங்களைக் கண்ட காங்கிரஸ் நாடார்களே அவரோடு பேசமாட்டார்கள்! உறவாட மாட்டார்கள்! ஏன்?

அப்போது, ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி சென்னையிலே நடைபெற்றதால், இவரோடு பேசினாலும், பழகினாலும் தத்தமது வணிகத்திற்கு ஏதாவது குந்தகம் ஏற்படுமோ என்ற அச்சம்தான் காரணம்!

ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையான விருது நகரிலே குத்துவெட்டா? எதிர்ப்புக்கு எதிர்ப்பா? சிங்கத்தின் குகைக்குள்ளே சிறு நரிகளின் தந்திர சித்து விளையாட்டுக்களா? என்ற வினா-ஊரில் எழவில்லை; காவல் நிலைய அதிகாரிகளிடையே எழ வைத்தனர் - தமிழக ஆட்சியினரான ஜஸ்டிஸ் சீமான்கள்!

காவல்துறை, காமராஜைக் கண்காணித்தது! இந்த நிலை காமராஜுக்கும் புரிந்தது! ஆனால், அவர் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. இவ்வாறு வாலிபர் காமராஜர், ஜஸ்டிஸ் கட்சியின் செல்வச் செருக்குப் பணிகளை எதிர்த்துப் போர்க் கொடி ஏந்திச் செயற்கரிய செயல்களைச் செய்து வந்தார்!

அக்கம் பக்கம் நகர்களின் அரசியல் விவகாரங்களை அறிந்து வர, காமராஜ் அடிக்கடி மதுரை, நெல்லை, திருச்சி, போன்ற முக்கிய இடங்களுக்கெல்லாம் சென்று வருவார்.

அங்கெல்லாம் காங்கிரஸ் கட்சி எவ்வாறு வளர்க்கப்படுகின்றது, கதர்த்துணிகள் விற்பனையில் அவர்கள் கடைப்பிடிக்கும் விதிமுறைகள் என்னென்ன என்று அனைத்தையும் அறிந்து வந்து விருது நகரிலே உள்ளவர்களை வழி நடத்துவார்.

வாலிபர் காமராஜாக இருந்த போதும் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்தார்! தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த போதும் அதைக் கடுமையாக எதிர்த்தார்!

அதனால், அப்போது நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக்கட்சிக் கோட்டைக் கொத்தளங்கள் எல்லாம் கலகலத்தன.

அந்த நேரத்தில், தமிழகக் காங்கிரஸ் கட்சிதான், அப்போது இந்தியா முழுவதும் நடை பெற்ற மாநில சட்ட சபைத் தேர்தல்களில் முதல் பலமும் பெற்றது! பிற மாநிலப் பணிகளுக்கான மூலாதாரமாகவும் திகழ்ந்தது!

# 18. விடுதலை வேள்விக்கு விலையற்ற தியாகங்கள்!

ஒரு நாட்டிற்கு விடுதலை என்பது தியாக விலையின்றிப் பெறவியலாதது; உலக வரலாற்றிலே சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம், சுதந்திரத்தை மலர் தூவிய பாதைகளிலே ராஜ நடை நடந்து பெறவில்லை. பல தியாகங்களாலேயே பெற்றது.

## அடிமையின் அவலங்கள்

அடிமைத்தனம் என்ற அனற்பாதைகளிலே தத்தளிக்கும் தரித்திரச் சென்மங்கள், அமணத்துறவிகளைப் போல, தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு அகோர அம்மணங்களாய் உடற்கூறுகள் உருகி, கருகிச் சாகத்தானே வேண்டும்?

எரிமலைகளும் - பூகம்பங்களும், இருண்ட நெடுங்காடுகளும் பாலைவனப் பதை பதைப்புகளும், அடிமை நாட்டில் அடிக்கடி ஏற்படத்தானே செய்யும்!

ஆணவச் செங்கோலை நடத்தும் ஆங்கிலேயர் ஆட்சியிலே நறுமணப் பூங்காக்களும், பழமுதிர் சோலைகளும், மலைபடு பொருட்களும் மணம் கொப்பளிக்கும் சந்தனக் காடுகளுமா; மக்கள் வாழ்வில் தோன்றித் தோன்றிப் பயன்தந்து மகிழ்வூட்டும்?

ஆணவமும், அடிமைத் தனமும் ஓராட்சியிலே எங்கெல்லாம் கொடி கட்டிப் பறக்க விடப்படுகின்றனவோ, அங்கெல்லாம் உயிர்த் தியாகங்கள் விடுதலை வேள்வித் தீயிற்கான எண்ணெய்த் துளிகளாகச் செந்நீரே ஊற்றப்படுவதைப் படித்திருக்கின்றோம்!

ஆனால், இந்திய நாடு ஒன்று தான், அண்ணல் பெருமான் காந்தியடிகள் தலைமையிலே கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமற்ற ஒரு தேசிய எதிர்ப்பைச் செய்து காட்டியது!

பஞ்ச நதிபாயும் பாஞ்சால நாட்டின் படுகொலைகளால், பாரத நாட்டில் மூண்டு விட்ட கொடுமையான நிலைகளையும், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் கோரமாகத் தாக்கப்பட்டு மரணப் படுக்கையிலே கிடந்த அக்ரமமான சம்பவங்களையும், நாள் தோறும்

அடுக்கடுக்காகப் பத்திரிகைகளிலே படித்தக் காமராஜ் என்ற வாலிபருக்கு - மனம் அலைகடலானது! நாளாகவாகப் பொங்குமாங் கடலாக அவை கொந்தளிக்க ஆரம்பித்தது.

இவற்றையெல்லாம் சிந்தித்தக் காமராஜ், காங்கிஸ் கட்சியின் முழுநேர ஊழியராக - தனது உயிர், உடல் அனைத்தையும் அதன் வளர்ச்சிக்காக, காணிக்கையாக்கத் தயாரானார்!

## பஞ்சாப் படுகொலை! காமராஜ் சபதம்!

ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிப் பிரயோகப் படுகொலைகளை எதிர்த்து, இந்தியா முழுவதும் கடையடைப்புகள், பொது வேலை நிறுத்தங்கள் நடந்தன!

1919 ஏப்ரல், 13ஆம் நாளன்று, அமிர்தசரஸ் நகரில் கண்டனக் கூட்டம் நடைபெற்ற இடத்தின் பெயர்தான் ஜாலியன் வாலாபாக்!

அந்த மைதானம் மூன்றுபக்கமும் மிக உயர்வான சுவர்களையுடையது! ஒரு பக்கத்தில் மட்டும் சிறு நுழைவு வாயில்! ஏறக்குறைய இருபதாயிரம் மக்கள் அங்கே கூடியிருந்தார்கள் - ஆங்கில ஆட்சியைக் கண்டனம் புரிய!

ஜாலியன் வாலா பாக் திடலில் இருந்த ஒரே நுழைவு வாயிலில் நின்று கூடியுள்ள இருபதினாயிரம் மக்களும் மூன்று நிமிடத்தில் வெளியேற வேண்டும்! இல்லையானால் துப்பாக்கித் துந்துபிகள் முழங்கும் என்று, கூறியபடி வெறியன் டயர் என்பவன் மக்களை நோக்கிச் சுட்டான்; துப்பாக்கியிலிருக்கும் குண்டுகள் தீரும் வரை சுட்டான்.

ஜாலியன் வாலாபாக் தோட்டத்திலிருந்து மக்கள் வெளியேற பல வழிகள் இருந்ததாக தளபதி ஜெனரல் டயர் எண்ணிக் கொண்டார் என்றும், அதனால் தான் அவர் நீண்ட நேரம் சுடுமாறு கட்டளையிட்டார் என்றும், எட்வர்டு தாம்சன் என்ற ஆங்கில அதிகாரி அப்போது அறிக்கை விட்டார்!

ஜாலியன் வாலா பாக் தோட்டத்தைச் சுற்றிப் பல மெத்தை வீடுகள் இருந்தன! ஒரே ஒரு சந்து ஒன்றிலே மட்டும் வீடே இல்லாமல் நீண்ட சுவர் ஐந்தடி உயரமளவு இருந்ததாம்!

ஜெனரல் டயர், அங்கே சுடும் போது அந்தக் குண்டுகளிலே இருந்து தப்பித்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, மக்கள் சுவரை நோக்கி ஓடி வந்து, அதன் மேலே ஏற முயன்றார்கள்!

வெறியன் டயர் அப்போது சுவர் மேல் ஏறுகின்றவர்களை நோக்கிச் சுடச் சொன்னான்! இராணுவப் படையிடமிருந்த துப்பாக்கிக் குண்டுகள் எல்லாம் சுட்டுத் தீர்த்து விட்ட பிறகு தான்-பார்த்தான் அவன் சுவரின் கோரக் காட்சிகளை! அவ்வளவு ஆத்திரம் அவனுக்கு!

சுவரோரம் சுருண்டு சுருண்டு விழுந்து கிடந்தன சுருள் சடலங்கள்! எங்கு பார்த்தாலும் ரத்த வெள்ளம் குட்டை குட்டைகளாய்த் தேங்கிக் கிடந்தன!

காயம் பட்டவர்களின் உடல்களிலே வழியும் ரத்த ஊற்றுக் கண்களிலேயிருந்து, செந்நீர் வடிந்தபடியே இருந்தன! அலறல்கள் ஓர் புறம்! முணகல்கள் மறுபுறம்!

**காமராஜ் சபதம்!**

பஞ்சாப் படுகொலையாம் ஜாலியன் வாலாபாக்கின் கோரக் காட்சிகளைக் காமராஜ் பத்திரிகைகளிலே படித்தார்! ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணி வேரை அறுத்தெறியும் வரை ஓயமாட்டேன் என்ற சபதத்தை அவர் நெஞ்சிலே ஏற்றார்!

ஜாலியன் வாலா பாக் கோரங்கள், காங்கிரஸ்காரர்களிடையே ஏற்படுத்திய பரபரப்புணர்ச்சி, காமராஜ் நெஞ்சையும் நெருப்புக் காடாக்கி விடுமே என்று, விருதுபட்டியிலே உள்ள அவரது உறவினர்கள் எல்லோருமே அஞ்சினார்கள்! எச்சரிக்கையோடு அவரைக் கண்காணித்தார்கள்!

அதனால், திருவனந்தபுரத்திலே உள்ள அவருடைய தாய்மாமன் காசி நாராயணன் கடைக்குக் காமராஜரை அனுப்பி வைத்தார்கள் - அருடைய தாயாரும், உறவினர்களும்!

அங்கே சென்றும் கூட, அவருடைய தேசியப் பணிகளைக் கடையிலிருந்தவாறே செய்து வந்தார்! அதிலே ஒன்று அவர் கலந்து கொண்ட வைக்கம் போராட்டம்!

கேரள மாநிலத்திலே உள்ளது வைக்கம் என்ற ஊர்! அங்கே உள்ள ஆதிதிராவிடர்களை ஆலயத்திலே நுழைய விட வேண்டும் என்ற போராட்டம் அங்கு நடந்து வந்தது! உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் - அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகி விட்டார்கள்! வைக்கம் போராட்டம் அங்கு நாள்தோறும் நலியத்தொடங்கியது.

அந்த நிலையில் காங்கிரஸ் தலைவராக இருந்தவர் தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள். அந்தப் போராட்டத்திலே

அவர் ஈடுபட்டுச் சிறை சென்றார்! இப்போது, பெரியார் அவர்களுக்கு வைக்கம் என்ற அந்த ஊரிலே சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் காமராஜ் அவர்கள் திருவனந்தபுரத்திலே உள்ள தனது மாமன் கடையிலே பணியாற்றிக் கொண்டிருந்தார். அதனால் இடையிடையே காமராஜ், வைக்கம் சென்று போராட்டப் பணியாளர்களோடு கலந்து கொண்டு ஆக்க வேலைகளை ஆற்றினார்! ஆனால், அவர் கைதாகவில்லை!

திருவனந்தபுரம் கடை வாழ்க்கை, காமராஜரின் தேசிய வேட்கையை தணிக்கவில்லை! அவர் எப்போதும் தேசிய எழுச்சியின் அரசியல் சம்பவங்கள் மீதே அக்கறை கொண்டு, அங்கும் - இங்கும் அலைவதைக் கண்ட அவருடைய மாமன், மீண்டும்- விருது நகருக்கே அவருக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

இந்நிலையில், 1920-ஆம் ஆண்டு காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போர் ஆரம்பமானது. சேலம் சி. விசயராகவா சாரியார், நாகபுரி மாநாட்டிலே அதைப் பிரகடனப்படுத்தினார்.

அப்போது கிலாபாத் இயக்கத்தின் முஸ்லிம் மௌல்விகள், காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையை ஒரு தற்காலிக ஆயுதமாகவே ஏற்போம் என்று அறிவித்தார்கள்! அண்ணல் காந்தியடிகளின் கொள்கையை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டதால், கிலாபாத் இயக்கமும் இணைந்து - ஒத்துழையாமைப் போரை நடத்தின!

## காங்கிரஸ் கட்சியில் காமராஜ் பணிகள்!

காமராஜ், தனக்கே உரியதான தேசிய உணர்ச்சிப் பெருக்க வீரியத்தோடும் கம்பீரத்தோடும் - காங்கிரஸ் கட்சியின் பணிகளைக் கடமையாகக் கருதிச் செய்து வந்தார்.

மதுரை மாவட்டத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலும் மதுரை நகரிலும் அப்போது நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களிலே அவர் கலந்து கொண்டு பணியாற்றினார்.

பொதுக்கூட்ட மேடைகளிலே அவர் பேச ஏறும்போது, தெளிவாகவும் - பொங்கிவிழும் உணர்ச்சிகளோடும், அதே நேரத்தில் மக்களுக்கு உணர்ச்சிகள் உந்தியெழுமாறும் - அடக்கமாகவும் - பதட்டமற்றவராகவும், அந்த ஊர் மக்களின் கிராமிய மொழிகளிலேயே பேசினார்.

காங்கிரஸ் கட்சியின் தொண்டுகளை அவர் ஆற்றும் போது, அஞ்சாநெஞ்சமும் - அடங்கா ஆத்திரமும் அடிக்கடி அவரிடம் எதிரொலித்தன! காரணம், இளமையின் வார்ப்பு அல்லவா?

அந்த எழுச்சி, அவரது துணிவைத் தூண்டியது! அதனால், அரசியல் கிளர்ச்சிகளில் தாமே நேரில் ஈடுபட வேண்டும் என்ற முடிவுக்கு அவர் தள்ளப்பட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் விருதுபட்டி நகரக்கிளைக் கட்சியிலே காமராஜ் உறுப்பினராகச் சேர்ந்தார்; காங்கிரஸ் பிரசாரத்தைக் கிராமங்கள் தோறும் அவர் செய்தார்; மக்கள் ஆதரவைத் தன் பக்கம் திரட்டிக் கட்சிக்குப் பலம் உருவாக்கினார்; தனக்குப் பின்னாலே துணிகரமாகத் திரண்டெழும் வாலிபர்களையும் - மக்கள் அணிகளையும் சேர்த்தார்.

இரயில் நிலையங்கள் - கடைவீதிகள் - பேருந்து நிலையங்கள் - சந்தைகள் கூடும் ஊர்கள், அங்கே திரளும் மக்கள் ; திருவிழாக்கள் போன்ற இடங்களுக்கெல்லாம் காமராஜ் மூவண்ணக் கொடிகளுடன் சென்று கூட்டம் போடுவார்; பேசுவார்.

கருத்த முகம் கொண்ட காமராஜ் தாம்பேசும் கூட்டத்தில், மக்கள் முகம் சிவக்க உணர்ச்சி உமிழப் பேசுவார்! ஆர்ப்பரித்த ஆவேசம் அவரிடம் அப்போது ஆட்டம் போடும்!

விருது நகரில் அவருடன் கல்விகற்ற பள்ளி நண்பர்கள், காமராஜ் என்ன கூறுகிறார் என்பதையே எப்போதும் எதிர் நோக்குவார்கள் - எடுத்த பணிகளைப் பொங்கும் ஊற்றத்தோடு ஊர்தோறும் பரவலாகப் பணிபுரிந்திட!

அதனால், பொறுப்புடன் எதையும் பேசுவார்! வார்த்தை வாதங்களை வம்படிக் கூச்சலாக்காமல், வரம்புக்குட்பட்ட உணர்வுகளை வரையறுத்து, கேட்போர் நம்பிக்கை பெறுமளவிற்குப் பேசுவார்; கடமையாற்றுவார்! உடனுள்ள நண்பர்களும் - மக்களும் உலை அனல்பட்ட புழுக்களைப் போன்று போராட்ட உணர்வுகளைக் காமராஜர் பேச்சால் கேட்டுத் துடிப்பார்கள்!

அடிபட்ட கொசுகூட அடுத்த விநாடி துடித்தெழுந்து பறந்தோட உயிர்த்தெழுவதைப்போல, அவருடைய நண்பர் அணிகள் எந்த இடுக்கண்களையும் ஏற்றுப் பணியாற்றமுற்பட்டார்கள்.

அரசியலில் விடுதலைப் போராட்ட விளைவுகளின் வேள்வித் தீயிலே, சில தியாகப் பொறிகளாகத் திகழும் மனப் பக்குவத்தை அவர்களுக்கு உருவாக்கினார் காமராஜ்.

அத்தகைய அரசியல் வகுப்புகளாக அமைந்தன, அவருடைய பொதுக்கூட்டப் பேச்சுகளும் - போராட்டக் கடமைகளும், பொறுப்பான ஊர்ச் சேவைகளும் - மக்கட் தொண்டுகளும்! இவ்வாறு காமராஜ் ஆற்றும் அரசியல், அடிமட்டத் தொண்டர் எழுச்சி, எதிர்க் கட்சியான ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கும் - ஆங்கிலேயராட்சிக்கும் - ஒரு மருட்சியை உருவாக்கியது.

இந்த மருட்சியின் எதிரொலி என்ன? காமராஜ் நடத்தும் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களிலே கற்கள் வீச்சு, கலவரம், கலகம் முதலிய அராஜக எதிர்ப்புகளை அது உருவாக்கும்! எந்த எதிர்ப்புகளையும் ஏற்கும் அரசியல் ஏறெனத் தனது கட்சிப் பணிகளைக் காமராஜ் ஆற்றினார்! எதிர்ப்புகளை ஏணிகளாக்கிக் கொண்டார்! எதிர்ப்புறக் கலகங்களையும் - கலவரங்களையும் தனது அரசியல் விழிகளில் படரும் எழில் ஒளிகளாக ஏற்றார்!

விருதுநகர், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கோட்டையாக விளங்கிய பேரூர்! பணக்காரர்களால் பளபளத்த ஊர்! பதவிகளால் ஒளிபெற்ற அதிகாரச் செருக்கேற்றிய ஊர்! அதனால், அடிக்கடி காங்கிரஸ் கட்சிப் பணிகளிலே கஜகர்ணம் கோகர்ணம் போடுவார்கள் - காமராஜ் ஆற்றும் கடமைகளைத் தகர்க்க அவர்கள்!

## கள்ளுக்கடை மறியல் போர்!

காந்தி பெருமான், 1920-ஆம் ஆண்டு துவக்கிய ஒத்துழையாமைப் போரில், சில தொண்டர்கள் செளரி செளரா என்ற ஊரில் காவல் நிலைய ஆய்வாளரையும் - 21 காவலர்களையும், காவல் நிலையத்துள் பூட்டித் தீவைத்ததால் அனைவரும் இறந்தார்கள்!

இதைக் கேள்விப்பட்ட காந்திபிரான், இது தனது அகிம்சா தத்துவத்திற்கு எதிரானதென்று கருதி, திடீரெனப் போராட்டத்தை நிறுத்திவிட்டார். ஆனால், அந்த இயக்கம் தமிழ்நாட்டில் மட்டும் தனது போராட்டத்தை நிறுத்த வில்லை! அது கனலாகத் தகித்தது தமிழ் நாட்டில்! அந்தக் கனலின் வெப்பத்தைப் பிற கட்சிகளும் - மற்ற மாநிலங்களும் - இந்திய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், கள்ளுக்கடை மறியல் போராட்டமாக மாறியது!

## ஏன், திருமண எதிர்ப்பு?

காங்கிரஸ் நடத்தும் போராட்டங்களிலே காமராஜ் அவர்கள் கலந்து கொள்வதும், அடிக்கடி அவர் வெளியூர் சென்று அங்கங்கேயே தங்கி விடுவதும், அவரது அன்னையாருக்கு அச்சத்தை விளைவித்தது!

அதற்கேற்ப, உள்ளூர் பணக்காரர்கள் அன்னையாரிடம் தூதனுப்பி, அவரை அடக்குமாறு ஆணையிட்டார்கள். காவல் துறையிலே உள்ளவர்கள், காமராஜைப் பின் தொடர்ந்து கைது செய்யும் சமயத்தை எதிர்நோக்கி இருந்தார்கள் என்ற செய்தி சிவகாமியம்மையார் செவிக்கு எட்டிற்று!

அதனால், ஒரு பெண்ணைப் பார்த்து வாலிபர் காமராஜுக்கு ஒரு கால்கட்டுப் போட்டு விட்டால், எல்லாம் சரியாகி விடும் என்று அன்னையார் சிவகாமி எண்ணி அவருக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்தார்.

காமராஜ் அவர்களது சம்மதம் பெறாமலேயே, சிவகாமி அம்மையார், தனது சகோதரர் கருப்பைய நாடாருடன் கலந்து, திருமணத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வந்தார்.

எப்படியோ தாயாரின் எல்லா முடிவுகளையும் அறிந்து கொண்ட காமராஜ், தனது தாயாரையும், மாமனையும் அழைத்து, இனிமேல் கல்யாணப் பேச்சை எடுத்தால், என்னை அறவே நீங்கள் பார்க்க மாட்டீர்கள், மறந்துவிட வேண்டியது தான், என்ற தனது அறுதியிட்ட இறுதியை உறுதியாகக் கூறிவிட்டார்!

வேறுயாராவது அவரிடம் தூது அனுப்பிச் சொல்லச் சொல்லலாம் என்று இருவரும் கூடிக் கலந்து சிந்தித்தார்கள்? பெற்ற மனம் பித்தல்லவா? திருமணம் விடு தூதுக்காக எவரெவர் வந்தார்களோ அவரவர்களிடம் எல்லாம் பிள்ளை மனம் கல்லு என்பதைக் காமராஜ் மெய்ப்பித்தார்.

அன்றுமுதல், அவருக்கு நினைவாலயம் நிறுவும்வரை அவருடைய திருமணப் பேச்சு, எவராலும் மீண்டும் எழுப்பப் படவே இல்லை!

1922-ஆம் ஆண்டு, சாத்தூர் வட்டம் காங்கிரஸ் கட்சி மாநாடு. பெரியார் ஈ.வெ. ராமசாமி தலைமையில் அவரை அழைத்துக் காமராஜ் நடத்தினார். அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகத் காமராஜ் பணியாற்றினார். அப்போது தான் அவர் காங்கிரஸ் கட்சியின் சாதாரண உறுப்பினரிலே இருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக காமராஜின் அரசியல் வளர்ச்சி, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களின் கோட்டையைத் தகர்த்துக் காங்கிரஸ் கோட்டையாக மாற்றுமளவுக்குப் பயன்பட்டது.

## மதுரை மாநகர் – கள்ளுக்கடை மறியல்!

மகாத்மா காந்தி அவர்களின் ஒத்துழையாமைப் போர் நிறுத்தப்பட்ட பிறகு, அதன் எதிரொலியாக 1923-ஆம் ஆண்டு, மதுரை மாநகரில் கள்ளுக்கடை முன்பு மறியல் போராட்டத்தைக் காமராஜ் ஏற்று நடத்தினார்.

மதுரை நகர காங்கிரஸ் கட்சி அலுவலகம், ஓர் ஓட்டு வீட்டு மாடியிலே இயங்கியது. அங்கே மறியல் தொண்டர்கள் கூடுவார்கள்; எவ்வாறெலாம் போராட்டத்தை நடத்தலாம் என்று திட்டமிடுவார்கள்!

ஒருநாள், அவ்வாறு கூடிக் கலந்து பேசிய பின்பு, மாவட்டக் காங்கிரஸ் முக்கியஸ்தர்களிடையே போராட்ட நடவடிக்கை களுக்குரிய பிற வசதிகட்காகப் பேசிட, சிலரைச் சந்திக்கச் சென்றார்.

காமராஜ், வெளியே சென்று விட்டதைக் கண்ட மதுரைக் காவலர் துறை அதிகாரி ஒருவர், திடீரென அலுவலகத்திலேயே திபுதிபுவெனச் சில காவலர்களுடன் புகுந்தார். எவரும் எதிர்பாராத அவ்வேளையில், அங்கிருந்த மறியல் தொண்டர்களை எல்லாம் கைது செய்தார். பின்பு பணிமனையையும் பூட்டி விட்டார்.

திரும்பி வந்த காமராஜ், பூட்டப்பட்ட மறியல் பணிமனையைக் கண்டார்; கைது செய்யப்பட்ட தொண்டர்கள் விவரத்தையும் கேட்டு வியப்படைந்தார்! எல்லாரையும் கைது செய்து விட்டு என்னை மட்டும் வெளியே விட்டு விட்டார்களே, ஏன் என்று சிந்தித்து ஆராத் துயரடைந்தார்.

## சத்தியமூர்த்தி சந்திப்பு!

காந்தியடிகள் ஒத்துழையாமைப் போரைத் திடீரென நிறுத்தியதால், நாடெங்கும் அவர்மீது கண்டனம் எழுந்தது! அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியில், அதனால் கொள்கைச் சிக்கல் உருவாயிற்று.

தமிழகத்திலும் அதே குழப்பம் தலை தூக்கிற்று. காங்கிரஸ் கட்சி சுதந்திரம் பெறுவதற்காகச்சட்ட சபைக்குள் சென்று பணியாற்றுவதா? அல்லது, வெளியே இருந்து கொண்டே போராடுவதா? என்பதே அந்தச் சிக்கல்!

திருவாளர்கள் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், மோதி லால் நேரு, எஸ். சீனிவாச ஐயங்கார், புலாபாய் தேசாய், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் அணியில், சுயராஜ்ஜியக் கட்சி தோன்றியது! அது சட்ட சபை நுழையும் அணியாக வளர்ந்தது!

சக்கரவர்த்தி சி. இராஜகோபாலாசாரியார் தலைமையில், சட்டசபையில் நுழைந்து போராடுவதை எதிர்க்கும் பணியை, தமிழகத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஊக்குவித்தது!

காங்கிரஸ் கட்சி என்ன தீர்மானம் செய்கின்றதோ - அதற்கேற்பவே நான் நடப்பேன் என்றார் திரு காமராஜ், இப்படி பகிரங்கமாகக் கூறியதுடன் - உறுதியாகவும் நடந்தார்! - பணியாற்றவும் செய்தார்!

எஸ். சத்தியமூர்த்தி தான் காமராஜின் அரசியல் ஆசான் என்றும், அரசியல் சித்துக்களைச் செய்வதற்காகவே சத்தியமூர்த்தி காமராஜைப் பயன்படுத்தினார் என்றும், பிற்காலத்தில் தனக்குப் பழி சூழுமோ என்பதை அன்றே புரிந்துகொண்ட காமராஜ், அப்போது - அவரைப் பகிரங்கமாகவும், அரசியல் ரீதியாகவும், கொள்கைப் பிடிப்போடும் எதிர்த்தார் என்றே - நமக்குப் புரிகிறது அல்லவா?

சுயராஜ்ஜியக் கட்சி சட்ட சபை நுழைவை, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி ஆதரித்த பின்பு, அதற்கான தேர்தல் பணிகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்குமாறு காங்கிரஸ் காமராஜுக்கு கட்டளையிட்ட பிறகே, அந்தப் பணிகளை அவர் ஏற்றார்; தொடர்ந்தார்! கட்சியின் கருத்துக்கு ஏற்றவாறு, எஸ். சீனிவாச ஐயங்காருடனும், எஸ். சத்தியமூர்த்தியுடனும் இணைந்து, காமராஜ் தனது தேர்தல் பணிகளை ஆற்றினார்.

## காமராஜ் ஏற்ற தேர்தல் பணிகள்

1926-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் வந்தது! ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து சுயராஜ்ஜியக் கட்சி சட்டசபைக்குப் போட்டியிட்டது! அதற்கான பணிகளைக் காமராஜரே முன்னின்று நடத்தினார்!

தேர்தல் பிரச்சாரத்தை சுயராஜ்ஜியக் கட்சிக்காகச் செய்திட, மாவீரர் காமராஜ் விருதுநகரிலிருந்து தொண்டர் படை அணிகளுடன் ஸ்ரீ வைகுண்டம், நாசரேத், ஏரல் ஆகிய நகரப் பகுதிகளுக்குச் சென்றார்!

அவருடன், முருக - தனுஷ்கோடி என்ற அவரது பள்ளி நண்பரும், பிற காங்கிரஸ் தொண்டர்களும் திரண்டு சென்று தேர்தல் வேலைகளைச் செய்தார்கள். இந்த முருக - தனுஷ்கோடி என்பவர் தான், பிற்காலத்தில் தலைவர் காமராஜ் விரும்பியதற்கேற்றவாறு, காங்கிரஸ் கட்சிக்கென நவசக்தி என்ற நாளேட்டினைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீலன் சிலையை அகற்றப் போர்

இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று வரலாற்றாசிரியர் களால் வரையறுக்கப்பட்டது சிப்பாய் புரட்சி என்ற இராணுவப் போர்.

ஜெனரல் நீல் என்ற வெள்ளையன், அந்தச் சிப்பாய்ப் புரட்சியின் போது, மனித சுபாவங்களுக்கு மாறான கொடுமைகளைச் செய்தான். இராணுவத்தில் காட்டுத் தர்பாரை நடத்தி வந்தான்.

வெள்ளையராட்சி, அவனது மிருகத்தனமான நடவடிக்கை களைப் பாராட்டும் வகையின் நினைவாக, சென்னை மவுண்ட்ரோடு என்ற அண்ணாசாலையில், நீல் என்ற அந்தக் கொடியவனுக்கு சிலை ஒன்றை நிறுவியது! நிறுவிய இடத்தைவிட்டு அந்தச் சிலையை அகற்ற வேண்டும்! மனித நேயமற்றவனுக்கு சென்னை மாநகரின் இதயம் போன்ற மவுண்ட்ரோட்டில் சிலை இருப்பதா?

அதை உடனடியாக அகற்ற வேண்டும் என்று தமிழகக் காங்கிரஸ் வீரர்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அது தான் நீலன் சிலை அகற்றும் போர். அந்தப் போராட்டத்தில், குடியேற்றம் சாமிநாத முதலியார், சோமயாஜுலு போன்ற காங்கிரஸ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். இறுதியாக அந்தக் கிளர்ச்சியை ஏற்று நடத்திடக் காமராஜ் அவர்கள் பொறுப்பை ஏற்றார். பரபரப்புடன் அதற்கான பணிகள் நடந்தன.

அறிவெல்லாம் அருங்கனியாகும்போது அண்ணல் காந்தியடிகள் இந்திய அரசியலில் காலடி வைத்தார்! அதற்கான அரிச்சுவடி நெறிகளையெலாம் அகிம்சா தத்துவத்துக்குள் அடக்கி, அறப்போர் ஆற்றிய மறப்போர் பலம் கொண்ட அரசியல் அரிமாவாகத் திகழ்ந்தார். அன்பெலாம் பூத்து, அறமெலாம் காய்த்து அற்புத மனித நேயமெலாம் பழுத்த அரிய புகழால் செழித்த தமிழ் மண்ணான சென்னை மாநகரில் அடிகள் முதன் முதலாகக் காற்சுவடு பதித்தவர்.

பின்னர், பலமுறை தமிழகம் வந்த அவர் பயண வருகையில் ஒருநாள் 21.9.1921-ம் நாள். சங்கம் வைத்து மொழி வளர்த்த பாண்டியர் மண்ணான மதுரை மாநகருக்கு அன்று மாலை 6 மணிக்கு காந்தியடிகள் வருகை தந்தார்.

கல்லூரி மைதானத்தில் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. கூட்ட நாடக மேடையிலே முருகன் வேடத்தோடு கொக்கு பறக்குதடி பாப்பா, வெள்ளை-கொக்கு பறக்குதடி பாப்பா! என்ற பாடலைப் பாடியபடியே உயிர் நீத்த தேசபக்தர் எஸ். எஸ். விசுவநாததாஸ் அக்கூட்டத்திலே தேசியப் பாடல்களைப் பாடினார்.

அப்போது காந்தியடிகள் பேசிய ஆங்கில உரையை எஸ். டி. கிருஷ்ண ஐயர் மொழி பெயர்த்தார். அந்தக் கூட்டத்தில் தான் பிற்காலத்தில் காலா காந்தி என்று பாரதநாட்டு மக்களால் போற்றப்பட்ட காமராசர் அவர்கள் முதன் முதலாகக் காந்தியடிகளைப் பார்க்கிறார்.

அதற்குப் பிறகு காந்தி பெருமான் 1927-ம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார். சென்னையிலே அடிகள் எஸ்.சீனிவாச ஐயங்கார் இல்லத்திலே தங்கியிருந்தார்.

## அண்ணலிடம் காமராஜ் ஆட்சி!

அண்ணல் காந்தியடிகளைச் சந்தித்து நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தை எப்படியெப்படி நடத்தலாம் என்ற யோசனைகளைக் கேட்டறிய காமராஜ், ஐயங்கார் வீட்டிற்குச் சென்றார்; சந்தித்தார். ஆசியும் பெற்றார்; போராட்டம் நடத்தும் அனுமதியையும் பெற்றார்.

மகாத்மா அவர்கள், போராட்டம் நடத்தும் வழிமுறைகளையும், அதற்கான அறிவுரைகளையும் கூறும்போது, வன்முறைகளற்ற வகையில் வெறுப்பை மட்டுமே உணர்த்தும் நிலையில் போராட்டத்தை நடத்துங்கள் என்றார்.

வெறுப்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று காமராஜ் அவர்களால் கேட்கப்பட்ட வினாவிற்கு "பொது மக்கள் பார்த்து ஏளனம் செய்யும் நிலையில் நீல் சிலை மீது சிறு சிறு களிமண் உருண்டைகளை உருட்டிப் போட்டு நமது வெறுப்பைக் காட்டுங்கள்" என்று அடிகள் அறிவுரை கூறினார்.

இங்கிலாந்திலே இருந்து வருகின்ற சைமன் குழுவை எதிர்த்துக் காங்கிரஸ் கட்சி போராட வேண்டும் என்ற தீர்மான அடிப்படையில், சைமனே திரும்பிப் போ என்று முழங்கும் போராட்டப் பணிகள், அப்போது விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் நடைபெற்று வந்தன. அதனால், நீலன் சிலைப் போராட்டம், நிறுத்தப்பட்டு, முழு கவனமும் சைமன் கமிஷன் எதிர்ப்பு மீதே திருப்பி விடப்பட்டது.

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் 43-வது மகாசபை தமிழ்நாட்டில் நடத்தும் முறை வந்ததால், அந்த மாநாடு 1927-ஆம் ஆண்டு, சென்னை எழும்பூர் பகுதியிலே உள்ள ஏரிக்கரைத் திடலில் நடந்தது! டாக்டர் அன்சாரி, அந்த மாநாட்டிற்குத் தலைமையேற்றார்! தலைவர் காமராஜ், விருது நகரிலே இருந்து சென்னை மாநாட்டிற்கு வந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பாகக் கலந்து கொண்டு பணியாற்றினார்.

உலகச் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த பண்டித ஜவகர்லால் நேரு, அவரது துணைவியார் கமலா நேரு, தங்கை விஜயலட்சுமி பண்டிட், மகள் சிறுமி இந்திரா உட்பட்ட அனைவரும், மார்சேல்ஸ் என்ற ஐரோப்பிய நகரத்திலேயிருந்து நேராகச் சென்னை வந்து மாநாட்டிலே கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இந்த மாநாடுதான், இந்தியாவிற்கு முழு சுதந்திரம், போர் ஆபத்து, முஸ்லிம் லீக்கோடு கலத்தல், என்ற முழக்கவுரைகளை எதிரொலித்தது! அந்தக் கருத்துக்களைத் தீர்மான வடிவங்களாக ஒரு மனதாக ஏற்று, நேரு அவர்கள் அம்மாநாட்டில் வீர விளக்கவுரை களை ஆற்றினார்.

ஒரு மனதாக சென்னை மாநாடு நேருவின் தீர்மானக் கருத்துக்களை ஏற்றதைக் கண்டு, நேரு அவர்களுக்கே சந்தேகம் ஏற்பட்டது. மாநாட்டிலே இருக்கும் பார்வையாளர்களும் - பிற தலைவர்களும் தமது தீர்மானக் கருத்துக்களை எப்படி ஏற்றார்கள்? ஒருவேளை, தீர்மானத்தின் உட்பொருளை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது தவறான பொருள் கொண்டு விட்டார்களா? என்பவைதான் அந்த சந்தேகம்!

அதன் உண்மையை, பூரண சுயராஜ்ஜியம் என்ற தீர்மானம் ஏற்படுத்திய சூடான வாக்கு வாதங்களே உருவாக்கி விட்டது! அதற்கு இரண்டொரு ஆண்டுகளுக்குப் பிறகுதான் முழு சுயராஜ்ஜியம் தேவை என்ற இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியின் அடக்கமுடியாத, உயிராற்றலான ஆசையாகவே மாறியது.

## காமராஜ் மாநாடும் நேரு சந்திப்பும்!

மாநாடு முடிந்த பின்பு எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும், காமராஜும் சென்று, பண்டித நேரு அவர்களைச் சந்தித்தனர். விருதுநகரில், இந்தியக் குடியரசுக் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு மாநாட்டை நடத்திட நேருவிடம் அனுமதியும், அதில் அவரும் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஒப்பமும் காமராஜர் பெற்றார்!

அந்த மாநாட்டை விருதுநகரில் சிறப்பாக நடத்தினார் காமராஜ். நீலன் சிலையை அகற்ற வேண்டும் என்ற பழைய தீர்மானக் கருத்தை இந்த மாநாட்டிலே மீண்டும் நேரு உயிர்ப்பித்துப் பேசினார்!பண்டித நேரு, காமராஜின் தேசிய உணர்வை மிகவாகப் பாராட்டினார். நீல் சிலையை அகற்றும் பிரச்சினையை நிறுத்தாதே - நடத்து, என்று கூறி காமராஜ் நெஞ்சினை அவர் கனலாக்கி விட்டார்!

மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட நீல்சிலை அகற்றல் என்ற தீர்மானத்தைக் கண்ட ஆங்கிலேயர் ஆட்சி, நீலன் சிலையை இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் ஒரு நாள் அகற்றிவிட்டது! சென்னைப் பொருட்காட்சி சாலையில், 1937-ம் ஆண்டு அந்த நீலன் கல் வடிவப் பொம்மை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அப்போதைய சென்னை சட்டசபையில் எப்படி அகற்றலாம் நீலன் சிலையை? என்ற வினா மிகக் காரசாரமாக எழுந்தபோது 'எங்கள் சிலை அது! எந்த இடத்திலும் நாங்கள் அதை வைப்போம்! என்று அப்போது சென்னையில் பிரதமராக இருந்த இராஜாஜி அவர்கள் சம்மட்டி அடிபோல் பதில் கொடுத்தார்! நீலன் சிலை விவகாரம் இத்துடன் நின்றது!

## சைமனே திரும்பிப்போ!

சர் ஜான் சைமன் குழு, 1928-ம் ஆண்டு இந்தியா வந்தது! ஏற்கெனவே திட்டமிட்டபடி சைமன் எதிர்ப்புணர்வு அப்போது இந்தியாவெங்கும் புதுப்புது சக்தியோடும், புதுப்புது சுறுசுறுப் போடும் துடித்தபடியே நிலவியது. ஆலைத் தொழிலாளிகள், விவசாயிகள், நடுத்தர மக்கள், படித்த அறிஞர்கள், மாணவர்கள் இடையே எல்லாம் இந்தப் பரபரப்பு அரசியலுணர்வோடு காணப்பட்டது!

அயோத்தி விவசாயிகள் சட்டம், குஜராத்திலே பர்டோலி சத்தியாக்கிரகம், பம்பாய் நிலவரி உயர்வுச் சட்டம், வாலிபர்களின் எழுச்சி மாநாடுகள் - இவையெல்லாம் அந்தந்த மாநிலத்திலே ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்க்கும் ரத.கஜ. துரக பதாதிகளாயின!

இவற்றில் எல்லாம் மிகக் குறிப்பிடத்தக்க அரசியல் கிளர்ச்சிதான், சைமனே திரும்பிப்போ என்ற கிளர்ச்சி! இத்தகைய போராட்டங்களால் அப்போதைய இந்தியா- மிகுந்த பரபரப்பும், சுறுசுறுப்புமாகச் சுழன்று கொண்டே இருந்தது! சைமனே திரும்பிப் போ என்ற கிளர்ச்சியில் காங்கிரஸ் மிதவாதிகளும்; அப்போது சேர்ந்துப் போராடலானார்கள்!

எந்த இடத்திற்கு சைமன் கமிஷன் சென்றாலும், சைமனே திரும்பிப்போ, என்ற ஆரவாரங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. கறுப்புக் கொடிகள் வானளாவிய கார்மேகங்கள் போலக் காட்சி தந்தன! எங்கும் நிறை நாத பிரம்மமாக எங்கும் எதிர்ப்புகள் எழவே, அது சைமன் துரைக்குக் கோபத் தீயைமூட்டி விட்டது.

சைமனே திரும்பிப்போ! என்ற சொற்கள் எதிரொலிக்கும் இடங்களிலே எல்லாம், சாத்தானின்; அடக்குமுறைப் பலாத்காரம் பயம் காட்டியது!

அடக்குமுறை ஆர்ப்பரிப்பு இருந்தாலும், அஞ்சாத எதிர்ப்புச் சக்தி வெற்றி பெற்றபடியே அங்கங்கே நடத்து கொண்டிருந்தது! சைமன் கமிஷன் அடக்கு முறைகளை எதிர்த்து பஞ்சாபில் உள்ள லாகூரில், லாலா லஜபதிராய் அப்போது ஆயிரக் கணக்கான மக்களிடையே நின்று ஆரவார முழுக்கங்களை முழக்கிக் கொண்டிருந்தார்!

ஆங்கிலேய இளைஞனான ஒரு காவல் துறை அதிகாரி, அப்போது இலஜபதிராய் மார்பிலே ஓங்கிச் சரமாரியாகக் குண்டாந்தடியால் அடித்துக் கொண்டே இருந்தான்! ஆனால், கூட்டம் எவ்விதப் பலாத்கார வன்முறைகளிலேயும் இறங்கவில்லை! லாலா அவர்கள் அறப்போர் வழியிலே நின்று காந்தியடிகளின் அகிம்சா தத்துவத்திற்கு இலக்கணமாக விளங்கினார்.

அடிபட்ட வீரர்கள் அனைவரும் காந்தீயத்திற்குரிய இலக்கியமாகத் திகழ்ந்தார்கள்! லாலா மார்பிலே பலமான தடி அடிகள் விழுந்ததால், உடம்பெல்லாம் ஊமைக் காயங்கள் ஊடுருவின. சில நாட்களுக்குப் பின், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராய் மாண்டார் என்ற எரிமலைச் செய்தி இந்திய பூமியெங்கும் வெடித்தது!

## மதுரை நகரிலே சைமன் எதிர்ப்பு!

அதே சைமன் கமிஷன் தான், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராயைப் பிணமாக்கிய சைமன் கமிஷன் தான், தமிழ்நாட்டிலே வலம் வர மதுரை மாநகர் வந்தது! எதிர்ப்புகளையே வரவேற்பாகப் பெற்ற சைமன் குழுவுக்கு; மதுரையில் வரவேற்பு வழங்கிட திருமலை நாயக்கர் மஹாலிலே அரசு ஆதரவாளர்கள் கூடினார்கள்!

காங்கிரஸ் செயல்வீர அரிமாக்கள், அணியணிகளாகக் கைகளிலே கறுப்புக் கொடிகளை ஏந்தி, சைமனே திரும்பிப் போ, என்ற முழக்கங்களோடு, மகாலை நோக்கி நடந்தது! விநாடிக்கு விநாடி, மோதல் இதோ, அதோ மோதல் என்ற குரல்கள் எதிரொலித்தன! கூட்டத்து மக்கள் உச்சக் கட்ட உணர்ச்சியிலே குவிந்தார்கள்!

இத்தகைய போராட்ட ஆர்ப்பட்ட ஆழியின் உணர்வலைகளுக்கு இடையேதான், மூவண்ணக் கொடி, பறக்கும் மோட்டார் கார் ஒன்று மஹால் முன்பு வந்து நின்றது!

பாண்டிய நாட்டுச் சிங்கம் காமராஜ் வாழ்க! மாவீரர் காமராஜ் வாழ்க! மகாத்மா காந்திக்கு ஜே! சைமனே திரும்பிப் போ! என்ற முழக்கங்களோடு முத்தமிழ்த் தொண்டர்கள் புடைசூழ, முத்தொள்ளாயிர மன்னனைப் போல வந்து இறங்கினார் காமராஜ்!

## போராட்டக் களத்தில் மாவீரன் காமராஜ்!

மகாத்மா காந்திக்கு ஜே! சைமனே திரும்பிப் போ! என்ற முழக்கங்கள் வானைப் பிளந்தன; ஆரவார மின்னல்கள் ஒளியுணர்வுகளோடு பளிச்சிட்டன! மாவீரர் காமராஜைப் பின்பற்றி, மாபெரும் தேச பக்தர் ஜார்ஜ் ஜோசப் அவர்களும்... காரிலே கம்பீரமாக அங்கே வந்து சேர்ந்தார்!

காமராஜ் அவர்களைக் கண்ட மதுரை மாநகர் மக்கள், பெருத்த ஆர்ப்பாட்டமிட்டார்கள்! உடனே, ''தனுஷ்கோடி இங்கே வா!'' என்று தனது நண்பரை அழைத்தார்! கையிலே கருப்புக் கொடியை அவரிடம் கொடுத்தார்! ''என் பின்னாலே வா'' என்று கட்டளையிட்டார் - காமராஜர்!

தளபதி காமராஜூம், ஜோசப்பும் முன்னே போக, அவருடைய நண்பர்களும் - தொண்டர்களும் மறவர்களாக அணிவகுக்க; உணர்ச்சி பெற்ற மதுரை மாவட்டப் பொது மக்கள், இராணுவம் போல பின்னே நடைபோட்டார்கள்! சைமனே திரும்பிப் போ! என்ற ஓங்கார ஒலிகள். ஆங்காங்கே ஆலய உள்ளொலிக் கற்களின் இசையோடு மோதி மோதி, பொங்கு மாங் கடலலைகளைப் போல எதிரொலித்தன.

பாண்டியனின் புறப்பாட்டுப் பறை முழக்கங்களொப்ப, சைமன் எதிர்ப்புப் போர் முழக்க ஒலிகளோடு வீறு நடையிட்டவாறே காங்கிரஸ் தொண்டரேறுகள் மகால் மண்டபம் முன்பு அணி வகுத்தனர்!

காங்கிரஸ் தொண்டர்களின் போராட்டக் கடுமைகள் தான் கனற்கற்களாக அனல் பறந்தனவே தவிர, பரங்கியர் காவல்துறை ஏதும் எதிரார்ப்பாட்டம் செய்யாமல், என்ன - நடக்கிறதெனத் திரும்பியும் பாராமல், காக்கிச் சட்டைகளை மாட்டிய சோளக்கொல்லைப் பொம்மைகளைப் போல, பனிப்போர் காட்சிகளாகவே காவலில் காணப்பட்டனர்!

தடியடி தர்பார் ஆரவாரங்கள் இல்லை! ஆனால், லஜபதிராயைப் பிணமாக்கிய தன்மான ரோஷங்கள், அங்கே கோஷங்களாகக் கேட்டன!

வன்முறைகளேதும் நடந்திட வழி காட்டவில்லை காவல்துறை! காரணம் 22 காவலாளர்களைச் சௌரி சௌராவில் உயிரோடு எரித்த அச்சம் - அங்கே, கண்ணாடியின் பிம்பங்களாக ஆடிச் சுழன்று கொண்டே இருந்தன. சைமனே திரும்பிப் போ என்ற இடிமுழக்கங்கள்; கூடல் நகரின் வீதிகளிலே எல்லாம், மக்கள் கூடி ஒலித்தபடியே நின்றனர்.

எதிர்பார்த்த ஆங்கிலேய அராஜகம் ஏதும் அங்கே நடக்கவில்லை! நடந்தது என்னமோ ஒன்றே ஒன்று தான்! என்ன அது? கறுப்புக் கொடி கடல் அங்கே எதிர்ப்பு அலைமுழக்கங்களை எழுப்பிக் காட்சியளித்ததோடு, 'மாவீரர் காமராஜ், தொண்டரணி ஏறு ஜார்ஜ் ஜோசப் எழுப்பிய மெக்கபோன் முழக்கங்களான - சைமனே திரும்பிப் போ' என்ற அலை மோதல்கள் தான் அது!

1929-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி களபலியானது - பாரதக் கதை அரவானைப் போல!

அதனால் விளைந்த நன்மை என்ன? கன்சர்வேடிவ் ஆணவம் கல்லறைக்குள் ஆமைபோல் குடியேறியது. தொழிற்கட்சி அந்த சமாதியின் மேலேறி நின்றது!

இங்கே இந்தியாவில் கறுப்புக் கொடி காட்டிய காங்கிரஸ் தொண்டர்கள் கடும் கொடுமைகளுக் காளாவதையும், சிறைக் கைதிகள் சித்ரவதை செய்யப்படுவதையும் - கண்டித்து; ஜதீந்திரநாத் தாஸ் என்பவர் உண்ணாவிரதம் இருந்தார்! தூக்கு மேடையை முத்தமிட்ட மாவீரன் பகத்சிங் அவர்களுடன் இந்த தாஸ் ஒன்றாகச் சிறையில் இருந்தவர்!

ஆகஸ்டு மாதத்தில் தாஸ் நோன்பை ஆரம்பித்தார்! இன்று போல அன்று அரசியல் அவமானச் சின்னமான உண்ணும் போர்கள் எல்லாம் இல்லை! அரசியலைக் கொச்சைப்படுத்தும் அகிம்சா அறமுமல்ல அது! அறுபது நாட்கள் தாஸ் உண்ணாமலே அறநோன்பு இருந்தார்! இறுதியாக அறுபத்தோராம் நாள் அவர் மாண்டார்!

தேசத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தவறாத வாலிபர்கள் எண்ணிக்கை, நாளுக்கு நாள் பெருகிவந்ததற்குக் காரணம், தேசபக்தியே! தாஸ் போன்றவர்களின் உயர்த்தியாகமே!

ஜதீந்திர நாத் தாஸ் தியாக மனப்பான்மை, வாலிபராக இருந்த காமராஜ் அவர்களின் நெஞ்சிலே ஆழப் பதிந்தது! நாட்டிற்காகத் தன் உயிரையும் பலி கொடுக்க அவர் தயாரானார்!

## காமராஜர் பங்கேற்ற உப்புப் போர்!

அண்ணல் காந்தியடிகளின் உப்புப் போர் ஆங்கிலேயர் ஆதிபத்தியத்தின் விலா எலும்புகளை ஒடித்த போராக மதிக்கப்பட்டது! உப்புச்சத்தியாக்கிரகப் போரை ஆரம்பிக்க மகாத்மா மக்களுக்கு அழைப்பு விடுத்தார்! உப்பு! உப்பு என்ற பேச்சே நாடெங்கும் பேச்சாக இருந்தது!

உப்புச் சத்தியாக்கிரகம், ஓர் ஆயுதமாக விளங்கும் விடுதலைப் போருக்கு என்பதை, எவரும் அப்போது ஆரம்பத்தில் எண்ணவில்லை! இந்த உப்புப் போர்தான்; சுதந்திரம் என்ற சுவைக் குரிய உப்பாக உருவாயிற்று என்பது - போகப் போகத்தான் மக்களுக்குத் தெரிந்தது!

அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை உருவாக்கிட 1884-ஆம் ஆண்டில் முயற்சித்த ஆலன் அக்டேவியன் ஹியூம் என்ற ஆங்கிலேயர், அன்று படித்த பட்டதாரிகளுக்கு ஓர் அழைப்பை விடுத்தார்!

அந்த அழைப்பிலே கல்கத்தா பல்கலைக் கழகத்தில் படிக்கும் பட்டதாரி மாணவர்களைப் பார்த்து, நீங்கள் இந்திய முன்னேற்றத்திற்குரிய உப்பாக இருக்க வாருங்கள்! என்று கூறி அழைத்தார்!

அன்று அவர் அழைத்த அழைப்பின் போது குறிப்பிட்ட அதே உப்புதான், ஆங்கிலேயரை எதிர்க்கும் உப்புச்சத்தியாக்கிரகப் போராக மாறிவிட்டது என்றால், அது என்ன அற்புதம் பார்த்தீர்களா! அந்த உப்புதான், இந்திய சுதந்திரத்திற்குரிய ஓர் ஆயுதப் போராக மக்களிடம் ஊடுருவி, உப்புப் போராக உருவெடுத்தது! இது மகாத்மா செய்த அரசியல் அற்புதங்களிலே ஒன்று!

இந்தியாவிலே உற்பத்தியாகும் உப்புமீது ஆங்கிலேயர் விதித்த வரியை எதிர்த்துத் தகர்த்தெறிய வேண்டும் என்று - அன்று அண்ணல் காந்தியடிகள் அறிவித்தார்! உப்புமீது விதிக்கப்பட்ட வரிச் சட்டங்களை உடைத்து, ஆங்கிலேய ஆதிக்கத்தின் ஆணவ ஆட்சியை எதிர்ப்பதற்கு ஈடு அது தான் என்று மக்களுக்குணர்த்தவே, உப்புப்போர் நடை பெற்றது!

தேசியப் போராட்டத்திற்கும் - உப்புக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்வி, அரசியல்வாதிகளிடையேயும் சரி, மக்கள் மன்றங்களிலேயும் சரி பெரியதோர் வியப்பான வினாவை எழுப்பிக் கொண்டிருந்தது!

உப்புப் போராட்டம் அண்ணல் திருவாயால் உரைக்கப் பட்டதுதான் தாமதம், நாட்டின் விலைவாசிகள் எல்லாம் மளமளவெனக் குறைந்தன! இதனால், விவசாயக் குடிமக்களும் ஏழைக் குடியான வர்களும் - நடுத்தர வர்க்கத்தினரும் குதூகலமடைந்தார்கள்! போராட்டத்தின் எழுச்சி, ஊற்று மடை திறந்து விட்டது போலாயிற்று - நாடு முழுவதும்! நகரங்கள், கிராமங்கள் முழுவதும் உப்பு செய்யும் அரசியல் அற்புதங்களைப் பற்றியே தினசரிப் பேச்சாக இருந்தது!

உப்புச் சத்தியாக்கிரமென அறிவித்ததால், நாளுக்கு நாள் நாட்டில் போராட்ட உற்சாகம் அதிகரித்ததே தவிர, அச்சமோ, பயமோ மக்களுக்கு உருவாகாமல், மக்கட் பலம் பெருகியே உந்தியது.

## காமராஜர் பெற்ற சிறைவாசம்!

எனவே, இதைக் கண்ணாரக் கண்ட காந்தி அடிகள், உப்புச் சட்டத்தை உடைத்தெறியும் சம்மட்டி நாள், ஏப்ரல் 6 என அறிவித்தார்! தண்டி கடற்கரை தான் களம் - என்றார். அன்று சென்றார் அங்கே! உப்புச் சட்டத்தை உடைத்தெறிந்தார்! சட்ட மறுப்பு பாரதமெங்கும் வெற்றிகரமாக நடந்தது!

தமிழகத்தின் உப்புப் போர்க்களம் வேதாரண்யம்! சட்டத்தை இங்கே ராஜாஜி உடைத்தார்! இந்தியாவில் வெள்ளையராட்சியை எதிர்த்து உருவான உப்புச் சட்ட உடைப்புப் போரைக் கேட்டு, உலகமெங்கும் ஓர் அதிசய பரபரப்பு உருவாயிற்று! ஆயிரக்கணக்கான மக்கள் அணிவகுக்க, அவர்களிடையே உப்பு வரி ஒழிக, உப்பு வரி ஒழிக என்ற முழக்கங்களை எழுப்பியவாறே தளபதி காமராஜ் அணி வகுத்தார்! அவர் பின்னாலே காங்கிரஸ் தொண்டர் படைகள் புடை சூழ்ந்து வீர நடை போட்டு வந்தன!

காவல் துறை இதையெல்லாம் வேடிக்கை பார்க்குமா என்ன? கைது செய்தது காமராஜ் அவர்களையும் - பிற தொண்டர் படைகளையும்! சிறைகட்டறையில் போராட்ட வீரர்கள் அடைக்கப் பட்டார்கள்!

காமராஜுடன் கைது செய்யப்பட்ட நண்பர்கள் அணியுடன், அவர் வழக்கு மன்றம் வந்தார்! நாட்டின் சுதந்திரத்திற்காக, உப்புச் சத்தியாக்கிரகம் செய்தேன் என்றார் நீதிமன்றத்தில் - காமராஜர்!

இரண்டாண்டுகள் சிறைவாசம் என்ற தண்டனையை அவருக்குத் தந்தது வழக்குமன்றம்! மகிழ்ச்சியுடன் தண்டனையை ஏற்றார்! காமராஜருடன் பங்கேற்றப் போராட்டத் தொண்டர்களுக்கும், அதே தண்டனையை வழங்கினார் நீதிபதி!

காமராஜ் என்ற கர்ம வீரர், நாட்டு விடுதலைக்காக, முதன் முதலாக உப்புப் போரிலே ஈடுபட்டார்! அதற்காக இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்றதும் இது தான் முதல் தடவை! அவர் அனுபவித்த சிறை வாசமும் இது தான் முதல் முறை!

தலைவர் காமராஜ் அவர்களை, அலிபுரம் சிறையிலே அடைத்தது ஆங்கில ஆட்சி! அப்போது, புது மணமகனாக இருந்த கே.எஸ். முத்துசாமியின் தாயாரும், காமராஜ் அவர்களின் அன்னையாருமான சிவகாமி அம்மையாரும் நீதி மன்றம் கொடுத்தத் தீர்ப்பைக் கேட்டு ஆராத் துயருற்றார்கள்!

## பரோலில் வெளிவர காமராஜ் மறுப்பு!

அலிபுரம் சிறைக்குச் சென்று, தலைவர் காமராஜுடைய பாட்டி பார்வதி அம்மையாரின் உடல்நிலையின் சீர்குலைவை அறிவித்து, அவரை பரோலில் வந்து போகுமாறு நண்பர்கள் முருக, தனுஷ்கோடி போன்ற மிக நெருங்கியவர்கள் எல்லாம் சிறையில் நேரில் கண்டு கூறியும், காமராஜ் வெளியே வர மறுத்து விட்டார்!

இதற்கிடையில், காந்தி - இர்வின் ஒப்பந்தம், 1931ஆம் ஆண்டு நடந்தது! அந்த உடன்படிக்கைக்கு ஏற்ப அரசியல் போராட்டக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தது பிரிட்டிஷ் ஆட்சி!

பாரதமெங்கும் கைது செய்யப்பட்ட உப்பு சத்தியாக்கிரகப் போராட்ட வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்! கர்ம வீரர் காமராசரும், மற்ற காங்கிரஸ் தொண்டர்களும் தமிழகத்தில் விடுதலை செய்யப்பட்டார்கள்!

## இரண்டு வகை போர் முறை!

எந்த எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, ஓர் அதிகாரச் செருக்குடைய ஆட்சியை எதிர்க்கும் போது, அவர்கள் இரண்டுவகைப் பட்டவர்களாகவே இருப்பார்கள்!

தனது கட்சி வளர, தான் முன்னின்று சிறை செல்பவர்கள் ஒரு ரகம்! மறு ரகம், சிறை சென்ற தொண்டர்களின் பின்னாலேயிருந்து கொண்டு, சிறை சென்ற தொண்டர்களையும் வளர்த்துக் கொண்டே, தனது கட்சியையும் வலுப்படுத்துகின்ற இலட்சிய நோக்கமுடையவர்கள்!

காமராஜ் அவர்கள் இதில் இரண்டாம் வகையைச் சேர்ந்த கர்மவீரர்! ஆனால், அவரைத்தான் ஆங்கிலேயர் ஆட்சி எதற்கெடுத்தாலும் முதலிலேயே கைது செய்து விடுவார்கள்!

*பிரிட்டிஷ் ஆட்சி என்ன? எந்த எதேச்சாதிகாரமும் அப்படித்தானே சர்வாதிகார ஏணியிலே ஏறும்? அதனைப் போல, எல்லாப் போராட்டங்களிலும் முதலில் அவர் கைதாவது மட்டுமல்ல - அவருடன் பழகுபவர்களையும் - செல்பவர்களையும் காவல்துறை அவசரப்பட்டு முதலிலேயே கைது செய்துவிடும்!*

## விருதுநகரில் விழா! வரவேற்பு!

*அலிபுரம் காராக்கிருகத்திலே இருந்து காமராஜ் சிறை மீண்டு விருதுநகர். வந்தார்! ரயில் நிலையத்திலே காமராஜ் அவர்களை வரவேற்றிட, மக்கள் அணை உடைந்த வெள்ளமாயினர்! மலர்மாலைகளைச் சூட்டினார்கள் காமராஜுக்கு! தலைவர் காமராஜர் வாழ்க என்ற முழக்கத்தை எழுப்பியவாறே, அவரைத் தோளிலே சுமந்து ஆரவார வீர நடையோடு வந்தார்கள்!*

*ஒரே பரபரப்பு விருதுநகர் வீதிகளில் எல்லாம்! எங்கு பார்த்தாலும் மூவண்ணத் தோரணங்கள்! காந்தியடிகள் படம் ஊர்வலத்தில்! காமராஜைக் கண்ட மக்கள் ஒரே பரபரப்பானார்கள்! கோயில், தெப்பக்குளம், கடைவீதி, பேருந்து நிலையம் போன்ற இடங்களிலே எல்லாம் மக்கள் தேங்கிக் தேங்கி நின்று எதையோ எதிர்பார்த்து ஏக்கமாக நின்றார்கள்! திருவிழாக் கோலமாகக் காட்சி தந்தது விருதுநகர்!*

*தலைவர் காமராஜ் ஊர்வலமாக அழைத்து வரப் பட்டார்! பட்டாளத்து வீரர்கள் வரும் பவனி போல காங்கிரஸ் தொண்டர்கள் வந்தே மாதரம் என்ற பாடலைப் பாடி ஒருவர் பின் ஒருவராக அல்ல, நால்வராக நடந்து வந்தார்கள்! விருதுநகர் பேரூர் அன்றுவரை காணாத விநோதமாக விளங்கியது காமராஜ் பவனி! அன்றுவரை - விருதுநகர் வரலாற்றில் இப்படியொரு தேசியத் திருவிழா! ஒரு சொந்த ஊர் விழா போல நடைபெற்றதே இல்லையாம்!*

*தலைவர் காமராஜ் அவர்கள் தனது இல்லம் அருகே இருந்த அம்மன் கோயில் மேடையிலே ஏறி நின்று, அணிவிக்கப்பட்ட மலர் மாலைத் தோற்றத்தோடு, அன்று அவர் ஆற்றிய எளிய ஏழ்மை உரையின் சுருக்கம் இதோ: ''நான் உங்களின் ஒருவன்! சாதாரணத் தொண்டன்! எனக்கு இவ்வளவு பெரிய வரவேற்பையும் - வாழ்த்தையும் கொடுத்தீர்கள்! உங்களுடைய அன்புக்கு என்னுடைய நன்றி!*

*நீங்கள் அனைவரும் எனக்காக ஒன்று செய்யவேண்டும். கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்! உங்களுடைய மகத்தான சிறந்த*

அன்பினால் எனக்குத் தலைக்கனம் வந்து விடக் கூடாது என்று நீங்கள் கடவுளைக் கும்பிட வேண்டுகிறேன்'' தலைவர் காமராஜ். சிறை, மீண்ட வரவேற்பு விழாவிலே ஆற்றிய உரை சுருக்கமாக, எளிமையாக அமைந்தாலும், அது ஒரு தேசபக்த வீரன் எவ்வளவு அடக்கமாகவும், அன்பாகவும், அதைக் கேட்கும் மக்களைத் தேசபக்திக்கு எப்படியெல்லாம் ஈர்க்க முடியுமோ, அப்படிப்பட்ட தன்மையிலே உணர்ச்சிப் பெருக்கோடு அமைந்திருந்தது!

அன்று மட்டுமல்ல, அவர் அரசியல் உலகில் அசைக்க முடியாத ஹெர்குலிசாக, சாம்சனாக இருந்தபோது, மக்கள் அவர் பக்கமே இருந்தார்கள் என்றால், காரணம் அவருக்குள்ள பல தகுதிகளிலே எளிமையாக, உண்மையாக, மக்கள் மொழியிலேயே பேசிய பேச்சுக்களுமே! தமிழ்நாட்டு அரசியலானாலும் சரி, அகில இந்திய அரசியலானாலும் சரி, அவர் எப்போது, எங்கே பேசினாலும், மிக ரத்னச் சுருக்கமாகப் பேசும் வழக்கத்தையே மேற்கொண்டார்!

அலங்காரமாகப் பேச வேண்டும், அழகாகப் பேச வேண்டும். அற்புதமாகப் பேச வேண்டும். அழகு தமிழ் மொழிச் சொற்களோடு பேச வேண்டும், எதுகை மோனைகளோடு பேச வேண்டும், உவமைகளோடு பேச வேண்டும், ஆங்காரமாகப் பேச வேண்டும், அகங்காரமாகப் பேசவேண்டும், நீண்ட நேரம் பேச வேண்டும், எல்லோரையும் தோற்கடிக்கும் முறையில் பேச வேண்டும் என்றெல்லாம் எண்ணிப் பேசும் பண்பு காமராஜருக்கு சாகும் வரை இருந்ததில்லை.

கிராமத்து மக்கள் எப்படி ஒருவருக்கொருவர் நேர்முகமாகப் பேசுவார்களோ அப்படிப் பேசுவார்! எல்லோருக்கும் புரியும்படி பேசுவார்! எதைச் சொல்ல வேண்டுமோ அதையே பேசுவார்! அவை நடுக்கம் இல்லாமல் பேசுவார். சாதாரண நகர் மக்களைப் போலவே பேசுவார்! அது தான், அவரது பேச்சின் சிறப்பாக அமைந்தது! அலிபுரம் சிறையினின்றும் காமராஜ் அவர்கள் திரும்பி வந்ததும், தனது பாட்டி பார்வதியம்மாளைப் பார்த்தார்! அந்த அம்மையார் பிறகு இரண்டொரு நாட்களில் காலமானார்!

பாட்டியம்மாளுக்கான இறுதிப் பயணச் சடங்குகளைக் காமராஜ் திரும்பி வந்துதான் செய்யும் நிலையேற்பட்டது! அந்த அம்மையார் மறைந்த பின்பு தான்; தனது துண்டை மடித்துத் தோளில் அணியும் புதுப்பழக்கம் அவருக்கு உருவானது! அதுதான் பாட்டியின் நினைவணியோ என்று நினைக்குமளவிற்கு, அவருடைய கடைசி நாள் வரைத் தொடர்ந்து அதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார்!

# 19. ஆசான் சத்தியமூர்த்தி மாணவர் காமராஜர்!

தமிழ்மொழியின் பெருமை இன்று தரணியெல்லாம் பாராட்டப் படுகின்றது என்றால், அந்தத் புகழ் மதுரை மாநகருக்கு மட்டுமே உண்டு!

கபாடபுரமும், தென்மதுரையும் முதல் இடைச்சங்கங்களை வளர்த்த பெருமை பெற்ற புனிதத் தலங்களாக அன்று திகழ்ந்தன!

இன்றைய மதுரையிலே அன்று கடைச்சங்கம் வளர்ந்த பாங்கினால் தான், தமிழரின் புகழ் உலகெங்கும் பேசப்படும் பெருமையைப் பெற்றது!

தாமரைமலர் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ள மதுரை மாநகருக்கு, ஆலவாய், கூடல் மாநகர் என்றும் வேறு சில பெயர்கள் உள்ளன!

இந்த மதுரை மாநகரின் முத்திரையாக இலக்கிய உலகில் பவனி வரும் சிலப்பதிகாரம் என்ற முத்தமிழ்க் காப்பியம், வழி வழி வந்த தமிழ் இனத்தின் பண்பாடுகளை, நாகரிக வாழ்க்கைகளை, கலை உலக வரலாறுகளை எதிரொலித்திடும் காலக் கண்ணாடியாக இன்றும் இயங்கி வருகிறது.

சமண மதப் பேரறிஞரான வச்ரநந்தி என்பார், நான்காவது தமிழ்ச் சங்கத்தை கி.பி. 470 ஆம் ஆண்டில் தோற்றுவித்ததும் இதே மதுரை மாநகரில் தான்! இராமநாதபுரம் மன்னர்பிரான் பாஸ்கர சேதுபதி அவர்கள், ஐந்தாம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி, இன்றும் அது இயங்கிக் கொண்டிருப்பதும் - இதே மதுரை மாநகரில் தான்!

பாமர மக்கள் பாராளும் காலம் என்றால் கவிஞர் இக்பால். அவரது வாக்குக்கேற்ப, ஆங்கிலேய எஜமானர்கள் ஆட்சியை எதிர்த்து, இந்தியப் பாமர மக்கள் தங்களுடைய மறுமலர்ச்சி வாழ்க்கைக்காகப் போராடி வரும் இந்தியப் பகுதிகளிலே ஒன்று மதுரை மாநகரம்!

## மதுரை மாநாடு; இராஜாஜி எதிர்ப்பு!

1931-ஆம் ஆண்டில் அதே மதுரை மாநகரிலே, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெற எல்லா ஏற்பாடுகளும் நடந்து வந்தன. அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவு அணிகளைப் போல, தமிழ்நாட்டிலும் இரு அணிகள் காங்கிரஸ் கட்சியைப் பிளவு படுத்திக் கொண்டிருந்தன.

ஒன்று எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அணி! மற்றொன்று இராஜகோபாலாசாரியார் அணி! இரண்டு அணித் தலைவர்களும் பிராமணர்கள் தான்! யார் கை மேலோங்கினால் அவரவர் அரசியல் பலம் உயரும் என்ற பதவிப் போட்டியே அவர்களுக்குக் காரணமாக இருந்தது! சத்தியமூர்த்தி அணி, ஏழை நடுத்தர மக்கள் அணி! இராஜாஜி அணியில், கதர்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கதர் துணிகளை விற்பவர்களும், அதன் கடைக்காரர்களும் இருந்தார்கள்.

இராஜாஜி கோஷ்டியினர், செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்கள்! காங்கிரஸ் கட்சியினுள்ளே எவ்வித மாறுதலும் புகக் கூடாது என்ற கொள்கையுடையவர்கள்! சத்தியமூர்த்தி அணியில், நடுத்தர மக்கள், ஏழைகள் அன்றாடம் உழைத்து உண்பவர்களைப் போன்றவர்கள் மட்டுமே சூழ்ந்திருந்தார்கள். வேறு எந்தவிதச் செல்வாக்கும் இந்த அணிக்குக் கிடையாது.

வளர்ந்து வரும் ஒரு கட்சியிலே பணம் படைத்தவர்கள் ஓரணியாகக் கூடிக்குலாவுவது அப்படி ஒன்றும் விந்தைக் குரியதல்ல! பணம் படைத்தவர்கள், பணக்காரர்களோடு நட்பாடுவதும், பதவிகளைப் பணப் பெருமைகளினால் பெறுவதும், ஏழை - அன்றாடம் சோற்றுக்கு உழைப்பவனோடு சேருவதும், பொருளாதாரக் கோலாகலக் கூத்துக்கள் தானே!

எனவே, திரு. சத்தியமூர்த்தி, ஏழைகள் அணிக்குள் நட்பாக நடமாடினார் என்றால், பணக்காரர்களோடு தானே பதவிப் பித்தர்களும் நடமாடுவார்கள்? அன்றைய காங்கிரஸ் கட்சியிலே, செல்வர்கள் கூட்டம், செல்வாக்குள்ளவர்கள் கூட்டம், இரண்டுமே இல்லாதவர்கள் கூட்டம் என்ற மேடு பள்ளங்கள் நடமாடின!

## காமராஜ் – இராஜாஜி ஆரம்ப மோதல்!

இராஜாஜி அவர்களுக்கு காங்கிரஸ் மேலிடத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது மட்டுமன்று; 'காந்தியடிகள் மனசாட்சியின் திறவுகோல்' என்ற பெருமையும் புகழும் இருந்தன!

அதனால், அவருக்குத் தமிழக அரசியலில் மற்றொருவரைக் காட்டிலும் அபரிமிதமான பெருமையும் - செல்வாக்கும் இருந்ததில் அதிசயம் ஒன்றும் இல்லை! அதை மேலும் பெருக்குவது எப்படி என்பதிலே மட்டும் அவர் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்திச் செயலாற்றினார்!

பணமில்லாதவர் கூட்டம் என்ற பெயரோடு, சத்தியமூர்த்தி அணி தமிழகத்தின் அரசியலில் ஓரம் கட்டப்பட்டிருந்த காட்சியைக் காமராஜர் கண்டார்! அவரும் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தானே - அதனால்!

ஏழை - பணக்காரர், செல்வாக்குடையவர் - அற்றவர், என்ற பேதங்கள், நாட்டின் விடுதலைக்காகப் போராடி வரும் ஒரு கட்சியிலே இருக்கலாமா? என்ற கேள்வியை காமராஜர் கேட்டார்!

திரு. சத்தியமூர்த்தி அவர்களைப் பொருளாதாரக் கண்ணோட்டத் தோடு பார்ப்பது போலவே, அவரது அரசியலையும், தியாகத்தை யும், நாவன்மையினையும் கணக்கிட்டார்கள்! அதனால், அவரது அரசியல் உழைப்புக் கேற்ற தகுதியைத் தர மறுத்தார்கள் ராஜாஜி அணியாளர்கள்!

இது அநியாயம்; அக்ரமம்; நீண்ட நாட்கள் நீடிக்காது! ஏழை மகன் ஒருவன் தனது கட்சி அரசியலிலே எவ்வாறு உழைக்கின்றான் - உழல்கின்றான் என்று எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர, ஏகடியம் பேசிக் கொண்டு, ஏளனமாகப் பார்த்துக் கொண்டு, மேனா மினுக்கி அரசியல் நடத்துபவர்களே அரசியல் பலமுடையவர்கள்; அரசியல் ஏஜமானர்கள் என்று எண்ணிக் கொண்டு அரசியல் நடத்தக் கூடாது என்பது காமராஜ் அவர்களின் அரசியல் கோட்பாடு!

அதனால், காமராஜ் அவர்கள், அந்த மேடு பள்ள அரசியல் செல்வாக்குள்ளவர்களோடு போர்க்கோலம் பூண்டிடும் கட்டாய நிலையை, உட்கட்சியை, எதிர் கோஷ்டியே உருவாக்கி வருவதைத் தள்ளவும் முடியாமல் - தவிர்க்கவும் இயலாமல், எஸ். சத்தியமூர்த்தி ஐயருக்குரிய ஆதரவைத் திரட்டினார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அப்போதைய தலைவராக இருந்தவர் டி சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள்! அதனால், மதுரையிலே நடைபெறப்போகும் மாநாட்டிற்கு அவர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்!

இராஜாஜி அணியினர் இந்த ஊர்வலத்தை எதிர்த்தனர்! பவனியில் கலந்து கொள்ளாமல் அவர்கள் தனியாகவே ஒதுங்கி விட்டார்கள்! ஏன், அப்படி ஓரம் கட்டினார்கள் ஒரே கட்சி ஊர்வலத்தை?

பொது மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்து வரும் கட்சியிலே, குறிப்பாக ஓர் ஆண்டுவிழா மாநாட்டிலே அதுவும் ஒரு மாநிலத்திற்குரிய தலைவரைத் தேர்ந்தெடுக்கப் போகும் கட்சித் தேர்தலிலே, தனிப்பட்ட முறையிலே -நமக்குள்ளிருக்கும் போட்டி பொறாமைகளை இப்படி வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதா? என்ற ஆத்திரம், கட்சிக் கோபம் 'சத்தியமூர்த்தி அணிக்கு' உருவாயிற்று.

ஊர்வலம் முடிந்த பின்பு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கான தலைவர் தேர்தல் நடைபெறத் தொடங்கியது! தேர்தலில் போட்டி பலமாக உருப்பெற்றது! யாராலும் கட்டுப்படுத்த முடியாத நிலையாக இருந்தது!

திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, பெரியார் ஈ.வெ.ராமசாமி, எஸ். சீனிவாசஐயங்கார் உட்பட வேறு சிலரும் கட்சித் தேர்தல் கூட்டத்தை விட்டு விலகி, வெளியேறி விட்டார்கள்.

### வாக்கு நாணயமற்ற அரசியல்! தன்நலம்!

இரண்டு அணிகளையும் சமாதானப்படுத்தும் சூழ்நிலையில், இராஜாஜியைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராகவும், துணைத் தலைவராக எஸ். சத்தியமூர்த்தி ஐயரையும் தேர்ந்தெடுப்பது என்ற முடிவு, கட்சியில் உருவானது!

இராஜாஜி அணி இதற்குச் சம்மதம் தெரிவித்ததால், இராஜாஜி தலைவரானார்! துணைத் தலைவர் தேர்தலுக்கு சத்தியமூர்த்தி ஐயரின் பெயர் முன் மொழியப்பட்டது.

கட்சியில் ஏற்கனவே சமாதான முறையில் பேசிமுடித்து ஒப்புக் கொள்ளப்பட்ட பதவி துணைத்தலைவர். அதை எதிர்த்தது ராஜாஜி அணி! கட்சியின் முடிவுப்படி துணைத்தலைவர் தேர்தலை இந்த அணி நடத்த விடவில்லை! தங்களுடைய அணித் தலைவர் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மகிழ்ச்சியால்; துணைத் தலைவர் பதவிக்காக முன் மொழியப்பட்ட சத்தியமூர்த்தி ஐயர் பெயரை எதிர்த்தார்கள் அவர்கள்!

சர்தார் வேதரத்தினம் பெயரைத் திடீரென முன்மொழிந்தது ராஜாஜி அணி! தலைவர் தேர்தலில் எதிர் பாராத பரபரப்புச் சூழ்நிலை! முன்பு சமாதானம் செய்தவர்கள் எடுத்த முடிவுப்படி நடக்காததால் - எதிர் அணியினர் ஆத்திரமடைந்தனர். அதனால் கலவரம் ஏற்பட்டது!

துணைத் தலைவர் தேர்தலில் இவ்வாறு திடீர் திருப்பத்தை ராஜாஜி அணி உருவாக்கியதைக் கண்ட சத்தியமூர்த்தி ஐயர் அணியினர், திடீரெனத் திருவண்ணாமலை திரு. அண்ணாமலைப் பிள்ளையின் பெயரை முன் மொழிந்தார்கள்!

உடனே இராஜாஜி குழுவினர் முன் பின் யோசித்து, மீண்டும் சத்தியமூர்த்தி அணியிடம் சமாதானம் பேசலானார்கள்! மறுபடியும் திரு. சத்தியமூர்த்தி ஐயரையே துணைத் தலைவராகத் தேர்வு செய்ய ராஜாஜி அணியினர் ஒப்புக் கொண்டு, வாக்களித்தார்கள்.

துணைத் தலைவராகத் திரு. சத்தியமூர்த்தி ஐயர் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தும் கூட, அவரது அணிக்கு ஆத்திரம் தணியவில்லை! அதனால், கட்சி செயற்குழு அனைத்திற்கும் சத்தியமூர்த்தி அணி ஆட்களாகவே நிறுத்தி வெற்றியும் பெற்றார்கள்! செயற்குழு முழுவதையும் கைப்பற்றினார்கள்!

இராஜாஜி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தாரே தவிர, அக்கட்சியின் செயற்குழு பலம் முழுவதும் சத்தியமூர்த்திக் குழுவிடமே காட்சியளித்தது! இதற்கெல்லாம் காரணம், காமராஜ் அவர்களுக்குக் கட்சித் தொண்டர்களிடம் இருந்த செல்வாக்குதான் என்று ராஜாஜி அணியினர் உணர்ந்து கொண்டார்கள்!

காமராஜ் அவர்கள் கட்சித் தேர்தல் களத்தில் முழு மூச்சாக இறங்கிப் பணியாற்றாமல் இருந்தால், கட்சியிலே அன்று சத்தியமூர்த்திக்கு இந்தப் பெரும்பான்மை பலம் ஏற்பட்டிருக்காது!

தலைவர் பதவிக்குப் போட்டி ஏற்பட்டது என்னமோ இரண்டு பிராமணர்களுக்கு இடையே எழுந்த ஒரு கட்சி சுயநலப் போட்டி தான்! பிராமணர்களுக்குள்ளேயே கட்டுக் கடங்காதது தனி ஒரு பிராமணர் தன்னலம் என்பதும், அன்று உலகுக்குப் புரிந்தது!

கட்சித் தேர்தலில் ஒரு பிராமணரின் மானத்தைக் காக்க, பிராமணரல்லாத காமராஜரால் தான் முடிந்ததே தவிர, இரு பிராமணர்களுக்கு இடையே இருந்த கட்சிப் பலத்தால் முடியவில்லை என்பதையும் - அன்றைய அரசியல் உலகம் அலசி ஆய்ந்தது!

காமராஜ், அப்போது தான் முதல் முதல் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினரானார்! ஆனால்; அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முழுப் பலத்தையும் கைப்பற்றினார்!

காமராஜ் அவர்கள் திரை மறைவிலே நின்று கொண்டு POPPAT POLITICS -ல் அரசியல் பொம்மைகளை ஆட்டுவிக்கும் சூத்திரக் கயிறாக இருந்தார்!

## ஏறிய ஏணியைப்போற்றிக் காத்தவர்

இராஜாஜியுடன் மோதுகின்ற கட்சி அரசியல் துரதிருஷ்டத்தை இராஜாஜியே உருவாக்கி விட்டார். பாவம்! இரு அணிகள் சார்பாக ஒப்புக் கொண்ட சமாதான முடிவின்படி, அவர் நாணயமாக நடக்க வில்லை! அதனால், இவர்கள் இருவரும் சாகும்வரை அரசியல் எதிரிகளாகவே வாழ்ந்து செத்தார்கள்!

இராஜாஜியும் - காமராஜ-ும் எப்போதும் - எங்கே சந்தித்தாலும், பெரியவருக்குரிய மரியாதையைக் காமராஜ் கடைசி வரைக் கொடுத்தார்! தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தார்! தான் வளர்ந்த கட்சிக்குரிய உயிருக்கும் - மானத்திற்கும் பங்கமேற்பட்ட போதெல்லாம் - காமராஜர், தனது உழைப்பையே உதிரமாகக் கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்து கட்சி உயிரைக் காப்பாற்றினார் - அதன் மானம் காத்தார்.

நேரு உயிரோடிருக்கும்போதே காமராஜ் திட்டம் என்ற கே. பிளான் திட்டத்தைக் கொண்டு வந்து காங்கிரசுக்குப் புது ரத்தம் பாய்ச்சினார்! இதனைப் பத்திரிகைகள் எல்லாம் (KAMARAJ PLAN) காமராஜ் திட்டம் என்றும் (SHOCK TREATMENT) அதிர்ச்சி வைத்தியம் என்றும் அரசியல் உலகம் பெயரிட்டன!

நேருவிற்குப் பிறகு யார்? லால்பகதூர்சாஸ்திரிக்குப் பிறகு யார்? என்ற வினாவை உலக நாடுகள் தொடுத்தபோதெல்லாம், தலைவர் காமராஜ் அவர்கள், தான் வளர்த்த காங்கிரஸ் கட்சிக்கும், தன்னை வளர்த்த காங்கிரஸ் கட்சிக்கும் கடுகளவும் துரோகம் செய்யாத தமிழ்ப் பண்பாளராக நின்று சாகும் வரை அதே கட்சியிலேயே தொண்டாற்றினார்!

## ஆணி வேரறுந்த காங்கிரஸ் நிலை!

ஆனால், இராஜாஜி - தன்னை வளர்த்த காங்கிரஸ் கட்சியின் வேரிலே கொதிநீரை ஊற்றித் துரோகம் செய்ததைத் தமிழ் நாடும் - இந்திய பூபாகமும் அறியும்!

அரசியலில் செல்வாக்குடன் இராஜாஜி வளர ஏணிப்படியாக இருந்த தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் ஆணி வேரையே அவர் அறுத்தெறிந்தார்! ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டு களாகியும்கூட, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் ஆணி வேர் அறுபட்ட நிலையில், பக்கவேர்களால் கூட அது பலம் பெற முடியாமல்; செடி கொடிகள் மீதேல்லாம் காங்கிரஸ் பற்றிப் படரப்பார்க்கும் பாவத்தை ராஜாஜி உருவாக்கி விட்டுச் செத்தார்!

என்றைக்கு இரு பிராமணர்கள் பதவிப் போட்டிகளிலே காங்கிரஸ் கட்சியின் மானத்தைச் சூத்திரதாரியாக நின்று காமராஜ் காப்பாற்றினாரோ, அந்த பாவம், வஞ்சம், முதல் அரசியல் வஞ்சம் - காமராஜர் சாகும்வரை படிப்படி வஞ்சமாக வளர்ந்துவிட்ட வரலாறுதான் - காமராஜ் அவர்களைப் பொறுத்தவரை, தமிழகக் காங்கிரஸ் வரலாறாக அமைந்து விட்டது! ஏன்? இந்தியக் காங்கிரஸ் கட்சி சரித்திரமாகவும் மாறிய மானபங்கமாக இருக்கிறது.

இதற்குச் சான்றிதழ் தேவையில்லை; 1967-ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் ஆடிவரும் அரசியல் அல்லோலகல்லோலப் பதவிப் போராட்டமே, தமிழக வரலாற்றுக் குரிய சான்றாகும்! எவன் தோள் கிடைக்கும் - ஏறலாம் என்ற ஏணியேற்ற ஏக்கங்களே போதும் அல்லவா! கைப்புண்ணுக்குத் தேவையா கண்ணாடி? இந்திய அரசியலிலும் அதே நிலை தான் இன்று வரை நீடித்து வருகிறது.

என்று மீண்டும் காங்கிரஸ் கட்சி தனது கோட்டை அரியணையைப் பற்றுகின்றதோ, அன்றுதான் - ராஜாஜியின் அரசியல் வஞ்சம் - காமராஜ் வாரிசுகள் காலகட்டத்தால் காப்பாற்றப்பட்டதாகும்! நடக்குமா? காமராஜர் நினைவாலயம் சான்று தருமா? ஆனால், காமராஜரும் மாண்டு விட்டாரே! பார்ப்போம்! இது 2002-ஆம் ஆண்டு! இந்தச் சூழ்நிலையில் மீண்டும் 1931-ஆம் ஆண்டுக்கு வருவோம்!

## காந்தி மௌனமும், நேருதிட்டமும்

இப்போது, இலண்டன் மாநகரில் முதல் வட்ட மேஜை மாநாடு நடந்தது! காந்திஜி கலந்து கொண்டார் - இந்தியப் பிரதிநிதியாக! அவருடன், கவியரசி சரோஜினி தேவி, வேறு சிலரும் துணையாகச் சென்றார்கள்!

அந்த மாநாட்டினால் இந்தியாவிற்கோ அதன் சுதந்திரத்திற்கோ எள்ளளவும் பயனில்லை! ஏமாற்றத்துடன் காந்தியடிகள் 1931 - டிசம்பர் மாதத்தில் திரும்பினார். வட்ட மேஜை மாநாட்டில், அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மாக்டொனால்டு அடிகளிடம் வாய் இனிக்கப் பேசினார்.

இறுதியாக, காங்கிரஸ் கட்சி தனது தீய வழிகளை நிறுத்திவிட்டு வட்டமேஜை மாநாட்டுக் குழுவிலே நட்புரிமை யோடு பழகிக் கலந்து கொள்ள வேண்டும் என்ற முடிவோடு அவர் காந்தியடிகளை வழியனுப்பி விட்டார்!

நைனிடால் சிறையிலே கடும் சோதனைகளுக்கு ஆளான நேரு அவர்கள். பிரிட்டிஷ் படை இந்தியாவை விட்டுப் போய் விட வேண்டும் என்றார்!

இந்திய ராணுவம், இந்திய அரசாங்க அதிகாரத்தின் கீழ் இயங்க வேண்டும். பிரிட்டனுக்கும் இந்தியாவிற்கும் இடையே சமரசப் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்றும் அவர் அறிக்கை விட்டார்!

வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதிகள் வகுப்புவாதிகளாகவும் அல்லது தேசியவாதிகளாக வும் இருந்தாலும், பிரிட்டிஷார் இந்தியாவிலேயே இருக்க வேண்டும் என்றே வாதாடலானார்கள்!

காந்தியடிகள் ஒருவர்தான், இந்தியாவிற்கு விடுதலை தேவை என்ற அடிப்படைக் கருத்தை ஆணித்தரமாக எடுத்து வைத்து அங்கே வாதாடலானார். அதற்குப் பதிலளித்த பிரதமர் ராம்சே மாக்டொனால்டு மேற்குறிப்பிட்டவாறு வாயினிக்கப் பேசி அடிகளை வழியனுப்பி விட்டார்.

இந்த முடிவைப் பரிசீலனை புரியவே, 1931-ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை கராச்சி நகரில் சிறப்பாகக் கூடியது. சர்தார் வல்லபாய் படேல் அதற்கு தலைமை ஏற்றார்.

அந்த மகாசபை செயற்குழுவின் முடிவைக் கண்ட வைஸ்யராய் வெலிங்டன், மிருகத்தனமான அடக்குமுறைகளைக் காங்கிரஸ்காரர் கள் மீது கையாண்டார்! நாடே எரிமலையாக மாறிக் கனற்பிரவா கத்தைக் கக்கியது! துப்பாக்கித் தர்பார் பல இடங்களில்! பிணங்கள் பற்பல ஆங்காங்கே தரை பாரமாயின!

தடியடித் தாண்டவங்களால் மக்களின் சுதந்திர தாகத்தைத் தணிக்க முடியவில்லை! இதற்கு மேல் எல்லாத் தலைவர்களையும் நாடெங்கும் பரவலாகக் கைது செய்தது வெலிங்டன் தர்பார்!

## காமராஜ் மீது ஜாமீன் வழக்கு

தமிழ் நாட்டில் காமராஜ் அவர்கள் மீது பல வழக்குகள் ஜோடிக்கப்பட்டன! அவைகளில் அவர்மீது துணிகரமாகப் போடப்பட்ட வழக்கு ஜாமீன் வழக்கு! காமராஜ், ஜாமீன் ஈடு தொகையைக் கட்ட மறுத்தார்! வழக்கு மன்றம் ஏறினார்; ஈமதொகை

கட்ட முடியாது என்று கண்டிப்பான குரலில் மறுத்தார்! சிறைவாசம் ஓராண்டு என்றார் நீதிபதி! திருச்சி ஜெயிலிலே காமராஜ் தள்ளப்பட்டார்!

சிறைக் கொடுமைகளை ஏற்ற காமராஜ், தளரவில்லை! அவர், கைதான செய்தியும் - சிறைத் தண்டனையும் காட்டுத் தீபோல மதுரை மாவட்டம் முழுவதும் பரவியது! மதுரையிலும் பிற இடங்களிலும் ஆங்காங்கே உள்ள மக்கள், கடையடைப்புகளைச் செய்து, தங்கள் தலைவரின் மீதுள்ள அன்பையும் - அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

தமிழக முழுவதும், காமராஜ் அவர்களுடைய அரசியல் அணியினர், கண்டனக் கூட்டங்களைப் போட்டு ஆங்கில ஆட்சியின் காட்டுமிராண்டித்தனங்களைக் கண்டித்தார்கள்!

கண்டன ஊர்வலங்கள், கண்டன துண்டறிக்கைகள், கடையடைப்புகள், எல்லாம் நடைபெற்றன! காவல் நிலையம் மட்டும் காமராஜ் அணியைக் கண்காணித்தவாறே இருந்தது!

விருதுநகர் அஞ்சலகத்திலே ஒரு வியப்பூட்டும் செய்தி இரவோடு இரவாக நடந்தது! போலீசாரின் தலைகள் வாங்கப்படும் என்ற பெரிய பெரிய எழுத்துக்களாலான சுவரொட்டி ஒன்று கையால் எழுதி ஒட்டப்பட்டிருந்தது! வாங்கப்படும் என்றால், அவர்கள் தலைகள் வெட்டப்படும் என்றே எதிரணியினர் பொருள் புகன்றார்கள்.

அன்றைய விடியலுக்குப் பின்வந்த எழு ஞாயிற்றொளியில், மக்கள் கும்பல் கும்பலாகத் திரண்டு வந்து படித்துக் கொண்டே சென்றார்கள்.

ஆனால், அந்தச் சுவரொட்டியை எழுதியது யார்! மர்மமாகவே தோன்றியது! சரி போகட்டும், அதை ஒட்டியவர் யார்? அதுவும் துப்பறியப்பட வேண்டிய மர்மமாகவே நின்றது! போலீசார் அதைக் கண்டு பிடிக்கப் போதிய அக்கறை காட்டவில்லை!

ஆனால், வதந்தியைப் பரப்புவதிலே வல்லவர்களான ஜஸ்டிஸ் கட்சித் தொண்டர்கள், காமராஜ் நண்பர்கள் மீதும் பழி போட்டார்கள், காரசாரமான கண்டனக் கூட்டங்களைப் போட்டு பழி சுமத்தினார்கள் காமராஜ் மீது.

முருக - தனுஷ்கோடி என்ற காமராஜின் பள்ளி நண்பர் தான் அந்தச் சுவரொட்டியை ஒட்டினார் என்று வழக்கு மட்டுமே தொடரப்பட்டது விருதுநகர் காவல் துறையால்!

அதற்கான சார்ந்தவர்களையும் தயார் செய்தார்கள். காவல் துறையாளர்கள்! வழக்கின் முடிவு, தனுஷ்கோடிக்கு இரண்டாண்டு கள் சிறை! ஐநூறு ரூபாய் அபராதம்! அவரும் திருச்சி சிறைக்கே அனுப்பப்பட்டார்!

திருச்சி சிறையிலே உள்ள காமராஜ் அவர்களை முருக - தனுஷ்கோடி சந்தித்தார்! இரண்டு நாட்கள் இருவரும் விருதுநகர் அரசியல் நிலைகளையும் பிறநாட்டு நடப்புகளையும் அளவளாவி மகிழ்ந்தார்கள்!

இந்த இருவரின் இரண்டு நாட்களின் தொடர்புகளை, தொடர்ந்து அறிந்த சிறை ஆங்கிலேய அதிகாரி, இவர்கள் இங்கு இணைந்திருந்தால்,! மீண்டும் ஏதாவது திட்டம் தீட்டுவார்கள் என்று அஞ்சி காமராஜை மட்டும் வேலூர் சிறைக்கு அனுப்பினார்.

# 20. காமராஜர் மீது வெடிகுண்டு, சதி, வழக்கு!

திருச்சி சிறையிலே இருந்து, வேலூர் கோட்டைச் சிறைக்கு வந்தார் காமராஜ்! அங்கேயும் இந்தியாவெங்கும் போராட்டமாடிய காங்கிரஸ்காரர்கள் பலர் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்!

வடநாட்டிலே பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் மரண வழக்கிலே சிறைத் தண்டனை பெற்ற சிலரும் வேலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார்கள்!

## நால்வர் மரணம்! நாடு கொந்தளிப்பு!

அவர்களோடு கைது செய்யப்பட்ட ஜதீந்திரநாத் தாஸ் என்பவர் சிறைக் கைதிகளைச் சித்திரவதை புரியும் வெள்ளையர் சட்டத்தை எதிர்த்துச் சிறையிலேயே உண்ணாவிரதம் இருந்து இறந்தார்!

இந்த நால்வரின் மரணம், இந்தியா முழுவதும் ஒரு தேச பக்த மனப்புரட்சியை உருவாக்கிக் கொண்டிருந்தது.

அந்த வழக்கிலே கைது செய்யப்பட்டு வேலூர் சிறையிலே இருந்த மாவீரன் பகத்சிங் அவர்களின் நண்பர்களான ஜெய்தேவ் கபூர், கமல்நாத் திவாரி ஆகியவர்களைக் காமராஜ் சந்தித்து, பகத்சிங்கின் உண்மை வரலாறு என்ன என்பதைக் கேட்டார். அப்போது அவர்கள் காமராஜிடம் சொன்னவை இவை:

''பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய், லாகூர் நகரிலே, சைமனே திரும்பிப் போ என்ற போராட்டத்தை நடத்தினார். இளைய வயதுடைய ஓர் இங்கிலீஷ் துணை ஆய்வாளரான காவல் அதிகாரி, இடையே புகுந்து, லஜபதிராய் மார்பிலே சரமாரியாக குண்டாந்தடியால் தாக்கிக் காயங்களை ஏற்படுத்தினார்!''

''இலஜபதிராய் ஓர் இருதய நோயாளி! இருந்தும், நின்று குரலெழுப்பிய இடத்தை விட்டு ஓரடி கூட பின் நோக்கவில்லை - நகரவில்லை. காந்தியடிகளின் அரசியல் தத்துவத்தின்படி பாஞ்சால சிங்கம் லஜபதிராய், அமைதியாக, அகிம்சைக்குக் கட்டுப் பட்டு, அந்த வெள்ளைக்கார இளைஞன் அடித்த அடிகளை எல்லாம் தனது

மார்பிலே தாங்கிக் கொண்டார். அந்த அடிகளைத் தாளாத வயதேறிய அந்தச் சிங்கம் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தது!''

''பாஞ்சால மக்களின் ஒப்பற்ற தலைவர், நிகரற்ற செல்வாக்குப் படைத்தவர் அவர்! இந்தியத் தலைவர்களிலே மிகச் சிறப்பு வாய்ந்த அந்தத் தலைவரை ஏராளமான மக்கள் கூடிய ஒரு பெருங் கூட்டத்திலே வெள்ளைக்கார அதிகாரி ஒருவர் மார்பு மேலேயே தாக்கித் தாக்கிச் சாகடித்து விட்டார் என்றால், இந்தச் சம்பவம் இந்தியாவின் மானத்திற்கு விடப்பட்ட சவால் அல்லவா?''

''லாலா லஜபதிராய் தன்னைத் தாக்கியதற்காகக் கூட அவர் வருத்தப்படவில்லை! ஆனால், அந்த சம்பவத்தை, இந்தியா விலுள்ள முப்பது கோடி மக்களுக்கும் நேர்ந்த அவமானமாக எம்போன்ற இளைஞர்கள் கருதியதிலே என்ன தவறு? பாரத தேசத்திற்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைக் கேள்விப் பட்டதும், இந்தியாவே கொதிப்படைந்ததை யார் தான் குறை கூற முடியும்?''

''லாலாவை அடித்து மரணமடையச் செய்த அந்த வெள்ளைக்கார அதிகாரியை, அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றதிலே பாவ - புண்ணியத்தைப் பார்க்க முடியுமா?''

''அது மட்டுமா? லாலா அடிபட்டுச் செத்ததையும், அந்த அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதையும் வழக்காக்கி வெள்ளையர் ஆட்சி நடத்தியது! அது, சதி வழக்குச் சாட்டியவர்களிடம் வழக்கு மன்றத்திலே நடந்து கொண்ட மனச்சாட்சியற்ற நியாய விரோதமான செயல்கள் - மக்களுக்குப் பிடிக்க வில்லை!''

''அதனால், வழக்கிலே இணைக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திலே உண்ணாவிரதம் இருந்தார்கள்! அந்தச் சம்பவம், நாட்டிலே பெரிய பரபரப்பை உருவாக்கிற்று.''

மேலும் அவர்கள் தொடர்ந்து கூறினர்:

## சட்டமன்றத்தில் வெடிகுண்டு!

''ஒருநாள், தில்லி இந்திய சட்டமன்றத்தின் பார்வையாளர் பக்கத்திலே இருந்து - திடீரென இரண்டு வெடி குண்டுகளைப் பகத்சிங்கும் - பி.கே. தத்தரும் எறிந்தார்கள்!''

''வீசப்பட்ட அந்த வெடிகுண்டுகள் வெடித்தவுடன் பெரிய கலவரமும் - குழப்பமும் - பரபரப்பும், திடுக்கிடும் திகைப்பும் - அவையிலே இருந்த அனைவரையும் அதிர வைத்து விட்டது. யாரையும் கொல்ல வேண்டுமென, இந்த குண்டுகள்

வீசப்படவில்லை! எந்த ஒரு பரபரப்பும், சேதமேதும் ஏற்படாத நிலையிலேயும்தான், குண்டுகள் எறியப்பட்டன என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தமது வழக்குமன்ற வாக்கு மூலங்களிலே கூறினர்.

பண்டிதநேரு அவர்கள்தனது சுயசரிதை நூலில் அவர்களைப்பற்றி எழுதியிருப்பதைப் படித்திருப்பீர்களே! அவர் எழுதியுள்ளார். அது வருமாறு: ''பகத்சிங்கையும் - ஜதீந்திர நாத்தாசையும் கண்டேன்! பகத்சிங், கவர்ச்சி பொருந்திய, புத்திசாலித்தனமான முகத்தோற்றம் உடையவராகக் காணப்பட்டார்! அமைதி தான் அவரது முகத்திலே குடி கொண்டிருந்தது. கோபம் சிறிது கூட அவர் முகத்தில் காணப்படவில்லை. சாந்தமாகவே பேசினார்கள்! மிருதுவான கன்னிப் பெண்களைப் போலக் காணப்பட்டார் ஜதீந்திர நாத் தாஸ்! அறுபத்தோரு நாட்கள் அவர் உண்ணாவிரதம் இருந்து மாண்டார்.

(தமிழ்நாடு என்று பெயர் வைக்க உண்ணாவிரதம் இருந்து செத்த மாவீரன் சங்கரலிங்கனாரைப் போல)

பகத்சிங் நண்பர்கள் கூறிய இந்த மான வரலாற்றைக் கேட்டுக் காமராஜர் கண்ணீர்த் துளிகளை உகுத்தார். இனிமேல், தன்மீது போடப்படும் எந்த வழக்குகளையும், 'பகத்சிங்' மனதோடே சந்திக்கத் தயாரானார்!

அதற்குப் பிறகு பகத்சிங், சுகதேவ், ராஜகுரு நண்பர்கள், இந்தியாவின் சிங்கமான ''லாலாவைக் குண்டாந்தடி கொண்டே தாக்கிக் கொன்றுவிட்டானே ஓர்ஆங்கிலேயன் - அதைக் கேட்க இந்தியாவிலே நாதி இல்லையா? எல்லாருமே சோற்றாலடித்த பிண்டங்களா? இல்லை மரக்கட்டைகளா? என்ற மான வினாவை மற்ற நாடுகள் எழுப்பும்போது, இந்தியாவின் மானம் காற்றில் பறக்குமே என்பதற்காக அந்த மானத்தைக் காக்க அவர்கள் தூக்கிலே உயிர் துறந்தார்கள்'' என்று, அந்தச் சிறை நண்பர்கள் கூறி முடித்தபோது காமராஜ் ஊமைபோல நின்றார்!

## விருதுநகர் சதிவழக்கு சோடனை

அம் மூவர் செயலைப் பாராட்ட காமராஜரால் முடியவில்லை! காரணம், வெடிகுண்டு வீசுவது காந்தியடிகளுக்கு விரோதமான வன்முறைச் செயலாயிற்றே என்பதால்!

லாகூர்சதிவழக்குத் தோழர்களிடம், காமராஜ் சிறையிலே பேசிய முழு விவரம், வேலூர் சிறையதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டது!

அதே நேரத்தில் விருதுநகர் அஞ்சலகத்தில் ஒட்டப்பட்ட ''போலீஸ் தலை வாங்கப்படும்'' என்ற சுவரொட்டி வழக்கு வீரர்களோடு காமராஜ் அளவளாவிய சம்பவமும் வேலூர் சிறையதிகாரிகட்குத் தெரிந்தது!

இந்தச் சிறை சந்திப்புகளை அடிப்படையாகக் கொண்டு - 1933-ஆம் ஆண்டு காமராஜ் அவர்கள் மேல் ''சென்னை சதிவழக்கு'' என்ற பெயரால் ஒரு வழக்கை வெள்ளையராட்சி தொடர்ந்தது!

அந்த வழக்கில் கூறப்பட்ட காரணம் விநோதமாகவும் - விசித்திரமாகவும், விலா நோகச் சிரிப்பூட்டுவதாகவும் இருந்தது!

உதகமண்டலம் வருகை தரவிருந்த, வங்க அடக்குமுறையிலே புகழ்பெற்ற ஆளுநர் சர்ஜான் ஆண்டர்சன் என்பவரை, காமராஜர்' கே. அருணாசலம் மற்றும் சில காங்கிரஸ்காரர்கள் சேர்ந்து சுட்டுக் கொல்லச் சதி செய்தார்களாம்!

அதனால், காமராஜ் அவர்களையும் அந்த வழக்கில் இணைக்கக் காவலர்கள் பெரும் முயற்சி செய்தார்கள்!


ஆளுநரைச் சுட்டுக் கொன்றிடக் காமராஜ்தான் சதி செய்தார்! இந்த சம்பவத்துக்கு அவர்தான் முக்கிய பொறுப்பு என்றும் வழக்கை ஜோடித்தார்கள் போலீசார்!

கே. அருணாசலம் என்பவருக்கு இரண்டு துப்பாக்கிகளைக் காமராஜர்தான் கொடுக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தார் என்று காவல்துறை சார்பில் முதல் அறிக்கை ஒன்று தயாரானது!

ஆனால், இந்த வழக்கு போராட்ட வீரர்களைப் பயமுறுத்தியதே தவிர, நீதிமன்றத்தில் நிரூபிக்கப் படாததால் தோற்றுப் போனது. ஆங்கிலேயக் காவல் துறையினரால் தயாரிக்கப்பட்ட அந்தப் பொய் வழக்கு வெற்றி பெறாமல் போகவே, மீண்டும் அதே காவல் துறைக்குக் காமராஜ் மேல் கட்டுக்கடங்கா ஆத்திரமும் - ஆணவமும் பொங்கி எழுந்தன!


## விருதுநகர் வெடிகுண்டு வழக்கு சோடனை

வேறொரு வழக்கைக் காமராஜ் மீது தயாரிக்க ஆரம்பித்தார்கள்! 'ஸ்ரீவில்லிபுத்தூர் - விருதுநகர் காவல் நிலையம் வெடிகுண்டு வழக்கு' என்று அந்த வழக்குக்குப் பெயரிடப்பட்டது. இந்த வழக்கில் புதுமாப்பிள்ளையான கே.எஸ்.முத்துசாமி முதல் எதிரி! இரண்டாவது எதிரி காமராஜ் அவர்கள்! நிருபர் மாரியப்பன் என்பவர் மூன்றாவது எதிரி! நாராயணசாமி என்பவர் நான்காவது எதிரி! அதில், வெங்கடாசலம் என்பவர், அப்ரூவராக மாறினார்!




நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன் காமராஜர்.






கவர்னர் ஸ்ரீ பிரகாஷாவுடன் காமராஜர்





பெரியாருடன் பெருந்தலைவர்



ராஜாஜியுடன் காமராஜர்.



நேருவுடன் காமராஜர்.



இந்திராகாந்தியுடன் காமராஜர்.

அப்போது ஒருநாள் விருதுநகரில் பாம்பே ஷோ ஒன்று நடந்தது! அந்த ஷோவிற்குக் காவல் துறைப் பாதுகாவலாகப் போடப்பட்டிருந்தவர் அனந்தராமகிருஷ்ணன் என்ற போலீஸ் உதவி ஆய்வாளர்!

அவரோடு அந்த ஷோ முடியும் வரை, முத்துசாமி உரையாடிக் கொண்டிருந்தார்! ஆனால், காவல்துறை என்ன திட்டமிட்டது தெரியுமா?

அதே இரவன்றுதான், முத்துசாமி, காமராஜ், நாராயணசாமி, வெங்கடாசலம் ஆகிய நால்வரும் சேர்ந்து, திருவில்லிபுத்தூர் - விருதுநகர் காவல் நியைங்கள் மீது வெடிகுண்டுகளை வீசியதாகக் காவல்துறை வழக்கைச் சோடித்தது!

இதே பொய் வழக்கைப் புனைந்துரைத்து முக்கியத்துவம் கொடுத்திட, சென்னை நகரிலே இருந்து தோத்தாத்திரி ஐயங்கார் என்ற சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் ஒருவர் விருதுநகருக்கு வந்தார்!

காவல் துறையிலும் கண்ணியவான்கள் - நீதிமான்கள் - மனச்சாட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தும் உதாரணத்திற்காக, அனந்தராமகிருஷ்ணன் என்ற அந்த உதவி ஆய்வாளர் காவல் துறைசார்பாகப் பொய்ச் சாட்சி கூற மறுத்துவிட்டார்!

ஆங்கிலேய அதிகாரிகள் அவரை மிரட்டிக் கூறிய பதவி உயர்வு ரத்துக்களும், எதிர்காலம் இருண்டு விடும் என்ற அச்சுறுத்தல்களும் அவரிடம் வெற்றிபெறவில்லை. அதனால், காவல்துறை அவரிடம் ஆத்திரமடைந்தது!

பாவம்! அந்த நேர்மைமிக்க உதவி ஆய்வாளரை வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள் அதிகாரிகள்! வேறு என்ன செய்ய முடியும்? மாறுதல் உத்திரவோடு வேறுஓர் ஊருக்குச் சென்றுவிட்டார் உதவி ஆய்வாளர்!

இந்தியா வெள்ளையராட்சியிலே இருந்து விடுதலை பெற்றதற்குப் பிறகு, தமிழகத்தில் பார்த்தசாரதி ஐயங்கார் என்பவர், சென்னை மாநிலத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்தார்!

காவல்துறை இந்த வெடிகுண்டு வழக்கை ஜோடித்தபோது, ஐயங்கார் சிவகாசி காவல்துறை உதவி சூப்பரெண்டெண்ட்டாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்! பொய் வழக்கைப் புனைவதில் இவர் வல்லவர் என்பதை இந்த வெடிகுண்டு வழக்கில் நிலைநாட்டி விட்டார்!

அப்ரூவராக மாறிவிட்ட வெங்கடசலம் என்பவரை, சிறைக்கட்டறையில் தள்ளி அவர் நைய்யப் புடைத்தார். வழக்கம் போல காவல் துறை லாக்கப்பில் இருப்பவரை என்னென்ன செய்யுமோ அவற்றையெல்லாம் தொடர்ந்தார். வெங்கடாசலம் மனிதன்தானே! காவல்துறை செய்த கொடுமைகளைத் தாளமுடியாமல் மனம் மாறிவிட்டார்!

எப்படியோ அரும்பாடுபட்டுத் தேசபக்தர் வெங்கடாசலத்திடம், சிவகாசி காவல்துறை உயர்அதிகாரியான ஐயங்கார், ஓர் ஒப்புதல் கடிதத்தைப் பெற்று, அதை நீதிமன்றத்தில் விருதுநகர்காவலர் மூலம் கொடுக்கச் செய்தார்!

நீதிமன்றம் நடைபெற்றபோது, அப்ரூவர் வெங்கடாசலம் மனம் திறந்து நீதிபதி முன்பு காவல்துறையின் சித்ரவதைகளை என்னால் தாங்கமுடியாமல்தான், அந்த ஒப்புதல் கடிதத்தைக் கொடுத்தேனே தவிர, அது உண்மையல்ல என்றார்!

காங்கிரஸ் கட்சியில் அப்போது புகழ்பெற்ற வழக்குரைஞராக இருந்தவர் திருச்சி டி.எஸ்.எஸ்.ராஜன் என்பவர்! அவர் இந்த வழக்கு வெற்றிபெற மிகத் தீவிரமாகப் போராடினார்!

இதே டி.எஸ்.எஸ். ராஜன்தான், பிற்காலத்தில் நாடு விடுதலை பெற்ற பிறகு ராஜாஜி மந்திரி சபையில் தமிழக உணவமைச்சராகவும் பணியாற்றியவர்!

இந்த வழக்கு எப்படியும் வெற்றி பெற்றாக வேண்டுமென்ற வேட்கையால், அப்போது மிகப் புகழ்வாய்ந்த பத்திரிகை ஆசிரியராக இருந்த போத்தன் ஜோசப் அவர்களின் உடன்பிறந்தவரும், புகழ்பெற்ற வழக்கறிஞருமான ஜார்ஜ் ஜோசப் என்பவரை வழக்கில் வாதாடுமாறு ராஜன் கேட்டுக் கொண்டார்! அவர் அந்த வழக்கில் ஆஜராகி தனது வல்லமையான வாதத் திறமையால் பொய் வழக்கின் முதுகெலும்பைப் பொடி பொடியாக்கிக் காட்டி, வெற்றியும் பெற்றார்!

வெடிகுண்டு வழக்கை விசாரித்த முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டான ஜே.பி. எஸ். மன்றோ, ''காவல்துறையின் சாட்சிகள் நம்பத் தக்கவையாக இல்லை. இவ்வளவு அறிவுள்ள இளைஞர்கள், ஒரு வெடிகுண்டு சதியை இவ்வளவு பலவீனமாகத் திட்டமிட மாட்டார்கள்! அவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்கிறேன்'' என்று தீர்ப்பளித்தார்!

உடனே, காமராஜ் அவர்களையும் சம்பந்தப்பட்ட மற்ற எல்லா இளைஞர்களையும் ஆங்கிலேய அரசு விடுதலை செய்தது!

இந்த சதி வழக்கைத் தொடர்ந்தபோது, காவலர்கள் அடிக்கடி காமராஜ் அவர்கள் வீட்டிற்குச் சென்று, அவருடைய தாயார் சிவகாமி அம்மையாருக்குத் தொல்லைகளைத் தந்து வந்தார்கள்! திடீரென ஒருநாள் சில காவலர்கள் காமராஜ் வீட்டை முற்றுகையிட்டார்கள்! வீட்டைச் சோதிக்க வேண்டும் என்றார்கள்!

''எதற்காகச் சோதனை போடவேண்டும். என் மகன்தான் வேலூர் சிறையிலே இருக்கின்றானே, அதற்குள் என் வீட்டில் என்ன நடந்துவிட்டது?'' என்று சிவகாமி அம்மையார் காவலர்களை வழி மறித்தார்!

''வெடிகுண்டுகள் ஏதாவது இருக்கின்றனவா? அல்லது இரவோடு இரவாக நாட்டு வெடிகுண்டுகள் செய்யும் வேலைகளோ அல்லது அதற்கான பயிற்சிகளோ தரப்படுவதற்கான அறிகுறிகள் உள்ளனவா? என்று சோதிக்கப்போகிறோம்'' - என்றார்கள் காவல் துறையினர் சிலர்!

ஆறுகின்ற சினத்தோடு காட்சி தந்த காமராஜ் தாயார், ''வீட்டில் யாரும் ஆண்கள் இல்லை! நீங்கள் சோதனை போட விரும்பினால், சோதனையின்போது எனக்குத் தெரிந்த ஆண்கள் யாராவது இருந்தாக வேண்டும்'' என்று கூறினார்! உறவினர் ஒருவரைக் காவலர் அழைத்து வந்த பின்புதான், வீட்டில் காவலர்களைச் சோதனை போட அனுமதித்தார் அம்மையார்!

ஆனால், காவலர்கள் தேடிப் பார்த்தபோது தடயங்களோ, கருவிகளோ, ஆயுதங்களோ ஏதும் கிடைக்காததால் அவர்கள் ஏமாந்து சென்றார்கள்.

வேலூர் சிறையிலே பகத்சிங் வரலாற்றைக் கேட்டதின் பலன், காமராஜருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் தூக்குக் கயிறோ அல்லது அந்தமான் தீவுகள் கொடுமைகளோ, பர்மாவிலே உள்ள மாண்டலே சிறை பாதகங்களோ கிடைத்திருந்தால் என்ன நிலை நாட்டிற்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கும்? சிந்திக்க வேண்டிய சம்பவம் அல்லவா இது? விருதுநகர் வெடிகுண்டு வழக்கு ஏறக்குறைய எட்டு மாதங்களாக விசாரணை நடந்தது - மாஜிஸ்திரேட் கோர்ட்டில்!

இந்த வழக்கை நடத்தப் போதிய பணம் இல்லாமல் காமராஜ் மிகவும் வேதனைப்பட்டார்! தாயார் சிவகாமி அம்மையார் தனது நகைகளை விற்றும், தன்னால் முடிந்தவரை பணம் திரட்டியும் கொடுத்தார்! குடியிருந்த வீட்டை மட்டும் அப்போது விற்காமல் இருந்ததே பெரிய அதிர்ஷ்டமாகும்!

# 21. மகாத்மாவை காமராஜர் - குமாரசாமி ராஜா வரவேற்பு!

மகாத்மா காந்தியடிகள் 1934 - ஆம் ஆண்டில் தமிழ்நாடு வருகை தந்தார்! அப்போது காமராஜ் அவர்களின் விருதுநகர் வெடிகுண்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்!

## இராசபாளையம் வரவேற்பு விழா!

இராஜபாளையும் வட்டத்தில் அப்போது காங்கிரஸ் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர் பி.எஸ். குமாரசாமி ராஜா!

சாத்தூர், இராஜபாளையம் பகுதியிலே நடைபெறும் நகர காங்கிரஸ் கட்சிப் பொதுக்கூட்டங்களிலே பேச வேண்டுமென்று குமாரசாமி ராஜா காந்தியடிகளிடம் அனுமதி பெற்றிருந்தார்!

இராஜபாளையம் நகர காங்கிரஸ் கட்சி நடத்திய காந்தியடிகள் வரவேற்பு விழாவிற்கு, காமராஜ், முத்துசாமி, முருக - தனுஷ்கோடி போன்றவர்கள் முன்கூட்டியே வந்திருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார்கள்!

எங்கு பார்த்தாலும் மூவண்ணக் கொடிகளாலும், மகர தோரணங்களாலும், வாழை தென்னங்கீற்று அலங்காரங்களாலும் அந்தப் பகுதிக் கிராமங்கள் கோலாகலமாகக் காட்சியளித்தன!

காந்தியடிகளுடன் மதுரை வைத்தியநாதய்யர், திருச்சி டி.எஸ்.எஸ். ராஜன் உட்பட பலரும் இராஜபாளையம் வருகைதந்து குமாரசாமி ராஜா இல்லத்தில் தங்கியிருந்தார்கள்!

காமராஜ், குமாரசாமி ராஜா, முத்துசாமி, தனுஷ்கோடி போன்ற காங்கிரஸ் தொண்டர்கள், காந்தியடிகளை வரவேற்று, இராஜபாளையம் நகர காங்கிரஸ் கட்சி சார்பாகப் பாராட்டும் - வரவேற்பும் கொடுத்தார்கள்!

அன்று பகல் விருந்து, பி.எஸ். குமாரசாமிராஜா அவர்களது வீட்டில் காந்தியடிகளுக்கும் உடன் வந்தவர்களுக்கும் நடைபெற்றது.

தலைவர் காமராஜ், குமாரசாமிராஜா, டி.எஸ்.எஸ்.ராஜன்! முத்துசாமி, தனுஷ்கோடி அனைவரும் விருந்து முடித்துக் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டு ஆக்கப் பணிகளைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தார்கள்!

## வெடிகுண்டு வழக்கை எதிர்த்துப் போராடுக!

ஆங்கிலேயர் ஆட்சி, காமராஜ் நண்பர்கள் மேல் தொடுத்திருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் - விருதுநகர் காவல் நிலையத்தில் வெடிகுண்டு வழக்கு விவரங்களைக் காந்தியடிகளிடம் திரு டி.எஸ்.எஸ். ராஜன் விளக்கினார்.

உடனே காந்தியடிகள், "வெடிகுண்டு வழக்கு மட்டுமல்ல, வேறு எந்தவித வழக்குகளையும், பிரிட்டிஷ் ஆட்சி காங்கிரஸ் காரர்கள் மீது திணித்துத் தொடுத்தால், அகிம்சா வழியில் அதை எதிர்த்துப் போராடுங்கள்! வழக்கு மன்றம் சென்று நீதியை நிலைநாட்டுங்கள்" என்று காந்தியடிகள் சொல்லிப் பின்னர்ஆக்கப் பணிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென மழை பலமாகப் பெய்ய ஆரம்பித்தது! மூன்று மணிக்கு சிவகாசியில் நடைபெறும் வரவேற்பு விழாவிலே, காந்தியடிகள் கலந்துக் கொள்ளவேண்டும் என்பது நிகழ்ச்சி நிரலாகும்!

இராஜபாளையத்தை விட்டுப் புறப்பட்டு, மணி பகல் இரண்டரை ஆகியும்; மழை அடைமழையாகப் பலத்ததே தவிர விடவில்லை! அதனால், சிவகாசி விழாவுக்கு எப்படிப் போய்ச் சேருவதென்று ஒருகணம் எல்லாரும் திகைத்தார்கள்!

காந்தியடிகள் வந்த காரின் மேல்பாகம் முரட்டுத் தார்க் கித்தானால் ஆனது. அவர் ராஜபாளையம் நகரில் ஊர்வலமாக வந்தபோது, கட்டுக்கு மீறிக் கூடியிருந்த மக்கள் நெரிசல், கார் மேல்பாகக் கித்தான் மேலே மோதி விழுந்து அது பொத்தலாகிக் கிழிந்துவிட்டது!

மழை அதிகமாகப் பெய்யப் பெய்யக் காரின் உட்பாகத்தில் தண்ணீர் கொட்டியது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மற்றொரு காரும் பழுதாகி வரும் வழியிலேயே நின்றுவிட்டது. இன்னொரு கார், காந்தியடிகள் எங்கே போகிறார், எங்கே தங்குகிறார் என்ற விவரம் புரியாததால், காருடன் ஓட்டுநர் மீண்டும் மதுரைக்கே சென்றுவிட்டார்!

## சிவாகாசிக்குள் காந்தியடிகள்!

மதுரை வைத்தியநாதய்யர் நண்பர்கள் ஒரு காரைக்கொண்டு வந்திருந்தார்கள்! அந்தக் காரைக் காமராஜ் தக்க மெக்கானிசம்

தெரிந்த ஒருவரைக் கொண்டு பெய்யும் மழைக்கிடையே சரிசெய்து கொண்டிருந்தார்!

இதற்குள், இராஜபாளையத்திலேயே மணி மூன்றாகிவிட்டது! காமராஜையும் குமாரசாமி ராஜாவையும் பார்த்து, 'இப்போதாவது புறப்படலாமா? என்ன சொல்கிறீர்கள்?' என்று காந்தியடிகள் கேட்டார்!

குமாரசாமி ராஜா, 'சரி' என்று கூற, காமராஜ் தலையை ஆட்டிடக் கார் தயாரானது! காரின் பின்புற இருக்கையிலே காந்தியடிகளை அமரச் செய்தார்கள்! முன்புற இருக்கையிலே திருச்சி டி.எஸ்.எஸ். ராஜனும் குமாரசாமி ராஜாவும் உட்காரக் கார் புறப்பட்டது!

காமராஜ், காந்தியடிகள் வந்த கிழிந்துபோன கித்தான் காமராஜ் காரிலே ஏறி உட்கார்ந்தார்! வண்டிகள் சிவகாசியை நோக்கி சிவ சிவா என்று நகர்ந்தன! அவ்வளவு மக்கட் திரள்! நெரிசல்! இடைவிடாத மழைத் தூறல்! சாரல்!

மழையோ, நேரமாக ஆகப் பலமாகப் பெய்தபடியே இருந்தது! நனைந்தபடியே நகரும் காரில் எல்லாரும் மெதுவாகச் சென்றார்கள்!

காற்றும் - மழையும் நட்பானது! கூடிக் கலந்தது! கடும் வேகமானது மழை! ஓட்டுநரால் கண் திறந்துப் பார்த்துக் காரை ஓட்ட முடியாமல் தலையிலே இருந்து வழிந்த தண்ணீர்த் துளிகள் இமைகளுக்கு இடர் தந்தன!

காந்தியடிகள் பின் பக்க இருக்கையிலே குளிரால் தாக்கப்பட்டுப் படுத்துவிட்டார்! அவ்வளவுதான் ஒரு நடுக்கத் துயில்! சிறு தூக்கம்!

வேகமாக வீசும் மழைச் சாரல் காந்தியடிகள் மேல் படாமலிருக்கக் காமராஜ், குமாரசாமி ராஜா தங்களது மேல் துண்டுகளைக் காரின் பக்கவாட்டில் படுதாவாக் கட்டினார்கள்!

மணிக்குப் பத்துமைல் வேகம் கூட கார் நகரவில்லை! அடைமழை! இராஜபாளையத்திலே இருந்து சிவகாசி 22 மைல்! எங்கே நிறுத்துவது காரை?

மூன்றரை மணிக்குச் சிவகாசியில் வரவேற்பு விழா! விடாமல் பெய்து கொண்டே இருக்கிறது! கார் வேகமோ போகப் போகக் குறைகிறது - தள்ளாட்டத்தில் செல்கிறது! சாலையெல்லாம் தண்ணீர்த் தேக்கம்! கவலை உள்ளங்களின் கலக்கங்கள் போல ரோடு காட்சியளித்தது!

இப்போதே மணி நாலரை! மழையிலே கூடியிருந்த மக்கள் கதி என்னவோ! இந்த மழையிலே எங்கே நடக்கப் போகிறது கூட்டம்! நேராகக் காமராஜரின் ஊரான விருதுநகருக்குப் போய்விடலாம் என்று எண்ணி, கார் சிவகாசிக் கடைத்தெருவிலே வந்து நின்றது - பரிதாபமாக!

கொட்டும் மழையிலேயும் கூட்டம்! கும்பல் கும்பலாக மக்கள் திரள்! ஆண்களும் - பெண்களும் காரைச் சூழ்ந்து கொண்டு, மகாத்மா காந்திக்கு ஜே என்ற கோஷங்களை ஆவேசமாகப் போட்டார்கள்!

'காரைத் திற, காந்தியைப் பார்க்க வேண்டும்!' என்ற ஆர்வ ஒலிகள் கூச்சலாக மாறின! குழப்பமூட்டின! மக்களிடையே பரபரப்பூட்டின!

காரின் பின் இருக்கையிலே அமர்ந்திருந்த காந்தியடிகள் இடமும், துணிப் படுதாவால் அவர் மறைக்கப் பட்டிருந்த மழைத் தடுப்பும், கார் வேகமும் ஒன்றாகச் சேர்ந்ததால், அவர் தரிசனம் யாருக்கும் கிடைக்கவில்லை!

பிறகு, கூட்டம் நடக்க வேண்டிய சிவகாசி இடத்திற்கு அடிகள் கார் வந்து நின்றது! சுமார் நாலாயிரம் மக்கள் நனைந்த கோலத்தோடு நின்று கோஷமிட்டபடியே இருந்தார்கள்!

அங்கே, அலங்கரிக்கப்பட்ட பந்தல்! அதன் மத்தியில் கார் வந்து நின்றது! அதற்கு அடியில் ஓரடி ஆழம் புதையும் மண்! மேலே இருந்து ஓயாது பெய்யும்மழை!

மழைக் குழப்பம்! கூட்டக் குழப்பம்! கார் குழப்பம்! கார் பந்தலுக்குப்போக முடியாமல் மழையிலும் - புதை மணலிலும் சிக்கி நகர முடியாமல் நின்றிருந்த குழப்பம்! ஆனால், மக்கள் மட்டும் எதையும் கவனியாமல், ஜே! கோஷம் போட்டுக் கொண்டிருந்தார்கள்!

உடனே, அங்கே கூடியிருந்த மக்கள் கூட்டம், காந்தியடிகள் கார் என்னவாயிற்று என்ற கலவரத்தால் முட்டி மோதிக் காரை நெருங்கியது! காரின் மேல் கிழிந்த கோலத்தோடு மூடப்பட்டிருந்த கித்தான் எங்கே? காற்றில் பறந்துவிட்டது போலும்!

கார் ஓட்டுநர், கார் நகராமல் நிற்பதைக் கண்டு மனம் உலைந்தார்! அந்த நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தல்; மழையில் நனைந்தத் தளர்ச்சியாலும், மக்கள் கூட்டத்தின் மோதுதலாலும், ஏற்பட்ட அசைவு ஆட்டத்தாலும், சரிந்து சாய்ந்து கார் முன்னாலே விழுந்தது!

காமராஜும், குமாரசாமி ராஜாவும் மற்ற காங்கிரஸ் தொண்டர்களும் - எவ்வளவோ நேரமாகத் தம்மால் இயன்ற வரை கூட்டத்தை எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தார்கள்! ஒன்றும் முடியவில்லை! மணியும் ஐந்தாகிவிட்டது!

இந்த இயற்கை - செயற்கை அலங்கோலங்களை எல்லாம் கண்டும் எள்ளளவு கூட மனங்கலங்காமல், யாரையும் கோபியாமல், அகிம்சா மூர்த்தியான காந்தியடிகள், அமைதியாக - இருந்த இடத்திலே இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தார்! இதுதானே காந்தீயம்! பொறுமை! மனம் புண்படா மாண்பு! பிறர் மனத்தையும் புண்படுத்தாத உயர்குணம்!

காமராஜும் - தாமும், கட்டுப்படுத்தியும் - கட்டுக் கடங்காமல் போன கூட்ட நெரிசலைக் கண்டு, நனைந்து சேறும் சகதியுமான தனது சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு, சரிந்து விழுந்த பந்தலிலே உள்ள பெரிய கோல்களை உருவிக் கொண்டுக் கோலாட்டச் சண்டை போடுவதுபோல் ஆவேசமாக சுழற்றிக் கொண்டிருந்தார் - குமாரசாமி ராஜா அவர்கள்! இராஜாவே கோலேந்தி விட்ட காட்சியைக் கண்ட பிற காங்கிரஸ் கோல்சண்டை வீரர்கள் எல்லாம், ஆளுக்கொரு பந்தல் கழிகளை உருவிக்கொண்டு ஆட ஆரம்பித்தார்கள்!

## கோல்சண்டையை கண்ட அடிகள்

காமராஜ் அவர்கள் அமைதியாகக் காந்தியடிகளுக்குப் பாதுகாப்பாகக் கார் அருகேயே நின்றபடி இருந்தார்! - மக்கள் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டே! எச்சரிக்கையோடு இருந்தார்!

நீண்ட நேரமாகவும் - ஆவேசமாகவும் - கோல் சண்டை செய்யும் குமாரசாமி ராஜாவின் கோபக் குறிகளைக் கண்டு காமராஜ் வியந்தார்! காமராஜருக்கும் கோல் எடுக்கத் தெரியும்! அதைக் காந்தியடிகள் முன்னாலேயே செய்வதா என்று அமைதியைக் கடைப்பிடித்தார்.

இராஜாவின் கோல்சுழற்சியைக் கண்ட மக்கள் சரசரவென்று ஓடினார்கள் - ஓரம் ஒதுங்க ஆரம்பித்தார்கள்! வழிவிட்டு விலகியது கூட்டம்!

சிலம்பம், பழகியவர்கள், தடிகளை ஆவேசமாகச் சுழற்றியதால், ஆட்டமாடியவர்களுக்குள்ளேயே கோல் அடிகள்

விழுந்தனவே தவிர, பொதுமக்கள் மீது யாருக்கும் - எவருடைய கோல்முனையும் படாமல் ஆடியதுதான் சிறப்பாக இருந்தது! அவ்வளவு பாதுகாப்புடன் சிலம்பாடினார் குமாரசாமி ராஜா!

இராஜாவிற்கு அடிவிழுந்தது! கைவிரல், கால்களிலே அவருக்குக் காயமே ஏற்பட்டது! எங்கிருந்து அவர் கோலாடினார் என்றே தெரியாத நிலையில் கூட்டத்துக்குள் சிக்கிவிட்டார்! மகாத்மா காந்தியடிகள், இதையெல்லாம் கண்டு; பொதுமக்களுக்கு எந்தவிதக் காயமுமில்லாமல் அச்சுறுத்தல் கோலாட்டமாடிய குமாரசாமி ராஜா அவர்களைப் பாராட்டித் தட்டிக் கொடுத்தார்!

இராஜா கைவிரலில் அணிந்திருந்த வைரமோதிரம் எங்கே விழுந்தது? யார் அதை எடுத்தார்கள் என்றே தெரியாமல் போய் விட்டது!

மழைக்கூட்டம் வழி விட்டுள்ளது என்று தெரிந்தவுடன், காமராஜ் அவர்கள் காரோட்டியை ஜாடைகாட்டி வண்டியை எடுக்கச் சொன்னார்!

ஓட்டுநர், வண்டிச் சக்கரத்தை வேகமாகச் சுழலவிட்டு டர்ரென்று காரை வேகமாக எடுக்கும்போது, காமராஜ் உட்பட அனைவரும் அதைத்தள்ளி விட்டார்கள்!

குமாரசாமி ராஜாவும், காமராஜும், பிற தொண்டர்களும் ஓடிவந்து காரிலே வேகமாக ஏறிக் கொண்டதும், வண்டி பறந்தது சிவகாசியை விட்டு!

## வெடிகுண்டு வழக்கு– காந்தி கட்டளை!

''விருது நகர் வெடிகுண்டு வழக்கை எதிர்த்துப் போராடுக, வன்முறையற்ற வரம்போடு அறப்போர் புரிக'' என்று காந்தியடிகள் காட்டிய பச்சைக்கொடி, காங்கிரஸ் போராட்ட வீரர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தது!

எல்லா நாளேடுகளிலும் விருதுநகர் வெடிகுண்டு வழக்கைப் பற்றியும், அராஜக நோக்கத்தோடு காங்கிரஸ்காரர்கள் மேல் பிரிட்டிஷ் ஆட்சி வழக்குகளைத் திணித்துத் தொடுத்தால், எதிர்த்து நில்லுங்கள் என்ற காந்தியடிகளின் குரலையும் கேட்ட தமிழகம், எதற்கும் தயார் என்ற நிலையிலே நின்றது!

ஆனால், வழக்கின் தீர்ப்பு வெள்ளையர் ஆட்சி முகத்தில் கரி பூசிவிட்டதால், காங்கிரஸ் செயல் வீரர்கள் எல்லாம் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து ஊர்வலம் வந்தார்கள்!

விருதுநகர் காவல் துறையைச் சேர்ந்தவர்களும், காமராஜ் மேல் என்ன வழக்குகளைத் தொடுக்கலாம், எப்படிப்பட்ட பொய் வழக்குகளை மீண்டும் ஜோடிக்கலாம்; சிறையிலே அவரைத் தள்ளலாம் என்றே தொடர்ந்து திட்டமிடலானார்கள்!

இந்தியாவின் வைசியராயாக இருந்த லார்டுவெலிங்டன் அவர்கள் தமிழ்நாட்டில் இரண்டு வாரம் சுற்றுப்பயணம் வந்தார்! அவர் வருவதற்கு முன்பே, காமராஜ் அவர்களையும் மற்ற காங்கிரஸ் தொண்டர்களையும் - தலைவர்களையும் - அவருடைய நண்பர்களையும் , காவல்துறை கைது செய்து காவலில் வைத்து - பிறகு விடுதலை செய்தது!

காந்தியடிகள் தமிழ் நாட்டின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு புறப்பட்டார்.

## பீகார் பூகம்பம்! காமராஜ் உதவி!

1934 - ஆம் ஆண்டு! ஜனவரி மாதம் 15- ஆம் நாள் வட பீகார் மாநிலத்தில் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது! அதன் விளைவாக பூமியைத் தோண்டத் தோண்ட அடுக்கடுக்கான பிணங்கள் மண்ணடியிலே அங்கே தென்பட்டன!

கோடிக் கணக்கான ரூபாய் பொருட் சேதங்கள்! ஆயிரக்கணக்கான பிணக்குவியல்கள்! பதினைந்தாயிரம் மைல்களுக்கு மேல் பூமிப் பிளப்புகள் - சரிவுகள் ஏற்பட்டன; இந்தியாவையே ஒரு பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கின அந்த பூபாக வெடிப்புகள்!

பூகம்பம்! மனிதர்களுடைய பாபத்திற்கு அளிக்கப்பட்ட தெய்வீக தண்டனை என்று சில வைதீகர்கள் கூறினார்கள்!

ஏன், இந்திய மக்களாகிய நாம், ஆங்கிலேய ஆட்சியிலே அடிமைகளாக இருக்கின்றோமே - அதற்கான தண்டனையாக இருக்கக் கூடாதா இந்தப் பூகம்பம்?

இயற்கையினால் இயக்கப்படுகின்ற பூகம்பம், எரிமலை, புயல் போன்றவை எல்லாம், ஒரு நாட்டின் ஒழுக்கங்கள், நீதிநெறிகள், மனித நேயங்கள், மனச்சாட்சிகள் இவை அழிக்கப்படும் பொழுது அவை ஆங்காரமாகி, ஓங்காரமாக ஓங்கி, உலகின் பகுதிகளை அழிக்கின்றன!

அந்த அழிவுகளை அரசியல்வாதிகள் தான் நிவாரணம் செய்து மக்கள் வேதனைகளைப் போக்க வேண்டியதாக இருக்கின்றது!

பாபு இராசேந்திர பிரசாத், அப்போதுதான் சிறையிலே இருந்து விடுதலையாகி வெளியே வந்தார்! உடனே பீகார் நிவாரணப் பணிகளிலே உதவவேண்டும் என்று இந்திய மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்!

அந்த வேண்டுகோளே, பீகார் மாநிலக் காங்கிரஸ் கட்சி வேண்டுகோளாக இல்லாமல், அகில இந்திய அமைப்பாக மாறுமளவிற்குப் பெரும் கோர சம்பவமாகி விட்டது!

எல்லா கட்சிக்காரர்களும் - கொடையாளர்களும் - பொதுநல மன்றங்களும், ஜாதி மத இனபேத வேறுபாடின்றி அக்குழுவில் இடம் பெற்றிருந்தார்கள்!

கிராமப்புறங்களில் இந்தக் குழுவிற்குத் துணையாகக் காங்கிரஸ் அமைப்புகள் பணியாற்றின! இந்தியாவின் எல்லா மாநிலங்களில் இருந்தும் பணம், மருந்துப் பொருட்கள், ஆடைகள், அவசியப் பொருட்கள் பீகார் நகரை நோக்கி வந்தன!

பாபு ராஜேந்திர பிரசாத், புருஷோத்தமதாஸ் தாண்டன், பண்டித ஜவகர்லால் நேரு போன்ற பெரும் தலைவர்கள் எல்லாம் பீகார் நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டார்கள்!

தமிழகத்தின் காங்கிரஸ் தலைவரான காமராஜ் அவர்கள், பாபு ராஜேந்திர பிரசாத் வேண்டுகோளை ஏற்று, எவ்வளவு உதவிகளைத் தமிழ்நாடு சார்பாகத் திரட்ட முடியுமோ அவ்வளவும் சேகரித்து பீகார் நிவாரணக் குழுவிற்கு அனுப்பி வைத்தார்!

## காங்கிரஸ் கட்சி பொன்விழா!

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி 1885ல் தோன்றி 1935-ஆம் ஆண்டின் டிசம்பர் 28-ஆம் நாள் அதன் பொன்விழா நாளாயிற்று.

இந்தப்பொன் விழாவை இமயம் முதல் கன்னியாகுமரிவரை நாடெங்கும் கோலாகலமாகக் காங்கிரஸ்காரர்கள் திருவிழா போலக் கொண்டாடினார்கள்!

காங்கிரஸ் ஆரம்பித்து ஐம்பது வருடங்களாயின! அந்த ஐம்பதாண்டுக் கால காங்கிரஸ் வளர்ச்சிகளை, அதன் அற்புதப் போராட்டங்களை, காந்தியடிகளின் செயற்கரிய அரசியல் செயல்களை எல்லாம், பட்டாபி சீதாராமையா ''காங்கிரஸ் மகாசபை சரித்திரம்'' என்ற பெயரால் புத்தகம் எழுதி வெளியிட்டார்.

சட்ட சபையிலே நுழைந்து வெள்ளையர் ஆட்சியோடு போராடுவது என்று முடிவெடுத்துக் காங்கிரஸ் மகா சபையை விட்டு விலகிச் சென்றவர்கள் எல்லாம் மறுபடியும் காங்கிரசிலே சேர்ந்தார்கள்!

விடுதலைப் போராட்டங்களிலே மீண்டும் வீறுகொண்டு போராடுவோம் என்று பொன்விழா சபதம் ஏற்றார்கள் - காங்கிரஸ் தலைவர்களும் - தொண்டர்களும்!

தமிழ் நாட்டில் தலைவர் காமராஜ் காங்கிரஸ் பொன்விழாவைக் கொண்டாடி, மக்களிடையே புதியதோர் புத்துணர்வைப் புகுத்தினார்!

ஒவ்வொரு கிராமக் காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து நகர காங்கிரஸ், வட்ட, மாவட்ட, மாநிலக் காங்கிரஸ்காரர்களை, பொன் விழாவைப் பொறுப்புடனும் சுறுசுறுப்புடனும் கொண்டாடிட காமராஜ் அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்!

காலையிலே காங்கிரஸ் கைராட்டைக் கொடியை ஏந்துவதும், வீதிகள் எல்லாம் மூவண்ணக் கொடிகளைப் பறக்க வைத்துத் தோரணங்களாக்குவதும், அலுவலகங்களில் வாழை மரங்களைக் கல்யாண வீடுகளிலே காட்சியளிப்பதைப்போல்கட்டுவதுமாகத் தன் நண்பர்களை ஊக்குவித்தார்!

மதியம் சமபந்தி போஜனம்! ஜாதிமத பேதமற்ற சமரசத் தோழமை கலந்த அரசியல்பணிகள்! மாலையிலே கட்சிப் பாடகர்களைக் கச்சேரியாகப் பாடச்செய்து மக்களைக் கூட்டிக் களிக்க வைப்பதுமாக அவர் இருந்தார்!

இரவிலே பொதுக் கூட்டங்களிலே காங்கிரஸ் ஆட்சியின் பொன் விழாக் காலம் வரை ஆற்றியுள்ள தொண்டுகளை மக்களுக்குப் எடுத்துரைப்பது, சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட கலைஞர்களைக் கொண்டு நாடகம், கூத்து இவற்றை நடக்கச் செய்வது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துமாறு காமராஜர் தனது நண்பர்களைக் கேட்டுக் கொண்டார்!

இவற்றையெல்லாம் கிராமங்களுக்கேற்ப, நகரங்களுக்கேற்ப, சிற்றூர் - பேரூர் மக்கள் நிலைகளுக்கேற்ப விழாக்களை நடத்தும் பொறுப்புகளை, முருக - தனுஷ் கோடியிடம் ஒப்படைத்தார் -தலைவர் காமராஜ் அவர்கள்!

# 22. காமராஜரால் தேர்தல் வெற்றி தமிழ் நாட்டின் திருப்புமுனை!

இந்த நேரத்தில், 1936-ஆம் ஆண்டில் விருதுநகர் நகராட்சிக்குத் தேர்தல்நடைபெற்றது. அப்போது, நீதிக்கட்சி கொடிகட்டிப் பறந்த காலம்!

காமரஜரின் அரசியல் நண்பரும், காங்கிரஸ் கட்சியின் தீவிர உழைப்பாளருமான முத்துசாமி ஆச்சாரி என்ற ஒருவர் இருந்தார்! காமராஜின் அரசியல்முன்னேற்றத்தில் மிக அக்கறை கொண்ட மனிதர் அவர்!

## தேவர் எச்சரிக்கை காமராஜ் விடுதலை!

தமிழ் நாட்டுக் காங்கிரசின் செல்வாக்கில் கொடிகட்டிப் பறந்த இருமொழி நாவலர் திரு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நெருக்கமான நண்பராகவும் முத்துசாமி ஆசாரி இருந்தார்.

அந்த ஆசாரியார் மறவர்குல அரிமாவான பசும்பொன் தேவர் மகனாரிடம் காமராஜை அறிமுகப்படுத்தி, அவரின் அற்புதமான அரசியல், கட்சி உழைப்புகள் ஆகியவற்றின் அரிய சேவைகளை விளக்கியிருந்தார். அந்த நட்பால், காமராஜ் அவர்களுக்கும் தேவர் பெருமகனாருக்கும் காங்கிரஸ் கட்சிப் பணிகளிலே அதன் அரசியல் பற்றும் - நெருக்கமும் தொடர்ந்திருந்தன!

காமராஜின் அரசியல் நுட்பங்களை நன்றாகப் புரிந்திருந்த ஆசாரியார், எப்படியாவது அவரை நடைபெறப்போகும் விருதுநகர் நகராட்சித் தேர்தலில் வேட்பாளராக நிற்க வைத்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்!

ஆங்கிலேயர் ஆட்சியில், ஊராட்சி - நகராட்சி, மாவட்ட நிர்வாகக் குழுத் தேர்தல்களில் நிற்க வேண்டுமானால் தேர்தலில் போட்டி போடுபவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வரிகட்டுபவர்களாக இருக்க வேண்டும் என்பது அன்றைய தேர்தல் விதிகளிலே ஒன்று!

காமராஜர் பெயரில், அப்போது வீடோ, நிலமோ - அவருக்கு இல்லை. அதனால், அவர் ஆட்சிக்கு வரி கட்ட வேண்டிய அவசியத்தில் இல்லை! இதை ஆசாரியார், பசும்பொன் வேங்கையாகக் காங்கிரஸ் கட்சியிலே விளங்கியிருந்த தேவர் அவர்களிடம் - காமராஜ் நிலையை விளக்கினார்.

உடனே தேவர் திருமகன் எட்டு ரூபாயை அந்த ஆசாரியிடம் கொடுத்து, ஆடு ஒன்றைக் காமராஜ் பெயருக்கு விலைக்கு வாங்குமாறு கூறினார்.

அந்த ஆட்டைக்காமராஜருக்கு உரிமையாக்கி, அவரை விருதுநகர் நகராட்சி மன்றத்திற்குச் சென்று தனது பெயரால் வரி கட்டுமாறு பணித்தார்! பிறகு, தேர்தலிலே காமராஜரைக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிற்குமாறு கூறினார்!

காமராஜும் - ஆசாரியாரும் தேவர் பெருமகன் கூறியவாறு செய்து, தேர்தலிலும் காமராஜ் நின்றார்; தனக்கு எதிராகப் போட்டியிடும் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து கடுமையாக வாக்குகளைத் திரட்டிக் கொண்டிருந்தார்!

விருதுநகரில் பெருஞ்செல்வச் சீமான்களான எம்.எஸ்.பி. நாடார், வி.வி. ராமசாமி நாடார் ஆகியோர், நகராட்சித் தேர்தலிலே ஜஸ்டிஸ் கட்சிச்சார்பாக அப்போது போட்டியிட்டார்கள்!

தங்களை எதிர்த்து ஒரு சாதாரண ஏழை மகன் போட்டியிடுவதா? என்ற ஆணவத்தில், இரவோடு இரவாகக் ஒன்று விவசாயப் பெருமக்களுக்குரிய திட்டத்தை உருவாக்குவது: மற்றொன்று, தேர்தல் அறிக்கைகளைத் தயாரிப்பது என்ற இரண்டு செயல்களில் அவர்கள் ஈடுபட்டனர். இது நிற்க.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியில், 1936- ஆம் ஆண்டின் தலைவரான நேருவிற்கும் - அதன் செயற்குழுவிலே உள்ள பெரும்பான்மையானவர்களுக்கும் மனமாச்சரியங்கள் தலைதூக்கின!

ஐரோப்பாவிலே இருந்து திரும்பிய நேரு, பொதுவுடைமை, சோசலிசக் கொள்கையோடு திரும்பினார்! காங்கிரசின் சாதனைகள் அவருக்கு மன நிறைவைக் கொடுக்கவில்லை. ஆரம்பத்திலேயே பண்டித நேரு, தலைமைப் பதவியிலே இருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருந்தார்!

ஆனால், அவர் விலகக் கூடாது என்றும், தலைவராகவே இருந்து பணியாற்றுமாறும் காங்கிரசில் பலர் அவரை வற்புறுத்தினார்கள்!

ஆனால், அவருக்கு மனநிம்மதி இல்லை; திருப்தி இல்லை; மனச்சாட்சி அவரைஉறுத்தியது! தமது தலைமையுரை, வெறும் பேச்சாகக் காற்றோடு கலந்து போய்விட நேரு விரும்பவில்லை! செயலுக்கு வழிகாட்டியாக அவ்வுரை அமைய வேண்டும் என்று கருதினார்!

நேருவின் சொற்பொழிவை எதிர்ப்பவர்களாகக் காந்தியடிகளும், அவரைப் பின்பற்றும் பத்துபேரும் காங்கிரஸ் செயற்குழுவிலே இருந்தனர்!

புது உறுப்பினர் மூவருடன் நேரு அவர்களையும் சேர்த்து நான்காயிற்று. பதினைந்தாவது செயற்குழு உறுப்பினர் அதில் கலந்து கொள்ளவில்லை!

சுபாஷ்சந்திரபோஸ் அப்போது சிறையிலே இருந்தார். நேரில் கலந்து கொண்டிருந்தாலும், அவர்இரு வழிகளிலும் கலந்து கொள்ளாமல், தம் தனி வழிச் சென்றிருப்பார்! வடநாட்டில் அப்போது இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியின் நிலைமை இவ்வளவு குழப்பமாகக் காணப்பட்டது. தமிழ்நாட்டின் காங்கிரஸ் கட்சி நிலை அதற்கு நேர் மாறாகவே நடந்தது! தலைவர் காமராஜ் வாழ்க்கையே தமிழ்நாட்டிற்கு ஒரு திருப்பு முனையாக இருந்தது!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் எந்தச்செயற்பாடுகளானாலும் சரி, தலைவர் காமராஜைக் கலந்து பேசாமல், அவருடைய கருத்துகளைக் கேட்காமல், முன்கூட்டியே அவருக்குத் தெரிவித்து முடிவு தெரியாமல், யாரும் எதையும் நடத்த முடியாது - நடத்தக்கூடாது என்ற நிலை பரவலாகவே எல்லோருக்குமே 1936-ஆம் ஆண்டு முதலே ஏற்பட்டு விட்டது.

காரைக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தலில் எஸ் சத்திய மூர்த்தி ஐயர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்!தலைவர் காமராஜ் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்!

அந்த ஆண்டில் பண்டித நேரு அவர்கள் தமிழ்நாடு சுற்றுப் பயணம்செய்தார்! முன்பு அவர்வந்தபோது தனத அருமைத் துணைவியுடன் தமிழகம் வந்தார்! இம்முறை மனைவியை இழந்தவராக வரும்நிலை அவருக்கு ஏற்பட்டு விட்டது!

அகில இந்தியத் தலைவராகப் பண்டித நேரு அவர்கள் தமிழகம் வரும்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரான எஸ். சத்தியமூர்த்தியும், செயலாளரான காமராஜ் அவர்களும், அவருடன் சென்று எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்கள்!

*ஆங்கிலேயர் ஆட்சி அப்போது தமிழ்நாட்டில் பொதுத் தேர்தலை நடத்தி விடத்திட்டமிட்டது. ஏனென்றால், ஜஸ்டிஸ் கட்சி, காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து விடும் என்பது அவர்கள் நம்பிக்கை.*

*இந்தத் தோல்வியைக் கொண்டே இந்தியா முழுவதிலும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியையும் - பலத்தையும், காமராஜ் அவர்களின் துணிகரமான, விவேகமான தொண்டுகளால் வேரூன்றிவிட்ட தமிழகக் காங்கிரஸ் கட்சியின் சக்தியையும் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டது வெள்ளை ஆட்சி!*

*காமராஜ் என்பவரின் நாட்டுப்பற்று,அவரால் தமிழக வாலிபர்கள் இடையே - பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சி, அவர்தான் காங்கிரஸ் கட்சி! காங்கிரஸ்தான் காமராஜர் என்ற நிலையை நாட்டியது!*

*அவரது அரசியல் பலம், கட்சிபலம், ஆங்கிலேயர்ஆணிவேரை அறுத்தெறியப் போகிற ஓர் அற்புத சக்தியாக விஸ்வரூபமெடுத்தது!*

*அது எதிர்காலத் தமிழக மக்களுக்கும் - இந்திய மக்களுக்கும் உணர்த்தப் போகின்ற அரசியல் ஹெர்குலிஸ் சக்தி என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கு எங்கே தெரியப்போகிறது?*

*காமராஜ் என்ற கர்மயோகி தான், இந்தியாவின் கிங் மேக்கராகக் காட்சியளிக்கப் போகிறார் என்ற நியாயச்சான்று, காந்தியடிகளுக்கும் - நேரு பெருமகனாருக்கும் தெரிந்திட அரசியலில் அற்புத விளக்கா வைத்திருந்தார்கள்! இல்லையே!*

*மேதினி மக்களிடையே, அவனி வாழ் அரசியல் அரங்குகளினிடையே, இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றித் தந்த காமராஜ் என்ற சாம்சன் பெருமையை - அருமையை - மேதைமையை எதிர்கால உலகம் உணர்வதற்கான வித்துக்களை, நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் முடிவு காட்டும் என்பது பிரிட்டிஷ்காரனுக்கு புரியாததிலே வியப்பேதும் இல்லையல்லவா?*

*1937-ஆம் ஆண்டு, இந்தியா முழுவதற்கும், தமிழ்நாடு சட்டசபைக்கும் பொதுத் தேர்தல் நடைபெற்றது! காங்கிரஸ் கட்சிதான் அகில இந்தியத் தேர்தலில் வெற்றி பெற்ற தனிப் பெரும் கட்சியாகக் காட்சி தந்தது!*

*இந்தியா முழுவதும் பதினோரு மாநிலங்களில் நடைபெற்றது தேர்தல்! தமிழ்நாடு, பம்பாய், ஐக்கிய மாநிலம், மத்திய பிரதேசம், பீகார், ஒரிசா ஆகிய ஆறு மாநிலங்களில் மகத்தான வெற்றியைக் காங்கிரஸ் ஈட்டியது!*

ஐக்கிய மாநிலத்தில் 218 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி 184 சட்டசபை இடங்களிலே வெற்றி பெற்றது! மத்திய பிரதேச மாநிலத்தில் 112 இடங்களிலே போட்டியிட்ட சட்டசபைத் தேர்தலில், 70 இடங்களைக் கைப்பற்றியது! பீகார் மாநிலத்தின் சட்டசபைத் தேர்தலில் 152 இடங்களில் போட்டியிட்டது காங்கிரஸ் கட்சி! 95 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது! ஒரிசா மாநிலப் பொதுத் தேர்தலில் 60 இடங்களில் போட்டியிட்டு 36 இடங்களைப் பெற்றது!

பம்பாய் காங்கிரசுக்குப் பாதி இடங்களும், அசாம் மாநிலத்தில் 108 இடங்களில் போட்டி போட்ட காங்கிரஸ் 35 இடங்களையும், வடமேற்கு எல்லை மாநிலத்தில் 50 இடங்களில் நின்ற காங்கிரஸ் 19 இடங்களிலும், வெற்றி பெற்றது! வங்காளத்தில், 250க்குப் போட்டியிட்டு 60 இடங்களையும், பஞ்சாபில் 170க்கு 18 இடங்களையும், சிந்து மாநிலத்தில் 60க்கு 8 இடங்களையும் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு வெற்றி பெற்றது.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் 215 இடங்களில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு 150 இடங்களிலே மிகப் பெரும் பலத்தோடு வெற்றி பெற்றுள்ளது என்றால்; அது காமராஜ் என்ற கடமை வீரரின் உணர்ச்சிக்கும் சுறுசுறுப்புக்கும், மதிநுட்பத்திற்கும், தேசபக்தியின் வைராக்கிய மன உறுதிக்கும் கிடைத்த வெற்றியல்லவா! தமிழ்நாட்டைப் போல 150 இடங்களிலே வெற்றி பெற்ற மாநிலம் இந்தியாவிலே உள்ள பதினொரு மாநிலங்களிலேயும் இல்லை.

அப்போதே காமராஜ் அவர்கள், தான் தேர்தல் களத்திலே முதலிடம் பெறும் அரசியல் அரிமா என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்! 1967-லே அல்ல! 1931-லேயே! அதுபோலவே, தமிழக மக்களிடையே வாக்களிக்கும் வாக்காளர்களை அணுகி, மொத்த வாக்குகளில் 65 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றுக் காட்டினார். தேர்தலில் மிகப்பெரும்ஜாம்பவான் கட்சி என்றும் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்துக் காட்ட ஜஸ்டிஸ் கட்சி ஒன்றே போதுமானது என்றும் ஆங்கிலேயரால் எண்ணப்பட்ட கட்சி 21 இடங்களை மட்டுமே பெற முடிந்தது.

தேர்தலுக்கு முன்பு தமிழ்நாட்டை ஆட்சி செய்த ஜஸ்டிஸ்கட்சி செல்வச் சீமான்களைப் பெற்ற கட்சி! ராஜாக்களும் மிட்டா மிராசுகளும் உள்ள கட்சி! சரிகைத் துப்பட்டாக்களும், சர்களும், ராவ் பகதூர்களும் திவான் பகதூர்களும் உள்ள, ஆங்கிலேயர் ஆதரவு பெற்ற கட்சி!

அந்தக் கட்சி, தமிழ்நாட்டுப் பொதுத் தேர்தலில் 21 இடங்களை மட்டுமே பெற முடிந்தது என்றால், காங்கிரஸ் கட்சியை காமராஜ் அவர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு வளர்த்திருக்க வேண்டும் என்பதை மனச் சாட்சியுள்ள அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றல்லவா?

ஜனாப் ஜின்னாவின் முஸ்லிம் லீக் கட்சி ஓரிடத்திலும் வெற்றி பெறவில்லை! ஆனால், காங்கிரஸ் முஸ்லிம் லீக் கட்சி 36இடங்களில் போட்டியிட்டு 15இடங்களைப் பெற்றது!

தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காமராஜ் அவர்கள், தனது சொந்த ஊரான விருதுநகர் சேர்க்கப்பட்ட சாத்தூர் தொகுதியிலே போட்டியிட்டார்! சாத்தூர் தொகுதி இரண்டு பேர் போட்டியிடும் இரட்டை மெம்பர் தொகுதி! ஒன்று பொதுத் தொகுதி, மற்றொன்று ரிசர்வ் தொகுதி!

பொதுத் தொகுதிக்குக் காங்கிரஸ் கட்சி சார்பாகத் தலைவர் காமராஜ் அவர்களும், ஜஸ்டிஸ் கட்சி சார்பாக இராமசாமி என்பவரும் போட்டியிட்டார்கள்! ரிசர்வ் தொகுதிக்கு மாணிக்கம் என்பவர் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகவும், அவரை எதிர்த்து மீனாம்பாள் சிவராஜ் அவர்களும் போட்டியிட்டார்கள்! தேர்தல் நடைபெறும் முன்னரே ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளரான இராமசாமி போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்! பொதுத் தொகுதியின் வேட்பாளர், தலைவர் காமராஜ் மட்டும்தான் இருந்தார்; என்றாலும் தேர்தல் நடைபெற்றது.

இப்போதெல்லாம் நடைபெறும் தேர்தல்களில் சின்னங்கள் ஒதுக்குவதுபோல், அப்போதெல்லாம் இல்லை. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு வண்ணம் மட்டுமே கொடுக்கப்படும். அதற்கேற்பக் காங்கிரஸ் கட்சிக்கு மஞ்சள் நிறம் கிடைத்தது.

அதனால்தான், தேர்தலிலே பணியாற்றிய காங்கிரஸ் வேட்பாளர்களைச்சேர்ந்த காங்கிரஸ் அன்பர்கள் ''மஞ்சள் பெட்டிக்கே மகத்துவம் மணக்குது மகாத்மா வாக்கியம்'' என்று பாடி ஊர்தோறும் வாக்குகளைக் கேட்டார்கள்!

சாத்தூர் தொகுதியில் மூன்று வேட்பாளர்கள் போட்டி! காங்கிரஸ் வேட்பாளர்களான காமராஜ் அவர்களும் மாணிக்கமும் வெற்றி பெற்றார்கள்! வெற்றி வீரர்கள் இருவரும் விருதுநகரிலே ஏகக் கோலாகலமாக இரட்டைக் குதிரைச் சாரட்டில் பவனி வந்தார்கள்! முன்னும் பின்னும்மக்கட் கூட்டம் அலைமோதின!

அந்த வெற்றி ஊர்வலம் போல ஓர் ஊர்வலம் விருது நகர் அரசியல் வரலாற்றிலே அன்றுவரை நடந்ததில்லை என்று மக்கள் பேசியபடியே ஊர்ந்தனர்!

விருதுநகர் தெப்பக்குளம் வழியாக ஊர்வலம் நகர்ந்து வந்து கொண்டிருந்தபோது, வெற்றி வீரர் காமராஜ் அவர்கள் அமர்ந்திருந்த சாரட்டு வண்டியின் மேல் அக்கினித் திராவகம் வீசப்பட்டது! ஆசிட் பல்புகள் சர்சர்ரென்று சுழன்று சுழன்று வந்து வண்டிமேலே வட்டமிட்டன! எறிந்த கற்களைப் போல தொடர்பாகப் அவை பறந்து வந்தன.

சிவகாமி அம்மையார் செய்த அறப்பயனோ - என்னவோ, வீசப்பட்ட திராவகப் பல்புகள் எல்லாம் குறி தவறித் தவறிக் காமராஜ் மேல் படாமல், குதிரைகளுக்கு முன்னாலேயே குப்குப்பென்று விழுந்து உடைந்து சிதறின!

கடிவாளக் கட்டுப்பாட்டை மீறி, கண்டவாறு ஓடிய பரிகளை, ஊர்வல மக்கள் அதன் பின்னாலேயே ஓடி அடக்கிக் கொண்டே வந்தார்கள்!வீழ்கின்ற பல்புகளின் திசைநோக்கி விர்ரென்று ஓடியது கூட்டம்! சிதறியது அணி! சீறிக் கொதித்தனர் மக்கள்! பாய்ந்து ஓடினர்; அவர்களிடம் பல்புகள் வீசியவர்கள் சிலர் பிடிபட்டார்கள்!

தலைவர் காமராஜ் பிடிபட்டவர்களை அடிக்க வேண்டாம், எந்த விதத் தொல்லைகளையும் கொடுக்க வேண்டாம் என்று கூறினார்! கொடிகளின் கம்புகளையே ஊர்வலத்தினர் ஆயுதமாகப் பயன்படுத்தி, காங்கிரஸ் துரோகிகளை விரட்டியடித்தார்கள்!

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் திடலை ஊர்வலம் வந்தடைந்தது! மக்கள் மகிழ்ச்சியோடு அவரவர் கிராமங்களுக்கு அமைதியாகத் திரும்பினார்கள்!

# 23. காமராஜ் - இராஜாஜி உட்கட்சிப் பனிப்போர்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் திரு எஸ். சத்தியமூர்த்தி ஐயர் தேர்ந்தெடுக்கப்பட்டார்! அவரைக் கட்சியின் தலைவராக மட்டுமல்ல; தனது அரசியல் ஆசானாகவும் தலைவர் காமராஜ் ஏற்றுக் கொண்டார்.

## போலீசை சலாம் போட வைப்பேன்!

அதனால், 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில், தனது ஆசானை ஏதாவதொரு தொகுதியில் போட்டியிட வைத்து, அவரை அமைச்சரவை அமைக்கச் செய்யவேண்டு மென்று காமராஜ் அவாவுற்றார்.

ஏனென்றால், நாவலர் சத்தியமூர்த்தி அவர்கள், காங்கிரஸ் கட்சியால் நடத்தப்படும் கூட்டங்களில் பேசும் போது ''எந்தக் காவல்துறை எங்கள் மீது வெடிகுண்டு பொய் வழக்குப் போட்டதோ, எந்தக் காவல்துறை காங்கிரஸ்காரர்களைத் தடிகொண்டுத் தாக்கி ரத்தத்தைக் கொட்ட வைத்ததோ, அதே காவல்துறைக்காரர்களைக் கதர்குல்லாய்களுக்குச் சலாம் போடவைக்கிறேனா இல்லையா? என்று பாருங்கள்'' என்று ஓங்காரமாக வலியுறுத்திப் பேசுவார்!

அத்தகைய ஆற்றல் பெற்ற தமது குருவை அமைச்சராக்க வேண்டும் என்பதே தலைவர் காமராஜ் குறிக்கோள்! அந்தச் சபத இலட்சியத்தை நடைபெறாதவாறு இராஜாஜி ஒரு சூழ்ச்சி செய்துவிட்டார்! அதை நம்பி ஏமாந்தார்காமராஜ்! என்ன சூழ்ச்சி அது? எப்படி நடந்தது? எதற்காக ஏமாற்ற மடைந்தார் காமராஜ்! யார் யாருக்கும் இடையே இந்த அரசியல்திருவிளையாடல்கள் நடந்தன?

சென்னை மாநில சட்டசபைக்கு ஒரே ஒரு பல்கலைக் கழகப்பட்டதாரிகள் தொகுதி இருந்தது. அதில்போட்டியிட எஸ். சத்தியமூர்த்தி ஐயர் எல்லா ஏற்பாடுகளையும்முன்கூட்டியே செய்து வந்தார்.

இந்தத் தொகுதியில், இராஜாஜி அவர்கள் போட்டியிடப் போவதாகத் திடீரென்று அறிவித்தார். அதனால், அத்தொகுதியை அவருக்கு விடடுக் கொடுக்கவேண்டும் என்று 'இந்து' நாளேடு சீனிவாசன் போன்ற சத்தியமூர்த்தியின் நெருக்கமான நண்பர்கள் அவரைக் கேட்டுக் கொண்டார்கள்!

அதற்கேற்ப, சத்தியமூர்த்தி தனது நண்பர்களின் வாக்கு நாணயத்திற்காகப் பெருந்தன்மையோடு அவர் அந்தத் தொகுதியை ராஜாஜிக்கு விட்டுக் கொடுத்தார்!

மீஞ்சூர் எம். பக்தவச்சலம், செங்கல்பட்டுத் தொகுதியில் போட்டியிட வேட்பாளராக நின்றார், அவரது அந்தத் தொகுதியை எஸ்.சத்தியமூர்த்திக்கு விட்டுக் கொடுப்பதாக, அவர் மனமார, வலிய, வற்புறுத்திக் கூறினார்! ஆனால், ஏற்க மறுத்துவிட்டார் சத்தியமூர்த்தி அந்தத் தொகுதியை!

அந்தத் தேர்தலில் சத்தியமூர்த்தியின் நாவன்மை, திறமை, ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளர்களைத் திணறடித்தன! அதனால், அவரை மத்திய சட்டசபையிலேயே உறுப்பினராகப் பணியாற்று மாறு காங்கிரஸ் நண்பர்கள் அவரை வேண்டினார்கள்!

## இராஜாஜி வாக்குறுதி!

சத்தியமூர்த்தி, தமிழ்நாட்டின் அமைச்சராக வேண்டும் என்ற காமராஜின் ஆசையை நிறைவேற்றுவோம் என்று, மற்ற தலைவர்கள் ஓர் உத்திரவாதமான வாக்குறுதியை எல்லாருடைய சார்பிலும் ராஜாஜி கொடுத்தார். அதைக் காமராஜரும் நம்பினார்!

''சென்னை மாநிலத்தில், காங்கிரஸ் கட்சி அமைச்சரவை அமைக்குமானால், சத்திய மூர்த்தி அந்த அவையிலே சேர்த்துக் கொள்ளப் படுவார்'' என்று, இராஜாஜி சத்திய மூர்த்தியைத் தனிமையில் சந்தித்து வாக்குறுதி தந்தார்! ஐயர் அந்த வாக்குறுதியை நம்பினார்!

ஆனால், சென்னை மாநிலத்திலே 159 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்த வண்ணம் இருந்தன!

தமிழ் நாட்டில் மந்திரிசபை அமைப்பதற்கு முன்பு, மத்திய சட்டசபையின் உறுப்பினரான சத்திய மூர்த்தி டெல்லிக்குப் புறப்பட்டார்!

புறப்படுவதற்கு முன்பு அவர், இராஜாஜியைச் சந்தித்தார்! ''அமைச்சர் அவையில் நீங்களும் ஓர் அமைச்சராவதற்காக, மேல் சட்ட சபையில் உறுப்பினராக நியமிக்கப்படுவீர்கள். சட்டசபை தொகுதியில் நீங்கள் போட்டியிடத் தேவையில்லை'' என்று இராஜாஜி, சத்தியமூர்த்திக்கு வாக்குக் கொடுத்தார்!

சத்தியமூர்த்தி, இராஜாஜி 'நா'க்கின் நாணயத்தை நம்பி, அவர் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார். போகும் வழியில் பம்பாய் நகரில் இறங்கினார்; சர்தார் வல்லபபாய் பட்டேலைச் சென்று சந்தித்தார்; இராஜாஜி கொடுத்த தனிமை வாக்குறுதியை அவர் படேலிடம் கூறினார்.

சென்னையில், இராஜாஜி தலைமையில் வி.வி.கிரி, உட்பட்ட 9 பேர்கள் அமைச்சரவை அமைக்கப்பட்டுவிட்டதையும், மேல் சட்டசபை உறுப்பினராகிய திருச்சி வழக்குரைஞர் டி.எஸ்.எஸ்.ராஜன் பெயர் நியமனம் செய்யப்பட்டு, அவர் அமைச்சரான விவரங்களையும் படேல், சத்தியமூர்த்தியிடம் விவரித்தார்!

''ஆச்சாரியார் என்னைக் கவுன்சிலுக்கு நியமித்து, அமைச்சராக்குவதாக வாக்களித்து ஏமாற்றிவிட்டார்!'' என்று படேலிடம் சத்தியமூர்த்தி வருத்தப்பட்டவாறே டெல்லி போனார்.

இராஜாஜி ஏமாற்றியது சத்தியமூர்த்தியை அல்ல; நாம்தான் அவரிடம் ஏமாந்து விட்டோம்'' என்று உள்ளூர எண்ணிய காமராஜ், தனது அரசியல் ஆசானை நம்ப வைத்துக் கழுத்தறுப்பதைப் போல பழி வாங்கி விட்டாரே ராஜாஜி - என்று காமராஜர் வருத்தப்பட்டார்!

''கதர்க்குல்லாய் அணிந்தவர்களுக்குக் காவல்துறையைச் சேர்ந்தவர்களைச் சலாம் போட வைக்கிறேன்'' என்ற ஆழமான ஒரு தேசபக்தரை, இராஜாஜி தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட்டாரே என்ற ஒருநெருடல்காமராஜர் மனதை நெருடியபடியே இருந்தது!

மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு நகரில், 1938-ஆம் ஆண்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. பிற்காலத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களின் மாமனாரான திரு. சி.என். முத்துரங்க முதலியார் தலைவர் தேர்தலில் வெற்றி பெற காமராஜ் அரும்பாடுபட்டார்!

## நகராட்சித் தலைவர் காமராஜ்!

ஆனால், சத்தியமூர்த்தியை, முத்துரங்க முதலியாரை நிறுத்தி இராஜாஜி தோற்கடித்து விட்டார்! காமராஜ் உழைப்பு அத்தேர்தலில் விழலுக்கு இறைத்த நீராயிற்று! 1938-ஆம் ஆண்டில் விருதுநகர் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது! காங்கிரஸ் வேட்பாளர்கள் எல்லா வார்டுகளுக்கும் போட்டியிட்டதில் 22 பேர்கள் வெற்றி பெற்றார்கள்! காமராஜ் 6-வது வார்டில் இருந்து மறுமுறையும் வெற்றி பெற்றார்!

வெற்றி பெற்ற 21 காங்கிரஸ் உறுப்பினர்களும், காமராஜ் அவர்களையே நகராட்சித் தலைவராகப் பதவியேற்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

நகராட்சித் தலைவர் என்பவர் உள்ளூரிலேயே இருந்து பொதுத் தொண்டு ஆற்றவேண்டியவர்! நான் அடிக்கடி வெளியூருக்குப் போகும் நிலையினன்! நகராட்சித் தலைவர் பதவிக்கு வேறு எவரையாவது தேர்ந்தெடுங்கள்!'' என்று மறுத்துவிட்டார்!

அதற்குப் பிறகு, சங்கரபாண்டிய நாடார் என்பவர் விருதுநகர் நகராட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! இது காமராஜரிடம் உள்ள அரிய பண்பாடுகளிலே ஒன்று! தமிழ்நாடு காங்கிரஸ்கட்சியின் செயற்குழுத் தேர்தல் காமராஜ் அவர்கள் குறிப்பிட்டபடி 1939-ஆம் ஆண்டு நடைபெற்றது.

'நவசக்தி' நாளேட்டின் ஆசிரியராகப் பிற்காலத்தில் இருந்த முருக - தனுஷ்கோடி என்பவரை, அப்போது அந்த தேர்தலில் போட்டியிடச் செய்தார்! அவரை எதிர்த்து சுப்பிரமணிய நாடார் என்பவர் போட்டியிட்டார்.

## தலைவர் காமராஜ் பிடிவாதப் போக்கு!

தனுஷ்கோடியின் வெற்றிக்காக, ஆறு நகர் வட்டங்களில் பிரசாரம் செய்யும் பணியையும், வாக்காளர்களை அழைத்து வந்து வாக்களிக்கச் செய்யும் பொறுப்பையும் கே.எஸ். முத்துசாமி ஏற்றிருந்தார்.

இதற்கிடையில் முத்துசாமிக்கும் - காமராஜ் அவர்களுக்கும் ஏதோ ஒரு மனத்தாங்கல்! அதை இந்தத் தேர்தலில் சரி செய்து கொள்ள அவர் எண்ணினார்.

தனுஷ்கோடியிடம் சென்ற முத்துசாமி, உன்னுடைய தேர்தல் வேலைகளை நான் கவனிக்க வேண்டுமென்றால், காமராஜ் வந்து என்னிடம் கூறவேண்டும் என்றார்.

தனுஷ்கோடி, தலைவர் காமராஜரிடம் சென்று முத்துசாமி கூறியதைச் சொன்னார்! ''தனுஷ்கோடி தோற்றாலும் பரவாயில்லை, நான் முத்துசாமியிடம் கூற மாட்டேன் போ!'' என்று காமராஜர் கூறிவிட்டார்!

மறுநாள் தேர்தல்! வாக்குச் சாவடியில் வாக்களிக்கும் பெட்டிகள் காலை ஏழுமணிக்கே வந்திருக்க வேண்டும்! ஆனால், எட்டு மணியாகியும் ஓட்டுப் பெட்டிகள் வாக்குச் சாவடிக்கு வரவில்லை.

தனுஷ்கோடி தனது எதிர்ப்பைத் தேர்தல் அதிகாரியாக இருந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தெரிவித்தார்!

''குறிப்பிட்ட நேரத்தில் வாக்குப் பெட்டிகள் வராததால், தனக்கு விழும் வாக்குகள் பாதிக்கப்பட்டுள்ளன'' என்று தனுஷ்கோடி அந்த அதிகாரியிடம் கூறியதோடு, தனது எதிர்ப்பை எழுதித் தருவதாகவும் அவர் கூறினார்!

அந்த நேரத்தில் காமராஜ் அங்கே வந்து விட்டார்! அப்போது தேர்தல் அதிகாரி மீனாட்சி சுந்தரம் தனுஷ்கோடி கூறிய விவரத்தைக் காமராஜரிடம் விளக்கினார்! அவ்வளவுதான் கோபம் வந்துவிட்டது அவருக்கு!

''இதற்கு ஒரு ஆட்சேபமா? உனக்கு வெட்கமாக இல்லையா? போய் உன் வேலையைப் பார்'' என்று என்னைப் பார்த்துச் சீறினார் தலைவர்!

பிறகு, மீனாட்சி சுந்தரத்தைப் பார்த்து ''நீங்கள் ஒன்றும் இதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டாம்! மற்ற வேலைகளைப் பாருங்கள்'' என்று கூறிவிட்டு, அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்! எதிர்பார்த்தபடியே கொஞ்சம் வாக்குகள் வித்தியாசத்திலேதான் தனுஷ்கோடி தோற்றார் - பாவம்!

இந்த வருத்தத்தை முருக. தனுஷ்கோடி அவர்கள், பிறகு 1975 - ஆம் ஆண்டில் தாம் எழுதிய 'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலில், தன் மீது அவர் சீறி விழுந்த சம்பவத்தையும் - அதன் பயனையும் குறிப்பிட்டுள்ளார்!

## நிருபர்கள் முன்னே காமராஜர் கோபம்!

''காமராஜ் முதலமைச்சராக இருந்தபோது, திரு. டபிள்யூ. ஆர்.எஸ். சத்தியநாதன் ஐ.சி.எஸ். என்பவர் தலைமைச் செயலராகப் பணியாற்றினார்! ஒருநாள் அவர், அலுவலகத்தில் முதல்வரைப் பார்க்கச் சென்றார்!

முதல்வர் அப்போது பத்திரிகை நிருபர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்! ''இந்து'', பத்திரிகை நிருபர் ஏ.கே. வெங்கடேசன், தேசிகாச்சாரி, வெங்கட் ராமன், பி.டி.ஐ. நிருபர் கல்யாணசுந்தரம் போன்றவர்கள் அவருடன் இருந்தனர்.

தலைமைச் செயலர் முதல்வரைப் பார்க்க விரும்பியதைத் தெரிவித்த போது, அவரை உள்ளே வரச் சொன்னார் காமராஜ்! அவரும் உள்ளே வந்து, அமர்ந்தார்! நிருபர்களும் வெளியேறத் தயாரானார்கள்!

காமராஜ் நிருபர்களை உட்காரச் சொன்னார்! தலைமை செயலரை 'என்ன?' என்று கேட்டார்! அவர் சற்றுத் தயங்கியபடியே நின்றார்!

'பரவாயில்லை சொல்லுங்கள். அவர்கள் நான் சொல்லாமல் எதையும் பத்திரிகைகளில் வெளியிட மாட்டார்கள்' என்று தலைமைச் செயலரை வந்த விவரத்தைக் கூறுமாறு கேட்டார்!

தலைமைச் செயலர் சற்றுத் தயக்கத்துடன், முதல்வரிடம் மெதுவாக, அப்போது பொதுப்பணித் துறையின் செயலராக இருந்த திரு. சீனிவாசன் ஐ.சி. எஸ். கோப்பு ஒன்றை எடுத்துக் கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரான திரு. வி. இராமையா அறைக்குச் சென்று விவாதித்துள்ளார்! அமைச்சர், அதற்கு உடனே கோபப்பட்டுக் கோப்பினைத் தூக்கி வீசி எறிந்து விட்டார்! அச்செயல் தனக்குப் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், பொதுப்பணி செயலர் அதற்காக வருத்தப்படுகிறார்! இந்த சம்பவத்திற்கு என்ன செய்யலாம் என்று தன்னிடம் யோசனைக் கேட்டதாகவும், தலைமைச் செயலர் முதல்வரைப் பார்த்துவிட்டு வந்து பதில் கூறுவதாகக் கூறிவிட்டு வந்திருப்பதாகவும் காமராஜ் அவர்களிடம் அச்சத்துடனும் அடக்கத்துடனும் அறிவித்தார்!

உடனே காமராஜர், தனது அந்தரங்கச் செயலாளர் திரு. பி. வி. கிருஷ்ணய்யாவைக் கூப்பிட்டு, அமைச்சர் இராமையாவைத் தனது அறைக்கு உடனே வருமாறு பணித்தார்!

சிறிது நேரத்திற்கெல்லாம் அமைச்சர் இராமையா, முதல்வர் அறைக்கு வந்தார்! வந்தவர் தன் செருப்பை முதலமைச்சர் அறைக்கு வெளியே விட்டு விட்டு உள்ளே நுழைந்தார்!

வந்த அமைச்சர் ராமையா அவர்களைப் பார்த்து, நிருபர்கள் முன்பும் - தலைமைச் செயலாளர் நேரிலும், ''உனக்கு புத்தி

இருக்கிறதா? நாம் ஐந்து வருடங்கள் இந்தப் பதவியில் இருக்கப் போகிறோம்! அதிகாரிகள் அப்படியா? அவர்களிடம் இப்படி நடந்து கொள்ளலாமா?' என்று, தலைமைச் செயலாளர் சொல்லியதைச் சொல்லி அவரிடம் இதுபற்றி தன் செயலுக்கு வருத்தம் தெரிவிக்கும்படி கூறினார்.

அமைச்சர் ராமையா அவர்களும், முதல்வர் காமராஜ் கூறியவாறே வருத்தம் தெரிவித்துவிட்டு, பின்னர் வெளியேறினார் - பாவம்! இவ்வளவும் நிருபர்கள் முன்னிலையிலேயே நடந்தன!

இது குறித்துப் பத்திரிகைகளில் ஒன்றும் செய்தியேதும் வெளியிட வேண்டாமென்றும் நிருபர்களைக் காமராஜ் கேட்டுக்கொண்டார்.

''மூன்று முதல்வர்களுடன்'' என்ற நூலில், காமராஜ் அவர்களிடம் நேர்முக உதவியாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய பொ. க. சாமிநாதன் அவர்கள் எழுதியுள்ளதையே மேலே குறிப்பிட்டோம்!

காமராசர் தன்னலமற்றவர்; கர்ம யோகி; பரந்த நோக்கத்தோடு கட்சியை வளர்க்க அயராது பாடுபட்டார்! எல்லாம் உண்மைதான்! ஆனால் வள்ளுவன் குறளுக்கு அவர் ஓர் உதாரணமாக அரசியலில் உலவினார் என்றார் கவியரசு கண்ணதாசன் அவர்கள்!

### கண்ணதாசன் பேசுகிறார்!

''காமராஜரிடம் ஒரு கெட்ட சுபாவம் உண்டு - கோபம்!''

''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி - இனமென்னும், ஏமப் புணையைச் சுடும்'' - என்றான் வள்ளுவன்! அந்தச் சினம் அவரிடம் மிக அதிகம்!''

''இடந்தெரியாமல் கோபம் கொள்வார். ஒரு பெரிய தலைவருக்கு அது நியாயமாகாது!''

''அது என்னமோ, அதை ஒரு நியாயம் மாதிரி எல்லோரும் ஒப்புக்கொண்டு விட்டோமே தவிர, அது முறையாகாது!''

''தலைவர் காமராஜ் அவர்களிடம் நாணயம், திறமை இரண்டும் அவரிடம் குடிகொண்டிருந்தன; ஆனால், ஒரு சுபாவம் அவரிடமிருந்தது.''

''இன்னொருவன் மேலேறி வரும்பொழுது அவனைத் தலையைத் தட்டி வைதது்க் கொண்டே இருப்பதுதான் ராஜதந்திரம் என்ற முறையில், நான் முன்னே சொன்னது போல அவர் நடந்து கொண்டுதான் இருந்தார்!''

தமிழ் நாட்டு அரசின் அரசவைக் கவிஞராக மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் நியமிக்கப்பட்ட, கவியரசு கண்ணதாசன் அவர்கள் ''நான் பார்த்த அரசியல்'' என்றொரு நூலை எழுதினார்.

அந்த நூலுக்குள்ளே ஓர் அத்தியாயம், ''நான் பார்த்த தலைவர்கள்'' என்பது! தலைவர் காமராஜ் அவர்களைப் பற்றி எழுதியிருப்பதைத்தான் மேலே அவர் வாயிலாகவே பேச வைத்தோம்!

இதற்குக் காரணம் என்ன? இயற்கையாகவே காமராசருக்கு அமைந்த முன்கோபம் என்றே சொல்லலாம்! இந்தக் கோபம்தான், காங்கிரஸ் தொண்டர்களை அவரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இழக்கச் செய்துவிட்டது எனலாம்!

''உதாரணமாக. நான் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் இரண்டாண்டுகளுக்குக் குறைவாகவே நெருங்கிப் பழகினேன்! காமராசருடன் ஏழெட்டு ஆண்டுகளுக்குமேல் நெருங்கிப் பழகியுள்ளேன்.''

''மணியடித்துக் கூப்பிடுவார்! ஏதோ நினைவில், 'அவருக்குப் போன் செய்' என்பார்! நான் யாருக்கு என்று கேட்டால் உடனே முன்கோபம் வந்து, ஏதாவது சொல்வார்! அடுத்து தவற்றை உணர்ந்து, இன்னாருக்குப் போன் செய்' என்பார்!'

- என்று திரு. பொ. க. சாமிநாதன் அவர்கள் தனது 'மூன்று முதல்வர்களுடன்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கான தலைவர் தேர்தல் 1940- ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள், சென்னை இந்தி பிரசார சபை மண்டபத்தில் நடைபெற இருந்தது! புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 203 பேர் அங்கே வந்திருந்தார்கள்.

அந்த ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கான புதிய தலைவர், ராம்கார் நகரில் நடைபெறப்போகும் அகில இந்திய காங்கிரஸ் மகா சபைக்குரிய தலைவர், தேர்தலில் யாரை ஆதரித்து தேர்வு செய்வது, அந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் செல்வதற்குரிய தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது போன்ற செயல்களுக்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன!

இராஜாஜி, இந்தி பிரசார சபா மேடையிலே அமர்ந்து, கை ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டிருந்தார்!

திருச்சிராப்பள்ளி நகரைச் சேர்ந்த டாக்டர் சாமிநாத சாஸ்திரி; தமது நூல் நூற்கும் தக்களியைச் சுழற்றிக் கொண்டிருந்தார்!

மாநாட்டிற்கு வருகை தந்திருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள், தங்களுக்குள்ளேயே ஏதோ குசு குசுவென கிசு கிசுத்துக் கொண்டிருந்தார்கள்! சபாவில் ஏதோ முணு முணுப்பும் - பரபரப்பும் காணப்பட்டது!

1938, 1939 இந்த இரண்டு ஆண்டுகளிலும், நடைபெற்றத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தல்களில், திருவாளர்கள், சி. என். முத்துரங்க முதலியாரையும், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரையும், இராஜாஜி அவர்கள் இரண்டுமுறைகளும் சொல்லி வைத்தாற்போல சத்தியமூர்த்தி ஐயரை நிறுத்தி வைத்துத் தோற்கடித்தார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தலில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரை ராஜாஜி வலிய நிறுத்தி, மீண்டும் எஸ். சத்தியமூர்த்தியைத் தோற்கடித்தார்! அந்த தெம்பான மகிழ்ச்சியில் அப்போது அந்த மேடையிலே வீற்றிருந்தார் இராஜாஜி! எந்த ஒருவித முன்னறிவிப்பும் இல்லாமல், கோவை அய்யாமுத்து அவர்களை ராஜாஜி அழைத்தார்! 1940 - ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்காக, கோவை சி.பி. சுப்பையா அவர்களின் பெயரை, அவரை முன்மொழியுமாறு இராஜாஜி கூறினார்!

கவிஞர் கோவை அய்யாமுத்து, காங்கிரஸ் கட்சியில் இராஜாஜியின் பக்தர்! பிற்காலத்தில் சுதந்திரா கட்சியைக் காங்கிரசுக்கு எதிராகத் தோற்றுவித்தபோதும் அவர் இராஜாஜியின் அணுக்க அன்பர்!

எப்போதும், இராஜாஜி சொல்லை எந்த நேரத்திலும் தட்டிக் கழிக்காதவர்கள் என்ற பட்டியலில் முதல் வரிசையில் இடம் பெற்றவர் அவர்.

கோவை சுப்பையாவுக்கு போட்டியாக காமராஜ் அவர்கள், சத்தியமூர்த்தி ஐயரைத் தலைவர் பதவிக்கு முன்மொழியப் போகிறார் என்ற திட்டத்தைக் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் உணர்ந்தார்கள்.

திருவாளர்கள் காமராஜ் - சி. பி. சுப்பையா இருவரும் காங்கிரஸ் கட்சி வளர்ச்சிக்கு வலதுகை - இடதுகை போன்று உழைப்பவர்கள்! ஆரம்பக் கல்வி மட்டும் அவர்கள் பெற்றவர்கள் என்றாலும், சாமான்யத் தொண்டர்கள்!

இந்த இருவரில், யார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்குத் தகுதியானவர்கள்? என்று, தரம் பிரிக்க முடியாத தேசபக்தர்கள்.

கடந்த ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு எஸ். சத்தியமூர்த்தி ஐயரும், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் போட்டியிட்டார்கள். அந்த இருவருமே அந்தப் பதவிக்கு மிகத் தகுதியானவர்கள்தான் என்பதில், யாருக்குமே எவ்விதக் கருத்து வேற்றுமையும் கிடையாது.

சத்தியமூர்த்தி, பிராமணர்; ரெட்டியார் பிராமணர் அல்லாதவர்! ரெட்டியார் எந்த அணியையுமே சாராத தமிழ்நாட்டுக் காந்தி! சுயேச்சையானவர்!

1937-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், மதுரை மாநகரிலே உள்ள பி.டி. ராஜன் ஒருவர் மட்டுமே ஜஸ்டிஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

செட்டிநாட்டுப் பகுதியில் நீதிக்கட்சியின் தூணாக நின்றவர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார். காரைக்குடியில் அவர் மருமகனாரான வெங்கடாசலம் செட்டியார் ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளராக நின்று, காங்கிரஸ் வேட்பாளர் நாகப்ப செட்டியாரிடம் தோற்றார்!

இராமநாதபுரம் தொகுதியலே முக்குலத்தைச் சேர்ந்த மன்னர் சேதுபதி ஜஸ்டிஸ் கட்சி சார்பாகத் தமிழக சட்டசபைக்குப் போட்டியிட்டார்.

அந்த மன்னரின் செல்வாக்கை எதிர்த்துப் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் காங்கிரஸ் கட்சி சார்பாக நின்றார்! தேவரின் தந்தையாரான உக்கிரபாண்டியத் தேவரே தன் மகனை எதிர்த்து, சேதுபதி மன்னருக்காகத் தேர்தல் பணி புரிந்தும் முத்துராமலிங்க தேவரே வெற்றி பெற்றார்!

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் கோவை விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு போன்றவர்கள் எல்லாம், காங்கிரஸ் மஞ்சள் பெட்டி முன்பு தோல்வி கண்டார்கள்!

எஸ். சத்தியமூர்த்தி, எஸ். சீனிவாச ஐயங்கார், பசும்பொன் தேவர் அனைவரும், தலைவர் காமராஜ் அவர்களுக்குக் காங்கிரஸ் முன்னோடிகளாக முனைப்போடு கட்சிப் பணியாற்றியவர்கள். அவர்களின் அடியொற்றியே தலைவர் காமராஜரும் பணியாற்றினார்.

மற்ற ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அனைவருமே காங்கிரஸ் கட்சியெனும் புயலால் வேரோடு சாய்ந்து பரிதாபமாகச் தோல்வி கண்டவர்களாவர்!

அந்த ஜஸ்டிஸ் கட்சி உயிரோடு கொடி உயர்த்தி உலா வந்தபோது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தேசிய நீரோட்டம் பெற்று, வகுப்புவாதக் காற்று மிக லேசாக எப்போதோ ஒருமுறை வீசியபடியே விளங்கியது!

ஆனால், ஜஸ்டிஸ் கட்சி வேரோடு சாய்ந்து படுதோல்வி கண்ட பின்னர்தான், பிராமணர் -பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வாதம் எப்படியோ காங்கிரஸ் கட்சிக்குள் ஊடுருவி விட்டது; அதற்கு இராஜாஜி - சத்திய மூர்த்தி அணிகளே பொதுக் காரணமாகவும் காட்சி தந்தன எனலாம்!

1939-ஆம் ஆண்டில் திரு சத்திய மூர்த்தி ஐயர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் தோற்ற பின்னர், அந்த உணர்ச்சி காங்கிரஸ் கட்சிக்குள்ளே ஓர் உத்வேகத்தை உருவாக்கி விட்டது!

கோவை சி. பி. சுப்பையா வெற்றி பெற்றால் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியில் ராஜாஜி அவர்களது ஆதிக்கம் தலை தூக்கி ஆடும்!

காமராஜ் அவர்கள் வெற்றி பெற்றால் சத்திய மூர்த்தி பலம் ஓங்கி விடும்! இதுதான் தமிழ் நாட்டில் அந்த அணிகளுக்கு எதிரெதிராக அன்றிருந்த காங்கிரஸ் கட்சியின் நிலை!

சுப்பையாவைத் தவிர வேறு யாரையாவது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவிக்கு நிறுத்தலாம் என்ற கருத்து ஒரு சில காங்கிரஸ்காரர்களிடமும் இருந்தது!

அதனால், கோவை ஐயாமுத்து போன்றவர்கள் சுப்பையா பெயரை முன் மொழிய இராஜாஜியே வற்புறுத்தி, வலியுறுத்திக் கூறியும்கூட, அவர் பேச்சை என்றுமே தட்டாத கவிஞர் அய்யாமுத்து மறுத்துவிட்டார். அது போலவே வேறு சிலரும் கூட மறுத்துவிட்டார்கள்.

ஆனால், துரதிருஷ்ட வசமாகத் திரு சுப்பையா பெயரைத் எம். பக்தவத்சலம் மாமனாரான சி.என். முத்துரங்க முதலியார் முன் மொழிந்தார்!

காமராஜ் அவர்கள் பெயரைத் சத்திய மூர்த்தி முன் மொழிந்தார்! போட்டி மிகக் கடுமையாக உருவாகி விட்டது!

## பனிப்போர் களத்தில் காமராஜ் வெற்றி!

வாக்குகள் எண்ணப்படும் ஒரே பரபரப்பு! யார் வெற்றிப் பெறுவார்கள் என்ற அதிர்ச்சி அந்தந்த அணியினரிடையே அலைமோதி ஆடியது!

காமராஜ் அவர்கள் 103 ஓட்டுக்கள் பெற்றுத் தனது அரசியல் ஆசான் சத்திய மூர்த்தியை இருமுறை தோற்கடித்த ராஜாஜி அணியை வீழ்த்தி வெற்றிவாகை சூடினார். நூறு ஓட்டுக்கள் பெற்ற சுப்பையா தோல்வியைத் தழுவினார்!

காமராஜ் அவர்கள் அன்று பெற்ற அந்த மூன்றே - மூன்று வாக்குகள் வித்தியாசம்தான், காங்கிரஸ் கட்சிக்கும் - அரசியல் சூழ்நிலைகளுக்கும் தமிழ்நாட்டின் தலைவிதியை மாற்றும் வித்தியாச ஓட்டுக்களாக அமைந்தன!

1919-ஆம் ஆண்டில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சாதாரணத் தொண்டராகச்சேர்ந்த காமராஜ் அவர்கள், தனது தளராத உழைப்பால், இருபத்தோராண்டுகள் அவராற்றிய அரிய சேவைகளால், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தன்னிகரற்றத் தலைவராகத் தோற்றமளித்தார்!

சத்திய மூர்த்தி அவர்கள், எவ்வித பேதமும் காட்டாமல், தேசபக்தியே தனது மதம் என்றும், காங்கிரஸ் கட்சியே சாதி என்றும் கருதி, காமராஜ் அவர்களுக்குத் துணை நின்று, அவர்கையைப் பலப்படுத்திட, அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளரானார்!

அப்போது ஆகஸ்டுப் புரட்சி காரணமாகக் காங்கிரஸ் கட்சி 1942-ல் தடைசெய்யப்பட்டிருந்தது. 1943-ஆம் ஆண்டில் திரு சத்தியமூர்த்தி மறைந்தார்! அந்த நேரம், காமராஜ் அவர்கள் ஆகஸ்டுப் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையிலே இருந்தார்.

காமராஜ், அரசியலில் நன்றி மறவாத நாயகன்! தனது ஆசான் பெயரையே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கட்டிடத்துக்குச் சூட்டி சத்தியமூர்த்தி பவன் என்று அழைத்தார்! அந்தக் கட்டிடத்தில்தான் இன்றும் காங்கிரஸ் கட்சி அலுவலகம் நடந்து வருகிறது.

1956-ஆம் ஆண்டு ஆவடி நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டின் திடலுக்கும், அந்த ஊருக்கும் சத்தியமூர்த்தி நகர் என்றே பெயரிட்டார்! இன்றும் அந்த ஊர் அழகு நகராக விளங்கிப் பெரு நகரமாக மாறிவருகிறது!

அந்த ஆண்டின் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக, மௌலானா அபுல்கலாம் ஆசாத் அபார வெற்றி பெற்றார்!

அந்த நேரத்தில், இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. சென்னை மாகாண ஆளுநராக இருந்த சர். ஆர்தர் ஹோப், அப்போது போர் நிதி வசூலித்துக் கொண்டிருந்தார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் போர் நிதி தரவேண்டாம் என்று தமிழ்நாடு முழுவதும் காமராஜ் அவர்கள் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தார். இதனால் யுத்த நிதி வசூல் தடைபட்டது.

காமராஜ் அவர்கள் மீது பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கடுங்கோபம் கனன்றது! அதனால், அவரைக் கைது செய்து வேலூர் சிறையிலே வைத்தார்கள்! இது காமராஜ் அவர்களின் மூன்றாவது சிறை வாசமாகும்;

தனிநபர் சத்தியாக்கிரகம் அப்போது வெகு வேகமாக நடைபெற்று வந்த நேரம்! அந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வது என்றால், காந்தியடிகளின் முன் அனுமதி பெற வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின் சத்தியாக்கிரக விதியாக விளங்கியது.

அந்த அறப்போரில் யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்பதற்கான ஒரு பட்டியலைக் காமராஜ் அவர்கள் கொண்டு சென்றபோது தான், கூடூர் என்ற ஆந்திர மாநில எல்லையிலே உள்ள இரயில் நிலையத்திலே அவர் கைது செய்யப்பட்டார்! காந்தியடிகளின் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் நகராட்சித் தலைவர்கள் எல்லாரும் சட்டத்தை மீறிச் சிறை செல்ல வேண்டும். அதற்கேற்ப, விருதுநகர், நகராட்சித் தலைவர் சங்கர பாண்டிய நாடார் சட்டத்தை மீறினார்! சிறை சென்றார்!

காமராஜ் அவர்கள் கைது செய்யப்படுதவதற்கு முன்பு ஓர் அறிக்கை விடுத்தார்! அவர் சிறை செல்வதால், தனக்குப் பிறகு வேலூர் ஜனாப், உபயதுல்லா அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து பணியாற்ற வேண்டும் என்று அந்த அறிக்கையில் அவர் கேட்டுக் கொண்டார்! விருதுநகர் சங்கர பாண்டிய நாடார், சத்தியாக்கிரகச் சட்டத்தை மீறிச் சிறை சென்று விட்டதால், விருதுநகர் நகராட்சிக்குப் புதிய தலைவர் தேர்வுசெய்ய, 1941-ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் நாள் குறிக்கப்பட்டது.

நகர சபைத் தலைவர் யார்? என்று பரபரப்பு ஏற்பட்ட நேரத்தில், வேலூர் சிறையிலே உள்ள காமராஜ் அவர்களையே, விருதுநகர் நகர சபை உறுப்பினர்கள் தமது தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்!

காங்கிரஸ் இயக்கம் தடை செய்யப்பட்டு விட்டதால், காங்கிரஸ்காரர்கள் பகிரங்கமாகக் கூடி நாட்டுப் பணிகளை ஆற்ற முடியவில்லை.

தடை செய்யப்பட்ட காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் சங்கம் என்ற ஒரு சங்கத்தை அமைத்து, தலைமறைவாகத் தேசத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள்.

முத்துரங்க முதலியாரால் அரியலூரில் காங்கிரஸ் சங்கம் எஸ்.கே. பாட்டில் தலைமையில் கூடி, ஆகஸ்டுப் புரட்சியில் கலந்து கொள்ளாமல் விலகியிருந்த காங்கிரஸ்காரர்களை, மீண்டும் கட்சியில் சேர்க்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அப்போது, காமராஜ் மத்திய பிரதேச அமேதி சிறையில் இருந்தார்! இந்தத் தீர்மானம் ராஜாஜி தனக்காவே தீட்டப்பட்டது என்று கருதினார்!

சத்தியமூர்த்தி மறைந்த பின்பு, காமராஜ் அவர்களை ராஜாஜி அணியில் சேர்த்திட அந்த அணி அரும்பாடுபட்டது. திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை வீட்டில், இதற்கான பேச்சு வார்த்தை நடந்தது. காமராஜ் அதிருப்தி ஏற்பட்டு விருதுநகருக்கே திரும்பிப் போய் விட்டார்.

## ஆசான் மேயர் மாணவர் சேர்மென்!

வங்கத்தில் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் அவர்கள் சிறையிலே இருந்தபோது, அவரே நகர சபை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதனைப் போல, காமராஜ் அவர்களையே விருதுநகர் நகரசபைத் தலைவராக, அதன் உறுப்பினர்கள் தேர்வு செய்தது; வெள்ளையராட்சிக்கு விடப்பட்டதோர் சவாலாகவே அமைந்தது.

சென்னை மாநகராட்சியின், மேயராக அப்போது எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்! காமராஜ் அவர்களது அரசியல் குரு சென்னை மேயர்! அவருடைய அரசியல் மாணவரான காமராஜ் விருது நகர் நகராட்சித் தலைவரா என்று சிலருக்குப் பொறாமையும் பொங்கி எழுந்தது!

1942-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில், காமராஜ் சிறையினின்று விடுதலை செய்யப்பட்டார்! விருதுநகர் விழாக்கோலம் பூண்டு - அவரைக் கோலாகலமாக வரவேற்று மகிழ்ந்தது!

விருதுநகர் நகரசபை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்,

காமராஜ் ஒருநாள், திடீரென நகரசபை உள்ளே புகுந்தார்! எல்லா உறுப்பினர்களும் - நகராட்சி அதிகாரிகளும் எழுந்து நின்று அவரை வணங்கி வரவேற்றார்கள்!

நகர சபைத் தலைவர் அமரும் இருக்கையில் திரு. காமராஜ் அமர்ந்தார்!91- வது தீர்மானம் அப்போது நிறைவேற்றப்பட்டதை அவர் பதிவு செய்துவிட்டு எழுந்தார்!

''என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். எனக்கு தமிழ்நாடு முழுவதுமான வேலைகள் இருக்கின்றன. ஆகவே, என்னால் நகரசபைத் தவைர் வேலையைப் பார்க்க முடியாது. நான் பதவியிலே இருந்து விலகிக் கொள்கிறேன்'' என்று, பேசி விட்டுத் தனது பதவி விலகல் கடிதத்தைத் துணைத் தலைவரிடம் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்!

அதைக் கண்ட அதிகாரிகளும் - உறுப்பினர்களும் அவருடைய பதவிப் பற்றற்ற இலட்சியத்தைக் கண்டு வியந்தார்கள்! பாராட்டினார்கள்!

சத்தியமூர்த்தி, சென்னை மாநகராட்சி மேயர் ஆவதற்காகத் திரு காமராஜ் கடுமையாக உழைத்தார்! காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் இடையே, அவருக்குரிய தகுதியையும், மரியாதையையும் தேடித் தந்தவரே! திரு. காமராஜ்தான்.

காரணம், அவர் கள்ளங்கபடமற்றவர். வஞ்சனை, சூது, பொய்வாக்குகளை பிறருக்குத் தந்து ஏமாற்றும் நரித்தனம் அவரிடம் எப்போதும் இருந்ததில்லை. அதனால், சத்தியமூர்த்திக்கு காங்கிரஸ் கட்சி அரணாய் காமராஜ் விளங்கினார்! காமராஜைக் கலந்தாலோசிக்காமல் - சத்தியமூர்த்தி எந்தக் கட்சி வேலையையும் செய்யமாட்டார்! எந்த நேரமானாலும் சரி, இருவரும் கூடிக் கலந்தே எதையும் செய்யும் பண்பாளர்களாக, நண்பர்களாக, ஆசான் - மாணவர்களாக விளங்கினார்கள் என்பது தமிழக அரசியல் உலகம் அறிந்த ஒன்று!

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியைத் சத்தியமூர்த்திக்குக் கொடுப்பதாக ஆங்கிலேய அரசு கூறியது. உடனே அவர் தனது அன்பரான காமராஜ் அவர்களிடம் ஆலோசனைக் கேட்டார்!

''தனிப்பட்டவர்கள் சட்டமறுப்புப் போரை காந்தியடிகள் நடத்தக் கட்டளையிட்டிருக்கிறார். அதில் நீங்கள் கலந்து கொள்ளாமல், துணைவேந்தர் பதவியை ஒப்புக்கொண்டால், உங்களுடைய எதிர்கால அரசியல் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசித்தீர்களா? அந்தப் பதவியை நீங்கள் ஒப்புக் கொள்ளக் கூடாது' என்று திட்டவட்டமாகக் காமராஜ் கூறிய யோசனையைத் சத்தியமூர்த்தி ஏற்றார்! பிறகு, அந்தப் பதவியை வேண்டாமென்ற மறுத்துவிட்டார்.

## சத்தியமூர்த்தி நாவன்மை

சத்தியமூர்த்தி அவர்களுக்கு, காமராஜ் நம்பிக்கையின் பலமாக உதவினார்! அரசியலில் அவருக்காக எதையும் செய்யக்கூடிய ஆபத்துக் கால நண்பராக, உதவியாளராக, மாணவராகவே அவர் சாகும்வரை விளங்கினார் காமராஜ்! அந்த சக்தி அவருக்கு எவ்வாறு உருவாயிற்று?

தமிழோ, ஆங்கிலமோ இந்த இரண்டு மொழிகளிலும் மேடையேறிப் பேசி - எதிரியை வீழ்த்துவதில் மிகத் திறமையான நாவன்மை உடையவர் - சத்தியமூர்த்தி! அவருடைய சொற்கள் கேட்டோரை வீறு கொள்ளச் செய்யும் ஆற்றலுடையன! எதிரியின் வாதங்கள் அவர் முன்னே எழுந்து நிற்க முடியாமல் சக்தியற்று விழும்! அந்த வாதத்திறமை அவருக்குக் கைவந்த கலை!

காங்கிரஸ் கட்சித் தோழர்கள் இரவு நேரங்களில் ஜஸ்டிஸ் கட்சியால் தாக்கப்பட்டபோது, சட்டசபையில் சத்தியமூர்த்தி லார்டு வில்லிங்டன் ஆட்சியைப் பார்த்துச் சவால்விட்டுப் பேசினார்!

''பகலிலே காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது; இரவிலே குண்டர்கள் ஆட்சி நடக்கிறது; அப்படியானால், வில்லிங்டன்துரை அவர்களே உமது சூழ்ச்சி எங்கே நடக்கிறது?''

சைமன் கமிஷனை எதிர்த்துக் காங்கிரஸ்காரர்கள் நடத்திய போராட்டத்தின்போது, சத்தியமூர்த்தி இவ்வாறு சவால்விட்டுப் பேசினார்:

1940 - ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள், சென்னை கோகலே மண்டபத்தில் காந்தியடிகள் பிறந்த நாள் விழா நடைபெற்றது. அந்த விழாவிற்கு சென்னை மேயர் எஸ். சத்திய மூர்த்தி தலைமை வகித்துப் பேசும்போது,

''பாபிகளை இரட்சிக்க யேசு வந்தார்! ஏழைகளை இரட்சிக்க காந்தி வந்தார்! கடவுள் மக்களுக்கு அருளிய வரப்பிரசாதம் மகாத்மா காந்தி'' என்று வாதமிட்டார். கூடியிருந்த மக்கள் கூட்டம் ஆரவாரமாகக் கையொலி எழுப்பி மகிழ்ந்தது.

நாவலர் சத்தியமூர்த்தி, உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் பேச்சாளர்களிலே ஒருவராக விளங்கினார். அவருக்கு ஆங்கிலத்திடம் மோகம் உண்டு. ஆயினும், ஆங்கிலம் அறியாத மக்கள் பெரும்பாலோராக உள்ள பொதுக்கூட்டங்களிலே ஐயர் தமிழில்தான் பேசுவார்.

அவர் முதல் முதலாகத் தமிழில் சொற்பொழிவாற்றியது மதுராந்தகத்தில் நடந்த கூட்டுறவு மாநாட்டில் தான். அதற்கு சி. சங்கரன் நாயர் தலைமை வகித்தார்.

நாவலர் சத்தியமூர்த்தி மிகச் சிறந்த இசை ரசிகர்; நாடக நடிகர்; சமஸ்கிருதத்திலே அவர் பெரும் புலமை பெற்றவர். அப்படி இருந்தும், தமிழ் நாட்டு இசையரங்கிலே சமஸ்கிருதமும் தெலுங்கும் ஆதிக்கம் செலுத்துவதனை அவர் வெறுத்தார்.

வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் சங்கீத வித்வான்கள் அடங்கிய சென்னை மியூசிக் அகாடமியின் ஆண்டுவிழா மன்றங்களிலேயே தமது வெறுப்பை மிகவும் துணிவுடன் வெளிப்படுத்தினார். தமிழகத்திலே யாழிசைக்கே முதலிடம் இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

பேசுவதில், இத்தகைய வியன்மிகு நா வளம் சத்தியமூர்த்திக்கு இருந்தது! ஆனால், காங்கிரஸ் கட்சியின் நெளிவு சுளிவுகளை அறியாதவர். இந்த நேரங்களில் எல்லாம் தமது அரசியல் ஆசானுக்குக் கை கொடுத்துப் பக்கபலமாக இருந்தவர் காமராஜ் அவர்களே!

சத்தியமூர்த்திக்கு வடநாட்டுத் தலைவர்களிடம் அதிகத் தொடர்பு இருந்தாலும், தமிழ்நாட்டுத் தொண்டர்களிடம் அந்த அளவு பலம் அவருக்குக் கிடையாது. அந்த பலத்தை உருவாக்கிக் கொடுத்தவர் சாட்சாத் காமராஜ்தான் என்பதைச் சந்தேகமின்றி அனைவரும் உணர்ந்தார்கள்! ஏற்றார்கள்! பாராட்டினார்கள்!

அரசியலானாலும் சரி, கட்சியானாலும் சரி, பேதா பேதமின்றி எல்லாரிடமும் பழகி, தனக்கென ஓர் அரசியல் பலத்தை நாளொரு மேனியும் வளர்த்துக் கொண்டே வந்தவர் காமராஜ் அவர்கள்!

போராட்டங்களைக் காந்தியடிகள் ஆரம்பித்த காலங்களில் மட்டும் காங்கிரசில் ஈடுபடுவர்களைப் போலல்லாமல், தேர்தல் காலங்களில் மட்டும் காங்கிரஸ் கட்சியில் ஊடுருவுவோர்களைப் போலல்லாமல், எல்லா நேரங்களிலும் - இரவு பகலென்றும் பாராமல்; எப்போதும் கட்சிக்காகவே உழைத்திடும் கட்சி வெறிச் சிந்தனையாளராகவே விளங்கியவர் காமராஜ்!

## தமிழகமெங்கும் நடந்தார் காமராஜ்!

அதனால்தான், தமிழகத்தில் அவர் காலடி வைத்த ஒவ்வொரு கிராமங்களிலும் காங்கிரஸ் கட்சியின் பலமென்ன? அதன் வளமென்ன? என்று அறியும் ஆற்றல் அவருக்கு அற்புதமாக அமைந்தது!

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிற்றூர் - பேரூர் - நகரங்கள், அங்கே வாழுகின்ற காங்கிரஸ் தலைவர்கள், அதனைப் போலவே எதிர்க்கட்சிகளின் பலங்கள், அதனதன் வளங்கள், அந்தக் கட்சிகளின் தலைவர்களது ஆற்றல்கள் - செல்வாக்குகள், செல்வ நிலைகள், மன உறுதிகள், சபல புத்திகள், அனைத்தையும் காமராஜ் அவர்களால் அரசியல் நாடி பிடித்துப் பார்க்க முடிந்தது என்றால், இதிலே வியப்பேதுமில்லை.

காரணம், அவர் கால் படாத குக்கிராமங்கள் தமிழகத்தில் இல்லை எனலாம்! அவ்வளவு மனப்பாடம் தமிழகத்தைப் பற்றி அவருக்கு இருந்தது.

தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமங்களிலும் வாழுகின்ற காங்கிரஸ்காரர்கள் எல்லாம், அவருடைய அன்புக் கட்டளைக்களுக்காக காத்திருந்தவர்கள்தான் என்றால், இதிலேதும் மிகையுமில்லை! வியப்புமாகா!

தூத்துக்குடி கந்தசாமிபிள்ளை, விருதுநகர் முத்துசாமி, சாத்தூர் லட்சுமணப்பிள்ளை மதுரை சிதம்பர பாரதி, நித்தியானந்தம், வெங்கடாத்திரி நாயுடு, திருச்சி அருணாசலம், சங்கிலியா பிள்ளை, சீர்காழி சாமிநாதன் செட்டியார், சேலம் தீர்த்தகிரி முதலியார், பண்ருட்டி தேவநாகய்யா, கடலூர் சுதர்சனம், முத்து முதலியார், சிதம்பரம் நைனியப்பன், வட ஆற்காடு உபயதுல்லா, வேலூர் குப்புசாமி முதலியார், திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, சென்னை ஆதிகேசவலு நாயக்கர், லட்சுமணசாமி முதலியார், எஸ். வெங்கட்ராமன் போன்ற கட்சி அன்பர்கள் எல்லாம் காமராஜ் அவர்களின் நண்பர்களாகக் கடைசி வரையிலும் - அவரவர்கள் சாகும்வரையிலும் தொண்டாற்றினார்கள்.

ஆனால், சத்தியமூர்த்திக்கு உரிய அன்பராய், நண்பராய், அரசியல் மாணவராய், ஆபத்துக் கால சகாயராய் எப்போதும் காமராஜ் விளங்கினார் என்பதை, மேற்கண்ட காங்கிரஸ் நண்பர்களும் அறிவார்கள். அதற்கேற்ப அவர்களும் உழைத்தார்கள்!

சென்னையிலே, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் மாநாடு 1955-ஆம் ஆண்டு யு. என். தேபர் தலைமையில் நடைபெற்றபோது,

அந்த மாநாட்டிற்காக புதியதோர் நகரமே ஆவடிக்கு அருகே உருவாக்கினார். அப்போது முதலமைச்சராக இருந்த காமராஜ் அவர்கள், அதற்கு ஆவடி மாநாடு என்றே பெயர் விளங்கியது.

அந்த மாநாட்டிற்காக அமைந்த நகரத்தின் பெயர் என்ன தெரியுமா? சத்தியமூர்த்தி நகர்! தனது அரசியல் ஆசான் பெயராலே ஓர் அழகு நகரத்தையே அமைத்தவர் திரு. காமராஜ் அவர்கள்!

அதேபோல, காமராஜ் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்ற உடனே, மறைந்த சத்தியமூர்த்தி அவர்களது வீட்டிற்குச் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலையிட்டு வணங்கி, அவருடைய துணைவியாரிடம் ஆசியும் பெற்று வந்த - நன்றி மறவா, நட்பு மறவா - நாட்டின் நாயகன் காமராஜ் அவர்கள்!

# 24. வெள்ளையனே வெளியேறு! மாறுவேட மர்மங்கள்!

*1942-ஆம் ஆண்டு பிறந்தது! ஜனவரி மாதம், முதல் தேதி காந்தியடிகள் காங்கிரஸ் கட்சிப் பொறுப்பிலே இருந்து விலகிக் கொண்டார்.*

## ஆகஸ்டுப் புரட்சி நாடு கொந்தளிப்பு!

*அதே ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி ஜப்பானியர்கள், ஆந்திர மாநிலத்திலே உள்ள விசாகப்பட்டினம் - காக்கினாடா துறை முகங்கள் மீது வெடிகுண்டுகளை வீசினார்கள்!*

*ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதி 'வெள்ளையனே வெளியேறு (Quit India) ''குவிட் இந்தியா'' தீர்மானம் காங்கிரஸ் கட்சியிலே நிறைவேற்றப்பட்டது!*

*''Do or die'', ''செய் அல்லது செத்து மடி'' என்ற தீர்மானம் காந்தியடிகளால் அறிவிக்கப்பட்டது.*

*காந்தியடிகள் கைது செய்யப்பட்டார் - அதனால் கன்னியாகுமரியிலிருந்து, காஷ்மீர்வரை நாடெங்கும் ரயில் தண்டவாளங்களைப் பெயர்ப்பது, தந்திக் கம்பிகளை அறுப்பது, ரயில் பாலங்களைத் தகர்ப்பது, அரசாங்க நிலையங்களுக்குத் தீ வைப்பது; போன்ற நாச வேலைகள் மக்கள் ஆவேசத்தால் நடந்து கொண்டிருந்தன.*

*1942-ஆகஸ்ட் 8 ஆம் நாள், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் மகாத்மா தலைமை ஏற்கப்பட்டு, (Quit India) வெள்ளையனே, வெளியேறு'' என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை இராஜாஜி விரும்பவில்லை! அதை எதிர்த்தார்!*

*ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கைக்கு இசைந்து, பிரிட்டிஷாரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் ராஜாஜி தீவிரமாக இருந்தார்.*

*காங்கிரஸ் கட்சியிலே இருந்து பிரிந்து, தமது கருத்தினை மக்களிடையே அவர் பிரசாரம் செய்து வந்தார்!*

சத்தியமூர்த்திக்கு ராஜாஜியின் காந்தியடிகள் எதிர்ப்பு அறவே பிடிக்கவில்லை! அதனால், இராஜாஜியை எதிர்ப்பவர்கள் யாரோ - எவரோ அவர்களை எல்லாம் சத்தியமூர்த்தி பாராட்டிக் கொண்டிருந்தார்.

இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் ஆகஸ்டுப் புரட்சி ஒரு பொன்னேட்டுச்சம்பவம் போன்றது. இந்தியாவின் மானங்காக்கும் மாபெரும் புரட்சியாக, அது நாடெங்கும் வெடித்துக் கொண்டிருந்தது!

''நாம் தீட்டப்பட்ட கூரிய வாளின் முனையிலே நிற்பதுபோல் இருக்கின்றோம்! எந்த நேரத்தில் என்ன நடக்குமோ தெரியவில்லை. எதுவும் நடக்கலாம்! எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.'' என்று, பண்டித நேரு அவர்கள் அப்போது நாடெங்கும் சூறாவளி வேகத்தில் முழங்கிக் கொண்டிருந்தார். காந்தியடிகள் தனது பொறுமையின் சிகரத்திலே இருந்து கீழே இறங்கி வந்து, ''பிரிட்டிஷ் ஆட்சியை இனி நம்பிப் பயனில்லை'' என்று பேசி, ஆகஸ்டுப் புரட்சிக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டார்!

நடக்கும் உலகப் போரில், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகள் ஒரு பக்கமும்- ஜெர்மனி, இதாலி, ஜப்பான் நாடுகள் மறுபக்கமும் நின்றன. போர் நாச வேலைகளை அந்த யுத்த அணி நாடுகள் நடத்தி, உச்சக் கட்டத்திலே அவை உலகை அச்சுறுத்திக் கொண்டிருந்தன!

அந்தப் போரில், இந்தியரைக் கேட்காமலே, இந்தியாவும் பிரிட்டனுக்கு ஆதரவாகப் போரில் குதித்திருப்பதாக, ஆங்கிலேயர் ஆட்சி உலகுக்கு அறிவித்துவிட்டது!

காந்தியடிகள், நேரு, போன்ற முக்கியமான இந்தியத் தலைவர்கள் எல்லாம் வெள்ளயர் ஆட்சியின் அறிக்கையை எதிர்த்தனர்; மறுத்தனர்!

இந்தியாவே உரிமை இழந்து அடிமைப்பட்டிருக்கும் நிலையில்; அது வேறு நாடுகளுக்காக எப்படிப் போரில் குதிக்க முடியும்? என்ற எதிர் கேள்வியை எழுப்பினார் காந்தியடிகள்!

''போரின் இறுதிக் கட்டத்திலாவது இந்தியாவிற்கு விடுதலை அளிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தால், போர் முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிப்பதைப் பற்றி சிந்தித்திருக்கலாம்'' என்றார் காந்தியடிகள்.

## சர்ச்சில் ஆணவம்!

''நான் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் பிரதமராக இருப்பது, சாம்ராச்சியத்தின் கல்லறை கட்டும் பணிக்குத் தலைமை தாங்கவா?''

''அந்த அரை நிர்வாணப் பக்கிரி காந்தியையும்; அவரது ஆட்களையும் அடக்க எனக்குத் துப்பாக்கிகளா தேவை? சாதாரண இலட்டித் தடிகளே போதாதா?'' என்று, ஆணவத்தின் உச்சியிலே நின்று கொண்டு ஆர்ப்பரித்தார் பிரிட்டிஷ் பிரதமரான வின்ஸ்ட்டன் சர்ச்சில் அவர்கள்!

''அப்படியா? இந்தியாவின் ஆதரவு பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கிடையாது'' என்று, திரு. சர்ச்சிலுக்கு அகில இந்திய தேசிய இயக்கம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

## மாவீரன் போஸ்!

இவைகட்கு எல்லாம் முன்னாலேயே சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவை விட்டு மர்மமாக மறைந்தார் என்ற செய்தி நாடெல்லாம் பரவி, அவர் பிரிட்டிஷ் நாடுகளுக்கு எதிரான நாடுகளின் உதவிகளைப் பெற்று, இந்திய தேசிய இராணுவம் ஒன்றை அமைத்து, அதன் வீரத் தளபதியாக அவர் தோன்றியது - உலகை ஓர் உலுக்கு உலுக்கியது!

கெஞ்சினால் மிஞ்சல், மிஞ்சினால் கெஞ்சல் என்ற கொள்கையை கொண்டிருந்த ஆங்கில ஆட்சி 1942- மார்ச் மாதத்தில் சர் ஸ்டாப் ஃபோர்டு கிரிப்ஸ் என்பவரை, இந்திய சுதந்திரம் பற்றிய பிரச்னைகளை அறிந்து வரும்படி ஒரு தூதுக் குழுவை அனுப்பியது.

ஜனாப் மௌலானா அபுல்கலாம் ஆசாதும், காந்தியடிகளும், கிரிப்ஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்! இந்து - முஸ்லிம் என்ற புதிய சிக்கலை எழுப்பினார் கிரிப்ஸ் அப்போது.

''சில நிபந்தனைகளோடு கூடிய இந்திய சுதந்திரத்தைப் போர் முடிவில் வழங்குவோம்'' என்று காந்தியடிகள் முன்பு கூறிய யோசனையையே மீண்டும் எதிரொலித்தார்!

போர் முடிந்த பின்னால் - அதுவும் வெள்ளையர் மனது வைத்தால் ஏதோ விடுதலை கிடைக்குமாம். இது ஒரு பின் தேதியிட்ட செக், (Post Dated Cheque) போன்ற இதை ஏற்க முடியாது'' என்று திட்டவட்டமாக மறுத்தார் காந்தியடிகள்.

## இராஜாஜி விலக : சர்தார் கடிதம்!

இந்த நேரத்தில், இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு இராஜாஜி ஆதரவு காட்டினார்! அதன் விளைவாக 1942 - ஜூலை 15ஆம் நாள், காந்தியடிகளே, சர்தார் வல்லபபாய் படேலின் வாக்கிற்கு இணங்க, இராஜாஜியைக் காங்கிரசிலே இருந்து விலகும்படி கடிதம் எழுதினார்!

இத்தகைய அரசியல் சூழ்நிலை இந்தியாவில் தோற்றமளித்து நெருக்கிக் கொண்டிருந்த நேரத்திலே, பம்பாய் மாநகரில் - கோவாலியா தெப்பக்குளம் மைதானத்தில், 1942-ஜூலை 8-ஆம் நாள், இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை கூடியது.

வரலாற்றுப் புகழ்பெற்ற இந்தக் கூட்டத்திற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த திருவாளர்கள் கே. காமராஜ், எஸ். சத்தியமூர்த்தி, சி.என். முத்துரங்க முதலியார், எம். பக்தவச்சலம் உட்பட முப்பது பேர்களுக்கு மேல் சென்றார்கள் - பம்பாய் மகா சபைக்கு!

## வெள்ளையனே வெளியேறு!

அந்த மகாசபைக்கு, மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையேற்றார்! காந்தியடிகள் விருப்பப்படி, ''வெள்ளையனே வெளியேறு'' (Quit India) என்ற வரலாறு படைத்தத் தீர்மானம் பண்டித நேரு அவர்களால் முன் மொழியப்பட்டது.

அவர், அப்போது தீர்மான உரை ஒன்று ஆற்றுகையில், ''இந்தியாவின் தன்மானம் பேரம் பேசக்கூடியதொரு பொருளல்ல! போராட்டம்... முடிவற்ற போராட்டம், இதுவே ஆங்கிலப் பேரரசுக்கு எனது பதில் Struggle... Eternal struggle that is my reply to the British Empire என முழக்கமிட்டார் பண்டித நேரு!

அந்தத் தீர்மானத்தை இரும்பு மனிதர் என்று இந்திய மக்களால் போற்றப்பட்ட சர்தார் வல்லபபாய் படேல் வழி மொழிந்தார்!

கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு, ஜே.பி. கிருபளானி, பண்டித பந்த், எஸ். சத்தியமூர்த்தி உட்பட பலர் அந்த தீர்மானத்தை ஆதரித்து, வெள்ளை ஆட்சிக்கு அறை கூவலிட்டார்கள்!

## காந்தியடிகள் போர் உரை!

இறுதியாக, மகாத்மா காந்தியடிகள் - நூற்று நாற்பது நிமிடங்கள், எரிமலை ஒன்று வெடித்தது போல் சுதந்திரப்போர் உரையாற்றினார்!

''சுதந்திரம் உடனடியாக வந்தாக வேண்டும்! அதுவும், இன்றிரவே விடுதலை கிடைப்பது உறுதியானால், காலை புலரு முன்பே கிடைத்தாக வேண்டும்.

'இந்த நிமிடம் முதல் நீங்கள், ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாக எண்ணிக் கொள்ள வேண்டும். இனி, நீங்கள் அடிமைகளல்லர்! சுதந்திரத்தின் சாரமே இதுதான்!''

''தான் அடிமையல்லன் என்ற உணர்வு ஒருவனுக்கு ஏற்பட்ட உடனேயே அவனது அடிமைத்தளைகள் உடைந்து நொறுங்கி விடும்!''

''இதோ ஒரு தாரக மந்திரம் சொல்லுகிறேன்! இதை மறக்காமல் மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்!''

## செய் அல்லது செத்து மடி!

''நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும், ''செய் அல்லது செத்து மடி'' (Do or Die) இந்தியாவை விடுவிப்போம் அல்லது அந்த முயற்சியில் செத்து மடிவோம்! அடிமைத் தனம் நிலைத்திருப்பதைப் பார்க்க நாம் உயிர்வாழத் தேவையில்லை'' என்ற போர் அறை கூவலை காந்தியடிகள் முழக்க மிட்டார். அப்போது இரவு 10 மணிக்கு மேல் இருக்கும்!

அந்த மகா சபையில் நிறைவேற்றப்பட்ட விடுதலைத் தீர்மான விவரம் இதோ:

''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி உடனே முடியவேண்டும். நாசிசம், பாசிசம், ஏகாதிபத்திய முறை இவைகளை ஒழிக்கச் சுதந்திர இந்தியா உதவும்.''

## நள்ளிரவிலே தலைவர்கள் கைது!

பிரிட்டன் தானே ஒதுங்க இணங்காவிட்டால், காந்தியடிகள் தலைமையில் அகிம்சா தர்மச் சுதந்திரப் போர் நடத்தப்படும். அன்னிய ஆட்சி ஒழிந்ததும், வகுப்பு ஒற்றுமை ஏற்படும். அதன் பின்னர் சகல வகுப்பின் பிரதி நிதிகளையும் கொண்ட தாற்காலிகமானதோர் இந்திய ஆட்சி அமைக்கப்படும்''

இந்தத் தீர்மானம் அதிக எதிர்ப்பின்றி பலத்த வரவேற்புடன் பம்பாய் மகாசபையிலே நிறைவேறியது.

அதைக் காணச் சகியாத வெள்ளை ஆட்சி, மறுநாள் ஆகஸ்டு 9-ஆம் நாள், காலை ஐந்து மணிக்கெல்லாம் மகாத்மா காந்தியடிகள், கஸ்தூரிபாய், மீராபென், படேல், பியாரேலால், மகாதேவ் தேசாய்,

கவிக்குயில் சரோஜினி தேவி, சர்தார் வல்லபபாய் படேல், பண்டித ஜவகர்லால் நேரு, ஜனாப் மௌலானா அபுல்கலாம் ஆசாத் மற்றும் அன்றிரவு கிடைத்த எல்லாத் தலைவர்களையும் கூண்டோடு கைது செய்தது.

கைது செய்யப்பட்ட காங்கிரஸ்தலைவர்களை எல்லாம் ஆங்கிலேயர் ஆட்சியினர் எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என்று தெரிவிக்கவில்லை. காந்தியடிகள் குழுவினரைப் புனாவிலே உள்ள ஆகாகான் மாளிகையிலும் பண்டித நேரு உட்பட்ட மற்ற தலைவர்களை எல்லாம் அகமத் நகர் கோட்டையிலும் வெள்ளையராட்சி சிறையிட்டது.

தங்களது தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டுத் தாறுமாறாக எங்கெங்கோ கொண்டுபோய் அடைக்கபட்டச் செய்தியோடு ஆகஸ்டு 9-ஆம் நாள் சூரியன் உதயமாயிற்று.

பம்பாய் நகரத்திலே ஓர் எரிமலை பலாத்காரமாக வெடித்தது போன்ற உணர்வுகளால் உந்தப்பட்ட மக்கள்; தங்களது எண்ணங்கள் சென்றவாறெல்லாம் ஆரவாரம் செய்தனர்!

எழுந்தன துப்பாக்கி வேட்டுக்கள்! விழுந்தன பிணங்கள்! நடந்தன - தடியடி தர்பார்கள்! சிந்தினர் ரத்தத்தை மக்கள்!

ஒன்பதாம் நாள் காலை 9 மணிக்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலிலே, காங்கிரஸ் கொடியை ஏற்றி வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது! முக்கியத் தலைவர்கள் கைதானமையால் அது நடக்குமோ நடக்காதோ என்ற மக்கள் சந்தேகப்பட்டனர்!

## கொடியை பறக்கவிட்ட மர்ம மறத்தி!

அப்போது எங்கிருந்தோ ஒரு பெண்மணி வந்தாள்! புரட்சிப் புயலென மாநாட்டுத் திடலுக்குள்ளே புகுந்தாள்! கதராடை உடுத்தியிருந்த கண்ணகி - ஏற்றினாள் கொடியை அந்த மாநாட்டுக்குப் பந்தல் முகப்பில் - காலை 9 - மணிக்கே! பறந்தது வானளாவப்பட்டொளி வீசியபடியே மூவண்ணக் கொடி!

வெள்ளைக் காவலர்கள் விரைந்தனர் - படை படையாக! துள்ளித் துடித்த அந்த வீராங்கனைச் செயலைத் தடுத்திடத் துரத்தியோடி வந்தனர்! அதற்குள் அந்த வீரப் பெண்மணி, நாடெங்கும் புரட்சி நடக்கட்டும் என்று சங்கநாதத்தை ஊதினாள்!

யார் தெரியுமா அந்த வீர மங்கை? - அருணா ஆஸப் அலி என்ற சுதந்திர தேவியின் தங்கை! வீர மங்கை! அடிமைத்தனத்தின் விலாயெலும்பை ஒடித்த வேங்கை!

## மாறுவேடத்தில் காமராசர்!

காமராஜ் அவர்கள், தமிழகத்திலிருந்து சென்ற பிரதிநிதிகள், ஆந்திர மாநிலத் தலைவர்களுள் ஒருவரான என் சஞ்சீவரெட்டி ஆகியோர் அனைவரும், அன்று புறப்பட்ட பம்பாய் எக்ஸ்பிரஸில் சென்னை திரும்பினார்கள். ஆந்திர எல்லை வந்ததும் சஞ்சீவ ரெட்டியைக் கைது செய்தது வெள்ளையராட்சி!

இதைக் கண்டதும் காமராஜ் எச்சரிக்கையாகி விட்டார்! ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் வழி நெடுக பலத்த காவல் பாதுகாப்பு போடப்பட்டிருப்பதைக் கண்டார்!

பம்பாய் எக்ஸ்பிரஸ் அரக்கோணம் சந்திப்பிலே வந்து நின்றது. இரயில் நிலையத்தைக் காமராஜ் எட்டிப் பார்த்தார்! ஏராளமான காவலர்கள் அங்கே பரவலாக நிறுத்தப்பட்டிருப்பது அவருக்குத் தெரிந்தது!

உடனே தலைவர் காமராஜ் அவசர அவசரமாக எழுந்தார்! தலையிலே ஒரு தலைப்பாகையைக் கட்டிக் கொண்டார்! துண்டைத் தோள்மேலே போட்டுக் கொண்டு தனது சிறு துணி மூட்டையைக் கையிலே தூக்கிக் கொண்டார்! அந்த மூட்டையிலே தான் பம்பாய் மகா சபைப் போராட்டத் தீர்மான நகல்கள் இருந்தன!

சென்னைக்குச் சென்றால் சென்ட்ரல் ரயில்வே நியைத்திலேயே தம்மையும் கைது செய்து விடுவார்கள்! அதனால், அரக்கோணத் திலேயே இறங்கி விட்டார் காமராஜ்!

யாரும் தம்மை அடையாளம் காணாதபடி, இரயிலை விட்டு இறங்கி, ஒரு கிராமத்தான் நடந்து போவதைப் போல வெகு வேகமாக நடந்தார்! இரயில் நிலையத்தின் வெளிப்புறத்துக்கு வந்தார்!

காவலர்கள் ஆங்காங்கே கும்பலாக நின்று கொண்டிருப்பதைக் காமராஜ் கண்டதும் - காணாதது மாதிரி வேக வேகமாக நடந்து, பேருந்து நிலையம் வந்ததும், இராணிப்பேட்டை போகும் பஸ்சிலே ஏறி உட்கார்ந்தார். கட்டிய தலைப்பாகையை அவிழ்க்காமல், பேருந்து மூலமாக இராணிப்பேட்டைக்கு வந்தார்!

இதற்கிடையில் எதையும் கவனியாமல், ஏதோ ஒரு குடியானவனைப் போலத் தோற்றம் தந்தவாறே, விடியல் இருட்டு நேரத்தில், தனது நண்பரும், வடாற்காடு மாவட்டக் காங்கிரஸ் குழு உறுப்பினருமான கே. ஆர். கல்யாணராமய்யர் வீட்டுக் கதவைத் தட்டினார் காமராஜ்.

விடியல் நேரம்! கதவைத் தட்டுவது காவல்துறையாக இருக்குமோ! தன்னையும் கைது செய்யத்தான் ஆங்கிலேயர் வந்துள்ளனரோ என்ற பதட்டத்தில் கலியாண ராமய்யர் கதவைத் திறந்தார்! அங்கே காமராஜ் நின்றிருந்தார்!

## இராணிப்பேட்டை கலியாணராமய்யர்!

கலியாணராமய்யர் உடனே எவரும் அறியாவண்ணம், வீட்டிற் குள்ளே தலைவர் காமராஜரை அழைத்துச் சென்று, உண்ண உணவும் - பழ வகைகளையும் தாயாரைத் தரச் செய்து, மீண்டும் வந்து கதவைத் தாளிட்டுவிட்டு, நடந்தவிவரங்களை எல்லாம் ஐயர் கேட்டறிந்தார்! இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினார்கள்!

கலியாணராமய்யரின் அன்னையார், நடைபெறும் சுதந்திரப் போராட்டம் வெற்ற பெற வாழ்த்தி, இறைவனையும் வணங்கினார். திடீரென்று காவலர்கள் வந்தால் என்ன செய்வது? போராட்டத் திட்டமெல்லாம் வீணாகிப்போய் கைதாகும் நிலையேற்படும் என்று நினைத்த கலியாணராமய்யர், காமராஜ் அவர்களைத் தலைமறைவாகத் தங்கவைத்திட, ஜனாப் முகமது சுலைமான் என்ற காங்கிரஸ்காரருடைய தோட்ட வீட்டிற்கு அழைத்துச் சென்று தங்க வைத்தார்!

மறுநாள் மாலை, அவர்கள் இருவரும் புறப்பட்டு தஞ்சை மாவட்டம், மதுரை மாவட்டம், நெல்லை மாவட்டம் முதலிய இடங்களுக்குச் சென்றனர். ஆங்காங்குள்ள காங்கிரஸ் போராட்டத் தோழர்களை எல்லாம் கண்டு கலந்துரையாடி, ஆகஸ்டுப் புரட்சிக்கான எல்லா செயல் திட்டங்களையும் விளக்கினார்கள்!

தன்னை வந்து சந்தித்த ஒவ்வோர் ஊர் காங்கிரஸ் தலைவர் களிடமும் - தொண்டர்களிடமும், வெள்ளையனே வெளியேறு!'' என்று பம்பாய் போராட்டத் தீர்மான நகல்களை மாறுவேடக் காமராஜ் கொடுத்தார்!

''இந்திய மக்களின் ஒப்புதல் இன்றியே, வெள்ளையர்கள் இந்தியாவில் எடுத்து வரும் போர் ஆதரவு உதவிகளைத் தடை செய்ய வேண்டும். இயன்ற வரை ஆங்கிலேய ஆட்சியின் இந்திய நிர்வாகத்தைத் தடைப்படுத்துதல் வேண்டும்.

ஆட்சியின் செயல்முறைகளை முடிந்தவரை இயங்க வொட்டாமல் முடமாக்குதல் வேண்டும். இவைதான் ஆகஸ்டுப் போராட்டப் புரட்சியின் முக்கியத்துவமாகும்'' - என்று காமராஜர் தெளிவுபட எடுத்துக் கூறினார்.

எல்லா ஊர்த்தொண்டர்களும் அவர் கூறியவற்றை உற்றுக் கேட்டு ஊன்றி உணர்ந்து, எப்படியும் ஆகஸ்டுப் போராட்டத்தை ஏற்றுப்போராடுவது என்ற எழுச்சியைப் பெற்றார்கள்!

## வேலூரில் காமராஜ்!

வேலூரிலே இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு பிரைவேட் டாக்சியில், கலியாணராமய்யரும் காமராஜ் அவர்களும் ஏறிக்கொண்டு, வடாற்காடு மாவட்டத்து முக்கிய நகரங்களுக்கு எல்லாம் சென்று போராட்டச் செய்தியைப் பரப்பியதும், வந்த டாக்சியை அனுப்பிவிட்டு, ரயிலில் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றார்கள்!

போகும் வழியில், தலைவர் காமராஜ் திருவண்ணாமலையிலே உள்ள அண்ணாமலைப் பிள்ளையைச் சந்திக்க முயன்றார். திருவண்ணாமலை இரயில் நிலையத்தில் வண்டி நின்றதும், அங்கே யாராவது காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்களா என்று அவர் எட்டிப் பார்த்தார். இறுதியில், ஒரு பள்ளி ஆசிரியர் கிடைக்கவே அவரிடம் போராட்ட நகல்களைக் கொடுத்து, நகரக் காங்கிரஸ் அலுவலகத்தில் அதைச் சேர்த்துவிடுமாறு அவர் கேட்டுக் கொண்டார். மீண்டும் ரயிலில் ஏறி அமர்ந்தார்!

## விழுப்புரத்தில் காமராஜ்!

சிவப்புத் தொப்பியினை அணிந்து கொண்டிருந்த காவலர்கள், விழுப்புரம் ரயில் நிலையத்தை முற்றுகையிட்டிருந்தார்கள். கதர் சட்டை அணிந்தவர்கள் யார் வந்தாலும், கைது செய்வது என்ற திட்டத்தோடு அவர்கள் நின்று கொண்டிருந்த பரபரப்பு அங்குச் சூழ்ந்திருந்தது!

எந்தக் கதர்ச்சட்டைக்காரரும் விழுப்புரம் ரயில் நிலையத்தில் தென்படவில்லை - இவர்கள் கண்களுக்கு! திரு. காமராஜ் அவர்கள் மட்டும் வண்டிக்குள்ளேயே உட்கார்ந்திருந்தார்; தன்னை யாரும் அடையாளம் கண்டுவிடாதபடி. கலியாணராமய்யர் கண்ணிற்படாமல் வண்டியை விட்டுக் கீழே இறங்கிச் சில கதர்ச்சட்டைக்காரர்களைச் சந்தித்துப் போராட்ட நகல் தீர்மானங்களைக் கொடுத்துவிட்டார்!

## தஞ்சையில் காமராஜ்

காமராஜ் பிறகு, தஞ்சை நகர் சென்று, நகர காங்கிரஸ் கட்சித் தலைவர் டி.ஆர்.வி. நாராயணசாமி அவர்களைச் சந்தித்துப் போராட்ட விவரங்களை விளக்கினார் - காமராஜ்! காங்கிரஸ்

தொண்டர்களிடம் போராட்டத் திட்டத்தை எடுத்துரைத்து வெற்றிகரமாக அறப்போராற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

திருச்சி ரயில் நிலையம் வந்தது! அங்கே காவலர்கள் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தார்கள்! அவர்களையும் மீறி திரு காமராஜும், கலியாணராமய்யரும் ஸ்டேஷனில் இறங்காமல் ரயில்வே தண்டவாளக் கிராசிங்குகளை எல்லாம் தாண்டி, திருச்சி காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. எம்.எஸ். ரங்கசாமியின் வீட்டை அடைந்தார்கள்!

## திருச்சியில் காமராஜ்

அரியலூரில் ஒரு சதித் திட்டத்தைக் காங்கிரஸ்காரர்கள் உருவாக்கப் போகிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப் பட்ட காவல்துறை, மிகவும் எச்சரிக்கையோடு காவலர்களை நிறுத்தி வைத்திருந்தது. யார் அகப்பட்டாலும் சரி - எல்லோரையும் கைது செய்யும் நோக்கத்தில் கடுமையான கட்டுப்பாட்டோடு இருந்தார்கள் காவலர்கள்!

திருச்சியிலே எம்.எஸ். ரங்கசாமி அவர்களையும் - பிற காங்கிரஸ் தொண்டர்களையும் மாறுவேடமணிந்த அவர்கள் பார்த்துப் பேசியபின்பு, அவர்கள் இருவரும் ஒரு கார் மூலம் மதுரை நோக்கிப் பயணமானார்கள்! போகும் வழியில் திண்டுக்கல் நகர காங்கிரஸ் அலுவலகத்திற்குச் செய்தியும் - நகலும் காங்கிரஸ்காரர்கள் மூலம் அனுப்பினார்கள்!

## மதுரையில் காமராஜ்

மதுரையில் பி.எஸ். குமாரசாமி ராஜா வந்திருந்தார்! அவரிடமும் மதுரை நகரக் காங்கிரஸ் தலைவர்களான சிதம்பர பாரதி, நித்தியானந்தம், வெங்கடாத்திரி நாயுடு ஆகியோரிடமும், மற்றும் தொண்டர்களிடமும், போராட்டத் திட்டங்களையும், அதனை எவ்வாறு ஆற்றுவது என்ற வழிமுறைகளையும் திரு காமராஜ் வகுத்தளித்தார்!

அதன் பிறகு காமராஜ் விருதுநகருக்குச் சென்றார்! கலியாணராமய்யர் திருநெல்வேலி காங்கிரஸ் கட்சி நகரத் தலைவர்களையும், தூத்துக்குடி கந்தசாமி பிள்ளையையும் சந்தித்து விவரங்களைக் கூறியபின், முடிந்தால் சேலம், கோவை மாவட்டங்களுக்கும் சென்று; போராட்டச் செய்திகளை விளக்கியபின், இராணிப்பேட்டைக்குத் திரும்புமாறு காமராஜ் அனுப்பி வைத்தார்!

## கலியாணராமய்யர் கைதானார்!

கலியாணராமய்யரிடம் வழிச் செலவுக்குரிய போதிய பணம் இல்லாமையால், நெல்லை நகரக் காங்கிரஸ் தலைவரிடம் மட்டும் போராட்ட நகல்களைக் கொடுத்து உரிய விளக்கத்தையும் கூறி நேராக இராணிப்பேட்டைக்கே சென்றார். இராணிப்பேட்டை திரும்பிய அவர் தனது இல்லத்தில் நுழையும்போது, காவலர்கள் அவரைக் கைது செய்தார்கள். வேலூர் சிறையிலேயும் - பிறகு தஞ்சைச் சிறையிலேயும் அவர் காவலில் வைக்கப்பட்டார்!

## விருதுநகரில் காமராஜ்

விருதுநகருக்குச் சென்ற மாறு வேடக் காமராஜ், அந்த ஊருக்கு இரண்டு மைல்தூரம் முன்னாலேயே உள்ள ரெட்டியார்பட்டி இரயில் நிலையத்தில் இறங்கி, விருதுநகர் காங்கிரஸ் தோழர்களுக்கு தாம் வந்திருப்பதைச் சொல்லி அனுப்பினார். ரெட்டியார் பட்டிக்குச் சென்ற விருதுநகர் காங்கிரஸ் தோழர்கள் தலைவர் காமராஜ் அவர்களைச் சந்தித்து, பிறகு அனைவரும் நடந்தே விருதுநகருக்குள் வந்தார்கள்;

வரும் வழியெல்லாம் பம்பாய் மகாசபைத் தீர்மானம், மாநாடு, அங்கே தலைவர்கள் ஆற்றிய உரையின் உட்கருத்துக்கள், காந்தியடிகளின் உருக்கமான போராட்ட உரை அனைத்யையும் காமராஜ் விவரித்தபடியே வந்தார். பின்பு தலைவர் காமராஜை அவர்களது இல்லத்தில் விட்டு விட்டு, காங்கிரஸ்காரர்கள் அவரவர் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். ஆகஸ்டு 16-ஆம் நாள்! உதயசூரியன் உதித்துக் கரகரவென்று மேலேறி வரும் நேரம்! ஜெயராம் ரெட்டியார் என்பவர் காமராஜ் அவர்களைக் காண வந்தார்!

''ரெட்டியாரே! விருதுநகர் காவல் நிலையத்திற்கு நீர் போய் ''நான் கைதாகத் தயார்! காவலரை வரச் சொன்னேன் என்று கூறிவிட்டு வா'' என்று காமராஜ் அவர்கள் அனுப்பி வைத்தார் ரெட்டியாரை. எழுத்தச்சன் என்றொரு ஆய்வாளர் காவல் நிலையத்திலே இருந்து ஓடோடி வந்து, காமராஜ் அவர்களே, நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? உங்களைக் கைது செய்ய வாரண்டுடன் வந்த அதிகாரி அரியலூர் சென்றிருக்கிறார்! அவர் வரும்வரை நீங்கள் ஓய்வெடுங்கள்! நான் எவரிடமும் இதைக் கூற மாட்டேன்.'' என்றார்.

''நான் இந்தப் போராட்டத்திற்காக என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து என் கடமையை முடித்து விட்டேன். இனி, நான் மட்டும் வெளியே இருக்க விரும்பவில்லை. என் தலைவர்கள் எல்லாம் எங்கெங்கோ சிறைகளிலே வாடிடும்போது, எனக்கு மட்டும் ஏன் ஓய்வு? அடிமை நாட்டில் அடிமைக்குச் சுகமா? சுதந்திரம் இல்லாத நாட்டில் சிறையில் இருப்பதுதான் விடுதலை வீரர்களுக்கான சுகம்! இன்பம்! அனுபவம்! வெளியே இருப்பதுதான் வேதனை! சித்ரவதை! எனவே, என்னை உடனே கைது செய்யுங்கள்'' என்றார் தலைவர் காமராஜ்!

ஆய்வாளர் எழுத்தச்சன் ஆடி அடங்கிப் போனார் - அவருடைய வீரத்தையும், கருணை - தவழும் தலைவர்கள்மேல் வைத்துள்ள பாசத்தையும் கண்டு! உள்ளம் சிலிர்த்தார்! காமராஜுக்கும் நமக்கும் காக்கிச்சட்டை அல்லவா நடுவிலே நிற்கிறது! என்று தேசியப்பற்றால் திகைத்துப் போய் நின்றார்!

இருப்பினும், அவரது கடமை தவறலாமா? கைது செய்தார் காமராஜை! வேலூர் சிறைக்கு உரிய பாதுகாப்போடு அவரை அனுப்பி வைத்தார்! பெட்டி நிறையப் புத்தகங்களைச் சுமந்து கொண்டு தலைவர் காமராஜ் காராக்கிருகம் சென்றார்!

## சிறைக்குச் சிறை மாற்றப்பட்டார்!

வேலூர் சிறைக்குச் சென்ற தலைவரை, அமராவதி சிறைக்கு அனுப்பி வைத்தார்கள் சிறையதிகாரிகள்! அந்தச் சிறையிலேதான் இரவோடு இரவாக நாடெங்கும் கைதான தலைவர்கள் எல்லாரும் சிறையில் தவம் கிடக்கிறார்கள்! மீண்டும் காமராஜ் வேலூர் சிறைக்கே மாற்றப்பட்டார்! விருதுநகர் நகராட்சியிலே, காமராஜ் அவர்களைக் கைது செய்ததும் நகரசபைக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் காங்கிரஸ் தேசத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தப் பிரதி ஒன்று மதுரை மாவட்ட ஆட்சியாளருக்கும் அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர் ஓர் ஆங்கிலேயர்! அதனால், நகராட்சி உறுப்பினர்களைக் கைது செய்யுமாறு அவர் ஆணையிட்டார்!

முருக - தனுஷ்கோடி, இராமையா நாடார், குருசாமி என்ற மூவரும்தான் அந்தத் தீர்மானத்தை நகரசபையிலே நிறைவேற்றினார்கள்! அதனால், அந்த மூவரையும் ஆங்கிலேயர் ஆட்சி கைது செய்தது!

போர் முடிந்தது. இரண்டாவது உலகப்போரில் பிரிட்டிஷ் கூட்டணி நாடுகள் வெற்றி பெற்றன. வெள்ளையர் எல்லாம் களிப்புடனாடிப் பாடினார்கள்! அதனால், அன்றுவரை பாதுகாப்புக் கைதிகளாக, விசாரணையற்ற கைதிகளாக, சிறைவைக்கப்பட்டிருந்த எல்லாக் காங்கிரஸ் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை ஆனார்கள். தலைவர் காமராஜ் அவர்களும் 1945-ஆம் ஆண்டுதான் விடுதலையானார்! அந்தச் சிறைவாசம்தான் காமராஜின் கடைசி சிறைவாசம்! அதற்குப் பிறகு அவர் சிறைவாசம் செல்லவேண்டிய அவசியம் நேரவில்லை! நாடும் விடுதலை பெற்றுவிட்டது.

## சிறை மீண்ட காமராஜருக்கு வரவேற்பு!

திருநெல்வேலி சந்திப்பு! மக்கட் கூட்டம் திரள்திரளாகக் குழுமின! எங்கு பார்த்தாலும் ஒரே ஆரவார ஜே கோஷம்! மகாத்மா காந்தியடிகள் வாழ்க! வந்தே மாதரம்! பாரத மாதாகி ஜே! என்ற முழக்கங்கள் மண்ணை அதிர வைத்தன! மூவண்ண ராட்டைக் கொடி பறக்கும் கைகள் ஓர்புறம்! மலர் மாலைகளோடும் பூச்செண்டுகளோடும் வந்திருந்த மக்கள் மற்றோர் புறம்! இரயிலிலே இருந்து இறங்கினார் காமராஜ்.

சிறையிலே இருந்து விடுதலை பெற்ற காமராஜ் ரயிலிலிருந்து சிரித்தபடியே இறங்கியதைக் கண்டு மக்கள் கும்பல்கள் சூழ்ந்து கொண்டன! ஜே! ஜே! ஜே! என்று மக்கள் கோஷங்களை எழுப்பிக் கொண்டு, திணறியபடியே சிக்கினர் நெரிசல் கூட்டங்களில்! நகர்ந்து வரும் கூட்டம் தாமிரபரணி ஆற்றுப் பாலத்தைக் கடந்தபோது, முன் பின் பாராத பெரிய மனிதர்கள் வந்து ஒருவர் பின்னொருவராகச் சூழ்ந்து கொண்டார்கள்! எங்கே போகிறது இந்தக் கூட்டம்? என்று கூட்டத்தை நடத்தும் நண்பர்களை கேட்டார்கள். தேச பக்தர்கள் ஊர்வலங்கட்கு அக்காலத்தில் அவ்வளவு பெரிய மரியாதை இருந்தது!

வழக்குரைஞர் நாடார் ஒருவரின் பெயரைக் கூறியதைக் கேட்ட காமராஜ் அவர்கள், அடிபட்ட நாகம்போல் சீறினார்! "திருப்புங்கள் வண்டியை! தேசத்துரோகியின் வீட்டுக்கு வரமாட்டேன்! தண்ணீரும் குடிக்க மாட்டேன்! திருப்புங்கள் காரை!" என்று பாம்பை மிதித்தவன் அலறுவதைப் போல அலறினார்!

## தேசத் துரோகி வீட்டில் தண்ணீரா?

கார் திரும்பியது ஏன்? வழக்குரைஞர் நாடார் யார்? எதற்காக அவரிடம் தண்ணீர் கூட குடிக்க மாட்டேன் என்றார் தலைவர், என்ற விவரமெல்லாம் மக்களுக்குப் புரிந்தது!

உடனே, கொட்டும் மேளதாளப் பாடல்களோடும் நாதசுர இசைகளின் கம்பீரமான நீண்ட இசைகளோடும், திருச்செந்தூர் சாலையிலே சென்று கொண்டிருந்த கார், ஊர்வலம், தலைவர் - தொண்டர்களின் வரிசைகள் எல்லாம் - நாங்குனேரிச் சாலைக்கு நகர்ந்தனர். வழியிலே பயணிர் விடுதி! களைப்புடன் வந்தோர் - இளைப்பாறினார்கள்!

''தேசத் துரோகி வீட்டில் தண்ணீர் கூட குடிக்க மாட்டேன்'' என்று சூளுரைத்தாரே அவர் யார்? எதற்காக அவ்வாறு கூறினார் காமராஜ் என்றால், அந்த வழக்குரைஞர் நாடார் வெள்ளையர் ஆட்சியிலே அரசு வழக்குரைஞராகப் பணியாற்றினார். 1937-ஆம் ஆண்டில் அவர் காங்கிரஸ்காரராக இருந்தவர்! 1942-ஆம் ஆண்டில், ஆட்சியின் கைக்கூலியாக இருக்க இணங்கியவர்! குலசேகரப் பட்டினம் கொலை வழக்கில் அரசு வழக்குரைஞராக இருந்தவரும் அவர்தான்!

இரண்டு காங்கிரஸ் நாடார்களைத் தூக்கு மேடைக்கும், 30 காங்கிரஸ் கட்சிக்காரர்களை ஆயுள் தண்டனைக் கைதிகளாக்கிச் சிறைக்கு அனுப்பியவரும் அதே அரசு வழக்குரைஞர்தான்!

## குலசேகரப் பட்டினம் கொலை வழக்கு!

குலசேகரப் பட்டினம் கொலை வழக்கு திருநெல்வேலியில் தனி நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்தது. அப்போது பொதுமக்கள் பணத்திலே தியாகிகளுக்கு உள்ளே பழம், காப்பி, டீ, வாங்கிக் கொடுத்தபோது, அவற்றையெல்லாம் தடுத்தவரும் இதே நாடார்தான்!

இப்படிப்பட்ட ஒரு நாட்டுத் துரோகியின் வீட்டில் காங்கிரஸ்காரன் தண்ணீர் அருந்துவானா? அவர் இல்லத்துவாசல் மண்ணைத்தான் மானமிருந்தால் மிதிக்கலாமா? ஆங்கிலேய அரசு வழக்குரைஞராக அவர் பணியாற்றிய அந்தக் குலசேகரப் பட்டினக் கொலைவழக்கில் இரண்டு பேரைத்தூக்குமேடையிலே நிறுத்தினார்!

அந்த இரண்டு பேர்கள்தான் தூக்குமேடை ராஜகோபாலனும், காசிராஜனும் என்பதை எண்ணுகிறபோது நமது மனம் நமக்கே சவாலாகி விடவில்லையா?

பதவி ஒன்றுக்காக நம்மையே விற்றுப் பல்லிளித்து மானத்தை விற்பவனா மனிதன்? அவனிடம் தண்ணீர் அருந்துபவனுக்கு மானம் என்ன செத்தா போய் விட்டது? காமராஜர் சொன்னபின் மற்ற காங்கிரஸ் தொண்டர்கள் எண்ணியவைதான் இவை.

## தொண்டு என்றால் என்ன பொருள்?

ஒரு கட்சியின் தலைவருக்கு நல்ல தொண்டனாய் எவன் விளங்குகின்றானோ, அவனுக்கு - நல்ல தொண்டர்கள் நாடிவந்து நின்று சேவை செய்வார்கள் என்பது தொண்டின் இலக்கணமாகும். தொண்டு என்றாலே வளைவு என்று தானே பொருள்!

1929-ஆம் ஆண்டிலேயே காங்கிரசை விட்டு விலகியவர் எஸ். சீனிவாச ஐயங்கார். அவர் மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர விரும்பினார். இதற்குச் சிலர் முயற்சி எடுத்துக் கொண்டு பணியாற்றினார்கள். இந்த முயற்சியிலே ஈடுபட்டவர்களுக்குப் பெயர் அபேதவாதிகள்!

இந்த அணி, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்த அணி! இந்த அபேதவாதிகள் குழு சீனிவாச ஐயங்காரிடம் சென்றது. காங்கிரஸ் கட்சியில் சேர அவரை ஆதரிப்பவராகவும், தலைவர் காமராஜரும், தொண்டரணிகளும் ஆதரிக்க முன் வந்திருப்பதாகவும் - அபேதவாதிகள் அய்யங்காரிடம் அறிவித்தனர். இரண்டு அணிகளும் சீனிவாச ஐயங்காரை ஆதரிப்பதால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் அவர் வெற்றி பெற்று விடலாம் என்று அபேதவாதிகள் கூறினார்கள்.

திரு. சீனிவாச ஐயங்கார், தலைவர் காமராஜ் அவர்களை அணுகி, இதுபற்றி விளக்கமாகப் பேசினார். ஐயங்கார் சொல்கிறபடி காமராஜ் கேட்பார் என்றும், அவர் எண்ணினார்.

## காந்தி எதிர்ப்புக்கு எனது ஆதரவா?

''நீங்கள் கூறுவது உண்மைதான்! நாங்களும் - அபேதவாதிகளும் கூடி உங்களுக்கு வாக்களித்தால், வெற்றி பெற்றுத் தலைவராகி விடுவீர்கள் என்பதும் உண்மைதான். ஆனால், காங்கிரஸ் கட்சிக்குள் நீங்கள் வந்து செய்யப்போகும் பணி என்ன?'' என்று ஐயங்காரைக் காமராஜ் கேட்டார்! காங்கிரஸ் கட்சிக்குள் வந்து, நான் காந்தியை எதிர்ப்பேன்'' என்ற பதிலை ஐயங்கார் கூறினார்!

''அப்படியா? காந்தியை எதிர்க்கவா நான் உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்? காந்தியை எதிர்ப்பதும் - எதிர்த்து வெற்றி பெறுவதும் இந்தக் காமராஜ் இருக்கும் வரை நடக்காது! அது எனக்குப் பிடிக்காத ஒன்று! காந்தியடிகளை எதிர்ப்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இன்று தங்களுக்கு நான் வெற்றியைத் தேடித் தந்திடலாம், ஆனால், அத்தோடு என் வாழ்க்கையும் அஸ்தமித்துவிடும்'' என்றார் காமராஜ்.

# 25. கோடு தாழ்ந்தது! குன்றம் உயர்ந்தது!

“அப்படியா! நான் தலைவர் தேர்தலுக்கு நிற்க மாட்டேன்” என்று கூறிவிட்டு விர்ரென்று சீனிவாச ஐயங்கார் விரைந்தார்! மறுபடியும் காமராஜரை எதற்கும் வற்புறுத்தாமல் அவர் இருந்து விட்டார்.

தொண்டு என்றால், ஓர் இலட்சியம் வெற்றி பெற, அதன் அருமை பெருமைகளுக்கேற்ப வளைந்து கொடுத்துப் பணியாற்றுவதுதான்!

அதற்கேற்பக் காந்தியடிகளுக்கு நல்ல தொண்டராக விளங்கியவர் காமராஜ்! அது போலவே கடைசி வரை காமராஜருக்கும் நல்ல தொண்டர்களாகவே காங்கிரஸ்காரர்கள் திரண்டு நின்று பணியாற்றி யதை நாடு அறியும்! மக்களும் உணர்வார்கள் அல்லவா?

## ஆகஸ்டுப் புரட்சியால் அனைவரும் விடுதலை!

ஆகஸ்டு புரட்சியால் 1942-ஆம் ஆண்டு சிறை சென்ற காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் - தொண்டர்களும் 1945-ஆண்டின் போது, ஒருவர் பின் ஒருவராக விடுதலையாகிக் கொண்டே வந்தார்கள்!

இந்தியாவில், அப்போது வைசியராயாகப் பணியாற்றிய லார்டு வேவல், எல்லாத் தலைவர்களையும், அழைத்துச் சமாதானம் செய்தார்.

## அபேதவாதர் இராஜாஜி!

முன்னாள் பிரதமர் என்ற முறையில், இராஜாஜி அவர்களையும் அழைத்துப் பேசினார் லார்டு வேவல்! இந்த நேரத்தில் ராஜாஜி மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர முயற்சித்தார். அப்போது அபேதவாதம் பேசிய இராஜாஜிக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

## சுபாஷ் ஓட்டைப் படகு! இராஜாஜி எதிர்ப்பு!

சுபாஷ் சந்திரபோஸ் 1939-ஆம் ஆண்டு, திரிபுரா காங்கிரஸ் பேரவையில் நடைபெற்ற தேர்தலில் வாகை சூடினார்! காந்தியடிகளின் முழு ஆதரவும் பெற்ற பட்டாபி சீதாராமையா தோற்றார்!

அதனால், பட்டாபி தோல்வி எனது தோல்வி என்று கூறுமளவிற்குக் காந்தியடிகளுக்கும் சுபாஷ் பாபுவுக்கும் கொள்கை வடிவமான கருத்து வேறுபாடு தோன்றியது! அதில் போஸ் வெற்றி பெற்றார்!

காந்தியடிகளின் மகனுக்கு தனது மகளை மணம் செய்து கொடுத்துச் சம்பந்தியாகி விட்ட ராஜாஜி; காந்தியடிகளின் கருத்து வேறுபாடுகளுக்கு வழக்குரைஞரானார்!

சுபாஷ் போஸ் கட்சி ஓர் ஓட்டைப்படகு என்று தரக்குறைவாகப் பேசி; இராஜாஜி செய்த சுபாஷ் பாபு எதிர்ப்புப் பிரசாரத்தை எஸ். சத்தியமூர்த்தி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர், முத்துரங்க முதலியார் போன்ற தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர்!

தலைவர் காமராஜ் அவர்களும், சுபாஷ் பாபு பிரச்னை கட்சிப் பிரச்னை. அதைப் பகிரங்கமாக எதிர்ப்பது தவறு என்று ராஜாஜிக்கு எதிராக நின்றார்!

1942-ஆம் ஆண்டு, அலகாபாத் நகரில், அகில இந்திய காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்ற போது, பாகிஸ்தானைப் பற்றி இராஜாஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்! அவருடைய தீர்மானத்திற்கு ஆதராவக 15 வாக்குகளும், எதிர்த்து 120 வாக்குகளும் கிடைத்தன! உடனே இராஜாஜி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே இருந்தும், காங்கிரஸ் செயற்குழுவிலே இருந்தும் விலகிக் கொண்டார்.

‘எனது தீர்மானம் தோற்றாலும் தனது போராட்டம் தொடர்ந்து நீடிக்கும்'' என்றார்! தனித்தே அவர் நின்றார்!

## காங்கிரஸிலிருந்து விலகு! காந்தியடிகள் கடிதம்!

காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக இராஜாஜி நடந்து கொண்டதால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அவருக்கு நோட்டீஸ் கொடுத்தது.

காந்தியடிகள், ஜூலை 15-ஆம் நாள் இராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதி, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவியையும், சட்டசபை உறுப்பினர் பதவியையும் ராஜிநாமா செய்யுமாறு கூறினார்!

அதற்கேற்ப இராஜாஜி அவ்விரண்டு பதவியிலிருந்தும் விலகிக் கொண்டார்! அத்தோடு ஆகஸ்டுப் புரட்சியையும் தனித்து நின்றே எதிர்த்தார்!

காங்கிரஸ் கட்சி அரசியலில் இவ்வளவு விருப்பு வெறுப்புகள் காந்தியடிகளுக்கும் - ராஜாஜிக்கும் விளைந்த பிறகும் கூட, இராஜாஜி மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர விரும்பினார்!

வைசியராய் லார்டு வேவலுடன் சமாதானம் பேசிட முயன்றதும் ஆகஸ்டுப் புரட்சியிலே போராடிச் சிறையிலே உள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கும் - தொண்டர்களுக்கும் ஒரு பெரிய அதிருப்தியையே அளித்தது.

## மாணவரணி மாநாடு! ராஜாஜிக்கு எதிர்ப்பு!

மதுரையில் அப்போது காங்கிரஸ் மாணவர்கள் மாநாடொன்று நடந்தது. அந்த மாநாட்டில் காங்கிரசில் ராஜாஜியைச் சேர்க்கக் கூடாது என்ற ஒரு கிளர்ச்சி மேலோங்கி நின்ற நேரம்!

மாணவர்களும், இவ்வாறு ராஜாஜியின் முன்னுக்குப் பின் முரணான சம்பவங்களை எதிர்த்துக் கொண்டே இருந்தார்கள்.

திடீரென்று ஒரு செய்தி வந்தது! என்ன தெரியுமா அது? திருச்செங்கோட்டிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி உறுப்பினராக ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதே அந்த திடீர்ச் செய்தி!

## குன்றம் உயர்ந்தது! கோடு தாழ்ந்தது!

உடனே காமராஜ் அவர்கள், ஓர் எதிர் அறிக்கைவிடுத்து, ''தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தெரியாமல் திருச்செங்கோட்டில் எப்போது தேர்தல் நடந்தது? எப்படித் தேர்தல் நடந்தது? காங்கிரஸ் கட்சியிலே விலகிய இராஜாஜி, மீண்டும் காங்கிரசிலே சேர்ந்தது எப்போது? எப்படி?'' என்ற வினாக்கள் மேல் வினாக்களை அவர் தொடுத்தார்!

இந்தக் குழப்பத்தைத் தெளிவுபடுத்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தை 1945-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் தேதியன்று மதுரையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகஸ்டுப் போராட்டத்திற்குப் பிறகு நடைபெறும் முதல் கட்சிக் கூட்டம் இது. நாடாளுமன்றக் குழுவையும் இந்தக் கூட்டம்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்!

அதனைப் போலவே, சட்டமன்றத்திற்குப் போட்டியிடும் வேட்பாளர்களையும், இதே நாடாளுமன்றத் தேர்வுக் குழுதான் தேர்வு செய்ய வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் எல்லாப் பணிகளையும் ஏற்று நடத்தும் பொறுப்புக்கு, ராஜாஜியை அழைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எண்பது பேர் கூடிக் கையெழுத்திட்டு, ஒரு தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு அனுப்பியது ராஜாஜி அணி!

இராஜாஜி அணியின், அத்துமீறிய செயல் இது எனக் கருதிய காங்கிரஸ் எதிரணியினருக்கு எரிச்சலை எழுப்பியது! அதனால், கடுமையான கண்டனமும் - குழப்பமும் மூண்டன.

மதுரை சிதம்பர பாரதி, தென்மதுரையை விழுங்கிய கடலூழிபோல், ''தமிழ்நாட்டில் ராஜாஜிக்கு எதிராக உள்ள அணியின் பலத்தையும் - எதிர்ப்புக் கருத்தையும் எதிரொலித்தே தீருவேன்'' என்று பொங்கி எழுந்தார்!

அதன் அறை கூவலாக, மதுரை நகரருகே உள்ள திருப்பரங் குன்றத்தில், அக்டோபர் 30-ஆம் நாளன்று - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்கு ஒரு நாள் முன்னதாக, தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட; சிதம்பர பாரதி சகல ஏற்பாடுகளையும் செய்தார்.

ஆகஸ்டுப் புரட்சிக்குப் பின் தமிழ்நாட்டில் கூடிய முதல் மாநாடு இது. தொண்டர்கள் ஆயிரமாயிரவர் அணி வகுக்கவும், அவர்கட் கான வசதிகளைச் செய்து தரவும் சிதம்பர பாரதி முன் நின்றார்.

திருப்பரங்குன்றத்தில் 30-ஆம் நாளன்றே தலைவர்களும் - தொண்டர்களும் திரண்டார்கள்! அவரவர்களுக்கான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன - சிதம்பர பாரதி அவர்களால்!

இராஜாஜி - மதுரையிலே வந்து தங்கினார்! திருப்பரங்குன்றம் மாநாடு எப்படி அமைந்துள்ளது? யார் யாருக்கு பலம் இருக்கிறது? யார் யார் வருகை தந்துள்ளார்கள் என்ற விவரங்களை எல்லாம், தனது ஆட்கள் மூலமாகவும் - மாநாட்டைப் பார்க்க வந்தள்ளவர் களிடமும் விசாரித்துத் தெரிந்து கொண்டார்!

மாநாட்டின் தொண்டர் பலம் - கொள்கை பலம் - செல்வாக்குப் பலம் எல்லாம் தனக்குச் சாதகமான நிலைமையில் இருக்காது என்பதைப் புரிந்து கொண்டார் இராஜாஜி! அதனால், காமராஜ் அவர்களையே நேரில் சென்று காணலாம் என்ற எண்ணம் கொண்டார்!

திருப்பரங்குன்றம் மாநாட்டிற்கு வரலாமா? என்று காமராஜைச் சந்தித்துக் கேட்டார் இராஜாஜி!

''மாநாட்டிற்கு வருவதற்கு என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? தாராளமாக வரலாமே!'' எதிர்க் கேள்வி கேட்டார் - அவருக்கு வரவேற்பும் தந்தார் காமராஜ்.

''நீங்கள் என்னை அழைத்தால் நான் மாநாட்டிற்கு வருகிறேன்'' என்று கூறினார் இராஜாஜி! ஏனென்றால், காமராஜ் அழைத்துத்தான், இராஜாஜி திருப்பரங்குன்றம் மாநாட்டிற்குப் போனார் என்று மக்களும் - காங்கிரஸ் தொண்டர்களும் கருதவேண்டும் என்ற பெயரை உருவாக்கிடவே, இராஜாஜி அவ்வாறு காமராஜ் அவர்களைக் கேட்டார்!

இராஜாஜியின் மர்மத்திற்கு காமராஜ் இடம் கொடுக்கவில்லை! அதை அறிந்த இராஜாஜி, 'இது எதுவும் சரிப்பட்டு வராது' என்று எண்ணிய அன்றே குற்றாலம் போய்விட்டார்!

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர், மாநாட்டின் கொடியை ஏற்றியதும், கோலாகலமாக மாநாடு மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமானது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளே இராஜாஜி அணி காந்தியடிகளை எதிர்ப்பதும், சுபாஷ் பாபுவைத் தரக்குறைவாகப் பேசுவதும், சத்தியமூர்த்தி அணியை மண் கவ்வ வைப்பதும் அந்த அணியின் அரசியல் கலைகளாகத் திகழ்ந்தன.

காங்கிரஸில் மீண்டும் சேர்ந்திடுவதும், தலைமையைக் கைப்பற்றிட குழு கூட்டுவதும், அரசியல் கட்சி மாயாஜாலத் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பதுமான ராஜாஜி அணிப் பணிகளை, காங்கிரஸ் முன்னோடிகளான முத்துரங்க முதலியாரைப் போன்ற மூத்தவர்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

மட்டப்பாறை வெங்கட்ராமையர், மதுரை வைத்திய நாதய்யர் போன்றவர்கள், மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களிலே இருந்து அடியாட்களை அழைத்து வந்து இராஜாஜி அணிக்கு அரணாக அமைந்திருந்தார்கள்!

இராஜாஜியை மூத்த காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பது அப்போதைய இளைய தலைமுறையாக வளர்ந்து கொண்டிருந்த காமராஜ் அணிக்குப் பலமாகத் திகழ்ந்தது!

அதனால், மீஞ்சூர் பக்தவத்சலத்தின் மாமனாரான சி.என். முத்துரங்க முதலியாரிடம் கூறி, காமராஜ் பெயரை முன் மொழிய ஏற்பாடுகள் நடந்தன!

என்ன காரணத்தாலோ முதலியார் காமராஜ் பெயரை முன்மொழியத் தயக்கமாக நின்றார்! காரணம், அடியாட்கள் ஆர்ப்பாட்டம், காந்தியடிகள் செல்வாக்கு, பண பலங்கள் இவற்றை எதிர்க்கவே தயங்கினார். இந்தச் செய்தி, பசும்பொன் தேவர் முத்துராமலிங்கம் அவர்களுக்கும் எப்படியோ எட்டியது! எலியென எண்ணியவரைப் புலியாக்கிடப் புறப்பட்டார்!

எஸ். சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார், பசும்பொன் தேவர் திருமகன், கே. எம். வல்லத்தரசு, போன்றவர்களை எல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட கேட்டும் அவர்கள் மறுத்து விட்டார்கள்.

அதற்குப் பிறகுதான், வளர்ந்துவரும் இளைய தலைமையின் வாரீசாகத் திகழ்ந்திடக் காமராஜ் அவர்களைப் போட்டியிட முடிவு செய்தார்கள் - காங்கிரஸ்காரர்கள்! காமராஜ் பெயரை முன்மொழியத் தயங்கியவர்களை எதிர்த்து, பசும்பொன் தேவர் அவர்கள் முன் மொழிந்தார்! அடியாட்களைத் திரளாகக் கொண்டு வந்த மட்டப்பாரை வெங்கட்ராமய்யர், மதுரை வைத்திய நாதய்யர் அனைவரையும் இலைமறை காயாக எச்சரித்தனர்!

அதற்குப் பிறகு, மாநாட்டை சி.என். முத்துரங்க முதலியார் துவக்கி வைத்தார்! கல்லிடைக்குறிச்சி யக்ஞேஸ்வர சர்மா தலைமை வகித்தார்! ''தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ராஜாஜிக்குக் கொடுக்கக்கூடாது'' என்ற தீர்மானம் பலத்த ஆரவாரக் கையொலிகளுக்கு இடையே நிறைவேறியது. இராஜாஜி அணியினர் எண்பது பேர் கையெழுத்திட்டு அனுப்பிய தீர்மானம் என்ன ஆயிற்று? அதன் கதி என்ன? என்று அந்த அணியினைச் சேர்ந்தவர்கள் பரபரப்புடன் கேட்டனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கூட்டம் மறுநாள் மாலை கூடுவதற்கு முன்பு சிலர் சமாதானப் பேச்சிலே ஈடுபட்டனர்! ஆனாலும், அந்தக் கட்சிக் கூட்டத்தில் தங்களது அணிக்கு பெரும்பான்மை பலம் இல்லையென இராஜாஜி கூட்டத்தினர் உணர்ந்தார்கள்!

மாநாட்டுக் கூட்டம் ஆரம்பமானது! காமராஜ் பேசியபோது, ''காங்கிரஸ் கட்சியினுடையதீர்மானங்களை இராஜாஜி ஏற்று நடப்பதாக இருந்தால், காங்கிரஸ் கட்சிக்கு அவர் வருவதைப் பற்றி எதிர்ப்பு ஏதுமில்லை

அதற்கு எதிராக நான் கூறுவதற்கு ஏதுமில்லை. கூட்டம் ஆரம்பத்திலேயே இதைச் சொல்கிறேன். ஆகவே, உங்களுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

உடனே, இராஜாஜி அணியினர் கொடுத்திருந்த தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். திருச்செங்கோட்டில் இராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற தேர்தல் செல்லத்தக்கது அல்ல' என்ற தீர்மானமும் காங்கிரஸ் கட்சிக்கு வந்தது. இது காங்கிரஸ் செயற்குழுவின் தீர்மானமாகும். இதற்கு இராஜாஜி அணியினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள்! அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌலான அபுல் கலாம் ஆசாத், அப்போது வெளியிட்டிருந்த அறிக்கையைச் சுட்டிக் காட்டி, இராஜாஜி அணியினர் தங்கள் கட்சிக்குப் பலம் சேர்க்கப் பார்த்தனர்!

ஆகஸ்டு 12-ஆம் நாள் தம்மைக் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆசாத் அவர்களுக்கு இராஜாஜி கடிதம் எழுதினாராம்! அதை அவர் ஒப்புக் கொண்டு அக்டோபர் முதல் நாள் ஓர் அறிக்கை வெளியிட்டாராம்! அந்த அறிக்கையைச் சான்று காட்டியே இராஜாஜி அணியினர் செயற்குழுத் தீர்மானத்தை எதிர்க்க முன்வந்திருக்கின்றனராம்!

இந்த எதிர்ப்பைக் கண்ட மீஞ்சூர் எம். பக்தவச்சலம், ''இராஜாஜி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாகவே கருதினாலும், மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கட்சியில் இருந்தவர்கள்தான் தேர்தலுக்கு நிற்க முடியும்'' என்று காங்கிரஸ் கட்சி விதி கூறுகிறது'' என்று அவர் சுடடிக் காட்டினார்.

உடனே சி. என். முத்துரங்க முதலியார் எழுந்து, ''தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்கு 37 இடங்களுக்குத் தேர்தல் நடைபெறவில்லை. அவ்வாறிருக்க, திருச்செங்கோடுக்கு மட்டும், அதுவும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருக்கே தெரியாமல் எவ்வாறு தேர்தல் நடத்திட முடியும்?'' என்று கேட்டார்!

இதற்குப் பிறகு, 'திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று காங்கிரஸ் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. அதனால், கோடு தாழ்ந்தது; குன்றம் உயர்ந்து விட்டது அல்லவா? சட்டமன்றத் தேர்தலுக்குரிய வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் குழுவை நியமிக்கும் அதிகாரத்தைக் காங்கிரஸ் செயற்குழுவிற்குக் கொடுத்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.

அந்த ஆண்டு, கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு கூட்டம் கூடியது. அதற்கு ஒரு தூதுக்குழு அனுப்ப வேண்டும் என்ற முடிவை இராஜாஜி அணியினர் முடிவெடுத்தனர். இந்த முடிவை, சீர்காழியில் நடந்த ரகசியக் கூட்டத்தில் அவர்கள் எடுத்தார்கள்.

இராஜாஜி அணியினர் சீர்காழி நகரில் திட்டமிட்டபடியே கல்கத்தா சென்றார்கள்! தமிழ்நாட்டில் காமராஜ் குழு, இராஜாஜி

அணி என்று இரு பிரிவினர்கள் காங்கிரஸ் கட்சிப் பணியாற்று கிறார்கள். அதனால், தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிடம் கொடுக்கக் கூடாது என்ற தங்களது எதிர்ப்பைக் கல்கத்தாவிலே அவர்கள் எதிரொலித்தார்கள்!

மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பை அளித்தால், தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மை பலம் பெறாது' என்றும் கூறினார்கள்.

தமிழ் நாட்டிற்குரிய வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பை, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியே ஏற்க வேண்டும் என்ற கருத்தை, இராஜாஜி அணியினர் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் மௌலான அபுல்கலாம் ஆசாத்திடம் நேரிலேயே தெரிவித்தார்கள்!

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அருணா ஆசப் அலியிடம், சென்னைக்கு வந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலே உள்ள குழப்பங்களை விசாரணை நடத்தும்படி அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு, கேட்டுக் கொண்டது.

சென்னை வந்த அருணா ஆசப் அலி, ''திருச்செங்கோடு தேர்தல் செல்லுமா? செல்லாதா? என்று தீர்மானிக்கத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் குழுவிற்கு அதிகாரம் இல்லை'' என்றார்! தேர்தல் டிரிபியூனல் தான் அதை ஆய்வு புரிய அதிகாரம் உண்டு'' என்றும் அவர் தெரிவித்தார்!

திருச்செங்கோட்டில் தேர்தல் என்ற ஒன்றே நடைபெறவில்லை. தேர்தல் நடத்தவேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, டிரிபியூனலுக்கு மேல் முறையிடு செய்யும் சூழ்நிலை தோன்றியதைப் பற்றி காமராஜ் அவர்கள் கவலைப்படாமல், தேர்தல் டிரிபியூனலைத் தாமே நியமிக்கப் போவதாக அவர் அறிவித்தார்!

அருணா ஆசப் அலி சென்னையிலே விசாரணையை முடித்துவிட்டு, பம்பாய் நகரிலுள்ள சர்தார் வல்லபாய் படேலிடம் நேராகச் சென்று, நடந்த விவரங்களை எல்லாம் விளக்கினார்!

தமிழ்நாட்டின் விசாரணை விவரங்களை, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசப் அலியிடம் கொடுக்கப் போவதாகக் கூறினார். இதற்கிடையில் ராஜாஜியைச் சந்தித்துச் சமாதானம் செய்து கொள்ள இயலுமா என்றும் கேட்டு, ஒரு தந்தியைக் காமராஜ் அவர்களுக்குக் கொடுத்தார் அவர்!

பம்பாயிலிருந்த சர்தார் வல்லபாய் படேலிடம், காமராஜ்

தூதுக்குழு சென்று அருணா ஆசப் அலி நடத்திய விசாரணை விவரங்களை விளக்கியது! காமராஜ் - ராஜாஜியிடமும் படேல் தொடர்பு கொண்டு சமரசத்திற்கு வழிகோலினார்!

அதன் எதிரொலியாக, இராஜாஜி, காமராஜ் அவர்களிடம் பேசினார்! தமிழ்நாடு ஆட்சி மன்றக் குழுவிடம் எட்டுப் பேர்கள் இருக்க வேண்டும் என்றும், தலைவர் - துணைத் தலைவர்கள் போக, மிகுதியுள்ள ஆறு பேர்களில் ராஜாஜி அணியினர் மூவரும் தமது அணியினர் மூவரும் இடம் பெறலாமென்றும் திரு காமராஜ் சர்தார் படேலிடம் கருத்துத் தெரிவித்ததை இராஜாஜி ஒப்புக் கொண்டார்!

காமராஜ் முதலில் தெரிவித்த கருத்தும்இது தான்! அப்போது அதை ஏற்றுக்கொள்ளாமல் இராஜாஜி கல்கத்தாவிற்கு தூதுக்குழு ஒன்றை அனுப்பி, புகாரும் புரிந்து, தமிழ்நாட்டு அரசியல் நிலைமையை வளரவிட்டு, இறுதியில் திரு காமராஜ் கூறியதையே இராஜாஜியும் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார்!

இந்த இரு அணியின் முடிவைத் தலைமைப் பார்லிமெண்ட் குழு சார்பாகச் சர்தார் படேலும் ஏற்றுக் கொண்டார்! உடனே ஆசப் அலிக்குப் படேல், தாம் ஒப்புக் கொண்ட முடிவைத் தெரிவித்தார்! இரண்டு அணியினரின் தகராறுகளுக்குத் தமிழ்நாட்டில் முடிவேற்பட்டது.

இரு அணிகளும் ஒப்புக்கொண்ட எட்டுபேர் கொண்ட தமிழ்நாடு ஆட்சிமன்றக் குழு நியமிக்கப்பட்டது. இந்த குழுவில் இராஜாஜி இடம்பெறவில்லை!

தலைவர் காமராஜ், ருக்மிணி இலட்சுமிபதி, சி.என். முத்துரங்க முதலியார், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், அவிநாசிலிங்கம் செட்டியார் ஆகிய இந்த ஐந்து பேர்கள் ஒரே அணியாக இயங்கினர்!

கோவை சி.பி. சுப்பையா, முனிசாமி பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை ஆகியவர்கள் இராஜாஜி அணியினராகவும் அக்குழுவில் இடம்பெற்றார்கள். விசாரணைக்கு முன்பு என்ன எண்ணினாரோ அந்த முடிவின்படியே அந்த எட்டுப்பேர் குழு அமைப்புப் பணியும் முடிவு பெற்றது.

தமிழ்நாட்டில் ராஜாஜிக்கும் - காமராஜ் அவர்களுக்கும் நடந்த கட்சி அரசியல் பலப் பரீட்சையில், காமராஜ் அணியே வெற்றி பெற்றது.

காரணம், அவருக்கு இருந்த தொண்டர் படைகளின் அசைக்க முடியாத பலம், கட்சிக் கட்டுக்கோப்புத்தான் என்றால் - அது மிகையாகாது!

# 26. காந்தி - காமராஜர் 'கிளிக்' போராட்டம்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பணியாற்றிய தலைவர் காமராஜ் அவர்கள், 1946-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் மகாத்மா காந்தியடிகள், தமிழ்நாடு சுற்றுப்பயணம் வருகிறார் என்பதை அறிந்து அற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்!

காந்தியடிகளின் இந்தப் பயணம்தான், தமிழ்நாட்டின் இறுதிச் சுற்றுப் பயணமாக இருந்தது! அதனால்தானோ என்னவோ இந்த முறை அவர், மதுரை மீனாட்சியம்மன் கோவில், பழநி முருகன் கோவில் போன்ற சில ஆலயங்களுக்குச் சென்று, இறைவனைத் தரிசனம் செய்தார்!

சென்னையிலே உள்ள இந்திப் பிரசார சபை ஆண்டு விழாவிற்கு, அடிகள் தலைமை தாங்கி நடத்திட, கல்கத்தா நகரிலே இருந்து அவர் சென்னை மாநகரம் வருகை தந்தார்!

ஜனவரி 21ஆம் நாள், சென்னை நகர் வரும் அண்ணல், அவர் வரும்தனி ரயில் எங்கே நிற்கப் போகிறது, எங்கே தங்கப் போகிறார், எங்கே வரவேற்பு விழா நடக்கப் போகிறது, யார் யார் அந்த விழாவிலே அடிகளை வரவேற்கப்போகிறார்கள் என்ற விவரங்களெல்லாம், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற உரிமை யிருந்தும், தெரிவிக்கப்படாமல் இரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தது!

காந்தியடிகள் உடல்நிலையும் அப்போது நலமாக இல்லை. எங்கே அவர் இறங்குகிறார்? வரவேற்பு விழா எங்கே? என்பதெல்லாம் மக்களுக்குத் தெரிந்தால், கூட்டத்தை சமாளிக்க முடியாது போய்விடும் என்பதால், காவல் துறையினரும் இரகசியமாக வைத்திருந்தார்கள்!

இரயிலிலிருந்து காந்தியடிகள் இறங்கி, அவர் எங்கு தங்குகிறாரோ அந்த இடம்வரைப் பொறுப்பாகக் கொண்டுபோய் சேர்க்கும் பணி காவல் துறையினுடையது.

இரயிலை எங்கே நிறுத்த வேண்டும்? எந்த இடத்தில் அவர் இறங்க வேண்டும்? எப்படிப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற திட்டங்கள் எல்லாம் காவல்துறையினருக்கும் தெரியும். ஆனால், அவர்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கவில்லை!

காவல் துறையிலே பணியாற்றிடும் ஓர் உயர்தர அதிகாரி, காந்தியடிகளை வரவேற்க யார் யார் வருகிறார்கள்? நடக்கப்போகும் நிகழ்ச்சிகள் என்னென்ன? என்பதை அறிந்திட, இந்திப் பிரசார சபை அருகே காந்தியடிகள் தங்கிட இடவசதி செய்யப்பட்டிருந்த இடத்திற்கு சென்றார்!

பத்திரிக்கை நிருபர்கள், எங்கே காந்தியடிகள் இறங்குகிறார்? எங்கே தங்குகிறார்? எப்போது புறப்படுகிறார்? என்னென்ன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்? என்ற விவரங்கள் எல்லாம் இராஜாஜிக்கும் தெரியும்.

அவர், காமராஜ் அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கும் விவரங்களைக் கூறாமல், மர்மமாக மறைத்து வைத்திருந்தார்! அதன் காரணம் அவருக்கும் - அவரது அணியினருக்கும் மட்டும் தெரிந்த ஒன்றாக இருந்தது!

அன்று மாலை, காவல் துறை அதிகாரி ஒருவர், காந்தியடிகளை இரயில் நிலையத்திலே வரவேற்க இருந்த தலைவர்களை மட்டுமே அழைத்தார்! இராஜாஜி அந்த அதிகாரியுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அப்போதும், அவர் காமராஜருக்குத் தெரியப்படுத்த வில்லை!

என். கோபாலசாமி ஐயங்கார், இந்தி பிரச்சார சபை செயலாளர் சத்தியநாராயணா அவர்களுடன் இராஜாஜி புறப்பட்டுக் காந்தியடிகளை வரவேற்றிடச் சென்று விட்டார்.

காமராஜ் அவர்கள் இந்திப் பிரச்சாரச் சபாவிற்கு வந்தார்! விவரங்களை அறிந்தார்! திடுக்கிட்டுத் திணறி நின்றார்! காந்தியடிகளை வரவேற்கச் சிலருடன் இராஜாஜி சென்றுள்ளார் என்பதையும் உணர்ந்தார்!

காந்தியடிகள் வருகின்ற தனி ரயில் எந்த ரயில் நிலையத்தில் நிற்கும்; எவ்வாறு அதை அறிவது என்று எண்ணிய காமராஜர் தவியாய் தவித்து நின்றார்!

'சென்னை அருகே உள்ள அம்பத்தூர் ரயில் நிலையத்திலேஅவர் இறங்குகிறார். அங்குதான் அவருக்கு வரவேற்புத் தருகிறார் இராஜாஜி; வாருங்கள் போகலாம்' என்று அப்போது அங்கு வந்த

பத்திரிகை நிருபரான கணபதி என்பவர் கூறி காமராஜ் அவர்களை அழைத்ததும், அவருக்கு அளப்பரிய மகிழ்ச்சி ஏற்பட்டது! அம்பத்தூர் ரயில்வே நிலையத்திலே காந்தியடிகள் வந்த தனிரயில் வந்து நிற்பதற்கு முன்பே காமராஜ் அவர்கள் சென்றடைந்தார்!

அங்கே, மலர் மாலைகளுடன் இராஜாஜியும், கோபால சாமி ஐயங்காரும், சத்திய நாராயணாவும் மற்ற முக்கிய இராஜாஜி அணி காங்கிரஸ்காரர்களும், பிற காவல் துறையினரும் நின்றிருந்தார்கள்!

ஒரு புன்னகைப் பூத்த முகத்துடன் காமராஜ் அவர்கள் மாலையுடன் இராஜாஜியைப் பார்த்தார்! அப்போதே அவர் முகத்திலே சில ரேகைகள் பளிச்சிட்டன! காந்தியடிகள் வருகை தந்த தனி ரயில் அம்பத்தூர் நிலையத்திலே வந்து நின்றது. இறங்கி வந்தார் அடிகள்! தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான காமராஜ், அண்ணலுக்கு மலர் மாலையைச் சூட்டி மகிழ்ந்தார்!

மலர்மாலை ஏற்ற அடிகள், சிரித்துக் கொண்டே காமராஜர் தோளைத் தட்டிக் கைகூப்பி வணங்கி அவரை வரவேற்றார். பிறகு, இராஜாஜி அணியினரும் காந்தியடிகளுக்கு மலர்மாலையைச் சூட்டினார்கள். சாதாரணமாக ஒருவரை அறிமுகப்படுத்தும் பழக்க விதிகளின் படி கூட, அப்போது இராஜாஜி காமராஜரைக் காந்தியடிகளுக்கு அறிமுகப்படுத்தவில்லை!

ஏன், இராஜாஜி அவ்வாறு அறிமுகப்படுத்தவில்லை? என்ன காரணம்? ஏதாவது அடிப்படையாக இருக்க வேண்டாமா? அவை இவை; காமராஜ் அவர்கள், எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அணியைச் சேர்ந்தவர்! அவரை ஆசானாக ஏற்றுக் கொண்டு, காங்கிரஸ் கட்சிக்குரிய வளர்ச்சிப் பணிகளை ஆற்றியவர்.

எஸ். சத்தியமூர்த்தி 1935-ஆம் ஆண்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளராக நின்ற ஆற்காடு சர். ஏ. இராமசாமி முதலியாரைத் தோற்கடித்தார்! சட்டசபைக் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் பொறுப்பை ஏற்று இராஜாஜி அரசியல் செல்வாக்கை மீறி நின்றவர்!

அதற்காக, 1936-ஆம் ஆண்டில், காரைக்குடியில் நடைபெற்றத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தலில், சி.என். முத்துரங்க முதலியார் அவர்களை நிற்க வைத்தார் ராஜாஜி. அவரைச் சத்தியமூர்த்தி தோற்கடித்தார்! தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரானார் அவர்!

தனது அரசியல் மாணவரான காமராஜ் அவர்களைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராக்கினார் சத்தியமூர்த்தி! அதனாலும், அணிப் பகைகள் வளர்ந்தன! அன்றைய சென்னை மாநிலத்தில் 1937-ல் ஒரே ஒரு பட்டதாரித் தொகுதி இருந்தது! சத்தியமூர்த்தி அவர்கள் அத்தொகுதியிலே போட்டி போட எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்!

அதே தொகுதியில் ராஜாஜி அவர்களும் போட்டியிடப் போவதாக திடீரென முடிவெடுத்தார்! 'இந்து' பத்திரிகை உரிமையாளர் சீனிவாசன் அவர்கள் சத்தியமூர்த்தியிடம் தூது பேசினார்! அதனால் சத்திய மூர்த்தி அவர்கள் இராஜாஜிக்கு அந்தத் தொகுதியை விட்டுக் கொடுத்துவிட்டு போட்டியிடாமலேயே நின்று விட்டார்!

செங்கல்பட்டு தொகுதியிலே போட்டியிட எல்லா ஏற்பாடு களையும் செய்துவிட்ட எம். பக்தவத்சலம், தனது தொகுதியை சத்தியமூர்த்திக்கு விட்டுக் கொடுக்க முன் வந்தார்! ஆனால் சத்தியமூர்த்தி அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இராஜாஜி அப்போது சத்தியமூர்த்தி அவர்களிடம் தனியாகச் சென்று, காங்கிரஸ் கட்சி தேர்தலில் வென்றுவிட்டால், மந்திரி சபையும் அமைக்குமானால், சத்தியமூர்த்தியையும் அந்த அமைச்சரவையிலே ஒருமந்திரியாக நியமிப்பதாக வாக்குறுதி தந்தார்!

தேர்தலில் காங்கிரஸ் கட்சி வென்றது! இராஜாஜி பிரதமரானார். வி.வி.கிரி உட்பட 9 பேர்களை அமைச்சர்களாக நியமித்தார். சத்தியமூர்த்திக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி இராஜாஜி நடக்காமல், பட்டதாரி தொகுதியிலும் அவரை நிற்கவிடாமல், சத்திய மூர்த்தியை அவர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்! இதனால் அணிப் பகைகள் வளர்ந்தன!

தனது அரசியல் ஆசானான சத்தியமூர்த்தியை, இராஜாஜி தந்திரமாக ஏமாற்றிவிட்டாரே என்று காமராஜ் மனவேதனைப் பட்டார்! இந்த நம்பிக்கை மோசடிதான், இராஜாஜி அணிக்கும், காமராஜ் அணிக்கும், அவர்கள் இருவரும் சாகும்வரை விஷ வித்தாக விளங்கியது! அதனாலும் அணிப்பகைகள் வளர்ந்தன!

1938-ஆம் ஆண்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவிக்கு சத்தியமூர்த்தி போட்டியிட்டார்! சி.என். முத்துரங்க முதலியாரை எதிர்போட்டியாக நிறுத்திச் சத்தியமூர்த்தியைத் தோற்கடித்தார் இராஜாஜி.

1939-ஆம் ஆண்டு, நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தலில் மீண்டும் சத்தியமூர்த்தி போட்டியிட்டார்! ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரை எதிர்போட்டியாக நிற்கவைத்து, மீண்டும் சத்தியமூர்த்தியை இராஜாஜி தோற்கடித்தார்!

காமராஜ் அவர்களின் அரசியல் ஆசானான சத்தியமூர்த்தி, இராஜாஜியால் தோல்வி மேல் தோல்வி கண்டார். காங்கிரஸ் உட்கட்சிப் போக்கு காமராஜ் அவர்களுக்கு கனலாக மாறி கனன்று கொண்டே நெருப்பாக அனல் வீசியது!

1940-ம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் நடந்தது. உடனே சத்தியமூர்த்தி அரசியல் சாணக்கியராக நடமாடிடும் இராஜாஜிக்கு எதிராக பூரணய்யாவாக மாறினார்!

தனது அரசியல் மாணவரான காமராஜரை அந்த தேர்தலிலே தலைமைப் பதவியிலே போட்டியிட வைத்தார்! இராஜாஜி, கோவை சுப்பையாவை எதிர்போட்டியாக நிறுத்தினார்!

நூறு ஓட்டுக்கள் பெற்றுக் கோவை சி.பி. சுப்பையா தோற்றார்! நூற்றுமூன்று ஓட்டுக்கள் பெற்று காமராஜ் அவர்கள் வாகை சூடினார்! அவர் வெற்றி பெற்றதும், தனது குருவான சத்தியமூர்த்தியைத் தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராகக் காமராஜர் நியமித்துக் கொண்டார்.

சத்தியமூர்த்தியுடன் அடிக்கடி உட்கட்சி அரசியலில் மோதிக் கொண்டிருந்த இராஜாஜி, 1942-ம் ஆண்டில் நடைபெற்ற ஆகஸ்டு புரட்சியில், காந்தியடிகளுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகளால் இராஜாஜி பங்கேற்கவில்லை!

அலகாபாத் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்துத் தீர்மானம் கொண்டு வந்த ராஜாஜி, 15 ஓட்டுக்களைப் பெற்றுப் படுதோல்வி கண்டார்! பிரிவினை எதிர்ப்புத் தீர்மானம் 120 ஓட்டுக்களைப் பெற்று வெற்றி பெற்றது!

உடனே இராஜாஜியைப் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகுமாறு சர்தார் வல்லபாய் படேல் மூலம் காந்தி வற்புறுத்தவே, அதற்கு முன்பே இப்படி நடக்கும் என்பதை யூகித்த இராஜாஜி விலகிக் கொண்டார்!

இதற்கிடையே, சத்தியமூர்த்தி காங்கிரஸ் கட்சியால் எவ்விதப் பயனும் பெறாமல், 1943-ஆம் ஆண்டில் தரித்திரனாகவே காலமானார். அப்போது, காங்கிரஸ் கட்சி அகில இந்திய அளவில் தடை செய்யப்பட்டிருந்தது.

திருச்சி மாவட்ட அரியலூரில், எஸ்.கே. பாட்டீல் தலைமையில், சி.என். முத்துரங்க முதலியார் அவர்களால், தடை செய்யப்பட்ட காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் சங்கம் என்ற அமைப்பாக மாறி, மாநாடு ஒன்றை நடத்தியது!

அந்த மாநாட்டில், ஆகஸ்டுப் புரட்சியிலே பங்கேற்காதவர் களை, காங்கிரஸ் கட்சியிலே மீண்டும் சேர்க்கக் கூடாது என்ற தீர்மானம், 670 பேர் ஆதரவுடனும் நான்கு பேர் எதிர்ப்புடனும் நிறைவேறியது.

இந்தத் தீர்மானம், தனக்காகவே நிறைவேற்றப்பட்டது என்பதை, இராஜாஜியும் அவருடைய அணியினரும் கருதினார்கள்! ஆனால், இந்த மாநாடு நடைபெறும்போது காமராஜ் அவர்கள் மத்திய பிரதேச மாநிலத்திலே உள்ள அலிபுரம் சிறையிலே மூன்றாண்டுகள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தார்!

சிறையிலே இருந்து வெளிவந்த தலைவர் காமராஜருக்கு, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் அளவுக்கு மீறிய செல்வாக்குப் பெருகி இருந்ததை அவர் கண்டார்!

காமராஜ் அவர்களின் அரசியல் ஆசானான சத்தியமூர்த்தி இறந்து போனதால், காமராஜ் அவர்களை எப்படியாவது இராஜாஜி அணியின் பக்கம் சேர்த்துக் கொள்ள, இராஜாஜி அணி பகீரதப் பிரயத்தனம் செய்தது.

திருவண்ணாமலை என். அண்ணாமலைப் பிள்ளை, இல்லத்தில், காமராஜரையும் இராஜாஜியையும் காங்கிரஸ் தலைவர்கள் சந்திக்க வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

காமராஜர் தயங்கியவாறே சென்றார். இராஜாஜி கருத்தை ஏற்காமல் நேராக தனது ஊரான விருது நகருக்குச்சென்று விட்டார்! மறுநாள் பத்திரிகையில் இராஜாஜியால் பரப்பப்பட்ட செய்தியைக் கண்டு காமராஜர் பரபரப்பு அடைந்தார்!

அதுதான் திருச்செங்கோடு காங்கிரஸ் கட்சியிலே இருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கும் தெரியாமலேயே மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினராகத் இராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற பரபரப்புச் செய்தியாகும்.

இவ்விதக் காரணங்களால், இராஜாஜிக்கும் காமராஜர் அவர்களுக்கும் உருவாகிவிட்ட உட்கட்சி அரசியல் பனிப்போர்தான் காந்தியடிகள் தமிழகம் சுற்றுப் பயணம் 1946-ஆம் ஆண்டில் மேற்கொண்ட போதும், தொடர் வரலாறாக உருவெடுத்தது.

அக் காரணங்களின் தோற்றங்களே, காந்தியடிகள் தமிழ்நாடு வரும்போது உருவாக்கப்பட்ட எந்த நிகழ்ச்சிகளையும் இராஜாஜியால், காமராஜருக்குத் தெரிவிக்கப்படவில்லை! மர்மமாகவே அந் நிகழ்ச்சிகள் மறைக்கப்பட்டன!

காந்தியடிகள் தனது சுற்றுப் பயணத்தின்போது, தமிழகத்திலே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்! அப்போது அவர், பல பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தினார்! ஏராளமான மக்கள் திரளாகக் கலந்து கொண்டார்கள்!

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கும், பழனி முருகன் கோவிலுக்கும் தரிசனம் செய்வதற்காக 2-2-1946-ஆம் நாள் சென்னைக்கு அருகே உள்ள காட்டுப்பாக்கம் இரயில் நிலையத்திலே இருந்து தனி ரயிலில் காந்தியடிகள் புறப்பட்டார்!

இராஜாஜி, தலைவர் காமராஜ் மற்றும் முக்கிய தலைவர்கள், பத்திரிகை நிருபர்களுடன் இரயில் புறப்பட்டது. ஒவ்வொரு ரயில் நிலையத்திலும், காந்தியடிகன் வருவதை அறிந்த பொதுமக்கள் அவரைப் பார்க்கத் திரண்டிருந்தார்கள்!

அவர் இரயிலில் நின்றபடியே மக்களிடம் பேசிட, ஒலி பெருக்கி வசதிகளையும் செய்திருந்தார்கள். ரயில், முதன் முதலாக அச்சரப்பாக்கம் என்ற பேரூரில் நின்றது. மக்கள் கூட்டம் திரளாகத் திரண்டிருந்தது.

பேசுவதற்காகக் காந்தியடிகள் ரயிலில் அமைக்கப்பட்ட மேடை மீதேறிய போது, இராஜாஜி ஒலிபெருக்கியைப் பிடித்துக் கொண்டார் - காந்தியண்ணல் பேசுகிறார்:

''நான் மதுரை மீனாட்சிக் கோவிலுக்குச் செல்கிறேன் என்றால், அதற்குக் காரணம் இதோ நிற்கும் ராஜாஜிதான்.''

''எல்லோருக்கும் அந்தக் கோயிலை ராஜாஜி திறந்து விட்டிருக்கா விட்டால், நான் அங்கே செல்ல புறப்பட்டிருக்க மாட்டேன்'' என்று, காந்தியடிகள் தொடர்ந்து பேசும் போது குறிப்பிட்டார்.

காந்தியடிகள் பேசும்போது வாழ்க என்ற பேரொலிகளும் - கையொலிகளும் - ஆரவாரங்களும் மக்கட் கூட்டம் எழுப்பியது.

பின்னர், விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், லால்குடி, ஸ்ரீரங்கம், திருச்சி, சமயநல்லூர் வழியாக, காந்தியடிகள் சென்ற தனிரயில் மதுரை மாநகரை அடைந்தது.

3.2.1946 அன்று மதுரையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் அண்ணல் கலந்து கொண்டார். மதுரை சொக்க நாதர் கோவிலில் அவர் வழிபாடு நடத்தினார்! மாலை 5 மணிக்கு பழநிநகர் வந்து சேர்ந்தார்! இரவு புறப்பட்ட அடிகள், அக்கரைப்பட்டி ரயில் நிலையத்திலே தங்கினார்!

மறுநாள், 4.2.1946 அன்று திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், சீர்காழி, கடலூர், விழுப்புரம், திருமணி, செங்கற்பட்டு, தாம்பரம் வழியாக மீண்டும் அம்பத்தூரில் ரயில் நிலையம் வந்து வார்தா ஆசிரமத்திற்குப் புறப்பட்டார்!

காந்தியடிகளிடம் ராஜாஜிக்குத் தனிப்பட்ட ஒரு செல்வாக்கு இருந்ததால், தலைவர் காமராஜர் அந்தப் பயணத்தின்போது, சற்று ஒதுங்கியேயிருந்து அவரோடு வந்தார்!

பழநி ஆண்டவர் சந்நிதியில் கூட, இராஜாஜிக்கும் - காந்தியடிகளுக்கும்தான் பரிவட்டம் கட்டி மரியாதை செய்தார்கள் - ஆலய அறங்காவலதிகாரிகள்!

காந்தியண்ணலும் - இராஜாஜியும் பழநிமலைப் படிக்கட்டுகளில் ஏறிக்கொண்டிருக்கும்போது, காமராஜரும் அவர்கள் கூடவே சென்று கொண்டிருந்தார்!

அம்பத்தூரில், காந்தியடிகள் ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது அறிமுகப்படுத்தாத தலைவர் காமராஜரை, மதுரை வரை சென்றும், பிறகு கூட்டங்களிலே கலந்துகொண்ட போதும் அறிமுகப்படுத்தாத காமராஜரை, பழநிமலைப் படிக்கட்டுகளிலே இருவரும் ஏறிக்கொண்டிருக்கும் போது, திடீரென நினைவு வந்ததாலோ என்னவோ, ராஜாஜி அவர்கள், ''இவர்தான் காமராஜர், காங்கிரஸ் பிரசிடெண்ட்'' என்று அறிமுகப்படுத்தினார்!

அதற்குப் பிறகு காந்தியடிகள் அம்பத்தூர் ரயில் நிலையம் வந்தார்! நேராக வார்தா புறப்பட்டுச் சென்றார்!

காந்தியடிகள் சுற்றுப் பயணம் செய்த கோலாகல நிகழ்ச்சியைப் பற்றி ''தமிழ் நாட்டில் காந்தி'' என்ற நூலாசிரியர் அ. இராமசாமி அவர்கள் 937-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதை அப்படியே வெளியிடுகிறோம், படித்துப் பாருங்கள்!

''இம்முறை காந்தி தமிழகத்திற்கு வந்தபோது தமிழகத்தில் இராஜாஜி எதிர்ப்பு இயக்கம் கடுமையாக இருந்தது! இதன் எதிரொலியாக எழுந்த ஐயப்பாடுகளும், வாக்குவாதங்களும் பல!

சுந்தரராஜ ஐயரின் கிராமத்திற்குச் சென்றதும், அரிசன விடுதிக்குச் செல்லாமல் இரயிலுக்குக் காந்திஜி சென்றதும், அப்போது பெரிய கருத்து வேறுபாடுகளுக்கு இடம் அளித்தது.

இரயில் எப்போது பழநியிலிருந்து புறப்படுகிறது என்பது தெரியாததன் காரணமாகக் காமராஜ் தனி இரயிலில் போக முடியவில்லை.

அண்ணலுடைய வருகை ஏற்பாடுகளில் தொண்டாற்றிய ஊழியர்களை, அவர் சந்திப்பதாக இருந்தது. ஆனால், அவர்களுக்குக் காந்திஜியைக் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை.

இதனால், இராஜாஜியும் அவருடைய ஆதரவாளர்களும், காந்திஜியைக் காமராஜூம், காமராஜருடைய ஆதரவாளர்களும் அணுக விடாமல் திட்டமிட்டுத் தடுத்து விட்டதாக ஒருபலமான குற்றச்சாட்டு எழுந்தது.

காமராஜ் பழநியிலிருந்து அந்த இரயிலில் போகாது, திண்டுக்கல் வரை காரில் சென்று அந்த இரயிலில் ஏறிக் கொண்டதை, அப்போது சென்னை அரசு இந்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே குறிப்பிட்டது என்றால், இந்தக் கருத்து வேறுபாடு எவ்வளவு முக்கியத்துவம் என்பதை ஒருவாறு யூகித்திருக்கலாம் என்று எழுதியுள்ளார் அவர்! ஒரு முறைக்கு மும்முறைப் படித்துப் பார்க்க வேண்டுகிறோம் இக்கட்டுரையை! பிறகு சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்!

இதில் காந்தியடிகள் எடுத்த நடவடிக்கை என்ன? யாரைச் சார்ந்திருந்தார்? இராஜாஜியிடம் எவ்வளவு பரிவு காட்டினார்? காமராஜரிடம் எவ்வளவு எரிந்து விழுந்தார்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய சம்பவங்களாகும்?

**காந்தியடிகள் தனது வார்தா ஆசிரமம் சென்றதும், பியாரிலால் என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'ஹரிஜன்' பத்திரிக்கையில், 10-2-1946 இதழின் முதல் பக்கத்தில் ''Curius'' எனும் தலைப்பில், ஒரு கட்டுரை வந்தது!**

அந்தக் கட்டுரை, 5-2-1946 அன்று தமிழ்நாட்டை விட்டு அவர் வார்தா சென்று கொண்டிருந்தபோது காந்தியடிகளால் எழுதப்பட்டது. அதில் காந்தி எழுதுகிறார்:

''பழநி கோவிலில் காமராஜரும் என்னுடன் தான் இருந்தார். இராஜாஜியும் கோபாலசாமியும்தான் என்னுடைய பயணத்தில் மிக

நெருக்கமாக இருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள்தான் அதை ஏற்பாடு செய்தது.

''இராஜாஜி, என்னுடைய நீண்ட கால நண்பர்களிலே ஒருவர். 1942-ஆம் ஆண்டில் என்னுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார் என்பதை நான் அறிவேன்.

''அவருக்கு எதிராக, சிறிய - பிறரை உள்ளே அனுமதிக்க விரும்பாத, முட்டுக்கட்டைக் குழு (கிளிக்) Clique small exclusive party ஒன்று இருப்பதைக் கண்டு வேதனை அடைந்தேன்.

''சென்னையிலுள்ள அதிகாரபூர்வமான காங்கிரஸ் கட்சியில், இந்தக் குழு கணிசமான செல்வாக்குப் பெற்றிருக்கிறது. (காமராஜருக்குத் தொண்டர்கள் பலமும் - செல்வாக்கும் உள்ளதைத்தான் அவர் இப்படிச் சொல்கிறார்.)

பெசவாடாவிலிருந்து (விஜயவாடா) ரயில் கிளம்பியதும் ஏ.சுப்பிரமணியம் என்பவரால், இந்துஸ்தானியில் எழுதப்பட்ட ஒரு குறிப்பு, காந்தியிடம் கொடுக்கப்பட்டது.

அதில், சென்னைக்கு காந்தி வந்த நோக்கமே இராஜாஜியைப் பிரதமராக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன்தான், என்று ஆந்திரப் பிரதேசத்தில் பரவலாக நம்பப்படுகிறது. காங்கிரஸ்காரர்கள் பலர் இந்த மாதிரியான பிரசாரத்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவைகளைப் பற்றி உங்களது கருத்துக்களை கூற வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது.

அதனை வாங்கிப் படித்துத் தெரிந்துகொண்ட காந்தி, பெசவாடாவிலிருந்து ரயில் கிளம்பியதும் தொடர்ந்து எழுதத் தொடங்குகிறார்! இதோ அவர் எழுதியவை:

''நான் சிறையிலிருந்து விடுதலையானவுடனே காங்கிரஸ் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்ற எண்ணம் வருவதற்கு முன்னதாகவே என்னுடைய இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்திற்கு வந்தேன். வரும் வழியில் எதேச்சையாக, மதுரை, பழநி கோவில்களையும் பார்த்தேன்!''

இராஜாஜி பிரதமராவதற்கும், என்னுடைய பயணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று எழுதிய காந்தியடிகள், இராஜாஜியைப் புகழ்ந்து எழுதுகிறார்! பிறகு மேலும் எழுதுகிறார்...!

''நான், சவால் விடப்படுவதால் தென்னகத்தின் தலைமைக்கு இராஜாஜிதான் மிகச் சிறந்த நபர் என்று சொல்வதிலே எனக்கு ஒருவிதத் தயக்கமும் இல்லை. என்னுடைய கையில் அதிகாரம் இருக்குமானால் எனக்கே பதவியை நான் அளித்துக் கொள்ளா விட்டால், நான் இராஜாஜியைத் தான் பதவி ஏற்றுக்கொள்ள அழைப்பேன்.''

(இவ்வாறு தனது உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிட்டு ஒப்புக்காகக் காந்தி தொடர்கிறார்)

''இந்த முடிவு பிரதேசக் காங்கிரஸ் கமிட்டிக்கும், இறுதியாகக் காங்கிரசின் செயற்குழுவிடமும்தான் உள்ளது'' என்றார் காந்திஜி.

காந்தியடிகளின் இந்த அறிக்கையைக் கண்டதும் அதிர்ச்சி யடைந்தார் காமராஜ். ''இது தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் அவமானப் படுத்துவதற்காகவே கையாளப்பட்டிருக்கிறது'' என்று, 'காங்கிரசின் பார்லிமெண்டரி போர்டில் பணியாற்றுவது இனியும் முறையல்ல' என்று சொல்லிக் காமராஜர் தனது பதவியை ராஜிநாமா செய்தார்!

'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அதிகார பூர்வமான தலைவரைத் தான், நான் விதிமுறைகளுக்கேற்ப சட்டமன்ற ஆட்சிக்குழுவை நியமித்தேன், காந்தியடிகளின் சுற்றுப் பயணத்தின் போது உடனிருந்தேன். அப்போதெல்லாம், காந்திஜியின் கூப்பிடு தூரத்தில் இருந்த என்னை அழைத்து என்னிடம் இதுபற்றி ஒரு வார்த்தை கூட கேட்காத காந்தி, இப்படிப் பத்திரிகையில் திடீரென்று எழுதியிருப்பது என்னைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது என்பதால் ராஜிநாமா செய்கிறேன்' - என்று 1946-ஆம் ஆண்டு, பிப்ரவரி 12-ஆம் நாள் அறிவித்தார் காமராஜ்!

**(''- திருப்பரங்குன்றத்தில் தொடங்கிய கதை'' பக்கம் 135 காங்கிரஸ் நூற்றாண்டு விழா - மலர்)**

தலைவர் காமராசரும் - அவரது ஆதரவாளர்கள் நான்கு பேரும்; ராஜிநாமா செய்ய முன்வந்தபோது, 1946-ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்தெடுக்கக் குறுகிய கால அவகாசமே இருப்பதால், கடமை உணர்வின் அடிப்படையில் அந்த நால்வரை ராஜிநாமா செய்ய வேண்டாமென்று காமராஜர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் தொடர்ந்து பதவி வகித்தனர்.

காந்தியடிகள் காமராஜரைக் குறித்துச் சொன்ன கருத்து தவறானது என்றும், கிளிக் என்று காந்தியடிகள் கூறியதைத் திரும்பப் பெறவேண்டுமென்றும், காந்திடியகளுக்குத் தந்திகளும் - கடிதங்களும் தமிழகத்திலே இருந்து சென்று குவிந்தன!

காமராஜ் அணியைச் சார்ந்த டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள், காந்தியடிகள் 'கிளிக்' என்று எழுதியதைக் குறித்து, ஒரு கடிதம் அண்ணல் அவர்களுக்கு எழுதினார்.

''காந்தி தர்மத்திலும், காங்கிரஸ் கட்சித் திட்டத்திலும், தென்னாட்டில் தூய்மையான பற்றுடன் உழைத்து வருபவர் காமராஜர் ஒருவர்! அவர், மக்கள் சக்தி பெற்ற தமழகக் காங்கிரஸ் தலைவர்களில் முன்னணியில் இருக்கின்றார்! உயர்தரமான நாடார் அவர்களைப் பற்றி தாங்கள் தவறாக எழுதியது நல்லதல்ல! இத்தகைய விவகாரத்தில் தாங்கள் தலையிடாமல் இருப்பது நல்லதென்பதைத் தங்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' - என்று நாயுடு அவர்கள் எழுதினார்கள்!

உடனே, மகாத்மா காந்தியடிகள் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு ஒரு தபால் கார்டில், ''சரி, அப்படியே செய்கிறேன். நாடார் தகராறில் நான் இனி ஈடுபடுவதில்லை'' என்று பதில் கடிதம் எழுதினார்!

இதற்கிடையில், பட்டாபி சீதாராமையா அவர்கள், காந்தியடிகளை நேரில் கண்டு, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் நிலை, காமராஜ் வலிமை, ஆகியவற்றை விளக்கினார்.

காந்தியண்ணல் 10-2-1946-ல் எழுதிய கடிதம், தமிழ் நாட்டையும் - இந்தியாவையும், தலைவர்களிடையிலும் - தொண்டர்கள் மத்தியிலும் ஒரு பெரும் குழப்பத்தையும், கலவரத்தையும் உருவாக்கி விட்டது.

காங்கிரஸ் கட்சியையும், தனது தலைமையையும் பின் பற்றுகின்றவர்கள், அவர்கள் தலைவர்கள் ஆனாலும் சரி - தொண்டர்கள் ஆனாலும் சரி, அவர்களிடத்திலே சிறு குறைகளைக் கண்டாலும் உடனே கண்டித்துத் திருத்துகின்ற மனப் போக்குடையவர் காந்தியடிகள்!

அவ்வாறு திருத்துகின்றபோது, மனித நேயத்தால் பாதிக்கப்பட்ட வர்கள், மனம் புண்பட்டு, அவர்கள் காந்தியடிகள் கூறுகின்ற தவறுக்கு மனம் திருந்தி வருத்தப்பட்டால், அதை அவருக்குத் தெரிவித்தால், காந்தியடிகள் தனது மனதைத் திருத்திக் கொண்டு

வருத்தப்படும் சுபாவமுடையவர்! தவறுகளே நடவாத சம்பவங்களிலே, தனது தவறால் மற்றவர் மனம் புண்பட்டால், அதை அந்த அடிகள் அறிந்தால், உடனே வருத்தக் கடிதமே எழுதி, மன்னிப்பும் கேட்பார்! இவையெல்லாம் தன்னைத் தானே உணரும் தனி மனித அறிவின் அருளாகும்!

காந்தியடிகள் தலைவர் காமராஜரைக் 'கிளிக்' என்று எழுதிய பின்பு, அதன் விளைவுகளை உடனே உணர்ந்த பின், 24-2-1946 அன்று மீண்டுமோர் கட்டுரையை 'அரிஜன்' இதழில் எழுதினார்!

அந்தக் கட்டுரைக்கு "About Rajaji" என்று பெயர் சூட்டி, அதில் தலைவர் காமராஜ் அவர்கள் வெற்றியின் ரகசியம் என்ற பொருள்பட காந்தியடிகள் எழுதுகிறார் படியுங்கள்:

"நான் தென்னகத்தின் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது எனக்குச் சவால் விடப்படவில்லை என்றால், நான் அமைதியாக இருந்திருப்பேன். அந்தச் சிறப்பு ரயிலில் என்னோடு கூட இருந்தவர்களிடம் நான் பேசவில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்."

"I must admit that i did not talk to those who were with me in that special train. என்பதைக் காந்தியடிகளே ஒப்புக் கொண்டார்." இரண்டு மூன்று நாட்களாகக் காந்தியடிகள், தனது தனி ரயிலில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரைப் போன்ற முக்கியத் தலைவர்களிடமே, ஊமையாக இருந்ததற்குக் காரணம் யாரோ!

தேசப் பிதாவான உத்தமரை இவ்வாறு ஆட்டிப் படைத்த சக்தியைக் காந்தியடிகளே பகிரங்கமாகக் கூற மனமில்லா விட்டாலும், "நான் பேசவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்ற காந்தியடிகள் சாட்சியமே, அப்போது ஆமையாக அடங்கிக் கிடந்த அரசியல்வாதிகளுக்கு பக்க பலமாகக் காட்சியளிக்கிறது.

"காந்தியடிகள் மனச்சாட்சியின் திறவுகோல்" என்ற சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரி அவர்களின் எதிர்ப்புகளை மூன்று முறை சமாளித்து வெற்றி பெற்றவர் பெருந்தலைவர் காமராஜ்!

அதனால்தான், அதே சக்கரவர்த்தி அவர்கள் மனம் திறந்து தலைவர் காமராஜரைப் பாராட்டும்போது, "காமராஜ், விவேகமுள்ள' தகுதி வாய்ந்த, நாணயமான மனிதர்!" என்று புகழ்ந்தார்.

''இதோ காமராஜர் இருக்கிறார்!'' என்ற நூலை எழுதிய டி.ஆர்.வி. நாராயணசாமி அவர்கள், பக்கம் 24-ல் கீழ்க் கண்டவாறு பாராட்டுவதைப் படியுங்கள்!

''காமராஜரை, மகாத்மா காந்தியைக் கொண்டு சிதைத்து விடலாம் என்று சதி செய்தவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்! காமராஜரின் தூய்மையான தொண்டு காந்தியையும் வென்று விட்டது கண்டு கதிகலங்கினார்!''

''காமராஜரின் இந்த வெற்றி அவர் மற்ற எல்லா வெற்றிகளையும் விடத் தனிச்சிறப்பு வாய்ந்தது. இது காந்திய சகாப்தத்தில் ஓர் உண்மையான காந்தீயத் தொண்டன், எப்படி மகாத்மாவையும் வெற்றி கொள்ள முடியும்; முடிந்தது என்பதை மெய்ப்பித்துக் காட்டியது.''

காமராஜர் அவர்களை மட்டும்தான் காந்தியடிகள் இவ்வாறு 'கிளிக்' என்று எழுதி, அவர் மனதைப் புண்படுத்தி விட்டார் என்பது மட்டுமல்ல. இதோ மற்றொரு சான்று.

## காந்தியடிகள் கூறிய லோஃபர் என்ற சொல்!

பம்பாய் மாநிலத்திலுள்ள ஃபெய்ஸ்பூர் எனும் சிற்றூரிலே 1937-ஆம் ஆண்டு, ஐம்பதாவது காங்கிரஸ் மகாசபை கூடியது. பண்டித ஜவகர்லால் நேரு அந்த மகாசபைக்குத் தலைமை வகித்தார்!

ஒவ்வொரு மாநாட்டிலும் கண்காட்சிக்காகக் கிராமப் பொருட் காட்சிகளை உருவாக்கி, மாநாட்டிற்கு வருவோர்களிடம் விற்பனை செய்து, கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கும் வழக்கம், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கு உண்டு!

அதனைப்போல, ஃபெய்ஸ்பூர் மாநாட்டிலும், கிராமப் பொருட்காட்சி சாலை நடந்தது. தமிழ்நாட்டைச்சேர்ந்த கவிஞர் அ. அய்யாமுத்து என்ற பிரபலக் காங்கிரஸ்காரர் கதர் விற்பனை செய்யும் தமிழகப் பொறுப்பை ஏற்று, அதை அகில இந்திய அளவில் விற்பனை செய்து வந்தார்.

வழக்கம்போல அந்த மாநாட்டிலும் கண்காட்சிக்கும் விற்பனைக்கும் கதர்த் துணிகளைத் தனது நிர்வாகி மூலம் அனுப்பி இருந்தார். ஆனால், அவர் போகவில்லை. தனக்குப் பதிலாக செல்லசாமி என்ற ஊழியரை அந்த மாநாட்டிற்கு அனுப்பினார்.

''அந்த ஊழியர், மாநாட்டு விற்பனையை முடித்துக் கொண்டு, 20-1-37 அன்று கோவைக்குத் திரும்பி வந்தார். கோவை அய்யாமுத்து

அவர்களைக்கண்டு, 'காந்தியடிகள் உங்களைப் பற்றி மிகக் கேவலமான கருத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு அவர் அங்கே என்ன நடந்தது?' என்று அந்த ஊழியரைக் கேட்டார்.

ஃபெய்ஸ்பூரில், நமது கதர் விற்பனைக் கடைக்குக் காந்தியடிகள் வந்தார். வந்ததும், 'அய்யாமுத்து' எங்கே?' என்று என்னைக் கேட்டார். ''அதற்கு, 'நான் அவர் வரவில்லை' என்றேன்! உடனே அவர், ''Oh he is lofar'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அதைக் கேட்ட எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது'' என்றார் அந்த ஊழியர்!

அய்யாமுத்துவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னைப் பற்றிக் காந்தியடிகளிடம் பலர் பலவிதமாகக் கோள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்! அதன் விளைவாகத் தான் காந்தியடிகள் இவ்வாறு கூறி விட்டாரோ என்று எண்ணினேன்.''

மேலும் அய்யாமுத்து சொல்கிறார் கேளுங்கள்! செல்லசாமி என்ற அந்த ஊழியன், ''என்னிடம் மட்டும் காந்தியடிகள் கூறிய லோஃபர் என்ற வார்த்தையைக் கூறி நிறுத்திக் கொள்ளவில்லை.

கதர்க் கடையிலும், அதன் காரியாலயத்திலும் பணியாற்றிக் கொண்டிருந்த அனைவரிடமும் அதை அப்படியே கூறிவிட்டான்!

''சங்கதி கேட்டீர்களா?'' என்று ஒவ்வொருவரும் என்னிடம் துக்கம் விசாரிக்க வந்து விட்டார்கள்.

''அடுத்த நாள், நான் காந்தியடிகளின் நண்பரான சங்கர்லால் பங்காருக்கு, மகாத்மா காந்தி என்னை ஒரு லோஃபர் என்று கூறியதாக, பெய்ஸ்பூருக்கு நான் அனுப்பியிருந்த செல்லசாமி என்ற கதர் விற்பனைத் தொண்டர் தெரிவிக்கிறார்!''

இது உண்மையாய் இருக்குமானால், நான் தமிழ் நாட்டுக் கதர் விற்பனைக் காரியாலயத்தின் தலைவராய் பணிபுரிந்து வருதல் தகுமா? என்று, சிந்திக்க வேண்டியவனயாய் இருக்கிறேன்.''

தாங்கள் மிக்க அன்புடன் என்னை இந்த மனவேதனையினின்று மீள உதவும்படி கோருகிறேன் என்று கடிதம் எழுதினேன்.

சரியாய் ஏழு நாட்களுக்குப் பிறகு, வார்தாவிலே உள்ள காந்தியடிகளாரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் எனக்கு வந்தது.

'சங்கர்லால் உங்கள் கடிதத்தின் நகல் ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார்! அந்தக்கடிதம் உணர்ச்சி வசப்பட்ட உங்கள்மனக் கவலையைக் காட்டுகிறது (Hysterical)

''உங்களிடம் நகைச்சுவை உணர்ச்சி இருப்பதாக நான் எண்ணி மகிழ்ந்திருந்தேன். ஆனால், நான் அவ்வாறு மதித்தது தவறென இப்போது உணர்ந்து கொண்டேன்.

''நான் அய்யாமுத்து என்று கூப்பிட்டதும், அந்தத் தொண்டன், தான் அய்யாமுத்து அல்லவென்று தெரிவித்தான். நான் உங்களுக்கு எனது பாராட்டுதலை மிக நாசுக்காகத் தெரிவித்தேன்.''

அந்தப் புகழ்மாலை இதுதான்!

''திருப்பூரில் உங்களுக்குள்ள கடமையைப் புறக்கணித்து விட்டு, நீங்கள் ஃபெய்ஸ்பூர் வருவது அவசியமென்று கருதவில்லை என்ற எண்ணத்தில் நான் அவனோடு சிரித்துக்கொண்டே வேடிக்கையாகப் பேசினேன்.

''அய்யாமுத்து எதற்காக இங்கு வரவேண்டும்? உன்னை இங்கு அனுப்பிவிட்டு அவர் திருப்பூரில் ( is Loafering about) அலைந்து கொண்டு திரிகிறார்... என்று கூறினேன்.''

''அந்த தொண்டனுடைய முட்டாள்தனத்தை என்னால் மன்னிக்க முடியும். ஆனால், உங்களை நான் மன்னிக்க முடியாது.''

''அவனிடம் நீங்கள், பாபு சொன்னதை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் ஃபெய்ஸ்பூருக்குப் போகாததை அவர் பாராட்டியிருக்கிறார் என்று கூறியிருக்க வேண்டும்.''

''இந்தக் கடிதம் இப்போது உங்களுக்குப் புரிகிறதா? உங்கள் மன வேதனையைப் போக்க உதவுகிறதா? என்று நீங்கள் சொல்ல வேண்டும்.''

''உலகத்திலுள்ள கவிகள் எல்லாம் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று உங்களால் தெரிந்து கொள்ள முடிகிறதா?''

''அதாவது, மனிதன் தனது இன்ப துன்பங்களைத் தானே உருவாக்கிக் கொள்கிறான்.''

உங்கள்
பாபு

இந்த கடிதத்தை கோவையில் நான் பெற்றதும், காந்தியடிகள் மனித நேயத்தை மதித்து, அந்தச் சம்பவத்தை அப்போதே மறந்து மீண்டும் காங்கிரஸ் கட்சிப் பணிகளையும், கதர்த் துறை விற்பனைகளையும் ஆற்றி வந்தேன்.

இவையே பின் ஐயா முத்து கூறியவை.

1946-ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலுக்குரிய வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகளைக் காமராஜ் அவர்களைத் தவிர, ஆட்சிக் குழுவில் அங்கம் வகித்த மற்ற உறுப்பினர்கள்தான் செய்தார்கள்!

ஆட்சிமன்றக் குழு தேர்வு செய்த வேட்பாளர்கள், அங்கீகாரம் பெறுவதற்கான பட்டியல் சர்தார் வல்லபபாய் பட்டேலிடம் அனுப்பப்பட்டது.

அந்த வேட்பாளர்கள் பட்டியலுடன் எம். பக்தவத்சலம், திருமதி ருக்மணி லட்சுமிபதியும் பம்பாய் சென்றார்கள். சர்தார் வல்லபபாய் படேலும், காமராஜரும் அவர்களை வருமாறு அழைத்ததற்கேற்ப தலைவர் காமராஜரும் சென்றார்.

ஆனால், பட்டியல் மேலிடத்தின் அங்கீகாரம் பெறும்வரை, அவர் சர்தார் படேலைப் பார்க்க மறுத்துவிட்டார். தமிழகக் காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியலுக்கு மேலிடம் அங்கீகாரமளித்த பின்புதான், காமராஜர் படேலைச் சந்தித்துச் சென்னை திரும்பினார்.

தேர்தல் வேட்பாளர் பட்டியலில், ராஜாஜி தனக்கு வேண்டியவர்கள் பெயர்களை எல்லாம் சேர்த்திருந்தார். இருப்பினும், தாம் பிரதமராக வரமுடியுமா என்ற சந்தேகமும் - அவருக்குப் பலமாக இருந்தது!

சென்னை மாநிலத்தின் முதலமைச்சருக்கு வெள்ளையர் ஆட்சியில், 1952-ஆம் ஆண்டுவரை பிரதம மந்திரி என்று பெயர்!

அந்த பிரதம மந்திரி பதவிக்குத்தான், காந்தியடிகள் கருணையோடு, காங்கிரஸ் மேலிட ஆசியோடு 'இராஜாஜி போட்டியிட்டார்' என்ற செய்தி மக்களிடையே பரவலாகப் பேசப்பட்ட நேரம் அது!

1952-லிருந்து இப்போது பிரதம மந்திரி என்ற பெயர் தலைநகர் டில்லியிலுள்ள மத்திய மந்திரிசபைத் தலைவருக்குத்தான் உண்டு. மற்ற மாநில அமைச்சர் சபைத் தலைவர் 'முதல்வர்' எனப்படுகிறார்.

# 27. பிரகாசம் பிரதமராக காந்தியடிகள் எதிர்ப்பு!

காமராஜ் - காந்தியடிகளுக்கிடையே நடைபெற்றக் 'கிளிக்' போராட்டத்தைத் தொடர்ந்து, மதுரை மாநகரில் இராஜாஜிக்கு எதிராகப் பெரிய கலவரமும் - குழப்பமும் ஏற்பட்டன.

தமக்கு விரோதமாகத் தோன்றியக் கலவரச் சம்பவங்களைத் தடுத்திடத் தம்மால் முடியவில்லை என்பதை இராஜாஜி வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டார்.

ஆலகால விஷம்போல அந்த எதிர்ப்பு கடுமையாக இருக்கிறது என்றும், அதனால், தாம் விலகிக் கொள்வதாகவும் கூறி ஓர் அறிக்கையை விட்டு விட்டுக் காங்கிரசிலே இருந்து விலகிக் கொண்டார் இராஜாஜி.


1946-ஆம் ஆண்டில், அன்றைய சென்னை மாநிலத்திற்குரிய சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. அமைச்சரவை அமைக்கும் பெரும்பான்மை பலம் காங்கிரஸ் பெற்றதால், அந்த விவகாரத்தில் மீண்டும் குழப்பம் நிலவியது.

இராஜாஜியே சென்னை மாநிலத்தின் பிரதமராகப் பதவியேற்க வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்.

அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகத் தலைமையும் அதே கருத்தையே எதிரொலித்தது. ஆனால், சென்னை மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினருள் பெரும்பான்மையினர் அந்தக் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

## டில்லி சென்ற மூவர் குழு!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரான காமராஜ் ஆந்திரக் காங்கிரஸ் கட்சித் தலைவரான டி. பிரகாசம், கேரளக் காங்கிரஸ் கட்சித் தலைவரான மாதவமேனன் ஆகிய மூவரும், டெல்லிக்குச் சென்று சர்தார் வல்லபபாய் படேலைச் சந்தித்து இதுபற்றிப் பேசினார்கள்.



ஜான் கின்னத் கால் பிரைத் உடன் காமராஜர்.






இந்திராகாந்தி, காமராஜர், மொரார்ஜி தேசாய்.



இந்திராகாந்தியுடன் காமராஜர்.





குல்சாரிலால் நந்தா, காமராஜர், லால்பகதூர் சாஸ்திரி.



பக்தவச்சலம், மொரார்ஜி தேசாய், காமராஜர்.



ஜான் கின்னத் கால் பிரைத் உடன் காமராஜர்.

காந்தியடிகளைப் பார்த்துப் பேசுங்கள் என்று மூவரிடமும் சர்தார்படேல் கூறிவிட்டார்! காமராஜ், காளாவெங்கட்ராவ், கோபால்ரெட்டி, பட்டாபி சீத்தாராமையா, மாதவமேனன், ராஜாஜி ஆகிய ஏழு பேர்களைக் கொண்ட குழு ஒன்று டில்லி சென்று காந்தியடிகளை ஏப்ரல் மாதம் 9 ஆம் நாள் சந்தித்து, சென்னை மாநிலப் பிரதமராக யாரைக்கொண்டு வருவது என்று கலந்துரை யாடினார்கள்!

## பிரகாசத்திற்கு காந்தி எதிர்ப்பு!

பிரகாசம் முதல் மந்திரியாக வருவதைக் காந்தியடிகள் எதிர்த்தார். அதற்குக் காரணமாக, ''பிரகாசம் பொது விவகாரத்தில் நேர்மையாக நடந்து கொள்ளாதவர்; அதனால், அவர் சாதாரண மந்திரியாகக் கூட தேர்வு செய்யப்படக் கூடாது'' என்று காந்திஜி சற்றுக் கடுமையாகவே கூறினார்!

''பட்டாபி சீத்தாராமையா, ராஜாஜி, பிரகாசம் இவர்கள் மூன்று பேரில் யாரையாவது ஒருவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கலாம்'' என்று திரு. காமராஜ் கூறினார்.

''பிரகாசத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். பட்டாபி சீதாராமையா, ராஜாஜி இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுங்கள்'' என்று - காமராஜ் அவர்களிடம் காந்தியடிகள் கருத்துத் தெரிவித்தார்.

ஜனாப் மௌலானா அபுல்கலாம் ஆசாத்தைக் காமராஜ் குழு ஏப்ரல் 10-ஆம் நாள் சந்தித்து, காந்தியடிகள் தெரிவித்த கருத்தைக் கூறி கலந்து யோசித்தது. அதற்கு அவர் ''அந்த மூவரையும் கொண்ட அமைச்சரவையை அமைக்கலாம் என்ற, தமது எண்ணத்தைக் கூறினார்.

''இந்தக் கருத்து எனக்கு ஏற்புடையதாக இல்லை'' என்று பட்டாபி சீதாராமையா கூறவே, இதற்கு மேல் எந்தப் பேச்சும் அங்கே நடை பெற முடியாது போயிற்று.

## காமராஜ் – காந்தி கலந்துரையாடல்!

பட்டாபி சீதாராமையா தனிமையாகச் சென்று ஏப்ரல் 11ஆம் நாள் காந்தியடிகளைச் சந்தித்தார்.

இராஜாஜியைச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியுமா? என்று, காந்தியடிகள் பட்டாபியைக் கேட்டார்.

'அது சந்தேகம் தான்'' என்று பட்டாபி சீதாராமையா கூறினார். ''எதற்கும் காமராஜ் அவர்களைக் கலந்தாலோசித்தால் முடிவு தெரியும்'' என்றார் அவர்.

காந்தியடிகள் ஏப்ரல் 12-ஆம் நாள், காமராஜ் அவர்களை அழைத்து, 'தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன?' என்பதைக் கேட்டறிந்தார்.

இராஜாஜியை வேண்டாம் என்றால் விட்டு விடுங்கள் - திரு. பட்டாபியைத் தேர்ந்தெடுத்தால் என்ன?'' என்று காந்தியடிகள் காமராஜரைக் கேட்டார்.

''பட்டாபி வெற்றிபெற வேண்டுமனால்,இராஜாஜி, தலைவர் தேர்தலில் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று காமராஜ் அவருக்குப் பதில் கூறினார்.

''இராஜாஜியிடம் நான் பேசி சரி செய்கிறேன்; என்றார் - காந்தியடிகள்!

காமராஜ் மீண்டும் சர்தார் வல்லபபாய் படேலைச் சந்தித்துக் காந்தியடிகள் கூறிய யோசனையைக் கூறியபின், இராஜாஜியையும் சந்தித்து அதே முடிவை அவர் தெரிவித்தார்!

உடனே, இராஜாஜி அவர்களுக்குக் கோபம் வந்தது; ''நான் முதலமைச்சராகவும் வரக்கூடாது; ஆனால், நீங்கள் யாரை நிறுத்துகிறீர்களோ அவருக்கு மட்டும் நான் ஆதரவளிக்க வேண்டுமா?'' என்றார்.

தில்லியில் இருந்து திரும்பி வந்த டி. பிரகாசம் அவர்கள், தான் முதல்பிரதமராக வரமுடியாமல் காந்தியடிகள் தடுப்பதால், இராஜாஜியாவது பிரதம மந்திரியாக வரவேண்டும் என்று திட்டமிட்டார்.

இராஜாஜி மந்திரிசபை அமைத்தால் தன்னை ஒரு சாதாரண மந்திரியாகக் கூடவா நியமிக்க மாட்டார்? என்று, அதற்கான வேலைகளிலே ஈடுபட்டார் பிரகாசம். இவர் செய்த இந்தத் திடீர் முடிவு இராஜாஜி எதிர்ப்பு அணியில் பிளவு ஏற்படுத்தியது. அந்தப் பிளவைப் பயன்படுத்தி, பிரகாசமே பிரதமர் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

## காந்திக்கு எதிராகச் செயல்பட மாட்டேன்!

''காந்தியடிகள் பிரகாசம் முதல்வராக வருவதை விரும்ப வில்லை. அவர் கருத்துக்கு எதிராக நான் செயல்பட மாட்டேன்'' என்று, காமராஜ் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

முத்துரங்க முதலியாரைத் தேர்தலில் நிறுத்தினால், ராஜாஜி அணி அவரை எதிர்க்காது என்று கருதிய காமராஜ் அவர்கள், முத்துரங்க முதலியாரைப் பிரதமர் தேர்தலில் நிறுத்தினார்!

சென்னை மாகாணப் பிரதமர் தேர்தலில் காமராஜ் அவர்கள் சார்பாக சி.என். முத்துரங்க முதலியாரும், எதிர்த்து டி. பிரகாசமும் போட்டியிட்டார்கள்!

இராஜாஜி அணியினர் போட்டியிட்ட இருவருக்கும் தங்களது ஓட்டுக்களைப் போடாமல், தலைவர் தேர்தலில் நடுநிலைமை வகித்தார்கள்! அதனால், பிரகாசம் ஏழே ஏழு ஓட்டுக்கள் வித்தியாசத்தில் சென்னை மாநிலப் பிரதமராக வெற்றி பெற்றார்.

இராஜாஜி அணியினர் மொத்தம் 33பேர்கள். அவர்கள் நடுநிலைமையில் நில்லாமல், காங்கிரஸ் கட்சியின் பிரதமர் தேர்தல் என்ற உணர்வோடு நடந்து ஓட்டளித்திருந்தால், முத்துரங்க முதலியாரே வெற்றி பெற்றிருப்பார்!

ஆனால், காமராஜ் மேல் ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப் புணர்ச்சியே அந்தத் தேர்தலில் தலைதூக்கி நின்றது.

காமராஜ் அவர்களால் நிறுத்தப்பட்டதனால்தான், முத்துரங்க முதலியார் தோற்றார்! இந்த முத்துரங்க முதலியார் எதிர்ப்பு, இறுதியில் காந்தியடிகள் எதிர்ப்பாக மாறிற்று!

## காமராஜ் மேல் வீண்பழிகள்!

உண்மை இவ்வாறு இருக்க, அதை மறைக்க, காந்தியடிகளையும் - காமராஜரையும் எதிர்த்து இராஜாஜி அணி நடுநிலைமை வகித்து விட்டு, பிரகாசத்தையும் பிரதமராக வெற்றி பெறச் செய்துவிட்டு, பின்னர் காந்தியடிகள் சொல்லைமீறி இராஜாஜியை உதாசீனம் செய்துவிட்டு - பிரகாசத்தைக் காமராஜ் பிரதமராகத் தேர்ந்தெடுத்தார் என்ற பழியை, உள்நோக்கக் கெட்ட பெயரைக் காமராஜர் மேல் இராஜாஜி அணியினர் உருவாக்கி விட்டார்கள்.

இவ்வாறெல்லாம் குழப்பம் உருவானதற்குப் பிறகு, பிரகாசம் அணிக்குக் காங்கிரஸ் கட்சி ஆதரவு தரக் கூடாது என்று' காமராஜ் அவர்களிடம் பிரகாசம் எதிர்ப்பாளர்கள் கூறினார்கள். அதைக் காமராஜ் அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்.

''காங்கிரஸ் கட்சி தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. காந்தியடிகளுக்குத் திருப்தியில்லாத டி. பிரகாசம் எப்படியோ வெற்றி பெற்றுவிட்டார்! அது அவரது திறமை!

இதற்கு மேலும் காங்கிரஸ் கட்சிக்குள்ளே சண்டை சச்சரவுகளையும், பகையுணர்வுகளையும் உருவாக்குவது அழகல்ல - நல்லதல்ல!'' என்ற பெரும் பண்பைக் கூறி, அமைதியாகக் காங்கிரஸ் ஆட்சி நடக்க வழி காட்டினார் காமராஜ்!

டி.பிரகாசம். அமைச்சரவையில் காமராஜ் அணியினர்களும் அங்கம் வகித்தனர். கேரள மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு மாதவமேனனை, மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளுமாறு காமராஜ் கேட்டார்!

பிரதமர் பிரகாசம், காமராஜருக்கு எதிர்ப்பாக இராஜாஜி அணியைச் சேர்ந்த ராகவமேனனை அமைச்சராக்கினார்! பிரகாசம் அமைச்சரவை பின் நாட்களிலே கவிழ்வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. பிரதமர் பிரகாசம் அமைச்சரவையைக் கவிழ்க்க, தலைவர் காமராஜ் எந்த விதக் காரணராகவும் விளங்கவில்லை.

இராஜாஜி அணியைச் சேர்ந்த எந்த ராகவமேனனை அமைச்சராக்கிட பரிந்துரைத்தார்களோ, அதே அணியினர் டெல்லியிலே உள்ள இராஜாஜி வீட்டில் கூட்டம் போட்டு, பிரகாசம் சபையைக் கவிழ்க்கத் திட்டமிட்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவரது அமைச்சரவை மீது கொண்டு வர முடிவெடுத்தார்கள்;

## பிரகாசம் வீழ்ச்சி! சில காரணங்கள்!

1947-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ஆம் நாள், பிரதமர் டி. பிரகாசத்திற்கு எதிராக 25 சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி, ஒரு கடடளைக் கோரிக்கையை அனுப்பினார்கள்.

'தங்கள் மந்திரி சபைமீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. அதனால், சட்டப் பேரவைக் காங்கிரஸ் கட்சியின் பொதுக் கூட்டத்தை உடனே நடத்த வேண்டும்' என்று கோரியிருந்தார்ர்கள்.

பிரகாசம் அமைச்சரவை, அப்போது காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சர்ச்சையை உருவாக்கும் மந்திரி சபையாக அமைந்திருந்தது.

அதற்கேற்ப, அப்போதைய சென்னை மாநிலத்திலே எல்லா நூற்பாலைகளையும் அவரது அரசு மூடிவிட விரும்புவதாகப் பிரதமர் பிரகாசம் அறிவித்ததும் சர்ச்சைக்குரிய ஒரு காரணமாக அது எதிரொலித்தது.

அதனால், சென்னை ஆட்சியின் கரங்களுக்கு உட்படாத புதுக்கோட்டை, புதுச்சேரி, கொச்சி, திருவிதாங்கூர், மைசூர் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று, புதுமில்களைக் கட்ட, நூற்பாலை

முதலாளிகள் திட்டமிட்டார்கள்! இந்த எதிர்ப்பும் பிரகாசத்திற்கு ஏற்பட்டு விட்டது. இந்த நூற்பாலை உரிமையாளர்களின் திட்டத்தால், தமிழகத்தில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் - தமிழகத் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும் என்று தமிழகத்தில் எதிர்ப்புக் குரல் எழுந்தது. பிரதமர் பிரகாசத்தின் மகன், தனது தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஊழல்களிலே ஊடுருவினார் என்ற புகாரும் ஒப்புதலாயிற்று!

## காந்தி ஆசி பெற கதர்த்திட்டம்!

தான் பிரதமரானதைக் காந்தியடிகள் விரும்பவில்லை என்பதை ஏற்கனவே உணர்ந்த பிரகாசம், அவர் பிரதமரானதும் காந்தியடிகளைத் திருப்திப்படுத்த எண்ணினார். அவரது வாழ்த்துதலைப் பெற்றிட, ''கதர்த் திட்டம்'' என்ற பெயரால், மூன்று கோடி ரூபாயைத் தனது அமைச்சரவை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி, காந்தியடிகளது ஆசியையும் பெற்றார்!

இந்தக் கதர்த் திட்டத்தால்தான், புதிய நூற்பாலைகளைக் கட்ட அனுமதி கிடையாது என்றும், பழைய நூற்பாலைகளில், கதிர்களை அதிகப்படுத்தவும் முடியாது என்ற நிலையை ஏற்படுத்தி, நூற்பாலை உரிமையாளர்களின் எதிர்ப்பையும் பிரகாசம் பெற்றுக் கொண்டார். இவையெல்லாம் போதாதென, தமிழ்நாடு காங்கிரஸ், கேரளக் காங்கிரஸ் அணிகளின் எதிர்ப்புகளையும் பிரகாசம் சேர்த்துக் கொண்டார்!

எதிர்ப்புகளிலேயே பிரதமரான பிரகாசம், அதே எதிர்ப்புச் சக்திகளினாலேயே அவரது அமைச்சரவை கவிழ்க்கப்பட்டது. 1947-ஆம் ஆண்டு மார்ச் 14-ஆம் நாள் தனது மந்திரி சபையோடு அவர் ராஜிநாமா செய்தார்!

ஆந்திரகேசரி டி. பிரகாசம், பிரதமர் பதவியிலே இருந்து விலகியபின், சென்னை மாநிலத்திற்கு யார் பிரதமராக வருவது என்ற போட்டியும் - குழப்பமும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியிலே மீண்டும் தலைதூக்கியது.

## காமராஜ் – கணேசன் போட்டி மர்மம்!

இதற்கிடையில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக, காமராஜ் அவர்கள் இருந்தது இராஜாஜி அணியினருக்கு ஒருமன நெருடலாக இருந்தது.

எப்படி அவரை அந்தப் பதவியிலே இருந்து ஒழித்துக்கட்டுவதென்று இராஜாஜி அணியினர் இரவும் - பகலுமாக அடுத்தடுத்துச் சிந்திக்கலானார்கள்.

1946-ஆம் ஆண்டு, மே 16ஆம் நாள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தல் மதுரை மாவட்ட திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றிட ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன.

திருப்பரங்குன்றத் தேர்தலில், இராஜாஜியை எதிர்த்து நின்ற ஒருவரை காமராஜ் அவர்களை எதிர்த்துப் போட்டியிட வைப்பது என்று - இராஜாஜி அணி முடிவெடுத்தது.

அதற்குப் பலி கடாவாக சி.என். முத்துரங்க முதலியாரை அணுகி, காமராஜ் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுமாறு கேட்டனர்! அதற்கு அவர் முடியாது என்று கூறிவிட்டார்.

காரைக்குடி சா. கணேசனை நிறுத்துவதென்று இராஜாஜி அணி சிந்தித்த போது, அவர் காமராஜை எதிர்த்து நிற்பது சந்தேகம் என்ற சிலர் கூறவே, நேரிடையாகவே சா. கணேசனை அந்த அணி சந்தித்து அவரது சம்மதமும் பெற்று விட்டது.

இராஜாஜி அணியினர் அனைவரும் சா. கணேசனை ஆதரித்தனர்! தேர்தலும் பரபரப்புடன் நடந்தது! 152 ஓட்டுகளை பெற்ற காமராஜ் அவர்கள், இராஜாஜி அணி சா. கணேசன் அவர்களை 62 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து வாகை சூடினார்!

ஒருநாள், இராஜாஜியிடம் நேரில் பேசிக் கொண்டிருந்த காமராஜ், ''தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலிலே வெற்றி பெற முடியாது என்று தெரிந்த பிறகும் கூட, 90 ஓட்டுக்களைப் பெற்ற சா. கணேசனை நீங்கள் ஏன் நிற்க வைத்தீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

''உங்களை எதிர்த்துப் போட்டியிட எங்களுக்கு வேறு ஆள் கிடைக்கவில்லை. சா. கணேசனுக்குத் தான் போட்டியிட்டதில் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? வெற்றி அடைந்தால் லாபம்! தோல்வியானால் நஷ்டப்பட என்ன இருக்கிறது?'' என்று ராஜாஜியும் அதற்குச் சிரித்துக் கொண்டே பதில் கூறினார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தல்களிலும் சரி, தமிழ்நாட்டு அரசியலில் செல்வாக்கை நிலைநிறுத்துவதிலும் சரி, பிரகாசம் பிரதமர் பதவியை இழந்ததிலும் சரி, காமராஜ் அவர்களை வீழ்த்திட எண்ணற்ற குழப்பங்களை ஏற்படுத்திய போதும் சரி, அவருடைய எதிரிகள்தான் எல்லாவற்றிலும் மண்ணைக் கவ்வினரே தவிர, காமராஜ் அவர்களின் எதிர்காலம் மேலும் மலைமுகட்டு ஒளியாகவே ஒளிர்ந்தது.

# 28. காமராஜ் தோற்றுவித்த காங்கிரஸ் தொழிற்சங்கம்!

இந்திய விடுதலைப்போரின் மற்றொரு திருப்பு முனையாகத் தோன்றியதே காங்கிரஸ் தொழிலாளர் இயக்கம். அந்தத் தொழிலாளர் பிரிவு 1942 ஆம் ஆண்டு, ஆகஸ்டுப் புரட்சிக்கு முன்பே, அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெற்றிருந்தது! ஆண்டாண்டு தோறும் ஒவ்வொரு நகராகக் கூடிய இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்க மகா சபைகள் எல்லாம், தொழிலாளர் நல்வாழ்வுக்காகப் பலமாகப் போராடி வந்தன.

குறிப்பாகக் கூறுவதானால், 1920-ஆம் ஆண்டு, சேலம் சி. விஜயராகவாசாரியார் தலைமையில் நாகபுரி நகரில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை, ''தொழிலாளர்கள் அனைவரும் அவரவர் நன்மைகளுக்காகத் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்ள உரிமை வேண்டும்'' என்று போராடியுள்ளது.

## தேசியப் பணியில் தொழிலாளர் இயக்கம்!

ஆங்கிலேயர் ஆட்சியில், பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வாணிப நிறுவனங்களும் வெள்ளையர்களாலேயே நடத்தப்பட்டன, நிர்வாகமும் செய்யப்பட்டு வந்தன.

சென்னை மாநகரிலே, இவ்வாறு பக்கிங்ஹாம் கர்நாட்டிக் மில்ஸ், புதுச்சேரி ரோடர் மில்ஸ், மதுரை ஹார்வி மில்ஸ், தூத்துக்குடி கோரல் மில்ஸ், சென்னை ஸ்பென்சர் அண்ட் கோ, சிம்சன் கம்பெனி போன்ற பற்பல நிறுவனங்கள் இயங்கி வந்தன.

அந்நியர்களின் பொருளாதாரச் சுரண்டலைத் தடுப்பதற்காகவே தோன்றியதுதான் சுதேசி என்ற இயக்கம்! அவர்களின் சுரண்டலைத் தடுப்பதிலே ஈடுபட்ட இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி, தொழிலாளர்கள் இயக்கத்தையும் தோற்றுவித்தது.

தூத்துக்குடியில், 1908 - ஆம் ஆண்டில் நடைபெற்ற கோரல் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம்தான், இந்தியாவிலேயே முதன் முதலாக நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபையின் அரசியல் கலந்த வேலை நிறுத்தமாகும்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, மராட்டிய தேசிய மாவீரர் பாலகங்காதர திலகரின் தீவிரவாதக் காங்கிரஸின் தலைவராக அப்போது திகழ்ந்தார்!

அவர்தான், அந்த மில்லின் வேலைநிறுத்தத்தைத் தலைமையேற்று நடத்தினார். அதற்காக இரண்டு ஆயுட்காலச் சிறைத் தண்டனையை பெற்ற தியாக மாமன்னரானார்.

தொழிற்சங்கத்தைத் தோற்றுவிப்பதிலும் - முன்னணியில் நின்றது தமிழ்நாடுதான். 1918 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் நாள் சென்னை தொழிலாளர் சங்கம் துவங்கப்பட்டது. வாடியா அவர்கள் பங்களாவிலே, வி. கலியாண சுந்தர முதலியார், திவான் பகதூர் கேசவப் பிள்ளை, செல்வபதி செட்டியார், இராமாஞ்சலு நாயுடு போன்றவர்கள் கூடி முதல் தொழிற்சங்கத்தை அமைத்தனர்.

இந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டதற்கு பிறகு, எம். அண்ட் எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், மின்சாரத் தொழிலாளர் சங்கம், ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர் சங்கம், முடி திருத்துவோர் சங்கம், வீதி சுத்தம் செய்யும் தோட்டிகள் சங்கம், ரிக்ஷா ஓட்டிகள் சங்கம், நாகப்பட்டினம் காவலர் துறைச் சங்கம், கோவை நெசவுத் தொழிலாளர் சங்கம் போன்ற பற்பல சங்கங்கள் தோன்றின.

அந்தச் சங்கங்கள் எல்லாம் தேசிய இயக்கத் தலைவர்களையே தொழிற் சங்கத் தலைவர்களாகவும் ஏற்றுக் கொண்டன.

## தேசியத் தலைவர்களே தொழிற்சங்க வாதிகள்!

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை, திரு. வி. கலியாண சுந்தர முதலியார், திருமதி டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார், திரு.குத்தி கேசவப் பிள்ளை, திரு. சி. இராஜகோபாலாசாரியார், திரு. ஹரி சர்வோத்தம பிள்ளை, திரு. இ.எல். ஐயர், திரு. செல்வபதி செட்டியார், திரு. இராமஞ்சலு நாயுடு, திரு. பி.பி. வாடியா, டாக்டர் திரு. ராவ், திரு. எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், டாக்டர் திரு. பி. வரதராஜலு நாயுடு, திரு. ஆதி நாராயண செட்டியார், திரு. சர்க்கரை செட்டியார் திரு. கஸ்தூரி ரங்க ஐயங்கார், நாகை திரு என். எஸ். இராமசாமி

ஐயங்கார், மதுரை திரு ஜார்ஜ் ஜோசப் போன்ற தேசியவாதிகளே பெரும்பாலும் தொழிற்சங்கத் தலைவர்களாக அப்போது பணியாற்றினார்கள்.

சேலம் திரு. சி. விஜயராகவாசாரியார், 1920-ஆம் ஆண்டில் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவரான பிறகு, அவர் தமது தலைமையுரையில் கேட்டுக் கொண்டவாறு, திரு பண்டித ஜவகர்லால் நேரு, திருமதி கவிக்குயில் சரோஜினி தேவியாரின் தங்கையான திருமதி மிருநாளினி சட்டோபாத்தியாயா போன்றவர்கள் ஆங்காங்கே தொழிற்சங்கங்களைத் தோற்றுவித்து, அந்தச் சங்கங்களுக்குரிய தலைமைச் சங்கத்தையும் நிறுவினார்கள்.

தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்ட தேசியவாதிகள் எல்லாம், அகில இந்தியத் தொழிற் சங்க இயக்கத்திலும் ஈடுபட்டவர்கள்.

ஏனென்றால், அவ்வாறு பணியாற்றுவதை இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே - அதுவும், சுதந்திரம் பெறும் தொண்டுகளில் ஒன்றாகவே அவர்கள் கருதினார்கள்.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த திரு.வி.வி. கிரி, கோயம்புத்தூர் என்.ஜி. இராமசாமி, இந்திய முன்னாள் குடியரசுத் தலைவரான ஆர். வெங்கட்ராமன் போன்றவர்கள், காங்கிரஸ் மகா சபையின் தலைவர்களாகவும், தொழிற் சங்க இயக்கங்களின் தீவிரவாதிகளாகவும் முழு மூச்சுடன் பணியாற்றினார்கள்.

இந்திய நாட்டுத் தொழிலாளர்களின் வறுமையைப் போக்கும் சக்தி ஒன்றே சுதந்திரம்தான்! அது தொழிற்சங்கங்களின் பிறப்புரிமை. எனவே, தொழிலாளர்களும் 'விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதற்கான பணிகளை- தேசிய அளவிலான தொண்டுகளை அவர்கள் ஆற்ற வேண்டும்' என்று நம்பினார்கள்!

1942-ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியப் புரட்சியின்போது, அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் கீழிருந்த சங்கங்களில் ஓர் இலட்சிய வெறி ஏற்பட்டு, அதுவே நாட்டு விடுதலைக்காக உழைக்கும் தீவிர திருப்பு முனையாகவும் மாறியது!

அன்றுவரை, எத்தகைய விடுதலைப் போராட்ட இயக்கங்களைக் காங்கிரஸ் மகா சபை ஆரம்பித்தாலும், அவற்றிற்கு மறைமுக ஆதரவு கொடுத்து வந்த தொழிலாளர் சங்கங்கள், பிறகு ''மக்கள் போர்'' என்ற முழக்கத்தை எழுப்பி, விடுதலை இயக்கத்திற்குத் தொழிலாளர் ஆதரவைத் தர மறுத்துவிட்டன.

தொழிற் சங்கங்களில் சில, விடுதலைப்போரையும் - அதன் இயக்கத்தையும் குறை கூறின!

சுதந்திரம், சுதந்திரப்போர், தேசியம், அதன் போராட்ட எழுச்சிப் பணிகள் என்பதெல்லாம், ஐந்தாம் படை வேலை என்று அவை அலட்சியப்படுத்திவிட்டன.

ஆகஸ்டு புரட்சியிலே கைதான தேசியத் தலைவர்கள் எல்லாம் நாட்டின் மூலை முடுக்குகளிலே, எங்கெங்கோ, உள்ள முகாம்களில் அவர்களைச் சென்று பார்க்க முடியாக் காராக்கிரகங்களிலே வைக்கப்பட்டிருந்தபோது இந்தத் தொழிற் சங்கங்கள் எல்லாம் ஆமைகளாகி விட்டன!

அகில இந்திய தொழிற் சங்கம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, அகில இந்திய காங்கிரஸ் மகாசபை, நாட்டு விடுதலைக்காக உயிரை, உடலை, உடைமைகளைத் திரணமாக மதித்துப் போராடி ஊசலாடிக் கொண்டிருந்தபோது, அவை ஊமைகளாகவே நடமாடின!

இந்தக் கோழைப்போக்கு, கொத்தடிமை வழக்கம், பிற்போக்குப் பிணக்கு, சிறையிலே வாடிக் கொண்டிருந்த தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் தீரா எரிச்சலை ஏற்படுத்தியது.

சிறைகளிலே நாம் சித்ரவதையை அனுபவிக்கின்ற இப்போதே, காங்கிரஸ் இயக்கம் சார்புடைய தொழிலாளர்களுக்குத் தனியானதோர் தொழிற்சங்க இயக்கம் இருக்க வேண்டும் என்பது பற்றிச் சிறையிலே உள்ள தலைவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். அதைப் பற்றி ஒருவருக்கொருவர் சிறைக் கூடங்களிலே ஆழமாகக் கலந்துரையாடினார்கள்!

'இந்தத் தொழிற்சங்கத் தலைவர்களுக்குக் காங்கிரஸ் மகா சபைத் தலைவர்கள் முழு ஆதரவு தருவார்களா?' என்ற ஐயப்பாடும் அவர்கள் இடையே எழுந்தது.

## சென்னை மாநகரில் தேசியத் தொழிற் சங்கம்!

1945-ஆம் ஆண்டில், அந்தந்த மாநிலங்கள் தோறும் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காங்கிரஸ் தலைவர்களும் - தொண்டர்களும் - பாதுகாப்புக் கைதிகளும் - சிறுசிறு அணிகளாக ஆங்காங்கே விடுவிக்கப்பட்டார்கள்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, ஆங்கிலேயர்களால் அன்று சட்ட விரோதமாக்கப்பட்டிருந்தது. அதனால், சிறை மீண்டு வெளியே வந்தவர்கள் தங்களுடைய அரசியல் பணிகளை இயக்க இடமில்லாமையாலும், ஓர் அரசியலமைப்பும் தங்களுக்கு இல்லாமையாலும் தவித்தார்கள்!

அந்நிலையில், தேசியத் தொழிற் சங்கவாதிகள் அனைவரும் ஒன்றுகூடி இயங்க, காங்கிரஸ் தொழிற்சங்கம் என்ற பெயரில் சிறுசிறு சங்கங்களை அமைத்துக் கொண்டார்கள்.

சென்னை மாநகரின் கொண்டித்தோப்பு பகுதியிலே கொண்டிச் செட்டித் தெருவிலே உள்ள, எண்.4 என்ற வீட்டில் - அறை ஒன்றை வாடகைக்கு எடுத்தார்கள்!

எல்லாத் தொழிற்சங்கவாதிகளும் தினந்தோறும் அங்கே வந்து கூடிப் பணியாற்றும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

இந்தப் பணிகளுக்கெல்லாம், பொறுப்பு ஏற்றுக் கொண்ட தலைவர் யார் தெரியுமா?

தமிழ் நாட்டின் கடைசி காங்கிரஸ் முதலமைச்சராக 1967-ஆம் ஆண்டுவரை பணியாற்றிய திரு எம். பக்தவச்சலம் அவர்களின் மாமனாரான திரு சி.என். முத்துரங்க முதலியார்தான்.

அப்போது ஒவ்வொரு நாளும் மாலைதோறும் - மறைந்த அகில இந்திய காங்கிரஸ் செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த திரு.இராஜகோபாலனும், முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த திரு ஆர். வெங்கட்ராமனும் தான் வந்து கூடுவார்கள்!

சிறையிலே இருந்தபோது சிந்தித்த காங்கிரஸ் கட்சியின் சார்பான தொழிற்சங்கங்கள் அமைப்பு, அதன் ஆக்கப் பணிகள் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் மற்ற காங்கிரஸ் தொழிலாளர்களோடு கூடிக் கலந்துரையாடி விரிவாக விவாதிப்பார்கள்.

அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் கொள்கைகளையும் - அதன் நடவடிக்கைப் போக்குகளையும் விரும்பாதவர்கள் அங்கே நாள்தோறும் வருவார்கள்! கூடுவார்கள்! பேசுவார்கள்! எதிர்கால ஏற்றம் குறித்துத் திட்டமிடுவார்கள்!

இந்த நேரத்தில், சிறை மீண்ட திரு காமராஜ் அவர்கள், ஒரு நாள் அந்தக் காங்கிரஸ் தேசியத் தொழிற் சங்க அறைக்கு வந்தார்!

வழக்கம்போல அங்கே பணியாற்ற வருகை தந்திருந்த திரு. ஆர். வெங்கட் ராமனையும், பிற காங்கிரஸ் கட்சித் தொழிலாளர் களையும் பார்த்து, ''காங்கிரஸ் கட்சித் தொழிலாளர் பகுதியா? நல்லாச் செய்யுங்க'' என்றார்.

சில மாதங்களுக்குப் பிறகு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தொழிலாளர் பிரிவு என்ற பெயரையும் அந்த இடம் பெற்றது.

## சட்ட சபையில் தொழிற் சங்கம்!

சென்னை மாநில சட்டசபைத் தேர்தல், 1946-ஆம் ஆண்டு நடந்தது! நடைபெறப் போகும் அந்தத் தேர்தலில் தொழிலாளர் களுக்கு நான்கு சட்டசபை இடங்கள் ஒதுக்கப்பட்டன!

பக்கிங்ஹாம் மில் தொழிலாளர் சங்கம், சென்னை நகரிலே உள்ள ஆலைத் தொழிலாளர்கள் சங்கம், கோவைப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம், ஆகிய நான்கு சங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டவைதான் அந்த நான்கு சட்டசபை இடங்கள்.

தொழிலாளர்கள், காங்கிரஸ் கட்சி மீது பற்றும் - ஆர்வமும் கொண்டு அதன் வளர்ச்சிக்காக நன்கு உழைத்தார்கள்.

அவர்கள் முழு ஆதரவு எப்போதும் காங்கிரஸ் கட்சிக்குத்தான் என்பதை உறுதிப்படுத்தவே, அந்தச் சட்டசபை இடங்களுக்குரிய வேட்பாளர்களாகக் காங்கிரஸ்காரர்களை நியமித்தார்கள்!

அகில இந்தியத் தொழிற்சங்கத்தின் சார்பில், அதன் தலைவரும் - சிறந்த தொழிற் சங்க நிர்வாகியுமான திரு. ப. ஜீவானந்தம் ஒரு தொகுதியிலே சட்டசபைக்குப் போட்டியிட்டார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பாக, ஓர் ஏழைத் தொழிலாளர் நிறுத்தப்பட்டால்தான், காங்கிரஸ் கட்சி மீதும் மதிப்பும் - மரியாதையும் மக்கள் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையில், திரு காமராஜ் அவர்கள், சைதாப்பேட்டை திரு. கன்னியப்பன் என்ற ஒரு பரம ஏழையைக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிறுத்தினார்.

தரித்திர நாராயணரான திரு.கன்னியப்பன், பிரபல தொழிற்சங்கத் தலைவராக அப்போது திகழ்ந்த திரு. ப. ஜீவானந்தம் அவர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்!

அந்த வெற்றி, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்கும், காமராஜ் அவர்களின் தேர்தல் வியூகத்திற்கும், நாட்டில் ஒரு நல்ல செல்வாக்கையும் - பெயரையும் புகழையும் பெற்றுத் தந்தது.

எந்த அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸின் கீழ் இருந்த சங்கங்கள், காங்கிரஸ் தேசியக் கட்சி நடத்திய 'சுதந்திரப் போரை ஐந்தாம் படை வேலை' என்று ஆகடியம் பேசினவோ, அதே சங்கங்கள் நிறுத்திய சட்டசபை வேட்பாளர்களை, தேசியக் காங்கிரஸ் சார்புடைய தொழிற் சங்க சாதாரண வேட்பாளர்கள் தோற்கடித்து மண்ணைக் கவ்வ வைத்த பெருமை தலைவர் காமராஜ்

அவர்களின் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தொழிலாளர் பகுதியையே சாரும்.

இதே தொழிற் சங்கம் மீதுள்ள ஆர்வம், நாளடைவில் சிறுகச் சிறுக வளர்ந்து ஆல் போல அதன் கிளைகளும் - தொழிலாளத் தோழர்களின் பசுமையான ஆதரவும் தழைத்து, காங்கிரஸ் கட்சிக்கே அந்த வளர்ச்சி ஒரு மாபெரும் திருப்பு முனையாகத் திகழ்ந்தது.

## காமராஜ் தந்த விவசாயச் சங்க ஆதரவு!

தொழிலாளர்களின் எந்தப் பிரச்னையானாலும் சரி, தமிழ்நாடு காங்கிரஸ் என்ற முறையில், காமராஜர் அவற்றை உடனடியாகத் தீர்த்து வைப்பார்; அவற்றை சுமுகமாகவும் முடித்து வைப்பார்!

கோவை மாநகரில் அப்போது முப்பதாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து அரசுக்கு ஒரு பெரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கி விட்டார்கள்.

அந்த இக்கட்டானதோர் இடர்ப்பாட்டை நீக்க திரு காமராஜ் அவர்களும், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும் கோவை நகருக்குச் சென்று, நூற்பாலைகள் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, சென்னை திரும்பினார்கள்.

அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடன் பேசி, விவாதித்து, அந்த அரசியல் நெருக்கடியை சமரசமாக முடித்ததால், ''காமராஜர் தொழிலாளர்களின் பாதுகாவலர்'' என்ற பாராட்டையும் - நம்பிக்கையையும் தொழிலாளர் உலகில் பெற்றார்.

சென்னை பக்கிங்ஹாம் அண்டு கர்நாடிக் நூற்பாலையைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம், நெருக்கடி நேரும்போது திரு. காமராஜ் அவர்களையே அணுகி, தக்க ஆலோசனைகளைப் பெறுவார்கள்.

மதுரை நகரிலே உள்ள ஹார்வி நூற்பாலைத் தொழிலாளர்கள் திரு. காமராஜர் அவர்களைத் தங்களது தொழிற் சங்கத்திற்குரிய தலைவராக்கிட விரும்பினார்கள்.

திரு. காமராஜரை அணுகி, அவரது பெயரைப் பயன்படுத்தச் சம்மதம் கேட்டார்கள். பிற செயற்பாடுகளைத் தாங்களே கவனித்துக் கொள்வதாகக் கூறிடப் பன்முறை காமராஜரிடம் படையெடுத்தார்கள்.

மலைக்காடுகள், ஊர்க்காடுகள், தோட்டத் தொழிலாளர்கள், ஆகியோர் - அவரவர்க்குரிய தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் - அதைப் பயன்படுத்துவதற்கும் தக்க உதவிகளையும் வழி வகைகளையும் வகுத்தளித்தார் திரு. காமராஜ்!

'தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர் சங்கத்தை நிறுவியவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆவார்.

ஆனால், "அந்தச் சங்கத்தைக் கட்டிக் காத்து வளரச் செய்து, எல்லாவிதமான உரிமைகளையும் வழங்கியவர் தலைவர் காமராஜ்தான் என்று நாயுடு ஒருமுறை கூறியுள்ள சான்று ஒன்றே - காங்கிரஸ் கட்சியில் திரு. காமராஜர் தான் விவசாயிகளின் தோழர்" என்ற உண்மை உலகுக்குப் புரிந்தது.

திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அமைச்சர் அவையிலே வருவாய்த் துறை மந்திரியாக இருந்தவர் கே. என். வெங்கட் ராவ். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும் - பண்ணையாட்களுக்கும் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்ற நிலையில், நாராயணசாமி நாயுடு விவசாய சங்கத்தை ஆரம்பித்தார். அவர் செய்து கொண்ட 'மாயவரம் விவசாயிகள் ஒப்பந்தத்தை' விளக்கமாக எடுத்துக் கூறி, அமைச்சரையும் அழைத்துக் கொண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, நாயுடு அவர்களின் ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொடுத்தார் தலைவர் காமராஜ்!

பிற்காலத்தில் 'நியாய வாரச் சட்டம்' என்ற ஒரு திட்டத்தைத் தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்து, விவசாயிகளுக்குப் போதிய ஆதரவளித்தார். அதனால், ஏழை உழவர் குடிமக்கள், காமராஜ் அவர்களைத் தமது ஒப்பற்ற தலைவராக ஏற்றுப் போற்றி மகிழ்ந்தார்கள்.

## தேசியத் தொழிலாளர் இயக்கத்தில் காமராஜ்!

இவ்வாறு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் தொழிலாளர் இயக்கப் பகுதியையும் ஓர் அங்கமாக இணைத்து, அதற்கான அனைத்துச் செலவுகளை எல்லாம் ஏற்றுக் காமராஜர் பேராதரவு காட்டினார்!

சென்னை மாநகரிலே உள்ள சிம்சன் குரூப் தொழிலாளர்கள் சங்கத்தில் ஏற்பட்ட எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து வைத்து, தக்க உதவிகளையும் செய்து, அந்தச் சங்கம் மேன்மேலும் வளர திரு. காமராஜ் வழிகாட்டியாக விளங்கினார்.

காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் குறைகளை அனுதாபத்துடன் கேட்டு ஆதரவளிப்பதைப் போல, தொழிலாளர் தோழர்களுக்கும் அவ்வப்போது உருவாகும் எல்லா குறைபாடுகளுக்கும் திரு. காமராஜ் தோள் கொடுத்து உதவினார்.

சில குறைபாடுகள் தன்னால் முடியாமல், அரசுதான் செய்து கொடுத்தாக வேண்டிய உதவிகளாக இருந்தால், உடனே அவற்றை ஆட்சித் துறைக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பார்.

திரு. காமராஜ் அவர்கள் ஆற்றிய இத்தகைய அரும்பெரும் தொழிற் சங்கச் சேவைதான், அவரைத் தமது நண்பராகவும் - தோழராவும் - சகோதரராகவும் தொழிலாளர்க்கு ஆக்கியது என்றால், அது மிகையாகாது.

# 29. திருவிதாங்கூர் தமிழர் போராட்ட ஆதரவு!

''நாங்கள் தமிழர்கள்! தாயகத்துடன் ஒன்று சேர்ந்து வாழவிரும்புகின்றோம்! எங்களைத் திருவிதாங்கூர் சமஸ்தானம் - தாய்த் தமிழகத்துடன் சேர விடாமல்தடுக்கின்றது. தாயைப் பிரிந்த சேயைப் போலத் துடிதுடித்துக் கொண்டு வாழ்கின்றோம். இந்த நேரத்தில் எங்களுக்கு உதவி செய்யாவிட்டால், நாங்கள் என்றென்றும் தமிழ்ப் பண்பாட்டை இழந்து, தமிழ் மொழியை மறந்து, தமிழ்க் குடிமக்கள் என்ற தகுதியைத் தவிக்கவிட்டு அழிந்து விடுவோம்! தாய்த் தமிழகத்துடன் சேர்ந்து வாழ விரும்பும் எங்களை - தமிழர்களை - காப்பாற்றுங்கள்! கை கொடுத்து ஆதரவு தாருங்கள்!''

- என்று, திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எஸ். நாதானியல் என்பவர் 1946-ஆம் ஆண்டு தலைவர் காமராஜ் அவர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலிருந்தும் - அங்கே வாழுகின்ற தமிழ் மக்களிடமிருந்தும் ஏராளமான கடிதங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு. காமராஜ் அவர்களுக்கு நாள்தோறும் வந்து குவிந்தன.

அப்போது திரு. காமராஜ் அவர்களுக்கு ஓய்விலா வேலைகள் இருந்த நெருக்கடியான நேரம். அதனால், அவரால் நேரில் வரமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது!

''நீங்கள் சமஸ்தான மக்கள் மட்டுமல்ல! இன்றுள்ள காங்கிரஸ் கட்சியின் அமைப்பில், நீங்கள் எல்லாம் கேரள காங்கிரஸ் கட்சியில்தான் சேரவேண்டிய நிலை இருக்கும் - இதற்குச் சட்டத்தை மாற்ற வேண்டும்.''

''மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்படும்போது, நீங்கள் எல்லாம் நிச்சயமாகத் தமிழ்நாட்டுடன்தான் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்!''

''நான் அங்கே நேரில் வருகை தந்து உங்களுடைய குறைகளைக் கேட்டறிந்து வேண்டிய உதவிகளைச் செய்வேன்.''

- என்று, தலைவர் காமராஜ் அவர்கள், திருவிதாங்கூர் தமிழ் மக்களுக்குக் கடிதம் மூலமாக வாக்குறுதி கொடுத்தார்!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற தகுதியில், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, "தமிழ்நாட்டை ஒட்டியிருக்கும் திருவிதாங்கூர் தமிழ்நிலப் பகுதிகளைக் காங்கிரஸ் கட்சிப் பணிக்கு ஏற்றவாறு தமிழ்நாட்டின் ஓர் அங்கமாகச் சேர்த்திட, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி அனுமதியளிக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அப்போது நிறைவேற்றினார் காமராஜர்!

திருவிதாங்கூரில் பொறுப்பாட்சிப் பிரகடனம் 1947-ஆம் ஆண்டு செப்டம்பர் 4- ஆம் நாளன்று வெளி வந்தது.

வயது வந்தோர்க்குரிய வாக்குரிமையுடன், திருவிதாங்கூர் அரசியல் அமைப்பை மாற்றியமைத்திட, அங்கே தேர்தலும் வந்தது.

''எங்கள் இறுதி இலட்சியம், ஒன்றுபட்ட ஐக்கியத் தமிழகம்தான்'' என்று, தமிழர்கள் தங்கள் தேர்தல் அறிக்கை வாயிலாக அவர்கள் கருத்தை அப்போது வெளியிட்டார்கள்.

இந்த அறிக்கையைக் கண்ட திருவிதாங்கூர் சமஸ்தானக் காவல் துறையினர் உடனே தடியடி தர்பார்கள், 144 சட்டக் கெடுபிடிகள், கண்ணீர்ப் புகை வீச்சுகள், காவலர்படைக் குவிப்புகள், அடக்குமுறை ஆர்ப்பாட்டங்கள், பொய் வழக்கு ஜோடிப்புகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டவிழ்த்து விட்டனர் - அந்தப் பகுதியிலே வாழும் தமிழ் மக்கள் மீது!

''ஒன்று பட்டே தாய்த் தமிழகத்தோடு வாழ்வோம்! இல்லையேல் மாள்வோம்'' என்று அங்கே வாழும் தமிழர்கள் வீர சபதம் ஏற்றார்கள். தலைவர் காமராஜ் அவர்களுக்கும் தந்திமேல் தந்திகள் வந்து குவிந்தன!

''உடனே விரைந்து வாருங்கள்! தவறாமல் புறப்படுங்கள்! தமிழர்கள் உயிருக்கும் ஆபத்து! உடைமைக்கும் ஊறு - உடனே புறப்படுங்கள்'' என்ற தந்திகள் நாள்தோறும் பரவலாகப் பறந்து வந்தன - தலைவர் காமராஜ் அவர்களை நோக்கி.

தலைவர் காமராஜ் திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகளைக் காண உடனே விரைந்தார். கிராமம் கிராமமாகச் சென்று, உண்மை என்ன என்பதை அறிந்திட விசாரணை செய்தார்.

சென்ற இடங்களிலே எல்லாம் தலைவர் காமராஜருக்குத் தடபுடலான வரவேற்புகள். அனாதையாக விடப்பட்ட குழந்தைகள்

அருகே வந்து நிற்கும் தாயை அரவணைத்து மகிழ்வதைப் போல தமிழர்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்து, தலைவர் காமராஜரிடம் தங்களது குறைகளையும், அங்கே அனுபவிக்கும் கொடுமைகளையும் கூறிக் கூறி ஆராத் துயருற்றனர்.

இதற்கிடையே ''காமராஜ் வாழ்க! தமிழர் தலைவர் காமராஜ் வாழ்க'' என்ற வாழ்த்தொலிகள் வானை நிமிர வைத்தது!

''திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தினேன். அது இன்னும் முடியவில்லை!''

''திரு. பட்டம் தாணுப்பிள்ளை, எஸ். நாதானியல் இருவரையும் சென்னைக்கு அழைத்து ஒரு சமரச முடிவிற்கு வர முயற்சிப்பேன்'' என்று, தலைவர் காமராஜ் திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதி வாழ் தமிழர்களை விட்டுப் புறப்படுமுன்பு அவர்களிடையே உறுதிமொழி கொடுத்தார்.

திரு. பட்டம் தாணுப் பிள்ளை, திரு. காமராஜ் அவர்களைச் சந்திக்க வருகிறேன் என்று குறிப்பிட்ட நாளில் - கூறி வரவில்லை.

திருவிதாங்கூர் தேர்தல் நடந்தது! அடக்குமுறை தர்பார், காட்டு மிராண்டித்தனமான காவல்துறையினர் வேட்டைகள் அனைத்தையும் தாண்டி, 'தமிழ் மக்கள் வாழ்வா - சாவா? என்ற சூளுரையை ஏற்று, தேர்தலில் ஒரே குறிக்கோளோடு தமிழ் மக்கள் அங்கே வாக்களித்தார்கள்.

திருவிதாங்கூர் தமிழகம் வெற்றி முரசு கொட்டியது! காமராஜ் அவர்களின் வருகையும் - அவர் கொடுத்த தைரிய வாக்கும் தமிழ் மக்களுக்குப் புதியதோர் வீர எழுச்சியை விளைவித்தது! வெற்றிக்கு அவரது வாக்கே வித்தாக அமைந்தது! - வியப்பாகவும் அது திகழ்ந்தது.

# 30. கோபுரம்தான் அரசுச் சின்னம்: பண்டித நேருவிடம் போராட்டம்!

1947-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னை மாநிலத்தில், தமிழ்நாட்டுக் காந்தி என்று மக்களால் போற்றப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சர் ஆனார். அவர் தலைமையில் அமைச்சரவையும் உருவானது.

1948-ஆம் ஆண்டிலும், சென்னை மாநிலத்திற்குரிய முதல்வர் தேர்தல் நடைபெற்றது. திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள், திரு. இராஜாஜி அவர்கள் ஆசியுடன் தலைவர் தேர்தலில் போட்டியிட்டார்.

ஆனால், அந்தத் தேர்தலில் முன்னாள் முதல்வரான திரு. டி. பிரகாசத்துக்கும் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கும் இடையேதான் கடுமையான போட்டி இருந்தது. இறுதியில், ஓமந்தூர் இராமசாமி அவர்களே முதல்வராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்!

ஓமந்தூர் திரு. ரெட்டியார், ஓமந்தூர் பகுதியில் கிராமம் மணியக்காரராக, இன்றைய வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேஷன் அலுவலரைப்போல, அதிகாரியாகப் பணியாற்றி சிறந்த மக்கள் செல்வாக்குப் பெற்றவர் ஆவார்.

அவர், திண்டிவனம் வால்டர் ஸ்காட் உயர்நிலைப் பள்ளியிலே படித்தவர். காஞ்சி சங்கர மடத்தின் 68-வது சங்கராசாரியாரான ஜகத்குரு சந்திரசேகரேந்திர சுவாமிகளும், தேனாம்பேட்டையிலே இன்றும் நடைபெற்றுவரும் எஸ். ஐ.இ.டி என்ற மகளிர் கல்விக் கோட்ட உரிமையாளருமான நீதிபதி திரு. பஷீர் அகமத் சையத் என்பவரும் திரு. ரெட்டியாருடன் படித்த மாணவர்களாவர்.

திரு. காந்தியடிகளால் துவக்கப்பட்ட வேதாரணிய உப்புப் போராட்டத்தில் மூன்றாம் நாள் போரின் தளபதியாகப் போரிட்டுக் கைதான காங்கிரஸ் தியாகியாகத் திகழ்ந்தார் ரெட்டியார்!

தலைவர் காமராஜ் அவர்களுக்கு முன்பு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பணியாற்றிய அனுபவம் உடையவர் அவர்!

தனது இறுதி மூச்சுப் போகும்வரை, தான் வளர்த்த காங்கிரஸ் கட்சிக்காகவே உழைத்து உயிர் விட்ட கொள்கைக் கோமான் தலைவர் காமராஜரைப் போன்று ஓமந்தூர் ரெட்டியார், எந்தவிதக் கட்சி விரோத அக்கிரமங்களோடும் ஒத்துப்போகாத, தெரியாத ஒழுக்க சீலர்! நேர்மையின் பிறப்பிடம். அதனால்தான் அவர் தமிழ்நாட்டுக் காந்தி என்று தமது கட்சிக்காரர்களாலும் - பொதுமக்களாலும் புகழப்பட்டார்.

1946-ஆம் ஆண்டில், சட்டப் பேரவைக் காங்கிரஸ் கட்சித் தேர்தலில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கும் - பழம் பெரும் ஆந்திர மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தேச பக்தரும் - ஆந்திர கேசரி என்று தெலுங்கு மாநில மக்களால் போற்றப்பட்டவருமான பிரகாசம் அவர்களுக்கும் மிகக் கடுமையான தேர்தல் போட்டி நடந்தது.

அப்போது, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தமிழக சட்ட சபையின் மேலவை உறுப்பினராக இருந்தார்.

ரெட்டியாரைத் தலைவர் காமராஜ் முதல்வர் தேர்தலில் நிற்க வைத்தார்! ஆதரித்தார்! பிரகாசம் அவர்களை இராஜாஜி நிற்க வைத்தார் - ஆதரித்தார்! முடிவு? பிரகாசம் அவர்கள் 73 வாக்குகளை மட்டுமே காங்கிரஸ் கட்சியிலே பெற்றுத் தோற்றுப் போனார்!

ஓமந்தூர் இராமசாமி அவர்களுக்குத் தலைவர் காமராஜ் ஆதரவு தந்ததால், அவர் 166 காங்கிரஸ் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

1947-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் நாள், சென்னை மாநிலத்தின் இரண்டாவது முதல் மந்திரியாக ரெட்டியார் தேர்வானார்!

ரெட்டியார் அவர்களுக்கு ஆங்கில மொழியறிவு குறைவு! எவரேனும் ஆங்கிலத்தில் பேசினால் புரிந்து கொள்ளும் சக்தி பெற்றவர்! எந்த விவரங்கள் ஆங்கிலத்தில் வந்தாலும் படித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவர்!

ஆனால், அவர் தமிழிலோ - தெலுங்கிலோ சரளமாகப் பேசுவதைப் போன்று, அவ்வளவு திறம்பட ஆங்கிலத்திலே பேச இயலாதவர்!

அப்போது சென்னை மாநில ஆளுநராக இருந்தவர் மாண்புமிகு சர். ஆர்ச் பால்ட்னை என்ற ஆங்கிலேயராவார்.

அவரைச் சந்தித்துப் பேச ரெட்டியார் செல்லும் போதெல்லாம், மொழிச் சிக்கல் உருவாகாமல் இருக்க திரு. சி.சுப்பிரமணியம் அவர்களை உடன் அழைத்துச் செல்வார்.

முதல்வர் ஓமந்தூராரின் சட்டமன்றத்துறை தலைமைச் செயலாளராக சி.சுப்பிரமணியத்தை நியமிக்கலாம் என்று ரெட்டியாருக்கு அவருடைய நண்பர்கள் பரிந்துரைத்தார்கள். தில்லி அரசியல் நிர்ணய அவையிலே இருக்கும் உறுப்பினர் பதவியை இழக்கவும், அதே நேரத்தில் தனது வழக்குரைஞர் தொழிலைத் துறக்கவும் சி. சுப்பிரமணியம் விரும்பாததால், ரெட்டியார் கருத்துக்கு அவர் இணங்க மறுத்துவிட்டார்.

அப்படியானால், தங்களுக்கு முழு நம்பிக்கையுள்ள ஒருவரை எனது தனிச் செயலாளர் பதவிக்குப் பரிந்துரைக்குமாறு ரெட்டியார் சுப்பிரமணியத்தைக் கேட்டுக் கொண்டார்.

கல்லூரியில் தன்னுடன் ஒன்றாகப் படித்தவரும், அப்போது நீதித் துறையில் துணைநிலை அதிகாரியாக, மாவட்ட முன்சீப் என்ற பதவியிலே பணியாற்றிக் கொண்டிருந்தவரும், எதிர்காலத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்ற வருபவருமான ஏ. அழகர் சாமி என்பவரை சி.சுப்பிரமணியம் ரெட்டியாருக்கு சிபாரிசு செய்தார்.

ரெட்டியார், சுப்பிரமணியம் கருத்தையறிந்து தனது தனிச் செயலாளர் பதவிக்கு திரு அழகர்சாமியை நியமித்துக் கொண்டார்.

இராஜாஜி அவர்கள் ஒருநாள் அழகர்சாமியைச் சந்தித்தபோது, "நீங்கள் என்ன ரெட்டியார் வகுப்பா?" என்று கேட்டார்!

"நான் ரெட்டியார் இல்லை, கம்ம நாயுடு வகுப்பைச் சேர்ந்தவன்" என்று அவர் இராஜாஜிக்குப் பதில் கூறினார்!

"நீங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்தவரா?" என்று, மீண்டும் கேட்டார் இராஜாஜி!

"இல்லை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவன்" என்றார் அழகர்சாமி!

"அப்படியானால், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரை உங்களுக்குப் பல ஆண்டுகளாகத் தெரியுமா?"

"இல்லை" என்றார் அழகர்சாமி!

"ரெட்டியார் ஏன் உங்களைத் தன்னுடைய தனிச் செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்?" என்று கேட்டார் இராஜாஜி!

''இந்த கேள்வியை நீங்கள் சி.சுப்பிரமணியத்திடம் கேட்க வேண்டும்'' என்றார் அழகர்சாமி.

''சி. சுப்பிரமணியம்தான் உங்களுக்கு சிபாரிசு செய்தாரா? அப்போது அவரது நியமனம் சரியாகத்தான் இருக்கும்!'' என்று கூறிவிட்டுச் சென்றார் இராஜாஜி.

அதைக் கண்ட அழகர் சாமி, இராஜாஜியின் அரசியலாய்வு நுட்பத்தை வியந்து திகைத்தார்!

## ஓமந்தூர் ரெட்டியார் பணிகள்

ஓமந்தூரார் ஆட்சியில் விவசாயத்துறையும் சிறப்புற்றது; உழவர் பெருமக்களும் மிகச் சிறப்புப் பெற்றார்கள். காரணம், அவரே ஒரு விவசாயி! கிராம மணியக்காரர்!

★ எந்தக் கோப்பின் அலுவலானாலும் சரி, நன்றாக விசாரி, கணக்கு எடு, மீண்டும் பரிசீலனை செய்து பார்'' என்றே நுணுக்கமாக அதில் எழுதுவார்!

★ தமிழகம் முழுவதும் அவர் தம் ஆட்சியில், 11,701 நியாய விலைக் கடைகளைத் திறந்து மக்களுக்குரிய உணவுப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்தார்!

★ 10 ஆயிரம் பள்ளிகளில், காய்கறித் தோட்டங்கள் தோன்றிட அவர் உத்தரவிட்டார்.

★ தொழிற்சாலைகளை அமைத்திட, நன்செய்ப் பயிர் விளையும் நிலங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்தார்!

★ சோமசைலம் என்ற திட்டம் ஒன்றை உருவாக்கி, அதன் வாயிலாகக் கிருஷ்ணா நதி - பெண்ணாறு இரண்டு நதிநீர்களையும் இணைத்து, சென்னைக்கு குடிநீர் வழங்க முதன்முதலில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தவரே திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்தான்!

★ அவருக்குப்பிறகுதான், மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராக வந்தபின்பு, அதே நேரத்தில் ஆந்திர மாநில முதல்வராக திரு. என்.டி. இராமராவ் முதல்வரானதும் அவருடன் கலந்துரையாடி, சென்னைக்கு கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கும் திட்ட ஒப்பந்தம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

★ தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், அதன் சிறப்புக்களைத் தரணிக்கு எடுத்து விளக்குவதற்காகவும், தமிழ்க் களஞ்சியம்

என்ற நூல்தொகுதிகளை வெளியிடும் பேறு, ஓமந்தூரார் ஆட்சிக்குத்தான் கிடைத்தது.

★ தமிழக அரசுச் சார்பாக, அரசவைக் கவிஞர் என்றதோர் பதவியைப் பண்டை மன்னர்களைப் போல உருவாக்கி, தமிழுக்குப் பெருமை வழங்கும் அந்தப் பதவியிலே கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை என்ற தேசியக் கவிஞரை அமரவைத்து, தேசபக்த தியாக சீலத்திற்கு சிறப்புத் தேடித்தந்து பாராட்டியவர் திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்!

★ தமிழ் மொழியில் சிறந்த நூற்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை உருவாக்கியவர் ஓ.பி. ஆர். அவர்கள்!

★ தேசிய கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய நூற்களை அரசு சார்பாகப் பதிப்பிக்க எல்லா ஏற்பாடுகளை மட்டும் செய்தவரல்ல அவர்! அந்த நூற்களை எல்லாம் பொது மக்களது சொத்தாக மாற்றிய பெருமை ரெட்டியாருக்குண்டு!

★ தமிழகத் திருக்கோயில்களில் தமிழ் மணம் கமழும் செயல்கள் அனைத்தையும் செய்திட, அறங்காவலர்களுக்கும் - இந்து அறநிலையத் திருக்கோவில் துறைக்கும் தக்க ஆணை பிறப்பித்தவர் அவர்!

★ பிரதமர் ரெட்டியார் சைவ சமயத்தின்பால் தணியாத பற்றுக்கொண்டவர்! சைவம் வளரத் தனது உழைப்பையும் - சிந்தனையையும் - வழங்கியவர்!

★ அதனால், தமிழ்நாட்டு அரசுக்கு இலச்சினை ஒன்றை உருவாக்கிய நேரத்தில், தமிழகத்தின் தெய்விகப் பண்பாட்டு ஒழுக்கங்களை ஓம்பும் திருக்கோவில் உருவத்தைச் சின்னமாகத் தேர்ந்தெடுத்து அதை நிலைநாட்டியவர் திரு. ரெட்டியார் அவர்கள்!

★ ஓமந்தூராரின் அரசுச் சின்னத்திற்கு அனுமதி தராமல் நிறுத்தி வைத்து, 'பாரத அரசு சமயச் சார்பற்ற - மதச் சார்பற்ற அரசு! எனவே, இந்தக் கோபுரத்தை அரசுச் சின்னமாக அமைக்க வேண்டாம். அதைக் கை விடுக' என்று இந்தியப் பிரதமர் திரு நேரு அவர்கள் தமிழக முதல்வரான திரு ஓமந்தூரார் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

★ பிரதமர் ரெட்டியார், நேரு அவர்களுக்குப் பதில் எழுதும்போது, மகாத்மா காந்தியடிகளின் நண்பரான திரு. சி. எஃப். ஆன்ட்ரூஸ் மதகுருவின் ஆதாரத்துடன் தக்க விளக்கத்தோடு குறிப்பிட்டார்!

★ திருப்பத்தூர் நகரிலே ஆன்ட்ரூஸ் கட்டிய கோபுர தேவாலயம் உள்ளதையும் ரெட்டியார் சுட்டிக் காட்டினார்!

★ ''தமிழகத்தின் தொன்மையான இறை வடிவச்சின்னம் கோபுரம் சின்னம்! அந்தச் சின்னம் தான் மெட்ராஸ் ஸ்டேட்டின் அரசு சின்னம் என்பதை வலியுறுத்தியும் - வற்புறுத்தியும் எழுதிப் போராடி, கோபுர சின்னத்தை நில நாட்டியவர் ரெட்டியார்.

★ பிரதமர் ஓமந்தூரரார் அத்துடன் நிற்கவில்லை. அதைவிட ஒருபடி மேலே சென்று, கோபுரம் சின்னத்தின் மேலே ''சத்தியமேவ ஜயதே!'' என்ற உபநிடத வாசகத்தையும் பொறித்துக் காட்டினார்!

இந்த நினைத்தற்கரிய சிந்தனை - இந்திய நாட்டிலேயே, தமிழ்நாட்டுப் பிரதமரான திரு ரெட்டியார் அவர்களுக்குத்தான் தோன்றியதே தவிர, பிற எந்த அமைச்சர் மூளையிலும், மின்னலிடவே இல்லை!

ஓமந்தூர் இராமசாமி அவர்களுக்கு மட்டும் இந்தப் பண்பாட்டுணர்வு எவ்வாறு முகிழ்த்தது? அதற்குரிய அடிப்படைக் காரணம் ஏதாவது உண்டா?

**“வேதாந்த நெறியை மேலை நாட்டிலே பரப்பி பெரும் வெற்றிப் பரணியுடன் வருகை தந்த சுவாமி விவேகானந்தரது புனிதப் பாதத்தூளி - இந்திய மண்ணில், முதலில் பட்ட இடம் என்பதன் நினைவாக, மன்னர் சேதுபதியால் நிர்மாணிக்கப்பட்டது இந்த நினைவுச் சின்னம்.”**

- என்ற வாசகங்கள் பதித்த வெள்ளைப் பளிங்குக் கல் ஒன்று இராமநாதபுரம் சேதுபதி மன்னரது துறைமுகமான பாம்பன் என்ற இடத்தில் 20.01.1897 அன்று நிறுவப்பட்டது.

''ஆன்மிகத் தத்துவங்களின் திரு உருவமாக நடமாடிய நரேந்திரர் சுவாமிகள் தமிழகம் மண்ணிலே முதலடியை, முதன் முதலாக விவேகானந்தராக அடியெடுத்து வைத்தபோது அந்த நினைவுக்கல் நாட்டப்பட்டது.

''சுவாமி விவேகானந்தருடைய வருகை, பாஸ்கர சேதுபதி மன்னருரை எல்லையில்லாத இன்பக் கடலில் திளைக்கச் செய்தது என்பதை இந்த நினைவுச் சின்ன வாசகம் நினைவூட்டுவதாக இன்றும் உள்ளது.

சேதுபதி மன்னர் தமது பரிவாரங்களுடனும், பக்த கோடிகளுடனும் திரண்டு வந்து மிகப்பெரிய வரவேற்பு விழாவை அவருக்கு நடத்தினார்.

''வாய்மையே வெல்லும்'' என்ற பொருளிலே வரும் ''சத்தியமேவ ஜயதே'' என்ற உபநிடத வாசக வாக்கினை மங்கலச் சொல்லாக அன்று தேர்வு செய்தார் மன்னர் சேதுபதி.

சேதுபதி மன்னர் கொண்டாடிய இந்த வரவேற்பு விழா நிகழ்ச்சிக்கு ஐம்பது ஆண்டுகள் கழித்து, 1947-ஆகஸ்டு - 15 ஆம் நாளன்றுதான் நமது இந்திய மண்ணுக்குரிய விடுதலை கிடைத்தது!''

''இந்தியக் குடியரசும், தமிழக அரசும் தங்களது அரசுச் சின்னங்களில், பாஸ்கர சேதுபதி மன்னர் தேர்ந்தெடுத்த அதே உபநிடத வாசகத்தையே மங்கலச் சொற்களாகத் தேர்வு செய்தன என்றால், தமிழ் மண்ணின் ஆன்மிக - தெய்விக - பண்பாட்டுச் சிந்தனையின் ஊற்று மன்னர் பாஸ்கரருக்கு முன்பே தோன்றியதின் சிந்தனையையும் - சீலத்தையும் என்ன பெயரிட்டுப் பெருமைப் படுவதோ...!''

''செம்மையான சிந்தனையையும் - செயலையும் எழுச்சி கொள்ளச் செய்ய, வாய்மையின் வலிமையை விட வேறு என்ன இருக்கிறது என்பதைக் கண்டறிந்த கல்விக் கடல் அல்லவா திரு பாஸ்கர மன்னர்?''

மன்னர் பாஸ்கரருக்கு முகிழ்த்த அதே ஆன்மீகப் பண்பு, முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கும் மின்னலிட்டதால் தான், ''சத்தியமேவ ஜயதே' என்ற அதே உபநிடத வாக்கைத் தமிழக அரசுச் சின்னமான கோபுரத்தினைச் சுற்றிப் பொறித்தார்!

பிரதமர் ஓமந்தூரார், மன்னர் பாஸ்கரரின் சிந்தனையை விட சற்று மேலே சென்று, தமிழர்களின் உயிர் - உடல் உடைமைபோல் எண்ணப்பட்டு வழிபட்டு வரும் தொன்மையான ஆன்மிகச் சின்னமான கோபுரத்தையே அரசுச் சின்னமாக நிலைநிறுத்தினார் இந்தியப் பிரதமர் நேருவிடம் போராடி!

கோபுரம், இவ்வாறு ஒரு தமிழ் வரலாற்றைப் பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் நிகழ்ச்சியல்லவா?

1967-ஆம் ஆண்டு, மக்களால் காங்கிரஸ் ஆட்சி மாற்றப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் நிர்வாகத்தின் கீழே வந்து, தமிழ்நாட்டு மக்களாட்சி மாண்புபெற்றது!

அறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சர் ஆனதும், மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை மாற்றித் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார்.

இதற்கும் அடிப்படைக் காரணம், சங்கரலிங்கனார் என்ற ஒரு காங்கிரஸ் தியாகி. தமிழ்நாடு என்ற பெயரைத் தமிழ் நாட்டுக்குச் சூட்ட வேண்டும் என்று அறுபத்தைந்து நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டார்.

அந்தத் தமிழன் தியாகத்தை மதித்த அறிஞர் அண்ணா அவர்கள் - செத்தவர் காங்கிரஸ்காரர்தானே என்று தட்டிக் கழிக்காமல், 1967 -ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கு முன்பே, தமது தேர்தல் அறிக்கையில், ''நான் ஆட்சி அமைத்தால் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவேன்'' என்று அறிவித்தார்!

அதற்கேற்ப, மக்கள் அவரிடம் ஆட்சியை அளித்ததும், சங்கரலிங்கனார் கனவை நனவாக்கிட, தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டி தமிழ் மக்களின் நீண்ட நாள் அவாவை நிறைவேற்றிக் கொடுத்தார்!

அடுத்தபடியாக, பாஸ்கர சேதுபதி மன்னர், முதல்வர் ஓமந்தூர் இராமசாமிரெட்டியார், கனவுகளையும் அண்ணா அவர்கள் நனவாக்கி நாட்டுக்குக் காட்டினார்.

'சத்தியமேவ ஜயதே' என்று சேதுபதி மன்னரின் உபநிடத வாசகத்தை, முதல்வர் ஓ.பி. ஆர். அவர்களின் உபநிடத வாக்கை, அப்படியே தமிழாக்கி ''வாய்மையே வெல்லும்'' என்ற சொற்றொடர்களால் கோபுர சின்னத்தைச் சுற்றிப் பொறித்து அறிஞர் அண்ணா பெருமைப்படுத்தினார்.

வடமொழியிலே கோபுரத்தைச் சுற்றி அச்சடிக்கப்பட்டிருந்த ''சத்தியமேவ ஜயதே'' என்ற வாசகத்தை, ''வாய்மையே வெல்லும்'' என்று தமிழில் மட்டுமே அச்சடிக்க ஆணையிட்டவர் அண்ணா!

★ ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல்வராக ஆட்சி செய்தபோது, ஊழல் - இலஞ்சம் என்ற எண்ணங்களுக்கே இடம் கொடாமல், எவருக்கும் எழாமல் நாட்டை நடத்திக் காட்டினார்!

★ தலைவர் காமராஜ் அவர்களாலும் - எதிர்க்கட்சியிலே இருந்த அண்ணா அவர்களாலும், 'தென்னகத்துக் காந்தி, ஒழுக்க சீலர், நேர்மையாளர்'' என்று பாராட்டப்பட்ட சீரிய மனிதராக ஓமந்தூரார் தமது ஆட்சியிலே திகழ்ந்தார்!

★ ஆட்சியிலே பணியாற்றிக் கொண்டிருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மேல் ஒருமுறை குற்றச் சாட்டுகள் குவிந்தபோது ரெட்டியார் அவர்களை அழைத்துத் தீர விசாரித்து, உண்மையை உணர்ந்தபோது, அவர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்!

★ டில்லியிலே பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்களுக்கு இந்த விவரம் தெரிந்தபோது, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் விவகாரங்களில் ''அவசரம் காட்ட வேண்டாம்'' என்று அவர் கூறினார். அதற்கு, பிரதமர் ரெட்டியார் ''இது மாநில நிர்வாகப் பிரச்னை'' என்று துணிந்து கூறிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்கள் - முக்கியமானவர்கள் தலைவர்கள் எல்லாம் ஆட்சி நிர்வாகத்தில் குறுக்கீடுகள் செய்தபோது, ''காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்திட ஆட்சி உதவ வேண்டும் என்ற கருத்தை ஏற்க மாட்டேன்'' என்று பகிரங்கமாகவே, பாரபட்சமின்றி, வெட்டொன்று துண்டிரண்டாகவே கண்டித்தார் ஓமந்தூரார்!

இதனால், காங்கிரஸ் கட்சிக்கும் - அதன் தலைவர்கள் சிலருக்கும் ரெட்டியார் மீது ஒருவித எரிச்சலுணர்வு ஏற்பட்டது - ஆத்திரம் ஆர்ப்பாட்டமாகியது.

★ **''சட்டசபை உறுப்பினர்கள், அரசு நிர்வாகத்தில் தலையிட்டு எதற்காவது சட்டத்திற்கு முரணாகப் பரிந்துரைகளைச் செய்தால், அவற்றைப் புறக்கணித்து விடுங்கள்! மக்களிடம் உள்ள குறைகளைக் கேட்டு அவற்றில் நியாயமிருந்தால் உடனே நிறைவேற்றுங்கள்.''**

- என்று, அரசுத் துறை அதிகாரிகளுக்கு ஓமந்தூரார் கட்டளையிட்டார்!

''இந்த ஆணை, காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களின் தன்மானத்தைப் பாதித்தது. சட்டசபை உறுப்பினர்களின் கடமைகளைப் பாதிக்கின்றது'' என்று கூறி, காங்கிரஸ் கட்சி திரு. ரெட்டியார் அவர்களைப் பணிய வைத்திட முயன்றது!

அதற்குப் பதிலடியாக, ''நான் இப்படித்தான் எனது ஆட்சியின் நிர்வாகத்தில் தொடர்ந்து பணியாற்றுவேன். என்னை முதல்வர் பதவியேற்கச் சொன்னபோது, எனது நிர்வாகத்தில் எவருடைய தலையீடும் இருக்கக்கூடாது என்று கூறித்தான் முதல்வர் பதவியை ஏற்றேன்.''

''எனது சீர்திருத்தம் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், வேறு ஒரு தலைவரைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன் அல்லவா?'' என்று கேட்டார்!

அதனால், 1947-முதல் 1949-ஆம் ஆண்டு வரை மட்டுமே, அதாவது இரண்டாண்டு காலம்வரை - அவர், சென்னை மாகாணத்தின் முதல்வராகப் பணியாற்றிடும் நெருக்கடி நிலை உருவாயிற்று.

தலைவர் காமராஜ் அவர்களும், ஓமந்தூராரின் இந்த ஆணைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், 6.4.1949-ஆம் ஆண்டு வரை ரெட்டியார் முதல்வர் பதவியிலே பணியாற்றிவிட்டு, அதற்குப் பின்பு அவரே அப் பதவியை விட்டு விலகிவிட்டார்!

இதற்குப் பிறகு, லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், இந்தியப் பிரதமராக வந்தபோது, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்குக் கவர்னர் பதவியை வழங்கிட முன் வந்தார்.

சாஸ்திரி அவர்கள் அப்போது, மத்திய நிதியமைச்சராகப் பணியாற்றிய டி.டி. கிருஷ்ணமாசாரியாரிடம் கூறி, தூது அனுப்பி வைத்தார் ரெட்டியார் அவர்களிடம். கடிதமும் எழுதினார் அவர், ரெட்டியார் அவர்களுக்கு.

ஆனால், சந்தர்ப்பவாத பதவிகளை ஏற்றிட மனமற்ற ஓமந்தூரார் எளிமையின் பிறப்பிடமாக வாழ்ந்து - நெருப்பைப் போலப் பதவியிலே பணியாற்றி, ஊழலை நெருங்கவிடாமல் விரட்டி, சத்திய வாழ்வுப் பதவியாளராகத் திகழ்ந்த ரெட்டியார், கவர்னர் பதவியைத் தமக்கு வேண்டாம் என்று ஏற்க மறுத்து விட்டார்! கண்டதுண்டா வரலாறு இத்தகைய ஒரு கண்ணியவானை?

சிதம்பரத்திலே உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் பட்டமளிப்புவிழாவில் உரை நிகழ்த்த முதல்வராக இருந்தபோது திரு. ரெட்டியார் ஒப்புக் கொண்டார்!

அந்தப் பல்கலைக்கழகம் அவருக்கும் டாக்டர் பட்டமளிக்க முன்வந்தது. அதற்கு அவர், ''பட்டம் பெறுபவர்களுக்காக உரையாற்ற வந்தவனே, தனக்கென ஒரு பட்டம் பெறலாமா? ஊரிலே சிரிப்பார்கள்'' என்று பதில் கூறி, தனக்கு வழங்கவிருந்த டாக்டர் பட்டத்தை வேண்டாம் என்று மறுத்துவிட்டார்! இப்படி ஒரு மாநில முதல்வரை வரலாறு கண்டதுண்டா?

காங்கிரஸ் கட்சிக்கு எவ்விதக் களங்கத்தையும் உருவாக்காமல், காங்கிரஸ்காரர்களின் எதிர்ப்புக்கும் - தனது ஏணி போன்ற பதவி உயர்வுக்கும் இடந்தராமல், மகாத்மா காந்தியடிகளின் இலட்சியத்திற்கும் ஊறு உருவாக்காமல், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வர் பதவியிலிருந்து விலகி, அவர் மரணமடைந்த 1970 - ஆம் ஆண்டுவரை அரசியல் துறவியாகவே வாழ்ந்து வந்தார்!

# 31. இந்திய விடுதலைச் சாசனம்! காந்தியடிகள் கண்டனம்!

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்பு, 1945-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரிட்டன் நாட்டின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

போர்க்காலப் பிரதமராகப் பணியாற்றிய வின்ஸ்டன் சர்ச்சிலின் கன்சர்வேடிவ் கட்சி தேர்தலில் தோற்றது.

தொழிற் கட்சி பிரிட்டனில் வெற்றி பெற்றது. பிரதமரானார் அட்லி. அதனால், இந்தியா இனி விடுதலை பெற்றுவிடும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன!

''எந்த நாட்டையும் இனிமேல் அடிமை ஆதிக்கத்தில் வைத்திருக்க முடியாது'' என்ற மாவீரன் இட்லரின் மாண்புமிகு கருத்தை அகில உலகமும் உணர்ந்தது. குறிப்பாக, பிரிட்டனும் அந்நிலையை முழுமையாகப் புரிந்து கொண்டது.

பிரிட்டனும், புவன முழுவதும், அன்று உணர்ந்து கொண்ட அதே உணர்வைத்தான், உலகை உலுக்கிப் போர்க்களம் கண்ட இட்லரும் அன்றே எடுத்துரைத்தான் என்று, செர்மானிய நாடாளுமன்றத்தில் ரிச் ஸ்டேக் என்பவர் அப்போது வாதாடிக் கொண்டிருந்த காலம்!

" The main knot of the Imperial chain, that binds arround the globe is at London."

" I will smash the knot to pieces and release the world from colonialism putting an end of imperialism."

"May god bless me with success; and forgive me for the sin: I am going to commit to-wards this great cause."

This is my Mission

Adolph Hitler

''மேதினியைச் சுற்றி வளைத்துக் கட்டிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியச் சங்கிலியில், மிக முக்கியமான முடிச்சு, இலண்டன் மாநகரிலே இருக்கின்றது.''

''அந்த முடிச்சை அடித்து நொறுக்கி உடைத்துத் தள்ளி, அவனியைக் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, ஏகாதிபத்தியத்திற்கு ஒரு முடிவு கட்டுவேன். இது எனது இலட்சியம்.''

''இந்த இலட்சியம் நிறைவேற என்னைக் கடவுள் ஆசீர்வதிக்க வேண்டும். இந்த பெரும் இலட்சியத்தை நிறைவேற்றிடும்போது உருவாகும் பாவங்களுக்கும் இறைவன் என்னை மன்னிப்பாராக!

-என்று உலகச் செவிகளுக்கு மாவீரன் இட்லர் அன்று உணர்த்திய அந்த விடுதலைப் பண் ஒலியை, செர்மன் நாடாளுமன்றம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அத்தகைய ஓர் அடிமை ஆதிக்கச் சேற்றிலே அகப்பட்டுத் தத்தளித்து கோர உருவமாக உழன்று கொண்டிருக்கும் இந்தியாவிற்கும் சுதந்திரம் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை ரேகைகள் உலக அரங்கின் அரசியல் சூழல்களிலே அரும்பின.

அதே நேரத்தில், இந்திய வைஸ்ராயாக இருந்தவர் வேவல் பிரபு. இந்தியத் தலைவர்கள் எல்லாம், அப்போது அரசியல்விடுதலை பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார்கள். மிக முக்கியமான தலைவர்கள் எல்லாம் தீவிரமாகச் செயல்பட்டார்கள்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையும் - ஜனாப் ஜின்னாவின் முஸ்லிம் லீக் கட்சியும் இணைந்து, இடைக்கால ஆட்சியை அமைக்கலாம் என்ற ஒரு கருத்து எழுந்தது.

ஆனால், முஸ்லிம் லீக் கட்சி, அந்தத் கூட்டணி ஆட்சியில் சேர்ந்திட மறுத்து விட்டது. அதனால், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியிடமே ஆட்சியை ஒப்படைத்து விடலாம் என்று வைசிராய் வேவல்பிரபு நினைத்தார்.

ஜனாப் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அப்போது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இடைக்கால அரசை அமைத்திட பண்டித ஜவஹர்லால் நேருவை, 1946-ஆம் ஆண்டு ஆகஸ்டு 12-ஆம் நாள் வருமாறு அவர் அழைத்திருந்தார்!

அதைக் கண்ட ஜனாப் ஜின்னா, அக்டோபர் 15-ஆம் நாள் இடைக்கால ஆட்சியிலே தாமும் சேர்வதற்குச் சம்மதித்தார்!

பாகிஸ்தான் என்ற ஒரு நாட்டை இந்தியாவிலே இருந்து கூறுபோட இதை ஒரு வாய்ப்பாகக் கருதியே, அவர் இடைக்கால ஆட்சியிலே பங்கு பெற எண்ணினார்.

இந்தியாவில் கூட்டணி அமைச்சரவையை ஏற்படுத்துவதே இடைக்கால அரசின் அடிப்படைக் கொள்கை. ஆனால், முஸ்லிம் லீக் கட்சிக் கூட்டுப்பொறுப்பு ஆட்சியை இந்திய தேசியக் காங்கிரஸ் ஏற்க மறுத்தது.

ஜனாப் ஜின்னாவின் கருத்தை அறிந்த பண்டித ஜவஹர்லால் நேரு, ''இந்திய தேசிய மகா சபை இனிமேல் பொறுமையை ஏற்காது; தொடர்ந்து அது பெரிய அளவில் போராட்டம் நடத்தும்'' என்று அறிவித்தார்.

இந்திய அரசியல் நிர்ணய சபை வெற்றிகரமாக அமைய வேண்டும் என்பதால், இந்திய வைசிராய் வேவல்பிரபு, பண்டித நேரு, ஜனாப் ஜின்னா, சீக்கிய சமுதாயப் பிரதிநிதி பலதேவ சிங் ஆகிய அனைவரையும் இங்கிலாந்துக்குப் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு பிரதமர் அட்லி அழைத்தார்!

ஜனாப் ஜின்னாவின் பாகிஸ்தான் பிரிவினை வாதப் பேச்சுக்களினால், இலண்டனில் நடைபெற்ற மேற்கண்டவர்களின் கலந்துரையாடல் வெற்றியை உருவாக்கவில்லை. அதனால், பண்டித நேரு இலண்டனிலிருந்து திரும்பி விட்டார்.

தில்லியிலே உள்ள நாடாளுமன்றத்தின் மத்திய அரங்கில் அரசியல் நிர்ணய சபை கூடியது. சென்னை மாகாணத்திலே இருந்து தலைவர் காமராஜ், என். கோபாலசாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமிஐயர், டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன், டி.டி. கிருஷ்ணமாசாரியார், சி. சுப்பிரமணியம் ஆகியோர் அரசியல் நிர்ணய சபை உறுப்பினரானார்கள்.

ஆசாரிய கிருபளானி, திருமதி. சரோஜினி நாயுடு, சர்தார் வல்லபாய் படேல், பண்டித நேரு ஆகியோர் அனைவரும் வருகை தந்திருந்து, அந்த மத்திய சபை நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள்.

சச்சிதானந்த சின்ஹா அரசியல் நிர்ணய சபையின் மூத்த தலைவராக இருந்ததால், அவர் அந்த அவைக்குத் தலைமை வகித்தார்.

**''நாம் அனைவரும் தொலைநோக்குடன் செயல் பட வேண்டும். இல்லாவிட்டால் அழிந்து விடுவோம்.''** என்று, சின்ஹா அவையை எச்சரித்தார். பின்னர், உறுப்பினர் பதவிப் பிரமாணம் களும் நடந்தன.

பதவிப் பொறுப்புகளை எடுத்துக் கொண்ட பின்பு, இங்கிலாந்திலே பிரதமராக இருக்கும் அட்லி பிரபு அவர்களுக்கு,

இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபு ஒரு கடிதம் எழுதினார்! அது, இது!

"Constitution Drafting works completed, and is accepted by all cabinet members, Now, India can be ruled, not from India, But from England."

**"இந்திய அரசியல் சாசனம் எழுதப் பட்டு அதன் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. இடைக்கால அமைச்சர்களும் பதவிப் பிரமாணம் எடுத்து விட்டார்கள். இந்தியாவை இனி ஆட்சி புரிய முடியும் - இந்தியாவிலே இருந்து அல்ல - இலண்டன் மாநகரிலே இருந்து கொண்டே!"**

- என்ற, ஒரு மர்மமான, குழப்பமான கடிதத்தை அட்லி பிரபுக்கே எழுதிவிட்டார் மவுண்பேட்டன் பிரபு! இந்தக் கடிதம் அன்றைய அரசியலிலே ஒரு கலவரத்தை உருவாக்கி விட்டது!

இந்திய வைசிராய் அலுவலகத்திலே இருந்து 14.7.1947 அன்று மற்றோர் அறிக்கையும் வெளி வந்தது! அதில்...,

***"Under the powers confirmed upon me by Article 9-A of the Indian independence Act of 1947."***

***"I here by order for the creation of two Dominions, One as Pakistan and another as Hindustan. Other - wise called India. This will come inforce forth - with."***

***"India Independence Act of 1919, 1935 will apply this Act also."***

***- Extra ordinary Gazette of India, 14.7.1947***

***"நான் இங்கே இரண்டு வகையான டொமினியன் தகுதி பெற்ற நாடுகளை உருவாக்கிட உத்தரவிடுகின்றேன். ஒன்று பாகிஸ்தான் என்றும் - மற்றொன்று இந்துஸ்தான் -அல்லது இந்தியா என்றும் அழைக்கப்படும். இந்தத் திட்டம் உடனடியாக அமுலுக்கு வருகின்றது.***

***- 1919, 1935 - ஆம் ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்ட சுதந்திரத்தைப் பற்றிய அதே சட்டங்கள்தான் இதற்கும் பொருந்தும்."***

***- என்று, வைசிராய் மவுண்ட் பேட்டன் பிரபு அலுவலகத்திலே இருந்து 14.7.1947 ஆம் நாளன்று வெளிவந்த தனிப்பட்ட இந்திய அறிக்கைக்கு ஏற்பவே, சட்ட திட்டக் குழுவும் அரசியல் சட்டத்தைத் தயார் செய்தது.***

இந்த அறிக்கையைக் கண்ட இந்தியத் தலைவர்கள் மனநிலையும் - காங்கிரஸ் கட்சியும் மிகக் கவலைக்குள்ளாயின. தலைவர்களிலே சிலர், முகம் சுருங்கிக் காணப்பட்டார்கள். அவர்களிலே ஒருவர் திரு. பண்டித ஜவஹர்லால் நேரு. இந்த அறிக்கையைப் படித்த திரு நேரு, வெளியே தலைகாட்ட மிகவும் வெட்கப்பட்டு, தனது வீட்டிற்குள்ளேயே சோகமான சிந்தனையிலே ஆழ்ந்தார்!

அப்போது, இதே அறிக்கையைப் படித்துவிட்டு பண்டித நேருவைப் பார்க்க திரு வல்லபாய் படேல், டாக்டர் இராஜேந்திர பிரசாத், இராஜாஜி, அபுல்கலாம் ஆசாத் போன்றவர்களும் அவர் இல்லத்திற்கு வருகை தந்தார்கள்.

''ஏன் சோகமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்? என்று கேட்டு விவரமறிய விரும்பினார்கள் அவர்கள்!

''நாட்டு மக்களிடம், நாம் இந்திய நாட்டிற்குரிய சுதந்திரத்தைப் பெறப் போவதாக வாக்களித்தோம். அந்த வார்த்தைகளுக்கு முற்றிலும் எதிராக இப்போது டொமினியன் தகுதியுள்ள இரு நாடுகளைத் துண்டு துண்டாக வழங்கப்போகிறோம் என்றல்லவா ஆங்கிலேயர்கள் அறிக்கை விடுத்துள்ளார்கள்! எந்த முகத்தோடு நாம் மக்கள் முகங்களிலே விழிக்கப்போகிறோம்? என்ன நினைப்பார்கள் நம்மைப் பற்றி மக்கள்?''

- என்று, துயரம் தோய்ந்த முகத்தோடு நேரு ஓர் ஏக்கப் பெருமூச்சு விட்டவாறே பேசினார்!

''மக்களிடம் போய், டொமினியன் ஸ்டேட் பெற்றதாக ஏன் கூறவேண்டும்? சுதந்திரம் பெற்று விட்டோம் என்று சொல்ல வேண்டியதுதானே! மக்கள் எதையும் கவனத்தில் வைக்கமாட்டார்கள்'' என்று, பண்டித நேருவைப் பார்த்து இராஜாஜி கூறி அமைதிப்படுத்த, மற்ற தலைவர்களும் நேரு அவர்களைச் சமாதானப்படுத்தினார்கள்!

திரு. மவுண்ட்பேட்டன் பிரபு விடுத்த அறிக்கையைக் கண்டு நேரு என்ன வேதனைப்பட்டாரோ, அதே துயரத்தைக் காந்தி பெருமானும் அடைந்தார்! ''உயிரற்ற விடுதலையின் வெறுமை'' என்று குறிப்பிட்டார்! அதனால், தலைவர்கள் மனங்களிலே மகிழ்ச்சி தாண்டவமாட வில்லை.

''1947 - ஆகஸ்டு 15- ஆம் நாள் கொண்டாடப்படவிருக்கும் விழாக்களிலே என்னால் பங்கு கொள்ள முடியாது'' என்பதை மட்டும் உறுதியாக இறுதியாக அறிவித்துவிட்டுக் காந்தியடிகள் கல்கத்தா மாநகர் சென்று விட்டார் - கவலை தோய்ந்த முகத்தோடு!

# 32. விடுதலை விழா!

# காமராஜ் சபதம்!

1947- ஆகஸ்டு 14-ஆம் நாள் நள்ளிரவு! அரசியல் நிர்ணய அவை உறுப்பினர்கள் அனைவரும் இரவு 11 மணிக்கு நாடாளுமன்ற மத்திய அரங்கில் கூடினார்கள்!

திருமதி. சுசேதா கிருபளானி அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கக் கூட்டத்தில், ''வந்தே மாதரம்'' பாடலைப் பாடினார்!

திரு.டாக்டர் பாபு இராசேந்திர பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உரையாற்றினார். இரவு 12 மணி அப்போது!

இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களான, பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் பாபு இராசேந்திர பிரசாத், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், சர்தார் வல்லபாய் படேல், அபுல் கலாம் ஆசாத், சரோஜினி நாயுடு, சி. சுப்பிரமணியம் உட்பட அனைவரும் ஒருவர்பின் ஒருவராக அவரவர் பொறுப்பை ஏற்றபோது அவையிலே வீர சபதம் செய்து கொண்டார்கள்!

## தலைவர் காமராஜ் ஏற்ற சபதம்!

''இந்திய மக்கள், துன்ப - துயரங்கள், தியாகங்கள் மூலம் சுதந்திரத்தை அடையும் இந்தப் புனிதமான நேரத்தில், இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினரான கு. காமராஜ் என்ற பெயர் கொண்ட நான், பழம் பெரும் பாரத நாடு உலக நாடுகளுக்கு இடையே தனக்குரிய இடத்தைப் பெற்ற, மனித குலத்தின் நலம், உலக அமைதி, ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக, முழுமையாகவும் விருப்பத்துடனும் பணி புரிய வேண்டும் என்ற நோக்கத்தை அடைந்திட, இந்தியாவின் - இந்திய மக்களின் சேவைக்காக, என்னைப் பணிவுடன் நான் அர்ப்பணித்துக் கொள்கின்றேன்.''

- என்று, சென்னை மாகாண தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரான திரு. கு. காமராஜ், தனது வீரசபதத்தை டில்லி அரசியல் நிர்ணய சபையிலே பெருமிதத்துடனும் பேரானந்தத்துடனும் ஏற்றுக் கூறினார்.

சென்னை மாநிலப் முதல்வரான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், கே. என் காளா வெங்கட் ராவ், வி.வி. கிரி, ஆர். வெங்கட்ராமன் போன்ற நெருக்கமானவர்களும் - முக்கிய மானவர்களும் இந்த சுதந்திர விழா கொண்டாட்டத்திலே கலந்து கொண்டார்கள்.

சென்னையிலே நடைபெற்ற சுதந்திர தின விழாவிலே, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரான காமராஜ் களிப்புரை யாற்றியபோது,

## காமராஜ் பேசுகிறார்!

''காந்தியின் தியாக வாழ்க்கையைப் பற்றி எத்தனையோ சிறப்புக்களைக் கூறலாம். அவர்தம் வாழ்நாள் முழுவதையும் நாட்டு மக்களின் சேவைக்காகவே தியாகம் செய்தார். அவர், நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார் - அதையும் அஹிம்சை வழியில் பெற்றுத் தந்தார்!

'சத்திய வழியிலே அவர் போராட்டத்தை நடத்தினார்! அவருடைய வாழ்க்கையே சத்திய சோதனைதான்!

'காந்தியடிகளுடைய தொண்டைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். அவர், இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டினார். காந்திஜி, அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்வரை, இந்தியாவின் பாமர மக்கள் தரித்திர நாராயணர்களாய், பேசவும் சக்தியற்றுத் தம் கருத்தை வெளியிடவும் துணிவில்லாமல் நடைப் பிணங்களாக இருந்தார்கள்.

'அண்ணலுக்கு புரிந்தது இது! அவர் சிந்தனையை ஏழை எளிய மக்களின் ஆசையை, அபிலாஷைகளை இதய பூர்வமாக உணர்ந்தார்! அவர்களுடைய விருப்பங்களை அரசியலிலே எதிரொலித்தார்!

'இதனால், நாட்டின் சாதாரண மக்களும் எழுச்சி பெற்றார்கள். அவர்கள் தலை நிமிர்ந்து நடந்தார்கள்! தங்கள் குரல் எதிரொலிக்கப் படுவதைத் தெளிவாகக் கேட்டார்கள்.

'ஆமாம்! அவர்கள் தங்கள் வழிகாட்டியைக் கண்டு பிடித்து விட்டார்கள்! காந்திஜியின் வழியில் அவர்கள் வீர நடைபோட்டார்கள். அதனால் தான் நாடு இன்று சுதந்திரம் பெற்றது.

'காந்தியடிகளால் நாம் பெற்ற பலன்கள் பல. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் நம்மை அச்சமற்றவராக்கினார்!

'நாம் யார்க்கும் குடியல்லோம்' என்று நம்மை உணரச் செய்தார்! 'பழி, பாவம்' தவிர, வேறு எதற்கும் அஞ்சாத உணர்வை

நம்மிடையே ஏற்படுத்தினார். சொந்த வாழ்க்கையிலும், நாட்டின் பொது வாழ்க்கையிலும் தன்னம்பிக்கையை வலியுறுத்தினார்! இந்தத் தன்னம்பிக்கைதான் நமது நல்வாழ்வுக்கான அடிப்படையாகும். சுயராஜ்ஜியம் நிலைத்திருக்க, சுபிட்ச வாழ்க்கை உத்திரவாதம் செய்யப்பட, இந்தத் தன்னம்பிக்கை மிக அவசியமாகும்.

'இவற்றை உபதேசிப்பவராக மட்டும் காந்திஜி இருக்கவில்லை. தம் வாழ்க்கையையே இவற்றுக்கு எடுத்துக் காட்டாகவும் அமைத்துக் காட்டினார். இந்திய நாடு, சுதந்திரம் அடைய வேண்டும் என்ற அவரது எண்ணம், அவருடைய வாழ்நாளிலேயே நிறைவேறிவிட்டது. அதுவரையில், நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

'அவர் எதற்காகச் சுதந்திரம் கேட்டார்? எந்த இலட்சியத்தை ஈடேற்ற அவர் சுதந்திரப் போரை நடத்தினார்? என்பதைத்தான், நாம் எல்லாம் நன்றாக எண்ணியெண்ணி, எண்ணத்தில் நிலைநிறுத்திப் பார்க்க வேண்டும். வேறு எதற்கும் இல்லை. சுகமாக, நல்வாழ்வு வாழத்தானே!

'இந்த நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ வழியில்லை - வயிறார சோறு கிடையாது. போதிய அளவு உடுக்கத் துணியில்லை. குந்தக் குடிசை கூடப் பலருக்கு இல்லை; படிப்பு இல்லை; பணமும் கிடையாது; சுருக்கமாகச் சொன்னால், சொத்து சுதந்திரம் ஏதுமில்லை, என்று பல கோடி மக்கள் அவதிப்படுவதை நாம் மாற்றியாக வேண்டும்.

'இப்படிப்பட்ட கோடானுகோடிப் பேர்களுக்கும் வாழ்வு கிடைத்தாக வேண்டும். இவர்களது வாழ்க்கைத் தரமும் மற்றவர்களைப் போல உயர்ந்தாக வேண்டும். இந்திய மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். ஜாதி பேதமின்றி இருக்க வேண்டும் என்பதே காந்திஜியின் இலட்சியமாகும்.

'வாழ்க்கைத் தரத்தில் மட்டுமல்லாமல், சமூக - சமுதாய அந்தஸ்திலும் மக்களனைவரும் சரிநிகர் என்ற உணர்ச்சி நாடெங்கும் நிலவ வேண்டும். தமக்குள் உயர்வு - தாழ்வு என்று எண்ணாமல் மக்கள் வாழவேண்டும் என்ற இலட்சியத்தை காந்திஜி பரப்பினார்!

'இந்த இலட்சியத்தை மக்களிடையே பரப்பி, சர்வோதய சமுதாயத்தை ஏற்படுத்தத்தான், மகான் காந்தியடிகள் நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார்! வேறு எதற்காக சுதந்திரம் தேவை?'' என்றார்.

''தலைவர் காமராஜ் அவரது பொது வாழ்வில் அன்றுவரை வேறு எந்த விழாவிலும் பொதுக்கூட்டத்திலும் இவ்வளவு விரிவாக - விளக்கமாக - உணர்ச்சி பொங்க - உற்சாகம் பீறிட்டெழ - உளம் திறந்து பேசியதில்லை'' - என்று, காங்கிரஸ் தொண்டர்களும் - தலைவர்களும் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டார்கள்.

டில்லியிலே நடைபெற்ற அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் என்ற தகுதியில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட தலைவர் காமராஜ், அங்கே இருந்து நேராகத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் சென்னை மாநகரிலே நடைபெற்ற விடுதலை விழாவிலே வந்து கலந்து கொண்டார்.

அந்த விழாவிலே, சென்னை மாகாணப்பிரதமர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், அவருடைய அமைச்சரவையினரும், பிற அதிகாரிகளும் கோலாகலமாகக் கலந்து கொண்டாடினார்கள்.

மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே! வந்தே மாதரம் என்று சென்னை மாநகர விடுதலை விழாவிலே மக்கள் எழுப்பிய வீர முழக்கம் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலே, பட்டி தொட்டிகளிலே - கிராமம் கிராமமாக, அவரவர் இதய ஒலிகளாக எதிரொலித்தன!

சுதந்திர தின விழாவிலே, தலைவர் காமராஜ், காந்தியடிகளது திருவுருவம் பொறித்த சின்னத்தைச் சட்டையிலே அணிந்து கொண்டு, அன்று ஒரே பேரானந்தமயமாகக் காட்சி தந்தார்.

அவருடன், அவரது நண்பர்களான எஸ்.கே. முத்துசாமி, முருக தனுஷ்கோடி, திருச்சி அருணாசலம், திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, பி.எஸ். குமாரசாமி ராஜா, பிரதமர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், காளா வெங்கட்ராவ், வி.வி. கிரி ஆர். வெங்கட்ராமன் போன்ற வேறு பல மாவட்ட முக்கிய கட்சி நண்பர்களும் - காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் - பொதுமக்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

## காந்தியடிகள் கலந்துகொண்டாரா?

1947-ஆம் ஆண்டு சுதந்திர தினவிழா ''ஓர் உயிரற்ற விடுதலையின் வெறுமை'' என்று கூறி, புது தில்லியிலே நடைபெறும் முதல் சுதந்திர தின விழாவின் கோலாகலத்திலே கலந்து கொள்ளாமல் வங்க மாநிலத்திலே உள்ள கல்கத்தா நகர் சென்றுவிட்டார் - காந்தியடிகள்!

இந்திய நாடு சுதந்திரம் பெற்று, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் எல்லாம் அவரவர் பதவிகளை ஏற்றுப் பேரானந்தக் கடலிலே மூழ்கியிருந்தார்கள். ஆனால், காந்திபிரான் அந்த விழாவிலே கலந்து கொள்ளாதது மட்டுமல்ல; ஒரு வாழ்த்துச் செய்தியைக்கூட அந்த விழாவிற்கு அவர் அனுப்பவில்லை!

காலமெல்லாம் அந்தச் சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்ட அவரின் மனம் என்னென்ன எண்ணியதோ? எவர்கண்டார்? தில்லி மாநாடுக்கு வருகை தந்து, விடுதலை விழாவிலே கலந்து கொள்ளுமாறு எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் வற்புறுத்திக் கேட்டு கொண்ட பிறகும், காந்தியடிகள் விழா நிகழ்ச்சிகள் ஒன்றிலும் அவர் கலந்து கொள்ளாதது ஒரு வருந்தத்தக்க சம்பவமாகவே தென்பட்டது.

''பூசலும் - குழப்பமும் காங்கிரஸ் கட்சியின் உள்ளுக்குள்ளேயே இருக்கிறது'' என்று, திருமதி ராஜகுமாரி அமிர்கௌரிக்கு காந்தியடிகள் எழுதிய கடிதத்திலேயே வருத்தத்துடன் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய நாடு விடுதலை பெறவேண்டுமென்று எந்த காந்தி பெருமான் இரவும் பகலுமாக அரும்பாடுபட்டாரோ, அந்த உத்தமர் கலந்து கொள்ளாமலேயே டில்லி மாநகரில் முதல் சுதந்திர விழா நடைபெற்றது.

பண்டித நேரு, டாக்டர் இராசேந்திர பிரசாத், சர்தார் வல்லபாய் படேல், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலே அப்போது இருந்த அபுல்கலாம் ஆசாத் போன்ற மூத்த தலைவர்கள் எல்லாம், கல்கத்தாவிற்கு நேரிலே சென்று எப்படியாவது காந்தியடிகளை எவ்வழியிலாவது வற்புறுத்திச் சமாதானம் செய்து விழாவிற்கு அழைத்து வந்திருக்கலாம்! வந்திருக்க வேண்டும்.

என்ன காரணத்தாலோ இப்படியொரு சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெற்றதாகக் காங்கிரஸ் வரலாறு கூறவில்லை! அதன் எதிரொலிதானோ என்னவோ இன்றும் காங்கிரஸ் கட்சி அகில இந்தியா முழுவதும் எதிலும் தோல்வி முகத்தோடு அவமானப்பட்டு அலைந்து கொண்டிருக்கின்றது!

# 33. சாய்ந்தது சத்திய சோதனை! அழிந்தது அகிம்சை அறம்!

கல்கத்தா நகரிலே உள்ள காந்தியடிகள் தம் நெருங்கிய ஒரு முஸ்லிம் நண்பரின் இல்லத்திலே, ஆகஸ்டு 31-ஆம் நாளன்று நள்ளிரவு துயில் கொண்டிருந்தார்!

அப்போது சில இளைஞர்கள் கோபத்துடன் வந்து, அவர் தூங்கிக்கொண்டிருந்த வீட்டினுள் நுழைந்திடக் கதவைத் தடதடவென்று தட்டினார்கள்.

## காந்தியடிகள் மீது வெடிகுண்டு

அந்த முஸ்லிம் நண்பர் கதவைத் திறந்தார்! அவருடன் காந்தியடிகளும் பின்புறமாக நின்றுகொண்டிருந்தார்!

ஆத்திரத்துடனும் - அடக்க முடியா சினத்துடனும் வந்த அந்த இளைஞர்களைப் பார்த்துக் காந்திபிரான் வணக்கம் கூறினார்! வந்தவர்களைப் பார்த்து 'என்ன' என்று கேட்டார்!

அப்போது ஓர் இளைஞன் காந்தி பெருமான்மேல் ஒரு செங்கல்லை வீசி எறிந்தான்! அந்தக் கல் அவர்மீது படாமல் அடுத்து நின்றிருந்த முஸ்லிம் ஒருவரைத் தாக்கியது.

இளைஞன் ஒருவன், காந்தியடிகளை நோக்கி ஒரு தடியை வீசினான்! அந்தத் தடி நூலிழை தவறியதால் வேறொருவர் மேலேபட்டது! கூட்டம் ஒரு கூச்சலை எழுப்பி 'காந்தி ஒழிக' என்று கூப்பாடிட்டது.

இவ்வாறு காந்தியடிகளைத் தாக்க வந்த செய்தி, அதற்குள் அங்கிருந்த காவல்துறைக்கு எட்டிற்று! விரைந்து வந்தனர் காவலர்! கலகம் புரியும் கும்பலைக் கலைத்திடக் காவலர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார்கள்!

இந்தச் சம்பவம் ஏன் எற்பட்டது? காரணம் என்ன? என்று புரியாமல் அங்கே ஒரே குழப்பம் நிலவியது!

இதைக் கண்ட காந்தியடிகள், கலகம் செய்ய வந்தவர்கள் மனதைத் தொடும் முறையிலும், பஞ்சாப் மாநிலத்தின் மதக் கலவரக்காரர்கள் உணர்வுகளிலே ஒரு திருப்புமுனை உருவாகும் வகையிலும், ''சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்'' என்று அறிவித்து அந்த இரவிலேயே உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

அவர் திடுதிப்பென்று, நள்ளிரவிலே துவங்கிய உண்ணாவிரதம், நாட்டிலே ஒரு பரபரப்பை எழுப்பி உலுக்கியது.

எல்லா இனமக்களும் அடிகளாரைச் சந்தித்தார்கள்! ''இனிமேல் மதக் கலவரத்தைக் கைவிட்டு விட்டு அமைதியாகப் பணியாற்றுவோம்'' என்றுஅவரிடம் உறுதி கூறினார்கள்!

மதத் தலைவர்கள் எல்லாம் அங்கே ஒன்று கூடி, அண்ணல் காந்தியாரை அணுகிப் பேசி அமைதி ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டார்கள்!

1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாள் இரவு, வங்காள முதலமைச்சர் ஷாஹீத், எச். எஸ். சுஹ்ரவர்த்தி அளித்த ஆரஞ்சுப் பழச் சாற்றைப் பருகி, காந்தியடிகள் தனது உண்ணா நோன்பைக் கைவிட்டார்!

மதக் கலவரங்களால் அமைதியை இழந்துவிட்ட மக்களுக்கு, ஒரு முழு நம்பிக்கையை அவர்கள் மனதில் உருவாக்கிட வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்!

பாகிஸ்தான் ஹை கமிஷனர், மௌலானா அபுல்கலாம் ஆசாத், பிரதமர் பண்டித நேரு, ஆர்.எஸ்.எஸ்., இந்து மகா சபை சார்பாகத் திரு, கணேஷ்தத் ஆகிய அனைவரும் காந்தியடிகளிடம் நாட்டில் அமைதி காப்போம்'' என்று நேரிடையாக வருகை தந்து அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு உறுதியளித்தார்கள்.

டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்களது வேண்டுகோளின்மீது உருவான அமைதி மொழி உறுதியை, இந்து மகா சபை மட்டும் எதிர்த்தது! கடுமையாக அதைக் கண்டித்தது!

அப்போது, காந்தியடிகள் மீது ஒரு வெடிகுண்டு வீசப்பட்டது. நல்லவேளையாகக் குறிதவறி அவர் நூலிழையில் உயிர் தப்பிவிட்டார்.

மறுநாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் 'தவறான பாதையில் சென்று என்மீது வெடிகுண்டு வீசிய இளைஞன் மீது யாரும் கோபப்படக்கூடாது. நான் இந்து சமயத்தின் எதிரி என்று அந்த இளைஞர் எண்ணுகிறார் போலத் தோன்றுகிறது'' எனக் குறிப்பிட்டார் காந்தியடிகள்.

மகாத்மா காந்தியின் மேலே வெடி குண்டை வீசிய அந்த இளைஞனைக் காவலர்கள் பிடித்து விட்டார்கள்.

''அவனைக் கொடுமைப் படுத்த வேண்டாம்'' என்று காந்தியடிகள் காவல்துறை ஐ.ஜி.யைக் கேட்டுக் கொண்டார்.

அந்த இளைஞன் பெயர் என்ன தெரியுமா? மதன்லால்! அவன்மீது கொலை வழக்கும் தொடரப்பட்டது! நீதிமன்றத்தில் அவன் நிறுத்தப்பட்டான்!

**1948– ஜனவரி**
**30–ஆம் நாள்**

காந்தி பெருமான், டெல்லியில் தனது தள்ளாத வயது காரணமாக, பேத்திகளான ஆபாகாந்தி, மனுகாந்தி புடை சூழ, அவர்களது தோள்பட்டைகளைப் பற்றி, ஏதோ பேசியவாறு, பிரார்த்தனை நடக்கும் மேடைக்கு நடந்து வந்து கொண்டே இருந்தார்!

அன்று வெள்ளிக்கிழமை! மாலை ஐந்து மணிக்குப் பிரார்த்தனை மேடைக்கு வரவேண்டிய காந்தியடிகள், பத்து நிமிடங்கள் தாமதமாகக் கூட்டத்திற்கு வருகை தந்தார்! அண்ணல் காந்தி பெருமானிடம், மத்திய உள்துறை அமைச்சர், சர்தார் வல்லபாய் படேல் பேசிக்கொண்டே இருந்து விட்டதுதான் அதற்குக் காரண்மாகும்.

காந்தியடிகள் வருகையைக் கண்ட டில்லி பிர்லா அரண்மனையின் தெய்விக வழிபாட்டு மக்கள் எல்லாம் எழுந்து நின்று, வழிவிட்டு விலகி, அவரவர் கைகளைக் கூப்பி, அவருக்கு வணக்கம் செய்தவாறே காட்சி தந்தார்கள்.

வழிபாடு புரியவந்த மக்களது அன்பையும் - பண்பையும் எதிரொலித்து வணங்கி - வணங்கி மகிழ்ந்தபடியே பிரார்த்தனைக்காக அடிகளார் விரைந்து வந்து கொண்டிருந்தார்.

இடப்பக்கம் நின்றுகொண்டிருந்த கூற்றுவன் ஒருவன், திடீரென எழுந்து வேகமாக வந்தான்.

அடிமையால் இருண்ட இந்திய தேசத்திற்கு விடுதலை ஒளி விளக்கை ஏற்றித் தந்து அஹிம்சையின் அவதாரமாக நடமாடி வந்த பெருமானின் தாளஞ்சலியை புரியத்தான் அவன் வருகிறானோ - என்று எண்ணி, காந்தி பெருமான் அவர்கள் - அவனது கைகளைப் பிடித்துக் காலில் விழுவதைத் தடுக்க முயன்றார்!

மனிதனை மனிதன் பாதம் தொட்டுப் பணியும் பூஜா மனோபாவம், காந்தி பெருமான் அவர்களுக்கு ஒவ்வாத ஒன்று!

அதனால், அவருடைய பேத்திகளில் ஒருத்தியான செல்வி மனுகாந்தி அவனைத் தடுத்தார்!

வந்த அந்தக் கூற்றுவன், மனுகாந்தியை இடறித் தள்ளிவிட்டான்! அடிகளாரின் ஜபமாலையும் - அவரது புத்தகமும் அந்தப் பெண்ணின் கையிலே இருந்து சிதறிக் கீழே விழுந்தன!

## சத்திய சோதனை சாய்ந்தது!

மனுகாந்தி எழுந்து வந்து விழுந்த அவற்றை எடுக்க எண்ணிக் கீழே குனிந்தபோது, எதிரே இரண்டடி தூரத்தில் எட்டிநின்ற அந்த வகுப்புவாதப் பேயன், தனது கைத்துப்பாக்கியைக் குறியோடு ஏந்தி, மும்முறை சுட்டான், அருட்பெருமானின் மார்பகத்திற்கு நேராக!

மூன்று குண்டுகளும் அடிகளார் மார்பிலே பாய்ந்தன! என்றாலும், இரு குண்டுகள் அந்த எலும்புக் கூட்டையும் மீறி ஊடுருவிச் சென்றன!

அஹிம்சை தத்துவத்தின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்த காந்தி பெருமானின் அன்பகத்திலே அந்த மீதி ஒரு குண்டும் பாய்ந்தது.. மீள மனமில்லாமல், மீறவும் இயலாமல் அது அங்கேயே தங்கிவிட்டது!

சுடப்பட்ட ஒரே ஒரு குண்டுக்கே அந்த ஒல்லியான உருவத்தின் கால்கள், பின்னித் தடுமாறிவிட்டன!

பிரார்த்தனைக் கூட்டத்து பக்தர் பெருமக்களுக்கு வணக்கம் செய்த காந்தியடிகளது கைகள் இரண்டும் - துவண்டு, சோர்ந்து தொங்கிவிட்டன!

இரண்டாவது குண்டு, சத்திய சோதனை வாழ்க்கை நடத்திய அந்த மகானின் மார்பிலே பள்ளி கொண்டதும், 'ஹே ராமா!, ஹே ராமா! என்று இருமுறை அவரது 'நா' இறைமையைப் பூஜித்தது!

அடிகளது திருமுகம் வெளுத்தது! சவக்களை சதிராடியது! மார்பிலிருந்து இரத்தம் பீறிட்டுத் தெறித்து மண்ணிலே தேங்கியது.

அவர் அணிந்திருந்த அரை ஆடை குருதியிலே குளித்துச் செஞ்சூரியனாகத் திகழ்ந்தது!

மூன்றாவது குண்டு, காந்தி பெருமானின் உடலிலே பாய்ந்த ஓசையோடு அவரது அறம் சார்ந்த உடல் கீழே சாய, அதற்கும் முன்னதாக அவர் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியும் விழுந்தது கீழே!

பாதங்களிலே இருந்த பாதுகைகள் கழன்று விழுந்தன! காந்திபிரான் காலத்தோடு காலமாகக் கலந்தார். அப்போது காலம், ஐந்து மணியாகிப் பதினேழு நிமிடங்களாயின! இந்தக் கொலை மரண நாடகம், ஐந்தாறு மணித்துளிகளிலேயே நடந்து முடிந்து விட்டது.

காந்திபெருமான் கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சி நாடெங்கும் இடிகுரலாய் எதிரொலித்தது!

சுதந்திரத் தந்தையான அடிகளாரைச் சுட்டுக் கொன்றவன் ஓர் 'இந்து' என்று வானொலி நிலையம் சோகக் குரல் எழுப்பித் தேம்பித் தேம்பி அழுதது!

அது அவ்வாறு புலம்பியிராவிட்டால் நாட்டிலுள்ள முஸ்லிம்களும் - இந்துக்களும் எண்ணற்ற நவகாளிகளை நடத்தியிருப்பார்கள்!

## அறம் ஒன்று அழிந்தது அன்று!

பாரதமாதா பதைபதைத்து அழுதாள்! உலக மக்கள் எல்லாரும் விம்மி விம்மித் தேம்பினார்கள்! காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை மட்டுமல்ல; மனித நேயக் காற்று வீசும் திசைகள் எல்லாம் மருண்டு துடித்தன!

அஹிம்சை ஜோதி அணைந்தது! தனிப் பெரும் மனித நேய ஒழுக்கம் தலை கீழானது! சத்திய சோதனையின் கருணை சவமானது! அறம் ஒன்று துடிதுடிக்க அழிந்தது அரசியலில்!

''பிணி பீடித்தோ, விபரீத விபத்தின் விளைவுகட்கோ நான் சாகமாட்டேன்! கொலையாளி ஒருவனிடம் கொள்கைக்காகவே சாவேன்!'' என்று, காந்தியடிகள் ஒருமுறை அல்ல; பன்முறை நமக்கு அறிவித்த பிறகே அடிகள் அன்று படுகொலையானார்!

அவனி, அழுது அரற்றியது! இந்தியத் தலைவர்கள் மட்டுமல்ல; உலகத் தலைவர்கள் அனைவரும் கண்ணீர் விட்டார்கள் அவரது சாவைக் கேட்டுப் பதறி!

''ஒரு பைத்தியக்காரன், காந்திஜியின் உயிரைப் போக்கிவிட்டான்! ஒளி விளக்கு அணைந்து விட்டது! எங்கும் இருளே மண்டிக் கிடக்கின்றது.'' என்று, பிரதமர் பண்டித நேரு வானொலியில் கண்ணீர் உகுத்தார்!

தலைவர் காமராஜ் அவர்கள், அப்போது வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள ஆர்க்காடு என்ற நகரில், கண்ணன் பூங்கா என்ற சிறுவர் பூங்காவினைத் திறந்து வைத்தார்!

அந்த விழாவிலே, சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் கி. ஜானகிராம முதலியாரும் - காங்கிரஸ் தோழர்கள் உட்பட அனைவரும் திரண்டிருந்தார்கள்!

விழா முடிந்தது! விருந்துண்ண காமராஜர்அமர்ந்தார்! அப்போது ''காந்தியடிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்! ஆவி பிரிந்தது!'' என்ற பேரிடிச் செய்தியை வானொலி பரப்பியது!

அதிர்ச்சி அடைந்தார் தலைவர் காமராஜர். இடியோசை கேட்ட நாகம் போலானார்! என்னவென்றே தெரியாத பிரமை, சூன்யம் அலைமோத வைத்தது அந்தச் செய்தி!

உணவு பரிமாறிய இலையை அப்படியே அவர் விட்டு விட்டு, பேயறைந்த முகத்தோடு எழுந்தார்! கண்கலங்கினார்! கண்ணீர் தன்னையும் அறியாமல் சிதறுவதைக் கண்ட தலைவர் காமராஜின் பாச உணர்வுகள், அவரை தேம்பித் தேம்பி அழவைத்து விட்டன!

விழாவிற்கு வருகை தந்திருந்த காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் அனைவரும் - தலைவரின் தாங்கொணா வேதனையைக் கண்டு அவர்களில் பலரும் விம்மினார்கள்!

அங்கே சூழ்ந்திருந்த காங்கிரஸ் கட்சித் தொண்டர்களிடமும் - நண்பர்களிடமும் தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்! கண்ணீர் விட்டவாறே அவர் கை கூப்பிக் கேட்டுக் கொண்டார்!

''நமக்குள்ளே இன வேற்றுமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம்! எங்கும் மதவெறிப் பேச்சுக்களைப் பேசவேண்டாம்! மன உறுதியாக, மக்கள் தொண்டுகளைப் புரிய மகாத்மா காந்திஜியின் சாவின் மேல் சபதம் ஏற்று உழைத்து வாருங்கள்.''

-என்று புலம்பிய உணர்வுகளோடும் கலங்கிய கண்களோடும் மக்களை அவர் கேட்டுக் கொண்ட பின்பு தலைவர் காமராஜ் சென்னை நோக்கிப் புறப்பட்டார்.

காந்தியடிகளைத் துடிக்கத் துடிக்க துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற அந்தக் கயவன் யார்? 'நாது ராம் விநாயகக் கோட்சே' என்ற நயவஞ்சக ஈனப்பிறவி! சாதி வெறியன்! பழி தீர்த்துக் கொண்டான் பாவி!

# 34. காந்தியடிகள் தோல்வி; காமராஜரால் வெற்றி!

காந்தி பிரான் மறைந்ததற்குப் பிறகு, ஜெய்ப்பூர் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிக்கான தலைவர் தேர்தல் 1948-ஆம் ஆண்டு இறுதியில் நடத்த ஏற்பாடானது.

ஆண்டாண்டு தோறும் நடைபெற்றிடும் ஒவ்வொரு அகில இந்திய காங்கிரஸ் மகா சபைப் பேரவையிலும், காந்தியடிகள் காங்கிரஸ் கட்சி மேடையிலே அமர்ந்து கலந்துகொள்ளும் காட்சி, அப்போது இல்லாமல் போய்விட்டது.

கனிவான தமது அறிவுரைகளை - அஹிம்சா நெறியுரைகளை - அரசியல் போராட்ட ஒழுக்கவுரைகளை - நமக்கெலாம் கூறி அறிவூட்டிப் பழக்கப்பட்ட வார்தா மாதவர் அண்ணல் காந்தி, இந்தத் தேர்தலிலே இல்லை என்கிற கவலையுணர்வோடு காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம், மகாசபைத் தலைவர் தேர்வுத் தேர்தலிலே ஈடுபடலானார்கள்!

கவலையும் - வருத்தமும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடையே காணப்பட்டாலும், தலைவர் தேர்தலை அமைதியான முறையிலே - சுமுகமான சூழ்நிலையிலே ஒற்றுமையாக நடத்த முடியாமலே, கடும் போட்டிகளோடு தேர்தல்பணியிலே சுழன்றார்கள்!

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபையினால், காங்கிரஸ் கட்சியினுடைய வரலாற்றாசிரியர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர் திரு பட்டாபி சீதாராமையா என்பவர்!

அவரை, ஜெய்ப்பூர் காங்கிரஸ் கட்சி மகா சபையின் மாநாட்டுத் தலைவராகத் தேர்வு புரிய பிரதமர் நேரு, தலைவர் காமராஜ் போன்றவர்கள் விரும்பினார்கள்!

பட்டாபி சீதாராமையாவை எதிர்த்து, அதே காங்கிரஸ் மகாசபை சார்பாகப் புருஷோத்தம தாஸ் தாண்டனை நிறுத்திட, சர்தார் வல்லபாய் படேலைப் போன்றவர்கள் திட்டமிட்டுப் பணியாற்றினார்கள்.

இவர்கள் இருவரும் யார்? அவர்களது அரசியல் வரலாறு என்ன? என்பதை, நாம் சுருக்கமாக அறிந்து கொண்டால்தான், அது மகாத்மா காந்தியடிகள் உயிரோடிருந்தபோது பெற்ற பெரும் தோல்வியை, காமராஜ் அவர்கள், அடிகள் மரணமடைந்த பின்பு, வெற்றி பெற்றிட ஏன் அரும்பாடுபட்டார்? என்ற அரசியல் வரலாற்றின் அருமையை - பெருமையை நாம் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

1938-ஆம் ஆண்டில்,இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபைக்கு திரு நேத்தாஜி சுபாஷ்சந்திர போஸ் - ஒருமனதாகக் காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

மகாத்மா காந்தியடிகள் திரு போஸ் அவர்களைக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிறுத்தியதால்தான், அந்த தேர்தலில் எவ்விதக் குழப்பமும் - சர்ச்சையுமின்றி தேர்தல் ஒருமனதாக நடைபெற்றது! அதனால், சுபாஷ் பாபு ஹரிபுரா காங்கிரஸ் தலைவரானார்!

1939- ஆம் ஆண்டு நடைபெற்ற திரிபுரா காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பதவிக்காக சுபாஷ் பாபு மீண்டும் போட்டியிட்டார்!

அதற்குக் காரணம், காங்கிரஸ் மகாசபைக்கு, ஒருவரே இரண்டு மூன்றுமுறை மகாசபைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதால், பாபு இரண்டாம் முறையும் தலைவராகப் போட்டியிட விரும்பினார்!

ஆனால், இந்தத் தடவை மகாசபைத்தலைவராகப் போட்டியிட வேண்டாம் என்று காந்தியடிகள் கூறியும், காந்தியண்ணலின் கருத்தை எதிர்த்து-மீறி, திரிபுரா காங்கிரஸ் மகாசபைத் தேர்தலிலே சுபாஷ் பாபு போட்டியிட்டார்!

காங்கிரஸ்காரர்களிடையே சுபாஷ் பாபுவின் போட்டி கலகத்தை விளைவித்துக் குழப்பமூட்டியது! பண்டித நேரு போன்ற தலைவர்கள் எல்லாம், போட்டியிடவேண்டாம் என்று பாபுவை அறிக்கைகள் வாயிலாகக் கேட்டுக் கொண்டார்கள். அதனால், காந்தியடிகள் சுபாஷ் பாபுவை எதிர்த்து, இதே பட்டாபி சீதாராமையாவைத் தலைவர் தேர்தலிலே நிறுத்தி வைத்தார்!

அவருடைய வெற்றிக்காக, காந்தி பிரான் தனது முழுசெல்வாக் கையும், மகா சபையின் சக்தியையும் பயன்படுத்தித் தீவிரமாகப் பணியாற்றினார்!

காந்திபெருமான், ஏன் சுபாஷ் பாபுவை மகா சபைத் தலைவர் தேர்தலிலே எதிர்த்தார்? சிந்திக்க வேண்டிய சீரிய பிரச்னை இது!

''இந்து - முஸ்லிம் பிரச்னையில், எந்த ஒரு முடிவும் காண முடியாமல் நாட்டின் நிலைமை மிகவும் சீர்கேடாக இருந்த அந்தச் சமயத்தில், ஒரு முஸ்லிம் - காங்கிரஸ் தலைவராக வருவது நல்லது'' என்று காந்தியடிகள் கருதினார்.

அதனால், மௌலான அபுல்கலாம் ஆசாத் அவர்களைத் தலைவர் பதவிக்காக அடிகள் போட்டியிடச் செய்தார்!

சுபாஷ் பாபு காந்தியடிகளுக்கு எதிராகப் பிடிவாதமாகப் போட்டியிட முயன்றதால், ஜனாப் ஆசாத் மகாசபைத் தலைமைப் போட்டியிலே இருந்து விலகிக் கொண்டார்.

போட்டியிலே ஈடுபட அவர் மறுத்ததால், காந்தியடிகளும் - காங்கிரஸ் தலைவர்களும் பட்டாபி சீதாராமையாவை முழு மூச்சாகவும் - தீவிரமாகவும் ஆதரிக்கும் நிலையேற்பட்டு விட்டது!

சூழ்நிலை இவ்வாறு இருந்தும், சுபாஷ் பாபு, காந்தியடிகளின் செல்வாக்கையும், காங்கிரஸ் கட்சியில் அவருக்கு இருந்த பலத்தையும் எதிர்த்து, அவர் அப்போது கடும் சுரத்துடன் நோயுற்றிருந்ததையும் பொருட்படுத்தாமல் கடுமையாகப் பணியாற்றி வெற்றிபெற்றார்! பட்டாபி சீதாராமைய்யா தோற்றார்!

பட்டாபி தோல்வி, அண்ணல் காந்தியடிகளுக்கு பெரும் வேதனையைத் தந்தது. அதனால், ''பட்டாபி சீதாராமைய்யா தோல்வி எனது தோல்வி என்று, பகிரங்கமாகவே கூறி மனச்சாட்சியோடு ஒப்புக்கொண்டார் காந்தி மகான்!

தலைவர் தேர்தலிலே வெற்றிபெற்ற திரு. சுபாஷ் பாபு உடல்நிலை கடும்நோயினால் தாக்கப்பட்டதாலும், காங்கிரஸ் கட்சித்தலைவர்கள் வெற்றிபெற்றவருக்குரிய முழு ஒத்துழைப்பைக் கட்சி ரீதியாகத் தராததாலும், அவரவர் ஆடிய கட்சி விலகல் விளையாட்டு எதிர்ப்புக்களாலும், சுபாஷ் பாபு தனது தலைமைப் பதவியிலே இருந்து விலகிக் கொண்டார்!

அதற்குப் பிறகு - தேசப் பிதாவான காந்தியண்ணல் படுகொலையானதற்குப் பிறகு, முதன் முதலாக நடைபெறும் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவித் தலைவர் தேர்தல் இது!

இந்தத் தேர்தலில், பட்டாபி சீதாராமைய்யாவை அதே தலைவர் பதவிக்காக பிரதமர் நேரு அணி நிறுத்தியிருக்கிறது. அவரை எதிர்த்து படேல் அணி புருஷோத்தமதாஸ் தாண்டனை ஆதரித்திருக்கிறது!

புருஷோத்தம தாஸ் தாண்டன், எப்படிப்பட்டவர் தெரியுமா?

அப்போது இந்தியப் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்களையும், அவருடைய அமைச்சரவையினையும்- மத்திய அரசுக் கொள்கைகளையும் மிகக் கடுமையாக, நேரிடையாகவே, அறிக்கைகளாலும், அணிகுழுக்களாலும் எதிர்த்து வந்தவர்!

இந்தியா நடுநிலைக் கொள்கைகளோடு உலக நாடுகளிடையே திகழவேண்டும் என்ற பிரதமர் நேருவின் இலட்சியத்தைத் தீவிரமாக எதிர்ப்பவர் தாண்டன்! அதனால், பகிரங்கமாகவே மேடைகள் தோறும் மத்திய மந்திரி சபையைத் தாக்கிப் பேசினார்!

பட்டாபியை எதிர்த்துப் போட்டியிடும் தாண்டன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பிரதமர் நேரு தனது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்ய நேரிடுமோ என்ற அச்சம்வேறு காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு உண்டாகியிருந்தது!

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு. காமராஜ் அவர்களுக்கும் அதே அச்சம், பயம் உருவானதால், அவரும் தாண்டனை எதிர்த்துத் தேர்தல்பணி புரியும் சூழ்நிலை உருவானது.

ஆந்திராவிலேயும் - பிற மாநிலங்களிலும் பலர் தாண்டனை ஆதரித்துத் தலைவர் தேர்தல்பணிகளை ஆற்றினார்கள்.

ஆனால், தமிழ்நாட்டிலே தலைவர் காமராஜ், பட்டாபியை ஆதரித்து மிகக் கடுமையாக வேலைசெய்து வாக்குகளைத் திரட்டினார்!

அதனால், தாண்டனுக்கும் பட்டாபிக்கும் தலைவர் தேர்தலில் ஒவ்வொரு மாநிலத்திலும் கடுமையான போட்டியோடு தேர்தல் நடைபெற்றது.

பட்டாபி சீதாராமையயா 1199 வாக்குகளும், தாண்டன் 1085 ஓட்டுகளும் பெற்றதால், பட்டாபி அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1939-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், பட்டாபியைக் காந்தியடிகள் ஆதரித்தார். அவர் காங்கிரஸ் தலைவராக வரவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால், காந்தியண்ணல் உயிரோடிருக்கும்போது, அவர் எண்ணம் வெற்றிபெறவில்லை.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான காமராஜ், தற்போதைய தேர்தலில் பட்டாபியைத் தீவிரமாக ஆதரித்து, தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்களின் வாக்குகளைச் சிதறாமல் சேகரித்துப் பட்டாபிக்குப் போட வைத்தார்!

114 ஓட்டுகள் வித்தியாசத்தில் பட்டாபி வெற்றிபெற முடிந்ததற்குக் காரணம், அந்த ஓட்டுகள் எல்லாமே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடையவை; தலைவர் காமராஜால் சேகரிக்கப்பட்டவையாகும்.

இந்தத் தேர்தலில், சர்தார் வல்லபாய் படேல்கூட பட்டாபியை ஆதரிக்காமல், தாண்டனையே பலமாக ஆதரித்தார். இருந்தும்கூட, தாண்டன் 114 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார்.

பட்டாபி வெற்றிபெற்றபின்பு ஒருமுறை சர்தார் படேலும் - காமராஜரும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அப்போது, வல்லபாய் படேல் 'தாண்டனை நான் ஆதரித்ததால் என் மீது உங்களுக்கு கோபம் இருக்காது என்று நினைக்கிறேன்' என்றார்.

'1946 - ஆம் ஆண்டில், இராஜாஜி பிரச்சினை முடிந்த பிறகு, எனக்கும் - உங்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லையே!' என்று காமராஜரிடம் படேல் குறிப்பிட்டார்!

காமராஜ் அதற்குப்பதில் கூறும்போது, 'உங்கள் மீது எனக்குக் கோபம் என்பதே எப்போதும் கிடையாது. பட்டாபியை ஆதரித்து, அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தமிழ்நாட்டின் விருப்பம். இதிலே நான் கோபப்பட என்ன இருக்கிறது' என்றார்.

அதற்குப் பிறகு அந்த இரு பெரும் தலைவர்களும் சிரித்துக்கொண்டே நாட்டின் பிற நிலைகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்தார்கள்.

# 35. குமாரசாமி ராஜா மூன்றாவது முதல்வர்!

தமிழ்நாட்டின் இரண்டாவது பிரதமராக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பதவி விலகிய பின்பு, அடுத்தபடியாக சட்டபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலுக்கு யாரை நிறுத்துவது என்ற பிரச்னை எழுந்தது.

அதற்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க இராஜாஜி அணியினரும் - காமராஜ் அணியினரும் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார்கள்.

ஆந்திரகேசரி டி. பிரகாசம் அணியும் - இராஜாஜி அணியும் அந்த நேரத்தில் ஒன்றாக இணைந்து வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப் பணியாற்றியது.

டாக்டர் சுப்பராயன் அவர்களைத் தலைவர் பதவிக்கு இராஜாஜி அணியினர் வேட்பாளராக நிறுத்தினார்கள்.

தலைவர் காமராஜ் அவர்களுக்கும் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கும் இடையே, அந்த நேரத்தில் அரசியல் தொடர்பு சரியாக இல்லாமல் கருத்து வேறுபாடிருந்தது.

ஓமந்தூர் ரெட்டியார் தலைவர் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றிபெற முடியாத குழப்பச் சூழ்நிலை இருந்தது.

காமராஜ் அணியினர் பலருக்கு, குறிப்பாகச் சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு ரெட்டியார் மீது முழுத் திருப்தி இல்லை.

அரசு நிர்வாக இயந்திரங்களில் சட்டசபை உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டிய வசதி - வாய்ப்புப் பொறுப்புகளை ஓமந்தூரார், அவர் ஆட்சியின்போது, தரவில்லை என்ற மனக்குறையே அவர்களிடம் மேலோங்கி எதிரொலித்தன.

தினசரி அரசு நிர்வாக இயந்திரத்தில் தலையிட்டு, சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தொகுதிக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்க விரும்பினார்கள்.

அவற்றில் நியாயத்திற்கு விரோதமானவை இருந்ததால் ரெட்டியார் அவற்றை அனுமதிக்க மறுத்துவிட்டார்! அதனால், அவர்களுக்கு அவர்மீது வெறுப்பும் - காழ்ப்பும் தலை தூக்கின.

தலைவர் காமராஜ் அணியினர் பலர், எம். பக்தவத்சலம் அவர்களைத் தலைவர் தேர்தலிலே நிறுத்த வேண்டும் என்று தலைவர் காமராஜ் அவர்களிடம் பிடிவாதமாக நின்று வற்புறுத்தினார்கள்.

அதற்கேற்பத் தலைவர் அவர்கள், பக்தவத்சலத்தையே சட்டசபைத் தலைவர் பதவிக்கு நிறுத்துவதென்று முடிவெடுத்து, ரெட்டியாருக்கும் தூது அனுப்பிவிட்டார்.

'முதல்வர் பதவியை ஏற்றிடத் தயாராகுங்கள்' என்று தலைவர் காமராஜ் பக்தவத்சலத்திற்கும் கூறிவிட்டார்.

இராஜபாளையம் நகரைச் சேர்ந்த பி.எஸ். குமாரசாமி ராஜா, 'தினமணி' ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், சி. சுப்பிரமணியம் என்ற மூவர் குழுவிடம், முதல்வர் பதவிக்கு திரு. பக்தவத்சலம் அவர்களை நிறுத்தும் நிலையை, ரெட்டியாருக்குச் சொல்லி யனுப்பினார் - தலைவர் காமராஜ்!

மூவரும் சென்று திரு ரெட்டியாரிடம் தலைவர் காமராஜ் கூறிய யோசனையைத் தெரிவித்தார்கள். அதற்கு அவர் ஒரே பிடிவாதமாய், 'பக்தவத்சலத்தை ஏற்க மாட்டேன்' என்று மறுத்துவிட்டார்.

திரு. பக்தவத்சலம் முதல்வராக வருவது திரு. சி. சுப்பிரமணியம், திரு. டி.எஸ். சொக்கலிங்கம் ஆகிய இருவருக்கும் மனநிறைவைத் தரவில்லை என்று தலைவர் காமராஜரிடம் அவர்களே நேரில் கூறிவிட்டார்கள்.

'அப்படியானால், வேறு யாரைத் தலைவராக நிறுத்தலாம்; உங்களுடைய முடிவு என்ன?' என்று, தலைவர் காமராஜ் அவர்களையே திருப்பிக் கேட்டார்.

ஓமந்தூரார் அமைச்சரவையிலே வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. குமாரசாமி ராஜாவைத் தலைவர் பதவிக்கு வேட்பாளராக நிறுத்தலாம் என்று, திரு டி.எஸ். சொக்கலிங்கமும், திரு. சி. சுப்பிரமணியமும் தங்கள் முடிவை - தலைவர் காமராஜரிடம் தெரிவித்தார்கள்.

அதற்குத் தலைவர், 'உங்களுடைய கருத்தை நான் ஏற்கிறேன்! ஆனால், ராஜாவை ஒப்புக் கொள்ளச் செய்யும் பொறுப்பை நீங்கள்தான் ஏற்க வேண்டும்! என்ன, சரிதானா என் முடிவு?' என்றார் காமராஜ்!

இந்த நேரத்தில், இதை அறிந்த ஓமந்தூரார் நிபந்தனை ஒன்றை விதித்தார்! 'குமாரசாமி ராஜாவைத் தலைவர் பதவிக்கு நிறுத்துங்கள்! நான் விலகிக் கொள்கிறேன்' என்றார் ஓமந்தூரார்!

'தினமணி' ஆசிரியர் சொக்கலிங்கத்திற்கும் - சி. சுப்பிரமணியத்திற்கும் ரெட்டியார் விதித்த நிபந்தனை, சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பெய்தது போலானது!

ஓமந்தூரார் கருத்தை அறிந்த தலைவர் காமராஜ், மீண்டும் அவரையே குமாரசாமி ராஜாவிடம் தூதாக அனுப்பிவைத்தார்!

அப்போது, திரு ராஜா அவர்கள், உடல் நலமின்றிச் சென்னை பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

'இராஜாவின் உடல் நலமாக இல்லை. நீரிழிவு நோயாளியாக மருத்துவ மனையிலே படுத்துள்ளார்! எனவே, முதல்வர் பதவி ஏற்க ஒப்பமாட்டார் ' என்று தலைவர் காமராஜ் கணித்தார்.

மருத்துவ மனைக்கு அந்தத் தூதுக்குழுவினர் இருவரும் சென்று ரெட்டியார் கருத்தையும் - காமராஜ் எண்ணத்தையும் அவரிடம் எடுத்துரைத்தார்கள்.

தலைவர் காமராஜ் கருத்தையும் - ஓமந்தூரார் நிபந்தனையையும், தூதுக்குழுவினர் சிந்தனையையும் ஏற்ற ராஜா அவர்கள், ஒரு நிபந்தனையை விதித்தார்!

இருந்தாலும், 'பக்தவத்சலம் முதல்வர் என்று காமராஜ் எடுத்த முடிவில் எனக்கும் பங்கு உண்டு. அந்த முடிவை அவர் மாற்றிக் கொண்டால், நான் ஒப்புக் கொள்கிறேன்' என்று ராஜா கூறினார்.

இராஜாஜி அணியும் - பிரகாசம் அணியும் ராஜா இப்படி ஒரு முடிவை எடுப்பார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

தலைவர் காமராஜ் அவர்களிடம் அந்தத் தூதுக்குழு சென்று, ராஜாவின் நிபந்தனையை அறிவித்தது!

காமராஜ் ஏதோ சிந்தனையிலே ஆழ்ந்தார்! தர்ம சங்கடமான நிலை தலைவருக்கு! அதனாலே, அவர் கவனம் எங்கோ சிதறியிருந்ததால், தூதுக்குழு உரைத்த முடிவு சரியாகப் புரியாமல் இருந்தது அவருக்கு!

முதல்வராக பக்தவத்சலம் தேர்ந்தெடுக்கப்படமாட்டார் என்றும், குமாரசாமி ராஜாவைப் முதல்வராக்க முடிவு செய்யப்பட்டு விட்டது என்றும் பக்தவத்சலத்திடம் தெரிவிக்க வேண்டுமே!

இந்த நிலையைச் சரிகட்டும் பொறுப்பு, தலைவர் காமராஜ் அவர்களிடமே விடப்பட்டது.

மறுநாள் கூட்டப்பேரவைக் கட்சித் தலைவர் தேர்தல் நடைபெற்ற போது, தலைவர் பக்தவத்சலத்திடம் நடந்த ராஜா வரலாற்றைக் காமராஜ் கூறி சமாதானம் செய்தார்!

தலைவர் தேர்தல் நடந்தது! இராஜாஜி அணியுடன் இணைந்த பிரகாசம் அணியும் தோற்றது! ஓமந்தூரார், தாம் வாக்களித்தவாறு விட்டுக் கொடுத்து, காமராஜ் அணியுடன் ஒன்று சேர்ந்ததால், இராஜாபாளையம் பி.எஸ்.குமாரசாமி ராஜா முதல்வரானார்.

தலைவர் காமராஜ் மீது இதர காங்கிரஸ் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் வைத்துள்ள நம்பிக்கைக்குரிய அளவுகோலே குமாரசாமி ராஜாவின் வெற்றியாக அமைந்தது.

பிரகாசம் அமைச்சரவையில், விவசாய மந்திரியாகவும், இராஜாஜி அமைச்சரவையில் பொதுத்துறை அமைச்சராகவும், ஓமந்தூரார் மந்திரி சபையில் கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த அனுபவத்தால் குமாரசாமிராஜா முதல்வர் பதவியிலும் வெற்றிக்கொடி நாட்டினார்.

1948 முதல் 1952-ஆம் ஆண்டுவரை சென்னை மாநிலத்தின் - முதல்வராக அவர் இருந்தார். குமாரசாமி ராஜா சிறந்த தேசாபிமானி! பின்னர் ஒரிசா மாநில ஆளுநராகவும் பணியாற்றினார்!

இராஜாபாளையம் நகர் இன்று தொழிற்பேட்டையாக மாறி உள்ளதற்குக் காரணம், பிரதமர் பி.எஸ். குமாரசாமி ராஜாவின் சீரிய உழைப்புத்தான் என்றால் - அது மிகையாகாது!

தீண்டத்தகாதவர்கள் என்று கூறப்பட்ட ஆதிதிராவிட மக்கள் - கோவில் நுழைவுக்கான சட்டத்தை இயற்றினார் குமாரசாமி ராஜா!

குமாரசாமி ராஜா சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையிலே தங்கிருந்தபோது, மாரடைப்பால் மரணமடைந்தார்.

# 36. தனக்குத் தானே சரித்திரம்; தன்மானத்தோடு திரும்புகிறது!

*1950-ஆம் ஆண்டு!*

*சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார், இந்திய விடுதலை பெற்ற பிறகு, இந்திய முதல் கவர்னர் ஜெனரலாக 1948-ஆம் ஆண்டு ஜூன் 21-ஆம் நாள் முதல் 25-ஜனவரி 1950-ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தார்!*

*தலைவர் காமராஜ், புதுதில்லி போகும்போதெல்லாம், இராஜாஜியை சந்திப்பார்! தமிழ்நாடு அரசியல் நிலைமைகளையும் - காங்கிரஸ் கட்சியின் போக்குகளையும் இருவரும் மனம்விட்டுப் பேசுவார்கள்!*

## டில்லி சென்ற பின்பும் இராஜாஜியின் தமிழக அரசியல்!

*1950-ஆம் ஆண்டில், புதுடில்லி சென்ற காமராஜ், இராஜாஜியை ஒருமுறை சந்தித்தபோது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலைப் பற்றிப் பேச்சு எழுந்தது.*

*''எப்போது வருகிறது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல்?'' என்றார் இராஜாஜி!*

*''ஆகஸ்டு மாதம் 29-ஆம் நாள் நடக்க இருக்கிறது'' என்றார் தலைவர் காமராஜ்!*

*''அந்த தேர்தலில், 1940-ஆம் ஆண்டில் தங்களிடம் போட்டியிட்டுத் தோற்றுப்போன திரு. கோவை சுப்பையாவைத் தேர்வுசெய்தால் என்ன?'' என்று கேட்டார் இராஜாஜி.*

*''தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் கோவை சுப்பையா வெற்றி பெறுவதில் எனக்கொன்றும் கருத்துவேறுபாடு இல்லை'' என்றார் தலைவர் காமராஜ்!*

*கோவை சி.பி. சுப்பையா அவர்களிடம், இராஜாஜி - காமராஜரிடம் கலந்துரையாடிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் பற்றிய மேற்கண்ட விவரங்களை எல்லாம் தெரிவித்தார்!*

சுப்பையாவிடம் நடைபெறப் போகும் தேர்தலைப் பற்றிக் கூறியவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலான திரு இராஜாஜி அல்லவா?

அதனால், அவர் இரவும் பகலும் ஓயாது தலைவர் தேர்தலில் தான் வெற்றி பெற்றிடச் சுறுசுறுப்பான பணிகளில் ஈடுபட்டார்! இது இயல்புதானே!

"History repeats itself" என்ற கருத்துப்படி, 1940-ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் நாள், சென்னை மாநகரில் நடைபெற்ற ஒரு சரித்திர நிகழ்ச்சி மீண்டும் அதே சென்னையில் 1950-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ஆம் நாள் நடந்தது.

முடிவு என்னவென்றால், அதே தலைவர் தேர்தல் போட்டியில் பழைய ஆட்கள் பெற்ற வெற்றியும் - தோல்வியும் தான் நடந்தது!

கோவை சுப்பையா, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லாம், காங்கிரஸ் தலைவராகத் தன்னைத் தேர்ந்தெடுக்குமாறு எல்லோரையும் ஒவ்வொருவராக நேரிலேயே சென்று பார்த்துக் கேட்டுக் கொண்டார்!

சுப்பையா, தலைவர் தேர்தல் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டுச் செயல்படுவதைக் கண்ட காமராஜ் அணியினர் பலர், தலைவர் காமராஜ் அவர்களிடம் அதைத் தெரிவித்தது மட்டுமல்ல; அவர் தேர்தலிலே நிற்பது தங்களுக்குத் திருப்தி இல்லாத ஒன்று என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

## வரலாறு மீண்டும் திரும்புகிறது!

அப்போது காமராஜ், சுப்பையா மீது அதிருப்திப் பட்டவர்களிடம், ''ஏன் அவரும்தான் ஒருமுறை தலைவராக வந்து போகட்டுமே! அதனாலே, நமக்கு என்ன நட்டம்?'' என்றும் சமாதானம் செய்தார்!

''இராஜாஜி அணி மீண்டும் தலைவராக வருவதைக் காட்டிலும், தாங்களே இந்தமுறையும் தலைவராக வரலாமே!'' என்று எதிர்ப்பாளர்கள் எதிர்பதில் கூறினார்கள்!

வேறு வழியில்லாத தலைவர் காமராஜ், தொண்டர்கள், பிற மாவட்டக் காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோர் உணர்ச்சியை, ஒருமித்த கருத்தை மீற முடியாதவராய், இறுதியில், அவரே தலைவர் தேர்தலில் நிற்கப் போவதாகத் தமது அணியினர் அனைவருக்கும் தெரிவித்துவிட்டார்.

இதனைக் கேள்விப்பட்ட கவர்னர் ஜெனரல் இராஜாஜி, திகைப்படைந்தார்! இருந்தாலும், போட்டியிலே இருந்து சுப்பையாவை விலகுமாறு அவர் கூறவில்லை. அதனால், சுப்பையா மேலும் பரபரப்புடன் பணியாற்றினார்.

தேர்தல் ஆகஸ்டு 29-ஆம் நாள் மிகவும் சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் நடைபெற்றது.

கவர்னர் ஜெனரல் இராஜாஜியின் நேரடி ஆதரவு சுப்பையாவுக்கு உள்ளதால், தேர்தல் முடிவு எப்படி அமையுமோ என்று தமிழகக் காங்கிரஸ்காரர்கள் பொறுப்புடன் தத்தமது வாக்குகளை அளித்தார்கள்.

அதன்முடிவு; காமராஜ் 155 வாக்குகளைப் பெற்றார்! கோவை திரு. சுப்பையா 99 ஓட்டுக்களைப் பெற்றார்! தலைவர் காமராஜ் தேர்தலில் மீண்டும் வாகை சூடியதாக அறிவிக்கப்பட்டது.

1940-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தேர்தலில், இதே கோவை சுப்பையா இராஜாஜி அணியினரின் ஆதரவோடு தலைவர் காமராஜ் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு 100 வாக்குகளைப் பெற்றுத் தோல்வி கண்டவர்!

தலைவர் காமராஜ், அந்தத் தேர்தலில், அவருடைய அரசியல் ஆசானான சத்தியமூர்த்தியின் ஆதரவோடு, அப்போதும் இதே கோவை சுப்பையாவையும்- இராஜாஜி அணியையும் எதிர்த்து முதன் முதலில் போட்டியிட்டு 103 ஓட்டுக்களைப் பெற்று வெற்றி அடைந்தார்!

1940-ஆம் ஆண்டில் இராஜாஜி அவர்கள் சாதாரண இராஜாஜி! முன்னாள் கவர்னர் ஜெனரல் என்ற தகுதியைப் பெறாத இராஜாஜி! ஆனால் அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களாலும், காந்தியடிகளாலும் ஆதரவு காட்டப்பட்ட செல்வாக்குப்பெற்ற இராஜாஜி ஆவார். அத்தகைய செல்வாக்கை எதிர்த்து முறியடித்து தலைவர் காமராஜ் அந்த நேரத்தில் 103 வாக்குகளைப் பெற்றார்!

தமிழ் நாட்டின் அரசியலிலும் சரி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலேயும் சரி, அப்போது முதன் முதலாகப் பிளவுபட்ட காமராஜ் அணி - இராஜாஜி அணி என்ற 'அணிப்பிளவுநோய்' வளர்ந்து - முற்றி- தீராத நோயாகி - அது அவர்கள் இருவரும் சாகும்வரையிலும் இரத்தமும் - சீழுமாய் ஒழுகி நாற்றமடித்துப் புரையோடி நீடித்திருந்தது.

1950-ஆம் ஆண்டான இந்த முறை, தலைவர் காமராஜ், கோவை சுப்பையாவை எதிர்த்துப் போட்டி போட்டு 155 வாக்குகளைப் பெற்று சுப்பையாவைத் தோற்கடித்தார்.

1950-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், 20-ஆம் நாள், நாசிக் என்ற வடநாட்டு நகர் ஒன்றில் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை நடந்தது.

அதாவது, "History repeats itself" என்ற வகையில், அதே சரித்திர சம்பவம் மீண்டும் நகரில், அதே கட்சியில், அதே இரு ஆட்களுக்கு இடையே அதே தேர்தலில் நடந்தது என்பது வரலாறு பெற்ற பெருமையோ, சிறுமையோ யாரறிவார் இதை? பராபரமே!

## தலைவர் பதவிக்கு மூவர் போட்டி!

அந்தப் பேரவையில், அடுத்த காங்கிரஸ் தலைவர் யார் என்பதற்கான தேர்தல் நடைபெற்ற போது, காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் மூவர் போட்டிக் களம் கண்டனர்!

புருஷோத்தம தாஸ் தாண்டன், ஆசார்ய கிருபளானி, சங்கர் ராவ் தேவ் என்பவர்களே அந்தக் காங்கிரஸ் மூவர்!

மும்முனைப் போட்டியில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் 1306 வாக்குகளைப் பெற்று புருஷோத்தமதாஸ் தாண்டன் வாகை சூடினார்; காங்கிரஸ் கட்சித் தலைவரானார்!

ஆசார்ய கிருபாளனி 1092 வாக்குகளும், தேவ் 202 வாக்குகளும் பெற்றுத் தோல்வி கண்டதால், தாண்டன் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபையின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

ஏன் இதை இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், 1948-ஆம் ஆண்டில் நடைபெற்ற அகில இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபைத் தேர்தலில், தலைவர் காமராஜ், அப்போது திரு. தாண்டனைக் கடுமையாக எதிர்த்ததுபோல, 1950-ஆம் ஆண்டுத் தேர்தலில் அவர் எதிர்க்கவில்லை என்பதற்காகவே!

காரணம், அப்போது காந்தியடிகளால் சுபாஷ்பாபுவை எதிர்த்து நிறுத்தப்பட்ட பட்டாபி சீதாராமையா தோற்றுப் போய், காந்தியண்ணல் பெயருக்கே ஒரு சிறு களங்கம் ஏற்பட்டிருந்தது.

அதனால், காந்திபெருமான் இறந்த பிறகு மீண்டும் பட்டாபி இந்திய காங்கிரஸ் தலைவராக நிறுத்தப்பட்ட ஒரு வாய்ப்பு உருவானதால், இப்போது அவர் வெற்றிபெற்று, காந்தியடிகளுக்கு ஏற்பட்ட அந்தச் சிறுகளங்கம் துடைக்கப்படல் வேண்டும் என்ற

தணியா வேட்கையால்தான், அப்போது தாண்டனை எதிர்த்து, 1948-இல் காமராஜ் அவர்கள் கடுமையாகப் பணியாற்றி, தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் வாக்குகளைச் சிதறாமல் சேகரித்துப் போட்டு, பட்டாபியை வெற்றிபெற வைத்தார்!

இந்த முறை, அதாவது 1950-ஆம் ஆண்டின்போது, யாராவது ஒருவர் காங்கிரஸ் தலைவராக வரட்டும் என்ற கட்சிக் கொள்கைக்காகத் தலைவர் காமராஜ் பணியாற்றியதால், புருஷோத்தமதாஸ் தாண்டன் தக்க பெரும்பான்மை ஓட்டுகளுடன் வாகை சூட நேர்ந்தது.

அதுமட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சிதான் பெரியதே தவிர, தனிநபர் விருப்பு வெறுப்பு அல்ல என்ற இலட்சியத்தோடு தலைவர் காமராஜ் நின்று விட்டார் என்பதை அகில இந்திய அளவிலுள்ள தலைவர்கட்கெல்லாம் நன்கு தெளிய வைத்தார்!

அதனால், தாண்டன் வெற்றி பெறுவதிலே தலையிடாமல், காங்கிரஸ் கட்சிக்காக வெற்றியைத் தேடிக் கொடுத்து தேசியத்தின் ஒருமைப்பாட்டிற்கும் தலைவர் காமராஜ் பெருமை தேடித் தந்தார்.

தாண்டன் தலைவரானதும், அவர் தேசிய காங்கிரஸ் கட்சிக்குச் செய்த அரிய பணி என்ன? பிரதமர் நேருவையும் - அவரது அமைச்சரவைப் பணிகளையும் மிகக் கடுமையாக எதிர்த்ததுதான்!

ஒவ்வொரு அரசியல் பிரச்னையிலும், நேரு அவர்களைச் சாடினார்! பகிரங்கமாகவே ஒரே கட்சிக்குள்ளே களங்களைக் கண்டு குறைகளைக் குப்பைப்போலக் குவித்தார்!

தாண்டன் இவ்வாறே நடந்தால், மத்திய மந்திரிசபை எப்படி அமைதியாக இயங்கும் என்ற சங்கடம் காங்கிரஸ் தலைவர்கள் இடையே இந்திய அளவில் மீண்டும் பரவலாக எழுந்தது. குழப்பத்திலே மிதந்தன மத்திய அரசியல் சம்பவங்கள்!

பிரதமர் ஜவஹர்லால் நேருவோடு, யார் யார் முழுமனதுடனும் - திருப்தியுடனும் ஒத்துழைக்க மாட்டார்களோ, அவர்களை ஒன்றுதிரட்டி, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்குரிய செயற்குழுவை தாண்டன் நியமனம் செய்தார்!

பிரதமர் நேருவுக்குத் தாண்டனது இந்தப் பழிவாங்கும் செயல்களால் நாளும் இடையூறுகள் தான் தொடர்ந்து உருவாயின!

அதனால், பிரதமர் நேரு, தாண்டன் அமைத்த செயற்குழுவை மாற்றியமைக்குமாறு கேட்டுக் கொண்டார். தாண்டன் பிரதமர் நேரு வார்த்தைகளை அவமதித்தார்!

## நேருவின் இராஜிநாமா?

''செயற்குழுவை மாற்றியமையுங்கள்! என்னால் இந்தச் செயற்குழுவில் இயங்க முடியாது'' என்றார் நேரு.

செவிடன் காதில் ஊதிய சங்குபோல, எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து செயல்பட்டார் திரு. தாண்டன்!

மீண்டும் நேரு கேட்டார்! ''செயற்குழுவை மாற்றி அமைக்கிறீர்களா அல்லது எனது பதவி விலகலை ஏற்கிறீர்களா?'' என்றார்.

அதற்கும் தாண்டன் ஊமையாகிவிட்டார்! உடனே பிரதமர் நேரு தனது பதவியைவிட்டு விலகுவதாக அறிவித்தார்!

## காமராஜ் ஏன் தாண்டனை எதிர்த்தார்!

1948-ஆம் ஆண்டின் அகில இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் தேர்தலில், தலைவர் காமராஜ், தாண்டனை ஏன் மிகக் கடுமையாக எதிர்த்தார்? பட்டாபி வெற்றிக்காக அரும்பாடுபட்டார்? என்ற அவரது கட்சி இலட்சிய உழைப்பின் உயர்வு - பெருமை, எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் இப்போது மேலும் நன்றாகவே - பகிரங்கமாகவே புரிந்தது!

அதனால், காமராஜரின் எதிர்கால அரசியல் நுட்பத்தை எடைபோடும் திறமையை, அகில இந்திய அளவில் அனைவரும் புரிந்துகொண்டு வெளிப்படையாகவே அவரைப் பாராட்டினார்கள்!

இந்நிலையில், அகில இந்திய தேசிய மகா சபைத் தலைவர் தாண்டனுக்கும், மத்திய அமைச்சரவையின் பிரதமராகப் பணியாற்றிடும் ஜவகர்லால் நேருவிற்கும், உடனடியான பலப் பரீட்சை அகில இந்திய அளவில் உருவாயிற்று!

1951ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் நாள், அகில இந்திய காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது.

''எனது வாரிசு நேருதான்'' என்று, காந்தியடிகள் அடையாளம் காட்டிய அரசியல் வாரிசுதான் எங்களுக்குத் தேவை'' என்று தலைவர் காமராஜ், தில்லியை நோக்கிக் குரல் கொடுத்தார்!

''நேரு இல்லாவிட்டால் நாடுமுன்னேறாது. காந்தியடிகள்கண்ட இலட்சியங்கள் எல்லாம் அழிந்துவிடும்'' என்று, திட்டவட்டமாகத் தலைவர் காமராஜ் அறிக்கை விடுத்தார்.

தமிழ் நாட்டில், நேருவின் அரசியல் பலத்தை நிலை நாட்டிட மக்கள் ஆதரவை அவர் திரட்டினார்!

கேரளக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிடமும் - ஆந்திரக் காங்கிரஸ் கட்சி செயல் வீரர்களிடமும் பிரதமர் நேருவின் கரத்தைப் பலப்படுத்தத் தீவிரமான ஆதரவைச் சேகரித்தார்.

## நேருவின் பலத்தை காமராஜ் வளர்த்தார்!

தென்மாநிலங்களிலே காமராஜ், பிரதமர் நேருவிற்காகத் திரட்டிய கட்சிப் பலத்தைக் கண்டு தாண்டன் திணறினார் - திகைத்தார்!

அகில இந்திய காங்கிரசில் தாண்டன் பலம் குறைந்து- பிரதமர் நேருவிற்குத் தென்மாநிலங்களில் பலம் அதிகரித்து வருவதைக் கண்ட தாண்டன், காங்கிரஸ் கட்சி கூடும் முன்பே, தனது தலைவர் பதவியை ராஜிநாமா செய்து விட்டார்.

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவை மாற்றி அமைக்க வேண்டும் என்று, ஜவஹர்லால் நேரு கூறுவதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை - ஆதாரமும் இல்லை என்ற காரணத்தை தாண்டன் தனது அறிக்கையிலே சுட்டிக்காட்டிவிட்டுப் பதவி விலகினார். அப்போது கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் செயற்குழு கட்சிக் கூட்டம், தாண்டன் செய்துவிட்ட ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டது.

அதே கூட்டத்தில், எவ்விதப் போட்டியுமில்லாமல், நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே நோக்கமெனக் கொண்ட காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் சிந்தித்து, பண்டித நேருவையே அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக்கினார்கள். பிரதமர் நேருவின் கரத்தைப் பலப்படுத்தத் தென்மாநிலங்களிலே தலைவர் காமராஜ் உழைத்த உழைப்பு, அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்கும் ஓர் எழுச்சியாய் அமைந்தது!

தாண்டனின் நேரு எதிர்ப்பு, நாட்டில் வளருமானால், அது அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றியைப் பெரிதும் பாதிக்குமே என்று எண்ணிய காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும், ஒருமனதாகக் கூடி கட்சியின் தலைவர் பதவியினையும் - பிரதமர் பதவியையும் நேரு அவர்களிடமே ஒப்படைத்தார்கள்!

இந்தச் சூழ்நிலையைத் தலைவர் காமராஜ்தான் தாண்டனை எதிர்ப்பதன் மூலமும், நேருவை ஆதரிப்பதின் வாயிலாகவும் நாட்டில் நிலை நாட்டினார் என்பதற்காக, எல்லாரும் அவரைப் பாராட்டினார்கள்!

தலைவர் காமராஜ் அவர்கள் மதி நுட்பமும் - செயல் திறமும் இந்திய நாட்டிற்கு அப்போதிருந்தே பலமாக அறிமுகமானது. அந்தச் சம்பவத்தினால் அவருக்கு அகில இந்திய செல்வாக்கும் பரவலாகவே வளர்ந்து வந்தது.

## சத்திய மூர்த்தி தொண்டு!

1935- ஆம் ஆண்டு லக்நௌ என்ற இலட்சுமணபுரியில் இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பிரதமர் பண்டித நேரு தலைமை வகித்தார்.

இந்த ஆண்டில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு எஸ். சத்திய மூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டதும், காங்கிரஸ் கட்சிச் செயலாளராகக் காமராஜ் அவர்களைச் சத்திய மூர்த்தி நிறுத்தி வைத்தார்.

''காங்கிரஸ் கட்சிச் செயலர்ளராக இருந்திட எனக்குத் தகுதியில்லை'' என்று காமராஜ் கூறியபோது, ''நீ செயலாளராக இருக்கத் தகுதியில்லை என்றால், எனக்கும் தலைவராக இருக்கும் தகுதி இல்லை'' என்று சத்திய மூர்த்தி கூறி, காமராஜ் அவர்களை வற்புறுத்திச் செயலாளராக்கினார். அவரது ஆசானின் ஆசியே எதிர்காலத்தில் அவருக்கு ஆணிவேராக ஆழ ஊன்றியது.

சத்திய மூர்த்தி அவர்கள், தமிழ்நாட்டின் புகழ்மிக்க தலைவர்களுள் ஒருவராக விளங்கினார். சிறந்த வழக்குரைஞர். ஆங்கிலமொழியிலே அவரது 'நா' பல அற்புத உரையாடல்களைப் படைத்தது! தமிழ்ப் பேச்சாளர்களில் அவர் தலைசிறந்த நாவலராக நடமாடினார்!

டில்லியிலுள்ள மத்திய நாடாளுமன்றத்திலும் சரி, சென்னை மாகாண சட்டமன்றப் பேரவையானாலும் சரி, சத்தியமூர்த்தி அவர்களின் பேச்சுகள் எதிர்க்கட்சிகளுக்குச் சிம்ம சொப்பனமாகி அலறவைக்கும் ஆற்றல் படைத்ததாகத் திகழ்ந்தன!

அவருடைய வாதங்கள் அனைத்தும், குறிப்பாகவும் - சிறப்பாகவும் அனைவராலும் பாராட்டத் தக்கவையாக இருந்தன!

1937-ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலிலே, ஜஸ்டிஸ் கட்சியிலே புலிபோன்று கர்ஜனை புரியும் ஆர்க்காடு சர்.ஏ.இராமசாமி முதலியாரை எதிர்த்து, தம் நாவடிக் கிலியை உருவாக்கி, தோல்வியால் அவரைப் படுகாயப்படுத்தி வீழ்த்தியவர் சத்தியமூர்த்தி!

சத்தியமூர்த்தி, காங்கிரஸ் கட்சிக்குக் கட்டுப்பட்டுத் தனது கடமைகளைக் கடைசிவரை ஆற்றினார். அதற்குத் தலைவர் காமராஜ் அவர்கள், தோளோடு தோள் நின்று தமது ஆசானுக்கு அமைச்சர் பதவியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பணியாற்றினார்!

ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடக்காதது மட்டுமல்ல, நம்பிக்கைத் துரோகத்திற்கும் பலியானார்! அதனால், டில்லி மத்திய சட்டசபையிலேயே சத்தியமூர்த்தி தொடர்ந்து உறுப்பினராகப் பணியாற்றினார்!

அன்று முதல் தான் காங்கிரஸ் கட்சியிலே அணிப் பிளவுகள் ஏற்பட ஆரம்பித்தன. இராஜாஜி குழு ஓர் அணியாகவும், சத்தியமூர்த்தி குழு ஓர் அணியாகவும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பிளவு கண்டது!

இராஜாஜிக்கு எதிராக, தமிழக அரசியல் திறமையாளர்களான தலைவர் காமராஜ், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், பி.எஸ். குமாரசாமி ராஜா போன்றவர்களை எல்லாம் சத்தியமூர்த்தி தனது அணியிலே சேர்த்துக் கொண்டார்!

## பாரதியார் பாடல் சத்தியமூர்த்தி சேவை!

இந்தியா சுதந்திரம் பெறவேண்டும் என்ற தணியாத வேட்கையால், சி.சுப்பிரமணி பாரதியார் அவர்கள் விடுதலை கீதங்கள் பலவற்றைப் பாடினார்!

அந்தப் பாடல்கள் எல்லாம், மக்கள் மனதை ஆவேசமாகக் கவர்ந்தன! அதனால் புதியதோர் தேசிய எழுச்சி மக்களிடையே அரும்பியது! அதைக் கண்ட ஆங்கில ஆட்சி மருண்டது! எனவே, அவ்வாறு வளர்ந்து வரும் நாட்டுப்பற்றை நசுக்கிட, ஆங்கிலேயராட்சி சட்டங்கள் மூலமாக பாரதியார் பாடல்களுக்குத் தடைச் சட்டம் போட்டது.

சூரியன் மறையாத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில், அப்போது பர்மா நாடும் அடிமையாகச் சிக்கி அல்லல்பட்டது.

மகாகவி பாரதியாரின் தேசிய கீதப் பாடல்களை, பர்மாவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்கள் எல்லாம் விடுதலைப்பற்றோடு பாடிப்பாடி மகிழ்ந்தார்கள்!

பர்மா ஆளுநராக இருந்த ஆங்கிலேயர், 'பாரதியார் பாடல்களைப் பாடக்கூடாது' என்று அங்கு வாழ்ந்த தமிழருக்குத்

தடைச்சட்டம் போட்டார்! இந்தத் தடை விதிப்பு இந்தியாவெங்கும் பரவ ஆரம்பித்தது.

அப்போது தேசிய நாடக நடிகர்களாகத் திகழ்ந்து புகழ்பெற்றிருந்த தியாகி எஸ்.எஸ். விசுவநாததாஸ், எஸ்.ஜி. கிட்டப்பா, பாவலர் கிருஷ்ண சாமி, கே.பி. சுந்தரம்பாள், டி.கே. சண்முகம் போன்றவர்கள் எல்லாம், சுதந்திர வேட்கையை ஊட்டிடும் பாரதியார் பாடல்களையும், வெள்ளையராட்சி எதிர்ப்புப் பண்களையும், தமிழ்நாட்டின் நாடக அரங்குகளிலே பாடிப்பாடி ஆங்கிலேயரின் தடைச்சட்டத்தைத் தவிடு பொடியாக்கி வந்தார்கள்!

தமிழகத்து ஊர் தோறும், வீதிகளில் எல்லாம், பொதுக் கூட்டங்களிலே, நாள்தோறும் தியாகி சுப்பிரமணிய சிவா போன்ற தேசபக்தர்கள், பஜனைக் குழுக்களாகவும், கூத்துப் பாடல்களாகவும் பாரதி பாடல்களைப் பாடிப்பாடி வெள்ளையர் தடைச் சட்டத்தைத் தகர்த்தெறிந்தார்கள்.

குறிப்பாகக் கூறுவதானால், தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் தொழுநோயால் தாம் துன்புற்ற நிலையிலும்கூட, தர்மபுரி நகர், பாப்பாரப்பட்டி வீதிகளிலே எல்லாம் பாரதியார் பாடலைப் பாடிப் பாடி, சுதந்திர வேட்கையைப் புரட்சியாக மாற்றித் தடைச் சட்டத்தைத் தூள் தூளாக்கி வந்தார்!

சென்னை மாநில சட்டப் பேரவையின் உறுப்பினராக அப்போது பணியாற்றிவந்த திரு எஸ். சத்திய மூர்த்தி, ஆங்கிலேயர் விதித்திருந்த தடையை எதிர்த்து, சட்டப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்! கனல் தெறிக்கப் பேசினார்! பாரதியார் பாடல்களின் சிறப்புக்களை விளக்கி - பாடினார்!

சத்தியமூர்த்தியின் அந்த வீரஉரைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன! அதன் வாயிலாகச் சத்தியமூர்த்தி யின் நாவன்மையினையும் - பாரதியார் பாடல்களின் வீர உணர்ச்சி களையும் அவை பாராட்டி எழுதின!

சத்தியமூர்த்தியின் உரையைப் பத்திரிகையில் படித்த பொதுமக்கள், மாணவர்கள் அனைவரும் பாரதியார் பாடல்களை ஒவ்வொரு ஊரிலும் மூலை முடுக்குகளில் எல்லாம் பாடிக் களித்து, வெள்ளையரின் தடைச் சட்டத்தை மீறி, தேசிய உணர்ச்சியை நாட்டிலே பரப்பினார்கள்; நிலை நிறுத்தினார்கள்.

இத்தகைய அரிய அஞ்சாமையினையும், நாவன்மையினையும், செயலாற்றும் திறனையும் கொண்ட ஓர் உண்மையான தேச பக்தர் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள்!

அத்தகையவர், தமது பெருமையை மறந்து, ''தலைவர் காமராஜ் திறமைகளை வியந்து, காங்கிரஸ் கட்சியில் நீ செயலாளராக இருக்க உனக்குத் தகுதி இல்லை என்றால், தலைவராக இருக்கும் தகுதி எனக்கும் இல்லை!'' என்று கூறினாரென்றால், காமராஜ் அவர்களின் தகுதியை நாம் எவ்வாறு புகழ்வது என்று எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

## டில்லி தலைவர்களுக்கு காமராஜ் அறிமுகம்!

மத்திய சட்டசபைக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், காமராஜ் அவர்கள் ஒருமுறை அங்கே சென்றார்! டில்லியில் சத்தியமூர்த்தியைச் சந்தித்தார்!

தலைவர் காமராஜ் டெல்லி வருகை தந்ததைக் கண்ட சத்தியமூர்த்தி கழி பேருவகை கொண்டார் - வடநாட்டில் உள்ள முக்கியமான காங்கிரஸ் தலைவர்களுக்கு காமராஜ் அவர்களை அறிமுகப்படுத்தியபோது, ''காமராஜ், எனது அரசியல் ஆலோசகர், எனது நண்பர், தமிழ் நாட்டின் தலைசிறந்த ஊழியர்'' எனத் திரும்பத் திரும்ப ஒவ்வொருவரிடமும், ''Sri Kamaraj is an out standing Congress worker in Tamil Nadu. He is not only my Colleague, but also my Counsellor'' என்று மகிழ்ச்சி பெருகக்கூறினார் என்றால், அவரது உயர்ந்த உள்ளத்தின் மகிழ்ச்சி அளவை எதற்கு ஒப்பிடுவதோ!

தலைவர் காமராஜ் அவர்களின் இத்தகைய ஓர் அரசியல் ஆசான், நாவலர் சத்தியமூர்த்தி எவ்விதப் பயனையும் காங்கிரஸ் கட்சியில் அனுபவிக்கவில்லை. தரித்திரத்தோடு போராடியபடியே 1943-ஆம் ஆண்டு மார்ச் 27-ஆம் நாள், சென்னை மருத்துவமனையிலே காலமானார்! அப்போது காமராஜ் அவர்கள் தனது அரசியல் ஆசானின் பெரும்பயணத்திலே கூட கலந்துகொள்ளமுடியாமல், அலிபுரம் சிறையிலே அடைபட்டுக் கிடந்தார்! தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக 1949-ஆம் ஆண்டில்தான், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் வந்தார்!

# 37. வீரமிருந்தால் என்னைச் சுடு! பொது மக்களை மிரட்டாதே!

திருச்சி மாவட்டக் காங்கிரஸ் கட்சிச் செயல்வீரரான திரு. டி.எஸ். அருணாசலம் திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினார்!

மற்ற மாவட்டக் காங்கிரஸ்காரர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு பேசினார்கள்!

தலைவர் காமராஜ் பேச முடியாதபடி மேடையை நோக்கி வெங்காய வெடிகுண்டுகளை எதிர்க்கட்சிக்காரர்கள் வீசினார்கள்.

வெடித்த குண்டுகளைக் கண்ட பொது மக்கள் மூலைக் கொருவராக நாலா பக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தார்கள். அதைக் கண்டு அஞ்சாத தலைவர் காமராஜ், திடீரென எழுந்து மிக ஆவேசமாகப் பேசும்போது,

''கூட்டத்திலே கலவரம் ஏற்படுத்த எண்ணாதே! வெடிகுண்டுகளை வீசிப் பொதுமக்களைப் பயமுறுத்தாதே! நீங்கள் வீரம் உள்ளவர்களாய் இருந்தால், என் நெஞ்சை நோக்கித் துப்பாக்கியால் சுடுங்கள்'' என்று தனது சட்டையைத் திறந்து நெஞ்சைக் காட்டிப் பேசினார்!

''காந்தியடிகளைக் கோட்சே சுட்டுக் கொன்றான்! அந்தப் பெருமை எனக்கும் கிடைக்கட்டுமே! வீரர்கள் பரம்பரையிலே வந்தவர்கள் வியாதியால் இறந்தார்கள் என்றால் பெருமை கிடையாது.

க்ஷத்திரிய மரபிலே தோன்றிய தசரதன், இறந்த பின்னர் நாணற் புல்லினாலே உடலைச் சம்ஸ்காரம் செய்து ஈமக் கடன்களைச் செய்தார்கள் என்று இராமாயணத்திலே படித்திருக்கின்றோம்'' என்று வீரத்தின் பெருமைகளை விளக்கிக் காமராஜ் வீராவேசமாகப் பேசினார்!

சிறிது சிறிதாகக் கலைந்து ஒதுங்கிநின்ற கூட்டம், மீண்டும் இறுதிவரை கூடியமர்ந்து தலைவர்காமராஜ் வீர உரையைக் கேட்டது! அவர், தொடர்ந்து பேசிக்கூட்டத்தை முடித்த செயலால் அஞ்சாமை, அரசியலில் தீரம், பேச்சு சாதுர்யம், திறமை ஆகிய குணநலன்கள் அவரிடம் அன்று முழு அளவிலே காணப்பட்டன.

'தலைவர் காமராஜ்தான் காங்கிரஸ்! காங்கிரஸ்தான் காமராஜ்!' என்ற சக்தியைத் தமிழ் நாட்டில் உருவாக்கி, தனது வாணாள் கடைசி வரை அதே சக்தியைக் காட்டிய அரசியல் வித்தகராக அவர் விளங்கினார்.

ஏழை மக்கள் பக்கமே தலைவர் காமராஜ் எப்போதும் இருந்தார்! மக்கள் அவரை ஏழை பங்காளன் என்று புகழ்ந்து, அவர் வார்த்தைகளை அகத்திலே ஏற்று, தேசிய விரோத சக்திகள் அவரைக் கண்டு அஞ்சுமளவிற்கு அவருக்குச் செல்வாக்கை உருவாக்கிக் கொடுத்தார்கள்!

அதனால், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்தையும் சுற்றிச் சுற்றி வந்து, ஆங்காங்குள்ள நிலைகளுக்கேற்ப ஏழைமக்களை வாழவைக்கவே அவர் அரும்பாடு பட்டார்!

தேர்தல் காலத்தில் பொதுமக்கள் தரத்தையும், மனப் போக்கையும் அறிந்து, காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை அந்தந்தத் தொகுதியிலே நிற்க வைத்தார்! அந்தத் தொகுதிகள் பெரும்பாலும் தவறாமல் வெற்றி பெற்றுக் களிப்பிலே நீந்தின!

தலைவர் காமராஜ் அவர்கள், ஆணவமாகப்பேசி யாரிடமும் வீண் சர்ச்சையை உருவாக்க மாட்டார்! யார் எதைக் கூறினாலும் ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்ற பதிலைக்கூறி அமைதிப்படுத்துவார்!

1951-ஆம் ஆண்டு இறுதியில், பிரஜாசோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கிளர்ச்சி செய்தார்கள்! அதனால், தமிழ்நாட்டுக் காங்கிரஸ்கட்சியின்தலைவர்களிடையே குழப்பமும் - அதிருப்தியும் எழுந்து பரவின!

இந்த நேரத்தில், தமிழ்நாட்டு விவசாயிகளிடமும் மனக்குறைகள் குமுறி எழுந்தன! உணவு தானியங்களை அரசு கொள்முதல் செய்வதும், அவற்றை நகர்ப்புற மக்களுக்கும் - இராணுவத்தினருக்கும் வழங்குவதும், தமிழ் நாட்டு மக்களுக்குப் பெரிய தலைவலிப் பிரச்னையாக இருந்தன.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலத்திலிருந்தே உணவுப் பங்கீட்டுக் கடைகளில் பெருத்தகுழப்பமும், சரிவர உணவுப் பொருட்கள் வழங்க இயலா நிலையும் அப்போது மாநில அரசுகளுக்கு ஏற்பட்டன!

## கொள்முறையில் ஊழல் – ஊடுருவல்!

ஒவ்வொரு விவசாயியும் அவரவர் குடும்பத் தேவைக்குப் போதுமானதை எடுத்துக் கொண்டு உபரியாக இருக்கும் உணவு

தானியம் அனைத்தையும் அரசுக்குக் கொடுத்து விடவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

இந்தக் கொள்முதல் முறையில், கீழ்மட்ட அதிகாரிகளின் ஊழல் வளர்ந்தது! உபரி தானியம், பண்ணை விவசாயிகளிடம் எவ்வளவு உள்ளது என்ற மதிப்பீட்டில், பெரிய விவசாயிகளிடத்தில் அளவைக் குறைத்து, மதிப்பிட்டனர் அதிகாரிகள்!

உபரி தானியங்களை ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்காமல், வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்கப் பெரிய பண்ணைக்காரர்கள் முயன்றார்கள்.

அவ்வாறு வெளியே எடுத்துச் செல்வது குற்றமென்று, அதற்கான அனுமதியை வழங்கிட அரசு மறுத்தது!

உணவு தானியங்களை நாம் பாடுபட்டு உற்பத்தி செய்கின்றோம்! நம்மைத் திருடர்கள் போல்நடத்துகின்றதே அரசாங்கம்! என்ற எரிச்சலும் பண்ணை விவசாயிகளுக்குள் உருவாயிற்று!

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வராக இருந்தபோது, மத்திய அரசு செய்கின்ற இப்படிப் பட்ட கொள்முதல் ஏற்பாட்டையும், உணவுப் பங்கீட்டு முறையையும் அவர் கடுமையாகவே எதிர்த்தார்! காரணம், அவர் விவசாயி! கிராம மணியம் புரிந்தவர்!

அவருக்குப் பிறகு பிரதமராக வந்த பி.எஸ். குமாரசாமி ராஜா இந்த விவகாரத்தில் தாம் எதுவும் செய்யமுடியாது; இது மத்திய அரசின் ஏற்பாடு'' என்று வாளாவிருந்து விட்டார்!

ஆட்சி புரியும் ஒவ்வொரு மாநில காங்கிரஸ் கட்சி அரசுக்கும் இந்தச் செயல்கள் பெரிய தலைவலிப் பிரச்னைகளாகி விட்டன!

ஆனால் எதிர்க்கட்சிகள், விவசாயிகள் குறைகளைத் தமது அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டதால், அடுத்து வரும் 1952-ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுமா? என்ற சந்தேக நிலை பரவலாகவே அனைவரிடமும் உருவாகலாயிற்று!

உணவுப் பங்கீட்டுக் கடைகளில் ரேஷன் வாங்கிவந்த பொதுமக்களிடையே, உணவுப் பற்றாக்குறைகள் பெரிய நெருக்கடிகளையும், மனக் குறைகளையும் உண்டாக்கின!

அதனால், வெளியே உள்ள பொதுக் கடைகளில் உணவுப் பொருட்களைப் பொதுமக்கள் அதிக விலை கொடுத்து வாங்கும் கட்டாய நிலை உருவாயிற்று!

திருமணம், வேறுபல வெவ்வேறு விழா நிகழ்ச்சிகள், எதனையும் மக்கள் விரும்பியவாறு - மனமார நடத்த முடியாமல், எத்தனை பேரை விருந்தினராக ஏற்பது என்ற விருந்துக் கட்டுபாட்டையும் கொண்டு வந்தது தமிழ்நாட்டு அரசு!

அரசாங்கத்தில் இந்தக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரிகள், ஆங்காங்கே ஆளுக்கேற்றவிதமாக, பாரபட்சமான முறைகளிலே நடந்துகொண்டு, அவர்கள் ஊழலை ஏற்படுத்தினார்கள்!

## பொதுமக்கள் விரோதச் செயல்!

இந்தப் பொதுமக்கள் விரோதச் செயல்களால், 1952-ஆம் ஆண்டில் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுமா? என்ற ஐயப்பாடு நிலவியது.

அப்போதைய சென்னை மாகாணம் என்று கூறப்பட்ட மாநிலப் பகுதி தமிழ்நாடு, ஆந்திரத்தின் கடலோர மாவட்டங்களும், கேரளத்தில் மலபார் மாவட்டமும், கர்நாடகத்தின் பெல்லாரி, தெற்குக் கன்னட மாவட்டங்களும் அடங்கியதாக இருந்தது.

அதனால், அந்தந்த மாவட்டங்களில் எல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு ஓங்கி வளர்ந்து வந்திருந்தது.

காங்கிரஸ் கட்சிக்கு நேர் சரியான பலமுள்ள கட்சியாகப் பொதுவுடைமைக் கட்சி வளர்ந்திருந்தது!

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியிலே பார்ப்பன ஆதிக்கம் மேலோங்கி விட்டது என்ற காரணத்தையும், அதற்கான வேறு சில காரணங்களையும் கூறித் தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் காங்கிரஸ் கட்சியை விட்டுப் பிரிந்து போய், நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்று உருமாறி மாறி, இறுதியிலே திராவிடர் கழகமாகிப் பெரும் செல்வாக்குடன் நடமாடினார்!

'பெரியார் அவர்கள், மக்களுக்குத் தான் கூறிய கொள்கைக்கேற்ப நடவாமல் எதிர்விரோதமாக நடந்தார்' என்ற தத்துவப் போராட்டத்தை எழுப்பி, அதற்கு மணியம்மையார் திருமணத்தைக் காரணம் காட்டி, திராவிடர் கழகத்திலே இருந்து பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1949-ஆம் ஆண்டு புதிய கழகம் தோன்றியது. அது காங்கிரஸ் கட்சிக்கு ஈடுகொடுக்கும் பலமுள்ள நிலையில் வேகமாக வளர்ந்து வந்தது!

காங்கிரஸ் கட்சியை விட்டுப் பிரிந்து போன பிற எல்லாக் கட்சிகளும் ஆளும் காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து, உணவுப் பற்றாக்குறைகள் போன்ற பல ஆட்சிப் பலவீனங்களைச் சுட்டிக் காட்டி வளர்ந்து கொண்டே வந்தன!

இத்தனைக் கட்சிகளுக்கு இடையேயும், காங்கிரஸ் கட்சிக்குள்ளே வளர்ந்து விட்ட அணிகளின் உட்கட்சிப் பகையையும் எதிர்த்து, தலைவர் காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியையும் - ஆட்சியையும் கட்டுப்பாட்டோடு காப்பாற்றி வரும் கடமையுணர்வுப் பொறுப்போடு இருந்து வந்தார்!

1952-ஆம் ஆண்டில், இந்திய புதிய அரசியல் சட்டத்திற்கேற்ப நாடெங்கும் முதல் பொதுத் தேர்தல் வந்தது! 21வயது அடைந்த ஆண் - பெண் அனைவரும் வாக்களிக்கும் உரிமையை இந்தத் தேர்தல் பெற்றது!

## 1952– தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுமா?

இந்த நிலையில், தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றிபெறுமா? என்ற சந்தேகம் தலைவர் காமராஜ் அவர்களுக்கும் ஏற்பட்டது!

காங்கிரஸ் கட்சியிலே எந்த வேலையும் செய்யாமல், மனவெறுப்போடு ஒதுங்கியிருந்தவர்களை எல்லாம் ஒற்றுமைப் படுத்தி, ஓரணியில் சேர்த்திட தலைவர் காமராஜ் முயன்றார்!

'தினமணி' டி.எஸ். சொக்கலிங்கம், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதில், திருவாளர்கள் இராமகிருஷ்ண ஐயர், வி.சி. பழநிசாமிக் கவுண்டர், மதுரை சிதம்பர பாரதி, சுதர்சனம் நாயுடு, சங்கிலியா பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை, உடையப்பா போன்ற பலரை அக்கூட்டத்திலே பேசவைத்து அவர்களின் கருத்துகளில் உள்ள காரண - காரியங்களை அறிந்தார் நம் காமராஜர்.

காங்கிரஸ் கட்சியில் ஒற்றுமையை உருவாக்கிட, தலைவர் காமராஜ் அவர்களும் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களும் சந்தித்து மனம் விட்டுப் பேசிக் கலந்துரையாடவேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் முக்கிய காங்கிரஸ்காரர்கள் தீர்மானம் செய்தார்கள்.

## ஓமந்தூராரும் காமராஜரும் சந்திப்பு

அதற்கேற்ப, டி.எஸ். சொக்கலிங்கமும் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலரும், தலைவர் காமராஜைச் சந்தித்துப் பேசினார்கள்!

''நான் எதற்கும் தயார். கட்சியில் ஒற்றுமை நீடிக்க நான் குறுக்கே நிற்பேனா?'' என்று தலைவர் காமராஜ் கேட்டார்!

''ரெட்டியாரிடம் கூறுங்கள். தமிழ் நாடு ஆட்சி மன்றக் குழுவில் பாதி இடங்களை அவருக்குக் கொடுக்கத் தயார்! அவரைப் போய் சமாதானப்படுத்தி அழைத்து வாருங்கள்'' என்று தலைவர் காமராஜ் கூறினார்.

அந்தக் குழு, ஓமந்தூராரிடம் சென்றது. அதற்கு அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்தார்.

''நாட்டில் பல ஆண்டுகளாக மழை இல்லை! பஞ்சத்தால் மக்கள் வாடுகிறார்கள். எங்கு பாதிக்கப்பட்ட மக்கள் கஷ்டப்படுகிறார்களோ - அங்கு, உடனடியாக அரசு கஞ்சித் தொட்டிகளைத் திறக்க வேண்டும்''

''வறண்டு தீய்ந்து போன நிலங்களுக்கு நிலவரியை வசூலிக்காமல் நிறுத்த வேண்டும்'' என்று ரெட்டியார் காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமைக்காகவும், தேர்தலில் கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவும், மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளை அவர் விதித்தார்!

இந்த இரண்டு நிபந்தனைகளையும் திரு.பி. எஸ். குமாரசாமி ராஜாவினுடைய அரசுதான் செய்ய வேண்டும்! அவர் அலட்சியமாக அதை விட்டுவிட்டார். அதனால், ஓமந்தூர் ரெட்டியார் ஒத்துழைப்பு காங்கிரஸ் கட்சிக்கு இல்லாமல் போய்விட்டது.

## முதல் பொதுத் தேர்தல்!

1952-ஆம் ஆண்டு தேர்தலும் வந்தது. அதற்குக் காங்கிரஸ் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். முதல் பொதுத் தேர்தல் அல்லவா?

தேர்தல் பொதுக் கூட்டங்கள், வீதிப் பிரசாரங்கள், நுகத்தடி பூட்டப்பட்ட இரட்டைக் காளைச் சுவரொட்டிகள், காந்தியடிகள், பிரதமர் நேரு போன்ற தலைவர்களது திருஉருவப்படங்கள் அச்சடித்த சுவரொட்டிகள், ஊர்வலங்கள், காங்கிரஸ் ஆட்சி அன்று வரை ஆற்றிய சாதனைப் பட்டியல்கள் கொண்ட துண்டறிக்கைகள், இவற்றோடு காங்கிரஸ் ஊழியர்களின் கண்ணயராப் பணிகள் எல்லாம் நடந்து முடிந்த பின்பு, வாக்குப் பதிவுகள் எல்லாத் தொகுதிகளிலும் முடிந்தன!

அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில், 1949-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மிக வேகமாக

வளர்ந்து வந்திருந்தாலும், அதற்கு இது முதல் தேர்தல் என்பதாலே, அந்தத் தேர்தலில் அக்கட்சி நேரிடையாகத் தேர்தல் போட்டியில் கலந்து கொள்ளவில்லை; அதன் வேட்பாளர்களை அதிகார பூர்வமாக நிறுத்தவுமில்லை.

ஆனால், சென்னை சட்டப் பேரவையிலும், டில்லி நாடாளுமன்றத்திலும் 'திராவிட நாடு' பிரிவினை பற்றிய பிரச்னைகள் வந்தால், யார் யார் அதை ஆதரிக்கிறோம் என்று தி.மு.கழக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறார்களோ, அவர்களை ஆதரிப்போம் என்று தி.மு.கழகம் தனது மாநாட்டிலே தீர்மானம் ஒன்று போட்டது! அதன்படியே அந்தக் கட்சி நடந்து கொண்டது!

## தோல்வி! முதல் தேர்தலில் தோல்வி!

அந்த ஒப்பந்தத்தை ஏற்று, கடலூர் எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி, எம்.ஏ மாணிக்கவேலு, திருத்தணி விநாயகம் போன்ற ஏறக்குறைய நூறுபேர்கள் திராவிட நாடு பிரிவினை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.

அவ்வாறு கையொப்பமிட்டவர்களையும், அவர்களது உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி போன்ற பிற கட்சிகளையும், சுயேச்சைகளையும் கூட்டணி பெயரால் தி.மு.கழகம் ஒன்று சேர்த்து ஆதரித்து, பலமான தேர்தல் பிரசாரங்கள், பொதுக்கூட்டங்கள், வாக்குகள் சேகரிப்புப் பணிகள் வாயிலாகக் காங்கிரஸ் கட்சியை முழு மூச்சாகத் தேர்தலில் எதிர்த்தது!

தேர்தல் முடிந்தது! வாக்குகள் ஒவ்வொரு தொகுதியிலும் எண்ணப்பட்டன! பிரதமர் பி.எஸ். குமாரசாமி ராஜா தோற்றார்! அமைச்சர் பக்தவத்சலம் தோற்றார்! பி. கோபாலரெட்டியார் ஆந்திராவிலே தோற்றார்! என். சஞ்சீவ ரெட்டியும் தோற்றார்! இவ்வாறு காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் தோற்றார் தோற்றார் என்ற முடிவுகளே தொடர்ந்தன!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்த வன்னியர் கட்சித் தலைவர் எஸ். எஸ். இராமசாமி படையாட்சி, காமன்வீல் கட்சி எம்.ஏ.மாணிக்க வேலு நாயகர், திருத்தணி விநாயகம், 'தினமணி' நாளேட்டின் உரிமையாளரான ராம்னாத் கோயங்காவைத் தோற்கடித்த திருக்குறள் முனிசாமி போன்ற பற்பலர், அந்தத் தேர்தலில் வாகை சூடினார்கள் என்றே பட்டியல் நீண்டது!

தலைவர் காமராஜ் அவர்கள் சந்தேகப்பட்டபடி 352 சட்டப் பேரவைத் தொகுதிகளின் இடங்களிலே, காங்கிரஸ் கட்சி 152

இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற தனிப்பெரும் கட்சியாகத் தேர்தலில் வந்ததே தவிர, அமைச்சரவை அமைக்கும் பெரும்பான்மை பலத்தை அது பெறவில்லை; முடியவில்லை!

காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடியாக, கம்யூனிஸ்டுக் கட்சி 62 தொகுதிகளிலே வெற்றிபெற்ற கட்சியாகத் திகழ்ந்தது! காங்கிரஸ் கட்சியை எதிர்த்த எதிர்க் கட்சிகள் எல்லாம் ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற ஒரு கூட்டணியை டி. பிரகாசம் தலைமையில் அமைத்தன! இதற்கிடையில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குரிய 1952-ஆம் ஆண்டுத் தலைவர் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சென்னை முன்னாள் பிரதமராக இருந்த பி.எஸ். குமாரசாமி ராஜா கட்சியின் தலைவராக வரவேண்டும் என்று இராஜாஜி கூறினார். டாக்டர் சுப்பராயன்தான் கட்சியின் தலைவராக வரவேண்டும் என்று தலைவர் காமராஜ் கருத்தறிவித்தார்.

## காமராஜ் எதிர்ப்பு!

இந்த இரண்டு அணிகளுக்கும் நடைபெற்ற தலைவர் தேர்தலில் போட்டியிட்ட டாக்டர் சுப்பராயன் வெற்றிபெற்றார்! இருந்தும், காங்கிரஸ் கட்சிப் பணிகளைக் காமராஜ் அவர்கள்தான் பொறுப்பேற்றுக் கவனிக்கும் சூழ்நிலை அப்போது அமைந்து விட்டது.

முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி சட்டசபை உறுப்பினர்கள் 152 பேர்களோடு, சுயேச்சையாக வெற்றி பெற்றவர்களையும் இணைத்துக் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கலாம் என்று காங்கிரஸ்காரர்களிடம் சிலர் கருத்துக் கூறினார்கள்.

ஆனால், தலைவர் காமராஜ் இந்தக் கருத்தை ஏற்கவில்லை; அதற்குரிய ஆதரவையும் அவர் தரவில்லை! பிரதமராக இருந்த குமாரசாமி ராஜாவும் தோற்றுப்போனார்! அதனால், அமைச்சரவை அமைக்கும் விவகாரம் பெருங்குழப்பமாக இருந்தது!

சுதந்திரம் பெற்ற நாட்டில் உருவான முதல் குழப்பம் இது! மக்கள் செல்வாக்கைக் காங்கிரஸ் கட்சி தமிழகத்திலே இழந்தது பரிதாபத்திற்குரிய இழப்பாகவே அன்று அமைந்தது.

# 38. எதிரி - ஆட்சி அல்ல! குலக்கல்வி திட்டம்தான்!

பரிதாபத்திற்குரிய காங்கிரஸ் கட்சி 1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழகத்தில் அமைச்சரவை அமைக்க முடியாமல் பரிதவித்தது!

இருந்தும்கூட, காங்கிரஸ் கட்சியின் அடுத்த முதலமைச்சராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற போட்டியும் - குழப்பமும் - அணி மோதல்களும் மிகப் பலமாகவே உருவாயின!

## இராஜாஜி முதல்வர் காமராஜ் விருப்பம்!

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இராஜாஜியை முதல் மந்திரியாக்கலாம் என்று தலைவர் காமராஜ் விரும்பினார்!

காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடையேயும் இதே கருத்துதான் பரவலாக எழுந்தது - அதுவே முடிவும் ஆயிற்று.

சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை இராஜாஜியே ஏற்க வேண்டும் என்று தலைவர் காமராஜ் அவர்களும், திரு. நீலம் சஞ்சீவரெட்டியாரும் இராஜாஜியைச் சந்தித்துக் கூறினார்கள்!

கல்கத்தாவிலே கூடிய அகில இந்திய காங்கிரஸ் கட்சியும் அதே முடிவைத்தான் தெரிவித்தது. அதனால், அந்த ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி கூடிய பின்பு, தீர்மானம் போட்டு இராஜாஜியை முதன்மந்திரிப் பதவியை ஏற்குமாறு தலைவர்கள், காங்கிரஸ்காரர்கள் அனைவரும் ஒருமனதாகவே பரிந்துரை செய்தார்ககள்!

தில்லி மத்திய மந்திரி சபையில் பிரதமராக இருக்கும் பண்டித நேருவின் கருத்தை அறிந்து வருமாறு இராஜாஜி அதற்குப் பதில் கூறினார்!

பிரதமர் நேரு அவர்களிடம் ஒரு தூதுக்குழு சென்று, தமிழ் நாட்டு அரசியல் நிலையைத் தெளிவாக விளக்கியது.

''யாரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தாலும் அதை நான் ஏற்கிறேன்'' என்று பிரதமர் நேரு தெரிவித்தார். ஆனால், ''ஏதாவது

ஒரு சட்டமன்ற தொகுதியில் அவர் வேட்பாளராக நின்று வெற்றி பெற்று'' வரவேண்டும் என்றார்!

1952-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள், தமிழ்நாடு சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் கூடியது. இராஜாஜி பெயரைத் தலைவர் காமராஜ் அவர்கள் முன்மொழிந்தார்! திருவாளர்கள் என். சஞ்சீவரெட்டி, ஏ.பி. ஷெட்டி, திருமதி குட்டியம்மாள் ஆகியோர் அவர் பெயரை வழிமொழிந்த பின்பு, இராஜாஜி சென்னை மாநில முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதிலே ஒரு சிறப்பு என்னவென்றால், இந்தியா விடுதலை பெற்ற 1947-ஆம் ஆண்டு முதல் சென்னை மாகாணத்தை ஆண்டவர்களுக்கு பிரதமர்கள் என்ற பெயர் இருந்தது.

அவ்வாறு ஆண்ட ஆந்திர கேசரி டி. பிரகாசம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், இராஜாபாளையம் பி.எஸ். குமாரசாமி ராஜா ஆகியோரெல்லாம் பிரதமர்கள் என்றே அழைக்கப் பட்டார்கள்!

அவர்களுக்குப் பிறகு 1952-ஆம் ஆண்டில் திரு. இராஜாஜி சென்னை மாநில ஆட்சித்தலைமைப் பதவியை ஏற்றபோது, அவர் முதலமைச்சர் என்றே அழைக்கப்பட்டார் என்பதை வாசகர்கள் நினைவில் நிறுத்தல் நலம்!

## இராஜாஜி சட்டமன்ற மேலவை நியமனம்!

பொதுத் தேர்தலில் தோற்றுப் போன திரு. குமாரசாமி ராஜா பரிந்துரைத்ததால், தமிழக ஆளுநர் இராஜாஜியைச் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக நியமித்தார்.

இந்த மேலவை நியமனநிலை, தலைவர் காமராஜ் அவர்களுக்குத் தெரிவிக்காமலேயே நடைபெற்று விட்டது என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்!

'சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவி ஏற்பவர் சட்டசபை வேட்பாளராக நின்று வெற்றிபெற்றவராக இருக்க வேண்டும் என்று பிரதமர் நேரு கூறிய நிபந்தனைக்கு விரோதமாக, இராஜாஜி நியமனம் அமைந்து விட்டதே' என்று தலைவர் காமராஜ் அவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டது!

ஆனாலும், இராஜாஜி முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாரே என்ற கட்சிக் கருத்தில் திரு. காமராஜ் எதிர்ப்பேதும் கூறாமல் இருந்துவிட்டார்!

1952 - ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ஆம் நாள், அமைச்சரவையை இராஜாஜி அமைத்தார்! திரு. சி. சுப்பிரமணியம் உட்பட சிலர் அவரது அவையிலே அமைச்சரானார்கள்!

## எதிர்ப்பு நட்பானது!

சிறுபான்மை பலத்தினாலே அமைந்த மந்திரி சபையைப் பெரும்பான்மையாக மாற்றிட இராஜாஜி முயன்றார்!

ஒன்பது சட்டமன்ற உறுப்பினர்களோடு வெற்றிபெற்று சட்டமன்றத்திற்கு வருகை தந்துள்ள திரு. எம்.ஏ. மாணிக்கவேலு நாயகரின் காமன்வீல் கட்சியைக் காங்கிரஸ் கட்சியிலே அவர் சேர்த்துக்கொண்டார்! அதனால், திரு. மாணிக்க வேலரும் மந்திரியானார்!

★ திரு இராஜாஜி, முதலமைச்சரானதும் உடனடியாக ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைவர் காமராஜர் அவர்களிடம் தெரிவித்த கருத்திற்கேற்ப, வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழ்மை மக்கள் பகுதிகளுக்கு இலவச உணவும், கூழ் அல்லது கஞ்சித் தொட்டிகளும் திறக்கப்பட்டன. அன்றாட ஏழைமக்களுக்கான வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட்டன.

அந்தநேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் மறுதேர்தல் 1952 -ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக திரு. எம். பக்தவத்சலம் வரவேண்டும் என்று இராஜாஜி முயற்சி செய்தார்! ஆனால், மீண்டும் தலைவர் காமராஜ் அவர்களே தலைவராக வரவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் விரும்பினார்கள்.

காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தேர்வு செய்யும் கூட்டத்திற்கு முதலமைச்சர் திரு. இராஜாஜி வரவில்லை. அதனால், போட்டியின்றிக் காமராஜ் அவர்களே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இராஜாஜி ஆட்சி செய்த சாதனைகள்!

★ இராஜாஜி ஆட்சியில் அமர்ந்ததும் உணவுப் பங் முறையான ரேஷன் திட்டத்தை உடனடியாக நீக்கி மதுவிலக்கு, தீண்டாமை, விவசாய ஒழிப்புக் கடன்களுச் புதிய சாதனைகள் இயற்றினார்.

★ தஞ்சைச் சாகுபடியாளர் - பண்ணையாளர் பிரச்னைக்குச் சட்டம் வகுத்து சாதனைகள் புரிந்தார்! அதனால், கம்யூனிஸ்டுகள் செல்வாக்கு அங்கங்கே குறைந்தது!

இவ்வளவு செய்த பிறகும்கூட, இராஜாஜி ஆட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை! இராமநாதபுரம், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியினர் இடைத்தேர்தலை ராஜாஜி சந்திக்கும் நிலை நேரிட்டது!

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 1952 -ஆம் ஆண்டு தேர்தலில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலே போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதில் ஒரு தொகுதியிலே இருந்து அவர் ராஜிநாமா செய்ததுதான் அருப்புக்கோட்டை இடைத்தேர்தல்!

## இடைத்தேர்தல்

## தோல்வி!

அந்தத் தொகுதியிலே வாக்கு சேகரிக்கச் சென்ற இராஜாஜி, **''நான் முதலமைச்சராக நீடிக்க வேண்டும் என்றால், காங்கிரஸ் வேட்பாளரை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்''** என்று வாக்காளர்களைக் கேட்டார்.

அதன் எதிரொலி, அந்தத் தொகுதியின் பொது மக்கள் காங்கிரஸ் பெண் வேட்பாளராக நின்றவரைத் தோற்கடித்து விட்டார்கள். தேவர் அவர்களை எதிர்த்து வெற்றிபெற முடியாது என்ற நிலைக்கு அந்த வெற்றி சான்றளித்தது!

அதற்குத் தீர்வு காணும் வகையில், இராஜாஜி சட்ட சபையிலே தனது அமைச்சரவை மீது நம்பிக்கை வாக்கைப் பெற்று மீண்டும் முதலமைச்சராகப் பதவியிலே நீடித்தார்!

**''இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. இனிமேல் காங்கிரஸ் கட்சி அவசியம் இல்லை. அதைக் கலைத்து விடலாம்'' என்று பகிரங்கமாக முன்பு ஒருமுறை காந்தி பெருமான் 'ஹரிஜன்' பத்திரிகையிலே எழுதியதை இராஜாஜி மீண்டும் எதிரொலித்தார்! கூறினார்!**

முதல்வர் இராஜாஜி அவர்கள், காந்தியடிகள் கூறிய கருத்தை மீண்டும் உதாரணத்தோடு, **''காய் பழமாகிறது. பிறகு, பழத்திற்கும் மரத்திற்கும் உறவு அறுந்துவிடுகின்றது. அதுபோல, சுயராச்சியம் கிடைத்துவிட்டது. இனிமேல் மரம் எதற்கு?''** என்ற கேள்வியையும் கேட்டார்.

இதனால் காங்கிரஸ் தலைவர்கள் இடையே அவருக்குப் பலத்த

சலசலப்பும் - எதிர்ப்பும் உருவாயிற்று! அந்த எதிர்ப்பு நாளாவட்டத்தில் பெரிய ஓர் அகில இந்திய சர்ச்சையாக உருவெடுத்து ஆடியது!

நாட்டிற்குச் சுதந்திரம் பெறுவதற்காகத் தமது உடல், பொருள், ஆவியைத் தியாகம் புரிந்து பாடுபட்ட காங்கிரஸ் தியாகிகள் பலர், ஐந்து ஏக்கர் நிலத்தை தியாகி நிலம் என்ற பெயரால் அரசிடமிருந்து இலவசமாகப் பெற்றிருந்தார்கள்''

''அந்த இலவச நிலத்தை வாங்கியவர்கள் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். இனிமேல் புதியதாக எவருக்கும் தியாகி நிலம் கொடுக்கக்கூடாது'' என்று முதல்வர் இராஜாஜி உத்திரவிட்டார்!

இந்த அரசுக் கட்டளை, இந்திய அளவில் ஒரு பூகம்பப் பிரச்னையாக இராஜாஜிக்கு எதிர்ப்பையே ஏற்படுத்தியது. குறிப்பாகத் தமிழகக் காங்கிரஸ்காரர்களிடையே புயலைப் போன்றதோர் கொந்தளிப்பை உருவாக்கிற்று!

இந்த எதிர்ப்புக் கனலுக்கு மேலே புதுக் கல்வித் திட்டம் என்ற எண்ணெயை, இராஜாஜி எந்தக் காங்கிரஸ்காரர்களையும் கலந்து யோசிக்காமலேயே ஊற்றினார்!

## புதுக்கல்வியா?
## குலக்கல்வியா?

'காலையில் பள்ளிப் படிப்பை மாணவர்கள் கற்க வேண்டும். மாலையில் தனது தொழிற்பயிற்சியை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் புது ஆரம்பக் கல்வித் திட்டத்தின் குறிக்கோள்' என்று இராஜாஜி அதற்கு விளக்கமும் அறிவித்தார்!

பிராமணர்கள் - சூத்திரர்கள் என்ற சில வார்த்தை பேதங்களும், அதனால் உருவான சில விவகாரங்களும் - குழப்பங்களும் இணைந்த, இந்தத் திட்டத்திற்குக் குலக்கல்வித் திட்டம் என்ற பெயரைத் தந்தை பெரியார் இராமசுவாமி அவர்கள் சூட்டினார்கள்! அதனால், இராஜாஜி பதவி துறந்து வெளியேறும்வரை பெரியார் போராடினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையின் கீழ் இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த குலக் கல்வித் திட்டத்தை மிகக் கடுமையாகவும், தீவிரமாகவும் எதிர்த்தது.

குலத் தொழிற் கல்வியைப் பயிற்றுவிப்பதற்காகவே இந்த புதுக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக, இராஜாஜி அவரது திட்டத்திற்கு விளக்க உரையும் தந்தார்!

நாட்டின் நலனை விரும்பிய நல்லவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், பிற கட்சியினர் அனைவரும் கூடி, இந்தத் திட்டத்தை எதிர்த்துப் போர்க்கொடிகளை உயர்த்தினார்கள். தமிழகமெங்கும் குலக் கல்வித் திட்டக் கனற்காற்றே கடுமையாக வீசியது.

'சட்ட சபையையும் கலந்தாலோசிக்காமல், எதேச்சாதிகாரமாக இராஜாஜி தனது இந்தக் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்' என்று காங்கிரஸ்காரர்கள் எல்லாம் அனல் பறக்கப் பேசினார்கள்.

''கல்வி அமைச்சரையும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சியையும் கூட்டிக் கலந்துரையாடாமல், இந்தக் கல்வித் திட்டத்தை வெளியிட்டது சரியா?'' என்று, தலைவர் காமராஜ் இராஜாஜியைக் கேட்டார்!

சங்கரரும் - இராமானுஜரும் தங்கள் கொள்கைகளை வெளியிடுவதற்கு முன்பு, அனைவரையும் கலந்தாலோசித்துக் கொண்டா வெளியிட்டார்கள்? என்ற, எதிர்க்கேள்வியை இராஜாஜி எழுப்பினாரே தவிர, இந்த வினா எங்கு கொண்டுபோய் விடும் என்று அவர் சிந்திக்கவில்லை!

## மழைக்காகப் பிரார்த்தனை!

சென்னை மாநகரில் குடிதண்ணீர் பஞ்சம் அப்போது தலைவிரித்தாடியது. சென்னையை விட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தண்ணீர்ப் பஞ்சத்தால் வெளியேறி, உள் மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்!

சென்னை நகரைவிட்டு வெளியேறும் பொது மக்களைப் பார்த்து, ''நீங்கள் ஆண்டவனை வேண்டுங்கள். குறிப்பிட்ட நாளன்று ஆலயங்கள், மசூதிகள், கிறித்தவத் தேவாலயங்கள், மற்றும் இதர வழிபாட்டுத் தலங்களில் பிரார்த்தனை செய்யுங்கள்.'' என்று, அப்போது மதகுரு போல சென்னை மாகாண முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

''சட்டப் பேரவையில் மூட நம்பிக்கைகளைப் பரப்புகிறார் இராஜாஜி'' என்று கண்டனக் கிண்டல்களோடு ப. ஜீவானந்தம் என்ற கம்யூனிஸ்டு தலைவர் ஆடியபடியே பேசிக் கண்டனக் குரலை எழுப்பினார்!

**ஆனால், அற்புதமான அதிசயம் என்னவென்றால், இராஜாஜி அவர்கள் கூறியபடியே 24 மணிநேரத்திற்குள் ஏரிகள் நிரம்பி வழியும்படி மழையும் பொழிந்தது!**

சட்ட சபையில் ஓங்காரமிட்டுக் குரல்கொடுத்த அதே ஜீவானந்தமும், பிற கம்யூனிஸ்டுகளும் மழைபெய்ததைக் கண்ட பின்பு, ''இது ஒரு தற்செயல் நிகழ்ச்சி'' என்று மழுப்பினார்கள்!

தமிழ்நாடு இவ்வாறு பரபரப்பில் ஆழ்ந்திருந்தபோது, மதுரை மாநகரில் டி.வி.எஸ். மோட்டார் நிறுவன விழா ஒன்று நடைபெற்றது.

அந்த விழாவில், சர்.சி. பி. இராமசாமி ஐயர் பேசிய பின்பு, முதல்வர் இராஜாஜி பேசும்போது,

''சூத்திரன் செய்ய வேண்டிய மோட்டார்த் தொழிலைப் பிராமணர் செய்யலாமா? என்ற கேள்வியை க் கேட்டார்.

இந்தப் பேச்சு, தலைவர் காமராஜ் அவர்களுக்குக் கடுமையான கோபத்தையும்- எரிச்சலையும் மூட்டிவிட்டது. அதே விழாவில் தொடர்ந்து பேசிய முதலமைச்சர் இராஜாஜி, ''டி.வி.சுந்தரம் ஐயங்கார் வயதானதும், இந்தத் தொழிலைத் தனது பிள்ளைகளிடம் ஒப்படைத்திருக்கிறார். அவரது செயலை நான் பாராட்டுகிறேன்.'' என்றார்!

*தலைவர் காமராஜ் அவர்கள் அதே விழாவில் அடுத்துப் பேசியபோது, ''வாலிபர்களிடம் வயோதிகர்கள் பொறுப்பை ஒப்படைப்பதுதான் சிறந்தது'' என்று பாராட்டினர்! இராஜாஜி பேசிய அந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன். வர்த்தகத்தில் மட்டுமல்ல; அரசு நிர்வாகத்திலும் கூட அந்த வழியை வயோதிகர்கள் பின்பற்றினால் நாட்டிற்கு நிச்சயமாக நன்மை உண்டாகும்'' என்றார்.*

சற்றும் எதிர்பாராமல், சமயோசிதமாகத் தலைவர் காமராஜ் இவ்வாறு பேசிய பேச்சைக் கேட்ட இராஜாஜி, அதிர்ச்சி யடைந்தார்! மக்கள் நீண்ட நேரம் கையொலி எழுப்பியது, காமராஜ் அவர்களது பேச்சை முழுமனதோடு - அவர்கள் ஆதரிப்பது போல அக்காட்சி அமைந்துவிட்டது.

இராஜாஜியின் ஆட்சி மீது தனது கருத்து என்ன என்பதைத் தலைவர் காமராஜ் சுற்றி வளைக்காமல், அவரது பேச்சை ஏற்றே தனது எண்ணத்தை நேரிடையாகவே கூறிவிட்டார்.

குலக்கல்வித் திட்டம் பற்றிச் சட்ட சபையில் நெருப்புப் பொறிகள் பறப்பன போல, தட்பவெப்ப வாதப் பிரதிவாதங்கள் நடந்தன! எதிர்க்கட்சியினர் போர்க்களமாகக் கருதி வீராவேசமாகப் பேசினார்கள். நடைபெற்ற விவாதங்களின் மீது ஓட்டெடுப்புகள் ஏதும் நடத்தாமல் அப்போதைக்குப் பிரச்னையை ஒத்திவைக்கத் தலைவர் காமராஜ் அறிவுரை கூறினார்.

இது தலைவரின் ராஜதந்திரம் என்று நம்பிக் காங்கிரசார் வாளாவிருந்தனர். இருந்தும், குலக்கல்வித் திட்டம் நாட்டில் ஒரு நெருப்பு பிழம்பைச் சுழற்றி வீசியபடியே இருந்தது.

தந்தை பெரியார் அவர்கள் இராஜாஜி குலக்கல்வியை எதிர்த்துப் போர்க்கொடி ஏந்திப் படைகளைத் திரட்ட ஆரம்பித்து விட்டார். அறிஞர் அண்ணா அவர்கள் கண்டனக் கட்டுரைக் கணைகளையும், மேடைகள் தோறும் 'நா' அம்புகளையும் இராஜாஜி கல்விதிட்டத்தின் மீது நயமாக வீசியபடியே இருந்தார்.

## இராஜாஜிமீது தார் வீச்சு!

1947-ஆம் ஆண்டு சட்டப்பேரவைக் காங்கிரஸ் கட்சித்தலைமைப் பதவியிலே இருந்து ஆந்திர கேசரி டி. பிரகாசம் நீக்கப்பட்டு, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வரானதும், ஆந்திரர்களிடையே தனி மாநிலக் கிளர்ச்சி தீவிரமடைந்தது. ராஜாஜி முதலமைச்சரானதும், அந்தக் கிளர்ச்சி அதிகமானது. அவர் ஆந்திர மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்.

அப்போது அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடந்தன! இராஜாஜி மீது தார்ச் சட்டிகளை வீசிய வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்தன.

சுதந்திரப் போராட்ட வீரரான பொட்டி ஸ்ரீராமுலு என்பவர், தனி ஆந்திர மாநிலக் கோரிக்கையை வற்புறுத்தி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். அவர் மரணம் ஆந்திரமாநிலம் முழுவதும் பரவியதால், ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் வரம்பின்றி நடந்தன. இரயில்கள் நிறுத்தப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள், தடியடிகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பிரயோகங்கள் எல்லாம் நடந்தேறின!

சென்னை மாநகரத்தை இரண்டாகப் பிரித்து வட சென்னையை ஆந்திரர்களுக்கும், தென்சென்னையை தமிழர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றனர் ஆந்திரர்கள். முடிவாக ஆந்திர மாநிலம் பிரிவது உறுதியாயிற்று.

## மதராஸ் மனதே!

இதற்குப் பிறகு, 'மதராஸ் மனதே' என்ற கோஷம் ஆந்திரா முழுவதும் எதிரொலித்தது! இரண்டாகச் சென்னை மாநகரம் பிரிக்கப்படுவதை முதலமைச்சரான இராஜாஜி விரும்பவில்லை! ஆனாலும், 'மதராஸ் மனதே' என்று கூக்குரல் எழுப்பிய ஆந்திரர்களைப் பார்த்து, ''புதிதாக அமைக்கப்படும் ஆந்திர

மாநிலத்திற்கு 'கர்நூல்' நகரைத் தலைநகரமாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்!

இராஜாஜி மட்டும் உறுதியாக இந்த இலட்சியத்தில் இருக்கவில்லை என்றால், சென்னை மாநகரமும் திருப்பதி நகரைப் போல் கை மாறி இருக்குமோ என்னவோ! யார் கண்டார்?

புதிதாக உதயமான ஆந்திர மாநிலத்திற்குத் தலைநகரமாகக் கர்நூல் நகரை அமைத்துக் கொண்டார்கள் ஆந்திரர்கள்! ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்து விட்டதால், சென்னை மாநில சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் புதிதாக நடத்தப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி ஆரம்பமானது.

தான் தொடர்ந்து முதலமைச்சராக இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதாகக் கூறி, சட்டசபைக்காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதாக இராஜாஜி அறிக்கை விடுத்தார்.

அதற்கு அடுத்த நாள், ''நான் தலைவராக இருப்பதில் தனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்று காமராஜ் கூறியதால், நான் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தை நடத்த விரும்பவில்லை'' என்று மறு அறிக்கை விட்டார் முதலமைச்சர் இராஜாஜி!

தலைவர் காமராஜ் அவர்கள் மேல் ஓர் அரசியல் களங்கத்தை உருவாக்கவே இராஜாஜி மாறிமாறி அறிக்கைப்போர் மூலமாகச் செயல்பட்டார் என்று, காமராஜ் அணி செய்தியைப் பரப்பியது!

## காமராஜ் பற்றி அய்யாமுத்து!

''காமராஜ், இப்போது யாருக்கும் அஞ்சாத காளையாகி விட்டார்! அவர் தயவைத்தான் அரசியலில் பிறர் நாடுகிறார்களே அன்றி, யார் தயவையும் அவர் என்றும் நாடியதில்லை. காமராஜ் கடைக்கண் பார்வைக்காகக் காங்கிரஸ் தலைவர்கள் எனப்படும் அப்பாவிகள் தவங்கிடக்கிறார்கள்!''

''காமராஜைக் காமா சோமா என்று துதிபாடுகிறார்கள். கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடச் சிலர் ஆமாம் சாமிகளாக அலைகிறார்கள். 'கோவலன் நாடகத்திலே மாதவியின் மாலைக்காக அவன் கழுத்தை நீட்டியதைப் போல, பலர் காமராஜரின் கருணைக்காக ஏங்கிக் கிடக்கிறார்கள். காமராஜர் திக்குநோக்கிக் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். அதனால், அறிவாளிகள் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள்.''

-என்று, இராஜாஜி அணியினர் துண்டறிக்கைகளை அச்சடித்தார்கள்; வெளியிட்டார்கள்! குலக்கல்வித் திட்டம் என்ற பெருநெருப்பு இவ்வாறெல்லாம் ஆவேசமாகத் தன் தீக்கதிர்களைத் தமிழ்நாட்டில் சுழற்றி வீசிக் கொண்டிருந்தது.

'இராஜாஜியின் குலக்கல்வித் திட்டத் தகராறுகள்தான், நாட்டில் குழப்பத்தை உருவாக்கியதே தவிர, அவரது ஆட்சித்தலைமை என்ற தகராறுகள் அல்ல!' என்பதைத் தலைவர்காமராஜ் திட்டவட்டமாகத் தனது இராஜதந்திரத்தின்மூலம் நாட்டிற்குத் தெரிவித்து விட்டார்.

ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்துபோனபின்பு, இராஜாஜி அமைச்சரவையில் ஒன்பது பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். இவர்கள் போதாது என்று புதிய மந்திரிகள் சிலரை நியமிக்க, தலைவர் காம்ராஜரைக் கலந்து இராஜாஜி பேசினார்!

அதற்குக் காமராஜ் அவர்கள், ஒப்பவில்லை. 'ஆந்திராவும் பிரிந்துவிட்டது. அமைச்சர்களும் ஒன்பது பேர் இருக்கிறார்கள்! பிறகு ஏன் புதிய மந்திரிகள்?' என்று, இராஜாஜியைக் காமராஜ் கேட்டார்.

தலைவர் கேட்ட கேள்வியைப் பொருட்படுத்தாமல், டில்லியிலே உள்ள காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும், பிரதமர் நேரு அவர்களுக்கும் இராஜாஜி கடிதம் எழுதினார். தமிழ்நாட்டின் சர்ச்சைகளை அவர் மேலும் பெரிதுபடுத்த விரும்பாததால், மூன்று அமைச்சர்களை நியமித்துக் கொள்ள அங்கே இருப்பவர்கள் பதில் எழுதினார்கள். இராஜாஜி மூவரை அமைச்சர்களாகத் தனது அவையில் நியமித்துக் கொண்டார்.

நாட்டில் மூண்டு எரிந்துகொண்டிருக்கும் குலக்கல்வித் திட்டப் பரபரப்பைக் காட்டி, இராஜாஜிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினர் கொண்டு வந்தார்கள்.

'நம்பிக்கை இருக்கிறது' என்ற கையெழுத்துக்களைப் பெற்றிட இராஜாஜி அணியினர் முயன்றார்கள். காங்கிரஸ்காரர்களில் பெரும்பான்மையினர் அதற்கு மறுத்தார்கள்! அதனால், இராஜாஜிக்கு அரசியல் நெருக்கடி அதிகமானது.

'இராஜாஜியே தொடர்ந்து முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று பிரதமர் நேரு அறிக்கை விடுத்தார்.' தலைவர் காமராஜ் அணியினர், டில்லி சென்று, தமிழ்நாட்டின் அரசியல் நெருக்கடிநிலை, குலக் கல்வித் திட்டத்தால் உருவானதை எடுத்துக் கூறினார்கள்.

''உங்களுடைய ஆட்சியில் நீங்கள் எப்படியும் தீர்மானம் செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது'' என்று, பிரதமர் நேரு அந்த தூதுக் குழுவிடம் கூறியதும், மறுபடியும் இராஜாஜிக்கு அரசியல் நெருக்கடிநிலை ஏற்பட்டு விட்டது. ஒருவர் அரசியலிலிருந்து சரியான நேரத்தில் ஓய்வு பெற்றுவிட வேண்டும். இல்லாவிட்டால், அவர் அரசியலில் நீடிப்பது அவரது வீழ்ச்சிக்கே வழிவகுத்துவிடும் என்ற 'திருப்புமுனை'யை இராஜாஜி மறந்தார்!

திருவாளர்கள்: டாக்டர் வரதராஜலு நாயுடு, வி.கே. இராமசாமி முதலியார், கே.டி. கோசல்ராம், டி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, பஞ்சாட்சரம் செட்டியார், ஏ.எம்.சம்பந்தம் போன்ற சட்டசபைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இராஜாஜியை எதிர்த்தும், குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்தும் போர்க் கொடியைத் தூக்கினார்கள். குலக் கல்வித் திட்டத்தின்மீது சட்டசபையில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும் என்று மேற்கண்டவர்கள் வற்புறுத்தினார்கள். உடனே தலைவர் காமராஜ் அவர்கள் குறுக்கிட்டு, 'ஓட்டெடுப்பு நடத்த வேண்டாம் - ஒத்திவையுங்கள்' என்று கட்டளையிட்டார்.

''குலக் கல்வித் திட்டத்தின் மீது, வாக்கெடுப்பு நடத்தி என்னை அவமானப்படுத்த வேண்டாம். எனக்கும் உடல்நிலை சரியில்லை. நானே விலகிக் கொள்கிறேன்'' - என்றுகூறி இராஜாஜி முதலமைச்சர் பதவியையும் - சட்டசபைக் கட்சிப் பதவியையும் விட்டு விலகினார்! பிரதமர் நேருவும் அதை ஒப்புக் கொண்டார்.

1954- ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 25-ஆம் நாள், சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தலைவர் காமராஜ் அவர்களும் - இராஜாஜியும் கலந்து பேசினார்கள். ''திருவாளர்கள் எம். பக்தவத்சலம், ஏ.பி. ஷெட்டி, சி. சுப்பிரமணியம் மூவரில் யாரையாவது ஒருவரையே முதலமைச்சராக இரண்டு மூன்று மாதங்களுக்கு வைத்துக் கொள்வோம். தமிழக நிதிநிலைக் கூட்டத்திற்குப் பிறகு, கட்சித்தலைவர் தேர்தலை நடத்தலாம்'' என்று இராஜாஜி கூறினார்!

உடனே தலைவர் காமராஜ் அவர்கள் எழுந்து, 'இராஜாஜி கூறும் இந்த ஏற்பாட்டைப் பட்ஜெட் கூட்டத்தை ஒட்டி இரண்டு மாதத்திற்கு நான் ஒப்புக்கொள்கிறேன்' என்றார்.

இராஜாஜி இதை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே காமராஜ் அணியினர் கடுமையாகக் கூச்சலிட்டனர். எதிர்ப்பு அதிகமாயிற்று. சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தை இப்போதே நடத்த வேண்டும் என்று அனைவரும் ஒரே குரலோடு வற்புறுத்தினார்கள்!

''இன்னும் ஐந்து நாட்கள் பொறுங்கள்! 30-ஆம் தேதி நடத்திவிடலாம்'' என்று இராஜாஜி கூறினார். தலைவர் தேர்தலுக்கு நான்கு நாட்கள் அவகாசம் மிகவும் குறைவானது என்று உறுப்பினர்கள் எல்லோரும் ஆவேசமாகக் கூறினார்கள்!

உடனே இராஜாஜி, 30-ஆம் தேதி தலைவர் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்று, பிடிவாதமாகப் பேசினார்!

நாட்கள் குறைவாக இருந்ததால், யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் கஷ்டம் இருந்தது. இராஜாஜி அணியில் உள்ள திரு. ஷெட்டி ஒருவரைத்தான் காமராஜ் அணி ஆதரிக்கும் நிலை. ஆனால், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை இராஜாஜி அணி நிறுத்தியது.

தலைவர் காமராஜ் அவர்களே சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக வரவேண்டும் என்ற வேட்கை - ஆர்வம் - காமராஜ் அணியினருக்கு அளவுக்கு மீறி உருவாயிற்று! சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஆரம்பமானது. சி.சுப்பிரமணியம் எழுந்து சமரசம் பேசுவதற்காகக் கூட்டத்தை ஒத்திப்போடும்படி காமராஜ் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

'டில்லியிலே உள்ள தலைவர்களே 30-ஆம் தேதியே தேர்தலை நடத்த வேண்டும் என்று எழுதிய கடிதத்தை சி.சுப்பிரமணியத்திடம் காட்டி, கூட்டத்தைத் தள்ளிப்போட முடியாது' என்று காமராஜ் அணியினர் மறுத்தார்கள். காமராஜ் அணியினரும் - தலைவரும் அதற்குச்சம்மதம் கூறவில்லை. 'சிறிது நேரமாவது ஒத்தி வையுங்கள்' என்று சி. சுப்பிரமணியம் கேட்டார். அதனால் என்ன பயன்? என்று தலைவர் காமராஜ் கேட்டார்!

தலைவர் காமராஜ் பெயரை, டாக்டர் வரதராஜலு நாயுடு முன் மொழிந்தார்! திருவண்ணாமலை என். அண்ணாமலைப் பிள்ளை அதை வழிமொழிந்தார். எம். பக்தவத்சலம் சி. சுப்பிரமணியம் பெயரை முன்மொழிந்தார். டாக்டர் யூ. கிருஷ்ணராவ் வழி மொழிந்தார். வாக்கெடுப்பு நடந்தது. தலைவர் காமராஜ் அவர்கள், 93 வாக்குகளைப் பெற்று சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக வெற்றி பெற்றார்.

பின்னர் தனது அரசியல் ஆசானின் இல்லத்திற்குச் சென்று, சத்தியமூர்த்தி அவர்களது திருஉருவப்படத்தின் முன்னே தனது சென்னியைச் சாய்த்து வணங்கி, அவருடைய துணைவியாரிடம் வாழ்த்தினைப் பெற்றார். ''அந்த அம்மையார் இந்தக் காட்சியைப் பார்த்துப் பூரித்திட அய்யர் இல்லையே! நல்லபடியாக ஆட்சியை நடத்துங்கள்'' என்று அவரை மனமார ஆசீர்வாதம் செய்து அனுப்பி வைத்தார்.

# 39. காமராஜர் பிரதமர் அல்லர்! தமிழக முதலமைச்சர் ஆனார்!

தமிழக சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. காமராஜர் தமிழக முதலமைச்சர் ஆனார்; நேராக டில்லி சென்றார்! பிரதமர் நேரு அவர்களிடம் தனது வெற்றியைக் கூறிக் கலந்தாலோசித்தார்!

''நல்ல நாணயமான அனுபவம் வாய்ந்த ஒருவரைத் துணையாக நியமித்துக் கொண்டு நீங்களே முதல்வராக ஆட்சி நடத்துங்கள்'' என்று பிரதமர் நேரு வாழ்த்தினார்!

''வேறு ஒருவரைத் தமிழக முதல் மந்திரியாக்கலாமா?'' என்று டில்லியிலே உள்ள பிற தலைவர்களைக் கேட்டார் காமராஜர். சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர்தான் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று, அவர்கள் அறிவித்தார்கள். பிறகு சென்னை வந்தார்! தமது கட்சி நண்பர்களுடன் கலந்துரையாடினார். மீண்டும் தலைவர் தேர்தலை நடத்திடலாமா? என்று அவர்களையும் கேட்டார்.

'அவ்வாறு நடந்தால், புதுப்புது விவகாரங்கள் தலைதூக்கும்' என்றனர் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள். நான் கேட்கும் நிபந்தனைக்கு நீங்கள் சம்மதித்தால் நான் முதலமைச்சராவேன்'' என்று தலைவர் காமராஜ் கூறினார்! நான் முதலமைச்சரான பின்பு, அமைச்சராக அவரைப் போடவேண்டும் - இவரைப் போட வேண்டும் என்று யாரும் கூறக்கூடாது. அதற்குச் சம்மதமானால் நான் முதல் மந்திரியாவேன்'' என்றதும், எல்லோரும் ஒரே குரலில் சம்மதம் தெரிவித்தனர்.

1954-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் நாளன்று, காமராஜ் அவர்கள் தமிழக முதலமைச்சர் பதவியை ஏற்றார். இராஜாஜி மந்திரி சபையில் தன்னை எதிர்த்தவர்களையும் மந்திரி சபையில் பெருந்தன்மையுடன் சேர்த்துக் கொண்டார். அவ்வாறு அவரால் சேர்க்கப்பட்டவர்களுள் சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம் போன்றோருமாவர்.

பன்னிரண்டு மந்திரிகளாக இருந்த இராஜாஜி அமைச்சரவையைத்; தலைவர் காமராஜர் எட்டாகக் குறைத்துக் கொண்டார். தனது அணி நண்பர்கள் யார் யார் இராஜாஜியைத் தீவிரமாக எதிர்த்தார்களோ, அவர்கள் எவரையும் தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது இங்கே சிந்திக்கத் தக்க ஒன்றாகும்.

காமன்வீல் கட்சித் தலைவரான எம்.ஏ. மாணிக்கவேலரை, இராஜாஜி தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பைக் குறைத்துக் கொண்டார். தலைவர் காமராஜ் அவர்களும் வன்னியர் கட்சியான உழைப்பாளர் கட்சியைத் சேர்ந்த எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியைத் தனது மந்திரி சபையிலே சேர்த்துக் கொண்டு, வன்னிய பெருமக்களின் ஆதரவைக் காங்கிரஸ் கட்சிக்கு உறுதுணையாக்கினார்.

காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயும் - வெளியேயும் எவ்விதமான பகையுமில்லாமல் செய்தவர் தலைவர் காமராஜ் அவர்கள்தான் என்பதை - அரசியல் வரலாறுணர்ந்தவர்கள் அறிவார்கள். முதலமைச்சராகக் காமராஜ் அவர்கள் பதவியேற்றபோது, அவர் சட்டமன்ற உறுப்பினர் அல்லர். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். சட்டமன்ற சபை உறுப்பினரல்லாத ஒருவர் முதலமைச்சர் பதவியைப் பெற்றால், அவர், ஒன்று சட்ட மேலவை அல்லது சட்டப்பேரவை உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்பது அரசியல் சட்ட விதி!

## குடியேற்றம் தொகுதியில் காமராஜர் போட்டி!

மேலவை உறுப்பினராதல் மிக எளிய செயல். அதனால், மக்கள் குறை நிறைகளைக் கவனிக்க முடியாது. ஏதாவது ஒரு சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு வெற்றி பெறுவதுதான் உண்மையான மக்களாட்சி மரபு - ஜன நாயகமும் கூட என்று கருதினார் தலைவர் காமராஜ் அவர்கள். வடார்க்காடு மாவட்டத்திலே அப்போது காலியாக இருந்தது குடியேற்றம் தொகுதியாதலால், அங்கேயே சட்ட சபைக்குப் போட்டியிட அவர் முடிவு செய்தார்.

காமராஜ் அவர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர், காங்கிரஸ் ஆட்சியின் முதலமைச்சர் என்று தெரிந்தும்கூட, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி தவிர்த்த பிற கட்சிகள் எல்லாம் அவரைக் குடியேற்றம் தொகுதித் தேர்தலிலே ஆதரித்தன. அறிஞர் அண்ணா அவர்கள், காமராஜர் காங்கிரஸ்காரர்

என்று தெரிந்த பிறகும் கூட, மனித நேயத்தோடு அவர் வெற்றிபெற வேண்டும் என்று எண்ணினார். அவரது வெற்றியை விரும்பித் தனது 'திராவிட நாடு' பத்திரிகையிலே 'குணாளா, குலக்கொழுந்தே' என்று எழுதினார். 'காமராஜர் ஒரு திறந்த புத்தகம்' என்று மனம் திறந்து பாராட்டி, அவர் வெற்றி பெறுவதைத் தடுக்காமல் - எதிர்க்காமல், ஜனநாயகப் பண்போடு வாழ்த்தினார். இதற்கு என்ன காரணம்?

மறுபடியும், இராஜாஜி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துவிடக் கூடாது என்ற அச்சம்தானே தவிர, வேறு உள்நோக்கம் ஏதும் இல்லை - அறிஞர் அண்ணா அவர்களுக்கு! குடியேற்றம் (குடியாத்தம்) தொகுதியிலே போட்டியிட்ட காமராஜருக்கு எல்லாக் கட்சியினரும் ஆதரவு தந்து அவரை வெற்றி பெறச் செய்தனர் என்றால், அப்போதைய தமிழகம் அரசியல் நெருக்கடியால் அவ்வாறு குழம்பி இருந்ததே காரணமாகும்'. இந்த சம்பவம் காங்கிரஸ் கட்சி வரலாற்றிலே வியப்பை விளைவித்த ஒன்றாகவே திகழ்ந்தது.

## மக்கள் தொண்டே
## மகேசன் தொண்டு!

சென்னை ரிசர்வ் வங்கிக் கட்டடத்திற்கு எதிரில், ஒரு சுரங்கப் பாதை கட்ட வேண்டும். ஆனால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களும் மின்சார இரயில் வண்டிகளும் தடையின்றிச் சாலையைக் கடந்து போக வசதியாக இருக்கும் என்பது தமிழக அரசுத்திட்டம்.

அந்தப் பாதை கட்டுவதற்கான செலவு என்ன ஆகின்றதோ அதனை, மாநில அரசும் மத்திய அரசும் பங்கீடு செய்து கொள்வதென ஒப்பந்தமானது. அந்தப் பாலப் பாதையைக்கட்டும் பொறுப்புக் குழு அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரும், தமிழ்நாடு அரசு சார்பாகத் தலைவர் காமராஜர் அவர்களும் கலந்துரையாடினார்கள். மத்திய அமைச்சர் அக்குழுவில் பேசும்போது, இந்தச் சுரங்கப் பாதையைக் கட்டி முடித்திட செலவு அதிகமாகும்' என்றார்.

கடுங்கோபம் வந்தது காமராஜ் அவர்களுக்கு! எரிச்சலோடு பார்த்தார் அமைச்சரை! ''உட்காரய்யா! கட்டமுடியாதுன்னு சொல்லவா கான்ஃபரன்ஸ் போட்டோம்? எப்படியும் கட்டி முடிக்கிறதுன்னங்கறதுக்குத்தான் இந்த மீட்டிங்! ஏன் கட்ட முடியாதுன்னு காரணம் காட்டுகின்ற மீட்டிங் அல்ல இது!''

''முடியாதுன்னு சொல்லவா நீங்க மந்திரியானீங்க? மந்திரின்னா, எப்படிச் செய்து முடிக்க முடியும்னு வழி தேடறவன்

- முடியாதுன்னு சொல்றவன் இல்லை. முடியாதுன்னு சொல்லவா டெல்லியிலே இருந்து இங்கே வந்தீங்க? அங்கே இருந்தே சொல்லியிருக்கலாமே!''

''முடியாதாம் முடியாது...'' இதுக்கா ஜனங்க ஓட்டுப் போட்டாங்க? நீ பேசாம உட்காரய்யா! நான் பிரை மினிஸ்டர்கிட்டே பேசிக்கிறேன். எப்படியும் சுரங்கப்பாதை கட்டணும். அதுதான் முடிவு. எப்படின்னு டிஸ்கஸ் பண்ணி, விவரங்களை எடுத்துக்கிட்டு என்னை வந்து பாருங்க!'' என்றார் காமராஜர்!

பாவம்! மத்திய அமைச்சர்! அசந்துபோனார்; ஆடிவிட்டார்; திகைத்துத் திணறிப்போனார். பிறகு அந்தச் சுரங்கப்பாதையும் கட்டப்பட்டது. இத்தகைய ஒரு செயல்வீரர், மக்களுக்காகத் தொண்டாற்றும் கர்மவீரர், மத்திய அமைச்சரவையையே ஆட்டிப்படைத்து மக்களுக்கான சாலைவசதியைச் செய்து கொடுத்த மக்கள் தொண்டர், முதலமைச்சராக வந்துள்ளாரே என்று பெரிதும் மகிழ்ச்சியுற்று, அவரது வாக்கை வேதவாக்காக மதித்து, தமிழ் மக்கள் வழிநடந்தார்கள்.

காமராஜ் அவர்கள் முதலமைச்சரான பின்பு, தமிழக மக்களுக்குக் கூறிய நற்செய்தி நமக்கெல்லாம் புத்துயிர் அளித்தது. ''நாள் முழுவதும் உழைப்பவர்களை வேலைக்காரர் - கூலிக்காரர் என்று குறை கூறுகின்றோம். உழைப்பே இல்லாமல், பிறர் உழைப்பால் வாழ்ந்து வரும் சோம்பேறிகளை எஜமானர் - மகராசர் என்கின்றோம். ஏழைகளின் துயரம் நீங்கவே நான் முதன் மந்திரி எனப் பதவி ஏற்றுள்ளேன். இல்லையேல், எனக்கு இந்தப் பதவி தேவையில்லை'' என்று காமராஜ் அவர்கள் அறிக்கை விடுத்தார்.

மக்களுக்கும் - அவருக்கும் இடையே அவருடைய தொண்டு பாலமாக அமைந்தது. அதனால்தான், அவர்மீது பாசமுள்ள மக்கள், பக்தர்கள் ஒலிக்கும் தெய்விக சுலோகங்களைப் போல, காமராஜர் வாழ்க, தலைவர் வாழ்க, வாழ்க காமராஜர்' என்ற முழக்கங்களை எப்போதும் முழங்கலானார்கள்!

காமராஜர் அவர்கள் திருஉருவப்படம், ஏழை - பணக்காரன் என்ற பேதமில்லாமல், எல்லா வீடுகளிலும் தேசபக்தியின் சின்னமாக- தொண்டின் அடையாளமாக; அலங்கரித்துக் கொண்டிருப்பதை இன்றும் நாம் காண்கின்றோம்!

தமிழக முதல் அமைச்சராகக் காமராஜ் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, முழுக்க முழுக்கக் காந்தியடிகளின் அஹிம்சை என்ற தத்துவக் காலடிச் சுவடுகளை ஒட்டியே அடியெடுத்து வைத்தார்!

பிரதமர் பண்டித நேருவின் அரசியல் பாதையிலே அவர் கம்பீரமாகப் பவனி வந்தார்! தனக்கு எது நியாயம் என்று தனது மனச் சான்று கூறுகின்றதோ - அதற்கேற்ப நேர்மைப் பயணம் புரிந்தர்!

## அரசியல் குரு துணைவி வாழ்த்து!

''காமராஜர் எனது கணவருடன் இருபதாண்டு காலமாக நாட்டுப் பணியாற்றிய நல்லவர். அவருடைய தியாக உணர்ச்சி, மக்கட் தொண்டு முதலிய பண்புகளுடன், எனது கணவருக்கும் உறுதுணையாக நின்று காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தி, நிலைநாட்ட ஓயாது பாடுபட்ட ஒழுக்கச் செம்மல், தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராகியுள்ளார்.''

''காமராஜ், தமிழ்நாட்டின் முதன் மந்திரி பதவியை வகிப்பது, எனது கணவரின் கனவு நனவாகிப் பலித்ததற்குச் சான்றாகும்'' - என்று எஸ். சத்தியமூர்த்தி அவர்களது துணைவியார் திருமதி எஸ். பாலசுந்திரம்மாள் கண்ணீருடன் நன்றி அறிக்கை விடுத்தார். ஆசான் ஆசையை நிறைவேற்றிய அரசியல் மாணவர் காமராஜர் என்று, பிற்காலத்தில் அவரது அரசியல் எதிரிகளும் புகழ்பாடினார்கள்!

## பிரதமர் நேரு வாழ்த்து!

''தளராத மக்கள் தொண்டும், தலைகுனியாத கட்சித் தொண்டும் தலைவர் காமராஜ் அவர்களைத் தமிழக முதலமைச்சராக்கியுள்ளன. இவர் தனது மதி நுட்பத்தால் எதிர்காலத்தில் பாரதம் முழுவதையும் மேன்மையடையச் செய்வார்! மக்கட் தொண்டில் காமராஜ் அவர்களை ஒப்பார் காண்பது அரிது. அவரை அறியும் வாய்ப்பு மட்டுமல்ல; பழகும் சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்துள்ளன. அவருடன் பழகப் பழக, எனக்கு அவரிடமுள்ள மதிப்பும் - மரியாதையும் உயர்ந்து கொண்டே போகின்றன. திறமை, நாணயம், நல்லாட்சி முறைகளுக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் ஓர் ஆட்சியின் தலைவர் என்ற முறையில் - அவர் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்'' என்று, ஆசியாவின் ஜோதி பிரதமர் பண்டித நேரு அவர்கள், தலைவர் காமராஜ் முதல்வர் பதவியேற்றதை நெஞ்சார வாழ்த்தினார்.

## எடின்பரோ

## கோமகன் பாராட்டு!

இங்கிலாந்து நாட்டின் இரண்டாம் எலிசபெத் ராணியாரின் கணவன் எடின்பரோ கோமகன், முதலமைச்சர் காமராஜ் அவர்களைப் பாராட்டிக் கை குலுக்கி, ''மீண்டும் நான் சென்னைக்கு வரும்போது, நீங்கள் முதலமைச்சராக இருப்பீர்கள்'' என்று ஆசி கூறியதற்கு ஏற்ப, தமிழகத்தின் முதலமைச்சராகக் காமராஜர் கோலோச்சினார்! நல்லவர்கள், தலைவர் காமராஜ் தமிழக முதல்வரானதை நாவார வாழ்த்தி வரவேற்றார்கள்! வல்லவர்கள், அரசியலில் சறுக்கல் ஏற்பட்டு விடக்கூடாது என்று எச்சரிக்கையோடு, அவருடைய சம்பவங்களைக் கவனித்து வந்தார்கள்.

இதனால், நாளடைவில் அவருக்கிருந்த அனுபவம், அவரது காந்த சக்தியின் ஈர்ப்பு சக்திபோல மக்களை ஈர்த்து மகிழவைத்தது. தெளிவான அரசியல் நோக்கும் செயலும், அவரைப் பிரதமர் நேரு பெருமான் பாதையிலே நடைபோடச் செய்தன. தன்னலமற்ற பாதையிலே காமராஜ் அவர்கள் காந்தியடிகளைப் போலத் தன்மானத்தோடு நடந்தார். ஆசையை அறுத்தார்! 'நான்', என்பதை நலியவைத்தார்!

''ஏழைகளுக்குத் தொண்டாற்றுவதே, தான்கொண்ட இலட்சியம் என்பதை மறவாமல், உறுதியை உருக்குலைத்திடாமல், அனைவரிடமும் மனம் விட்டுப் பேசும் போக்குகள், இவைகளின் கூட்டுச்சக்திதான் முதலமைச்சர் காமராஜ்' என்ற பெயரை, தலைவர் காமராஜ் உலகுக்கு உணர்த்தினார்.

## எட்டுப்பேர்

## அமைச்சரவை!

தலைவர் காமராஜ் அமைத்த, தமது முதல் அமைச்சரவையிலே சி.சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம், ஏ.பி. ஷெட்டி, எம்.ஏ. மாணிக்கவேலர், இராமநாதபுரம் ராஜா, எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி, பரமேஸ்வரன் ஆகிய எண்மர் அமைச்சர்களாக இருந்தனர். அவர்களில் பலர் அரசியல் துறையிலே அரும் பணியாற்றிய அட்டாவதானிகளே! தாழ்த்தப்பட்ட பழங்குடியிலே தேர்தல் வெற்றி பெற்று வந்த பி. பரமேஸ்வரன் அவர்களுக்கு, அறநிலையத் துறையை அளித்தார்.

தமிழ்நாட்டின் எல்லாக் கோயில்களிலும் பூரணகும்பம் மரியாதைகளோடு அந்தந்த அறங்காவலர்கள் அவருக்கு

வரவேற்பளிக்கும்படி செய்து மக்களிடையே ஹரிஜன சமத்துவத்தை உருவாக்கிய விடிவெள்ளியாகத் திகழ்ந்தார் காமராஜர். 1954-ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டுவரை ஒன்பதாண்டு களாகத் தலைவர் காமராஜர் அவர்கள், தமிழகத்தை ஆட்சி செய்த காலத்தில், அவர் சந்தித்த எந்தப் பிரச்னைகளுக்கும் மனம் கலங்காதவராக நற்பணியாற்றினார்.

எந்த ஒரு நல்ல காரியத்தையும் துணிச்சலுடன் செய்தார்! நிதானமாகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் மக்கட் பணிகளை அவர் ஆற்றினார். எதிர்க் கட்சிகளின் கருத்துகளை, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியில் எப்போதும் ஏளனம் செய்யாமல் கோபம் வரும் சம்பவங்களானாலும், அவற்றை விமரிசனம் செய்வது மிகவும் சாதுரியமாக நடந்து கொண்டார்.

தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, ஒரு திட்டம் கொண்டு வந்தார். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரோடும் குறிப்பிட்ட ஒருநாளில் அவருடன் சென்று, அந்தந்தத் தொகுதி மக்களை நேரில் கண்டு, அங்குள்ள குறைகளை நேரிடையாகக் கேட்டு அறிந்து கொள்ளும் திட்டமே அந்தத் திட்டமாகும்.

## மனுநீதி நாள் விழா
## காமராஜர் – அண்ணா

அவ்வாறு, தமிழக முதல்வரும் - சட்டமன்ற உறுப்பினரும் அவரவர் தொகுதிக்குச் செல்லும்போது அரசு அதிகாரிகளும் அந்த விழாவிற்குச் சென்று கலந்து கொள்ளும் பழக்கத்தைத் தலைவர் காமராஜர் உருவாக்கினார். சட்டமன்ற உறுப்பினர், தமிழக முதல்வர், அரசு அதிகாரிகள் அனைவரும் மக்கள் குறைகளை எவ்வாறு அணுகுவது, தீர்ப்பது என்பதை அப்போது கலந்துரையாடி முடிவெடுப்பார்கள். இதற்கு **மனுநீதிநாள் விழா** என்று பெயர். அந்தந்தத் தொகுதி மக்கள் குறைகளை அறிவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் தொகுதியான பாகல்மேடு என்ற ஒரு கிராமத்தை அரசு தேர்ந்தெடுத்து, அவ்வூரில் காமராஜர் அவர்களையும் கலந்துக்கொள்ளுமாறு அறிஞர் அண்ணா அழைத்தார். அண்ணா அவர்களும் முதல்வர் காமராஜர் அவர்களும் ஒன்றுகூடி, திரளாக வந்திருந்த அந்தத் தொகுதி மக்களின் குறைகளை நேரிலேயே கேட்டறிந்தார்கள்.

அந்தத் தொகுதி மக்களுக்குத் தேவையான பொதுவாக பயன்படக்கூடிய உடனடியான கோரிக்கைகள் அங்கு ஏதுமில்லை. ஆனால், தனிப்பட்ட முறையில், 'அதுவேண்டும் இதுவேண்டும்' என மக்கள் கேட்டார்கள். ஒரு சில பொதுவான தேவைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரிகளுக்கு அங்கேயே ஆணையிடப்பட்டது.

அப்போது தலைவர் காமராஜ் அவர்கள் - அதிகாரிகளிடம் அவர் பழகிய, நடந்து கொண்ட, கேட்ட கேள்விகளை எல்லாம் கண்ட அறிஞர் அண்ணா அவர்கள், முதல்வர் காமராசரை மிகவும் பாராட்டினார். அன்று பகல் முதலமைச்சரும் - சட்டமன்ற உறுப்பினரும் ஆகிய இரு தரைவர்களும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் கலந்து கொண்டு, ஒரே மேசையில் அமர்ந்து உணவு உண்டார்கள்.

'அண்ணா அவர்களின் சட்டமன்றத் தொகுதியே அது! எதிர்க் கட்சித் தலைவர் தொகுதியாயிற்றே' என்று தலைவர் காமராஜ் எண்ணவில்லை. தான் முதலமைச்சர் என்பதால், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவமதிக்கப்படவோ, மனம் புண்படவோ ஏதும் நடைபெறாதவாறு காமராஜர் கவனித்து நடந்து கொண்டார்.

தலைவர் காமராஜ் அவர்களது பண்பாட்டை, அவரது செயல்கள் எதிர்க்கட்சித் தலைவரான அறிஞர் அண்ணா அவர்களும் பாராட்டி மகிழுமாறு அவை விளங்கின. அரசியலில் ஜனநாயக மரபைக் காத்தவர் காமராஜ் அவர்கள் என்ற எண்ணம் மக்களிடம் மகிழ்ச்சியை மலரவைத்தது. காமராஜ் அதிகம் பேசமாட்டார்! மற்றவர் கருத்துக்களைக் கவனமாகக் கேட்பார். அரசியல் சிக்கல்கள், அவை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவற்றை உடனுக்குடன் வேறு எவ்வித சிக்கல்களும் தோன்றாதவாறு தீர்த்திட அவர் முடிவெடுப்பார்.

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஏழை மக்கள் உண்ண உணவிற்கும் - உடுக்க உடைக்கும் - குடியிருக்க வீட்டுக்கும் படும்பாட்டை ஆழ்ந்து அறிவார்! அவற்றிற்கு உடனடியான ஆக்கப் பணிகளை காமராஜர் அவர்கள் புரிந்தார்.

## பத்திரிகை நிருபரிடையே காட்டும் கனிவு!

பத்திரிகை நிருபர்களைக் கண்டால், அவர் மிக அதிகமான பண்புடனும் - பாசத்துடனும் பழகுவார். பக்கத்திலேயே அவர்களை அமர வைப்பார்! மரியாதை அதிகமாகக் காட்டுவார்.

புகைப்படக்காரர்களைப் புன்சிரிப்புடன் வரவேற்று உபசரிப்பார். அவர்களும் ஏதாவது குறைகளைக் கூறினால், அவற்றை நிறைவுபடுத்தி மகிழவைக்கும் பண்பு காமராஜ் அவர்களிடம் இயற்கையாகவே இருந்தது. தலைவர் காமராஜரை யார் பார்க்க வந்தாலும், ஆளும்கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சிகளானாலும் சரி, அவர்கள் எவரிடமும் கோபப்படமாட்டார் - எரிச்சலடையவு மாட்டார்.

வந்த அவர்கள் கூறும் குறைகளைக் கேட்டபோதே உடன் நடவடிக்கை எடுக்குமாறு, அவர்கள் கண் முன்னாலேயே கொண்டுவந்த மனுவில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிக்கு எழுதித் துரித நடவடிக்கை எடுக்கச் சொல்வார். ஒருமுறை ஒருவரைப் பார்த்தாலே போதும். அவர் நாணயமானவரா இல்லை, மக்களை ஏமாற்றுபவரா என்று எடைபோடும் சக்தி பெற்றவர் தலைவர் காமராஜ்.

ஒருவர் தனது குறைகளைக் கூறிட தலைவரிடம் மனு கொண்டுவந்தால், அதைப் பெற்றுப் படிப்பார். கூறப்பட்டவை உண்மையா - பொய்யா? என்று சிறிது நேரம் சிந்திப்பார். எளிதில் அவரை ஏமாற்றி விடலாம் என்று எவராது எண்ணி வந்தால் - அவர்கள்தான் ஏமாந்து போவார்கள். ஒரு பிரச்சனை பற்றி யார் யாருக்குக் கடிதம் எழுத வேண்டுமோ - அவரவர்களுக்கு எல்லாம் தவறாது எழுதிவிடும் பழக்கம் அவரிடம் இருந்தது.

## உடனுக்குடன் நடவடிக்கை

எதையும் உடனுக்குடன் ஆராய்ந்து, அலசி, விரைந்து, முடிவு செய்யும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அதற்கான ஆதாரங்களையும் சுட்டிக் காட்டுவார்! அரசுச் சான்றுகளைக் குறிப்பிடும் நினைவுச் சக்தியும் உண்டு. தலைவர் காமராஜ் அவர்களுக்கு முகஸ்துதி, அலங்காரப் படாடோபம், அவசியமற்ற விளம்பரங்கள் எவையும் பிடிக்காது. அவற்றை வெறுப்பார்! பொதுமக்கள் பிரச்னைகளில் கடுஞ்சொல், அனாவசியமான எரிச்சல், பிறர்மேல் காரணங்களில்லாமல் எரிந்துவிழும் சிறு சிறு சீற்றம் ஆகியவற்றை அவர் விரும்பாதவர்! ஆனால், அரசியல் பிரச்னைகளில் மட்டும் அடிக்கடி சிறு சிறு கோபதாபங்கள் அவரிடம் மேடைகளிலே எதிரொலிப்பது உண்டு.

இவ்வளவு பண்பாடுகளும் தலைவர் காமராஜரிடம் இருந்ததால்தான், முதலமைச்சர் பதவி அவரால் புகழ்பெற்றது. அவரும் அந்தப் பதவியினால் மரியாதை பெற்றார்;

மதிப்படைந்தார். அரசு அதிகாரிகள் எழுதிவைக்கும் கோப்புகளை நிதானமாகப் படிப்பது மட்டுமல்லாமல், எதிலும் வீணே சந்தேகப்படும் பழக்கமும் அவரிடம் இல்லை.

காமராஜ் அவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்திலும் படிக்கவில்லை. என்றாலும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளையும் - அங்கு வாழுகின்ற மக்கள் என்ன தொழில்களைச் செய்கிறார்கள், அவர்களுக்கு என்னென்ன தேவைகள், என்பதையும் துல்லியமாக அறிந்து, அதற்கேற்ற எல்லா நடவடிக்கைகளையும் உடனுக்குடன் எடுப்பார்.

பயங்கரப்புயலா? மழைச் சீற்றத்தால் மக்கள் துன்பத்தை அனுபவிக்கின்றார்களா? கிராமங்களைச் சுற்றி மழை வெள்ளச் சூழலா? அங்கே மார்பளவு வெள்ளமா? அதனையும் கடந்து சென்று மக்களுக்குச் சேவை செய்ய முடியுமா? என்றெல்லாம் அதிகாரிகளிடம் விசாரித்து, அங்கங்கே சென்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப் போர்க்காலத் திட்டத்தின்படி ஆற்றுவார். அந்தத் தொண்டில் அவரே வல்லவர் என்பதையும் மக்களிடையே நிலைநாட்டினார்!

காங்கிரஸ் கட்சிப் பணிகளுக்காகவும். அரசியல் நிகழ்ச்சிகளுக்காகவும் தமிழ்நாட்டைச் சுற்றிவரும்போதெல்லாம் எந்தெந்தப் பகுதிகளுக்கு என்னென்ன தேவைகள் என்ற திட்டத்தைக் காமராஜர் தெரிந்து கொண்டே வருவார். அந்தத் திட்டங்கள் எல்லாமே ஏழைகளுடைய வாழ்விற்காகவே அமைந்தனவாக இருக்கும்.

நிலச் சொந்தக்காரர்கள் ஏழை உழவர்களை மாற்றக் கூடாது என்ற சட்டமும் கொண்டு வந்தார் காமராஜ். இதனால் சமத்துவ சமுதாயம் உருவாக வழி செய்யப்பட்டது

தமிழ் மாநில வளர்ச்சிக் குழு என்ற ஒன்றை முதல்வர் காமராஜ் உருவாக்கினார். இந்தக் குழுவில் அவருடைய அமைச்சர்கள் அனைவரும் இடம் பெற்றார்கள். பொருளாதாரத்தைச் சீர்படுத்தவும், புதிய திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை புரியவும் இந்தக் குழுவின் கூட்டங்கள் உதவின.

# 40. தட்சிணப் பிரதேசம் எதிர்ப்பு இன்றைய தமிழகம் அமைப்பு!

இந்தியாவை மொழிவழி மாநில வாரியாகப் பிரிப்பதற்குப் பதிலாக நாட்டை ஐந்தாறு பெரிய மாநிலங்களாகப் பிரிக்கலாம் என்ற திட்டத்தை மேற்கு வங்க முதலமைச்சர் திரு. பி.சி.ராய் கொண்டு வந்தார்.

தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகியவை அடங்கிய தட்சிணப்பிரதேசம் என்ற ஒன்றை அமைக்கலாம் என்ற யோசனை அப்போது பலத்த விவாதத்திற்கு இடையே எழுந்தது. தலைவர் காமராஜ் அவர்கள், அந்த தட்சிணப் பிரதேச திட்டத்தைப் பலமாக எதிர்த்தார். அப்போது தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களிடமிருந்து தலைவர் காமராஜ் அவர்களுக்கு ஒரு தந்தி வந்தது. அந்தத் தந்தியில் பெரியார் அவர்கள் தட்சிணப் பிரதேச அமைப்பைக் கடுமையாக எதிர்த்திருந்தார்.

தட்சிணப்பிரதேசம் அமைக்கப்பட்டால், கேரள, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள் என்றும், சென்னை மாநிலத்தின் தலைவர் காமராஜ் என்ற தலைமை நீங்கிவிடும் என்றும் முதல்வர் காமராஜர் அவர்களை அந்தத் தந்தியில் பெரியார் எச்சரித்திருந்தார்.

முதலமைச்சர் காமராஜர், தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரிக்க மறுத்தார். அதைக் கண்ட பிரதமர் நேரு, 'காமராஜர் மீது அந்தத் திட்டத்தைத் திணிக்க மாட்டேன்' என்று கூறிவிட்டார்.

### புதிய தமிழகம்

### கண்ட காமராஜ்!

1956 ஆம் ஆண்டில், தற்போதுள்ள புதிய தமிழகம் தலைவர் காமராஜ் அவர்களால் உருவாயிற்று. தமிழ்நாட்டில், எல்லா அரசியல் பணிகளுக்கும் தமிழ்மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று, முதலமைச்சர் காமராஜ் முடிவு செய்தார்.

## வயதானவர்களுக்கும் ஓய்வூதியம்

ஆதரவற்ற முதியோர்களுக்கு, அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி - பெண்ணாக இருந்தாலும் சரி, அவர்களின் வயதான காலத்தில் ஓரளவு வறுமை குறைத்திட 'ஓய்வூதியம்' என்ற பெயரால் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அமுல்படுத்தினார் புண்ணியவான் காமராஜர்.

காமராஜர் மதம், சாதி, கட்சி, நிறம், அரசியல் வித்தியாசம் ஏதுமின்றி, எல்லா ஏழை மாணவர்களும் கல்வி வசதிகளைப் பெற்றிட சரி சமமான சமத்துவ வசதிகள் செய்து கொடுத்தார்.

ஏழைப்பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம், ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அப்போதைய நிதிவசதிக் கேற்றபடியான அளவில் செய்து கொடுத்துக் கல்வி வளர்ச்சியை அது உருவாக்கியது. அதே திட்டத்தை முதலமைச்சர் காமராஜ் அவர்கள், தனது ஆட்சியின் வருவாய் நிதிநிலைக்கேற்றவாறு, மீண்டும் கொண்டு வந்தார். அதனால், குடிசை வாழ் குழந்தைகள் கல்வி பெற்றுக் குதூகலமாக இருக்க வழி கண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய பிள்ளைகளை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் சேர்த்திட வருபவர்களுக்குத் தக்க உதவிகளைத் தலைவர் காமராஜ் செய்து தந்து, அந்தந்தக் கல்லூரிகளிலே சேர்த்திடவும் உதவினார்! தியாகிகளின் தேச சேவைக்குரிய மதிப்பையும் - மரியாதையையும் அவரது ஆட்சியில் உருவாக்கினார்.

விடுதலைப் போர் வீரர்களை ஒரு நாளும் அவர் மறந்ததில்லை. பொதுக் கூட்டத்தின் எந்த ஒரு மூலையிலே அவர்கள் அமர்ந்து இருந்தாலும் அவர்களைக் காமராஜர் பார்த்து விட்டால் போதும், உடனே அவர்கள் பெயர்களைக் கூறி அன்புடன் அழைத்து, தன்னருகே உட்கார வைத்து மரியாதையும் - அன்பும் காட்டும் முதலமைச்சராகத் திகழ்ந்தார் காமராஜர்! அவர் மிகச் சிறந்த தேசாபிமானி என்பதற்கு வேறு சாட்சி வேண்டுமோ?

## மக்களுக்குத் தேவை அழகா? உணவா?

மத்திய அரசு சென்னைத் துறைமுகத்தை விரிவுபடுத்திட விரும்பியது சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு எதிரே உள்ள துறைமுகத்தை அடுத்துள்ள கடலோரப் பகுதி இடத்தில்

துறைமுகத்தை விரிவுப்படுத்தினால் சென்னை மாநகரத்தின் அழகு கெட்டுவிடும். அதற்குப் பதிலாக இராயபுரம் பகுதியில் அதை விரிவுபடுத்தலாம் என்று மத்திய அரசுக்கு முதலமைச்சர் காமராஜ் கடிதம் எழுதினார்.

அதற்கு மத்திய அரசு, 'பாறைகள் நிறைந்த இராயபுரம் பகுதியில் துறைமுகத்தை விரிவுபடுத்த முடியாது என்று கடிதம் எழுதி உங்களுக்கு வேண்டியது உணவா? அழகா "Do you want bread or beauty'' என்ற வினாவை எழுப்பியது. உடனே முதலமைச்சர் காமராஜர், ''எனக்கு அழகைவிட உணவுதான் தேவை, "I want bread not beauty'' என்று பதில் வரைந்தார்.

சமயோசிதமாக அவ்வாறு அவர் கடிதம் எழுதியதன் எதிரொலிதான் மத்திய அரசினரால் இன்றும் விரிவுபடுத்தப் பட்டு வரும் துறைமுகப்பகுதி என்பதை நாம் மறப்பதற்கில்லை.

## நிர்வாகத்தில் கண்டிப்பு!

ஆளும் கட்சிக்காரர்களுக்கு, அரசு நிர்வாகத்தில் சலுகை காட்டினார் என்று - எதிர்க் கட்சிகள் குறை கூற முடியாதவாறு கண்டிப்புடன் நிர்வாகத்தை நடத்திக் காட்டினார் தலைவர் காமராஜ்! பிற அமைச்சர்களுடைய நிர்வாகத்தில், முதலமைச்சர் என்ற தகுதியில் ஒருபோதும் தலைவர் காமராஜ் என்றும் தலையீடு செய்தது கிடையாது.

தூக்குத் தண்டனை அடைந்த ஒரு குற்றவாளியின் கருணை மனு ஒன்றைப் பரிசீலனை செய்த அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள், 'அதைஏற்றுக் கொள்ள இயலாது' என்று கூறிவிட்டார். ஆனால், அப்போது இருந்த தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், பக்தவத்சலம் கருத்தை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். இது குறித்து முதலமைச்சரின் கருத்தை நாடிய ஆளுநர், தலைவர் காமராஜ் அவர்களிடம் பேசினார்.

அந்த மனுவின் மேலே இருந்த சட்ட நுணுக்கத்தை முதல்வர் காமராஜ் தெளிவாக உணர்ந்து ஆளுநர் கருத்துக்கு ஆதரவு தந்தார். நிர்வாகத்தின் நுட்பத்தைக் காமராஜ் நன்கு உணர்ந்தவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?

## இராஜேந்திர பிரசாத்

## காமராஜருக்குப் பாராட்டு!

''காமராஜ் அவர்களது ஆட்சியின் கீழ் தமிழ்நாடு பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருப்பதை நான் பார்க்கிறேன். மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைப் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'' முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் பேசிய பேச்சு இது. போதாதா இது ஒன்றே தமிழ்நாட்டு ஆட்சியில் காமராஜ் நிர்வாகச் சிறப்பைப் பாராட்டிட!

''நாள்தோறும் நடைபெறும் அரசு நிர்வாகத்திலும், திட்டங்கள் போன்ற பெரும்பணியிலும், ஊழல்கள் குறைந்து, திறமைகள் அதிகமாகக் காணப்படும் மாநிலம்'' என்று இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டது, முதல்வர் காமராஜரின் தமிழ்நாட்டு ஆட்சியின் சிறப்பைப் பாராட்டியதையே குறிக்கும் அல்லவா?

''ஆரம்பக் கல்வி, மின்சார விநியோகம் ஆகியவற்றில் பிற எந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது'' என்று, மத்திய சமுதாய நலத்திட்ட அமைச்சர் கே.சி. டே. குறிப்பிட்டது முதல்வர் காமராஜ் ஆட்சியின் மாண்பை அன்றோ!

''உணவு உற்பத்தித் துறையில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றுவிட்டது. இது என்றும் இல்லாத சாதனை'' என்று, மத்திய துணை மந்திரியாக இருந்த எம்.வி. கிருஷ்ணப்பா பாராட்டியது முதலமைச்சர் காமராஜ் ஆட்சியைத்தான்! இது தமிழ்நாட்டிற்குப் பெருமைதானே!

## காமராஜர் உருவச்சிலை

## தி.மு.க. மேயர் திறப்பு!

சென்னை பெரியார் பாலம் அருகில், காஸ்மா பாலிடன் என்ற கிளப் எதிரில், தலைவர் காமராஜர் அவர்களது திருவுருவச் சிலைத் திறப்புவிழா, அன்றைய சென்னை மாநகராட்சி தி.மு.க. ஆட்சியில் மேயர் வி. முனிசாமி அவர்களால் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்த அந்த விழாவிலே, பாரதப் பிரதமர் நேரு அவர்கள், முதலமைச்சர் காமராஜ் உருவச்சிலையை 1961ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ஆம் நாள் திறந்து வைத்து காமராஜ் அவர்களை அற்புதமாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

அங்கே கூடியிருந்த மக்கள் கூட்டமும், காங்கிரஸ் கட்சித் தொண்டர்களும் ''தலைவர் காமராஜ் வாழ்க, பிரதமர் நேரு வாழ்க'' என்று, மூவண்ணக் கொடிகளை ஏந்தியபடியே முழக்க மிட்டார்கள்.

பிரதமர் நேரு அவர்கள் கம்பீரமான காமராஜ் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசும்போது, '' உண்மையான தலைவன் என்பதற்கு எடுத்துக் காட்டத்தக்கதோர் உதாரண புருஷன், மக்கள் மத்தியில் உருவான ஒரு தலைவன்; தான் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பை நிறைவேற்றத் தக்க ஆற்றல் கொண்ட ஒரு தலைவன்; செயலில் தன்னை மறந்து ஈடுபட்ட நேர்மையான தலைவன் காமராஜர் சிலையைத் திறந்து வைக்கின்றேன்.''

உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலைகள் அமைப்பதை நான் என்றும் விரும்புவதில்லை. மறைந்த பின்பு மரியாதை செலுத்துவதே ஏற்றது, மாண்பு என்று எண்ணுபவன் நான். ''ஆனால், காமராஜ் என் நண்பர் என்ற முறையிலும், அவர் மக்களிலிருந்து தோன்றிய ஒரு மகத்தான தலைவன் என்ற பெருமையிலும், அவருடைய உருவச் சிலையை நான் திறந்து வைத்திடச் சம்மதித்தேன்.''

என்று, உரையாற்றித் தலைவர் அவர்கள் சிலையைப் பெருமையோடு திறந்து வைத்தார். மக்கள் மகிழ்ச்சியினால் எழுப்பிய கையொலி அருகே இருந்த கடலொலியோடு போட்டியிட்டவாறு, காமராஜ் வாழ்க, பிரதமர் நேரு வாழ்க என்று எதிரொலித்தது.

மக்களாட்சி எப்படி இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, அன்று நடந்த மக்கள் தலைவர் காமராஜ் விழாவில் திரண்டிருந்த பொது மக்கள் கூட்டம் காமராஜர் மேல் தமிழகம் கொண்டிருந்த அன்பும் பாசமும் - பக்தியும் எவ்வளவு என்பதற்கு ஒரு சான்றாகக் காட்சியளித்தது! காரணம் என்ன?

ஆங்கிலேயன் ஆட்சியில், 100க்கு 7சதவிகித மக்கள்தான் கல்வி அறிவு பெற்றவர்கள். தலைவர் காமராஜ் ஆட்சியில் 100க்கு 70 பேர் கல்வி அறிவு பெற்றிருப்பதன் அடையாளமாகத்தான், மக்கள் அன்று தமது தலைவர் விழா என்பதை அறிந்து நன்றியுணர்ச்சி யோடு கூடினார்கள்! வாழ்த்தினார்கள்!

இராஜாஜி அவர்கள் ஆட்சியில், தமிழகத்தில் மொத்தம் 12 ஆயிரம் பள்ளிகள்தான் நடந்தன. காமராஜ் ஆட்சியில், அவை 27 ஆயிரம் பள்ளிகளாக உயர்ந்தன! தமிழ் நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் மின்சார விளக்குகள் அருட்ஜோதி ஒளிமயமாக

விளங்கின! மின் இணைப்பற்ற கிராமங்கள் எங்கோ சிற்சில என்ற நிலையைத்தான் தமிழகம் அன்று பெற்றிருந்தது.

சென்னையில் உள்ள கிண்டித் தொழிற்பேட்டை, அம்பத்தூர், பாடி தொழிற் பேட்டைகள், இராணிப்பேட்டை என்ற பெயர்களோடு அமைந்த பேட்டைகள் அல்லாமல், மாவட்டந் தோறும் சிவகாசி, மதுரை, திருச்சி, நெல்லை, நகர்களில் பெரிய சிறிய தொழிற்பேட்டைகள் பெருகியதால் தொழில் வளர்ச்சிகள் சிறப்புற்றிருந்தன.

இந்தத் தொழில்வளர்ச்சி மேன்மேலும் பெருகி வந்ததற்குக் காரணம், தலைவர் அமைச்சரவையில் தொழிலமைச்சரென உறுதுணையாயிருந்து பணியாற்றிய முன்னாள் குடியரசுத் தலைவரான ஆர். வெங்கட் ராமன் அவர்களும் ஆவார்.

## காமராஜரின்

## கல்விப் புரட்சி!

காமராஜ் அவர்கள் முதலமைச்சரானதும் இராஜாஜியின் குலக்கல்வித் திட்டம் வேரோடு ஒழிந்தது. காமராஜரின் புதிய கல்விப் புரட்சித் திட்டம் உருவாயிற்று.

# 41. காமராஜர் கல்விப் புரட்சி

## அறிவுத் துறை காணா அற்புதம்!

*கல்வி ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக இருந்ததை மாற்றி, அனைவருக்கும் கல்வி - முதியோருக்கும் கல்வி - எல்லோருக்கும் கல்வி - ஏழைகளுக்கும் கல்வி என்ற கல்விப் புரட்சி தலைவர் காமராஜர் ஆட்சியிலே உருவாயிற்று!*

*காமராஜ் அவர்களது ஆட்சியிலே கல்வி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள், கல்வி இயக்குநர் என்.டி. சுந்தர வடிவேலு ஆகியோர் அரும்பாடுபட்டுக் கல்வித் துறையை உலகம் வியக்கும் அளவிற்கு மேம்படுத்தினார்கள் என்றால், அது ஏதோ கனவல்ல - இன்றைய நடைமுறை நனவாகவே நிலைத்து நிற்கின்றது.*

*தமிழ் மாநிலம் முழுவதும், மாவட்டப் பாரபட்சமின்றிக் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன. இராஜாஜி ஆட்சியிலே* **மூடப்பட்ட 6000 பள்ளிகளைக் காமராஜர் ஆட்சி திறந்து வைத்தது! அவற்றைக் கல்விக் கோட்டங்களாக்கியது. இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையால் எல்லோருக்கும் கல்வி கொடுக்க இயலாது என்று எண்ணிய தலைவர், மேலும் 14 ஆயிரம் பள்ளிகளைத் திறந்திட ஆணையிட்டார்.** *கல்விக்கண் திறந்தார் காமராஜர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று தேவை?*

*வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கும் பாரத நாட்டில் மக்கள் படிக்காமல் இருப்பது கேலிக் கூத்து அல்லவா? என்பதைத் தலைவர் காமராஜ் உணர்ந்தார்! காரணம் அவர் இளமையிலே கல்வி பெறமுடியாத சூழ்நிலை இருந்ததால்! முதல்* **ஐந்தாண்டுக் கல்வித் திட்டத்தின் அடிப்படையில் காமராஜர் 21,500 ஆரம்பப் பள்ளிகளைத் திறந்தார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மேலும் 26,750 பள்ளிக் கூடங்களாக அவை பெருகின. அதற்குப் பிறகு, அவை 30 ஆயிரத்தை எட்டி விட்டன. இவை புதிய பள்ளிகளின் எண்ணிக்கை! இதைவிட வேறு என்ன சிறந்த கல்வித் தொண்டு வேண்டும்? யார் செய்தார் இவரைப் போல என்றும் இதைவிட?**

முதல் திட்டக் காலத்தில், ஆரம்பப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கை, 25 இலட்சமாக இருந்தது. இரண்டாவது திட்ட இறுதியில், இந்த அளவு 33 இலட்சமாக மாறிற்று. பின்னர், 41 இலட்சமாக உயர்ந்தது. இதைப் போல எந்த ஆட்சி செய்தது? இருந்தால் கூறுங்கள் அன்று வரையுள்ள கல்வி வரலாற்றில்!

மூன்றாவது திட்டக் காலத்தில், மேலும் 14 இலட்சம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்த்திடத் திட்டம் உருவாயிற்று! ஆனால், 1962 - 63 ஆம் ஆண்டுகளுக்கு முன்பே, 12.3 லட்சம் பேர் பள்ளியில் சேர்ந்து விடுவார்கள் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. பசித்த வயிறுகளோடு ஏழைப் பிள்ளைகள் பள்ளிக்கு வரமுடியாத நிலையுள்ளதைத் தலைவர் காமராஜர் நன்கு உணர்ந்தார்! படிப்பறிவின் அருமையை உணராத பாமர மக்களின் வறுமைச் சூழ்நிலையும் அவர் அறிந்த ஒன்று.

அதனால், மாநிலம் முழுவதுமுள்ள கிராமங்களில் எல்லாம், அதே நேரத்தில் எல்லா நகரப் பள்ளிக் கூடங்களிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வர காமராஜ் அவர்கள் சிந்தித்தார்! இந்தத் திட்டம் நல்ல பயன் தர ஆரம்பித்த பிறகு, கிராமங்கள் தோறும் ஆரம்பப் பள்ளிகளைக் கட்டாயமாகத் திறந்து கல்வியைப் பரப்பிடும் நிலை ஏற்பட்டது.

இதனால், தமிழகத்திலே உள்ள இலட்சக் கணக்கான சிறுவர் - சிறுமியர்கள் ஆரம்பப் பள்ளிகளிலே சேர்ந்து கல்வி கற்றிடும் ஏற்றம் அமைந்தது! கிராமம் தோறும் கல்வி வளர்ச்சியைப் பற்றிய அருமை - பெருமைகளை விளக்கிப் பொதுமக்களிடையே பிரசாரம் புரிந்திடக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதனால், பள்ளிகளுக்கு மேலும் சிறுவர் - சிறுமியர்கள் புதியதாக வந்து சேர்ந்து கல்விப் பயிற்சி பெறும் நிலை வளர்ந்தது.

இப்படிப்பட்ட கல்விக் குழுக்களைக் கிராமங்கள் தோறும் அமைத்துக் கல்விப் பிரசாரம் புரிந்த செய்தி வரலாற்றில் எங்கேனும் உண்டா? இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி - இரண்டும் இருந்தும், அங்கங்கே வாழும் எல்லாக் குழந்தைகளும் திரண்டு வந்து படிக்கும் நிலை ஏற்படவில்லையே - ஏன்? என்று காமராஜர் சிந்தித்தார்!

அதற்காக அவர், தமிழ்நாட்டில் இடைவிடாச் சுற்றுப் பயணம் செய்தபோதெல்லாம், ஆங்காங்கே உள்ள கிராம மக்களையும் - ஊர்ப் பெரியவர்களையும் ஒன்று கூட்டி, அவரவர் வறுமை, குடும்ப வாழ்க்கை காரண - காரியங்களை அறிந்து,

அவை நீங்குவதற்கான திட்டங்களைத் தீட்டினார்; செயலாற்றினார்! வறுமையால் எலும்புந் தோலுமாய்க் காட்சி தரும் சிறுவர் - சிறுமியர் உடற்தோற்றங்கள், ஒளியில்லாத கண்கள், பரட்டைத் தலைகள், எண்ணெய் தடவிக் கூடத் தலைவார முடியாத தரித்திர நிலைகள், உடுக்க உடைகளற்ற நிர்வாணமாய் அலையும் பிள்ளைகள், சில கோவாணான்டிச் சிறுவர்களின் பரிதாபங்கள், ஒதுங்கி வாழ்ந்திடக் குடிசை ஒன்றில்லாமல் வீதியோரங்களில் மக்கள் வாழ்ந்திடும் அவலங்கள், வயிறாரக் குடித்திட ஒருவேளைக் கஞ்சி கூடக் கிடைக்கா வறுமைக் கோரங்கள் - அனைத்தையும் தன் கண்ணாரக் கண்டு கண்டு கவலை மிகக் கொண்டார்.

இத்தகைய வாழ்க்கைச் சூழ்நிலையுடையவர்கள், எப்படித் தங்களது குழந்தைகளைக் கல்வி கற்றிடப் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள்? என்று எண்ணி வேதனைப்பட்டார்! அதனால்தான், அவர் ஏழை பங்காளராகக் காட்சி தந்தார்!

## விருது நகர் பிடி அரிசிப் பள்ளி

## மதிய உணவு முன்னோடி!

அந்த நேரத்தில்தான், சிறுவயதில், விருதுநகரில், காமராஜ் கல்வி கற்றபோது பள்ளியில் நிகழ்ந்த படியரிசித் திட்டம் அவர் மனக்கண்ணில் நிழலாடியது!

கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம், கல்வி இயக்குநர் என்.டி. சுந்தர வடிவேலு, பிற அதிகாரிகள் நிபுணர்களுடன் கூடி மதிய உணவு பற்றிய திட்டத்தை விவாதித்தார். படிக்கும் பிள்ளைகளுக்கு ஒருவேளை ஒழுங்காக உணவளித்தால், பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பிக் கல்வி கற்கச் செய்ய, ஏழைப் பெற்றோர்களுக்கு ஆசை வராதா? என்று தலைவர் அவர்களிடையே வாதத்தை வைத்தார். அதன் எதிரொலிதான், இலவச மதிய உணவுத் திட்டம்.

இந்தத் திட்டத்தை, நீதிக் கட்சி தமிழகத்தை ஆண்டபோது வழங்கிய காட்சியை அவரது சிந்தனைக்கு அதிகாரிகள் நினைவுறுத்தினார்கள்! நீதிக் கட்சியினர் அவர்களுடைய நிதி நிலைக்கேற்றபடி செய்தார்கள். நாம், நமது நிதிநிலைக்கேற்ப அதனை விரிவுபடுத்தலாமே! ஏழைக் குழந்தைகள் கல்விக் கண் வாயிலாக ஒளி பெறுவார்களே! வறுமையில் வாடிடும் ஏழைப் பெற்றோர்களின் தரித்திரத்தைப் போக்கினால் அவர்களது மனமும் மகிழுமே!வு என்ற எண்ணங்களால் மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்திடக் காமராஜர் ஆணையிட்டார்.

1956ஆம் ஆண்டில் இலவச மதிய உணவுத் திட்டம் முறையாக ஆரம்பிக்கப்பட்டு, பலனும் அளித்தது. இதற்கு முன்பு மக்களே ஏற்று நடத்துவதாக இருந்த இந்தத் திட்டம், அரசு உதவி கிடைத்தவுடன், அது மேலும் வலுப்பெற்று ஒழுங்காகவே நடந்தது.

## உலக நாடுகளின் பாராட்டுக்கள்!

தலைவர் காமராஜ் அவர்களால் கல்வி வளர்ச்சிக்காகத் துவக்கப்பட்ட மதிய உணவுத் திட்டத்தின் வெற்றியைக் கண்டு, உலக நாடுகள் பாராட்டின! வரவேற்று வாழ்த்தின! அமெரிக்காவிலும் இந்தத் திட்டத்தை உருவாக்கப் போவதாக ஓர் அமெரிக்க அறிஞர்அறிக்கை விடுத்து மகிழ்ந்தார். பிரதமர் நேரு அவர்கள், ஏழ்மையின் கோரப் பிடியைக் குறைத்து, கிராம மக்களின் மனதிலே மகிழ்வையூட்டிடும் இந்தத் திட்டத்தைக் கண்டு உளம் பூரித்தார்! பாராட்டினார்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், தமிழ்நாட்டின் பெரும்பகுதிப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் பரவியது. பலன் பெற்றார்கள் ஏழைச் சிறுவர் சிறுமியர்கள் எல்லாம்! மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், **மதிய உணவுத் திட்டம் தீவிரமடைந்ததால், மேலும் 14 லட்சம் சிறுவர்கள் அதனால் பயனடைந்தார்கள்.**

## அமெரிக்காவின் பாராட்டு – உதவி!

அமெரிக்க 'கேர் நிறுவனம்' இந்தத் திட்டத்திற்கு, பால் பவுடர், சோளமாவு, தாவர எண்ணெய் ஆகிய பொருட்களை இலவசமாகக் கொடுத்து உதவியது.

## ஈராயிரம் ஆண்டு காணாத சாதனைகள்!

கல்வி வளர்ச்சியில் தீவிரமான சிந்தனை கொண்ட தலைவர் காமராஜ், மக்களின் ஆர்வத்தை மேலும் தீவிரப்படுத்திட முயன்றார். ஏனென்றால், தம் ஆட்சி எடுத்து வருகின்ற திட்டங்களிலே எல்லாம், மக்கள் போதிய ஆர்வமும் - அக்கறையும் காட்டவில்லையே என்ற வேதனையும் - கவலையும் அவரை அதிகமாக வருத்தியன!

தமிழ்நாட்டு வரலாற்றில், ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாக நடைபெறாத ஒரு சமுதாய, அற்புதத்தைக் காமராஜ் அவர்கள் தமது

வரலாற்றிலே அதை ஒரு மாபெரும் புரட்சி இயக்கமாகவே தோற்றுவித்து இயக்கி வளர்த்து வந்தார் எனலாம்!

## ஆசிரியர்களுக்கு ஆற்றிய தொண்டு!

காமராஜர் புதிய புதிய பள்ளிக் கூடங்களைத் திறந்தார்! மதிய உணவை ஏழைச் சிறுவர்களுக்குப் படைத்தார்! கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளிக் கூடங்களுக்கான ஆசிரியப் பெருமக்களை அரசுச் சார்பாக நியமித்தார்! ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை உயர்த்தி அவர்களையும் அகமகிழச் செய்தார்! அவர்களுடைய பிள்ளைகளும் உயர் கல்வி வரை·இலவசமாகக் கற்றிடத் திட்டமிட்டு அதை நடைமுறைப்படுத்தினார்!

பொது மக்களிடையே கல்வியின் சிறப்புக்களை உணர்த்திட, கிராமங்கள் தோறும் கல்விக் குழுக்களை அமைத்தார்! ஏழை மாணவர்களுக்கு இலவசச் சீருடை, இலவச எழுது பொருட்கள், படிக்கப் புத்தகங்கள், எழுதக் குறிப்புப் புத்தகங்கள் போன்றவற்றை வழங்கிட காமராஜர் வழி வகுத்தார்.

## கிராமங்களில் கல்வியைத் தட்டி எழுப்பிய அக்கறை!

'அரசு ஏதோ இந்தக் கல்விப் பணியை ஆற்றுகின்றது! அது அதன்கடமை! பொறுப்பு!' என்ற எண்ணம் பொதுமக்களிடையே இருந்ததே தவிர, அந்தத் திட்டங்களிலே மக்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை - என்ற நிலை நாட்டிலே இருந்ததைத் தலைவர் காமராஜர் கண்டார். அந்த நிலையை அகற்றி, மக்களும் இந்தத் திட்டங்களிலே ஒத்துழைத்து ஒன்றுபட்டுக் கலந்து பணியாற்றிடும் மிகப் பெரிய பொறுப்பை - அவர் பொதுமக்களிடையே உருவாக்கினார். குறிப்பாகக் கிராமங்களைத் தட்டி எழுப்பிக் கல்வி ஒளிபெற்றிடத் தயார் படுத்தினார் - காமராஜர்!

**''கல்வி வழங்குவது என் பொறுப்பு! கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்ற உணர்ச்சி ஒவ்வொரு குடி மகனுக்கும் ஏற்பட வேண்டாமா? அவ்வாறு ஏற்படுவதுதான் உண்மையான கல்விவளர்ச்சித் திட்டம்!**

## பள்ளி மாநாடுகள் ரூ.647 கோடி வசூல்!

அதனால், தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராமங்கள், நகரங்கள் உட்பட்ட இடங்களிலே எல்லாம் அதிகாரிகளாலும் - மக்களாலும்

பள்ளிக் கல்வி வளர்ச்சி இயக்க மாநாடுகள் நடத்தப்பட்டன. தமிழகத்தில் 133 மாநாடுகள் ஆங்காங்கே நடத்தப்பட்டன. இவ்வாறு நடந்த மாநாடுகளின் பலனாக 647 கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள், கல்வி வளர்ச்சிப் பணிகளுக்காக மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டன.

தலைவர் காமராஜ் அவர்களிடம், நேரிடையாக மட்டும் 4 கோடி ரூபாயைப் பொதுமக்கள் வழங்கினார்கள். புதுமையான இந்தக் கல்விப் புரட்சித் திட்டத்தைப் பார்த்துப் பூரித்துப் புளகாங்கிதமுற்ற உலக நாடுகள், தலைவர் காமராஜரை மிகவும் பாராட்டி வாழ்த்தின.

### சீருடைச் சிறப்புக்கள்

மாணவர்கள் கல்விக் கோட்டத்திற்குச் செல்லும்போது, ஒழுங்காகவும் -ஒழுக்கமாகவும் - அழகாகவும் செல்லவேண்டாமா? அவர்களுக்குப் பள்ளியில் எல்லாப் பொருட்களும் கிடைக்க வேண்டும் அல்லவா? இதற்காக மாணவர்கள் அழகாகத் தோற்றமளிக்கச் சீருடைகள், இலவசப் புத்தகங்கள், எழுது பொருட்கள், நோட்டுப் புத்தகங்கள், போன்ற எல்லாம் லட்சக்கணக்கான பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன.

பள்ளிப் பாலகர்கள் மத்தியில், ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிடும் ஏழை- பணக்காரன் என்ற பேதங்கள் எழக்கூடாதே என்று முதல்வர் காமராஜர் எண்ணினார். அதன் எதிரொலிதான், எல்லாப் பிள்ளைகளும் ஒரே விதமான பள்ளிச் சீருடைகளை அணிவது என்ற திட்டமாகும். இந்த அரிய செயலால், பள்ளிப் பிள்ளைகளிடையே தாழ்வு உணர்ச்சிகள் ஏற்றத் தோன்றாத நிலையை உருவாக்கினார் காமராஜர் அவர்கள்.

இன்றும் கூட, அரசுப் பள்ளிகளானாலும் சரி - தனியார் கல்விக் கூடங்களானாலும் சரி, பிள்ளைகள் எல்லாம் ஒரே மாதிரியான சீருடைகளை அணிந்து, அழகு தவழும் கோலத்தோடு அணியணியாகச் செல்லும் அற்புதக் காட்சிகளைக் காண்கின்றோம் அல்லவா?

அந்த அதிசயக் காட்சியை மாணவ மணிகளிடையே உருவாக்கியவர் தலைவர் காமராஜ் அவர்கள் தானே! அதற்கான ஆணைகளை இட்டவரும் அந்த அற்புதப் பெருமகனன்றோ!

## 11–வது வகுப்பு வரை கல்வி இலவசம்!

1960 ஆம் ஆண்டில், ஏழைப் பிள்ளைகள் எல்லாருக்கும் 11ஆவது வகுப்புவரை இலவசக்கல்வி வழங்கிடக் காமராஜர் கட்டளை யிட்டார். இந்தச் சட்டம், முதலில் 1200 ரூபாய் ஆண்டு வருமானத்திற்குக் குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்குத் தான் பொருந்தும் என்றார். பிறகு, மீண்டும் இந்தச் சட்டத்தைத் திருத்தி, 1500 ரூபாய் ஆண்டு வருமானமுள்ள எல்லா ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகட்கும் அமுல்படுத்தப்படும்'' என்று நிபந்தனையைத் தலைவர் தளர்த்தினார்!

இதே சட்டத்தின் வாயிலாகக் கெசட் பதிவு பெறாத அரசு ஊழியர்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகளின் ஊழியர் பிள்ளைகட்கும் உயர்நிலைக் கல்வியைச்சம்பளம் கட்டாமல் பெற்றிடக் காமராஜர் உத்தரவிட்டார்.

1956-57 ஆம் ஆண்டிலிருந்தே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், காவல்துறையைச் சேர்ந்த காவலர்கள், கடைநிலை அரசுப் பணியாளர்கள் ஆகிய அனைவரின் பிள்ளைகளுக்கும் சம்பளமில்லாத உயர்நிலைக் கல்விச்சலுகைகள் வழங்கப்பட்டன.

## எல்லாருக்கும் இலவசக் கல்வி!

இதற்குப் பிறகு, அடுத்த ஆண்டில், உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்கும் மாணவ - மாணவியரில் - இலவசக் கல்வி பெறாமல் மீதியுள்ளவர்கள், 100க்கு 17பேர்தான் என்று அரசு கணக்கிட்டதால், அவர்களுக்கும் உதவி செய்யும் நோக்கத்துடன், **'எல்லாருக்குமே இலவசக் கல்வி' என்ற திட்டம் 1962-ஆம் ஆண்டில் அமுலானது.**

**அல்லும் - பகலும் அயராது, சிந்தித்த தலைவர் காமராஜ் சிந்தனை ஆற்றலால், தமிழகத்தில் ஆரம்பப் பள்ளியே இல்லாத கிராமம் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. ஐந்து மைல் தூரத்திற்கு ஓர் உயர்நிலைப் பள்ளி வீதம், தமிழகம் முழுவதும் உயர்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டு, அவை நவீன வசதிகளுடன் அமைந்தன.**

## கல்விக்கண் தந்த 'கண்ணப்பர்' காமராஜர்!

தமிழகக் கிராமங்களிலே எல்லாம், ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் பெருகிக் கல்வி

மணம் பரப்பியது. தமிழ் மக்கள் எல்லாரும் முதலமைச்சர் காமராஜ் அவர்களின் கல்வி வளர்ச்சிக்குரிய தொண்டுகளைக் கண்டு பெருமிதம் அடைந்தார்கள். கல்விக்கண் தந்த காமராஜர் என்று அவரைப் போற்றி மகிழ்ந்தார்கள்.

நாட்டில் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டால் மட்டும் போதுமா? கல்வியின் தரத்தைப் பாதுகாக்க வேண்டாமா? அதற்கான நடவடிக்கைகளையும் காமராஜ் உடனடியாக எடுத்தார்.

கல்வியின் தகுதியை உயர்த்திட, எல்லா ஆசிரியப் பெருமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். **ஆசிரியர்கள் ஆண்டுக்கு 180 நாட்களே பள்ளிகளில் பணியாற்றினார்கள். அந்தப் பணி நாட்களைக் காமராஜர் 200 என்று உயர்த்தினார். தேவையற்ற விடுமுறை நாட்களை அவர் குறைத்தார்.**

பாடத்திட்டங்கள், பலவிதத் திறமைகளை மாணவரிடையே உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டன. அதனால் இருகூறு வகுப்புக்கள் துவங்கப்பட்டன. இதனடிப் படையிலேயே பலநோக்குப் பள்ளிகள் ஆரம்பமாயின.

## பலநோக்குப் பள்ளிகள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 191 பலநோக்குப் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டன. 286 இரு கூறு வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. அறிவியல் பாடங்களைக் கற்றிட, தேவையான புதிய புதிய இரசாயனப் பரிசோதனைக்கூடங்களும் அதற்குரிய நவீனக் கருவிகளும் - அதற்கான அறிவியல் அறிவைப் பெற்றிட புதிய நூல் நிலையங்களும் உருவாகின.

## ஆசிரியர்கள் ஓய்வூதியம்!

கல்வித் தரம் உயர்த்தப்பட்ட நிலைகளுக்கு ஏற்றவாறு, ஆசிரியர் பெருமக்களுக்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட சம்பள உயர்வுகளை அவ்வப்போது குழு அமைத்துக் கணித்து நிதிநிலை அறிக்கைகளைச் சட்ட மன்றத்தில் அளிக்கப்பட்டபோது தலைவர் காமராஜ் அவற்றை உயர்த்தினார்.

ஆசிரியர் பெருமக்களுக்கு, அன்றுவரை இல்லாதிருந்த ஓய்வூதியம், பிராவிடண்ட் ஃபண்டு, கட்டாய இன்சூரன்ஸ், ஆகிய முப்பெரும் திட்டங்களையும் அவர் அமுலாக்கினார்.

அவர்களுக்குரிய குடும்ப ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தத் திட்டங்களை முதன்முதலில் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்த பெருமையும் - புகழும் தலைவர் காமராஜ் அவர்களுக்கே என்றென்றும் உண்டு.

கிராமங்களில் பணியாற்றிடும் ஆசிரியர்களுக்கு அரசாங்கமே வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் உருவாக்கப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில், 25 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி, 750 வீடுகளைக் கட்டி முடித்து அவர் வழங்கினார்.

## கல்லூரிக் கல்வி வட்டியற்ற கடன்!

மருத்துவக் கல்லூரி, இன்ஜினியரிங் கல்லூரி, விவசாயக் கல்லூரி, தொழிற்கல்லூரிகளில் கல்வி கற்றிடும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாத கடன் உதவியளிக்கத் தலைவர் காமராஜ் ஏற்பாடு செய்தார். இதனால், ஆண்டு தோறும் மாணவர்கள் எண்ணிக்கை அக் கல்லூரிகளில் பெருகியது.

மருத்துவ மனைகளில் பணியாற்றிடும் நர்சுகளுக்குரிய பயிற்சி வசதிகளும் - சம்பள உயர்வுகளும் அவர் ஆட்சியில் உயர்ந்தன. முதல்வர் காமராஜ் ஆட்சியில்தான் கலைக் கல்லூரிகள் அதிகமாக உருவாக்கப்பட்டன. அவருடைய அரசில் இரண்டு உடற்பயிற்சிக் கல்லூரிகளும், 39 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், பல்கலைக்கழகம் ஒன்றும் உருவாயின.

# 42. பசுமைப் புரட்சி வித்தகர்! பச்சைத் தமிழர் காமராஜர்!

தலைவர் காமராஜர் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, தமிழகம் பெற்ற மிகச் சிறந்த கல்வித் தொண்டுகளையும், தமிழ் மக்கள்பால் அவர் வைத்துள்ள அன்பால் ஆற்றும் இனத்தொண்டுகளையும், தந்தை பெரியார் ஈ.வெ. ரா. அவர்கள் நுட்பமாகக் கவனித்துக் கொண்டே வந்தார்!

## பச்சைத் தமிழர் பெரியார் பாராட்டு!

அதனால்தான் தட்சிணப் பிரதேசம் என்ற ஒன்றை வடவர்கள் கொண்டு வந்தபோது, தலைவர் காமராஜ் தலைமை நீங்கிவிடும், தமிழர்கள் அடிமைகளாகி விடுவர் என்ற கருத்தை, தலைவர் காமராஜருக்குத் தந்தி வாயிலாக அவர் அன்று அறிவித்தார். அதைக் காமராஜ் அவர்களும் ஏற்றார்! வெற்றிக்கரமாக அதை முடித்தார்.

ஏழைப் பிள்ளைகள் கல்வி கற்றிட வேண்டும் என்ற காமராஜருடைய அக்கறையான பணிகளையும் - ஆர்வத்தையும் - அதற்கான செயலாற்றல்களையும் கண்ட தந்தை பெரியார் அவர்கள், தானாக முன்வந்து மனம் திறந்து பச்சைத் தமிழர் காமராஜர் என்று பாராட்டி மகிழ்ந்தார். அதே நேரத்தில் அவரது ஆட்சிக்கு எவராலும்; எந்தவிதத் தடையும் ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற அக்கறையால், காமராஜர் எதிர்பாராதபோதே தந்தை பெரியார் அவர்கள் தனது கட்சியான திராவிடர் கழகத்தின் ஆதரவை வலிய வழங்கி வந்தார்!

தந்தை பெரியார் அவர்கள், தான் பேசிடும் தனது கட்சிப் பொதுக்கூட்டங்களின் மேடைதோறும் பச்சைத் தமிழர் காமராஜ் அவர்களின் தொண்டுகளை - உதாரணங்களுடன் எடுத்துக் காட்டி, மக்களிடையே புகழ்ந்தார்; போற்றினார். காமராஜரைத் தமிழர்கள் இந்த நேரத்தில் ஆதரிக்காவிட்டால் நாம் ஒரு நூற்றாண்டின் வளர்ச்சி வாழ்க்கை நிலைகளை இழப்போம் என்று கணித்துப் பாராட்டினார்.

தந்தை பெரியார்ஈ.வெ. ரா. முதல்வர்காமராஜ் ஆகியோரிடையே உள்ள அரசியல் தொடர்புகளையும் - நெருக்கங்களையும் கண்ட சில நடுநிலையாளர்கள், அவரவர் எண்ணங்களைத் தகுதிமிக்கவர்களின் பரிந்துரைகளோடு பெரியார்அவர்களிடம் கூறி, அவற்றைத் தலைவர் காமராஜ் மூலமாக பிராமணரல்லாதார்வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

## தமிழர் ஏணி
## தந்தை பெரியார்!

ஓர் உயர் அரசு அதிகாரி எல்லாத் தகுதிகளும் உடையவராக இருந்தும் அவர் முற்பட்ட வகுப்பினரை மீறிப் பதவி பெற முடியாதவராக மனம் நைந்து உழைப்பார். இதைப் பெரியார் அவர்களுக்கு தகுதியுடையவர்கள் எடுத்துக் கூறுவார்கள். பெரியார் அவர்கள் இந்த இழிநிலையைத் தலைவர் காமராஜரிடம் விளக்கிக் கூறினால், நியாயமாகப் பெறவேண்டிய உயர் பதவியைப் பெற்றுத் தருவார் காமராஜர்; ஆணையுமிடுவார்!

சில நேரங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களும் பெரியார் அவர்களைச் சென்று பார்த்துத் தங்களது பணிநிலைகளை எடுத்துச் சொல்வார்கள். தலைவர் காமராஜரிடம் இப்படிப்பட்ட உண்மை நிலைகளைப் பெரியார் அவர்கள் தொலைபேசி மூலமாகக் கூறி, அதற்குரிய நடவடிக்கை எடுக்கக்கோரி, தகுதிக்கேற்ற உதவிகளைச் செய்ய வைப்பதும் உண்டு- தமிழின வளர்ச்சிக்காக!

இதுபோன்ற சம்பவங்களைத் தலைவர் காமராஜ் அவர்களிடம் பெரியார் அவர்கள் தெரிவித்தவுடன், அவருடைய வார்த்தையில் நியாயம் நிலைக்கும் - எதையும் அவர் தவறாகக் கூறமாட்டார் என்று தலைவர் காமராஜ் நம்புவார். எப்படியும் தமிழ் இன வாழ்வு உயர வேண்டும் என்று கருதி, அப்போதே அதற்கேற்ற உத்திரவுகளைக் காமராஜர் பிறப்பிப்பார்.

அதனால், 'தமிழர்களுக்கு வாழ்வு கொடுக்கும் பச்சைத் தமிழர் காமராஜர்' என்று தந்தை பெரியார் அவர்கள், தனது கட்சி மேடைகளிலே பகிரங்கமாகவே முதல்வர் காமராஜரைப் பாராட்டி மகிழ்வார் - பிரசாரமும் செய்வார். ஈ.வெ.கி. சுலோசனா சம்பத் அவர்களது சகோதரர் எஸ். கஜேந்திரன் என்பவர், மறைந்த ஈ.வி.கே. சம்பத் அவர்களின் மைத்துனர் ஆவார். செய்தித் துறையிலே அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். திராவிடர் இயக்க ஈடுபாடுடைய ஆர்வலர் விசுவாசி எஸ். கஜேந்திரன்.

செய்தித் துறையில்அவர் பணியாற்றியதால், சில அரசு இரகசியங்களையும், முக்கியமான தகவல்களையும் திராவிட இயக்கத் தலைவர்களுக்குக் கொடுக்கிறார் என்ற ஐயம், காமராஜ் ஆட்சி நடைபெறும்போது அவர் மீது உருவாயிற்று!

காவல்துறை அவரைக் கண்காணித்ததன் எதிரொலி, அவரைப் பணியை விட்டு நீக்கிவிடலாம் என்று கூறப்பட்டு, அவருடைய கோப்பில் சம்பந்தப்பட்ட செயலர், அமைச்சர்கள் கையெழுத்திட்டு, தலைவர் காமராஜ் அவர்களிடம் ஒப்புதலுக்காகக் காத்திருந்தது. முன்கூட்டியே இதை அறிந்திருந்த எஸ். கஜேந்திரன், பெரியார் அவர்களை அணுகி, நடந்த சம்பவ விவரத்தை விளக்கிக் காப்பாற்றுமாறு கேட்டார்.

இதற்காகப் பெரியார், தலைவர் காமராசர் இல்லத்திற்குச் சென்றார். கஜேந்திரன் கூறிய உண்மைகளைக் கூறினார். உடனே காமராஜர் அவர்கள், செய்தித் துறையில் அவர் இருப்பதால் தானே அவர்களுக்குச் செய்திகளைக் கொடுக்கிறார் என்ற முடிவிற்கு வந்து அந்தக் கஜேந்திரனை வருவாய்த் துறைக்கு மாற்றிவிட்டார்.

கஜேந்திரன் பணிநீக்கம், பெரியார் அவர்களால் திரு. காமராஜ் மூலமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது.

பெரியார் - காமராஜர் தொடர்பு நெருக்கமாக இருந்ததால், கஜேந்திரனைப் போன்ற பல தமிழர்கள் தங்களது உயர் பதவிகளைக் காப்பாற்றிக் கொண்டார்கள். தமிழ்ச்சாதி தன்மானத்தோடு வளர்ந்தது! இத்தகைய உதவிகளை ஆளும் கட்சியின் தலைவரான காமராஜர் அவர்களிடம் பெறவே, திராவிடர் கழகம் காமராஜரை ஆதரித்த காரணங்களிலே ஒன்றாக அமைந்தது.

## விவசாயம் பெற்ற விந்தைகள்!

முதலமைச்சர் காமராஜர் அவர்களது ஆட்சியில், நீர்ப்பாசனத் திட்டங்கள் பல செய்து முடிக்கப்பட்டன! அவற்றுள் சில இவை: கீழ்பவானி, மணிமுத்தாறு, காவிரி முகத்துவாரம், ஆரணியாறு, வைகை நீர்த்தேக்கம், அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புள்ளம்பாடி, வீடூர் அணைத்தேக்கம், பரம்பிக்குளம், நெய்யாறு போன்ற திட்டங்கள் எல்லாம், தலைவர்காமராஜர் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட நீர்ப் பாசனத் திட்டங்களாகும்.


திருநெல்வேலி மாவட்டத்தில்கட்டப்பட்ட மணிமுத்தாறு அணையினால், 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனத்திற்குப்




காமராஜர் அமைச்சரவை :


அமர்ந்திருப்போர் : ஆர். வெங்கட்ராமன், ஜோதி வெங்கடாசலம், கவர்னர் பிரகாஷா, காமராஜர், பக்தவச்சலம்.

பின்வரிசை : கக்கன், கடையம்பூர் மஜீத், ராமையா, என். எஸ். எஸ். மால்குடியார், பூவராகவன்.





பின்வரிசை : லூர்தம்மாள், சைமன், சி. சுப்பிரமணியம், கக்கன், பக்தவச்சலம், மாணிக்கவேல் நாயக்கர்.
அமர்ந்திருப்போர் : ஜோதி வெங்கடாசலம், கவர்னர் பிரகாஷா, காமராஜர்.





பின்வரிசை : பக்தவச்சலம், எஸ். எஸ். ராமசாமி படையாச்சி, மாணிக்கவேல்.





திருமதி. லால்பகதூர் சாஸ்திரியுடன் காமராஜர்.



மார்ஷல் டிட்டோ இந்திய விஜயத்தின் போது.



இறுதி மரியாதை செலுத்தும் போது : ராஜாராம், கலைஞர், பா. ராமச்சந்திரன்.

பயன்பட்டது! கீழ்பவானி அணையினால், ஏறக்குறைய இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர் நிலங்கள் வளம் பெற்றன. சேலம் மேட்டூர் கால்வாய் மூலமாக, 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனப் பயன்பெற்றன! கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திட்டம், வைகை, சாத்தனூர் திட்டங்கள் தர்மபுரி, மதுரை, வடாற்காடு மாவட்டங்களை வளப்படுத்திய நீர்ப்பாசனங்களாகும். பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்திற்காக, தலைவர் காமராஜ் ஆட்சியில் 30 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, கோவை மாவட்டத்தைப் பசுமைப் புரட்சியிலே ஈடுபடச் செய்தது.

தமிழக விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்டிட நீண்ட காலத் தவணைக் கடன்களும், 25 ஆயிரம் சதவிகித மான்யமும் அளிக்கப்பட்டது. விவசாயப் பெருமக்களுக்குரிய நில இடு பொருட்களும் - நிதி உதவியும் எளிதாகக் குறைந்த வட்டியில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைக் காமராஜர் அவர்கள் ஏற்படுத்தினார்.

அதற்குக் கூட்டுறவு இயக்கத்தைத் தேர்வு செய்தார் தலைவர்! இவர் காலத்தில் தான் கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது. ''தன் நலம் பாராமல் கூட்டுறவு இயக்கத்தில் விவசாயம் செய்பவர்கள் ஈடுபட வேண்டும்'' என்று தலைவர் காமராஜ் வற்புறுத்தினார். வடாற்காடு மாவட்டத்தில் ஒருமுறை சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது அவர் ஊர் ஊராகச் சென்றார்.

பொதுக்கூட்டங்கள் சில ஊர்களிலே நடத்தி, அக்கூட்டங்களிலே தலைவர் தனது திட்டங்களால் ஏற்படும் நன்மைகளையும், அவற்றைப் பயன்படுத்தும் திட்ட முறைகளையும் பாமர மக்களுக்குப் புரியும்படி பேச்சு வழக்கிலேயே எடுத்துரைத்தார். வடாற்காடு மாவட்டத்தின் ஓர் ஊரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தலைவர் காமராஜர் மேடையில் அமர்ந்து கொண்டே எதிரே உள்ள ஏழை மக்களைப் பார்த்து, ''உங்களிலே ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலமுடையவர்கள் யார் யார்? என்று கேட்டார்.

ஓர் ஏக்கர் நிலமுள்ள விவசாயி ஒருவர் எழுந்தார். அவரைத் தலைவர் அருகே அழைத்துத் தட்டிக் கொடுத்து, உங்களிடமுள்ள நிலம் எவ்வளவு என்றார்?

''ஒரே ஏக்கர் தானுங்க'' என்றார் விவசாயி!

'அதிலே எவ்வளவு நெல் விவசாயம் செய்வீங்க' என்றார் தலைவர்!

'பத்து மூட்டை நெல் கிடைக்குங்க' என்றார் விவசாயி!

'உரம் போட்டா, போடாமலா உங்களுக்கு அந்த நெல் கிடைப்பது'' என்றார் முதல்வர்.

'உரம் போடாமத் தானுங்க'

'உரம்போடாமல் இவ்வளவு கிடைக்கறதுன்னா; போட்டா எம்முட்டு கிடைக்குமுன்னே!'

உரம் போட்டு நல்லா ஒழைச்சா ஏக்கருக்கு இருபது மூட்டை நெல் வருமூங்க'. ஆனால் 'உரம் வாங்க பணத்துக்கு எங்கே போவேங்க' என்று இழுத்தார் விவசாயி.

தலைவர் காமராஜ் அவர்கள் சிரித்துக்கொண்டே, 'எவ்வளவு பணம் வேண்டியிருக்கும்னே' என்றார்.

ஒரு நுத்தம்பது அல்லது இருநூறு ரூபாய் இருந்தா போதுமுங்க, நல்லா மகசூல் காணுங்க' என்றார் விவசாயி. மறுபடியும் தலைவர் அந்த ஏழை மகனைத் தட்டிக் கொடுத்து சிரித்தபடியே ''சர்க்கார் இங்கே கடன் கொடுக்கறாங்களா? இல்லையா? அதை என்ன செய்யறீங்கன்னே'' என்று கேட்டார்.

உடனே விவசாயி, நானல்லாம் கடன் வாங்கறதில்லிங்க. அதை வாங்க ரொம்ப கஷ்டப்படம்னுங்க, என்றார். 'இனிமே சர்க்கார் கடன்கொடுக்க ஏற்பாடு செய்றேன்னே, என்ன புரிஞ்சுதாங்கறே. அந்தப் பணமும் எந்தக் கஷ்டமும் நீங்கப் படாமே நேரடியா உங்களுக்கே கிடைக்கச் செய்யறேன். அப்படிச் செய்தா அதிகமாக பத்து மூட்டை நெல் கிடைக்கும் இல்லையா? அதைச் சர்க்காருக்கே விற்பனை செய்வீங்களா? என்று கேட்டார் தலைவர் விவசாயிடம்!

**எந்த முதலமைச்சர் தனது மக்களை இவ்வாறு வலிய அழைத்துப் பேசி அமைதியாக அளவளாவி - அக்கறையுள்ள வழிமுறைகளைக் கூறி ஊக்கமூட்டி, சர்க்கார் கடன்களைச் சொன்னபடி அவருக்குச் சேர்த்தார்? எந்த முதலமைச்சர் காலத்தில் விவசாயத்திற்காக இவ்வளவு ஊர்களில், ஆறுகளில் நீர்ப்பாசனத் திட்டங்களை அவரவர்ஆட்சியில் செய்து முடித்தார்? மக்கள் சிந்திக்க வேண்டிய மகத்தான மனிதாபிமான நன்றியுணர்வுப் பணிகளல்லவா இவை?**

**மானாவாரியாக ஆங்காங்கே கிடக்கும் நிலங்களைப் பெற்றுள்ள உழவர் பெருமக்களுக்கு ஆயில் எஞ்சின்கள், மின்சார பம்பு செட்டுக்கள் தவணை முறைகளில் கடனாகக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தவர் முதல்வர் காமராஜ்!**

**தலைவர் காமராஜர் ஆட்சியிலே 150 லட்சம் ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்யும் நிலங்களாகத் தகுதிபெற்றன. இதில் 56**

இலட்சம் ஏக்கரா நிலங்கள், நிலையான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றன என்றால், இந்தக் காலம், அதாவது காமராசர் ஆட்சி செய்த காலம், எல்லாத் துறைகளிலும் பொற்காலமாகத் திகழவில்லையா? நெஞ்சிலே கை வைத்து, இன்றுவரை நடந்த ஆட்சியை ஆய்வோர்களுக்கு மட்டுமே - பொற்காலமாக ஒளிவீசும் என்பதிலே, மனசாட்சி மட்டுமே உள்ளவர்களுக்கு உதயமாகும் எண்ணப் புதையலாகும்.

தொழில் வளர்ச்சிகள், காமராஜர் காலத்தில்தான் பெருகின என்பதற்கு - இன்றும்நடைபெற்று வரும் தொழிற் பேட்டைகள் பேசாதா அவற்றுக்கு வாய் மட்டும் இருந்தால்? அது போகட்டும், நெய்வேலி நிலக்கரித் திட்டம், நீலகிரி கச்சா ஃபிலிம் தொழிற்சாலை, கிண்டி ரணசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, மாவட்டந்தோறும் தோன்றியுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், சோடா உப்புத் தொழிற்சாலைகள், இவையெலாம் யார் ஆட்சியிலே தமிழகத்திலே தோன்றிப் பெருகின? தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியிலேதான் என்பதை இல்லையென்று எந்த வரலாற்று ஆசிரியர்களாவது மறுப்பரா?

### கிராமங்கள் மின்சார வசதி!

இந்தியாவிலேயே, தமிழகம்தான் 13,300 கிராமங்களுக்கு மின் இணைப்பைக் கொடுத்து முதலிடம் பெற்றுள்ளது - காமராஜர் ஆட்சியிலேதான். பெரியாறு மின்சாரத் திட்டம், 9 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டது. ஒரு லட்சம் கிலோ வாட் மின்சாரத்தை நாம் அதன் மூலம் அப்போது பெற்றோம். 1995ஆம்ஆண்டான தற்போது பல மடங்குகளாக அதன் வளர்ச்சி பெருகியிருக்காதா?

குந்தா மின் திட்டம் மூன்றரைக் கோடி ரூபாய் செலவிடப்பட்டு உருவாக்கப்பட்டது. இதைப் பிரதமர் நேரு அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழக மின்சார இணைப்பில், காமராஜ் அவர்கள் காலத்தில் மட்டும் 95 கோடி ரூபாய் மூலதனமாகக்கப்பட்டு, அதிலிருந்து 12 கோடி ரூபாய் வருமானம் பெறும் தகுதி உருவானது.

# 43. எனது நினைவுக்கு எட்டியவரை ஆவடி மாநாடுதான் மாநாடு!

1956ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள், சென்னை மாநகருக்கு ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.

இந்தியத் தேசியக் காங்கிரஸ் 60ஆவது மாநாடு யு.என். தேபர் தலைமையில் இங்கே நடைபெற்றது.

## ஆவடியில் 60ஆவது காங்கிரஸ் மாநாடு!

மாநாட்டின் எல்லா பொறுப்புக்களையும் முதலமைச்சர் காமராஜ் அவர்களே ஏற்றிருந்தார்! டி.வி.எஸ். தொழில் நிர்வாகத்தைச் சேர்ந்த டி.எஸ். கிருஷ்ணா, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிறுவன உரிமையாளர் இராம் நாத் கோயங்கா, தஞ்சை மாவட்ட மிராசுதார் வி.எஸ். தியாகராஜ முதலியார் ஆகிய மூவர் குழுவைத் தலைவர் காமராஜ் அமைத்து, அவர்களிடம் மாநாடு நடத்தும் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

## ஜெமினி வாசன் அரும்பணி!

ஜெமினி ஸ்டுடியோ உரிமையாளரான எஸ்.எஸ். வாசன், ஆவடி மாநாட்டின் அலங்காரப் பொறுப்புக்களைத் தலைவர் காமராஜரிடமிருந்து ஏற்றார்! ''ஆவடி மாநாட்டின் அலங்காரத்தைப் பார்த்தவர்கள், இதுவரை காணாத முறையில் மாநாடு அமைந்திருக்கிறது'' என்று சொல்வது முக்கியமல்ல; இன்னும் 25 ஆண்டுகள் கழித்தும் இதுபோன்ற மாநாட்டு அழகைப் பார்க்கவில்லை என்று கூறுமாறு இருக்கவேண்டும்'' என்று எஸ்.எஸ். வாசன் அவர்களிடம் தலைவர் காமராஜ் கூறினார்.

மாநாடு நடைபெற்ற இடத்திற்கு முதலமைச்சர் காமராஜ் அவர்கள், தனது அரசியல் ஆசான் நினைவாக 'சத்தியமூர்த்தி நகர் என்று பெயர் சூட்டினார். ஆவடி மாநாட்டைப் பார்க்கத் தலைவர் அவர்களின் அருமை அன்னையார் சிவகாமி அம்மையார், விருது நகரிலே இருந்து சத்தியமூர்த்தி நகருக்கு வந்தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் 42ஆவது மாநாட்டின் தலைவரான எஸ். சீனிவாச ஐயங்கார் மகள், திருமதி அம்புஜம்மாள் அவர்களை வரவேற்புக்குழுத் தலைவராக முதல்வர் காமராஜ் நியமித்தார். ஆவடி மாநாட்டு மேடையில் காமராஜ் அவர்கள் தனது தாயாருடனும் பாரதப் பிரதமர்நேரு அவர்களுடனும் தாமும் சேர்ந்து போட்டோ எடுத்துக்கொண்டார்.

மாநாட்டின் தலைமையை யு.என். தேபர் அவர்கள் ஏற்றார். அவர், சோஷலிச பாணிச் சமுதாயம் அமைய வேண்டிய அவசியம் பற்றியும், காங்கிரஸ் கட்சியின் கடந்த காலச் சூழல்பற்றியும் விரிவாக விளக்கிப் பேசினார்.

## மார்ஷல் டிட்டோ மாநாடு வருகை!

ஐரோப்பாக் கண்டத்திலே உள்ள யூகோஸ்லாவிய நாட்டின் அதிபரான மார்ஷல் டிட்டோ அவர்கள், சிறப்பு அழைப்பாளராக ஆவடி மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டுத் தலைவர் யு.என். தேபரும், பிரதமர் நேரு அவர்களும், முதலமைச்சர் காமராஜ், சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம் உள்ளிட்ட பலரும் அவரை வரவேற்று உபசரித்து மகிழ்ந்தார்கள்.

அதிபர் மார்ஷல் டிட்டோ அவர்கள் ஆவடி மாநாட்டில் பேசும்போது: "எனது சார்பிலும் எனது யூகோ நாட்டின் சார்பிலும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறுகிறேன். இந்தியாவின் உண்மை நிலைகளை அறிந்து கொள்ள நானும் எனது துணைவியாரும் இந்தியா வந்துள்ளோம். எங்கள் நாட்டில் இரண்டாவது உலகப்போர் முடிந்ததற்குப் பிறகு, வளர்ச்சி சம்பந்தமான பிரச்சினைகளை நாங்களும் சமாளித்து வருகிறோம்."

"இதில் ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், போருக்கு முன்பு எங்களது நாடு பிரிவுபட்டிருந்தது. ஆனால், பிறகு அது ஒற்றுமை அடைந்தது. அதுதான் எங்களது வெற்றிக்குக் காரணம்."

"உங்களுடைய நாடும் அதே போல ஒன்றுபட்டிருப்பது அவசியமாகும். இந்தியாவைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்."

"உங்களது தலைவர்கள், உங்களைச் சோஷலிச அமைப்பை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள் என்பது எனக்கும் பெருமையும் திருப்தியும் அளிக்கிறது. சக வாழ்வை

***ஊக்குவிக்கும் ஒரு நண்பனாக நான் இந்தியாவைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய நாடு நீடு வாழ்க!''***

- என்று, மாநாட்டில் கூடியிருந்த பல லட்ச மக்கட் கூட்டத்தைக் கண்டு வியந்து, உணர்ச்சி பூர்வமாகக் கூறினார்.

## பிரதமர் நேருவின் சோஷலிஸ மழை!

இறுதியாகப் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், மாநாட்டில் ஓர் அற்புதமான எழுச்சி உரையை ஆற்றினார். ''நாட்டின் சமதர்ம பாணி சமுதாயத்தை அமைப்பதே நமது குறிக்கோள்! என்ற தீர்மானத்தை மாநாட்டின் பொதுக்குழுவில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் முன் மொழிந்தார்!

தமிழக முதல்வர் தலைவர் காமராஜ், அந்தத்தீர்மானத்தை வழிமொழிந்து அழகான சொற்பொழிவை ஆர்வத்துடன் நிகழ்த்தினார். மாநாட்டில் எல்லோரும் கலந்து கொண்ட கூட்டத்தில் ஆசாத் முன்மொழிந்த தீர்மானத்தை, பிரதமர் நேருவும் தொடர்ந்து முன்மொழிந்து பேசினார். தலைவர் காமராஜ் அந்தத் தீர்மானத்தை வழி மொழிந்து பேசும்போது,

''கடுமையான உழைப்பே மக்களை வறுமையில் இருந்து மீட்கும். செல்வம் ஒரு சிலர் கையில் குவிந்திருக்கக் கூடாது. அது விரும்பத் தக்கதும் அல்ல.'' காந்தி பெருமான், அகிம்சை வழியில் நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். அவர் காட்டிய வழியில், நாம் சமதர்ம சமுதாயத்தை அமைப்போம்.'' என்று சுருக்கமாகத் தலைவர் காமராஜர் அவர்கள் பெருத்த கையொலிகளுக்கு இடையே முழக்கமிட்டார்.

## சத்தியமூர்த்தி நகரின் அதிசயங்கள்!

பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் மாநாட்டின் இறுதியிலே பேசும்போது, சத்தியமூர்த்தி நகர் அலங்காரப் பணிகளின் அதிசயங்களைப் புகழ்ந்தார் :

***''இந்த சத்தியமூர்த்தி நகரை, இத்துணைப் பேரழகுடன் படைத்த விசுவ கருமனாகிய முதல்மந்திரி காமராஜரை நான் வாயார வாழ்த்துகின்றேன்.''***

***''வடநாட்டில்தான் இதுமாதிரி மாநாடு நடைபெற்றுள்ளது. வடநாட்டில் தான் நடத்தவும் முடியும் என்று கூறப்பட்டதை ஆவடி காங்கிரஸ் மாநாடு பின்னுக்குத் தள்ளிவிட்டது.''***

*வடநாட்டில் நடைபெற்ற எல்லா மாநாடுகளையும் இந்த மாநாடு மிஞ்சிவிட்டது. இது தமிழ் நாட்டின் தலைசிறந்த மாபெரும் மாநாடாகத் திகழ்ந்துள்ளது. ஆவடி மாநாட்டில் கூடி ஒரு வார காலமாக விவாதங்களை நடத்தினோம். பல்வேறு அம்சங்களில், ஆவடி மாநாடு குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.*

*உண்மையில் இந்த மாநாடு உயிர்த் துடிப்பு மிக்கதாகவே அமைந்தது. இங்கு திரண்டுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களை எவரும் மறக்க முடியாது. சத்திய மூர்த்தி நகரை உருவாக்கியவர்களுக்கு மக்கள் நன்றி கூறவேண்டும். எனது நினைவிற்கு எட்டிய வரையில், இதுவே மிகக் கவர்ச்சிகரமாக அமைந்த மாநாடு. இதற்குக் காரணம், மக்கள் தலைவர் காமராஜ்தான்.*

*சென்னை - இந்தியாவின் தெற்குத் தலைநகரம்; ஒரு சிறந்த நகரம் என்ற சூழல், சென்னை முழுவதும்பரவியுள்ளது.*

- என்று, பிரதமர் நேரு அவர்கள், ஆவடி மாநாட்டையும், தலைவர் காமராஜ் அவர்களின் செயல் திறனையும் பலமாகப் பாராட்டிப் பேசினார்.

ஆவடிக் காங்கிரஸ் மாநாட்டின் போது, இராஜாஜி காங்கிரஸ் கட்சியிலேதான் இருந்தார். அவர், ஆவடி மாநாட்டிலும் கலந்து கொண்டார். மாநாட்டின்போது, இராஜாஜி ஆவடிக்கும் - சென்னைக்கும் சி. சுப்பிரமணியத்துடன் போக- வர மட்டுமே இருந்தார். வேறு எந்த முக்கியத்துவமும் அவருக்கு வழங்கப்படவில்லை.

## பாவம்! பாவம்!

## இராஜாஜி!

''நீங்கள் ஏன் மாநாட்டின் விசேஷக் குழு விவாதத்தில் பங்கு பெற்று உங்களுடைய கருத்துக்களைக் கூறவில்லை'' - என்று, சி. சுப்பிரமணியம் - இராஜாஜி அவர்களைக் கேட்டபோது,

''எனது வார்த்தைகளுக்கு மதிப்பு இருந்திராது. பழமைவாதி, பிற்போக்குவாதி என்று எனக்குப் பெயர் சூட்டியிருப்பார்கள்.'' என்று, இராஜாஜி அவர்கள் கூறினார்.

ஆவடி காங்கிரஸ் மாநாட்டில், தலைவர் காமராஜ் அவர்கள் ஆற்றிய சாதனைகளை, எல்லாப் பத்திரிகைகளும், காமராஜரின் சாதனைகள் என்று தலைப்பிட்டுப் பாராட்டின. ஆவடி மாநாடு காங்கிரஸ் கட்சிக்கும் - தலைவர் காமராஜ் அவர்களுக்கும் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

# 44. உண்மையான மக்கள் தொண்டர் தலைசிறந்த காந்தி பக்தர்!

1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காமராஜ் அவர்கள் தமிழக முதலமைச்சரானார். வரவிருக்கும் தேர்தல் நேரத்தில் இடைக்கால ஆட்சியாக அவருடைய அரசு இருந்தது.

ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகளாகச் செங்கோலோச்சி, தமிழகமும் - பாரத நாடும் - உலகமும் - பாராட்டும் அளவிற்கு காமராஜர் புகழ்பெற்றார். எதிர்க்கட்சியினர்களும், அவரது அரசியல் எதிரிகளும் வியந்து போற்றுமளவிற்கு, தலைவர் காமராஜ் சாதனைகளுக்கு மேல் சாதனைகளைக் குவித்தார். இருப்பினும், அவருக்குக் கடும் எதிர்ப்பும் இல்லாமலில்லை.

## மந்திரிப் பதவி மோகிகள்!

தலைவர் காமராஜ் அவர்கள் அமைச்சரவையில், திருவாளர்கள் டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, கே. டி. கோசல்ராம், எஸ்.எஸ். மாரிசாமி, வி.கே. இராமசாமி முதலியார், விருதுநகர் ஜெயராம் ரெட்டியார், மற்றும் சிலரும் தத்தமக்கு மந்திரி பதவி கிடைக்கவில்லை என்று உட்கோபம் கொண்டு காமராஜ் மீது பனிப்போர் நடத்தி வந்தார்கள்.

## காமராஜர் எதிர்ப்புக்குழு!

அவர்கள் அனைவரும், தலைவர் காமராஜ் தங்களை ஏமாற்றி விட்டார் என்று வருத்தப்பட்டு, முணுமுணுத்தபடியே காமராஜ் எதிர்ப்புக் குழுவாகத் திரண்டார்கள்!

இராஜாஜி மந்திரி சபையில் அமைச்சராக இருந்தவர்களையே தனது மந்திரி சபையிலும் காமராஜர் அமைச்சராக்கிக் கொண்டார் - என்ற ஆத்திரமும் - கோபமும் அவர்களிடையே அலைமோதின!

இத்தகைய காங்கிரஸ்காரர்களிடையே தலைவர் காமராஜ் அவர்களுக்கு உட்கட்சிப் பகை வளர்ந்தது. அது புறக்கட்சி விரோதத்தோடு கலந்தது. திராவிட முன்னேற்றக் கழகம்

தமிழ்நாட்டில் செல்வாக்காக வளர்வதைக் கண்ட முதலமைச்சர் காமராஜர், ஒருமுறை அக்கட்சியைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசினார்.

''மரத்தடியிலும் - மைதானத்திலும் கூட்டம் போட்டா போதுமான்னே! சட்ட சபைக்கு வா! அங்கே வந்து காங்கிரஸ் ஆட்சி மேலே உள்ள குற்றம் குறைகளைச் சொல்லுன்னே! சும்மா அலங்காரமாகப் பேசிட்டா குறைகள்லாம் போயிடுமாங்றே'' - என்று, முதலமைச்சர் காமராஜர் கோபமாகக் கொந்தளித்தார்

திராவிட முன்னேற்றக் கழகமும் - அதன் பொதுச்செயலாளராக இருந்த அறிஞர்அண்ணா அவர்களும் 1957-ஆம் ஆண்டில் தலைவர் காமராஜ் அவர்கள் பேச்சை ஏற்று, திருச்சி மாநகரில் மாநிலமாநாடு கூட்டி, அடுத்த தேர்தலில் ஈடுபடப் போவதாகத் தீர்மானம் போட்டார்! இந்த நிலையில், தமிழ்நாட்டின் 1957ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வந்தது. தலைவர் காமராஜர் அவர்கள் விருது நகர் தொகுதியிலே இருந்து தமிழக சட்டப் பேரவைக்குப் போட்டியிட்டார்.

### 1957–தேர்தல் காமராஜ் வெற்றி!

காமராஜ் அவர்களை எதிர்த்து, மந்திரி பதவி கிடைக்காததால் கோபங்கொண்டவர்களுள் ஒருவரான விருதுநகர் ஜெயராம் ரெட்டியார், எதிர்க்கட்சிகளின்பொது வேட்பாளராக நின்றார். சாத்தூர் தொகுதியிலே எஸ். இராமசாமி நாயுடு என்ற காங்கிரஸ்காரர் சட்டசபைக்குப் போட்டியிட்டார். இவர்1952ஆம்ஆண்டுத் தேர்தலில் சட்டப் பேரவைக்குப் போட்டியிட்டு வென்றவர்.

யாரை தேர்தலில் இவர் ஆதரிக்கின்றாரோ, அவரே அந்தத்தொகுதியில் வெற்றி பெறுவார் என்ற அளவில் அத்தொகுதியில் அதிக செல்வாக்குப் பெற்றவர்! இந்தத் தேர்தலில், திராவிட முன்னேற்றக்கழகம் முதன் முதலாக - நேரிடையாகவே - தலைவர் காமராஜர் பலத்தால் வளர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியை எதிர்த்துச் சட்டப் பேரவைக்குப் போட்டியிட்டது.

இவ்வளவு எதிர்ப்புகளுக்கும் இடையே தலைவர் காமராஜ் அவர்களின் தேர்தல் வியூகத் திறமையால், காங்கிரஸ் கட்சி 205 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிட்டு 151 இடங்களிலே வெற்றி பெற்றது!

## அண்ணா தலைமையில் தி.மு.க. வெற்றி!

திராவிட முன்னேற்றக் கழகம் 15 இடங்களிலே சட்டப் பேரவைக்கு வெற்றி பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டப் பேரவையில், தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் கட்சி - ஆளும் கட்சியாக அமைந்தது. காமராஜ் அவர்கள், தனது இரண்டாவது அமைச்சர் அவையிலும் முதலமைச்சரானார்.

அவரது அமைச்சர் அவையில், திருவாளர்கள் எம். பக்தவத்சலம், சி. சுப்பிரமணியம், எம்.ஏ. மாணிக்கவேலர், பி. கக்கன், வி. இராமையா, திருமதி லூர்து அம்மாள் சைமன் ஆகியோர் இடம் பெற்றார்கள். ஆர். வெங்கட் ராமன் பிறகுதான் அமைச்சரானார்.

## வினோபா பாவே பூமிதானப் பயணம்!

காமராஜ் அவர்கள் ஆட்சியில் பூமிதான இயக்கத் தலைவரான ஆசாரிய வினோபா பாவே அவர்கள், தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார்!

அவருடன் தலைவர் காமராஜ் அவர்களும், வினோபா நடைப் பயணமாகச் சென்ற ஊர்களுக்கெல்லாம் உடன் சென்று, பூமிதான இயக்கத்தின் குறிக்கோள்களை மக்களுக்கு விளக்கினார்கள். முதலமைச்சர் காமராஜ் அவர்களுக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கைக் கண்டு வியந்து, ''நீங்கள் உண்மையான மக்கள் தலைவர், தலைசிறந்த காந்தி பக்தர்'', என்று, வினோபா பாவே அவர்கள் தலைவர் காமராஜைப் புகழ்ந்தது, வஸிஷ்டர் வாயால் வாழ்த்துப் பெற்றது போன்று அரசியலில் அமைந்தது!

குடிசைக்கும் - கோட்டைக்கும் இடையே மக்கள் பலத்தை உருவாக்கிய ஒரே தலைவர் காமராஜ் அவர்கள்தான்! உட்கட்சிக் காங்கிரஸ்காரர்கள் யார் யார் அவரைக் காட்டுத்தனமாக, துரோகத்தனமாக, எட்டப்பத்தனமாக எதிர்த்தார்களோ, அவர்கள் எல்லாம் தலை தூக்க முடியாமல் திணறினார்கள்! திகைத்தார்கள்! இறுதிவரை விலகியே நின்றார்கள்!

இராஜாஜி, காங்கிரஸ் கட்சியோடு கருத்து முரண்பாடு கொண்டார்! பிரதமர் நேருவையும் முதல்வர் காமஜரையும் கடுமையாக எதிர்த்திட, சுதந்திரா கட்சி என்ற பெயரிலே ஒரு பணக்காரக் கட்சியை அமைத்தார்.

அந்தக் கட்சியிலே, காமராஜரின் நட்பு எதிர்ப்பாளர்கள், பதவி தரவில்லையே என்ற கோபம் கொண்டவர்கள் எல்லாம் சேர்ந்து விட்டார்கள்! வேறு சில காமராஜ் துரோகிகள் எதிலும் சேராமல் ஓரமாகவே ஒதுங்கி நின்றார்கள்! மற்றும் சிலர் மனம் வெதும்பி அரசியல் துறவியானார்கள்; அரசியலில் தேங்கிக் கிடந்தவர்கள், பதவிகள் ஏதும் கிடைக்காத காரணத்தால் தேம்பி வாழ்ந்தார்கள்.

## எப்படி சமாளித்தார் எதிர்ப்புகளை!

தனக்கு ஏற்பட்ட உட்கட்சி எதிர்ப்பையும், நன்றாகக் கோலோச்சுகின்றாரே என்ற அழுக்காற்றையும், பதவி தராமல் ஏமாற்றி விட்டாரே என்ற நயவஞ்சக நட்பையும், காமராஜ் எவ்வாறு சமாளித்தார்? மக்களிடையே அவருக்கு இருந்த மகத்தான செல்வாக்கு மட்டும்தான் அதற்குக் காரணமா? தலைவர் காமராஜ் அவர்கள் திருமணமாகாத ஒரு பிரம்மசாரி! எதிர்கால வாரிசுகள் யாரும் அவருக்கு இல்லை. அதனால், பணம், சொத்து சேர்த்து வைக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாமல் போயிற்று!

## பணம், குடும்பம், சொத்து ஆசைகளைத் துறந்தார்!

இந்த நிலையிலும் எதிர்க் கட்சிக்காரர்கள் சிலர், காமராஜ் அவர்கள் ஆந்திராவில் உள்ள ஐதராபாத் நகரிலுள்ள ஒரு வங்கியில் கோடிக்கணக்காகப் பணம் சேர்த்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டினார்கள்.

செத்தபின்பு பிண ஊர்வலமாகச் சென்றபோது வெறுங்கை களை வீதிகளிலே ஆட்டி அசைத்துக் கொண்டே சென்ற மாவீரன் அலெக்சாண்டரைப்போல, தலைவர் காமராஜ் அவர்களும் வெறுங்கைகளோடு தேரூர்ந்து சென்றதைச் சத்தியத் தமிழ்நாடு அறியும்! பொய்யிலே பிறந்து - பொய்யிலே வளர்ந்து - பொய்யிலே வாழ்ந்து - பொய் வாழ்வு வாழ்ந்தவர்கள் - இன்று ஊர் ஊராக அவமானப்படுகின்றார்களே அதைப் போன்ற வாழ்வு வாழ்ந்தறியாதவர் காமராஜர்!

அதனால், அரசியலில் அவரை ஆண்மையோடு எதிர் அணுக முடியாத அரவாணி அரசியல்வாதிகள்தான் - அவர் சுவிஸ் வங்கியிலே, ஐதராபாத் நகரிலே திராட்சைத் தோட்ட நிலங்களாக வாங்கி வைத்துள்ளார் என்று கோயபல்சிசம் செய்தார்கள்.

''காமராஜ் அவர்கள் தனது சம்பளத்திற்காக அரசு தரும் காசோலையைப் பணமாக மாற்றுவதற்காக மட்டுமே வங்கியில்

சேவிங்ஸ் பேங்க் கணக்கு வைத்திருந்தார்.'' - என்று, பொ. க. சாமிநாதன் என்ற அவரது நேர்முக உதவியாளர் ''மூன்று முதல்வர்களுடன் நான்'' என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்!

அந்த வங்கி பாஸ் புத்தகம் கூட, தலைவர் காமராஜ் அவர்களது பாதுகாப்பிலே இருக்காதாம். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பொறுப்பாளர் இராமண்ணாவிடம் இருந்தது என்று, அதையும் அவரே தனது ''மூன்று முதல்வர்களுடன்'' என்ற நூலில் நூலில் சாமிநாதன் கூறுகின்றார்!

தன்னைப் பெற்றெடுத்த தாயார் திருமதி சிவகாமி அம்மாளுக்குக்கூட பெற்ற மகன் காமராஜ் அளந்துதான் படி போட்டார். மாதம் 150 ரூபாய் விருதுநகரிலே உள்ள தனது தாயாருக்கு அனுப்பிய ஒரு நாட்டின் முதலமைச்சர் ஒருவரை உலகம் கண்டதுண்டா?

அந்த ரூபாயைக்கூட தமிழகக் காங்கிரஸ் கட்சியின் அலுவலகம்தான் அனுப்பி வைக்குமாம். பெற்ற தாய்க்கே அளந்த படி 150 ரூபாய் என்றால், அந்தக் குடும்பம் உறவுக்கு, அதாவது பிரம்மசாரி காமராஜர் தங்கை, அவருடைய பிள்ளைகள் தங்களது இறுதிக் காலத்தில் ஒருவேளை சோறாவது ஒழுங்காக உண்டிட ஆசைப்படுவதிலே என்ன தவறு?

இன்றைய அரசியல்வாதிகள், ஆயிரக்கணக்கான கோடி பணத்தை, ஆயிரம் உறவுக்கிளைகளிலே அதைப் பினாமியாகக் கட்டி, உந்தி உந்தி ஊஞ்சலாடிடும் போது, காமராஜ் தனது தங்கை உறவுக் கிளைப் பிரிவுக்குக்கூட ஒருவேளை சோற்றுக்கும் வழி வைக்காமல், அவர்களை வீட்டு முறைவாசல் வேலைக்காரிகளாக்கி விட்டுப் போய்விட்டரே என்பதை எண்ணும்போது, நம் நெஞ்சமெல்லாம் நெகிழ்கின்றது! அதே நேரத்தில் காமராஜ் அவர்கள் மீது கடும் கோபமும் கனக்கின்றது.

நான் கூறுவது மிகையுமல்ல - காமராஜர் மேல் ஏற்பட்ட கடுங்கோபமும் அல்ல. சாதாரண ஒரு மனிதன் எண்ணும் மிக நேர்மையான - கண்ணியமான - அறவாழ்வுப் பண்பாளராகக் கூட அவர் வாழ மறந்துவிட்டாரே என்கின்றபோதுதான், ''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ் வுலகு'' என்ற குறளாகிவிட்டார். பாவம்!

நாம் எழுதுவதற்குச் சான்றாக இதோ ''குமுதம்'' ஏடு **29.6.95 ஆம் நாளிட்ட வார இதழில் ''காமராஜர் மருமகள் வீட்டு வேலை செய்கிறார்'' என்ற கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. அதை அப்படியே இங்கே பிரசுரித்திருக்கின்றோம்! படித்துப் பாருங்கள்.**

## காமராஜர் மருமகன் வீட்டு வேலை செய்கிறார்

தனக்கென ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக்கொள்ளாத காமராஜருக்கு இருந்த ஒரே துணை - அவரது தங்கை நாகம்மாள் குடும்பத்தினர் தான். காமராஜருக்கு வழங்கப்பட்ட 'பாரத ரத்னாவை'ப் பெற்றுக் கொண்டவர்கள் இவரது குடும்பத்தினரே.

## எம்.ஜி.ஆர். ரூ.500ஐ 1000மாக உயர்த்தினார்!

500 ரூபாய் மாதாந்திர உதவித் தொகை வாங்கிக் கொண்டிருந்த நாகம்மாள் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது சந்தித்து முறையிட உதவித் தொகை ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. 1993ஆம் ஆண்டில் காமராசரின் தங்கையான நாகம்மாளும் இறந்து போனார்.

நாகம்மாளுக்கு ஜவஹர், மோகன் என்று இரு ஆண்களும் மங்களம், கமலாதேவி என்று இரு பெண்களும் இருந்தனர். இவர்களது திருமணத்தை எல்லாம் காமராஜரே முன்னின்று நடத்தியிருக்கிறார்.

நாகம்மாளின் மூத்த மகளான மங்களம்மாளுக்கு இரண்டு பெண்கள், மூன்று பையன்கள், காமராஜர் குடும்பத்தில் மங்களம்மாள் பெண்ணான ஜோதி மட்டுமே டாக்டராகப் பணிபுரிகிறார். ஆண் மகன்கள் மூன்று பேரில் கனகவேல் காங்கிரஸில் தேர்தல் சீட்டு கேட்டு முன்பு உண்ணாவிரதம் இருந்தவர். தற்போது மூப்பனாருடன் இருக்கிறார். இன்னொருவர் சென்னை துறைமுகத்தில் பணிபுரிகிறார். மற்றொருவர் 'ஒயின் ஷாப்' வைத்திருக்கிறார்.

விருதுநகரில் காமராஜர் குடியிருந்த வீடு அரசுடைமையான பிறகு, ஒரு லட்சம் ரூபாய் பணம் அரசால் கொடுக்கப்பட்டது. அந்தப் பணத்தில் விருதுநகரின் ஒரு பகுதியில் வீடு கட்டி காமராஜரின் தங்கை பிள்ளைகளான ஜவஹரும், மோகனும் குடியிருக்கிறார்கள். தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் மொத்தமாக ஆர்டர் எடுத்து வெளியூர்களுக்கு விநியோகிக்கிற தொழில் நடத்துகிறது இருவரது குடும்பமும்.

காமராஜரின் தங்கை மகனான ஜவஹருக்கு 61 வயதாகிறது. உடல் நலிவுடன் வீட்டிலேயே இருக்கிறார். ''மாமாவுக்குப் (காமராஜர்) பிறகு நாங்கள் யாரும் காங்கிரஸில் இல்லை. வியாபாரத்தில் ஏதோ ஓரளவு வருமானம் வருகிறது. அதை

வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறோம் நானும், எனது தம்பி மோகன் குடும்பமும். அம்மா இறந்த பிறகு இவர் பெயருக்குக் கொடுத்து வந்த 'பென்ஷன்' தொகையையும் நிறுத்தி விட்டார்கள். காமராஜர் பெயருக்கு எந்தப் பங்கமும் ஏற்படாதபடி இருக்கிறோம். இந்த த் தலைமுறையில் சிலர் தான் அவரை இன்னும் நினைத்துப் பார்க்கிறார்கள். அடுத்த தலைமுறை யெல்லாம் அவரை எங்கே நினைத்துப் பார்க்கப் போகிறது? பாரத ரத்னா விருது வாங்கப் போனதைத் தவிர எந்த விழாக்களுக்கும் போகிறதில்லை. ஏன்? திருமலைப்பிள்ளை சாலையில் உள்ள காமராஜர் இருந்த வீட்டிலே அவருக்கு சிலை வைத்த போதும், விருதுநகரில் வைத்த போதும் அவரோட குடும்பத்தைச் சேர்ந்த எங்களுக்குப் பெயருக்குக் கூட ஒரு அழைப்பு இல்லை...'' என்று சொல்கிற காமராஜரின் மருமகனான ஜவஹரின் பேச்சில் சலிப்பு இழையோடுகிறது.

காமராஜர் வசித்த வீட்டுக்கருகில் உள்ள வாடகை வீட்டில் காமராஜரின் மருமகளும் நாகம்மாளின் இரண்டாவது மகளான கமலாதேவியம்மாளும் வாழ்கிறார்கள். கமலாதேவியம்மாளுக்கு அறுபத்து மூன்று வயதாகி விட்டது. பாக்கு வியாபாரம் செய்த இவரது கணவர் விருதுநகர் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்தவர். ஒன்றரை வருடத்துக்கு முன் கணவர் இறந்துவிட, தனது இரு மக்களோடு, கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகிறார் கமலாதேவி அம்மாள்.

இவரது மக்கள் அதாவது காமராஜரின் பேரன்களான வைரவன், ராமர் இருவரும் 600 ரூபாய், 700 ரூபாய் சம்பளத்தில் தீப்பெட்டி ஆபிஸுக்கு வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒரு மருமகள் உள்ளூரிலேயே குறைந்த சம்பளத்தில் தனியாரிடம் டைப்பிஸ்டாக இருக்கிறார்.

''நானூறு ரூபாய் வாடகை போக, மீதிப் பணத்தை வைச்சு ஏழு பேரு சாப்பிட வேண்டியதிருக்கு. கஷ்டமாயிருக்கு. அம்மாவுக்கு வந்த பென்ஷனையும் நிறுத்திட்டாங்க. என் மருமகள் படிச்சிருக்கா... டைப்பிங் தெரியும்னு எத்தனை பேருக்கு வேலைக்கு எழுதிப் போட்டிருக்கேன்? முதல்வர் ஜெயலலிதாம்மாவுக்கும் அனுப்பிச்சிருக்கேன். (விண்ணப் பத்தைக் காட்டுகிறார்). ஒரு பதிலுமில்லை. போன வருஷம் கஷ்டம் தாங்காம இங்கே உள்ள கலெக்டர்காலில் விழுந்து அழுது கூட கேட்டுப் பார்த்தேன். எதுவும் கிடைக்கலை... இப்போ எனக்கு அறுபத்து மூணு வயசாகுது... இந்த வயதிலேயும் பக்கத்து வீடுகளில் வீட்டு வேலைக்குப் போறேன்... கோ ஆபரேடிவ்

*ஸ்டோரைக் காலையில கூட்டுறேன். அதுக்குப் பணம் தர்றாங்க... பக்கத்திலேயே இருக்கிற மாமா (காமராஜர்) வீட்டைக் கூட்டினாலாவது மாதத்துக்கு ஒரு ஐம்பது ரூபாய் கிடைக்கும். அதுக்குக்கூட கேட்டுப் பார்த்துட்டேன். அங்கே போய் நானே வேலை செஞ்சா அவமானம்கிறாங்க. இதுலே என்னங்க அவமானம் இருக்கு...'' கண் கலங்கிப்போய் சொல்கிறார் கமலாதேவி.*

''சரி... காங்கிரஸ்காரர்கள் யார்கிட்டேவாவது சொல்லலாமே?''

''பல பேர்கிட்டே சொல்லியாச்சு... இப்போ *காங்கிரஸ் கமிட்டித் தலைவரான குமரி அனந்தன், பக்கத்திலே மாமா வீட்டுக்கு வந்தவர் இங்கேயும் வந்தார். அவர்கிட்டே சொன்னேன். மூப்பனார் வரைக்கும் சொல்லிப் பார்த்தும் ஒன்னும் நடக்கலை. மாமா (காமராஜர்) இருக்கிறவரைக்கும் அவருக்கும் எதுவும் சேர்த்துக்கலை. குடும்பத்துக்கும் சேர்த்துக்கலை... ஊரையெல்லாம் படிக்க வைச்சாரு... ஆனா அவரு குடும்பத்துலே எங்க அக்கா மகளைத் தவிர யாருமே சரியாப் படிக்காம அப்படியே கிடந்துட்டோம்... இப்போ பாருங்க... விதவைகளுக்குக் கொடுக்கிற பென்ஷனாவது கொடுங்கன்னு அரசுக்கு மனுப் போடுற நிலைமையில இருக்கேன்...''*

காமராஜர் ஆட்சியைத் தமிழகத்தில் அமைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள்தான் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

## காமராஜர் வாரிசுகளுக்கு உடனடி உதவிகள்!

*தலைவர் காமராஜ் சகோதரி குடும்பம் வறுமையிலே* **வாழ்வதைக் கண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் அனைவரும் அலட்சியமாக - அக்கறையற்றவர்களாக - பாராமுகமாக இருந்தார்களே ஒழிய, யாரும் அவர் குடும்ப மானத்தைக் காப்பாற்றிட முன் வரவில்லை.**

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியோ, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியோ - மத்திய டெல்லி ஆட்சியோ கொஞ்சம் மனிதநேயத்துடன் கருணை காட்டியிருந்தால், ஒரு தேசபக்தத் தியாகியான காமராஜர் அவர்களின் தன்னலமற்ற வாழ்க்கையை மதித்துப் பாராட்டி அந்தக் குடும்பத்தை வாழ வைத்திருக்க முடியும்.

ஆனால், எந்தக் காங்கிரஸ்காரரும் அவரது குடும்ப மானத்தைக் காப்பாற்ற முயற்சிகூட எடுக்காமல் நடுத்தெருவிலே அனாதையாக விட்டுவிட்டார்கள்.

## புரட்சித் தலைவி ஜெயலலிதா உதவிகள்

இந்த நிலையில், தலைவர் காமராஜ் குடும்பம் என்ன செய்யும்? காங்கிரஸ் கட்சியைத் தூக்கி எறிந்து தலைமுழுகி விட்டு தமிழக முதலமைச்சராக அப்போது இருந்த புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களது கட்சியிலே சேர்ந்து விட்டார்கள். மனிதாபிமானியாக, ஒரு முன்னாள் முதலமைச்சர் மானத்தைக் காக்கும் மானாபிமானியாக, தலைவர் காமராஜ் அவர்களது தேசபக்தி ஆட்சியை மதிக்கும் தேசாபிமானியாக மாறித் தலைவர் காமராஜர் குடும்ப வாரிசுகளுக்கு அவர் தக்க உதவிகளை வழங்கினார்.

முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள், தலைவர் காமராஜர் குடும்பத்திற்கு ஆற்றிய குடும்பாபிமான உதவி விவரத்தை 9.8.95 அன்று வெளியிட்ட ''தினந்தந்தி'' நாளேடும், தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்புகளும் இதோ: படியுங்கள், தினத்தந்தி 9.8.95 நாளேடு கூறுவதை:

## ஏழுலட்சம் ரூபாயில் காமராஜர் குடும்ப நிதி

''பெருந்தலைவர் காமராஜரின் தங்கையின் பேரனான ஆர். கனகவேலுவுக்கும், காமராஜரின் மற்ற வாரிசுகளுக்கும், அ.இ.அ.தி.மு.க. சார்பில், ஏழு இலட்சம் ரூபாயில் காமராஜர் குடும்ப நலநிதி ஒன்றை முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்படுத்தினார்.''

அந்தப் பணத்தை வைப்பு நிதியில் இட்டு, அதன் மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு காமராஜரின் வாரிசுகளுக்கு மாதாமாதம் நிதி உதவி வழங்குகின்ற திட்டம் ஒன்றையும் முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

## மூவருக்கு அரசு இலவச வீடுகள்

''காமராஜர் உடன்பிறந்த ஒரே தங்கையான நாகம்மையார் பெண்களான மங்களம், கமலாதேவி, மற்றும் கனகவேலு, ஆகியோருக்கு தமிழக அரசின் சார்பில் இலவசமாக வீடுகளை வழங்குவதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டார்.''

''8.8.95ஆம் நாளன்று புரட்சித் தலைவி முதல்வர் ஜெயலலிதா அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாரிசுகளைத் தலைமைச் செயலகத்திற்கு, வரவழைத்து அந்த உதவிகளை நேரில் வழங்கினார். அ.இ.அ.தி.மு.க. சார்பில், 7 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள காமராஜர் குடும்ப நலநிதி, நிரந்தர வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு 5 பேருக்குக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

## மாதம் 8000 ரூபாயில் 5 பேருக்கு பங்கு

''கமலாதேவிக்கு மாதம் ஒன்றுக்கு 2,333/- ரூபாயும், ஆர். மங்களத்துக்கு மாதம் 1,166/-ரூபாயும், கே. ஜவஹர்லாலுக்கு மாதம் 1,166/-ரூபாயும், கே. மோகனுக்கு மாதம் 1,166/-ரூபாயும், காமராஜரின் சிதைக்கு தீ மூட்டிய தங்கையின் பேரன் கனகவேலுக்கு மாதம் 2,333/- ரூபாயும், மேலும் 5 ஆண்டுகளுக்கு அவற்றைப் பெறுவதற்கான காசோலைகளையும் முதல் அமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா, காமராஜர் குடும்பத்தினர்களிடம் நேரில் வழங்கினார்.

''மொத்தம் 5 ஆண்டுகளுக்குரிய பின்தேதியிட்ட காசோலைகள் அவர்களிடத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அறிவித்தபடி, நாகம்மையின் மகள் மங்களத்திற்கு மதுரையில் வீடு ஒன்றினை ஒதுக்கீடு செய்து அதற்கான ஒதுக்கீட்டு ஆணையை அவ்வம்மையாரிடம் வழங்கினார்.

''நாகம்மையின் இன்னொரு மகளான கமலா தேவிக்கு விருது நகரிலுள்ள தமிழ் நாட்டு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றினை இலவசமாக வழங்கி, அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையையும் அவரிடம் நேரில் தமிழக முதல்வர் வழங்கினார்.

''நாகம்மையின் பேரன் (காமராஜ் பேரன்) கனகவேலுவுக்கு சென்னையில் ஒரு உயர்தர வருவாய் பிரிவில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை இலவசமாக வழங்கி, அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையை புரட்சித் தலைவி அவரிடம் நேரில் வழங்கினார். நாகம்மையின் பேரனும், கே. மோகனின் மகனுமான சிவக்குமார், தனக்கு அரசுப் பணியிடம் வேண்டும் என்று கேட்டிருந்தார். அந்தக் கோரிக்கையை ஏற்று, அவருக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்து அதற்குரிய நியமன ஆணையையும் சிவகுமாரிடம் வழங்கித் தனது

வாழ்த்துக்களையும் புரட்சித் தலைவி முதலமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.

''அவர்களது குறைகளைக் கேட்டு அறிந்ததோடு மிகக் குறுகிய காலத்தில் அவற்றைக் களைவதற்கு ஏற்பாடுகளைச் செய்து, அதற்குரிய அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்குப் பெருந்தலைவர் காமராஜரின் வாரிசுகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.'' **'தினத்தந்தி' 9.8.95.**

ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் தலைவர் காமராஜர் அவர்களுக்கு அரசியல் பொதுக்கூட்டத்தில் பதில் கூறும்போது, ''இந்தக் கால் சட்டைகள் போட்ட எனது தம்பிமார்கள் (கழகம்)தான் உங்களுடைய கடைசி காலச் சடங்குகளைச் செய்து கொடுப்பார்கள்.'' என்று குறிப்பிட்டதை இதே நூலில் வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அதே போல, அறிஞர் அண்ணா அவர்களது வாரிசாக அமர்ந்து ஆட்சி புரியும் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள்தான், பெருந்தலைவர் காமராஜர் அவர்களது வாரிசுகளுக்குள்ள வறுமை நிலையைப் போக்கிட எல்லாவித உதவிகளையும் செய்து கொடுத்துள்ளாரென்றால், ஓர் அறிஞர் பெருமானின் தீர்க்கதரிசனமான வாக்கு எப்படி வேலை செய்கிறது பார்த்தீர்களா?

தமிழ்நாட்டை ஒன்பதரை ஆண்டுக்காலம் ஊழலற்ற ஆட்சி செய்த ஒரு சத்திய சீலன், ஒழுக்க சீலன், காந்தியவாதி, தன்னலமற்ற ஓர் அரசியல் துறவியின் குடும்ப நிலை இது. இத்தகைய ஒரு மா மனிதரை எந்த நாட்டு வரலாற்றிலாவது கண்டதுண்டா?

கிரேக்க நாட்டு அறிவியல் மேதை, சாக்ரடீஸ் பெருமான் பக்கத்து வீட்டிலே உள்ள ஒருவரிடம் ஒரு கோழியைக் கடனாகப் பெற்றானாம் தனது உணவுக்காக! கிரேக்க நீதிமன்றம் வஞ்சகமாக அவரிடம் நச்சுக் கோப்பையைக் கொடுத்துப் பருக வைத்தபோது, அதையும் பருகிவிட்டு, சாக்ரட்டீஸ் தனது நண்பன் கிரீட்டோவை அழைத்து, சாகும் தறுவாயில், ''தான் கடனாகப் பெற்ற அந்தக் கோழியைத் திருப்பிக் கொடுத்து விடு'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டானாம்!

தலைவர் காமராஜ், சாக்ரடீசைப் போலக் கூட ஒரு கோழியையும் கடனாகப் பெற்று வாழ்ந்தறியாதவராக மாண்டார் என்றால், அவரது அரசியல் தியாக மனப்பாங்கை எப்படிப் போற்றி மகிழ்வது என்பதை மண்ணுலகம் எண்ணி வியக்காதா? அதே சாக்ரட்டீஸ் மாமேதையின் மாணவரான அரசியல் மாமேதை பிளாட்டோ என்பவர். தனது 'குடியரசு' என்ற நூலில், மக்களை மூன்று வகையாகப் பிரித்து அவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று ஓர் ஆட்சிக்கு இலக்கணமும் வகுத்தார்.

'தங்க மனிதர், வெள்ளி மனிதர், இரும்பு மனிதர் என்று மக்கள் இனத்தை மூன்று வகையாகப் பிரித்து ஒரு நாட்டு மக்கள் வாழ வேண்டும்' என்றார்.

'தங்க மனிதர் என்பவர்கள், ஆட்சியை நடத்துபவராக இருக்க வேண்டும். அவர் சமுதாய மக்களிடம் தங்கம் போல் மதிப்பும் - மரியாதையும் பெற்றவராகத் திகழ வேண்டும்.' 'ஆட்சியை நடத்த வருகின்ற அந்த தங்க மனிதர் யாரென்றால், குடும்பப் பாரம் அற்றவராக, உறவு முறை என்ற பந்தபாசம் இல்லாதவராக, பொருட்கள் மீது பற்றற்ற அரசியல் துறவியாக இருக்க வேண்டும்' என்பதாகும்.

ஏன் அவர்கள் அப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர்தனது நூலில் விளக்கம் எழுதும்போது, அப்போதுதான் பொதுமக்கள் பணத்தை ஊழலுக்கு உட்படுத்தாமல், தனக்கென்று எதுவும் சொத்து திரட்டிக் கொள்ளாமல் பற்றற்ற வாழ்வு வாழ முடியும். அதனால், நாட்டிற்கு அவர்கள் ஒழுக்கம், பண்பாடு, நடைமுறை வாழ்வுப் போக்கு அனைத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாக ஓம்பப்படுவார்கள் என்றார்!

தங்க மனிதர்கள் ஆட்சிக்கு வரும்போது, அவர்கள் குடும்பமற்றவர்களாக, பந்த பாசமில்லாதவர்களாகத் திகழ்ந்தால்தான், சுயநலம் என்ற வாழ்வு வலையிலே அவர்கள் சிக்கித் திண்டாடமாட்டார்கள்! அதனால், ஆட்சியின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் கூற்றுவர்களாக இருக்கும் நிலை ஏற்படாது' என்றார்.

'அந்தத் தங்க மனிதர்களுக்கு ஒருகால் சிற்றின்ப நுகர்ச்சி எழுமானால், அவர்கள் விரும்பும் பொதுமகளிரோடு இன்பம் காணலாம். அந்த நிலை எழும்போது, வாரிசு கரு வளர்ந்து பரம்பரைச் சின்னம் தோன்றினால், அந்தச் சிசு அரசு கண்காணிப்பிலே பராமரிக்கப்படும். குழந்தைகள் விடுதியிலே சேர்த்து அதன் எதிர்காலத்தை ஏற்றம் பெறச் செய்து விடவேண்டும்' என்றார்.

தலைவர் காமராஜ் வாழ்க்கை, பிளேட்டோவின் குடியரசு இலக்கணத்திற்கும் ஓர் இலக்கணமாக அமைந்துவிட்டதை எண்ணும்போது, வரலாற்றில் அவர் தங்க மனிதர்களையும் மீறி, வைர மனிதராக வாழ்ந்து காட்டி மறைந்து விட்டாரே, அதுவன்றோ அற்புத அரசியல் வாழ்க்கை? தலைவர் காமராஜ் பிரமசாரியாகவே வாழ்ந்த ஓர் அரசியல் துறவியாகவே காலம் உள்ளவரை போற்றப்படும் ஒரு மாமனிதர் அல்லவா!

## யாதும் ஊரே
## யாவரும் கேளிர்!

தலைவர் காமராஜ், தமிழ்நாட்டு ஏழை மக்களைத்தான், தனது சுற்றமாக, பந்த பாசமாக, உற்றார் உறவினர்களாகக் கருதினார்! குறிப்பாக, அடிமட்ட ஏழை மக்களையே தமது குடும்பமாக நினைத்து, அவர்கள் நல்வாழ்வு வாழ, கல்வி அறிவு பெற, உழைத்து உருக் குலைந்து மண்ணுக்கும் உரமானார்!

அதனால், தன்னை ஈன்ற தாய் மீது கூட ஓரளவுக்குத்தான் பாசம் வைத்து, அதுவும் 150 ரூபாய் என்று அளந்து படிபோட்டார்! அந்த தாய்ப் பாசமும் - நேசமும், நீதிக்கும் -நேர்மைக்கும் உட்பட்டே அவரிடம் குடிகொண்டிருந்தது! எடுத்துக்காட்டாக, தலைவர் காமராஜ் ஆட்சியில் அவர்களது சகோதரி நாகம்மையார் பேரன் கதிர்வேலு என்பவர் ஒரு வழக்கில் சிக்கித் தண்டனை பெற்றார்.

அப்போது அவரது ஆட்சியிலே காவல்துறை அமைச்சராக இருந்தவர் திரு. கக்கன் அவர்கள். டயஸ் என்பவர் அப்போது மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டாகப் பணியாற்றினார். அவர்கள் இருவரும் சேர்ந்து முதலமைச்சராக இருந்த தலைவர் காமராஜர் அவர்களை அணுகி, கதிர்வேலு தண்டனையைக் குறைத்திட தங்களால் இயன்ற வரை அவருக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டார்கள்!

முதலமைச்சரான காமராஜர், ''தனது உடன் பிறந்த சகோதரியின் பேரன் கதிர்வேலு தவறு செய்தாலும், அவன் பெற்ற தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவருக்கு உதவிபுரிய மறுத்து விட்டார்! இவர்தான் காமராஜர்! இத்தகைய ஒரு முதலமைச்சர் - நீதிமான் - நேர்மையாளர் ஒருவர்; இந்த ஈனத்தனமான அரசியலில் எல்லாப் பண்புகளிலும் உயர்ந்து இருந்தார் என்பதை நம்புகிறீர்களா? இருந்தால் கண்டு பிடியுங்கள் - காட்டுங்கள் அவர் காலணிகளைத் தலையில் சுமக்கலாம் - இராமாயணப் பரதனைப் போல!

ஓர் அரசு அதிகாரி, தாம் பணிபுரியும் இடம் விட்டு வேறு இடம் மாறுகின்ற நிலை வந்தால், அவர்கள் புதிய இடம் போகின்ற குடும்ப வழிப் பயணச் செலவுகள், மற்ற பிற செலவுப் படிகள் அனைத்தையும் முன் பணமாக வாங்கிப் பழக்கப்பட்டவர்களாக இருப்பதை இன்றும் நாம் காண்கின்றோம். அவர்கள் தமது செலவுப் பணத்தை அதிகமாகக் கூட்டிப் பெறுவார்களே தவிர, செலவுப் பணத்தைக் குறைத்துப் பெற மாட்டார்கள் - முடியாத காலநிலை இது.

நாட்டின் நிலை இவ்வாறிருக்க, பயணப்படியே வேண்டாம் என்று கூறிடும் சாதாரண அல்லது உயர்தர அதிகாரி ஒருவரையாவது அடையாளம் காண முடியுமா நாட்டில்? அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரானபோது, தனது ஆயிரம் ரூபாய் சம்பளத்தை ஐநூறு ரூபாயாகக் குறைத்துக் கொண்டாரே தவிர, தனது பயணப்படி, தினப்படிகளை எல்லாம் வேண்டாம் என்று அவராலும் கூற முடியவில்லை! அவரது அன்றைய நிலை அது!

தமிழகத்தை ஆட்சி செய்த முதல்வர்கள் - அமைச்சர்கள் - அதிகாரிகள் உட்பட அனைவரும், தங்களது முழுச்சம்பளத்தையும் - பயணப் படியையும் - தினப்படியையும் பெற்றார்களே அன்றி வேண்டாம் என்று எவரும் சொல்லவில்லை. ஆனால், விதிவிலக்காக, முதலமைச்சர் காமராஜ் ஒருவர்தான், தமிழகத்தில் மாதத்திற்குப் பதினைந்து நாட்கள் சுற்றுப் பயணம் செய்தும் கூட, தனது சுற்றுப் பயணப்படியையும் - தினப்படியையும் வாங்க மறுத்துவிட்டார்! இப்படியும் ஒரு மனிதரை - அதுவும் அரசியல் துறையிலே - இன்றும் என்றும் காண முடியுமா?

இந்திய விடுதலைப் பிதாமகனாரான காந்தி பெருமான் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட நேரத்தில், உலகப் பேரறிஞர்கள் எல்லாம் தங்களது கண்ணீரை உகுக்கும்போது, அவரவர் கருத்துக்களை வரலாறு சுமக்கும் வகையில் கூறினார்கள்! நகைச்சுவை நாயகம் பேரறிஞர் பெர்னாட்ஷா தனது கருத்தை நவிலும்போது, **''வரும் நூற்றாண்டுகளில் இப்படி ஒரு மனிதன் இருந்தார் - வாழ்ந்தார்'' என்று கூறினால், அக்கால மக்கள் நம்புவார்களோ -மாட்டார்களோ, யார் கண்டார்!''** என்று குறிப்பிட்டார்!

அதற்கொப்ப, ஏழைக்குடும்பத்திலே தோன்றி, முதலமைச்சரான ஒருவர், பயணப்படி, தினப்படி கூட வாங்காத ஓர் ஏழை முதலமைச்சர், இந்த இந்திய நாட்டிலே இருந்தார் என்றால், எதிர்கால மக்கள் நம்புவார்களோ - மாட்டார்களோ யார் கண்டார்? அதற்கும் ஒரு கோயபல்சிசம் பேசுவார்களோ என்னவோ! எவர் கண்டார்!

எதிர்காலம் என்ன? இப்போதே, நம்முடைய தலைமுறையிலேயே வாழ்கின்ற, எதிர்க்கட்சிக்காரர்களே நம்ப மாட்டார்களே! அவ்வளவு காழ்ப்பேறி மரத்துப்போன அரசியல் ஊழல்வாதிகள் உலாவரும் காலமாகி விட்டதே நிகழ்காலம்!

## தனது சம்பளத்தில் காரோட்டி சம்பளம்!

இதைவிட இன்னொரு அதிசயம் என்ன தெரியுமா? எந்த ஓர் அலுவலக உயர் அதிகாரியும், தனக்குக் கீழ், தனது இல்லத்திற்கு வேண்டிய வேலைகளைச் செய்திட ஆட்களைப் பியூனாக நியமிப்பார்கள். ஆனால், அந்த வேலையாட்களை அரசு ஊழியர்களாக்கி, அல்லது அரசு ஊழியர்களை தங்களது பணியாளர்களாக்கி, அவர்களுக்குரிய சம்பளத்தை, பயணப்படியை, தினப்படியை ஆட்சியிடமிருந்து பெற்றிட வசதி செய்துகொள்வார்கள்! இந்த நிலை அமைச்சர்களிடம் மட்டுமல்ல, ஆட்சியின் எல்லாத் துறைகளிலும் உண்டு. ஆனால், அது சிதம்பர ரகசியம்!

முதலமைச்சராகப் பணியாற்றிய தலைவர் காமராஜ் அவர்கள், காவல்துறை உயர் அதிகாரியாக அப்போது பணியாற்றிய எஃப்.வி. அருள் ஐ.பி.எஸ் அவர்களிடம், தனது சொந்தக்காரை ஓட்டிட ஓர் ஓட்டுநர் தேவையென்று கேட்டார்.

ஆயுதப் போலீஸ் ஓட்டுநர் துறையிலே இருந்த 1893 என்ற காவலர் எண் பெற்ற சுந்தரமூர்த்தி என்பவரை ஓட்டுநராகப் பணியாற்றிட முதலமைச்சர் காமராஜரிடம் அந்த அதிகாரி அருள் அனுப்பி வைத்தார். முதலமைச்சர் வெளியூர்களுக்குச் சென்று சுற்றுப் பயணம் செய்யும் கார், தலைவர் காமராஜருக்குரிய சொந்தமான கார். அதற்கு அவர் அரசாங்கத்திடமிருந்து அலவன்சாக மாதந்தோறும் பணம் பெற்று வந்தார்.

தனது காருக்கு ஓட்டுநராக வந்தவர், தலைவர் காமராஜரிடம் காரோட்ட வருவதற்கு முன்பு, அரசிடமிருந்து மாதந்தோறும் 98 ரூபாய் சம்பளமாகப் பெற்று வந்தார். முதல்வர் காமராஜ் அவர்களிடம் கார் டிரைவராக அவர் வந்த பிறகு சுந்தரமூர்த்தியினுடைய மாதச் சம்பளத்தை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டாம்' என்று கூறித் தடுத்து விட்டார்.

அந்த ஓட்டுநர், ஆயுதப் போலீஸ் துறையில் ஏற்கனவே பெற்றுவந்த சம்பளம் 98 ரூபாயோடு, 12 ரூபாயை அதிகமாகக் கூட்டி, 110 ரூபாயாக, தனது சொந்தச் சம்பளத்திலிருந்து

ஓட்டுநருக்குரிய சம்பளமாகக் கொடுத்து வந்தார் காமராஜர். இவ்வாறு, சம்பளமாகக் கொடுத்தது ஒன்றிரண்டு மாதங்கள் அல்ல. முதலமைச்சர் பதவியை விட்டு அவர் விலகி, அகில இந்தியக் காங்கிரஸ்கட்சியின் தலைவரான பின்பும்கூட, ஒன்றரை ஆண்டுக்கு மேலாக அவரையே ஓட்டுநராகத் தனக்கு வைத்திருந்து அதே 110 ரூபாயையே கொஞ்சமும் குறைக்காமல் - கூட்டாமல் சம்பளமாகக் கொடுத்து வந்தார் - தலைவர் காமராஜ்.

தலைவர் அவர்கள் பணத்தாசைப் பெற்றவராக இருந்திருந்தால், அவரது ஓட்டுநரின் சம்பளத்தை அரசாங்கத்திடமே இருந்து பெற்றிட வழி செய்திருக்கலாம்! மக்கள் வரிப்பணத்தைத் தனது சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் அல்லவா அவர்?

தனது காருக்கு வாங்கும் அரசு அலவன்ஸ் மட்டுமே போதும் என்ற மனசாட்சியுடையவராக அவர் வாழ்ந்ததால்தான், ஓட்டுநருக்கும் தனது சொந்தப்பணத்திலிருந்தே சம்பளம் கொடுத்து வந்தார். இன்றைக்கு அரசியல்வாதிகள் எனப்படுவோர்களுக்கு மனச்சாட்சி என்ற ஒன்று இருக்கிறதா என்பதற்கு இது ஓர் உதாரணமல்லவா?

# 45. இந்திராகாந்தி காங்கிரஸ் தலைவர்!

பிரதமர் நேருவைப் பிற்போக்குவாதி என்றார்கள் பொதுவுடைமைவாதிகள். மத்திய அரசுக்கு எதிராக, தவறானப் பிரசாரத்தையும் செய்தார்கள். பொதுவுடைமைவாதிகளின் தவறான அந்தப் பிரசாரத்தை மக்களுக்கு எடுத்து உணர்த்த விரும்பிய மூத்த காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம், துடிப்புமிக்க ஒருவர் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக வரவேண்டும் என்று கருதினார்கள். பிரதமர் நேரு அவர்களிடம் அதற்காக வாதிட்டார்கள்.

முதலமைச்சர் காமராஜ் அவர்கள், ''இந்திரா காந்தி அவர்களை அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக வரச்செய்து, காங்கிரஸ் இளைஞர் அணிகளின் பிரசாரத்தை முடுக்கி விட்டால்தான், கம்யூனிஸ்டுகளின் அரசியல் நிலைகளை மக்களுக்கு உணர்த்த முடியும்'' என்றார்.

பிரதமர் நேரு அவர்கள், இந்த முடிவுக்கு ஒப்பவில்லை. தலைவர் காமராஜ் அதற்குரிய காரண விளக்கங்களோடு பிரதமருக்கு எடுத்துக் கூறிய பின்பு, நேரு அவர்கள் அதற்குச் சம்மதம் அளித்தார். திருமதி இந்திரா காந்தி, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் என ஆகவும், தலைவர் காமராஜ்தான் காரணமாக இருந்தார்!

இறுதியில் அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சித் தலைவரான இந்திரா காந்தியின் எதிர்போராட்ட விளைவுகளால், கேரளக் கம்யூனிஸ்டு ஆட்சி கலைக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளின் தவறான பிரசாரங்களும் ஓய்ந்தன. அக்கட்சியின் பலமும் கேரளாவில் ஒடுங்கியது.

### சுதந்திராக் கட்சி தோன்றியது ஏன்?

இதே கால கட்டத்தில், 1954ஆம் ஆண்டில் பிரதமர் நேரு அவர்களுக்கும் - இராஜாஜி அவர்களுக்கும் ஏற்பட்ட பதவிப்

பறிப்பு மனக் கசப்புகளால் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன.

1960ஆம் ஆண்டில், இராஜாஜியின் ஆறாண்டு கால கோபக் கொந்தளிப்புகளின் உச்சக் கட்டமாக, அவர் சுதந்திரா கட்சி என்ற பெயரில் அகில இந்தியக் கட்சி ஒன்றைக் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக உருவாக்கினார். 'முதலாளிகளின் கைப்பாவை, சுதந்திராக்கட்சி; பணக்காரர்களின் எடுபிடிக் கட்சி. அதனால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் இருக்காது' என்று பிரதமர் நேரு அவர்கள் அதைக் கடுமையாகச் சாடினார்; கருத்தும் அறிவித்தார்.

## சீனாவின் ஆக்ரமிப்பு!

இந்தியாவின் வட எல்லையில் அப்போது, சீன நாட்டின் மக்மோகன் எல்லைக்கோடு விவகாரமாக இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் நாளுக்கு நாள் பகை வளர்ந்து வந்தது. அனைத்துலக நாடுகளில், இந்தியாவிற்குப் பெருகிவரும் செல்வாக்கு, புகழ், ஜனநாயக ஆட்சி முறைகளாகிய இவற்றை சீன நாடு விரும்பவில்லை. காரணம், அது ஒருவகையான கம்யூனிச நாடு! அதனால், இரு நாடுகளுக்கிடையே, பகை வளர்ந்து - வளர்ந்து, நாளடைவில் 1962ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் போர் மூண்டது.

1957ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழகச் சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக வெற்றிபெற்ற பதினைந்து தி.மு.க. எம்.எல்.ஏக்களும் தமிழ் நாட்டில் மிகத் திறமையாக மக்கள் பணியாற்றி வந்தார்கள். அதே நேரத்தில் அவர்கள், தங்களது கட்சிப் பணிகளையும் செம்மையாகச் செய்து கட்சியைத் திறம்பட வளர்த்து வந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அசுர வேக வளர்ச்சி, தலைவர் காமராஜ் அவர்களுக்கு ஒரு தலைவலியாக உருவெடுத்து வந்தது மட்டுமல்ல; அதிர்ச்சியாகவும் இருந்தது. இந்த அரசியல் அதிர்ச்சி, 1962ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மிகப் பலமாக உருவெடுத்தது. அதனால் தமிழகக் காங்கிரஸ் கட்சியிலே தேக்கமும் - மந்தமும் உருவாயிற்று.

அந்தச் சமயத்தில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில், தி.மு.கழகம் சென்னை மாநகராட்சி ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. மக்களிடையே அக்கட்சியின் செல்வாக்கு அபரிமிதமாக வளர்ந்து வந்தது.

## உடைந்தது
## தி.மு.க.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் முதன் முதலாக ஓர் உட்கட்சிப் பிளவு ஏற்பட்டது. சொல்லின் செல்வர் என்று கழகத்தவரால் அழைக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் அண்ணன் மகனாரான ஈ.வெ.கி. சம்பத், கவிஞர் கண்ணதாசன், மற்றும் அவருடைய அணியினர் தி.மு. கழகத்தை விட்டு விலகி 'தமிழ் தேசியக் கட்சி' என்ற ஒரு புதிய கட்சியைத் துவக்கினார்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்தவாறு, தமிழகத்தில் வேகமாக வளர்ந்திடப் போதிய வசதிகள் - வாய்ப்புகள் இல்லை. அதனால், பிரிந்து வந்துவிட்ட அவர்கள், திமுகழகத்தின் வளர்ச்சியை - அணுவளவும் தடுக்கப் பலமில்லாதவர்களாக இருந்தார்கள். இந்த பிளப்பிலே வெளியேறிய தி.மு.க.வினரைக் காங்கிரஸ் கட்சியிலே சேர்த்துக் கொண்டால், தி.மு.க. பலம் சரியும் - குறையும் என்று தலைவர் காமராஜ் கருதினார். அதனால், அவர்கள் அனைவரையும் காங்கிரஸ் கட்சியிலே சேர்த்துக் கொண்டார்.

அவ்வாறு சேர்க்கப்பட்டவர்களிடையே, தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களாகத் தோன்றியவர்தான் பழநியாண்டி, எம்.பி. சுப்பிரமணியம், நெடுமாறன் போன்றவர்கள் என்பதை தமிழகக் காங்கிரஸ் கட்சி வரலாறு உணர்த்தும் என்பதில் ஐயமில்லை.

தலைவர் காமராஜ் அவர்கள் என்ன நினைத்துப் பிளப்பிலே வெளியேறியவர்களைத் தனது கட்சியில் சேர்த்துக் கொண்டாரோ; அந்த எண்ணம் - சோகை பிடித்த காசநோய்க் காரர்கள் நிலையிலே தள்ளாடியது.

## வந்தவர்களால்
## காங்கிரஸ் பலவீனம்

அதனால், காங்கிரஸ் கட்சி வளரவில்லை! மாறாகக் காங்கிரசிலே போட்டி, பொறாமை, கட்சி பேதக்காழ்ப்பு, பாரம்பர்யப் பகட்டுகள் ஏற்பட்டு, காங்கிரஸ் கட்சி மேலும் பலவீனமானது.

பணம், பதவி, பட்டம் , தலைமைத் தகுதிகள், செல்வாக்கு களைச் சேகரிக்க, புதிதாகப் புகுந்தவர்கள் முயன்றார்களே தவிர, அவர்கள், தி.மு.க. வளர்ச்சிகளை எள்ளளவும் குறைக்கப் போதிய பலமில்லாதவர்களாகி, காங்கிரஸ் மேடைகள் தோறும் ''நா'' வரங்க நடிகர்களானார்கள். சுருக்கமாகக் கூறுவதானால், புதியவர்கள் வருகையால் காங்கிரஸ் கட்சியின் வேகம் குறைந்தது; குரோத - விரோத அணிகள் பெருகின!

சில பழைய பாரம்பர்யக் காங்கிரஸ்காரர்கள் மனவேதனையிலே மல்லாடி, கட்சி வேகத்தை அவர்களே குறைக்குமளவிற்கு குணமாறுபாடடைந்தார்கள் - பாவம்!

## 1962–ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்!

இத்தகைய ஓர் இக்கட்டான சூழ்நிலையின் போதுதான், மூன்றாவது பொதுத் தேர்தல் 1962-ஆம் ஆண்டிலே நடைபெற்றது. 1957-ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் 155 சட்டமன்றத் தொகுதிகளிலே போட்டியிட்டு வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சி, இப்போது 139 - இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல, ஐம்பது இடங்களைக் கைப்பற்றியிருந்த கம்யூனிஸ்டுகள் 15 ஆகி, அதிலிருந்து 4 ஆகி, இப்போது இரண்டே இரண்டு இடங்களை மட்டுமே பிடித்தார்கள்.

1957- ஆம் ஆண்டில், 15 சட்டமன்றத் தொகுதிகளிலே வாகை சூடிய தி.மு.கழகம், 1962-ல், 50 இடங்களைக் கைப்பற்றியது. தலைவர் காமராஜ் அவர்கள், 1957ல் வெற்றி பெற்ற 15 சட்டமன்ற உறுப்பினர்களையும் தோற்கடித்து விடுவது என்ற ஒரு தேர்தல் வியூகத்தை வகுத்தார்!

அதற்கேற்ப, அறிஞர் அண்ணா உட்பட்ட அனைவரையும் தலைவர்காமராஜர் தோற்கடித்துக் காட்டினார்! தப்பிப்பிழைத்தவர் ஒரே ஒருவர்தான்! அவர் கலைஞர் கருணாநிதிதாம்! அவர்கூட, தொகுதிவிட்டுத் தொகுதி மாறிப் போட்டியிட்டதால் மட்டுமே வெற்றி பெற முடிந்தது!

## காமராஜ் மீண்டும் முதல்வரானார்!

தலைவர் காமராஜ் அவர்களின் கட்சிப் பலம் குறைந்திருந்தாலும், மீண்டும் அவரே ஆளுநர் விஷ்ணுராம் மேதியின் முன்பு முதல்வராகப் பதவி ஏற்று, ஒன்பது பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்தார்!

இந்தியாவிலேயே, அப்போதிருந்த மந்திரி சபைகளில், தலைவர் அவர்கள் அமைச்சரவைதான் மிகச் சிறிய சபையாக விளங்கியது.

தலைவர் காமராஜ் அவர்கள், மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வரானதும், அரசு நிர்வாகத்திலே கோப்புகள் எல்லாம் தாமதமாகச் செல்லும் சிவப்பு நாடா முறையை ஒழித்துக் கட்டினார்!

## காமராஜரின் உச்சகட்டம்

தமிழகக் காங்கிரஸ் கட்சியிலே தலைவரை எதிர்த்துப் பேசுவோர் ஒருவரும் இல்லை. மத்திய ஆட்சியிலும் - தமிழகத்திலும் தலைவர் காமராஜ் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை என்ற அளவிற்குச் செல்வாக்கு உச்சகட்டமாக உயர்ந்து நின்றது! இதற்குக் காரணம், தமிழக ஏழை மக்கள் மீது தலைவர் வைத்திருந்த பாசமும் - பற்றும் - மனித நேயமுமே தவிர; வேறு ஒன்றுமில்லை.

எந்தத் திட்டம் தீட்டினாலும், அதனால் ஏழைக் குடிமகன் ஏற்றம் பெறுவானா? என்று எண்ணியே தலைவர் காமராஜ் செயல்பட்டார். உதாரணமாக உரைப்பது என்றால், ''இதோ காமராஜர் பேசுகிறார் - கேளுங்கள்! தினமணியில் செய்தியாக:

''அத்தனை பேரும் படிக்கணும். வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்? அவனுந்தானே நம் இந்தியாவுக்குச் சொந்தக்காரன்? ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடத்திலேயே சோறுபோட்டுப் படிக்க வைக்கணும். இது மிக முக்கியம். உடனடியாகத் தொடங்கிவிடணும்.''

''இதற்குப் பணத்திற்கு எங்கே போவது என்று கேட்பீர்கள். வழி இருக்கிறது. தேவைப்பட்டால் பகல் உணவிற்கென்று தனியாக வரிபோடத் தயங்க மாட்டேன். எப்படியும் எல்லா ஏழைகளும் படிக்கணும். அதனால், மற்ற எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு இதே வேலையாக ஊர்ஊராகப் பிச்சை எடுக்கவும் தயங்கமாட்டேன்.''

**-''காலத்தின் கடைசிக் கருணை''**

**தமிழருவி மணியன் ''தினமணி''** 15.7.95

இரவும் - பகலும் இவ்வாறாக ஏழை மக்களைப் பற்றியே பேச்சும் எண்ணமும் அவரிடம் இருந்ததால்தான், அவர் ஏழை பங்காளர்கட்கெல்லாம் நல்வாழ்வு ஏணியாக நிற்க முடிந்தது.

தலைவர் காமராஜரின் எளிய வாழ்வு, முக்கால் கை சட்டையிலும், நான்கு முழத் துண்டு வேட்டியிலும் அவரின் ஏழ்மையின் தோற்றம் எதிரொலித்தது! பொது வாழ்விலே நேர்மை

வேண்டுமா? இதோ பாருங்கள் அவரைப் பற்றி 'தினமணி' நாளேட்டில் தமிழருவி மணியன் எழுதும் சத்தியச் சிந்தனைகள்!

''காங்கிரஸ் பேரியக்கத்தின் பொன் விழா 1935 - டிசம்பர் 28 - ஆம் நாள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.''

''தலைவர் காமராஜ் விருப்பப்படி விருது நகரில் பொன்விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்ததும் வரவு - செலவுக் கணக்கைச் சரிபார்க்க விழாக்குழு கூடியது.'

''வரவுக்கும் - செலவுக்கும் 67 ரூபாய் 3 அணா வித்தியாசம் வந்தது. தலைவர் காமராஜ் விளக்கம் கேட்டார்.''

''எப்படியோ செய்த செலவை எழுத மறந்து விட்டேன். என்மேல் நம்பிக்கை வைத்து வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்து விடுங்கள்' என்று தலைவரின் நெருங்கிய நண்பர் முருக - தனுஷ் கோடி வேண்டினார்!

''பொதுப் பணத்தைப் பொறுப்பாகக் கையாள வேண்டும். அரை மணிநேரம் அவகாசம் தருகிறேன். கணக்கைச் சரியாக எழுதிக்கொடு. இல்லையென்றால், 67 ரூபாய் 3அணாவைக் கட்டிவிடு'' - என்று கட்டளையிட்டு விட்டார் தலைவர்!

- ''தினமணி'' 15.7.95

எதற்குச் செலவு செய்தோம் என்பதை மறந்துவிட்ட முருக - தனுஷ்கோடி அந்தப் பணத்தைத் தனது மறதிக்குத் தண்டனையாகச் செலுத்தி விட்டார். இதே சம்பவத்தை 'நவசக்தி' என்ற நாளேட்டின் ஆசிரியராக இருந்த முருக - தனுஷ்கோடி என்ற காமராஜரின் பிரம்மசாரி நண்பர், தாம் எழுதிய காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலிலும் எழுதியிருக்கின்றார். இதோ:

''தலைவரின் ஒழுக்க வாழ்வு, சுயநலமற்ற தன்மைக்கு உதாரணம் தேவையா? இதோ படியுங்கள் சம்பவத்தை! மாதந்தோறும் மகன் அனுப்பிய 120 ரூபாயில், நியாயமான தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்த காமராஜரின் தாயார் சிவகாமி அம்மாள் தன் மகனைக் கேட்கிறார் பாருங்கள்.

''மகனே! நீ முதலமைச்சரான பிறகு என்னைப் பார்க்கப் பலர் வருகின்றனர். வீடு தேடி வருபவர்களுக்கு சோடா, கலர் தருவதனால் செலவு கூடுகிறது. இனிமேல் மாதம் 120 ரூபாய்க்குப் பதில் 150 ரூபாய் அனுப்பினால் நல்லது.'' என்று அன்னை சிவகாமி மகனிடம் தயக்கத்துடன் கேட்டார்.

*அதற்குத் தலைவர் அம்மாவுக்கு எழுதிய பதில் என்ன தெரியுமா? இதோ:*

***"அம்மா! வீடுதேடி வருபவர்களுக்கு நீ சிரமப்பட்டு செலவழிக்க வேண்டியதில்லை. சோடா, கலர் தருவதை நிறுத்து. 120 ரூபாயிலேயே குடும்பத்தைச் சிக்கனமாக நடத்து."* என்றார் முதலமைச்சர் காமராஜர் தன் தாயாரிடம் மடல்வழி.**

*" காமராஜர் அவர்கள் வாழ்ந்த வீட்டில் கழிப்பறை வசதி இல்லை. வீட்டையொட்டி ஓரிடம் விலைக்கு வருவதாகவும் அதன் விலை மூவாயிரம் ரூபாய் என்றும், அதை வாங்கினால் கழிப்பறை கட்டிக் கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்றும் தாயார் தனது மகனுக்கு அஞ்சல் வரைந்தார்."*

*அன்னையார் வரைந்த அஞ்சலுக்கு அவரது ஒரே மகன் அனுப்பிய பதிலஞ்சல் என்ன? படியுங்கள் இதோ!*

***" நீ கழிப்பறைக்கு இடம் வாங்க வேண்டும் என்கிறாய். ஊரில் உள்ளவன் நான் பங்களா வாங்கிவிட்டதாகச் சொல்லுவான். அப்படியே சிலர் பத்திரிகையிலும் எழுதுவார்கள். அதெல்லாம் வேண்டாம் போ".***

*இப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை - ஒழுக்க சீலரை - நாணயமான அரசியல்வாதியை - தாயார் கேட்ட எதையும் செய்யாத ஒரு அருமை மகனை வரலாற்றிலே தேடுங்கள்! இருந்தால் கூறுங்கள் உலகுக்கு உணர்த்துவோம் சில புதிய அரிச்சந்திரர்களை!*

*தலைவர் காமராஜருடைய ஓயாத உழைப்புதான், அவரது செல்வாக்கை மென்மேலும் நாட்டு மக்களிடத்திலே உயர்த்தியது! மேன்மை தந்தது! அதற்குரிய நற்சான்றிதழ் வேண்டுமா வரலாற்றுக்கு? இதோ:* **'தினமணி' நாளேடு துணைத் தலையங்கம் காணுங்கள்:**

**தினமணி நாளேடு 14-7-95ல் துணைத் தலையங்கமாக எழுதியிருப்பதாவது:**

## 46. காமராஜர் நிர்வாகப் பாணியை ஆந்திர முதல்வர் பின்பற்றினார்!

''நாற்பது ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் அப்போதைய முதல்வர் காமராஜர் கடைப்பிடித்த அரசியல் பாணியை, ஆந்திர முதலமைச்சர் ராமாராவ் இப்பொழுது அனுசரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

''அரசு இயந்திரத்தைக் கிராமங்களுக்கே கொண்டு செல்லும் திட்டம் அது.'' மக்களின் குறைகளை - அவர்களுடைய ஊருக்கே சென்று நேரில் கேட்டறிந்து, அந்த இடத்திலேயே பரிகாரம் செய்வதற்காக, ஆந்திரம் முழுவதிலும் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். இதற்கு வகை செய்ய, அவரோடு அமைச்சர் பரிவாரங்களும் - அரசுத் தலைமையகத்தின் அதிகாரிகளும் கூடவே செல்வார்கள்.

''அரசு இயந்திரத்தை மக்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டு செல்லும் இந்தத் திட்டத்தை முதன் முதலில் நடத்தி சரித்திரம் படைத்தவர் காமராஜரே!

''அதற்கும் ஒரு பின்னணி உண்டு. 1954இல், காமராஜர் எதிர்பாராத சூழ்நிலையில் முதலமைச்சர் பீடத்தில் அமர நேரிட்டது.

''அவ்வளவுதான், அதிகாரிகள் வட்டாரத்தில் ஒரு கிசுகிசுப்பு உலவியது. ஆங்கிலம் படிக்காத காமராஜரால் கோப்புகளை எப்படிப் பார்க்க முடியும்? என்பதே அந்த அரசியல் கிசுகிசுப்பு.

''இத்தகைய முணுமுணுப்பில் லேசான நையாண்டி ரேகையும் மின்னியதுண்டு. படித்தவர்களும் - அதிகாரிகளும் அரசு நிர்வாகம் என்றால், அது கோப்புக்களைப் பார்ப்பது என்ற அளவுக்கே முடக்கி வைத்திருந்தார்கள்.

''இந்த மாயையை உடைத்தெறிவதற்காக, அரசாங்க இயந்திரத்தைப் பொது மக்களிடமே கொண்டு செல்லும் இந்த நூதன திட்டத்தைக் காமராஜர் வகுத்தார்.

'' அதன் மூலம், அரசு நிர்வாகம் என்றால், அது கோப்புக்களைப் பார்ப்பது மட்டுமல்ல; அதற்கும் மேலாக, மக்களின் பிரச்னைகளைக் கண்டறிந்து தீர்ப்பது - மக்களுக்குப் பதில் சொல்வது என்பதை, இத்திட்டத்தின் மூலம் அதிகாரிகளுக்குப் புரியவைத்தார் காமராஜர்.

''அதிலிருந்து, காமராஜரின் உண்மைச் சொரூபத்தைப் புரிந்து கொண்ட அதிகார வர்க்கம், அவரிடம் அச்சம் கலந்த மரியாதையோடு நடந்து கொண்டது.

''அந்தத் திட்டம் , மக்கள் தலைவராகிய காமராஜருக்குப் பொருத்தமாக இருந்தது. அவர் வாழ்நாள் முழுவதையும் மக்களிடையே கழித்தவர். மக்களின் சுக துக்கங்களை அறிந்தவர்.!

''அரசியல் பதவிகள் எதுவாயினும், அது மக்களைக் கை தூக்கி விடுவதற்கான கருவி என்றே கருதியவர் தலைவர் காமராஜர். ஆகவே அத்திட்டம் காமராஜரைப் புதிய கோணத்தில் இனம் காட்டியது.

'' அதோடு, அதிகாரிகளுக்கும், ஜனநாயகத்தில் நிர்வாகத்தின் கடமை என்ன என்பதை உணர்த்தியது. அத்திட்டம் அவருக்கு அழகாக இருந்தது. ஏனெனில், சாமான்ய மக்களோடு எளிமையாகவும், கல கலப்பாகவும் பழகியவர் காமராஜர்.

''ஆனால், ராமாராவோ இப்பொழுது படங்களில் நடிக்கா விட்டாலும், 'தெய்வீக நடிகர்' என்ற கவர்ச்சி வடிவத்தைக் கொண்டிருப்பவர். மக்களோடு சகஜமாகப் பழகுபவரல்ல.

''எனவே, காமராஜரின் பாணி, ராமாராவின் புதிய பாத்திரத்திற்கு எவ்வளவு தூரம் பொருந்துமென்று இப்போதைக்குக் கூறுவதற்கில்லை.''

**[''தினமணி'' 14.7.95 (துணைத் தலையங்கம்)]**

தலைவர் காமராஜ் அவர்கள், தனது ஆட்சியைக் கிராம ராஜ்ஜியமாக்க முயன்றார்! காந்தியடிகள் கனவு கண்ட ராமராஜ்ஜியத்தை உருவாக்க முயன்ற வரலாற்று மேதை காமராஜர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுரை வேண்டும்?

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் காமராஜர் கொண்டு வந்த மனு நீதி நாள் திட்டத்தை, ஆந்திர மாநில முதல்வர் என்.டி.இராமாராவ் 1995 இல் 'தமிழக அரசியல் மேதை மக்கள் நாயகன் காமராஜ் அவர்களைப் போல பின்பற்றி, எனது ஆட்சியையும் ஏழை மக்களிடம் எடுத்துச் செல்வேன்' என்று கூறுகிறார் என்றால், இதைவிட வரலாற்று நோக்கு, ஏழை மக்கள் நல்வாழ்வு நோக்கு வேறு ஒன்று உண்டா?

அந்த மக்கள் மனு நீதி நாள் என்ற திட்டத்தில் தலைவர் காமராஜ் வெற்றி பெற்றார் ! திரு. என்.டி. ராமாராவ் அவர்களும் அவரைப் போலவே நிர்வாகப் பாணியில் வாகை சூடியிருந்தால் வாழ்த்தும் அவரை வரலாறு!

# 47. காமராஜர் வாழ்க்கை அரசியல்வாதிகளுக்கு அறம்!

தலைவர் காமராஜ் அவர்களது அன்றாட வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம்! அதனுள்ளே சுயநல மர்மங்கள்- பொருளாசை மூடு மந்திரங்கள்- சூதுவாது சகுனித் தன்மைகள்- அரசியல் மாயா ஜாலங்கள் ஏதுமில்லை !

எழு ஞாயிறு எழுந்ததும் ஒரு கோப்பை காஃபி! பிறகு, எல்லாப் பத்திரிகைகளையும் ஊன்றி ஊடுருவி உற்று நோக்கல்! தொடர்ந்து படித்து முடித்த பிறகே, பிற சிந்தனைகள்!

அதற்குள்ளாகத் தன்னைக் காண வந்திருப்போர் யார் யார்? எவ்வளவு பேர் இருப்பர் என்று கணக்கெடுப்பார்!

காமராஜர் பார்வையாளர் பிறகு வருவார்! அதற்குள் , தலைவர் சம்பந்தப்பட்ட எல்லாக் கடிதங்களையும் பார்ப்பார்! அவற்றிற்கு உடனே பதிலஞ்சல் அனுப்ப ஆணையிடுவார்.

மீண்டும் மாடிக்குச் சென்று குளியல் முடிப்பார்! நான்கு முழம் கதர் வேட்டி நாடாளும் நாயகனுக்காகக் காத்திருக்கும்! கால் முட்டியை எட்டித் தொடும் முக்கால் கை சட்டை அவருடைய கார்மேனி உடலை அலங்கரிக்கும்! பிறகு ஒரு மேல் துண்டு! அடுத்து, சிற்றுண்டி முடிப்பார்.

மதிய உணவு மரக்கறி உணவாகவே அமையும்! எப்போதாவது முட்டை சாப்பிடுவார்! மாலையில் ஒரு கோப்பை காஃபி! இரவில் இட்லி சட்னி - அவ்வளவுதான் அவரது தேவைகள்! என்றாவது ஒரு நாள், அதிக வேலைப் பளுவிலே ஈடுபட்டு விட்டால், அந்தக் களைப்பைக் களைய ஓட்டலிலிருந்து ஒரு தோசை அல்லது ரொட்டி வாங்கி வரச் சொல்லி உண்பார்!

எந்த ஒரு பண்டிகையையும் கொண்டாடிடும் வழக்கம் தலைவருக்கு இல்லை. அதற்காக, மற்றவர்கள் கொண்டாடும் பழக்கத்திற்கு என்றுமே தடையாக இருந்ததும் இல்லை. இறுதிவரை தலைவரின் உண்மை விசுவாசியாக வாழ்ந்த வைரவன் குடும்பத்திற்குப் பணம் கொடுத்து பண்டிகை கொண்டாட வைப்பார்.

காமராஜ் அவர்கள் தன்னைக் காண வருகை புரிவோரிடம் அந்த ஜாதி, இந்த ஜாதி, அந்த மதம் இந்த மதம், அந்தக் கட்சி இந்தக் கட்சி, பணக்காரன் - ஏழை என்ற பேதங்களையோ - ஏற்றத் தாழ்வுகளையோ பார்க்க மாட்டார்!

எல்லாரும் சமம் அவரது பார்வையில்! எங்கும் சமத்துவம் அவரது கொள்கையில். அதனால்தான், அவரை எல்லா இன, மத மக்களும் பாசத்தோடு நேசித்தார்கள். தனது இல்லத்திலே இருந்து அமைச்சரவை அலுவலகத்துக்கு 11 மணி அல்லது 11-30 மணிக்குப் புறப்படுவார்! அவர் அமர்ந்துள்ள கார் புறப்பட்டதும், 'பெரியவர் புறப்பட்டு விட்டார்' என்று அலுவலகத்திற்குத் தகவல் போய்ச் சேரும்.

அலுவலகத்திற்குள் தலைவர் சென்றதும் அங்கே குழுமியுள்ள பார்வையாளர்களை நோக்குவார்! அவரவர்களை விசாரித்துத் தேவைகளை அறிந்து உடனுக்குடன் உரியவற்றைச் செய்து உற்சாகமுடன் அனுப்புவார். ஏதாவது முக்கியமான விவகாரங்களைப் பற்றிப் பேச்சுக்கள் நடந்தால், மறுநாள் காலைவரைக் கூட அவை தொடரக்கூடும். அதற்குமேல் சிறிது நேரம் துயில் கொள்வார்! ஆனால், வழக்கம்போல எழுஞாயிறுக்கு முன்பே எழுவார். மதியம் உணவுண்ட பின்பு சிறிது உறக்கம் கொள்ளும்பழக்கமும் அவரிடம் உண்டு!

யாராக இருந்தாலும் சரி, அவர் பொறுமையுடன் பேசுவார்! அவர்கள் கூறுவதை நிதானமாகக் கேட்பார். சில நேரங்கள் சிறு சினம் சீறி வரும். அந்தக் கோபம்கூட, பார்க்க வருவோர் பண்பாடுகளுக்கேற்பவே வரும். பிறகு, கோபப்பட்டவரிடம் அமைதியான முறையில் அளவளாவி அவர்களை மகிழ வைத்தனுப்புவார்.

சென்னை தியாகராய நகர் திருமலைப் பிள்ளை வீதியில் தலைவர் காமராஜ் குடியிருந்த தனி வீட்டிற்குத் தொண்ணூறு ரூபாய் அவர் வாடகைக் கொடுத்தார். பிறகு, 150 ரூபாய் வரை அதை உயர்த்திக் கொண்டே சென்றார். அவர் முதலமைச்சரானதும் அதே வீட்டிற்கு அரசு 250 ரூபாய் கொடுத்தது - அந்தப் பணத்தை வாடகைக்காக அப்படியே வீட்டுக்காரரிடம் திருப்பிக் கொடுத்து விடுவார்.

அந்த நேரத்திலேயே அவர் வாழ்ந்த வீட்டிற்கு, ஏறக்குறைய 800 ரூபாய் வாடகை தரும் மதிப்புள்ள அந்த வீட்டிற்கு, அதன் உரிமையாளர் கொஞ்சம் கூட்டித் தருமாறு அவரிடம் கேட்டார். ''என்னுடைய சம்பளத்தில் இதற்கு மேல் எப்படி அதிகமாகத் தர முடியும்?'' என்பார். வீட்டுக்காரரும் சிரித்துக் கொண்டே போய்விடுவார்.

தலைவர் காமராஜ் அவர்கள் குடியிருந்த வீட்டை விலைக்கு வாங்கிவிடலாம் என்று அவர் நண்பர்கள் கூறும்போது, ''எனக்கு எதற்கு வீடு? பொண்டாட்டியா? பிள்ளையா? என்று அவர் மறுத்து விட்டார்.

'நவசக்தி' என்ற நாளேடு டிரஸ்டில் அதை வாங்கிவிடலாம் என்று தலைவருடைய நண்பர்கள் அவரிடம் கூறினார்கள். முருக தனுஷ்கோடி, ஜி.கே. மூப்பனார், எம்.பி. தாமோதரன், என். இராமசாமி உடையார் எல்லாம் சேர்ந்து அந்த வீட்டைச் சொந்தமாக அவர் பெயருக்கு வாங்கி விடலாம் என்று முன் வந்தார்கள். ''எனக்கு வீடு வேண்டாம்'' என்று அவர் மறுத்து விட்டார்.

தலைவர் குடியிருந்த அந்த வீடு, ஒரு வடநாட்டுக்காரரிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. அதன்விலை அப்போதைய மதிப்புப்படி மூன்று லட்சம் ரூபாய் மதிப்புடையது. அந்த வீட்டின் உரிமையாளர் அப்போது அமெரிக்காவிலே இருந்ததால், கடைசிவரை அந்த வீட்டை வாங்க முடியாமல் போய்விட்டது.

இறுதியில், கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, விருது நகர் வீட்டைத் தலைவர் காமராஜரின் நினைவாலயமாக்கினார். அதற்குப் பிறகு மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முதல்வரான பின்புதான், சென்னையில் காமராஜ் அவர்கள் வாழ்ந்த திருமலைப் பிள்ளை சாலை இல்லத்தை நினைவாலயமாக்கினார்.

ஒரு முறை தலைவர் அவர்களைப் பார்த்துப் பேசியவர்களே, மறுமுறை வந்தால், அவர்களைச் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளும் நினைவாற்றல் காமராஜருக்கு அதிகமாக இருந்தது.

பொதுக் கூட்டங்களுக்கு பேசச் செல்லும்போது கையில் குறிப்புகள் ஏதும் எடுத்துச் செல்வதில்லை. நினைவில் தேங்கி இருக்கும் கருத்துக்களையே அவர் நிதானமாக, சிந்தித்துப் பேசும் பழக்கம் உடையவர். காமராஜ் அவர்கள், தனது வருவாயின் சக்திக்கேற்ப நண்பர்களுக்கும் - ஏழை மக்களுக்கும் - வறுமைச் சூழலில் வருந்துபவர்களுக்கும் உதவி செய்வார்.

தமிழக அரசு மூலம் உதவிபெற வருபவர்கள், அந்த உதவிகள் நியாயத்திற்கும் - மனச்சாட்சிக்கும் - பிறர் குறைகாணாத எண்ணங்கட்கும் உட்பட்டவையாக இருந்தால், உடனே நடவடிக்கை எடுத்து உதவி செய்திட அரசுக்கு ஆணையிடுவார் தலைவர் காமாராஜ்.

நரிக்குறவர்கள் வீடு கேட்டு வருவார்கள். உடனே அதற்கானவற்றைச் செய்து கொடுக்கத் தலைவர் கட்டளையிடுவார். தண்ணீர், மின்சார வசதிகளுக்காக ஏழைக் குடியானவர்கள் அவரைப் பார்க்க வருவார்கள். தனது உதவியாளர்களை அழைத்து அந்தந்த துறைகட்கு ஆணையிட்டு உடனே செய்யச் சொல்வார் காமராஜர்.

காங்கிரஸ் தியாகிகளின் துன்பங்களைப் போக்கவும், அவர்களுக்கு அரசு மூலம் உதவிகள் கிடைக்கவும் காமராஜ் அவர்கள் உறுதுணையாக விளங்கினார். கஷ்டப்பட விடமாட்டார் அவர்களை. முடிந்ததைச் செய்து அனுப்புவார்.

மேலே சொன்னவற்றை பொ. க. சாமிநாதன் அவர்கள், தான் எழுதிய ''மூன்று தலைவர்களுடன்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜீவாவை மதித்த மனித நேயர்!

காலம் சென்ற கம்யூனிஸ்டு தலைவர் ப. ஜீவானந்தம் அவர்கள், காமராஜர் முதலமைச்சராக இருந்த ஆரம்ப காலத்தில் தாம்பரம் நகர்ப் பகுதியிலே உள்ள குடிசை வாழ் மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று ஒரு போராட்டம் நடத்தினார்.

ஓர் ஆரம்பப் பள்ளியைத் தாம்பரம் பகுதியில் திறந்து வைக்கும் நிகழ்ச்சிக்குத் தலைவர் காமராஜர் சென்றபோது, ஜீவானந்தம் குடியிருக்கும் வீடு இதுதான் என்று உடன் சென்றவர்கள் தலைவருக்குக் காட்டினார்கள்.

உடனே, காரை ஜீவா வீட்டருகே நிறுத்தச் சொல்லி, தலைவர் காமராஜர் ஜீவாவின் குடிசைக்குள் நுழைந்தார். அந்த வீட்டின் மேல் கூரை பிய்ந்து விட்டிருப்பதைப் பார்த்தார்; மனம் வருந்தினார். தலைவர் காமராஜ் அவர்கள், ஜீவா அவர்களைப் பார்த்து, **''என்ன இந்த வீட்டில் குடி இருக்கிறீர்கள்!''** என்று கேட்டார். **''எல்லாரையும் போலத்தான் நானும்''** என்று ஜீவா அதற்குப் பதிலளித்தார்.

''தாம்பரத்தில் ஓர் ஆரம்பப்பள்ளியைத் திறந்து வைக்க வந்தேன்! இதுவா உங்களுடைய வீடு என்றார்கள். அதனால் உங்களையும் பார்க்கலாமே என்று வந்தேன்'' என்றார் காமராஜர்.

இரு ஏழைபங்காளர்களையும் பார்த்த குடிசை வாழ் மக்கள் கையொலி எழுப்பி 'வாழ்க' என்று முழக்கமிட்டார்கள். ஜீவா சட்டசபை உறுப்பினராக இருந்தபோது அந்தப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டியவர் காமராஜர். அவர் உயிரோடு இருக்கும் போதே கட்டி முடிக்கப்பட்டு அதைக் காமராஜரே திறந்தும் வைத்தார்.

காமராஜ் அவர்கள் ஜீவா அவர்களிடம் பேசி, அவர்களை ஒரு நல்ல வீட்டில் குடியிருக்கச் செய்திட, சம்மதத்தைப் பெற்று, அதற்கான ஏற்பாடுகளையும் உடன் செய்து கொடுத்துக் குடியேறச் செய்தார். ஜீவா அவர்கள் நோயினால் மரணவேதனை பட்டபோது ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ''காமராஜருக்கு போன் செய்யுங்கள்'' என்று ஜீவா ஆவி பிரியும் போது கேட்டுக் கொண்டாராம்!

ஜீவா அவர்கள் இறந்த பின்பு, அவரது துணைவியாரும் - பிள்ளைகளும் வறுமையால் வாடுவதைக் கேள்விப்பட்ட தலைவர் காமராஜர் அவர்கள், அவருடைய துணைவியார் பத்மாவதி அம்மையாருக்கு அரசு வேலையைத் தருமாறு ஆணையிட்டார்.

ஜீவா அவர்கள் ஏழைபங்காளர்! ஏழைகளுக்காகவே உழைத்தார்! காமராஜ் அவர்களும் ஏழைபங்காளர்! ஏழை ஜீவா அவர்களுக்கு மனிதநேயத்தோடு உதவி செய்தார்! ஜீவா அவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக உழைத்தவர். பிறகுதான் கம்யூனிஸ்ட் கொள்கைக்கு மாறினார். தமிழ்நாட்டைக் காமராஜர் சோஷலிசப் பாணியில் நடமாட வைக்க உழைத்தார்! அதனால் ஏற்பட்ட இலட்சியப் பிடிப்பு - நட்பு, இருவருக்கும் இணைந்தது.

ஜீவா அவர்கள் தனக்கென ஏதும் சொத்து - சுகம் சேர்க்காத - அனுபவிக்காத ஏழையாக வாழ்ந்து செத்தவர்! ஏழைகளை வாழவைக்கப் புறப்பட்ட ஏந்தல் காமராஜரும் அதே நிலையில்தான் மறைந்தார்.

# 48. தேர்தல் வியூகி காமராஜர் மானத்தோடு வெற்றி பெற்றவர்!

*திராவிட முன்னேற்றக் கழகம், 1957ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், 15 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1962ஆம் ஆண்டில் அதே கட்சி 50 இடங்களில் வாகை சூடியது. அதனுடைய படிப்படியான வெற்றியும் - வளர்ச்சியும், தலைவர் காமராஜரின் அரசியல் வாழ்க்கைக்கு ஒரு மன நெருடலாகவே அமைந்தது!*

*1967-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், தி.மு.க.கட்சி ஆட்சியைப் பற்றி விடலாம் என்ற சுறுசுறுப்புக்கொண்டு விறுவிறுப்பாக வளர்ந்து கொண்டே வந்தது.*

## காமராஜர் பேசுகிறார்

*அந்த நேரத்தில் தலைவர் காமராஜர், காங்கிரஸ் கட்சிப் பொதுக் கூட்டங்களில் பேசும்போது சற்று ஆத்திரத்தோடும் உணர்ச்சி வசப்பட்டும் சில இடங்களில் பேசுவது வழக்கமாக அமைந்துவிட்டது. அவ்வாறு பேசிய ஒரு பொதுக்கூட்டத்தில், ''அலங்காரமாகப் பேசினா கூட்டம் கூடும்னே! திருவிழாவுக்குப் போறவ எல்லாம் பக்தனா? என்ன? அது போலத்தான் திராவிடத்தார் அரசியல் கூட்டமும் இருக்குன்னே.*

*அவாளுக்கு வரும் கூட்டமெல்லா கால் டவுசர் போட்டவங்க கூடும் கூட்டம்னே! அவா எங்கேயும் கூடுவா! கால் சட்டே போட்டவங்க எல்லாம் கூட்டமா கூட்றா! ஆட்சியிலே குறை இருந்தா சட்டசபைக்கு வா! மரத்தடியிலும் மைதானத்திலும் பேசினா மக்கள் உங்க பேச்சே கேட்பாங்களான்னே! கால் சட்டை போட்ட அவங்களுக்கெல்லாம் ஓட்டுரிமை இல்லேன்னே! கூட்டந்தான் உனக்கு! ஓட்டுகள் எனக்குத்தான்னே! என்னா, புரிஞ்சுதா?'' என்று பெருங்கோபமாகப் பேசினார்!*

## அண்ணா

## பேசுகிறார்!

அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் சைதாப்பேட்டை தேரடிக்கூட்டமொன்றில் தலைவர் காமராஜ் அவர்களுக்கு பதில் கூறும்போது, ''முதலமைச்சர் காமராஜர் நம்மைப் பார்த்து 'சட்ட சபைக்கு வா' என்கிறார்.

''மரத்தடியும் - மைதானமுமா சட்டசபை?'' என்று கேள்வி கேட்கிறார்! சவால் விடும் பாணியிலே நம்மைச்சாடுகிறார்!'' ''ஒரு முதல்வர், எதிர்க் கட்சிக்காரர்களைச் சட்ட சபைக்கு வா என்று அழைத்ததால்தான், நமக்கெல்லாம் மூத்தவராக இருப்பவர்க்குரிய மரியாதையைக் கொடுத்தோம். தேர்தலிலே போட்டியிட்டு 15பேர் சட்டசபைக்குள் சென்றோம்!

''இப்போது என்ன பேசுகிறார் பார்த்தீர்களா? நமது கூட்டத்திற்கு வருகின்ற எனது தம்பிமார்களைக் காமராஜர் கால்டவுசர் போட்டக் கூட்டம் என்கிறார்! அதற்காக நான் வெட்கப்படவில்லை! ஒரு படிமேலே சென்று உங்களுக்கெல்லாம் ஓட்டுரிமை இல்லை என்பதையும் கண்டு பிடித்துள்ளார்!

''காமராஜர், என்று மரத்தடி கிளி ஜோசியராக மாறினாரோ நமக்குத் தெரியவில்லை. கோபம் கொந்தளித்து ஜோசியம் கூறியுள்ளார். ஜோசியம் சொல்பவருக்கு கோபம் வரலாமா? வந்தால் அதன் விளைவுகள் எங்கு கொண்டு போய் விடும்?''

''கால் சட்டைப் போட்டவர்களால் தான் நமக்குக் கூட்டம் கூடும் என்றால் அதன் பொருளைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். அவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்று கிண்டலும் - கேலியுமாகப் பேசி இருக்கிறார்! இவ்வளவு கோபம் அவருக்கு ஏன் வந்ததோ புரியவில்லை.''

''எனது தம்பிகள், கால் சட்டை போடுகின்றவர்கள்தான். அவர்களுக்கு மீசைகள் கூடச் சரியாக அரும்பாத வயதுதான்! அதற்காக நான் வெட்கப்படவில்லை - வேதனைப்படவுமில்லை. நான் காமராசர் பேச்சிலே உள்ள கேலியை மறுக்கவுமில்லை.''

''காமராசர் அவர்களே! இன்று கால் சட்டைகளைப் போட்டிருப்பவர்களுக்கு, இன்னும் சில ஆண்டுகள் சென்றால், அப்போது அவர்களுக்கும் ஓட்டுரிமை வரும். என்பதை மறக்காதீர்கள்! அந்த நேரத்தில் ஓட்டுக்களும் எனக்குத்தான் - கூட்டமும் எனக்குத்தான் - காமராசரே!''

''இன்றைக்கு கால் சட்டை போட்டிருப்பவர்களுக்கு நாளை ஓட்டளிக்கும் காலமும் வரும்! அப்போது எனது தம்பிகள்தான் உமது ஆட்சியைப் பிடிப்பார்கள்! அந்த நிலை வந்தால், இந்தக் கால் சட்டைக்காரர்களுடைய ஆட்சியை - ஓர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உங்களால் அசைக்க முடியாது! இதை மறந்து விட வேண்டாம், காமராசரே!''

''காங்கிரஸ் தலைவர்களாகிய நீங்கள் எல்லாம், இப்போது காலத்தின் கடைசி கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறீர்கள்! நான் ஏதோ ஆணவத்தோடு பேசுவதாக நினைக்க வேண்டாம்; அடக்கத்தோடு தான் - முதலமைச்சர் காமராசருக்குச் சொல்கிறேன்.''

''நீங்கள் எல்லாம் நாளை காலத்தோடு இணைந்து விட்டால், நான் இப்படிப் பேசுவதற்காகக் காமராசர் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு பேச்சுக்காக இதைக் கூறுகின்றேன். ஒருவேளை எதிர்பாராமல் அப்படி ஏதாவது நடந்தால், உங்களை எல்லாம் அரசு மரியாதைகளோடு அடக்கம் செய்பவர்களாக இருப்பவர்கள், இந்தக் கால் சட்டைக்காரர்கள்தான்! அந்தக் காலம் ஒரு நாள் வரும் - மறந்து விடாதீர்கள் காமராசரே!'' என்று, அண்ணா பேசினார்.

என்னவாயிற்று இன்றைய காலநிலை! ஓர் அரசியல் தீர்க்க தரிசியாக அறிஞர் அண்ணா அவர்கள் அன்று அறிவித்தது போல, 1967ஆம் ஆண்டிலே ஆட்சியைக் காமராசர் பிடியிலே இருந்து கைப்பற்றியது திராவிடர் முன்னேற்றக் கழகம்.

இன்று 2002ஆம் ஆண்டு! இன்றுவரை தமிழகத்தை ஆட்சி புரிவது அதே திராவிடர் இயக்கப் பரம்பரை அல்லவா?

அதாவது, அண்ணா அவர்கள் கூறிய 25 ஆண்டுக்காலக் கெடுவையும் தாண்டி பத்து வருடங்கள் மேலாகின்றன. அது மட்டுமல்ல, 1967ஆம் ஆண்டு முதல் இன்றுவரை காலமாகி விட்ட காங்கிரஸ் தலைவர்களான காமராசர், இராஜாஜி, பக்தவத்சலம், மக்கள் தலைவரான தந்தை பெரியார் போன்ற விலை மதிக்க வொண்ணாத தலைவர்களுக்கு எல்லாம், தி.மு.கழகம் எல்லா இறுதி மரியாதைகளையும் - நினைவு விழா நாட்களையும் - அரசு சார்பாக ஆற்றியதுடன் நில்லாமல், நினைவாலயங்களையும் நிலைநாட்டி வருவதைத் தமிழக மக்கள் அறிவார்கள்.

## வியூகம் வகுத்துத் தோற்கடித்தார்!

'சட்டசபைக்கு வா' என்று தலைவர் காமராசர் அவர்கள், ஜனநாயகப் பண்பாட்டைப் பின்பற்றி 1957இல், அறிஞர் அண்ணா 15 சட்டமன்ற உறுப்பினர்களோடு சட்ட சபைக்குள் நுழைந்தார்!

*1962ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது, தலைவர் காமராசர் அவர்கள் தேர்தல் வியூகம் வகுத்து, 14 சட்டமன்ற உறுப்பினர்களைத் தோற்கடித்தார்! மேற்கண்டவாறு தலைவருக்குச் சவால்விட்ட அண்ணா அவர்களும் தோற்கடிக்கப்பட்டார்!*

*ஆனால், தலைவர்காமராசர் நினைத்தது ஒன்று! நடந்தது வேறு. விட்டது. தலைவர் காமராசர் அவர்கள் திட்டமிட்டுப் பதினான்கு சட்டமன்ற உறுப்பினர்களைத் தோற்கடித்த தேர்தல் வியூகத்தை எதிர்த்து, தி.மு.கழகம் 50 சட்டமன்ற உறுப்பினர்களோடு சட்ட சபைக்குள் நுழைந்துவிட்டது! தலைவனில்லாத படைபோல! போதாத குறைக்கு, சென்னை மாநராட்சியை வேறு தி.மு.க. ஏற்கனவே பிடித்து விட்டது. காமராஜருக்கோ இது அதிர்ச்சியை அளித்தது!*

## தலைவர் காமராஜர் ஓட்டு வேட்டை!

*தலைவர் காமராஜர் அவர்கள் தேர்தல் நிதி திரட்டுவதிலும் -பிரசாரங்கள் புரிவதிலும், நேர்மை-கண்ணியம்-நாணயத்தைக் கடுமையாகக் கடைப் பிடித்தவர்! சில நேரங்களில் அவருக்குக் கோபம் வரும்போதுதான், காங்கிரஸ் வெற்றியைப் பெரிதாகக் கருதி, உண்மைகளை மக்களுக்கு உணர்த்திட எதிர்க்கட்சிகளது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்!*

*1962ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது, சென்னை மண்ணடி பிராட்வே பகுதியிலும், துறைமுகப் பகுதியிலும், தலைவர் காமராசர் காங்கிரஸ் வேட்பாளரான ஜனாப் ஹாஜா ஷெரீப்பை ஆதரித்து வாக்குகள் சேகரித்து வந்தார்! அவருக்கு அடுத்தபடியாக அதே பகுதிகளில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தி.மு.க. வேட்பாளருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்யத் திட்டமிட்டிருந்தார்.*

*பிராட்வே சாலையிலே உள்ள பிராட்வே திரையரங்கில் அப்போது புரட்சி நடிகர் நடித்த 'வேட்டைக்காரன்' என்ற திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது. தேர்தல் பிரசாரம் புரிய வந்த தலைவர் காமராசர், ஜீப் வண்டியிலே பேசிக்கொண்டு வரும்போது கூடியுள்ள கூட்டத்தினிடையே சிறு குழப்பம் ஏற்பட்டது !*

*அதைப் பார்த்த தலைவர்காமராசர் அவர்கள், 'குழப்பம் செய்தா- ஓட்டு வந்துடுமான்னே! சல சலப்பு காட்டாதேன்னே! மக்களைக் குழப்பாதீங்க! உங்களிடம் ஓட்டுக் கேட்க என் பின்னாலே வேட்டைக்கார வருவான்னே! ரிக்ஷாக்கார வருவா! மக்கள் ஏமாறக்*

கூடாது! ஜாக்கிரதையா இருக்கனும்னே!'' என்று, புரட்சி நடிகர் மீது கோபப்பட்டு பிரசாரம் செய்தபடியே தலைவர் காமராஜர் சென்றார்! 'வேட்டைக்காரன்', 'ரிக்ஷாக்காரன் ' என்ற இரண்டு படங்களிலும் மக்கள் திலகம் நடித்திருந்ததால் தலைவர் காமராஜர் அவ்வாறு குறிப்பிட்டார்.

## தேர்தலில் சாணக்கியர்!

தலைவர் காமராஜ் அவர்கள், 1967ஆம் ஆண்டுவரை, தான் உழைத்து வளர்த்த காங்கிரஸ் பேரியக்கத்தை வேறு எந்தக் கட்சியின் காலிலும் சரணடைய வைக்காமல் அரசியல் மானத்தோடு தேசிய பாரம்பர்யச் சுயமரியாதையைக் காத்தே வாழ்ந்தார்! காமராஜர், தேர்தலில் ஒரு சாணக்கியர், தேர்தல் புலி! தனது சொந்த ஆட்சிச் செல்வாக்குப் பலத்திலே காங்கிரஸ் கட்சியைத் தேர்தல் களங்களிலே நிறுத்தி வெற்றியைத் தேடித் தந்தார்! தேர்தல் நாள், அறிவிக்கப்பட்ட உடனே, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்தார் காமராஜர்!

காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது முதல், அவர்கள் வாக்குகள் ஓட்டுப் பெட்டிக்குள் பதிவாகும் வரை, ஒரு தேர்தல் ஆசானைப் போலவே தனது கட்சிக்காக அவர் அரும்பாடு படுவார்! பயிற்சி கொடுப்பார் தொண்டர் அணிகளுக்கு! வெற்றிக்குரிய வழிவகைகளைப் போதிப்பார்!

## காங்கிரசின் பலம் அறிவார்

எந்தத் தொகுதியில் யார் யார் இதற்கு முன்பு போட்டி யிட்டார்கள்? எப்போது போட்டியிட்டார்கள்? எவரை எதிர்த்து எந்தெந்தக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டார்கள்? எத்தனைபேர் அந்தத் தொகுதியிலே நின்றார்கள்? எந்த ஜாதி ஓட்டுக்கள் அந்த தொகுதியிலே வெற்றியை நிர்ணயிக்கும்? எவ்வளவுக்கெவ்வளவு ஓட்டுக்களை ஒவ்வொரு வேட்பாளர்களும் அந்தத் தொகுதியிலே பெற்றார்கள்? எவ்வளவு ஓட்டுக்கள் மொத்தம் பதிவாயின? அவற்றிலே காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகள் எவ்வளவு? இடையிலே அந்தத் தொகுதியில் ஏதாவது மாற்றங்கள் உண்டாயினவா? என்ற நினவாற்றல்களை எல்லாம் தலைவர் காமராஜ் தனது மனத்துள் பதிய வைத்துக் கொண்டு பணியாற்றுவார்! அதனால் தான், அவர் தேர்தல் கலையிலே வித்தகராகவே விளங்கினார்! தேர்தல் புலி என்று மற்றக் கட்சித் தலைவர்களும் அவரைப் பாராட்டினார்கள்....

# 49. மகரிஷி காமராஜர் மணிவிழா மகிழ்ச்சி!

தமிழகத்தின் தன்னேரில்லாத் தலைவராக விளங்கிய தலைவர் காமராஜர் அவர்களுக்கு 1963 ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் மிகச் சிறப்பாக அறுபதாவது அகவை மணிவிழா நடைபெற்றது.

அப்போது தலைவர் காமராஜர் அவர்கள், தமிழகத்தின் முதலமைச்சராகக் கோலோச்சிக் கொண்டிருந்தார். புத்தம் புது ஆடைகள் ஏதும் பூணாமல், வழக்கம்போல் சலவை செய்த ஆடைகளையே அணிந்து கொண்டு, எளிமையாகவே ஏழ்மையின் தலைவராகவே எதிரொலித்துக் கொண்டாடினார்.

திருச்சி மாவட்டத் தியாகி, டி.எஸ். அருணாசலம், தலைவர் மணி விழாக் குழுவிற்குத் தலைவராகப் பணியாற்றினார். காங்கிரஸ் தலைவர்களால், தலைவர் காமராசருக்குரிய மணிவிழாப் பரிசும் வழங்கப்பட்டது. என்ன தெரியுமா அது?

இந்தியாவின் இரண்டாவது பிரதமராகப் பதவி ஏற்ற லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், தனது திருமணத்திற்கு வரதட்சனை வாங்குவதை எதிர்த்த சமூக சீர்திருத்தப் பண்பாளர்!

அத்தகையவரை வரதட்சணை வாங்குமாறு, சாஸ்திரியின் வீட்டார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வற்புறுத்தினார்கள். அவர் அதை வன்மையாகவே மறுத்தார்.

விடவில்லை அவரை சாஸ்திரி வீட்டார்கள் அனைவரும்! அதனால், அவரும் பெண் வீட்டாரிடம் திருமண வரதட்சணை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது! என்ன தெரியுமா அந்த வரதட்சணை? சிரிக்காதீர்கள்!

''ஒரு கைராட்டினம்! சட்டை- வேட்டிக்கான கதர்த் துணிகள்! இவைதான் சாஸ்திரி பெற்ற திருமண வரதட்சணை!

அதனைப்போலவே தலைவர் காமராஜர் அவர்களும் தனது மணிவிழாப் பரிசாகப் பெற்றவை என்ன தெரியுமா?அறுபது கதர்ப்பைகளில், அறுபது கதர் வேட்டிகள், அறுபது கதர்ச் சட்டைக்கான துணிகள், அறுபது மேல் துண்டுகள், அறுபது கைக்குட்டைகள் அவ்வளவுதான்! எப்படி மணி விழாப் பரிசு?

ஒருமுதலமைச்சராக இருப்பவர் பெறும் மணிவிழாப் பரிசுகளா இவை? என்று இக்கால மக்கள் கட்சிகள், தொண்டர்கள் எல்லாம் ஏளனமாக சிரிக்கக்கூடாது! சத்தியப் பிரமாணசாட்சி இந்த வரிகள்! கண்ணால் நான் நேரில் கண்டவை!

கோவை காளீஸ்வரர் நூற்பாலை உரிமையாளர் மட்டுந்தான், 6000 கெஜம் மல் துணிகளை, தலைவர் காமராஜர் மணிவிழாவின் போது தனது பரிசாக அனுப்பி வைத்தார்! அதுபோலவே தலைவர் அவர்களின் 61, 62ஆம் ஆண்டு நினைவு விழாக்கள் நடைபெற்றபோதும், 6100, 6200 கெஜம் மல் துணிகளை, அதே ஆலை உரிமையாளர் அனுப்பி, வாழ்த்தும் தெரிவித்தார்.

## பரிசுப் பொருட்களும் ஏழைகளுக்கே!

தலைவர் காமராஜ் அவர்கள் பரிசாகப் பெற்ற அந்தத் துணிகளையெல்லாம், அவை வழங்கப்பட்ட அந்தந்த ஆண்டுகளில், உடைகளற்ற ஏழை மக்களுக்கே கொடுத்து உதவி மகிழ்ந்தார்! அவற்றையெல்லாம் விற்றுப் பணமாக்கிக் கொள்ளும் இக்கால அமைச்சர் பெருமக்களாக, கட்சித் தலைவர்களாக அவர் திகழவில்லை அன்று!

விழாவன்று மாலையிலே மாவட்டந்தோறும் வந்து குவிந்த காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் - அணிவகுத்த காட்சிகள் மாற்றாரையும் வியக்க வைத்தன! அவ்வளவு பெரிய மக்கள் அணி ஊர்வலம்! பேருந்துகள், கார்கள், அலங்கார ஓவிய பேனர்கள் வரைந்த பட ஊர்வலம் நீண்டு சென்றபடியே இருந்தன!

## ஊர்வல அணிகள் மாண்புகள்

சென்னை மாநகரில் அண்ணாசாலையிலே தற்போதும், வானளாவி நின்றுகொண்டிருக்கும் எல்.ஐ.சி. கட்டிடம் அருகேயுள்ள ஸ்டேட் பாங்க் ஆஃப் இண்டியா என்ற கட்டிடத்திலே நின்றுகொண்டு, தலைவர்காமராஜர்தனது மணிவிழா ஊர்வலத்தின் மாண்புகளைக் கவனித்துக் களித்துக் கொண்டிருந்தார்.

கரகாட்டம், புலிவேட ஆட்டங்கள், தீப்பந்த சுழற்சிகளின் கோலாகலங்கள், சிலம்பாட்டங்கள், புரவிக் கலைஞர் ஆட்டங்கள், மாணவரணிகளின் அணிவகுப்புகள், மங்கையர்குல கண்கவர் அணிவரிசைகள், காங்கிரஸ் தொண்டர்களின் கொடியேந்திய ஆர்ப்பாட்ட, ஆனந்த முழக்கங்கள், சைக்கிள் அணிவகுப்புகள், அலங்காரம் செய்யப்பட்ட லாரிகள், ஜீப்களில் காமராஜர் நாட்டுக்குச்

செய்த சேவைகளின் ஓவியங்கள், மூவண்ணக் கொடியேந்திய காலாட்படைகளின் தோற்றப் பொலிவு, சீருடை அணிந்த சிறுவர்களின் எழிலார்ந்த காட்சி, பள்ளி ஆசிரியர்களின் வீறு நடை எல்லாம் நடைபெற்றன. ஒருமுகமாகச் சிலமணி நேரம் அணிவகுப்புச் சென்ற மாட்சியைக் கண்டு வியந்தார்.

தலைவர் 'காமராஜர் வாழ்க' என்ற முழக்கத்தால் மண்ணதிர்ந்தது. விண்ணும்கூட அதிர்ந்தது என்றால் மிகையல்ல. வண்ண வண்ண போஸ்டர்கள் ஒட்டிய போர்டுகளை ஏந்திய மக்கள் காட்சியைக் கண்ட தலைவர் காமராஜர், 'இந்த மக்களுக்கு நாம் என்ன செய்தோம்? இனிமேல்தான் என்ன செய்யப் போகின்றோம்? இப்படிப்பட்ட அன்பை நம்மீது வைத்திருக்கின்றார்களே - ஏன்?' எப்படி இந்த ஏழை மக்களை வாழவைக்கப் போகின்றேன்? என்று தமக்குள்ளேயே எண்ணிக் கவலையே அடைந்திருப்பார். அவ்வளவு இளகிய குழந்தை மனம் அவருக்கு.

சென்னை திருமலைப்பிள்ளை வீதியிலே உள்ள பெருந்தலைவர் காமராஜர் இல்லத்திலே காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் குழுமினார்கள். அன்றிரவெல்லாம் தலைவரைக் காண வந்து போகும் கூட்டத்தினர் அனைவரும், மணிவிழாக் காட்சிகளின் அருமை, பெருமைகளைப் பற்றியே பேசினார்கள் - மகிழ்ந்தார்கள்.

# 50. காமராஜர் புத்தரானார்- ஆட்சியைத் துறந்ததால்!

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியால், தலைவர் காமராஜரின் அரசியல் பலத்தையே மீறுவது போன்ற நிலை உருவாயிற்று! காமராஜர்அவர்களுக்கு அது பெருத்த கவலைக்குரிய சிந்தனையைத் தூண்டிற்று.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும், தமிழ்நாட்டைப் போலவே காங்கிரஸ் கட்சியின் அடித்தளம் ஆட்டம் கண்டு கொண்டிருந்தது. பலத்த பதவிப்போட்டி, சர்ச்சைகள், காங்கிரஸ் கட்சியிலே பலப்பல அணிகளை உருவாக்கி வந்தன.

காங்கிரஸ் கட்சிக்கு அந்தந்த மாநிலத் தேர்தல்களிலும், இடைத்தேர்தல்களிலும் அடிக்கடி தோல்விகள் ஏற்பட்டு எதிர்க்கட்சிகள் வெற்றியை ஈட்டிடும் வாய்ப்பு அதிகரித்தது. ஒவ்வொரு மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவரும் - தொண்டர்களும், பதவிகளெனும் அதிகாரத் தேரைச் சுற்றிச்சுற்றி அவரவர் பக்கம் உள்ள அணிகளின் வடங்களை நேரெதிர் முகங்களாக இழுக்க ஆரம்பித்தார்கள்!

அந்த வடங்களை இழுக்கக்கூட அவர்களுக்குள்ளேயே போட்டி! பொறாமை! தடைக் கல்லாக் குறுக்கே வந்து விழுந்தன. தகராறுகள், குழப்பம், அடிதடிகள், சண்டை சச்சரவுகள், அறிக்கைப் போர்கள், அணி மோதல்கள் நாளும் அதிகமாக வளர்ந்தன!

மாநிலங்கள் தோறும் நடைபெறும் காங்கிரஸ் ஆட்சிகள் பெரிய பெரிய ஊழல்களைத் தங்களது தோள்களிலே கட்சிக் காவடிகளாகச் சுமந்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி டில்லி சந்நிதானம் நோக்கி நேருவுக்கு அரோகராவென்ற ஓசையுடன் பவனிவர ஆரம்பித்தார்கள். அப்படியும் அவர்களால் தள்ளாட முடியாமல், அவரவர் கட்சித் தகுதிகள் என்ற மேடுபள்ளங்களிலே தடுமாறி விழுந்து- எழுந்து, திணறி - திண்டாடி, அவமானங்கள் என்ற படுகாயங்களோடு டில்லி தலைமை நிலைய மருத்துவமனையிலே சென்று சிகிச்சையும் பெற்றார்கள்.

அந்தக் காயங்களால் உருவான கட்சியின் தேகத் தழும்புகளால் கூடுமான வரை மாவட்டத் தகுதி படைத்த முக்கிய தலைவர்கள் எல்லாம் தத்தமது அரசியல் தகுதிப்பொலிவை இழந்தார்கள்.

## பிரதமர் நேருவின் முயற்சிகள் வீணாயின

டில்லி நோக்கி வந்த பதவி நோயாளிகளுக்கும் - ஊழல் பஜனைப்பிணியர்களுக்கும் - பிரதமர் நேரு எவ்வளவோ அறிவுரைச் சிகிச்சைகளை வழங்கிப் பார்த்தார். அதனால், பிரதமர் நேரு தீராத மனநோயாளியானார்! இந்த நோயைக் கட்சிக்குள்ளே எவ்வாறு நீக்குவது, போக்குவது என்று ஓயாமல் சிந்தித்து, சிந்தித்து, அந்தச் சிந்தனைகளால் அவர் அடிக்கடி தாக்கப்பட்டதால், அவர் உண்மையிலேயே உடல் நலிவையும், மன நலிவையும் அடைந்து தனது தோற்றப்பொலிவையும் இழந்தார். இருந்தாலும், பிரதமர் அல்லவா? திணறியபடியே மத்திய ஆட்சியை நடத்தி வந்தார். வயதேற்றம் வேறு அவரை வாட்டியது!

பிரதமர் நேரு அவர்களுக்கு இந்த பலவீன உடல்நிலை தோன்றிடக் காரணம் யாது? அவரேதான்! இது எப்படி?

உலக வரலாறுகளையெல்லாம் உன்னதமாக எழுதிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், நமது நாட்டின் சமுதாய, இன, நிலைகளையும், மக்களின் அறியாமை உணர்வுகளையும் ஆழ்ந்து நோக்க மறந்தார்! மறந்தார் என்பதைவிட தவறினார் என்றே கூறலாம் - பாவம்!

அவர் மேலைநாடுகளில்வளர்ந்து, உயர்ந்து வாழ்ந்து வரும் இலட்சிய உணர்வுகளுக்கு நமது நாட்டையும் நடைபோட வைக்க ஆசைப்பட்டார். ஜனநாயகம் என்ற மக்களாட்சித் தத்துவம், மேலைநாடுகளிலே கோலோச்சி வருவதைக் கண்ட ஆசிய ஜோதி பெருமகனார், அதே தத்துவத்தை, மக்களாட்சியை, தனக்குள்ள நல்லாசையால் நமது இந்தியாவிலே அடிப்படையான ஒரு மக்கள் மனக் கல்வித் தளம் அமைக்காமல் திணித்து விட்டார்!

அந்த அற்புத மக்களாட்சித் தத்துவத்தைக் காங்கிரஸ் கட்சியாலும் அதற்குப் பின்னாலே வந்த கட்சித் தலைமுறைகளாலும் நன்கு ஜீரணிக்க முடியுமா? என்பதைச் சற்று நிதானிக்கத் தவறினார்!

மேலை நாடுகளிலே வாழும் மக்கள் கல்வியறிவுள்ள மக்கள்! அறிவியல் வளர்ச்சியில்மேன்மை பெற்ற மக்கள்! அற்புதக் கண்டுபிடிப்புகளைக் காணுமளவிற்கு கல்வி ஆய்வு நுட்பமுள்ளவர்களாகத் திகழ்ந்தவர்கள்! நமது நாட்டு மக்கள் 100க்கு

10பேர்கூட கல்வி அறிவு பெறாதவர்களாக இருந்தார்கள்! மூட நம்பிக்கைகளும் - பக்குவப்பட முடியாத பரம்பரைப் புராணப் பித்துக்களும் கொண்டு, அறியாமையில் அவதிப்படும் நாடு இது என்பதையும் நேரு மறந்தார்.

தேர்தல் வந்தால், அதன் அருமையும் - பெருமையும் தெரியாத காரணத்தால், வாக்குகளை விலைக்கு விற்கும் நாடு நமது பாரதநாடு! தேர்தலன்று முன் நாளிரவு, வேட்பாளர்கள் அணி, முக்காடு போட்டுக் கொண்டு வீட்டுக்கு வீடு வாக்குகளை விலைக்கு வாங்கும் நாடு இது. இன்றும் கூடத்தான் இந்த இழிநிலை!

இந்தப் பாப அறிவு பெற்ற பாரதத்தைப் பக்குவப் படுத்தாமல், பிரதமர் நேரு அவர்கள்; அற்புமான தத்துவமான ஜனநாயக தத்துவத்தை ஆசையோடு வலிய வலியப் புகுத்தியதால்தான், காங்கிரஸ்காரர்களின் ஊழல் நோய்க் கிருமிகள், பதவிபிடிச் சண்டைக் கிருமிகள், பாரிச வாயுவாக அவருடைய உடலிலே ஊடுருவிக் கை கால்களை வீழ்த்தி விட்டன! வரம்பு மீறிய அவ்வளவு தொல்லைகளை காங்கிரஸ் அரசியல்வாதிகள் அவருக்கு உருவாக்கியதால்தான், அவர் மரணப்படுகுழியிலே காலிடறி வீழும் நிலை ஏற்பட்டது. மனக்கவலைகளுக்கு மருந்து உண்டா என்ன?

## காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற என்ன வழி?

தலைவர் காமராஜர் அவர்களும், எந்தெந்த மாநிலங்களிலே என்னென்ன நடக்கிறது என்பதை நன்கு புரிந்து கொண்டார். நேரு அவர்கள் படும் கட்சி மனவேதனைகளையும், அவருக்கு வடநாட்டுக் காங்கிரஸ்காரர்கள் தரும் தீராத தொல்லைகளையும், அதனால், அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்கம் ஏற்கும் களங்கக் கறைகளையும் கண்டு தலைவர் காமராஜரும் கடும் வேதனைப்பட்டார்!

தமிழகத்தின் முதலமைச்சர் பணியை, பார் உள்ளளவும் - பாரில் எழும் கதிரவன் உள்ளளவும் அனுபவிப்போம் என்று நினைத்தவர் அல்லர் காமராஜ் அவர்கள்!

இந்தப் பதவியை வகிப்பதால், ஏழை மக்களை அடிக்கடி சந்திக்க முடியவில்லையே என்ற வருத்தம்தான் அவருக்கு எழலாயிற்று! என்றாலும், தொடர்ந்து மக்கட் பணிகளிலே ஈடுபட்டார்! காமராஜர் சளைக்காது பணியாற்றினார்!

முதலமைச்சர் பதவியைத் துறந்து விட்டு, மீண்டும் தமிழகக் காங்கிரஸ் கட்சிப் பணிகளைச் செய்தால்தான், எதிரிகளிடமிருந்து

காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்று கருதினார்! அதற்காக, இரவு பகலென்று பாராமல் சிந்தித்தார் தலைவர் காமராஜர்!

மகாத்மா காந்தியடிகள் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் கட்சி, நாளுக்கு நாள் இவ்வாறு சீர்கெட்டு வருவதால், அந்த அழிவில் இருந்து காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால், புத்தர் பெருமான் செய்து காட்டியதைப் போல இரண்டு வழிகள்தான் உண்டு!

புத்தர் பிரான் அரியணையிலே வீற்றிருந்த போது ஓர்அவசரச் சட்டத்தை இயற்றி அதன் மூலமாகத் தான் கருதிய மனித ஞான ஒழுக்கச் சீர்திருத்தங்களைச் செய்திருக்கலாம்! பக்குவப்படாத பாமர மக்களிடம் சட்டத்தின் மூலம் சீர்திருத்தங்களைச் செய்வது வெற்றி பெறுமா என்பது மதில்மேல் பூனை (Cat on the wall) விவகாரம்! ஆக, அப்படியும் நடக்கலாம்! இப்படியும் நடக்கலாம் அல்லவா?

புத்தர் மரணமடைந்ததற்குப் பிறகு, புத்தர் பெருமானின் கொள்கைக்குரிய எதிரிகள், புத்தர் மகன் ராகுலனைக் கையகப்படுத்தி, அதை ஓர் அவசரச் சட்டம் மூலமாகச் சீர்திருத்தப்பட்ட புத்தரது நீதிநெறிகளை வைதிகர்கள் ஒன்று கூடி அழித்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்தார் - போதிமாதவன்!

ஏன், இன்றும் அது நடக்கவில்லையா தமிழகத்தில்? இந்திய அளவிற்குக் கூட போகவேண்டாமே! மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக வந்த பின்பு, அறிஞர் அண்ணா அவர்கட்கு நன்றி காட்டும் பண்பில், திண்டுக்கல் பகுதியை ஒரு மாவட்டமாக்கி அதற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டினார்!

எம்.ஜி.ஆர் அவர்களுக்கு முன்பு கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏழரை ஆண்டு காலம் தமிழக முதலமைச்சராகக் கோலோச்சினார்! அப்போது அவருக்கு தோன்றவில்லை அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றி காட்ட வேண்டும் என்ற நயத்தகு நனி நாகரிகப் பண்பு! ஏழரையாண்டுக் காலமாக அதுபற்றி எழவே இல்லை-அவருக்கு அந்தச் சிந்தனை!

மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அதைத் திண்டுக்கல் மாவட்டமாக்கி அதற்கு அண்ணா மாவட்டம் என்று எம்.ஜி.ஆர். அரசு அங்கீகாரம் செய்து அறிவித்த பெயரை, கலைஞர் கருணாநிதி அவர்கள் எம்.ஜி.ஆர். இறந்த பின்பு, கலைஞரது

இரண்டாண்டு கால ஆட்சியிலே அந்த அண்ணா பெயரால் ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கி இருக்கலாம் அல்லவா? அறிஞர் அண்ணா பிறந்த செங்கை மாவட்டத்தையே கலைஞரது இடைக்கால இரண்டாண்டு ஆட்சியில் அரசு அங்கீகாரத்தோடு அறிஞர் அண்ணா மாவட்டம் என்று அதை மாற்றியிருக்கலாம் - இல்லையா? செய்தாரா? கலைஞர். முதல்வர் பதவி பறிபோன பின்பு, புரட்சித்தலைவி ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றார்!

கலைஞர் அவர்கள், செங்கை மாவட்டத்திற்கு தபால் கார்டுகள் மூலமாகச் சூட்டிய அண்ணா மாவட்டம் என்ற பெயரை ஜெயலலிதா சட்டத்தின் மூலமாக செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் என்று மாற்றிவிட்டார்! இதற்கும் அழுக்காறுதான் அடிப்படை!

காயிதே மில்லத் மாவட்டம் என்று கலைஞர் பெயர் சூட்டிய திண்டுக்கல் பகுதி அண்ணா மாவட்டத்தை, செல்வி அவர்கள் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய நன்றியின்படி மீண்டும் அண்ணா மாவட்டம் என்று பெயரை அமைத்து விட்டார்.

அரசியல் அழுக்காறுகள் எவரெவரிடம், எப்போதெப்போது கஜகர்ணம் - கோகர்ணம் போடுமோ எவன் கண்டான்? இந்த எண்ணம் புத்தர் பெருமானுக்கும் அன்றே தோன்றியதோ என்னவோ, வைதீகர்கள் எவனைப் பிடித்தும் - ஏதும் செய்துவிடுவார்கள் என்ற அச்சமோ- என்னவோ அவருக்கு!

அதனால், சித்தார்த்த சித்தர் தனது மகன் இராகுலனையும் நம்பாமல், தனது நாட்டு மக்கள் மனதையே மாற்ற நினைத்தார்! நாட்டு மக்கள் நன்மைக்காக- நல்வாழ்விற்காக எவனொருவன் தன்னையே தியாகம் செய்கின்றானோ, அவன் பெயர், தொண்டு, பணிகள், பண்புகள், கூடுமானவரை மக்கள் மத்தியிலே மனக் கல்வெட்டாக மாறி நிலைத்து நின்றுவிடும் என்று நம்பினார்! தம்மபத நாயகர்!

காந்திபெருமான், ஆபிரகாம் லிங்கன், கென்னடி, மார்ட்டின் லூதர் கிங், இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோருடைய பெயர்கள் எல்லாம் மக்களின் மனக்கல் வெட்டுகளாக மாறிப் பதிந்து விடவில்லையா-அதனைப் போல புத்தர் பிரானுக்கு அந்த ஞானோதயம் அவர் அரியணையிலே அமர்ந்திருந்தபோதே பூத்தது சிந்தனையில்!

அந்தக் கபால சிந்தனையால், மான ஒளிச்சுடரின் வழிகாட்டலால் ஆசிய ஜோதியான புத்தர் பெருமான், தனது சிம்மாசனத்தைத் தூக்கி எறிந்தார். 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து

உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' என்ற திருக்குறளின் அருமை உணர்வுகளுக்கேற்பத் தனது அன்பிற்கினிய மனம் கவர் மனைவி யசோதராவை மறந்தார்! மழலைச் செல்வமாகத் தவழ்ந்து கொண்டிருந்த தனது செல்வன் ராகுலன் பாசத்தையும் வெறுத்தார்!

சுருக்கமாக உரைப்பதென்றால், உலகப் பற்றுக்களை எல்லாம் உதறித் தள்ளி, காடுமேடு, காய் கனி, மேடு பள்ளம், புற்று புதர், புல்பூண்டு, கற்கள் - மணல் மேடுகள், மரத்தடிகள் - மைதான வெளிகள் தான் தனக்குச் சொந்தமென அவர் அலைந்து அலைந்து திரிந்தார்!

போதி மாதவனாகி, ஞானபோதகனாக நடமாடியதால், அவர் உலக மக்கள் மனதிலே ஞான ஒளிசிதறும் சிற்பக் கல்வெட்டாக நிலைத்து நின்றார்! தனது கொள்கை நாட்டிற்கும் - உலகுக்கும் நன்மை பயக்க வேண்டுமானால், தன்னையே தியாகம் செய்தால்தான், அந்த மக்கள் தத்தமது மனப்பேழைகளிலே தியாகிகளின் திருப்பெயரை, திருஉருவை, திருநெறிகளை ஓவியங்களாகப் பொறித்து வைத்துக் கொள்வார்கள் என்ற பெளத்த நிலவின் சீதளச் சிந்தனையை; தலைவர் காமராஜர் அப்படியே தனது சிந்தனையில் பதித்துக் கொண்டார்!

அந்த அறிவு ஆசானின் எதிரொலியைத்தான் தலைவர் காமராஜர் தனது சிந்தனைக்குரிய வைரமுடியாக ஏற்றார்! அந்தச் சிந்தனையே அவரை இரவும் - பகலும் எங்கோ விரட்டிக்கொண்டிருந்தது! அந்த எண்ணச் சுழல்களின் ஒரு பொறிதான், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மூத்த காங்கிரஸ்காரர்கள் எல்லாம் தம் பதவியைத் துறந்து, அவரவர் அதிகார ஆசனங்களைத் தூக்கி எறிந்து வெளியேறி, காங்கிரஸ் பேரியக்கப் பணிகளுக்காகத் தம்மை, தம் சுகபோக வாழ்வுகளைப் புத்தரைப் போலத் துறந்து, நாட்டுக்கும் - மக்களுக்கும் சேவை செய்தல் வேண்டும்; அதுவே அரசியல் நல்லறம் என்றுகூறித் தாமும் அந்த உறுதியைப் பூண்டார்.

## சுபாஷ் பாபு இலக்கணம்!

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்கத்தில், இந்த நிலை எதிர்காலத்தில் இயங்கியே தீரும் என்பதனை, இந்தியா சுதந்திரம் பெறாததற்கு முன்பேயே சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் எதிரொலித்தார்!

"Operation Premature democracy in a Poor Country is like allowing the infant child to leap in deepwell."

- Netaji Bose

"Letters to Nehru"

''அறிவு வளர்ச்சி பெறாத ஒரு ஏழ்மை நாட்டில் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துவது என்பது, விவரமறியாத பச்சிளம் குழந்தையை ஆழமான கிணற்றில் தள்ளி ஆழம் பார்ப்பதற்குச்சமம்'' என்றார் சுபாஷ் பாபு, நேரு அவர்களுக்கு எழுதிய கடிதங்களில்!

சுபாஷ் பாபு கூறிய இந்தக் கருத்துக்கேற்ப, இந்திய அறிவு வளர்ச்சி அன்று மட்டுமல்ல, இன்றும் முழுமையாகப் பெறாத ஒரு நாடுதான். இங்கே ஜனநாயகம் என்ற ஒரு குழந்தையை, ஊழல், தன்நலம், பங்குச் சந்தை, பந்த பாசம், சுற்றம் உற்றங்கள், என்ற ஆழமான கிணற்றிலே தள்ளிவிட்டோம்! அதனால் தான், செய்கின்ற யோக்கியத் தன்மையற்ற செயல்கட்கெல்லாம், மோசடி, லஞ்ச லாவண்யம், கோடி கோடி பல்கோடி கொள்ளைத் தனங்கள் புரிகின்ற அரசியல் திருட்டுகளுக்கெல்லாம் கட்சி, ஜனநாயகம் என்ற பொன்முலாம் பூசி மக்களை ஏமாற்றிவரும் நிலையை நாம் இன்றும் காண்கிறோம்; அனுபவித்தும் வருகின்றோம்!

"If the Voters are fools, the Legislature will be rascals". என்று, தெரியாமலா பேரறிஞர் பெர்னாட்ஷா ''வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் ஆட்சி அவை உறுப்பினர்கள் அயோக்கியர்களாக இருப்பார்கள்'' என்று!

ஜனநாயகத்தை இன்று யார் பேசுவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. அரசியல் திருடர்கள் எல்லாம், பதவிவெறியர்கள் எல்லாம், சுயநல வெறியேறி, சுகபோகப் போதையேறி, ஜனநாயகத் தத்துவத்தின் குரல்வளையைக் கோரமாக நெருக்கி, நாள்தோறும் ஜனநாயகப் படுகொலையை அரசியலில் செய்து வருவதைப் பார்க்கின்றோம்.

அதனால்தான், பிரதமர் நேரு இந்தியக் காங்கிரஸ்காரர்களின் அரசியல் அட்டகாச ஆர்ப்பாட்ட ஊழல் மனங்களின் வேதனைகளைப் பார்த்து, அனுபவித்து, நோயெனும் கவலையால், அவர் தாக்கப்பட்டு இறந்தார் - பாவம்!

இதோ இந்திய விடுதலைக்கு இரவு பகலென்று பாராமல் உழைத்துழைத்து உருக்குலைந்து தனது இன்னுயிரை ஈந்த காந்தி பெருமான், 'ஹரிஜன்' ஏட்டில் எழுதிய மனவேதனை மொழிகளை ஒரு முறை படியுங்கள். உண்மைகள் சில உங்களுக்குப் புரியும்!

''காங்கிரசிலே காணப்படும் ஊழலே, பலாத்காரம் நுழைந்து விட்டது என்பதன் அறிகுறியாகும். காங்கிரஸ் மகாசபை, எந்த நியாயமான உரிமையையேனும் மிதித்துத் தள்ளுமானால், அந்த நேரமே, அதன் பெருமையும் - செல்வாக்கும் அழிந்து விடும்.

''காங்கிரஸ் கட்சி நாட்டின், மக்களின் நலத்திற்கு விரோதமாக நடக்குமோ, அன்று அது தானாகவே அழிந்துபோகும்.''

''பதவி ஏற்றதும் எதைச் செய்வதாகக் காங்கிரஸ் ஆட்சி உறுதிமொழி கூறி ஏற்றுக் கொண்டதோ, அதை இன்னமும் செய்யவில்லை என்ற என்னுடைய அபிப்ராயம் அப்படியேதான் இருந்து வருகிறது.''

**– காந்தியடிகள்**
'ஹரிஜன்' 12.7.1946.

''பாரத நாட்டிற்காக விடுதலை விளக்கை ஏற்றி, நம்மைச் சூழ்ந்திருந்த அடிமை இருளை அகற்றிய அருட்பெருஞ்சோதியாகத் தோன்றிய காந்தியடிகளின் தத்துவங்களை மறந்துபோன காங்கிரஸ்காரர்களே இன்றைய ஆட்சியில் அமர்ந்துள்ளார்கள். அதன் எதிரொலிதான் ஜனநாயக ஊழல்களின் உருவாக்க நிலை!''

''அதனால்தான், பிரதமர் நேரு போன்ற தியாக மூர்த்திகளை மீளா நோயிலே தள்ளிச் சாகடிக்கும் பதவி வெறியர்கள் - ஊழலாட்சியிலே அமர்ந்து விட்டார்கள்''

இந்த எச்சரிக்கையை, என். நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள், 1961ஆம் ஆண்டில் தலைமை வகித்த பவநகர் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே விடுத்துள்ளார். இதோ படியுங்கள் அந்த எச்சரிக்கை வெடிகுண்டுகளை!

"The Congress because of Historical reasons has come to be a great instrument of service to the people it naturally attracts to itself people who hunger for power"

The facts remain, that congressmen are generally more active in seats of Power in the secretariats and honest god's work in the field in the villages is becoming more and more rare."

There is nothing wrong in seeking power. What is wrong are the Machinations and Cheap intrigue to grab power, for selfish ends."

(N. Sanjeeva Reddy-Bhavanagar Congress Speech -1961)

''காங்கிரஸ் கட்சி ஒரு வரலாற்றுச் சிறப்புக்குரிய இயக்கம். அதன் காரணமாகத்தான் அது மக்களுக்குத் தொண்டுபுரியும் ஒரு கருவியாக மாறியுள்ளது. ஆனால், இயல்பாகவே அது பதவிப் பசியோடு ஏங்குபவர்களைக் கவரக் கூடியதாக உள்ளது.''

''பதவிக்காகவும், அதிகாரத்திற்காகவும் செயலாற்றுபவர்களே, காங்கிரஸ் கட்சியில்அதிகமாகப் பெருகி வருகின்றார்கள்.''

''கிராம சேவையே கடவுள் தொண்டுகளாகக் கருதப்படும் எண்ணமுள்ளோர், காங்கிரசிலே மிக அரிதாகி வருகின்றார்கள் என்பதுதான் உண்மை.''

''பதவிகளைத் தேடுவதோ- அதிகாரங்களை நாடுவதோ தவறல்ல! ஆனால், அவற்றை அடைவதற்காகவும் - தங்கள் சுயநலத்திற்காகவும், காங்கிரஸ்காரர்கள் இயங்கும் முறைகளும் - கையாளும் கீழ்த்தரமான செயல்களும் - தவறானவைகளாகும்.'' - என்று, முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவராகவும், ஆந்திர முதலமைச்சராகவும், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகவும் இருந்த சஞ்சீவரெட்டியார் பவநகர் மாநாட்டில் ஆற்றிய காங்கிரஸ் தலைமையுரையிலே காங்கிரஸ் கட்சியை எச்சரித்தார்!

இத்தனை பெரிய ஊழல்களைக் காங்கிரஸ் கட்சியிலே மட்டுமல்ல, ஆட்சி புரிவோரிடம் இருந்தும் அதை அகற்றிடப் போர்க்கொடியை ஏந்தினார் - பாண்டி மண்பெற்ற மாவீரர் தலைவர் காமராஜர்!

தன்நலம், ஊழல், ஊதாரித்தனம் ஆடம்பரப் பதவி, வாழ்வு, ஆட்சியிலே ஊழல், பதவிப் பசி வெறி, மக்கள் வரிப் பணங்களை அரசியல் பெயரால் செய்யும் மோசடிகள், இவற்றையெல்லாம் எதிர்க்கப் போர்க்களம் புறப்பாட்டுப்பறை கொட்ட வீறிட்டெழுந்தார் காமராஜர்.

போதி மாதவன் சித்தார்த்தன் தனது அரசுப் பொறுப்புகளைத் தூக்கி எறிந்தது போல, தலைவர் காமராஜர் தனது அற்புதமான மக்கட் செல்வாக்குடைய தமிழக முதலமைச்சர் என்ற தனது பொற்கால ஆட்சியின் பதவியினை விட்டு விலகினார்! மக்கள் வீதியிலே ஒரு மகரிஷியைப்போல வந்து நின்றார் - தனிமனிதனாக!

இரண்டாம் உலகப் போர் மூண்டபோது உலகையே உலுக்கி அதிரவைத்த மாவீரன் இட்லர், தலைவர் காமராஜர் ஆட்சிக்கு இலக்கணம் வகுத்தாற் போல பேசுகிறார் பாருங்கள்:

Governing of a state by a benevelant worker, who endows himself for the cause of the downtrodden people, who constitute

majority in the pouplation is real democracy. This is my Mission.

- Adolph Hitler.
(The Main Camp)

''பெரும்பான்மையாக உள்ள ஏழை மக்களுக்காக எல்லாத் தியாகங்களையும் செய்து, அவர்களுக்காகவே உழைத்து ஒரு நாட்டை ஆட்சி செய்யும் தன்னலமற்ற தனிமனிதனின் ஆட்சிதான் உண்மையான ஜனநாயகம்'' என்றார் இட்லர்.

இந்த ஜனநாயக இலக்கணத்திற்கேற்ப, ஏழை மக்கள் வாழ்வே தனது வாழ்வு என்ற மனித நேயமாண்புக்கு இலக்கணமாகத் தனது முதலமைச்சர் பதவியைத் துறந்தது அவர் தனி மனிதரானார்!

மத்தியிலும் - மாநிலங்களிலும் ஆட்சிபுரியும் காங்கிரஸ் கட்சி ஆட்சியைத் தன்னலமற்றதாக்கி, உண்மை ஜனநாயக ஆட்சியை உருவாக்கிட விரும்பினார். தமிழகத்தில் அவர் ஆட்சிபுரிந்தபோது, ஆட்சியைத் தனது கட்டுக்கோப்புக்குள்ளேயே நிலைநிறுத்தி, தனிமனிதன் ஆட்சியாகவே காமராஜர் நடத்தினார்!

கட்சியையும் தனது வரம்புக்குள்ளேயே கட்டுப்படுத்தி, தன்னை மீறாமல் - தான்தான் கட்சி, கட்சிதான் அவர் - என்ற ஒருமைப்பாட்டோடு ஆட்சிக்கு உறுதுணையாகத் தனது கட்சியையும் நிலைநிறுத்திக் காட்டினார்.

ஏழை மக்களுக்கும் - தேசிய விடுதலைக்கும் உழைப்பதையே நோக்கமாகக் கொண்டு தனது திருமணத்தின் மீதும் அக்கறை செலுத்தாமல் - சாகும்வரை, பிரம்மசாரியாகவே, தனிமனிதனா கவே காமராஜர் நாட்டுக்கு உழைத்தார். பதவிகளால் பெறுகின்ற சுகபோகங்களை அறவே அவர் வெறுத்தார்! துறந்தார்!

தன்னால் உருவாக்கப்பட்ட ஓர் ஆட்சியிலே தன்னலமற்ற மனிதனாகத் தான்திகழ்ந்து, இறுதிக் காலம் வரை அவர் எளிமையாகவே, ஏழைமக்களுக்காகவே உழைத்து வாழ்ந்து, சுற்றமும் - உற்றமுமற்ற தனிமனிதனாகவே உழன்று, இந்திய ஜனநாயகம் இனிதாக ஓங்க, தலைவர் காமராஜர் தன்னைச் சர்வ பரித் தியாகம் செய்து கொண்டார்.

''தன்னைப் போலவே மற்ற பிற காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், அவரவர் வகிக்கும் பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு, மக்கள் பணிகளை, கட்சிப் பணிகளை ஆற்றிட முன் வரவேண்டும் என்று சிந்தித்தார் - விரும்பினார்!''

## காமராஜர் திட்டம்

''ஒரு காங்கிரஸ் தலைவர் ஒரே ஒரு பதவியைத் தான் வகிக்க வேண்டும்! பிற காங்கிரசார் நாள்தோறும் பொதுமக்களைச் சந்தித்து அவரவர்கள் குறைகளைக் கேட்டு அவ்வவற்றிற்கு ஏற்றவாறு தேச சேவை புரிய வேண்டும்.''

ஒருவர்தான் ஒரு பதவியிலே இருக்கவேண்டும். மற்றவர் அதைப் பார்த்துப் பொறாமையோ - விரோதமோ கொள்ளக் கூடாது.''

அவர்கள், காங்கிரஸ் கட்சியின் எந்தப் பதவிகளிலும் இல்லாமலேயே கட்சி நிர்மாணப் பணிகளைச் செய்திட முன் வரவேண்டும்.'' என்று, முடிவெடுத்தார் தலைவர் காமராஜ் அவர்கள்.

1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரதமர் நேரு அவர்களை, ஐதராபாத் நகரிலே காமராஜ் அவர்கள் சந்தித்து, தமது எண்ணங்களையும் முடிவையும் தெரிவித்தார். 'இந்த அரிய சிந்தனை, உழைப்பு, வேட்கை, பொதுநலம், கட்சித் தொண்டு, தன்னுணர்வுகளை ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் பெற்றுக் கட்சித் தொண்டாற்றினால், தேசிய சேவை, நமது இலட்சிய நோக்கம், கட்சிப் புனிதம் அனைத்தும் காந்தியடிகள் காலத்தில் இருந்ததைப் போல நமது பேரியக்கம் காட்சியளிக்கும்'' என்று பிரதமர் நேரு அவர்களிடம் விரிவாக விளக்கினார்!

## காமராஜருக்கு நேரு பாராட்டு!

உடனே பிரதமர் அவர்கள், துள்ளி எழுந்து கட்டியணைத்து, தலைவர் காமராசரைப் பாராட்டி மகிழ்ந்தார்! நோய் வந்தவனுக்குத் தான் மருந்து அருமை தெரியும் - புரியும்!

''இது ஓர் அதிர்ச்சி வைத்தியம்! (Shock Treatment, Kamaraj Plan) காமராஜ் திட்டம். காமராஜ் பிளான் என்று பிரதமர் படபடவென்று பல சொற்களை உதிர்த்துப் பாராட்டி அதற்குப் பெயர் சூட்டினார். ஓஹோ - ஹோ என்று கலகலப்பாக அவர் சிரித்தார்! நல்ல திட்டம், நல்ல பிளான் என்று கூறி நேரு மகிழ்ந்தார்!

இந்த கே.பிளான் திட்டத்திற்கேற்ப, மேலும் விரிவாகக் கலந்துரையாடிட காமராஜர் அவர்களைப் பிரதமர் நேரு அவர்கள் டெல்லிக்கு வருமாறு அழைத்தார். அவர் அழைப்பை ஏற்றுத் தலைவர் டெல்லிக்குச் சென்று மீண்டும் இருவரும் ஆழ்ந்து பேசினார்கள்.

டெல்லி நாடாளுமன்றமும் - அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியும், தலைவர் காமராஜர் அவர்களது திட்டத்தை ஏற்றன. தலைவர் காமராஜர் அவர்கள், தமிழக முதலமைச்சர் பதவியை விட்டு விலகிக் கட்சித் தொண்டாற்றப் போவதாக அறிவித்தார். தமிழ் நாட்டில்பலவீனமடைந்துள்ள காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தப் போவதாகவும் கூறினார்.

## பிரதமர் நேருவும் விலகுவதாகக் கூறினார்!

தலைவர் அவர்கள் கூறியதைக் கேட்ட நேரு அவர்கள், தாமும் பிரதமர் பதவியை விட்டு விலகுவதாக முடிவெடுத்தார். தலைவர் காமராஜ் அவர்களும், பிற காங்கிரஸ் தலைவர்களும் பிரதமர் அவர்கள் விலகக் கூடாதென்று எதிர்த்தார்கள்.

இந்தத் தருணத்தில்பிரதமர் நேரு பதவியை விட்டு விலகுவது நாட்டிற்கு நன்மை நல்காது என்று அவர்கள் எல்லாரும் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால், நாடாளுமன்றத்திலே இருந்த அமைச்சர்களும், மாநிலங்களிலே உள்ள முதலமைச்சர்களும் யார் யார் விலகப் போகிறார்களோ அவர்களுடைய பட்டியலைப் பிரதமர் நேருவிடம் கொடுத்தார்கள்.

அகில இந்திய அளவில் ஏறக்குறைய 42 பேர் ராஜிநாமாக்களைப் பிரதமர் நேரு நாட்டிற்கு அறிவித்தார். அவர்கள் பெயர் சில வருமாறு:

## பதவி விலகுவோர் பட்டியல்!

தமிழ்நாடு முதலமைச்சர் காமராஜ், ஒரிசா முதல்வர் பட்நாய்க், காஷ்மீர் முதல்வர் பக்ஷி குலாம் முகமது, உத்தரப் பிரதேச முதல்வர் சி.பி. குப்தா, பிகாரில் பீதோனந்தரே, மத்தியப் பிரதேசம் மண்டோலான் போன்ற ஆறு முதல்வரும் காமராஜ் திட்டப்படி பதவி விலகினார்கள்.

நாடாளுமன்ற அமைச்சர்களான மொரார்ஜி தேசாய், லால் பகதூர் சாஸ்திரி, எஸ்.கே. பாட்டீல், ஜெகஜீவன்ராம், பி. கோபால் ரெட்டி, கே.எல். ஸ்ரீமாலி ஆகியோருடன் வேறு பிற மாநில அமைச்சர்களும் விலகியதாகக் கூறினார் பிரதமர் நேரு.

காங்கிரஸ் கட்சிப் பணிகளுக்காக அமைச்சர்கள் தங்களது பதவிகளை விட்டு விலகிய அற்புத அரசியல்வரலாறு வேறு எந்த நாட்டிலும் அன்று வரை என்ன: இன்று வரைகூட நடந்ததே இல்லை. இதுதான் காமராஜ் அவர்களது கே. பிளான் திட்டத்தின் பெருமை!

தலைவர் காமராஜ் ஒருவரைத் தவிர, பதவிகளை விட்டு விலகியவர்கள் அனைவரும் சரிவரக் கட்சிப் பணிகளை ஆற்றவில்லை. அவர்களை எல்லாம் பதவிகளிலே இருந்து வெளியேற்றவே காமராஜ் திட்டம் கொண்டு வரப்பட்டதாக அவர்கள் கருதிவிட்டார்கள்.

இதற்கிடையே, இந்திய - சீன ஆக்ரமிப்புப் போர் உருவாகவே, பிரதமர் நேருவுக்கு எதிரானவர்கள் எல்லாம் ஓரணியில் திரண்டு அவருக்கு மேலும் தொல்லைகளைத் தந்து வந்தார்கள். இந்தக் கவலைகள் அதிகமாக ஆக பிரதமர் நேருவின் உடல், நோய்ப் பிடியிலே சிக்கியது. நாளாக நாளாக அவர் மிகவும் பாதிக்கப்பட்டு, எவ்விதப் பணியையும் செய்ய முடியாமல் பலவீனப்பட்டார்.

## பக்தவத்சலம் முதல்வரானார்

தலைவர் காமராஜ் அவர்கள் 1963-ஆம் ஆண்டில் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் நாள், தமது முதலமைச்சர் பதவியைத் துறந்தார். எம். பக்தவத்சலம் அவர்களைத் தமிழ்நாட்டின் முதல்வராக்கினார். ‘பதவியிலும் - தகுதியிலும் காங்கிரஸ்காரர்கள் ஆசைப்படும்வரை, சோஷலிசம் இந்த நாட்டில் அமைவது அருமையே!’ - என்று, காந்தியடிகள் கூறிய அரசியல் தத்துவத்திற்கேற்ப, தலைவர் காமராஜ் தனது பதவியைத் தூக்கி எறிந்தார்.

1963-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3,4-ஆம் நாட்களில், ஜெய்ப்பூர் நகரில் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மாநாடு கூடியது. ஆந்திர மாநில முதல்வராக இருந்த டி. சஞ்சீவய்யா அம் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

அந்தப் பேரவையில், தலைவர் காமராஜ் அவர்களின் கே. பிளான் திட்டம் பலத்த சர்ச்சைக்கும் - விவாதத்திற்கும் உட்பட்டது. அந்தத் திட்டத்தால் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட புத்துணர்ச்சிகளை, புதிய பொலிவைப் பிரதமர் நேரு அவர்கள் விளக்கிப் பேசினார்.

‘‘காமராஜ் அவர்களின் திட்டம் காங்கிரஸ் வரலாற்றில் ஒரு புதிய புரட்சிகரமான திட்டம், அதை நான் வரவேற்கிறேன் - பாராட்டி ஏற்கிறேன்!

‘புவனேஸ்வரம் நகரில் அடுத்துக் கூடும் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவை மாநாட்டிற்குத் தலைவர் காமராஜர்தான் தலைமை வகிக்க வேண்டும். கே. பிளான் திட்டத்தை நிறைவேற்றிட அவர் தலைமை வகிப்பதை நாடு வரவேற்கிறது’’ என்று, பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

பிரதமர் நேரு அவர்களின் கருத்தை, ஒரிசா மாநில புவனேஸ்வரம் மாநாட்டில் நிறைவேற்றிட அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் புவனேஸ்வரம் நகர் நோக்கிப் புறப்பட்டார்கள்!

தலைவர் காமராஜ், அவர்களுடன் தமிழக முதல்வர் எம். பக்தவத்சலமும் பிற தமிழகக் காங்கிரஸ் தலைவர்களும் - செயல் வீரர்களும் ஏறக்குறைய ஆயிரம் பேர்களுடன் ஒரிசா மாநிலத்தில் நடைபெறும் புவனேஸ்வரம் மாநாட்டிற்குப் புறப்பட்டார்கள்.

'புவனேஸ்வரம் ஸ்பெஷல்' என்ற புவனேஸ்வரம் தனி இரயில் தலைவர் காமராஜர் அவர்களையும் -காங்கிரஸ் கட்சித் தலைவர்களையும் சுமந்துகொண்டு, சென்னை சென்ட்ரல் ரயில்வே நிலையத்திலே இருந்து புறப்பட்ட கோலாகலக் காட்சியை நாம் ஆரம்பத்திலேயே படித்தோம்.

புவனேஸ்வரம் நகர் மாநாடு முடிந்த பின்பு, காலா காந்தி என்று வடபுல மக்களால் பாசமுடன் அழைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், தற்போது அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சித் தலைவரென்ற தகுதியோடு, பரத கண்டம் முழுவதும் சமதர்மச் சுற்றுப் பயணம் புரிந்து, இந்திய மக்களைச் சந்திக்கப் புறப்பட்டுவிட்டார்!

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், கருப்பு நிறத் தோற்றம் உடையவரானதால், வடநாட்டுப் பொதுமக்களும் - தலைவர்களும் அவரைக் காலா காந்தி என்று அன்பு தவழ அழைத்து, அவர் செல்லும் இடங்களிலே எல்லாம் அவரைக் காலா காந்திஜி காமராஜ்கி ஜே! என்று போற்றி முழக்கமிட்டார்கள்.

## இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம்!

பஞ்சாப், ஒரிசா, பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரம், கர்நாடகம், புதுச்சேரி, தமிழகம், மராட்டியம், குஜராத், வங்காளம் போன்ற மாநிலப் பகுதிகளுக்கு எல்லாம் 18 நாட்கள் தொடர்ந்து சென்று தமது சமதர்மக் கொள்கைகளைப் பேசிப் பரப்பினார்.

அந்தப் பயணத்தைக் காமராஜ் 'சமதர்ம யாத்திரை' என்று இந்திய மக்கள் அழைத்தார்கள். அவர் பேசும் கூட்டங்களில் எல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து அந்த எளிய தலைவரின் கருத்துக்களைக் கேட்டார்கள்.

# 51. சமதர்ம சமுதாயச் சிற்பி பிரதமர் நேரு மறைந்தார்!

புவனேஸ்வரம் மாநகரில் 68-வது காங்கிரஸ் கட்சிப் பேரவை மாநாடு 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ஆம் நாள் துவங்கி நடைபெற்றது.

**காலா காந்தி**

**காமராஜ் வாழ்க!**

காங்கிரஸ் கட்சியின் சாதாரண உறுப்பினர் காமராஜ், நகர, வட்ட, மாவட்ட செயல் வீரராக விளங்கிய காமராஜர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரான காமராஜர், தியாகங்கள் பலவற்றைச் செய்த தியாகி காமராஜர், தமிழக முதலமைச்சர் காமராஜர், அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிப் பெருந்தலைவர் காமராஜர் ஆனார். அதனால், அவர் பெருந்தலைவர் என்று காங்கிரஸ் செயல்வீரர்களாலும், இந்தியத் தலைவர்களாலும், பொது மக்களாலும் அழைக்கப்பட்டார்.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கே பெருந்தலைவரான காமராஜ் அவர்கள், தனது உயிர் இலட்சியமான சமதர்ம சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். ''என்னுடைய இறுதிப் போராட்டம், சோஷலிச சமுதாயத்தை இந்தியாவில் அமைக்கும் போராட்டம்தான். இந்தக் கடைசி யுத்தத்தை நடத்திட நான் துணிந்து விட்டேன். இதற்கு இந்திய மக்களுடைய பேராதரவு எனக்குத் தேவை.''

''பொது மக்களே, உங்களுடைய ஒத்துழைப்பை எனக்கு அளிப்பீர்களா?'' - என்று, அவர் சென்று கலந்து கொண்ட இந்திய நகரங்களில் எல்லாம், மாநிலந்தோறும் மக்களைப் பார்த்துக் கேட்டார்.

அங்கங்கே திரண்ட அந்தந்த மாநிலப் பொதுமக்களும் - காங்கிரஸ் தொண்டர்களும், ''அளிப்போம் அளிப்போம் எங்கள் ஒத்துழைப்பைத் தவறாமல் அளிப்போம்'' என்ற பதில் முழக்கங்களை எழுப்பினார்கள்.

இந்த சோசலிசச் சிந்தனையின் செயற்பாடுகளைக் கொண்ட காட்சிகள், நாடெங்குமுள்ள கிராமங்கள் தோறும், பட்டிதொட்டிகள், சிற்றூர் - பேரூர் நகரங்கள் தோறும் காட்சியளித்தன! பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், மக்கள் முகங்களைப் பார்த்துப் பேசிட எழுந்ததும் அதற்குப் பதிலாக மக்கள் 'காலா காந்திஜிக்கு ஜெய்' என்று அவர்கள் எழுப்பும் முழக்கத்தைக் கேட்டு பிற காங்கிரஸ் தலைவர்களுக்கும் - தொண்டர்களுக்கும் நாட்டில் ஏதோ ஒரு புதிய அரசியல் போர் முழக்கம் உருவாவதைப் போல வியப்படைந்தார்கள்.

''சோஷலிச தத்துவம் என்றால் என்ன? அதை எப்படி நிறைவேற்ற வேண்டும்? அதன் எதிரிகள் யார்- யார்? அவர்களை எவ்வாறு வெற்றி கொள்வது?'' என்ற வினாக்களை அவர் மக்கள் முன்பு கேட்டு, அதற்கான காரண காரியங்களை விளக்குவார். உடனே பலத்த கடலொலி ஒத்த கையொலி பேரிடி போல எதிரொலித்து எழும்.

பெருந்தலைவரின் சமதர்ம விளக்கங்களின் இடையிடையே அவரது தன்னலமற்ற பேச்சில் எழுந்த உண்மைகள் மக்களைக் கவர்ந்தன. அதனால், அவரை இந்திய மக்கள் மற்ற வடநாட்டுத் தலைவர்களை விட, பிரதமர் நேருவிற்குப் பிறகு அதிகமாக நேசித்தார்கள்! மக்கள் அவருடைய ஏழை - பணக்காரப் பேச்சைக் கேட்கப் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லாம் ஆங்காங்கே பெருங் கூட்டமாகத் திரண்டார்கள்.

**''மொழிப் பிரச்னையில் பிரதமர் நேருஜியின் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று எதிர்க்கட்சிகள் கேட்கிறார்களே, அதே மாதிரி சோஷலிச சமுதாயத்தை அமைப்பதிலும் நேருஜி வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று ஒருவேளை உணவுக்கும் வழியில்லாத ஏழை கேட்கமாட்டானா? அவன் ஆசையை நாம் ஆதரிக்க வேண்டாமா?''**

- என்று, பேசும் கூட்டங்களிலே எல்லாம் மக்களைப் பார்த்துக் கேட்டார் பெருந்தலைவர்! மக்கள் தங்களது கையொலி முழக்கங்களால் அவர் மீது அன்புப் பூமழை பெய்தார்கள்.

நேருவின் சோஷலிசக் கருத்துக்களை மட்டும் ஏன் எதிர்க்கிறீர்கள்? மொழிப் பிரச்னையில் மட்டும் அவர் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் - மற்றதில் வேண்டாமா?

- என்ற பெருந்தலைவரின் முழக்கம், ஏழைகளின் சமதர்ம வேட்கையை மேன்மேலும் தீவிரப்படுத்தியது.

இதே சமதர்ம யாத்திரையைப் பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்திலேயும் - புதுச்சேரி மாநிலத்திலேயும் துவக்கினார். ஏழை பணக்காரர்கள் இடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்தார். அதை நிறைவேற்றிட, காங்கிரஸ் தொண்டர்களும் - காங்கிரஸ் கட்சியும், அல்லும் - பகலும் போராடிடத் திட்டங்களை விளக்கினார் - பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்!

இந்திய மாநிலங்கள் தோறும் ஒரு தமிழன் புரிந்த சமதர்மப் புனிதப் பயணம், மக்களிடையே ஒரு புது உத்வேகத்தைப் புகுத்தியதால் நாடெங்கும் ஒரு பரபரப்புணர்வு வேரோடியது.

காங்கிரஸ் கட்சியிலே சோர்வுற்றிருந்த தொண்டர்களுக்கு எல்லாம் ஒரு புது எழுச்சியும் - இளைஞர்களிடையே ஒரு புத்துணர்ச்சிப் புல்லரிப்பும் தோன்றியதால், காங்கிரஸ் கட்சி நாளும் வளர்ந்து சுறுசுறுப்பாக இயங்கி வந்தது.

## நேரு உடல்நிலை
## டில்லியில் காமராஜர்

புவனேஸ்வரம் மாநாட்டிற்கு வருகை தந்த பிரதமர் நேரு அவர்கள், திடீரென பாரிச வாயுவால் தாக்கப்பட்டார். அதனால் மாநாட்டு மேடைக்கு வர முடியாமல், அவர் அவசர சிகிச்சைக்காக மீண்டும் டில்லிக்குத் திரும்பிச் சென்றார். ஆனாலும், நேரு அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் கலந்து கொள்ளும் சோசலிச சமுதாயக் கோலாகலக் கால்கோள் விழாக் காட்சிகளைக் காண முடியாமல் போய் விட்டதே என்று வேதனைப்பட்டார்.

1964-ஆம் ஆண்டு, மே மாதம் 27-ஆம் நாள், தமிழ் நாட்டிலே தலைவர் காமராஜர் அவர்கள் கிராமந்தோறும் சோஷலிசப் பயணம் சென்று கொண்டிருந்தபோது, ஓர் அவசரச் செய்தி அவருக்கு வந்தது. பிரதமர் நேரு உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அந்த செய்தியைக் கேள்விப்பட்டதும், உடனே காமராஜர் டெல்லி மாநகருக்கு விரைந்தோடினார்!

பெருந்தலைவர் ஏறிச் சென்ற விமானம், பெங்களூர் வானூர்தித் திடலை அடைந்தது. அப்போது கர்நாடக முதலமைச்சராக இருந்த நிஜலிங்கப்பாவும், அதுல்யா கோஷும் அதே விமானத்திற்கு வந்து தலைவருடன் டெல்லிக்குச் சென்றார்கள்.

## பிரதமர் நேரு மறைந்தார்

நடுவழியிலே விமானம் பறந்து கொண்டிருக்கும் போதே, மனிதருள் மாணிக்கமான பிரதமர் நேரு மறைந்து விட்ட செய்தியை வானொலி பரப்பியது. அச்செய்தி அம்மூவரையும் அதிர வைத்தது.

பெருந்தலைவர் காமராஜருக்கு நாவும் வரவில்லை பேச! உடல் வெளியெல்லாம் வியர்த்து, ஏதோ ஓர் அதிர்சசி வந்து தாக்கிய நிலை பெற்றார். விமானத்திலேயே மூவரும் கண்ணீர் விட்டனர்! அதே சோக நிலையிலேயே அவர்கள் டெல்லி போய்ச் சேர்ந்தார்கள். விமான நிலையத்தினுள்ளே காங்கிரஸ் தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவர் ஜி. இராஜகோபாலன்! தலைவரைக் கண்டதும் அவர், கண்ணீர் ததும்பினார்!

நேரு என்கின்ற இந்திய சோஷலிசப் பிதாமகன் - சமதர்ம ஜனநாயகத் தளபதி, காலமான உடனே, குல்ஜாரிலால் நந்தா அவர்கள், தற்காலிகப் பிரதமராகப் பதவி ஏற்றார் என்று ராஜகோபாலன் பெருந்தலைவரிடம் சோகக் கண்ணீர் தவழக் கூறினார்.

காந்திபெருமான் வாரிசான பஞ்சசீலத் தத்துவநாயகன் நேரு அவர்களின் இல்லத்திற்கு மூவரும் விரைந்தார்கள். அங்கே லட்சக்கணக்கான மக்கள் அலைமோதிக் கிடந்தார்கள். அவரவர் இறுதி வணக்கத்தை அப்பெருமகனார் பாதத்திற்குக் காணிக்கையாக்கிட வரிசை வரிசையாகத் திரண்டு, திரள்திரளாகக் கூடி, சோகமே உருவாக நகர்ந்துக் கொண்டிருந்தார்கள்.

அவனி வாழ் தலைவர்களெல்லாம், எல்லாம் அமரராகிவிட்ட நேரு பிரானின் மரணச் செய்தி கேட்டு அந்தந்த நாடுகளில் அனுதாபச் சம்பவங்கள் நடைபெற்ற வண்ணமிருந்தன! மறுநாள் உதயசூரியன் நேரம் தோன்றும்போது, இந்திய மாநிலங்களின் முதல்வர்கள், அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர்கள், கட்சிசாரா அறிஞர் பெருமக்கள், தொண்டரணிகள், படைகள் திரண்டன - நேருவின் வீட்டிற்கு!

இதற்கிடையில், மேதினி வாழ் அரசியல் அதிகார மேதைகள் எல்லாம், இந்தியாவிற்குள் வந்து குவிந்தார்கள்! நேரு அவர்களின் உடலுக்குத் தங்களது இறுதி மரியாதையினையும் - அனுதாபத்தையும் தெரிவித்த வண்ணமிருந்தார்கள்! டெல்லி மாநகரமே துன்பத்தில் துடித்தது! தத்தளித்தது! தீன்மூர்த்தி பவன், மக்கள் சோகத்திற்கிடையே திணறித் தவித்தது!

இந்திய அரசியலின் முடி சூடா மன்னராகத் திகழ்ந்த நேரு பெருமகனாரின் உடல், விடிய விடிய மக்கள் பார்வையிலே காட்சி தந்தது! பெருந்தலைவர் காமராஜருடன் சூழ்ந்த பிற தலைவர்கள் எல்லாம் பேயறைந்த முகமாக அமர்ந்திருந்தனர்.

## இந்திய மண்ணில்

## நேருவின் சாம்பல்!

ஜோதியின் தங்க நிகர் மேனி எரிநெருப்பு அனலிலே கலந்தது.

பாரதத் தாயின் திருமகனான அவர் உயிரோடு இருக்கும்போது எழுதிவைத்திருந்த உயிர்ச் சாசன உயிலின்படி, மனிதருள் மாணிக்கமான நேரு பெருமகனின் சாம்பல், இந்தியமண் முழுவதும் விமானம் வாயிலாகத் தூவப்பட்டது!

உயிர் உள்ளளவும் பாரதத் தாயின் விடுதலைக்காக உழைத்துழைத்து, பலமுறை சிறையேகிய தியாகச் செம்மலான நேரு என்கின்ற மனிதப் புனிதன், இந்தியத் தாயின் பாதங்களிலே மண்ணானார்! இந்திய நாட்டின் காற்றிலே - மண்ணிலே - புகழ் வானிலே - ஊற்றருவிகளின் உண்ணீரிலே இரண்டற இணைந்து, வையத்தின் வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதர் நேரு தெய்வத்துள் கலந்தார்!

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்.**

என்பது திருவள்ளுவர் வாக்கு.

# 52. இந்தியாவின் மானத்தை இருமுறை காத்த காமராஜர்

*பண்டித மோதிலால் நேருவின் பரம்பரை வாரிசான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கி.பி. 1889 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 - ஆம் நாள் பிறந்தார்!*

*ஏறக்குறைய 75 ஆண்டுகள், பாரத மண்ணிலே ஒரு மாமன்னராகப் போல, பிரதமர் குல திலகமாகப் பவனிவந்த நேரு பிரான், 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் மயான மண்ணை ஆளும் சக்கரவர்த்தியானார்! நேருவின் சகாப்தமும் முடிந்தது!*

*பிரதமராகப் பணியாற்றிய நேரு அவர்களின் மரணம், இந்திய மக்களை மட்டுமல்ல, உலகம் முழுவதையும் ஓர் அதிர்ச்சித் திகைப்போடு உலுக்கிவிட்டது! அரசியல் அறவாளர்கள் அனைவரும் ஆறாத் துயரில் ஆழ்ந்தனர்!*

## நேருவிற்குப் பிறகு – யார்?

*மனித நேய அருட்பெருஞ் சோதியான அண்ணல் காந்தி பெருமான் அவர்களால், எனக்குப் பின் ஜவஹர்லால் நேருதான் எனது வாரிசு என்று அறிவிக்கப்பட்ட மனிதருள் மாணிக்கமான நேரு பெருமனார், மறைந்த மனித தெய்வமான காந்தியடிகளின் அரிய இடத்தை ஓரளவு நிரப்பினார்! ஆனால், நேருவுக்குப் பிறகு யார்?*

*இந்தக் கேள்வி, மேதினியிலே ஓர் எதிர் பார்ப்புகளை விளைவித்தது! உலகத்தில் என்ன? இந்தியாவையே குழப்பத்திற்குள்ளாக் கியது!*

*அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்தவர்கள் ஒருவருக்கொருவர் பதவிபிடிச்சண்டைகளும் - அவர்களுக்குள்ளே அணிகளாய், அராஜகங்களும் - கலவரங்களும் - குழப்பங்களும் - காழ்ப்புக் களங்களுமாகிச் செல்வாக்கிழந்து வந்தார்கள்! காங்கிரஸ் கட்சியின் பெயருக்கும் களங்கத்தை விளைவித்தார்கள்.*

அதனால், இந்திய ஜனநாயகமே நிலைகுலைந்து, ராணுவ ஆட்சிதான் உருவாகும் என்ற அச்சம், எல்லா நாடுகளிலும் ஓர் அரசியல் அதிர்ச்சியை விளைவித்தது.

இத்தருணத்தில், காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இடையே, பெரும் பொறுப்புகளும்-கடமைகளும்-நாட்டுணர்ச்சிப் பாசங்களும் அலை மோதின; அதனால் ஒவ்வொரு மாநிலக் காங்கிரஸ் முக்கியத் தலைவர்களுக்கும் ஒவ்வொரு கோணத்திலும் சிந்திக்கும் நிதானம் உருவாயிற்று.

## காமராஜரின் செயற்கரிய செயல்!

அந்தச் சிந்தனைகளை எல்லாம் ஒன்று திரட்டி, ஒரு கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப் பெருந்தலைவர் காமராஜ் தனித் தனியாகச் சந்தித்துக் கலந்தாலோசித்தார்.

தில்லி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 540 பேர்களும், 15 மாநில முதலமைச்சர்களும், ஒவ்வொரு மாநிலத்தின் முக்கிய காங்கிரஸ் தலைவர்களும் ஒன்று கூடி, அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் முடிவைக் காமராஜரிடமே ஒப்படைத்தார்கள்.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த முடிவிலே பெருந்தலைவர் அவர்கள் ஈடுபட்டு, அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களோடு கலந்துரையாடினார்.

யார் யார் பிரதமர் பதவிக்குப் போட்டி போடுவார்கள் என்பதைக் காமராஜர் சிந்தித்தார். முதன் முதலாக மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்துப் பேசினார்; மாளவியா அவர்களைத் தனியே கண்டு உரையாடினார்.

காங்கிரஸ் கட்சி எடுக்கும் முடிவிற்குக் கட்டுப்பட வேண்டும்! முடியுமா? - என்று, காமராஜ் அவர்கள் கேட்டதும், 'நாட்டின் மானம்தான் பெரியது' - பதவிப் போட்டியல்ல! என்று தேசாயும், மாளவியாவும் கூறிய உணர்வை மதித்து ஏற்றுப் பிறகு தாம் மேற்கொண்ட பணிகளிலே தலைவர் காமராஜ் தீவிரமாய் ஈடுபட்டார்.

எல்லா மாநிலக் காங்கிரஸ் முதலமைச்சர்கள் கூட்டம் கூடியது. அதற்குப் பெருந்தலைவர் காமராஜ் தலைமை வகித்தார். பிரதமர் தேர்தல் மூலம் நாட்டின் ஒற்றுமையை உருவாக்கிடத் தலைவர் காமராஜ் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

## அடுத்த பிரதமர் யார் எப்படி?

அடுத்த பிரதமர் மொரார்ஜி தேசாயா? லால்பகதூர் சாஸ்திரியா? என்ற வினா நாட்டிலே எழுந்தது. நாட்டின் பத்திரிகைகளும் அதே கேள்வியை எழுப்பின. இந்திய பிரதமர் பதவிக்குரிய போட்டிகளைத் தவிர்க்க வேண்டும். ஒரு மனதாகவே பிரதமரைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தலைவர் காமராஜ் அரும்பாடுபட்டுப் பணியாற்றினார்.

இலால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே போட்டி இல்லை என்பதைக் காமராஜ் அவர்கள் இறுதி நேரத்திலே உணர்ந்தார். எனவே, அவரையே பிரதமராகத் தேர்தெடுக்கவேண்டும் என்று முடிவெடுத்தார் காமராஜர்!

இந்த இறுதிமுடிவைத் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் தலைவர் தெரிவித்தார். அதற்குப் பின்பு மொரார்ஜி தேசாய் பத்திரிகை நிருபர்களிடையே பேசும்போது, ''சாஸ்திரியே பிரதமராக வர வாய்ப்பிருக்கிறது'' என்று தேசாய் வாயாலேயே காமராஜர் அறிவிக்கச் செய்தார்.

## காமராஜ் பேசுகிறார்!

1964 - ஆம் ஆண்டு ஜூன்மாதம் 2-ஆம் நாள், நாடாளுமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. மற்ற மாநில முதல் மந்திரிகளும், காங்கிரஸ் முக்கியத் தலைவர்களும் அதே கூட்டத்தில் பார்வையாளர்களாக வந்து அமர்ந்திருந்தார்கள். பத்திரிகை நிருபர்களும், அயல் நாட்டுத்தூதுவர்களும், வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களும், மாநிலக் காங்கிரஸ் தலைவர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையாளர் பகுதிகளிலே குவிந்திருந்தார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அந்த அவையிலே பேசியபோது, ''நாமெல்லாம் போற்றிப் பாராட்டி வந்த காந்தியடிகள் வாரிசு, நேருஜி அவர்கள் மறைவுக்குப் பின்பு கூடியுள்ளோம். நமக்குள்ளே கடமையை நிறைவேற்றக் கூட்டுத் தலைமையும் - கூட்டுப் பொறுப்பும் - ஒருமனதான முடிவும் தேவைப்படுகிறது.''

''நேருஜி என்ற குடையின் கீழ் இது வரை பணியாற்றினோம். அவர் சிந்தனையும் - செயலுழைப்பும் நமக்குக் கிடைத்தது. நாம் என்ன செய்தாலும் அவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை இருந்தது. மக்கள் நம்மை மன்னித்தார்கள். அந்த நிலை இனி இல்லை.

ஆகவே, எதிர்காலத்தில் நாம் எல்லோரும் மிகவும் கவனத்துடனும் - எச்சரிக்கையுடனும் பணிபுரிய வேண்டும்'' என்ற வேண்டுகோளை விடுத்தார்.

## இந்தியாவின் இரண்டாவது பிரதமர்

உடனே, தற்காலிகப் பிரதமராக இருந்த குல்ஜாரிலால் நந்தா அவர்கள், நாடாளுமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவராக லால்பகதூர் சாஸ்திரியின் பெயரை முன் மொழிந்தார். மொரார்ஜி தேசாய் அதை வழி மொழிந்தார்.

பின்னர் ஒரு மனதாக, லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், இந்திய நாடாளுமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். உடனே, பெருத்த கையொலிகள் எழுந்தன! அந்த ஓசை அடங்கிட சில நிமிடங்கள் ஆயின!

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், பாரதப் பிரதமர் ஆனார்! மொரார்ஜி தேசாய், எஸ்.கே. பாட்டில், ஜெகஜீவன்ராம், வி.கே. கிருஷ்ண மேனன் ஆகியோர் பிரதமர் சாஸ்திரியைப் பாராட்டியும் - வாழ்த்தியும் - பேசினார்கள். **இந்தியாவின் இரண்டாவது பிரதமரைப் பெருந்தலைவர் காமராஜர்தான் இந்திய மக்களுக்குத் தேர்ந்தெடுத்து அரும்பணியாற்றி நமக்கு அவரை வழங்கினார்!**

தமிழகத்தின் தனிப் பெருந்தலைவராக நடமாடியவரும் - அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியினிலே காலா காந்தி என்று அழைக்கப்பட்டவருமான பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், **பிரதமர் பதவிக்கு எந்தவிதப் போட்டியோ, கலவரமோ, குழப்பமோ இல்லாமல், எல்லாரும் ஒரு மனதாக விரும்பிய வண்ணம் செயலாற்றி இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றி, இரண்டாவது பிரதமராக லால்பகதூர் சாஸ்திரியை நாட்டிற்குக் கொடையாகக் கொடுத்தார்.**

இந்த அரும்பெரும் உழைப்பால், இந்திய ஜனநாயகத்தை உலக அரங்கிலே பெரும் புகழோடு, காமராஜர் அவர்கள் நிலைநாட்டினார்.

## சாஸ்திரி

## தியாகம்!

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களைப் போலவே, சிறு வயதில் தனது தந்தையை இழந்தவர். ஈன்றெடுத்த தாயாருடன் வறுமை வேக்காட்டில்

வெந்து நொந்து வாழ்ந்தவர். பாஞ்சால சிங்கம் என்று பாரத மக்களால் போற்றிப் புகழப்பட்ட லாலா லஜபதிராய் அவர்களால், காசிமா நகரிலே ஆரம்பிக்கப்பட்ட மக்கள் ஊழியர் சங்கத்திலே அறுபது ரூபாய் சம்பளத்திற்கு உறுப்பினரானவர் லால்பகதூர் சாஸ்திரி!

பெருந்தலைவர் காமராஜ் சாதாரண ஊழியராகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, படிப்படியாகத் தனது உண்மையான உழைப்பாலும், தியாகத்தாலும், ஒழுக்கத்தாலும், தேசிய உணர்ச்சியாலும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக, முதலமைச்சராக, அகில இந்திய காங்கிரஸ் கட்சிப் பெருந்தலைவராக முன்னேறியதைப் போலவே, லால்பகதூர் சாஸ்திரியும் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து - இறுதியாக அவர் உறுப்பினராகச் சேர்ந்த காசி மக்கள் ஊழியர் சங்கத்திற்கே தலைவரானார்.

சுதந்திரப் போராட்டக் காலங்களிலே மாறுவேடங்கள் அணிந்து, ரைனா என்ற ரயில் நிலையத்திலே இறங்கித் தலைமறைவு வாழ்வு நடத்தியவர்! - காமராஜரைப் போலவே காங்கிரஸ் கட்சிப் போராட்ட வீரர்களின் சுற்றறிக்கைகளோடு இரவு பகலாக அலைந்து, காங்கிரஸ் வீரர்களுக்குப் போராட்ட வியூகங்களை வகுத்துக் கொடுத்து, ஊக்கத்தையும் - ஆக்கத்தையும் அளித்தவர் சாஸ்திரி!

சாஸ்திரி அவர்களின் போராட்டப் பணிகள் முடிந்தவுடன் பகிரங்கமாகப் போலீசாரிடம் தம்மை ஒப்படைத்துக் கைதாகி, பிறகு பலமுறைகள் மீண்டும் மீண்டும் சிறையேறி, வெளிவந்து உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவரானாவர் - காமராஜரைப் போலவே!

உத்தரப்பிரதேசக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களிலே அவரும் ஒருவராகி, நாடாளுமன்றக் காங்கிரஸ் குழுவுக்கும் அவர் தலைவரானவர். பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்கள் தலைமையிலமைந்த உ.பி. அமைச்சரவையில் காவல்துறை, போக்குவரத்துத் துறைகளுக்கு அவர்அமைச்சரானார்!

காங்கிரஸ் கட்சித் தொண்டு ஒன்றே பெரிதென நம்பி மீண்டும் நேருவுடன் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்குச் செயலாளர் ஆனவர் சாஸ்திரி! பிரதமர் நேரு அவர்கள் அமைச்சரவையிலே 1952-ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராகி, இரயில்வே அமைச்சரானவர் - லால்பகதூர் அவர்கள்.

தமிழகத்தில் ஏற்பட்ட அரியலூர் ரயில் விபத்தில் 144 பேர்பயணிகள் இறந்தார்கள். அதற்குப் பொறுப்பேற்று 1956-ஆம் ஆண்டில்சாஸ்திரி அவர்கள் தனது ரயில்வே அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்!

1957-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவர். மத்திய அமைச்சரவையில், பிரதமர் நேரு தலைமையின் கீழ் மீண்டும் தொழில் அமைச்சரானவர். கோவிந்த வல்லப பந்த் அவர்கள் மரணமடைந்ததால், மீண்டும் அவர் மத்திய அரசு உள்துறை அமைச்சரானார்.

காமராஜ் அவர்களது கே. பிளான் திட்டம் வந்தவுடன், தனது அமைச்சர் பதவியையும் விட்டு விலகியவர். பிரதமர் நேரு அவர்கள் உடல் நலமற்றிருந்தபோது, அவரால் இலாகா இல்லாத மத்திய மந்திரியாக்கப்பட்டார் - சாஸ்திரி.

1964- ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் நேரு பெருமகனார் இறந்ததும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் இந்திய நாட்டிற்குப் பிரதமராகப் பதவி ஏற்றவர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள்.

## பிரதமர் பதவிக்கு காமராஜ் வியூகம்

**எத்தகைய ஒரு தியாக சீலர், தன்னலமற்றவர், மக்கட் தொண்டு மாண்பாளர், பொது வாழ்வுக்கு இலக்கணம் வகுப்பவர், பிரதமர் பதவிக்கு வரவேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜர் விரும்பினாரோ, அத்தகைய ஒரு தேச பக்தரைத் தேடிக் கண்டு பிடித்து, ஒருமனதாக அவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்து நமக்குத் தந்தவர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்.**

**நான்கு பேருக்கு ஆனது நமக்கும் ஆகட்டுமே என்ற ஏனோ தானோ நடுநிலைப் பொறுப்பிலே காமராஜர் நில்லாமல், தன்னைப் போலவே ஒரு தன்னிகரற்ற தலைவரை, ஏழை பங்காளரின் தோழரை, எளிமையான வாழ்வு வாழ்பவரையே, அவர் பாரத பிரதமராக்கிட அரும்பாடு பட்டார் என்றால் - அது தேச பக்தியின் சிகரத்தில் நிறுத்தும் செயலல்லவா!**

லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், பெருந்தலைவர் காமராஜரைக் கலந்துரையாடி பிற மத்திய அமைச்சர்களை நியமித்தார். அந்த மந்திரி சபையில் மொரார்ஜி தேசாய் அமைச்சராகச் சேர மறுத்து விட்டார். காரணம், மத்திய நாடாளுமன்றக் காங்கிரஸ் கட்சித்

தலைவர் தேர்தலில், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காமராஜர் அவர்கள் சந்தித்து முடிவு எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் காமராஜ் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

காங்கிரஸ் கட்சியின் இந்த ஒருமித்த முடிவுக்கு எதிர்ப்பு எழுப்பினார் மொரார்ஜி தேசாய். கட்சி ஜனநாயகம் அழிக்கப்படுவதாக அவர் ஆத்திரப்பட்டார்.

''பிரதமரைத் தேர்வு புரியும் உரிமை தனி ஒரு தலைவரிடம் ஒப்படைப்பது தகாது. உறுப்பினர்கள்தான் பிரதமரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த உரிமையைப் பறிக்க மூத்த தலைவர்களுக்கு அதிகாரம் இல்லை'' என்றார் தேசாய்!

தலைவர் காமராஜ் அவர்கள், மொரார்ஜி தேசாயுடன் மோதி பிரச்னையைப் பெரிதாக்க விரும்பாமல், மூத்த தலைவர்கள் ஆலோசனையின் படியும் - நேருவுக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு ஏற்பவும் நடந்து - லால் பகதூரை மத்திய அமைச்சகக் குழுத் தலைவராக்கினார்.

## காமராஜர் சேவை நம்பிக்கை!

பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள் இறந்த அதிர்ச்சி நாடெங்கும் ஆழ்ந்திருந்த சோக இருளைப் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் தொண்டுகள், காங்கிரஸ் கட்சிக்காக அவர் ஆற்றிய வளர்ச்சிப் பணிகள், முதியவர்கள் ஆட்சியை விட்டு விலகி, இளைஞர்களுக்கு வழியமைத்துக் கொடுத்த அவரது சீரிய சேவைகள், இவை எல்லாம் இந்திய மக்களிடையே காங்கிரஸ் கட்சி இனிமேல் கலகலத்துப் போகாது என்ற நம்பிக்கையை நாட்டில் நாட்டியது.

அவருடைய அறிவுக் கூர்மையால், சிந்தனை வளத்தால், அல்லும் - பகலும் அயராது - ஓயாது உழைத்த உழைப்பால், காமராஜ் அவர்கள் பெருந்தலைவர் பதவிக்குரிய தனது புகழை மேலும் வளர்த்துக் கொண்டார்.

காமராஜ் அவர்களால் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்குரிய நற்பெயர் நாளும் வளர்ந்தது. அந்தப் புகழால், தலைவர் காமராஜ் வளர்ந்தார். காங்கிரஸ்தான் காமராஜர்' காமராஜர்தான் காங்கிரஸ் என்ற வானளவு உயர்நிலை வளர்ந்தது.

## பஞ்சாப் கெய்ரோன் கொலை! அதிர்ச்சி!

இந்த நேரத்தில், பொது மக்கள் வரிப்பணத்தை ஊழல் செய்த பஞ்சாப் மாநில முதலமைச்சர் கெய்ரோன், நடுவீதியிலே சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம், காங்கிரஸ் தலைவர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் - அச்சத்தையும் உருவாக்கியது.

அந்த அதிர்ச்சியைக் காமராஜ் அவர்கள் அற்புதமாக சமாளித்ததைக் கண்ட காங்கிரஸ் தலைவர்கள், காமராஜ் தலைவராக உள்ளவரை, இந்தியாவுக்கும் - அதன் மக்களுக்கும் - காங்கிரஸ் கட்சிக்கும் எப்படியும் நல்வாழ்வு கிடைக்கும் என்று நம்பினார்கள்.

ஜனநாயகச் சிந்தனையாளரான நேரு அவர்கள் இல்லையே என்ற மனக்குறை - அச்சம் மக்களிடையே சிறிது சிறிதாக மறையும் நிலையேற்பட்டு, ஜவஹர்லால் நேருவின் புகழுக்குரிய தொண்டுகளைச் செய்து வந்த பிற தலைவர்களும் உண்டு! அவர்களுள் முன்னவராக, முதல்வராகக் காமராஜர் தோற்றமளித்தார்.

## துர்காபூர் மாநாடு!

1965 - ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 9-ஆம் நாள், அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் 69-வது மாநாடு துர்காபூர் நகரில் நடந்தது. அதற்குப் பெருந்தலைவர் காமராஜர் தலைமை வகித்தார்! பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அந்த மாநாட்டில் முதன் முறையாக, பிரதமராகக் கலந்து கொண்டார்.

தலைவர் காமராஜ் அவர்கள், சீன ஆக்ரமிப்பும் - பாகிஸ்தான் போர் வெறியும் நாட்டை எபபடி ஆபத்திற்குள்ளாக்கும் என்பதை விவரித்து, விளக்கமாக அந்த மாநாட்டில் எச்சரித்தார்.

''மக்களிடையே உள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், உணவுப் பொருட்கள் நெருக்கடிகள், பற்றாக்குறைகள், மக்களிடையே உள்ள அறியாமை உணர்வுகள், அனைத்தையும் போக்க மாநில அரசுகள் முயற்சித்து வெற்றிபெற்றால்தான், எதிர்காலத்தில் மக்கள் காங்கிரஸ் கட்சியை நம்புவார்கள்'' என்று தனது தலைமையுரையில் விளக்கினார் காமராஜர்! அதற்கு நமது பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அயராது உழைப்பார் என்று, அவர் மாநாட்டு மக்களிடையே நம்பிக்கை அளித்தார்.

## போர் முனையில் காமராஜர்!

மாநாடு முடிந்த பின்பு, இந்தியா - பாகிஸ்தான் போர் முனைப் பகுதிகளை எல்லாம் காமராஜர் பார்வையிட்டார். நாட்டிற்காக உழைக்கும் ராணுவ வீரர்களைப் பாராட்டிப் பேசிக் களியூட்டினார் தலைவர்!

1965-ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் நடைபெற்ற போர் நிதிக் கூட்டத்திற்குப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியை அழைத்துக் கொண்டு தலைவர் காமராஜர் தமிழகம் வந்தார்.

போர்நிதியளிப்புக் கூட்டம் முடிந்த பின்பு, சென்னையிலே உள்ள ஆபட்ஸ்பரிமாளிகையில் காங்கிரஸ் ஊழியர் கூட்டம் நடந்தது.

பிரதமர் லால்பகதூர் அந்தக் கூட்டத்தில் பேசும்போது, ''போர்க் களத்தில் நமது ராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், மத்திய அரசு எடுத்த அரும்பணிகள்தான்! அந்த நடவடிக்கைகளை எடுக்கத் தலைவர் காமராஜர் கூறிய ராஜதந்திர யோசனைகள்தான் என்று காமராஜரைப் பாராட்டினார் சாஸ்திரி!

இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு பிரதமர் சாஸ்திரி மிண்டும் சென்னை மாநகர் வந்தார். சென்னை ஆளுநரின் இராஜ்பவனில், நிருபர் கூட்டம் நடை பெற்றபோது, ஒரு நிருபர் பிரதமர்லால்பகதூர் சாஸ்திரி அவர்களை நோக்கி, ஒரு வினாவை எழுப்பினார்.

''தற்போதைய ஒப்பந்தத்தை இன்றைய இலங்கை ஆட்சியிடம் செய்து கொண்டீர்கள். அடுத்து வேறு ஓர் ஆட்சி அங்கு வந்தால், இந்த ஒப்பந்தத்தை அந்த ஆட்சி மதித்து நிறைவேற்றுமா? என்று அந்த நிருபர் கேள்வியைத் தொடுத்தார்.

நிருபர் வினாவிற்கு விடையளிக்கப் பிரதமர் சாஸ்திரி சற்றுத் தயங்கினார்! உடனே, அருகே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமது பதிலைக் கூறினார்.

"Don't go and print any such suggestions in the paper. This is an agreement signed by two Democratic governments. Just as our Democratic government in India would honour this agreement, we expect any succesor government in Ceylon to honour this agreement."

உடனே, பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், அந்த நிருபரிடம், "I agree with Kamaraj" என்றார் மகிழ்ச்சியுடன்!

உள்நாட்டு விவகாரங்களில் மட்டுமன்றி, வெளிநாட்டுப் பிரச்னைகளிலும் தலைவர் காமராஜ் அவர்களின் அரசியல் ஞானம் தெளிவாகவும் - திட்ட வட்டமாகவும் இருந்தது என்பதற்கு இந்தச் சான்று ஒன்று போதாதா? காமராஜர் அவர்களின் இந்த மதிநுட்பப் பேச்சை எப்போதும்நாம் மறக்க முடியாது அல்லவா?

இத்தகைய ஓர் அரசியல் ராஜ தந்திரியை, அவருக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது என்று சிலர் கேலி பேசினார்கள்! கூட்டங்கள் தோறும் தமிழக எதிர்க்கட்சிகளும் அவரைக் கிண்டல் செய்தன! இத்தகைய திறனுடைய, சிறந்த ஆங்கில சிந்தனையுடைய, இலக்கணம் வழுவா ஒரு மதியூகியை ஆங்கிலம் அறியாதவர் என்பதை, நாம் கூறுவதைவிட பத்திரிகைகள் அதன் நிருபர்கள் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

### காமராஜர் எனது வழிகாட்டி!

''நான் பிரதமராவதுவதற்கு மட்டுமன்று; எனக்கு வழிகாட்டியாகவும் காமராஜர் விளங்குகிறார்.''

போர்முனையில் எதிரிப் படைகள் பின்வாங்கி, நமது படைகள் முன்னேற, தலைவர் காமராஜர் அவர்கள் பாகிஸ்தான் - இந்திய போர் முனைப் பகுதிகளைச் சென்று பார்த்ததால் ஏற்பட்ட பயன்களேயாகும். எனவே பெருந்தலைவர் காமராஜ் எனது உடன் பிறவா சகோதரராக இருக்கிறார்'' என்று பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பேசியபோது, தமிழக மக்கள் காமராஜருடைய தேசத் தொண்டுகளை எண்ணி மேலும் பெருமிதமடைந்தார்கள்.

### இந்தி எதிர்ப்பு போர் முரசு!

இந்தக் காலகட்ட அரசியல் சூழ்நிலையில், 1965-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் நாள், தமிழக மாணவர்களது இந்தி எதிர்ப்புக்குழு, இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து தமிழகத்தில் போர் முரசு கொட்டியது!

ஜனவரி - 26-ஆம் நாள் திராவிட முன்னேற்றக்கழகம், இந்தியக் குடியரசு நாளை துக்கநாளாக அறிவித்து, தனது இந்தி எதிர்ப்புணர்ச்சியை எதிரொலித்தது. சென்னை மாநகரின் சர்வகட்சிக் குழு மாணவர்கள், அப்போதைய முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களிடம் தங்களது கோரிக்கைகளைக் கொண்ட மனுவை அளிக்கக் கோட்டையை நோக்கி ஊர்வலமாகச் சென்றார்கள்.

முதல்வர் எம். பக்தவத்சலம் அவர்கள், இந்தி எதிர்ப்பு மாணவர்களிடம் மிகக் கடுமையாக நடந்து கொண்டதால், மாணவர்கள் போராட்டம் உருவாகி, போலீஸ் தடியடிகள், கண்ணீர்ப் புகைப்பிரயோகங்கள், துப்பாக்கி வேட்டுகள், இராணுவப் படைக்குவிப்புகள் என்ற அளவிற்கு வளர்ந்து, பிறகு அது பொதுமக்கள் போராட்டமாக மாறிவிட்டது.

நூற்றுக் கணக்கான மக்கள் துப்பாக்கித் தர்பாரால் பிணமானார்கள், காவல்துறையில் சிலர் எரிக்கப்பட்டார்கள் என்ற நிலைக்கு கோரமான போராட்டக்களமாக உருவெடுத்தது தமிழ்நாடு!

இந்தோனேஷியப் புத்த சாமியார்கள் தங்களது மதப் போராட்டத்திற்காக உயிரோடு தீக்குளித்துத் தியாகம் புரிந்தது போல, தமிழகத்திலே பத்துக்கும் மேற்பட்டோர் தீக்குளித்தும் - நஞ்சுண்டும் உயிர்த் தியாகம் செய்தார்கள்! சுருக்கமாகக் கூறுவதானால், உலகில் அன்று வரை அவனது தாய்மொழிக்காக எந்த நாடும் அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தைச் செய்ததாக வரலாறு இல்லையெனும் நிலைக்கு தமிழகம் கொந்தளித்து விட்டது.

பெருந்தலைவர் காமராஜர் அப்போது தமிழக முதல்வராக இருந்திருந்தால், மொழிப் பிரச்னை இத்தகைய ஓர் எரிமலை வெடிப்பாக மாறி, அக்னிக் குழம்புகளை அள்ளி வீசும் எரியோட்ட வெள்ளமாக உருவெடுக்க வழி செய்திருக்க மாட்டார்.

# 53. 1967 - தேர்தல் காங்கிரஸ் தோற்றது

தமிழ் நாட்டின் முதலமைச்சராக பக்தவத்சலம் இருந்தபோது, இந்தி எதிர்ப்புப் போர், அவரது ஆட்சியில் இந்திய வரலாற்றின் கறைபடிந்த சுவடுகளாகப் பதிந்து விட்டன. தமிழகம், அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, இப்படிப்பட்ட தீக்குளிப்புக்களை, மொழிப் போர்ப்பிணங்களை, மொழிக்காகப் பயன்படுத்துதப்பட்ட துப்பாக்கிப்போர் துந்துபிகளை, ஏறுக்குறைய பதினெட்டு நாட்களாகத் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்குகளே இயங்காத நிலைகளை - தமிழ்நாட்டு வரலாறும் சரி, இந்திய வரலாறும் சரி, மொழித் தியாகத்திற்காக அன்றுவரை கண்டதே இல்லை. இந்த நிலையை ஒழுங்குபடுத்தி, காங்கிரசுக்கு ஏற்படுத்தப்பட்ட அந்தக் களங்கக் கறையைக் கழுவித் துடைத்திட பெருந்தலைவர் காமராஜர் மீண்டும் தமிழக அரசியலிலே ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவானது.

இந்த நிலையில், தமிழக அரசியல் வரலாற்றில் - 1967 - ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் மிக முக்கியமான ஓர் அரசியல் சவாலாக அமைந்துவிட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் மனங்களிலே, பக்தவத்சலம் ஆட்சியின் இரும்புக் கரம் அடக்குமுறைகள், துப்பாக்கிச் சூடுகளால் விழுந்த பிணங்களின் ரண களங்கள், வயிறார மக்களுக்கு உணவும், அரிசியும் வழங்க முடியாத ஆறவுன்ஸ் அரிசிக் காட்சிகள், மக்களிடையே மனப்பாடங்களாகப் பதிந்துவிட்டன! இவற்றைச் சமாளித்துத் தேர்தல் நடத்தும் பொறுப்பு நிலை, பெருந்தலைவர் காமராசருக்குத் தலைச்சுமைபோன்ற பெரும்பாரமாகிவிட்டது!

இந்த அரசியல் பலவீனங்களால் தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் எதிர்ப்பு அலைகள் எழும்பி மோதிக்கொண்டிருந்தன! எதிர்க் கட்சிகளின் ஓட்டுக்களை தி.மு.க.கழகம் சிதறவிடாமல் கூட்டணி அமைத்துக் கொண்டு காமராஜர் சக்தியிடம், அதாவது காங்கிரஸ் கட்சியிடம் மோதியது.

தி.மு.க. கூட்டணியில், ராஜாஜியின் சுதந்திரா, காயிதே மில்லத்தின் முஸ்லீம் லீக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, பார்வர்டு பிளாக், நாம் - தமிழர் இயக்கம், ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம், பிரஜா சோஷலிஸ்ட், ஆகிய கட்சிகள் எல்லாம் இணைந்தன. தேர்தல் நெருங்கிக் கொண்டே வரும்போது, நடிகவேள் எம்.ஆர்.ராதா, புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்ட சம்பவம் தி.மு.கழகத்துக்கு வாக்கு சேர்க்கும் ஒரு பெரும்பலமாக அமைந்துவிட்டது.

இவ்வளவு சக்திகளும் ஒன்று கூடி யாரை எதிர்த்தன தெரியுமா? காமராஜரால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் கட்சியை அன்று: பக்தவத்சலம் துப்பாக்கி வேட்டுப் பிணங்களாலும், ஆறவுன்ஸ் அரிசி கொடுத்துச் செயற்கை அரிசிப் பஞ்சத்தை உருவாக்கியதாலும், காங்கிரஸ் ஆட்சி, பலவீனப்படுத்தப்பட்டு, பக்தவத்சலம் பொறுப்பிலே இருந்த காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்காக உருவான எதிர்க்கட்சிக் கூட்டணி சக்தி அது!

பெருந்தலைவர் காமராஜர் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்திட, நேரு பெருமகனுக்கு நேர்ந்துள்ள கட்சி நெருக்கடியிலே இருந்து அவரைக் காப்பாற்றிட, அவர் டில்லிக்குச் சென்று விட்டதற்குப் பிறகு வளர்க்கப்பட்ட, தமிழகப் பக்தவத்சலம் காங்கிரசை எதிர்த்திட உருவான தேர்தல் எதிர்க்கட்சி தி.மு.க. கூட்டணி அது.

அத்தகைய ஓர் அரசியல் நெருக்கடியான காலம் 1967 - பொதுத் தேர்தல் வந்த நேரம். எனவே பெருந்தலைவர் சொட்டை சோடையான காரணங்களைக் கூறாமல், வீர உணர்ச்சியோடு இருக்கும் தனது காங்கிரஸ் ஜனநாயகப் போர்ப்படைகளைத் திரட்டிக் கொண்டு, தேர்தல் வியூகங்களை வகுத்து, 1967 களத்தினை குருக்ஷேத்திரம் என்று எண்ணி அவர் பாரத தேர்தல் போரைத் தொடுத்தார்!

இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பலத்தை எதிர்த்து தி.மு.க. கூட்டணிக் கட்சிகளில் தேர்தல் இறுதிக் கூட்டம் மெரினா கடற்கரையிலே நடந்தது. அக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய மூதறிஞர் ராஜாஜி, தனது இன மக்களிடம் ஓட்டுக் கேட்டபோது, காங்கிரஸ் கட்சி எனும் விஷ விருட்சத்தைத் தமிழ்நாட்டில் வேரோடு வீழ்த்திட, வேரடி மண்ணோடு பெயர்த்தெறிய, பிராமணர்கள் தங்களது ஓட்டுக்களை, தி.மு.க. கூட்டணிக்கே போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

'திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குப் போடச் சொல்கிறேன் என்று தயக்கமடைய வேண்டாம். பொதுமக்கள் எதிரி காங்கிரஸ் ஆட்சி. அதை ஒழித்துக் கட்ட வேண்டியது நமது கடைசிக் கடமை. அதனால், பூணூலைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு பிராமணர்கள் தங்களுடைய ஓட்டுக்களைப் போடுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று மூதறிஞர் ராஜாஜி பிராமண மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

பெருந்தலைவர்காமராஜின் அரசியல் பலத்தை அழித்தொழிக்கும் இறுதிக் கடமையாக இந்த வேண்டுகோளை, அவர் தனது இன மக்களுக்கு அடையாளம் காடடினார்! அந்த மக்களும் அவரது கோரிக்கையின் ஆழத்தைப் புரிந்து கொண்டு, தி.மு.க. கூட்டணிக்கே தங்களது வாக்குகளைக் குவித்து, தி.மு.க. அணிக்கே வாக்களித்தார்கள் என்பது வரலாற்று வஞ்சகமாக விளங்கியது.

நடைபெற்ற 1967தேர்தலில், 233 சட்டமன்றத் தொகுதிகளிலே காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு 49 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. ஆனால், 173 இடங்களில் மட்டுமே களம் கண்ட தி.மு.கழகம் 138 இடங்களிலே வாகைசூடி, தமிழக ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது.

தேர்தல் புலி, கிங்மேக்கர், என்றெல்லாம் புகழப்படும் பெருந்தலைவர் காமராஜர், தனது பிறந்த மண்ணான விருதுநகர் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட்டார்! அவரை எதிர்த்து நின்றவர், ஒரு கல்லூரி மாணவர் மட்டுமன்று, பக்தவத்சலம் இரும்புக் கரத்தால் அடக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போர் மாணவர் தளபதிகளிலே ஒருவரான பெ. சீனிவாசன் என்பவர் ஆவார். அவர், பெருந்தலைவர்காமராஜரைத் தேர்தல் களத்தின் வெற்றி வாய்ப்பைத் தடுத்துவிட்டார்.

அது மட்டுமே காரணமன்று, பெருந்தலைவரின் உட்கட்சித் துரோகிகள் சிலர், அவரை ஒரு ஜீப் கார் விபத்துக்குள்ளாக்கி விட்டார்கள். அதனால் அவரது கால் எலும்பு முறிந்து, தேர்தல் வேலைகளைச் செய்ய முடியாமல் படுத்த படுக்கையோடு இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற்கேற்ப, பக்தவத்சலம் வளர்த்த காங்கிரசுக்கு இடிமேல் இடி வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

1967-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள் எல்லாரும் தோற்றார்கள் - பூவழகன் என்ற ஓர் அமைச்சரைத் தவிர!

தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றிபெற்றதைப் பெருந்தலைவர் காமராஜர் மனமார வரவேற்றார். 'ஜனநாயக நாட்டில் மக்கள் வழங்கிய தேர்தல் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன்' என்று தி.மு.க. ஆட்சியமைப்பதை வாழ்த்தினார்.

அத்துடன் நிற்காமல், காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். ''ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் ஆள்வதற்குப் புதியவர்கள். ஓர் ஆறுமாதம் அவர்களுக்கு அவகாசம் தரவேண்டும். அவர்களைப் பற்றி ஏதும் குறைகூறிக் கொண்டிருக்க வேண்டாம். இந்த ஆறுமாதக் காலத்திற்குள் அவர்களது ஆட்சி எப்படி நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்கிறது என்று பார்ப்போம்! காங்கிரஸ் தொண்டர்கள் வாயைத் திறக்க வேண்டாம்! போகப் போக அவர்கள் எப்படி ஆட்சி நடத்துகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்பதுதான் அரசியல் தருமம்! ஜனநாயகத்துக்கும் பெருமை. '' என்று காங்கிரஸ் தொண்டர்களைப் பெருந்தலைவர் காமராஜர் கேட்டுக் கொண்டார்.

அறிஞர் அண்ணா அமைச்சர் அவையில் யார் யாரைச் சேர்க்கலாம் என்ற கருத்துரையாடல் அவர்களிடையே நடந்தது. ஏ.கோவிந்தசாமிக்கு அமைச்சர் பதவி தர வேண்டும் என்று கள்ளக்குறிச்சி அருகே உள்ள கச்சராபாளையம் மாரியப்பன் தூது போனார் அண்ணாவிடம்! கலைஞர் காலத்திலே அமைச்சராக இருந்த என்.வி. நடராசன், மனைவி புவனேஸ்வரி அம்மாளை தூது அனுப்பி மந்திரி பதவி கேட்டார்! மறுமுறை அமைச்சர் அவை விரிவுபடுத்தும்போது அதைக் கவனிக்கலாம் என்று அண்ணா அவர்கள் கூறியதற்காக, அந்த அம்மையார் அண்ணாவுக்குச் சாபம் கொடுத்து விட்டுச் சென்றார்.

அறிஞர் அண்ணா அமைச்சரவையில் ஒன்பது பேர்கள்தான் அமைச்சராக இருந்தார்கள். இந்த நிலையில் விருதுநகர் தொகுதியிலே பெருந்தலைவர் காமராஜரைத் தோற்கடித்த இந்தி எதிர்ப்பு மாணவர் தலைவர்களிலே ஒருவரான விருதுநகர் பெ. சீனிவாசன், தனது மற்ற மாணவர்களுடன் சென்று, அண்ணா, எனக்கு மந்திரியாகும் தகுதி இல்லையா?'' என்று, பயந்தும், பணிவாகவும், கனிந்த குரலிலும் அண்ணாவைக் கேட்டார்.

அதற்குப் பேரறிஞர் அண்ணா அவருக்குப் பதில் கூறியபோது, "Sreenivasan, you have all the Qualifications to be come a minister. But, in any view, you have a dis qualification; that is you are defeated Mr. Kamaraj. I am not ready to celebrate a great leader's defeat. If I do so, History will curse." என்று குறிப்பிட்டார்.

''சீனிவாசன், நீ அமைச்சராக வருவதற்கு எல்லாத் தகுதிகளும் உனக்கு இருக்கிறது. ஆனால், எனது நோக்கத்தின்படி நீ ஒரு தகுதியின்மையினையும் பெற்றிருக்கிறாய். காமராஜர் என்ற ஒரு பெரிய தலைவரை நீ தோற்கடித்திருப்பதுதான் அத்தகுதியின்மை. ஒரு மாபெரும் தலைவரின் தோல்வியை நான் விழாவாகக் கொண்டாட விரும்பவில்லை. நான் அப்படிச் செய்தால் சரித்திரம் என்னைச் சபிக்கும்.'' என்று கூறினார்.

அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் மேல் எவ்வளவு மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார் என்பதற்கு வேறு என்ன சான்று இதை விட வேண்டும்? இத்தகைய ஓர் அரிய பண்பாட்டு நிகழ்ச்சி வேறு எங்காவது நடந்துள்ளதா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய சம்பவமாக இது உள்ளது.

இந்த இடத்திலே மட்டுமன்றி இதோ மற்றுமோர் சம்பவம். காமராஜர் தமிழ்நாட்டின் முதலமைச்சரான பிறகு, குடியேற்றம் சட்ட மன்றத் தொகுதியிலே போட்டியிட்டார். மற்ற கட்சிகள் அவரை எதிர்த்ததோடு, வேட்பாளர்களையும் நிறுத்தின.

அப்போது தி.மு.கழகம், விறுவிறுப்பாகவும், வேகமாகவும், பலமாகவும் வளர்ந்து கொண்டு வந்த கட்சியாக இருந்தது. காமராஜரை அப்போதே எதிர்த்திருக்கலாம்! காரணம், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக மதிக்கப்பட்ட ஒரே தகுதியைத்தான் அவர் பெற்றிருந்தார்! எனவே, அண்ணா நினைத்திருந்தால் அவரை, அப்போது எதிர்த்திருக்க முடியும்.

செய்தாரா அண்ணா? இல்லை; மாறாகத் தனது 'திராவிட நாடு' பத்திரிகையில் காமராஜரைப் பற்றிப் பாராட்டி எழுதியபோது, 'குணாளா, குலக்கொழுந்தே' என்று போற்றினார். காமராஜர் ஓர் எழுதப்படாத நோட்டுப் புத்தகம்' என்றார்! எனவே, அமைச்சரவை அமைத்த நேரத்தில் சீனிவாசன் மந்திரிப் பதவி கேட்டபோது மட்டும்தான் காமராஜரை மதித்துப் பாராட்டினார் என்பதில்லை. காமராஜர் சாதாரண ஒரு கட்சித் தலைவராக இருந்தபோதும் அவரை மதித்துப் பாராட்டி மகிழ்ந்த மனிதாபிமானமுள்ளவர் என்பதனை, உலகுக்கு உணர்த்தினார்!

அண்ணா, அமைச்சரவை அமைந்தபோது, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, சென்னைத் தீவுத் திடலிலே தமிழ்நாட்டு அரசு மிகக் கோலாகலமாக நடத்தியது. பல லட்சக்கணக்கான மக்கள் சென்னையிலே கூடி, தங்களது தாய்மொழி பற்றின சிறப்பைப் பெருமையாக உலகுக்குத் தெரியப்படுத்தினார்கள். அதே போல உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் எல்லாரும் வருகை தந்து அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்!

அந்த உலகத் தமிழ் மாநாட்டைத் திறந்து வைத்தவர் யார் தெரியுமா? இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகீர் உசேன் ஆவார். அந்த மாநாட்டிற்குத் திரைகடல் தாண்டி வாழ்ந்திருந்த தமிழ் நாட்டுக்குத் திரண்டு வந்த - தமிழ்ப் பெரு மக்களையும், தமிழ் படித்த உலகத் தமிழ்மேதைகளையும், கட்சி சார்பற்ற தமிழ்நாட்டின் பல லட்சம் மக்களையும் வருக வருக என்று வரவேற்றுத் தமிழ் முரசம் கொட்டியவர் யார் தெரியுமா? தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவர் காமராஜர்தான், எனும்போது இன்பத் தேன்வந்து பாயுதல்லவா நம் காதுகளிலே!

தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டிருந்தபோது, 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அவர் உணவு உண்ணும் போது தொண்டை வலி இருந்ததால், சென்னை மருத்துவ மனையில் டாக்டர்கள் அவரைப் பரிசோதித்தார்கள்! புற்றுநோயின் அறிகுறி அவருக்கு உள்ளதாக மருத்துவர்கள் கூறினார்கள்!

இதைக் கேள்விப்பட்ட பெருந்தலைவர் காமராஜர், அண்ணாவை மருத்துவமனையிலே சென்று பார்த்து உடல் நலம் விசாரித்தார்! டாக்டர்களை அழைத்து, நோயின் விவரங்களைக் கேட்டறிந்தார்! அமெரிக்காவிற்காவது அண்ணாவை அழைத்துச் சென்று - சரியான சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யுங்கள்' என்று டாக்டர்களிடம் கூறி அதையே அண்ணாவிடமும் கூறி, அவர் வற்புறுத்தினார்! பெருந்தலைவர் ஆறுதலைக் கேட்ட அண்ணா, பேச முடியாமல், சைகையால் நன்றி கூறிக் கை கூப்பி அவருக்கு விடை கொடுத்தனுப்பினார்! காமராஜர் கவலை தோய்ந்த முகத்தோடு அண்ணாவிடம் விடைபெற்றுத் திரும்பினார்.

அறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் கூறிய யோசனையையும் ஏற்றார். அவரது உடல் மோரியல் மருத்துவமனையிலுள்ள டாக்டர் மில்லர் பரிசோதித்து, நோயைக் குணப்படுத்தினார். 6.11.1968 - ஆம் ஆண்டன்று அவர் சென்னை மாநகர் திரும்பி வந்த ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்!

இந்த நேரத்தில் நாகர் கோயில் நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது. பெருந்தலைவர் காமராஜர் நாடாளுமன்றத்துக்குக் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டி யிட்டார்! அறிஞர் அண்ணா அவர்கள் காமராஜரை எதிர்த்து தி.மு.கழகம் போட்டியிடாது என்று அறிவித்தார்!

சும்மா இருக்குமா மூதறிஞரின் சுதந்திரா கட்சி? அது போட்டியிட்டது. அறிஞர்அண்ணாவைத் தேர்தல் பிரசாரத்திற்காக வருமாறு சுதந்திரா கட்சி வற்புறுத்தி அழைத்தும், பெருந்தலைவர் காமராஜர் தங்கக் காப்பு! அதைத் தேர்தல் கனலில் உருக்கி அழிக்கமாட்டேன் என்று கண்டிப்பாகக் கூறியது மட்டுமன்று, அறிக்கையும் விடுத்துத் தனது கருத்தைக் கூறிவிட்டார். பெருந்தலைவர் காமராஜர், ராஜாஜியின் சுதந்திரா கட்சியைத் தோற்கடித்தார். தலைவர் அமோக மக்கள் செல்வாக்குடன் பெரும் வெற்றியைப் பெற்று, நாடாளுமன்ற உறுப்பினரானார்!

பேரறிஞர் அண்ணா 1969-பிப்ரவரி மாதம் 2-ம் நாள் மறைந்தார். இந்த மரணச் செய்தியைக் கேட்ட பெருந்தலைவர் காமராசர் மீளாத் துயரடைந்தார். ‘தமிழ் மக்கள் வாழ்வு முன்னேறக் கடுமையாக உழைத்த நல்ல ஒரு தலைவனை நாடு இழந்துவிட்டது. தி.மு.கழகம் நடுக்கடலிலே தத்தளிக்கும் கப்பல் போல இருக்கிறது!’ என்று ஒரு சோக அறிக்கையை விடுத்து அவர் தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

அண்ணா மறைந்ததற்குப் பிறகு, தமிழக முதலமைச்சராகக் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் அமர்ந்தார்! தமிழ்நாட்டின் மூத்தத் தலைவரான பெருந்தலைவர் காமராஜருக்குப் பொன்னாடை அணிவித்து அவரது வாழ்த்துக்களையும் கலைஞர் பெற்றார்! அப்போது பெருந்தலைவர் காமராஜர் கலைஞரை வாழ்த்தி ‘ஆட்சியை நல்லா நடத்துங்கன்னே!'' என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் மறைந்தார். அவருக்குப் பதிலாக குடியரசுத் தலைவர் தேர்தல் 1969-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ஆம் தேதி வந்தது. பழைய காங்கிரஸ் சார்பாக அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் கம்பா ஆந்திராவைச் சேர்ந்த சஞ்சீவ ரெட்டியை நிறுத்திட, கட்சியைக் கூட்டி முடிவெடுத்து அறிவித்தார்.

பிரதமர் இந்திராகாந்தி, தனது பெயரில் இயங்கும் இந்திரா காங்கிரஸ் சார்பாக, அப்போது துணைக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி. கிரி என்பவரைப் போட்டியிடச் செய்தார். காங்கிரஸ்

கட்டுப்பாட்டை மீறினார் பிரதமர். மனச் சாட்சிப்படி ஓட்டுப் போடுவோம் என்று பிரதமரும், அவரது குழுவினரும் அப்போது அறிவித்தார்கள். இதனால், வி.வி. கிரி, வெற்றி பெற்றார். காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமான வேட்பாளர் சஞ்சீவ ரெட்டி தோற்றார். இந்தக் கட்சிக் குழப்பப் போட்டா போட்டியால், காங்கிரஸ் கட்சி ஸ்தாபன காங்கிரஸ் என்றும், இந்திரா காங்கிரஸ் என்றும் இரண்டாக உடைந்தது.

பெருந்தலைவர் காமராஜர், இந்திரா காந்தியின் செயல்; கட்சி விரோதமானது என்று கருதி இந்திரா காந்தியின் பின்னால் செல்லாமல், தனது தாய்க்கட்சியான ஸ்தாபனகாங்கிரசிலேயே அவர் சாகும் வரை மனச்சாட்சியோடு நீடித்திருந்தார்.

இந்தியா முழுவதுமாகக் காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தாலும், தமிழ்நாட்டில் மட்டும்தான் பெருந்தலைவர் காமராஜர்தலைமையில் மிகப் பலமாக அது இயங்கி வந்தது. ஏதோசிலர் பதவியாசை காரணமாகப் பிரதமர் இந்திரா காந்தியின் கட்சியிலே சேர்ந்தார்கள்! ஆனால் தமிழ்நாட்டில் ஸ்தாபன காங்கிரஸ் அசைக்க முடியாத உரத்தோடு நிலைத்து நின்றது! அதற்குக் காரணம், பெருந்தலைவர் காமராஜரின் தலைமைதான். இதனால், இந்திரா காங்கிரஸ் தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஸ்தாபனக் காங்கிரசையும், காமராஜரையும் அரசியல் வடிவத்தோடு இந்திரா காந்தி எதிர்த்தாக வேண்டிய நிலையேற்பட்டது. அதற்காக, தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்தார்.

இந்திரா காந்தியின் மன்னர் மானிய ஒழிப்பு அவசரச் சட்டம் செல்லாது என்று, டில்லி சுப்ரீட் கோர்ட் தீர்ப்பு அளித்ததால், இந்திரா காந்தி டில்லி நாடாளுமன்றத்திற்கு 1971-ல் தேர்தல் நடத்தத் தயாரானது! அதனால் தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து பெருந்தலைவர் காமராஜர் தலைமையில் இயங்கும் காங்கிரஸ் கட்சியைத் தேர்தலிலே சந்திக்கத் தயாரானது.

அறிஞர் அண்ணா உயிரோடுள்ளபோது 1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலுக்கும், அண்ணா இறந்துவிட்ட பிறகு நடைபெறும் 1971-ஆம் ஆண்டு தேர்தலுக்கும் - ஏகப்பட்ட முரண்பாடுகள் உருவாயின.

1967-ஆம் ஆண்டில், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் காங்கிரசைப் பலமாக எதிர்த்துக் காங்கிரசை வீழ்த்தினார்! அதே மூதறிஞர் ராஜாஜி 1971-ஆம் ஆண்டில் காமராஜரது தலைமையில் இயங்கும் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து, அண்ணா இல்லாத கலைஞர் தி.மு.கழகத்தைப் பலமாக எதிர்த்தார்.

தி.மு.கழகம் கூட்டணியில், இந்திரா காங்கிரசுக்கு 10 நாடாளுமன்றத் தொகுதிகளே அளிக்கப்பட்டன. சட்டசபைக்கு ஒரு தொகுதியுமில்லை. இதனால், மனநிறைவு பெறாத இந்திரா காங்கிரஸ், மத்திய அமைச்சர்களான சி.சுப்பிரமணியம், மோகன் குமாரமங்கலம், தமிழக ஆட்சியை தி.மு.க.விடம் கொடுத்து விடுமளவிற்கு நிர்வாகம் நடத்தி, முதலமைச்சர் பதவியை இழந்த பக்தவத்சலம், ஆகியோர் கலைஞரிடம் தூதுவந்த பிறகும்கூட, கலைஞர் - தான் கூறிய முடிவிலே இருந்து கடுகளவும் மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

1971-தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், மூதறிஞர் ராஜாஜி பெருந்தலைவர் காமராஜரிடம் கூட்டணி வைத்து, இருவரும் தமிழகம் முழுவதும் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

தமிழ் நாட்டில், மூதறிஞர் ராஜாஜியின் அரசியல் அறிவைப் புறங்காட்டி ஓடச் செய்த பெருந்தலைவருடன் இப்போது தேர்தல் கூட்டணி வைத்தார் ராஜாஜி! தமிழ் நாட்டு அரசியலில் காமராஜர் சக்தி முன்பு இராஜாஜியால் ஓர் அணுவையும் அசைக்க முடியாது என்ற நிலை உருவான பிறகு, வடநாட்டு அரசியலில் காந்தியின் கருணையிடம் தஞ்சமடைந்து - பெரும் பெரும் பதவிகளைக் காங்கிரஸ் கட்சியின் பெயரால் சுகபோக மனுவித்த ராஜாஜி, வடநாட்டு அரசியலில் காந்தியிடமும், நேருவிடமும் மோதிப் பார்த்துக் காங்கிரஸ் கட்சியை அழிக்க; அதன் எதிரிகளிடம் காங்கிரசைக் காட்டிக் கொடுத்துவிட்ட ராஜாஜி, மாநிலக் காங்கிரஸ் ஆட்சிகளையும், அதன் மாநிலக் கிளைக்கட்சிகளையும் சுதந்திரா கட்சிபெயரால் குலைத்துக் கலகலக்க வைத்த ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் அரசியல் பலத்தை அழிப்பதொன்றே தனது பிறவியின் பெரும்பயன் என்று அல்லும் பகலும் அரும்பாடு பட்டுத் தோல்விகண்டு, காங்கிரஸ் எதிரிகளோடு கூட்டுச் சேர்ந்தார்.

காங்கிரசைத் தமிழகத்தில் ஒழித்துக் கட்டிய ராஜாஜி, அறிஞர் அண்ணாவையும் அரசியல் சதியால் அழித்துவிடலாம் என்று திட்டமிட்டு, 1967-ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றியின் நன்றியறிவிப்பு விழாவில், கூட்டணிக் கூட்டத்தின் கடைசி பெரும் தலைவராகத் தன்னை நினைத்துக் கொண்டு, அதாவது, தி.மு.க. ஆட்சி, தன்னால்தான் அமைந்தது என்ற பெருமையை உலகம் உணர வேண்டும் என்ற எண்ணத்தால், மேடையிலே அமர்ந்திருந்த தனது கட்சிப் பொதுச் செயலாளரான எஸ்.எஸ். மாரிசாமியிடம் 'அண்ணாவை விழாவில் பேசச் சொல்லுங்க, நான் கடைசியாகப் பேசுகிறேன்' என்று கூறினார்.

அதற்கு அண்ணா ''அவரைப் பேசச் சொல்லு மாரிசாமி'' என்று அண்ணா பதில் கூறிட, வேறு வழியில்லாத மூதறிஞர் ராஜாஜி, அண்ணாவுக்கு முன்பு பேசஎழுந்து ''இன்றுடன் - தி.மு.க. சுதந்திராக் கட்சிக் கூட்டணி தேனிலவு முடிந்தது' என்று மனமுறிந்து பேசி, தி.மு.கவுடன் இருந்த அரசியல் நெருக்கத்தை அவரே முறித்துக் கொண்டார் என்பது ராஜாஜி சுதந்திரா கட்சி கூட்டணியின் வரலாறாகும்.

அப்படிப்பட்ட ராஜாஜி 1967-ல் காமராஜரை அண்ணாவின் உதவியால் அழித்துவிட்டு, இப்போது அதே காமராஜருடன் தோள் தட்டிக்கொண்டு, கலைஞரை அழிக்கத் திட்டம் தீட்டிய ராஜாஜி, காங்கிரஸ் - சுதந்திரா கூட்டணி சார்பாக சென்னைக் கடற்கரையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், பெருந்தலைவர் காமராசருக்கு நெற்றியில் ராஜாஜி வெற்றித்திலகம் இட்டு ஆசி கூறித் தனது தேர்தல் பிரசாரத்தை 1971-ல் செய்தார்.

ஆனால், ராஜாஜி, காமராசருக்கு இட்ட வெற்றித் திலகத்தின் சக்தி என்ன தெரியுமா? தி.மு.க. 234 சட்டசபைத் தொகுதிகள் அனைத்திலும் போட்டியிட்டது. 184 சட்டசபைத் தொகுதிகளைக் கைப்பற்றியது. தி.மு.க. தோழமைக் கட்சிகள் 26 இடங்களிலே வெற்றி பெற்றது.

மூதறிஞர் ராஜாஜியின் கையால் வெற்றி திலகம் வைத்துக் கொண்ட பெருந்தலைவர் காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் பதினைந்தே பதினைந்து சட்டசபைத் தொகுதிகளிலே வெற்றி பெற்றது! கர்மவீரர்காமராசருக்கு வெற்றிப் பொட்டிட்ட மூதறிஞர் ராஜாஜியின் சுதந்திரா கட்சியின் சக்தி பெற்றது எத்தனையிடங்களில் வெற்றி தெரியுமா? ஆறே ஆறு இடங்களில் மட்டும்தான். தமிழ்நாட்டிலே உள்ள நாடாளுமன்றத் தொகுதிகள் 39ல், தி.முக. கூட்டணி வெற்றி பெற்ற இடங்கள் எத்தனை தெரியுமா? 38 இடங்களில்! எப்படி மூதறிஞர் ராஜாஜியின் வெற்றித்திலகத்தின் சக்தி?

நாகர்கோவில் நாடாளுமன்றம் தொகுதியில், பெருந்தலைவர் காமராஜர் தனது சொந்த பலத்தாலும், காங்கிரஸ் பலத்தாலும் தனிப்பட்டதோர் சக்தியாலே வெற்றி பெற்றாரே தவிர, வெற்றித் திலகத்தின் சக்தியாலன்று! எனவே, அரசியலில் இரண்டு பெரிய கட்சிகளின் சந்தர்ப்பவாத விருப்பு வெறுப்புத்தான், இன்றைய ஜனநாயகம். அது இன்றும்கூட இருக்கிறது என்பது உண்மை யல்லவா?

# 54. பெருந்தலைவருடன் இந்திரா கூட்டணி

1971-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், திண்டுக்கல் நாடாளுமன்றம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கம்பகம் ராஜாங்கம் வெற்றி பெற்றார். அவர் மரணமடைந்து விட்டதால், 1973-ஆம் ஆண்டு மே 21-ஆம் நாள் அங்கே இடைத்தேர்தல் நடந்தது.

தி.மு.க.வை விட்டுப் பிரிந்து போன புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். 1972 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ஆம் தேதி 'அண்ணா தி.மு.கழகம்' என்ற கட்சி ஆரம்பித்து ஓராண்டே ஆனது. அதற்குள் அது திண்டுக்கல் தொகுதி இடைத்தேர்தலில் தனது வேட்பாளரை நிறுத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. திண்டுக்கல் தொகுதி இடைத் தேர்தல் 1973-மே, 21-ந்தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்ததும், அ.தி.மு.க. கட்சிச்சார்பாக மாயத் தேவர் என்பவர் போட்டியிடத் தயாரானார். அந்த நேரத்திலே தமிழ் நாட்டை ஆளும் கட்சி தி.மு.க.

எனவே, அந்த இடைத்தேர்தலில், தி.மு.க., பெருந்தலைவர் காமராஜரது ஸ்தாபன காங்கிரஸ், புரட்சி நடிகர் கட்சியான அ.தி.மு.க, மத்திய ஆட்சியை ஆளும் பிரதமரான இந்திரா காந்தியின் இந்திரா காங்கிரஸ், மற்றும் சில சுயேச்சைகளும் போட்டியிட்டன. இந்த இடைத்தேர்தலிலே உள்ள சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு கட்சியும் அதனதன் பலமே யானை பலம், திமிங்கல பலம், சிங்க பலம், புலி பலம் என்று நம்பி, அதனதன் சக்தியை மட்டுமே நம்பிப் போட்டியிட்டன. என்ன முடிவு தெரியுமா?

அ.தி.மு.க. வேட்பாளர் மாயத் தேவர் 2 லட்சத்து 60 ஆயிரம் ஓட்டுக்களைப் பெற்று வெற்றிபெற்றார். இரண்டாவதாக, காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் ஒரு லட்சத்து 19 ஆயிரம் ஓட்டுக்களைப் பெற்று இரண்டாவது இடத்தினைப் பெற்றது. தமிழ்நாட்டினை அன்று ஆளும் கட்சியான தி.மு.க. வெறும் 93

ஆயிரம் ஓட்டுக்களைப் பெற்று மூன்றாவது இடத்திலே வந்தது!

இந்தியா முழுவதையும் ஆண்டு கொண்டிருந்த பிரதமர் இந்திரா காங்கிரஸ் கட்சி, அவமான கரமாக வெறும் 11,423 ஓட்டுக்களை மட்டுமே பெற்று நான்காவது இடத்திற்கு மக்களால் தள்ளப்பட்டது.

இந்த இடைத்தேர்தலிலே உள்ள சிறப்பு என்னவென்றால், தேர்தலில் பெற்றிபெற்றவர் மக்களிடையே புகழ் பெற்ற, செல்வாக்குள்ள ஒரு சினிமா நடிகர் கட்சி! அதனால், அவர் வெற்றி பெற்றார். இது ஒன்றும், அவ்வளவு சிறப்புக்குரிய அற்புதமான சாதனை என்று கூறமுடியாது; தமிழ் நாட்டில் புரட்சி நடிகரின் மக்கள் செல்வாக்கை இன்றும் அல்ல- என்றும் புரிந்தவர்களுக்கு அப்போதைய இந்த உண்மை புரியும்!

அடுத்ததாக, தமிழ் நாட்டை ஆட்சி செய்கின்ற கலைஞர் கட்சியின் வேட்பாளர். அவருக்குப் பண பலம் மட்டுமன்று; மக்கள் தலைவர் என்ற செல்வாக்கும் உண்டு; அத்துடன் ஆட்சியின் அதிகார பலம் எந்த வடிவத்திலும் அவருக்கு உண்டு; பாமரனும் இந்த உண்மையை உணர்ந்து ஒப்புவான். அது மட்டுமன்று; தேர்தல் பணியாற்றுவதிலே கலைஞரும் புலிபோன்ற காமராஜர்தான் என்ற பெயரெடுத்தவர்! அவர், நான்கு பேர் போட்டியிட்ட இந்தத் தேர்தலிலே மூன்றாவது இடத்தைத்தான் பெறமுடிந்தது! அந்த நேரத்தில், அந்தத் தொகுதியில் தி.மு.க. செல்வாக்கு அவ்வளவு ஓட்டுக்களைத்தான் பெறமுடிந்தது! பெருந்தலைவர் காமராஜர் பலத்தை வீழ்த்தி அக்கட்சியால் வெற்றி பெற முடியவில்லை!

மத்திய ஆட்சியைக் கையிலேந்திக் கொண்டிருந்த இந்திரா காந்தி இந்திய நாட்டின் புகழ் பெற்ற பிரதமர்; அதிகாரங்கள் அவர் வாய்திறந்தால் அஞ்சலிகள் செய்யும் பாரம்பரிய செல்வாக்கும், சொல்வாக்கும் பெற்றவர்; அப்படிப்பட்ட அவர் எத்தனையாவது இடத்தைப் பெற்றார்? கடைசி இடத்தை! அதாவது நான்காவது இடத்தை! அவர் பெற்ற வாக்கு எவ்வளவு? 11,423 ஓட்டுக்கள் மட்டும்தான்! இது எப்படி?

அப்படியானால், இரண்டாவது இடத்திலே இருப்பவர் யார்? இந்தியாவில் செல்வாக்கெனும் பொதிகையாகப் பரந்து விரிந்து உயர்ந்தவர்; காலவசத்தால், முதலமைச்சர் பதவியைக் கட்சி

வளர்ச்சிக்காக இழந்தவர்; திண்டுக்கல் தொகுதியிலே போட்டியிடப்போதிய பணமில்லாத நோஞ்சான் காங்கிரசாக இருந்தவர்; படை பலத்தில் சில யோக்யர்களை மட்டுமே நம்பி அரசியல் நடத்துபவர்; பணபலமற்ற பரிதாபத்துக்குரிய 'பாவமாக'ப் போட்டியிட்ட பெருந்தலைவர் காமராஜரின் வேட்பாளர் பெற்ற வாக்குகள் எவ்வளவு? ஒரு லட்சத்து 19 ஆயிரம் ஓட்டுக்கள்! அதாவது, வேட்பாளர்கள் நால்வருள் இரண்டாம் இடம் பெற்றவர்! அவர்தான் பெருந்தலைவர் காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ்காரர்! எப்படி பெருந்தலைவரின் மக்கள் பலம்?

## பாண்டிச்சேரியில் இந்திரா – காமராஜர்!

திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலில், பெருந்தலைவர் காமராஜர் பெற்ற வாக்குகளையும், மற்ற மாநில காங்கிரஸ் மூத்த தலைவர்களது செல்வாக்கைப் போல, காமராஜருடைய மக்கள் செல்வாக்கு சிறிதும் சிதறாமல், சிதையாமல், சிந்தாமல், மற்றக் கட்சிகளுக்குள் பதவிகள் சரணம் போடாமல், போலிகளுக்கு ஜால்ரா தட்டிக்கொண்டு வாழாமல் - அப்படியே காமராஜர் பலம் நிலைத்து நிற்பதைக் கண்ட பிரதமர் இந்திராகாந்தி, பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலிலும், கோவை நாடாளுமன்றத் தேர்தலிலும், கோவை மேற்கு சட்ட சபை தொகுதித் தேர்தலிலும், அ.தி.மு.கவைத் தோற்கடிக்க வேண்டுமானால், பெருந்தலைவர் காமராஜருடைய ஸ்தாபன காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டால்தான் முடியும் என்று முடிவு செய்தார்.

பிரதமர் இந்திரா காந்தியின் சார்பில், பெருந்தலைவர் காமராஜருடன் தேர்தல் கூட்டணி அமைத்திட, பெருந்தலை வருடைய தமிழக முதல் மந்திரி சபையிலே நிதியமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியத்தை, காமராஜருடன் பேச்சு நடத்துமாறு அனுப்பி வைத்தார். பெருந்தலைவரும் இந்திரா காந்தியின் பேச்சுக்கு மறுபேச்சுக் கூறாமல் கூட்டணிக்கு ஒப்புக் கொண்டார்.

பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலில் பெருந்தலைவர் காமராஜரின் ஸ்தாபன காங்கிரசுக்கு 16 சட்டசபைத் தொகுதிகளிலும், இந்திரா காங்கிரசுக்கு 14 இடங்களிலும் போட்டிப் போடலாம் என்று இரு காங்கிரசும் ஒப்புக் கொண்டன!

அதே பாண்டிச்சேரி தேர்தலில், அதாவது புதுச்சேரி தேர்தலில், புதுச்சேரி அ.தி.மு.க. 12 இடங்களிலும், 2 கம்யூனிஸ்ட் கட்சிகளும் 2 இடங்களிலும் வெற்றிபெற்றன. பெருந்தலைவர் காமராஜர் - இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்குப் பத்தே பத்து இடங்கள் மட்டுமே கிடைத்தன! எனவே, இந்த மாநிலத்திலே அ.தி.மு.க. அமைச்சரவை அமைத்தது.

பாண்டிச்சேரியை ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க.வுக்கு இரண்டே இரண்டு இடங்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்கு ஓர் இடமும் சுயேட்சை வேட்பாளர் ஓர் இடமும் பெற்றார்கள்.

கோவை நாடாளுமன்றத் தொகுதியிலும், கோவை மேற்கு சட்டசபைத் தொகுதியிலும் அ.தி.மு.க. வேட்பாளர்களே வென்றார்கள். தி.மு.க. தனது சட்டசபைத் தொகுதியை அ.தி.மு.க. விடம் பறிகொடுத்தது.

# 55. எமர்ஜியென்சி ஏன் வந்தது?

உத்தர பிரதேசம் மாநிலத்தின் ரேபரேலி என்ற தொகுதியில் பிரதமர் இந்திரா காந்தி போட்டியிட்டு வெற்றி பெற்றது செல்லாது என்று, 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி, அலகாபாத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

இந்தத் தீர்ப்பைக் கேட்டதும், 'இந்திரா காந்தி பிரதமர் பதவியை விட்டு விலக வேண்டும்! இல்லாவிட்டால் இந்திரா காந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயணரும், மொரார்ஜிதேசாயும் அறிக்கை விடுத்தார்கள். மற்ற வடநாட்டு எதிர்க்கட்சிகளும் இந்திரா பதவி நீடிப்பை எதிர்த்தன!

இதைக் கண்ட பிரதமர் இந்திரா காந்தியால், 1975-ஜூன் 26-ஆம் தேதியன்று, காரணமில்லாமலே இந்தியா முழுவதுமாக நெருக்கடிநிலை அமுல் செய்யப்பட்டது. இந்தப் பிரகடனத்தால், இந்திராவுக்கு யார் யார் அரசியல் விரோதிகளோ, அவர்களை எல்லாம் எமர்ஜியென்சிசட்டப்படி சிறையிலே அடைத்தார் இந்திரா. அதே நேரத்தில் பத்திரிகைகளையும் மத்திய அரசு தணிக்கை செய்தது.

''ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதே எமது லட்சியம் என்று கூறிக்கொள்ளும் இந்திரா காந்தி, சர்வாதிகாரக் கொற்றக் கொடையின் கீழ் இட்லர் தர்பார் நடத்துவது, இந்த நாட்டிற்கு இப்போதைக்குத் தேவைதானா?'' என்று பெருந்தலைவர், காமராஜர் திருத்தணிப் பொதுக்கூட்டத்தில் நெருக்கடி நிலையைக் கண்டித்துப் பேசிக் கேள்வி கேட்டார்.

நெருக்கடி நிலையைத் தி.மு.கழகம் செயற்குழு மிக வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. அதற்குப் பிறகு, ஜூலை மாதம் 4-ம் நாள் அன்று கலைஞரும் நாவலர் நெடுஞ்செழியனும் பெருந்தலைவர் காமராஜரை, அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்தார்கள். இவர்கள் இருவரையும் கண்டதும் காமராஜர் கண்கலங்கியபடியே அவர்களிடத்தில் ''தேசம் போச்சு, தேசம் போச்சு'' என்று அரற்றிக் கொண்டே எழுந்து முதல்வர் கருணாநிதியை ஆரத் தழுவிக் கொண்டார்.

கலைஞர் கருணாநிதி, பெருந்தலைவரின் பின்புறமுதுகை இறுகத்தழுவியபடியே, ''ஐயா, நீங்கள் சொல்லுங்கள். இப்போதே நான் மந்திரி சபையை ராஜிநாமா செய்து விடுகிறேன். நாங்கள் எதற்கும் தயாரய்யா! இந்தியாவில் ஜனநாயகத்தை நிலை நிறுத்த, சர்வாதிகாரத்தை அழிக்க, நீங்கள் தலைமையேற்று அணி நடத்துங்கள். தங்கள் பின்னால் நாங்கள் வருகிறோம்...'' என்றார்.

''பொறுமையாக இருங்கள். அவசரப்படாதீர்கள். இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒன்றில்தான் இப்போது ஜனநாயகம் இருக்கிறது. நீங்களும் ராஜிநாமா செய்துவிட்டால் - அதுவும் போய்விடும். கொஞ்சநாள் பொறுமையாக இருங்கள். ஒரு நேரம் வரும்'' என்று பெருந்தலைவர் கூறினார்.

## கருணாநிதியை எதிர்த்துப் போர்!

செங்கற்பட்டில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பெருந்தலைவர் பின் வருமாறு பேசினார். ''கலைஞர் கருணாநிதி ஆட்சியில் எந்தத் திட்டமும் மக்களுக்கு நன்மை தருவதாக இல்லை. ஒவ்வொரு திட்டமும் முன்னுக்குப் பின் முரண்பாடாகவே நடந்து வருகிறது. குறிப்பாக 1971-72 - ஆம் ஆண்டில் மதுவிலக்கை இந்தியா முழுவதும் விரிவாக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார் என்கிறார். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள், கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழகம் எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்தக் கொள்ள முடியும்? ' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்.''

''மதுவிலக்கை முதன் முதலில் கொண்டு வந்த ராஜாஜி, கருணாநிதியின் வீட்டிற்கே சென்று, 'மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டாம்'' என்று கேட்டுக்கொண்டார். இந்திய தேசிய முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்பும் கருணாநிதி வீடு சென்று மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டாம் என்று கோரிக்கையை எழுப்பினார்! யார் பேச்சையும் அவர் கேட்காமல், மதுவிலக்கு ஒரு கேள்விக்குறி, வியப்புக்குறி என்றெல்லாம் பேசினார்! மதுவிலக்கை ரத்தும் செய்தார்.''

''மதுவை மறந்திருந்த தலைமுறைகள் எல்லாம், இப்போது மது போதையர்களாக நடுத்தெருவிலே விழுந்து கிடக்கின்ற பரிதாப நிலையிலே தமிழ்நாடு தத்தளித்து வருகின்றது! 1973 - ஆம் ஆண்டு மறுபடியும் மது விலக்கைக் கொண்டு வந்தார்! இப்படியெல்லாம் கருணாநிதி முன்னுக்குப் பின்னாக, முரனாகச் செயல்படுகிறார்!''

''ஒருமுறை குடித்துப் பழகிப்போன தமிழ் நாட்டு மக்கள், மீண்டும் மீண்டும் அந்தக் குடிப்பழக்கத்தை மறக்க முடியுமான்னே! நினைப்பதும் - மறப்பதும் என்ற பழக்கத்தை ஓர் ஆட்சி, மக்கள் இடை உருவாக்கலாமா? இந்த ஆட்சி வேண்டுமானால் - துக்ளக் ஆட்சியாக இருக்கலாம். மக்கள் என்ன மாயாஜாலம் தெரிந்தவர்களா?''

''நினைத்த நேரத்தில்மதுவைக்குடி என்று சொல்லி - மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து விட்டு, மதுவிலக்கைக் கொண்டு வந்து விட்டேன்; இப்போது குடிக்காதே என்று ஓர் அரசு கூறினால், இந்த சர்க்கார் துக்ளக் சர்க்காரா? இல்லையா?''

''மக்களுக்கு விரோதமாக நடக்கும் இந்த தி.மு.க. ஆட்சியை எதிர்த்து, வருகின்ற அக்டோபர் மாதம் 2-ம் தேதியன்று மதுரை நகரில் அகிம்சா போராட்டப் போரை அறிவிக்கப் போகிறேன். போராட்டத்தை நானேதலைமையேற்று நடத்துகிறேன். காங்கிரஸ் தொண்டர்கள் அதற்குத் தயாராக வேண்டும்.''

என்று, பெருந்தலைவர் காமராஜர் செங்கற்பட்டு பஸ்ஸ்டாண்டு அருகே உள்ள செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளி மைதானத்திலே பேசும்போது காரசாரமாகக் குறிப்பிட்டார்.

எனவே, பெருந்தலைவர் காமராஜர் கலைஞர் கருணாநிதி ஆட்சியை எதிர்த்தும், அவரே போராட்டத்தினை நடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றும், மதுரை மாநகரிலே முதன் முதல் போராட்டத்தை அறிவிக்கப் போவதாகவும் திட்டமிட்டிருந்தார்! அதற்கான போராட்டப் பணிகளை அப்போதைய காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவராக இருந்த மதுரை நெடுமாறனிடம் ஒப்படைத்திருந்தார்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாள் அக்டோபர் முதல் நாளன்று வந்தது. ஒவ்வொரு ஆண்டும் சிவாஜி கணேசன் தன் விழாவைக் கட்சித் தலைவர்களைக் கொண்டு எளிமையாக நடத்துவது வழக்கம். அது போலவே, 1975-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று பெரியவர் பெருந்தலைவர் காமராஜர் தனது விழாவிலே கலந்து கொண்டு வாழ்த்த வேண்டும் என்று விரும்பினார்!

மதுரை மாநகர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பழ. நெடுமாறன், பா. ராமச்சந்திரன்; குமரி அனந்தன் போன்றவர்களை யும் தனது விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு கூறியிருந்தார்.

அக்டோபர் முதல் நாள் வந்தது. நடிகர் திலகம் கணேசன், பெரியய்யா வரப்போகிறார் - தன்னை வாழ்த்த என்று தடபுடலாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து தயாராக இருந்தார். குமரி அனந்தன், பா. இராமச்சந்திரன் ஆகியோர் பெருந்தலைவர் காமராஜரின் இல்லத்திற்கு வந்திருந்து விழாவிற்குத் தலைவர் வருகைக்காக காத்திருந்தார்கள்.

வெளியே வராண்டாவிற்கு வந்த பெருந்தலைவர், 'என்ன விசேஷம்னே' என்றார். 'சிவாஜி கணேசன் பிறந்த நாள் விழா ஐயா, தாங்கள் வந்து சிவாஜியை வாழ்த்த வேண்டும்' என்று அவர் வீட்டிலே காத்திருக்கின்றார் ஐயா' என்றார் பா. ராமச்சந்திரன்!

'நான் கணேசன் விழாவுக்குப் போகமாட்டேன் என்று நெடுமாறனிடம் வாக்குக் கொடுத்துவிட்டேனே! நீங்கள் எல்லாம் இருக்கிறீர்களே, அது போதாதா?' என்றார்!

'பெரியவர் வந்து வாழ்த்தாமல் நான் எனது விழாவைக் கொண்டாட மாட்டேன் என்று சிவாஜி அழுது கொண்டே சொல்கிறார் ஐயா!' என்று குமரி அனந்தன் தணிவான குரலில் பணிவோடு கூறும்போது, 'கணேசன் விழாவுக்குப் போகமாட்டேன் என்று நெடுமாறனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேனே! நாளைக்கு மதுரையில் போராட்டநாள் அறிவிப்பு விழாவுக்குப் புறப்படப் போகிறேன்! என்னைத் தொல்லைப்படுத்தாதீர்கள்''என்று பெருந்தலைவர் மீண்டும் பதில் சொன்னார்!

அப்போது கணேசன் வீட்டிலே இருந்து ஐயா, புறப்பட்டு விட்டாரா? என்று கேட்ட வண்ணம் டெலிபோன்கள் ஒலித்துக் கொண்டிருந்தன! பெருந்தலைவரைக் கணேசன் வீட்டு விழாவிற்கு அழைத்துப் போக வந்தவர்களும், விடாப்பிடியாக அங்கேயே உட்கார்ந்து கொண்டே இருந்தார்கள்.

தனது அறையிலே இருந்து வெளியே வந்த காமராஜர், 'இன்னும் போகலையா நீங்கள்? என்னை வம்புக்குள்ளே இழுத்துவிடத்தான் உட்கார்ந்திருக்கிறீகளா?' என்று அவர் சலிப்போடு குமரி அனந்தனைக் கேட்டார்!

பிறகு, பெருந்தலைவர் ஒருவித வேதனையும் விரக்தியும் கலந்த உணர்வோடு 'மாலை வேண்டுமே' என்றார். 'எல்லாம் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறோம் ஐயா' என்றார்கள் வந்தவர்கள்!

'சரி, 'கார்' என்றார் பெருந்தலைவர்! தயாராக இருக்கிறது ஐயா!' என்றனர். உடனே காமராஜர் போனவழி, வந்த வழி தெரியாமல்

காரிலே குமரிஅனந்தன், பா. இராமச்சந்திரன் ஆகியோருடன் சென்று, மாலையைச் சிவாஜி கணேசன் கழுத்திலே அணிவித்து, வாழ்த்திவிட்டு விர்ரென்று வீட்டுக்கு விரைந்து வந்து சேர்ந்தார் பெருந்தலைவர்!

சிவாஜி கணேசனது பிறந்த நாள் விழாவிற்குப் பெருந்தலைவர் காமராஜர் சென்று மீண்ட விவகாரம் நெடுமாறனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. நம்மிடம் போகமாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்த தலைவர் பிறருடைய நெருக்கல்களுக்கு மனமிரங்கிப் போனது, அவர் மனதுள் தலைவர் மீது ஏதோ ஒருவித சினச் சிராய்வை ஏற்படுத்திவிட்டது.

மதுரையில் அக்டோபர் இரண்டாம் நாளன்று, காந்தியடிகள் பிறந்த தினவிழாவின்போது, தி.மு.க. ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போகிறது ஸ்தாபன காங்கிரஸ் என்றும், அந்தப் போராட்டத்தை தானே தலைமையேற்று நடத்தப் போகிறேன் என்றும், தமிழ் நாட்டின் பல ஊர்களிலே பேசி காங்கிரஸ் தொண்டர்களுக்கு உணர்ச்சிகளூட்டி வந்த பெருந்தலைவர்காமராஜர், அந்த அறிவிப்புக் கூட்டத்தை மதுரை மாநகரிலே நடத்தும் பொறுப்பை நெடுமாறனிடம் வழங்கியிருந்தார் அல்லவா?

அந்தப் பொறுப்பு எந்த அளவிலே இருக்கிறது என்பதை அறிய, பெருந்தலைவர் வீட்டிலே இருந்த அவரின் பணியாளர் வைரவன், பலமுறை நெடுமாறன் இல்லத்திற்கு டெலிபோன் செய்தும், அவர் வீட்டில் இல்லை என்ற பதிலே பலமுறைகளும் ஒலித்தன. மேலும், சொல்லப்போனால், தலைவர் மீதுள்ள தணியாச் சினத்தால், அவர் வீட்டிலிருந்து கொண்டே, 'இல்லை இல்லை' என்று வீட்டாரிடம் சொல்லி வைத்திருந்ததாகவும் செய்தி வந்தது தலைவர் வீட்டிற்கு!

அதனால், பெருந்தலைவர் மனமுடைந்து மறுநாள் நடக்கப்போகும் போராட்ட அறிவிப்புப் பணிகளைச் சில மணிநேரங்களே உள்ள காலக் குறுக்கத்துக்குள் என்ன செய்ய முடியும் என்று சிந்தித்தபடியே அன்று மதியம் வழக்கம்போல ஒரு சிறுதூக்கத்தில் ஆழ்ந்தார்.

மாலை உறக்கம் நீங்கி எழுந்த தலைவர், நெடுமாறனிடமிருந்து ஏதாவது போன் வந்ததா? என்று வைரவனிடம் கேட்டார்! 'இல்லை ஐயா' என்று வைரவனிமிருந்து பதில் வரவே, வேறு ஒன்றும் செய்யாமல் மனப்புழுக்கத்துடன் இருந்து விட்டார் - பெருந்தலைவர்!

# 56. தங்க மனிதர் காமராஜர்!

''மனிதன் என்பவன் வெறும் உடம்பு மட்டும் அல்லன்; அதற்கும் மேலான ஓர் அம்சம் உடையவன்''

''மனிதன் - மிருகமும் அல்லன்; கடவுளும் அல்லன்; தெய்வத் தன்மையை அடைய முயலும், கடவுள் சிருஷ்டி ஆவான்'' என்றார் அண்ணல் காந்தியடிகள்!

''கிரேக்க நாட்டுத் தத்துவஞானி சாக்ரடீஸின், தத்துவ வித்தக மாணவனான பிளாட்டோ, மனித குலத்தை மூவகையாகப் பிரிக்கின்றார்; தங்க மனிதர்கள்; வெள்ளி மனிதர்கள்; இரும்பு மனிதர்கள்'' என்கிறார்!

ஒரு நாட்டை எவ்விதக் குறையுமில்லாமல் - வராமல், ஆட்சி செய்பவனைத் தங்க மனிதன் என்கிறார். ஒரு நாட்டை எதிரிகளிடம் இருந்து காப்பாற்றுபவன், அதற்காகத் தன்னையே தியாகம் புரிந்து கொள்ளும் படைவீரர்களை வெள்ளி மனிதர்கள் என்கிறார் அவர்!

மூன்றாவதாக, இரும்பு மனிதர் என்று யாரைக் குறிப்பிடுகிறார் தெரியுமா? உலக மக்களை வாழவைக்கும் தொழிலாளர் பெருமக்களைத்தான் இரும்பு மனிதர் என்று, மனித குலத்தில் அவர்களை அடையாளம் காட்டுகின்றார் - பிளாட்டோ!

திருவள்ளுவன் பெருமான் அடையாளம் காட்டவில்லையா மக்கள் இனத்தை? சான்றோர், புல்லறிவாளர்கள், கயவர்கள் என்று! அவரும் மூன்று வகையாக வகைப்படுத்துகின்றார் அல்லவா?

கிடைக்க முடியா தங்கத்தைப் போன்ற உயர்ந்த மதிப்பை, மரியாதையை - மக்களிடம் பெறுகின்ற உயர்ந்த பண்பாடுகளைக் கொண்ட மக்களின் காவலர் அதாவது ஒரு நாட்டின் அரசர் என்று பிளேட்டோ குறிப்பிடுகிறார். இந்த வகையைச் சார்ந்த சான்றோர் இனத்தின் வழிகளை, நெறிகளை, நீதிமுறைகளை, மாசு சூழா மக்கள் சேவைகளைச் செய்கின்றவர்கள் தங்கம் போன்றவர்கள் தானே! அந்த மனிதர்களிலே ஒருவராக உருவானவர்தான் பெருந்தலைவர் காமராஜர்! அவரது பொதுவாழ்க்கையின் வகையறிந்தோர் உணர்வர் இதை!

நாட்டை ஆள்பவர்கள் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பது பேரறிஞர் பிளேட்டோவின் 'குடியரசு' சட்டம்.

பெருந்தலைவர் காமராஜர் தனது கடைசி காலம் வரை திருமணம் செய்து கொள்ளாதவராகவே இருந்தார். எந்த வற்புறுத்தலும்- வலியுறுத்தலும், அவரது பிரமசரிய முடிவை மாற்றவில்லை.

இப்படிப்பட்ட மனிதர்களது வளர்ச்சி நிலையைப் பற்றி LAUATER என்ற அறிஞர் மக்கள் குலத்தை மூன்று வகையாகத்தான் வகுத்தார். அவை என்ன தெரியுமா?

''தமது நிலையிலே தாழ்ந்து கொண்டே போகிற மக்கள் ஒருவகையினர்! தமது நிலையிலே, செயலிலே, பண்பாடுகளிலே, ஒழுக்க உயர்வுகளிலே, அறிவுத் துறைகளிலே, என்றும், எப்போதும், எங்கும் நிலையாக நின்று நிலவுபவர்கள் மறுவகையினர்!


மூன்றாவது யார் தெரியுமா? எந்தத் தடைகள் வந்தாலும்- ஏறென நிமிர்ந்து, உரமாக நின்று, எதையும் சாதிக்க என்னால் முடியும் என்று முன்னேற்றப் பாதையிலே சிங்க நடை போடுகிறார்களே; அந்த அரிமாக்கள்தான் என்பவையே லாவாடர் வகுத்த மனித முறைகளாகும்.

இந்தத் தத்துவப்படி பார்த்தால் உலக மனிதர்கள் அனைவரும், ஏன் - பெருந்தலைவர் காமராஜர் உட்பட்ட மேதைகள் எல்லாரும் இந்த வகைகளிலே வந்து விடுவார்கள்.''


எனவே, மனிதன் என்பவன் பாதிப்புழுதியாகவும், பாதி தெய்வமாகவும் தோன்றுபவன் தான்.




பத்மினி, சாவித்திரி, சிவாஜி கணேசன், காமராஜர், எம்.ஜி.ஆர்.



கவர்னர் ஸ்ரீ பிரகாஷாவுடன் காமராஜர்



அன்னை சிவகாமி அம்மையாருடன் காமராஜர்.



காமராஜர், ஜி. உமாபதி, பெரியார்.








பத்திரிக்கையாளர் சந்திப்பில் : நீலம் சஞ்சீவ ரெட்டி, கவர்னர் ஸ்ரீ பிரகாஷா, காமராஜர்.



காமராஜரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியபோது : இந்திராகாந்தி, கருணாநிதி, ராஜாராம் நாயுடு.



காமராஜர் இறுதி ஊர்வலம்.

‘பெருந்தலைவர்’

# காமராஜர்

தமிழகத்து மக்களால் ‘படிக்காத மேதை’ என்று புகழப்பட்ட காமராஜர். உலகமாம் பல்கலைக் கழகத்தில் கற்ற அனுபவக் கல்வி ஏராளம்! ஏராளம் இவர் சின்னஞ்சிறு வயதிலேயே தன்னை தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டவர். இந்தியாவின் முடிசூடா மன்னராம் நேரு பெருமகனாரின் **‘இதயம் கவர் கள்வன்’** காமராஜ் என்பது முழு உண்மை ‘முதியோர் பதவி விலகி இளையோர்க்கு வழிவிடவேண்டும்’ என்ற இவரது ‘காமராஜ் திட்டத்தை’ உலகமே வியந்து பாராட்டியது. தம் அயரா உழைப்பால் அகில இந்திய காங்கிரஸ் தலைவராய் விளங்கிய இவர் இந்தியப் பிரதமரையே தேர்ந்தெடுக்கும் உயர் தகுதி பெற்று **‘கிங் மேக்கர்’** என்று அனைவராலும் பாராட்டப்பட்டார். தமிழகத்தின் முதலமைச்சராய் இருந்த காலத்தில் பட்டி தொட்டி எல்லாம் பள்ளிகள் ஏற்படுத்தி ஏழைகளின் கல்விக் கண்ணை அகலத் திறந்தார். பசித்தால் படிப்பு மனதில் தங்காது என்பதைப் புரிந்து **‘மதிய உணவுத் திட்டம்’** ஏற்படுத்தி ஏழைப் பிள்ளைகளின் பசியாற்றிய **‘வள்ளலார்’** இவர். **‘பெருந்தலைவர்’** என்று தமிழக மக்களாலும், **‘கருப்புக் காந்தி’** என்று வடமாநில மக்களாலும் போற்றப்படும் பெருமைக்குரியவர்தாம் தலைவர் காமராஜ்.

**என். வி. கலைமணி** அவர்கள் மலேசியா நாட்டில் பினாங்கு நகரில் பிறந்தவர். சுமார் ஐம்பது ஆண்டுகள் பத்திரிகை துறைகளில் பணி புரிந்தவர். காமராஜரின் வாழ்க்கையை மிக அழகாக தொகுத்துள்ளார்.